# தென்னிந்திய வரலாறு

## (கி.பி. 900 முதல் கி.பி. [illegible] வரை)

(மேல்பட்டப் படிப்பிற்குரியது)

ஆசிரியர்

டாக்[illegible]ருஷ்ணசாமி, எம்.ஏ.,எல்.டி., பிஎச்.டி.,
ஓய்வுபெற்ற வரலாற்றுத்துறைப் பேராசிரியர்,
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்,
அண்ணாமலைநகர்,
சிதம்பரம்.

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

த. பா. நி. (க. வெ.) வரிசை எண்—746

# தென்னிந்திய வரலாறு

## (கி.பி. 900 முதல் கி.பி. 1565 வரை)

(மேல்பட்டப் படிப்பிற்குரியது)

ஆசிரியர்

டாக்டர் அ. கிருஷ்ணசாமி, எம்.ஏ., எல்.டி., பி எச்.டி.,
ஓய்வுபெற்ற வரலாற்றுத்துறைப் பேராசிரியர்,
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்,
அண்ணாமலை நகர்,
சிதம்பரம்.

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

First Edition—May, 1977

Number of Copies—2,000

T. N. T. B. S. (C. P.) No. 746

© Government of Tamilnadu

# HISTORY OF SOUTH INDIA
## (From 900 A. D. to 1565 A.D.)

Dr. A. Krishnaswami

**Price Rs. 8-60**

Published by the Tamilnadu Textbook Society under the Centrally Sponsored Scheme of Production of books and literature in regional languages at the University level, of the Government of India in the Ministry of Education and Social Welfare (Department of Culture), New Delhi.

This book has been printed on concessional paper made available by the Government of India.

*Printed by*

UDHAYA PRINTERS,
14, Chakrapani Street Extn.,
Madras-600033.

# பதிப்புரை

தென்னிந்திய வரலாறு (கி. பி. 900 முதல் கி. பி. 1565 வரை) என்ற இந் நூல் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுனத்தின் 746 ஆவது வெளியீடாகும். கல்லூரித் தமிழ்க் குழுவின் சார்பில் வெளியான 35 நூல்களையும் சேர்த்து இதுவரை 781 நூல்கள் வெளிவந்துள்ளன. இந்நூல் மைய அரசு, கல்வி, சமூக நல அமைச்சகத்தின் 'மாநில மொழியில் பல்கலைக்கழக நூல்கள் வெளியிடும் திட்டத்'தின்கீழ் வெளியிடப்படுகிறது.

மேலாண்மை இயக்குநர்

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

# பொருளடக்கம்


| | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | இராட்டிரகூட மன்னர்களின் வரலாறு | .... | 2 |
| 2. | கல்யாணபுரத்து மேலைச் சாளுக்கியர் வரலாறு | ... | 10 |
| 3. | வேங்கிநாட்டுக் கீழைச்சாளுக்கியர் வரலாறு | ... | 15 |
| 4. | தலைக்காட்டை ஆண்ட மேலைக்கங்கர்கள் வரலாறு | ... | 20 |
| 5. | பாண்டிய மன்னர்களின் வரலாறு | ... | 23 |
| 6. | பிற்காலப் பல்லவர் வரலாறு | ... | 26 |
| 7. | பிற்காலச் சோழர்களின் வரலாறு | .... | 30 |
| 8. | முதலாம் பராந்தக சோழனுக்குப்பின் சோழர் வரலாறு | .... | 42 |
| 9. | இராஜகேசரி முதலாம் இராஜராஜ சோழன் | ... | 50 |
| 10. | பரகேசரி முதலாம் இராஜேந்திரன் கங்கை கொண்ட சோழன் (1014—1044) | ... | 62 |
| 11. | இராஜகேசரி முதலாம் இராசாதிராசன் (1044—1054) | ... | 75 |
| 12. | சாளுக்கிய—சோழர் வரலாறு | ... | 84 |
| 13. | இராஜகேசரி இரண்டாம் இராசாதிராசன் (1163—1178) | .... | 96 |
| 13அ. | சோழப்பேரரசின் ஆட்சி முறை | ... | 108 |
| 14. | நான்கு அரசுகளின் வரலாறு | ... | 135 |
| 15. | தக்காணத்திலும் தென்னிந்தியாவிலும் ஏற்பட்ட இஸ்லாமியப் படையெழுச்சிகள் | .... | 157 |
| 16. | தென்னிந்தியாவின்மீது முகம்மது துக்ளக்கின் படையெடுப்பு | ... | 168 |
| 17. | பாமினி இராச்சியத்தின் வரலாறு | ... | 179 |
| 18. | விஜயநகர வரலாறு | ... | 200 |
| 19. | சங்கம வமிசத்தரசர்கள் | .... | 212 |
| 20. | இரண்டாம் தேவராயர் (1426—1449) | ... | 222 |

| | | | பக்கம் |
|---|---|---|---|
| 21. | சங்கம வமிசத்தின் இறுதிக்காலம் | ... | 230 |
| 22. | துளுவ வமிசத்தினர் | ... | 239 |
| 23. | கிருஷ்ணதேவராயர் (1509—1530) | ... | 244 |
| 24. | அச்சுததேவராயர் (1530—1542) | ... | 261 |
| 25. | தலைக்கோட்டைப் போர் (1565) | .. | 269 |
| 26. | விஜயநகரப் பேரரசின் ஆட்சி முறை | . | 274 |
| 27. | தென்னிந்திய சமூக வரலாறு (900—1565) | ... | 303 |
| 28. | தென்னிந்திய சமய வரலாறு | ... | 323 |
| 29. | தத்துவ வரலாறு | ... | 332 |
| 30. | தென்னிந்தியக் கோவில் அமைப்புக்களும் மற்றக் கலைகளும் | ... | 345 |
| 31. | விஜயநகர ஆட்சியில் இலக்கியங்களின் வளர்ச்சி | ... | 376 |
| | மேற்கோள் நூற்பட்டியல் | ... | 381 |
| | கலைச்சொற்கள் | ... | 383 |

# தென்னிந்திய வரலாறு(கி.பி. 900—1565)

பத்தாம் நூற்றுண்டின் தொடக்கத்திலிருந்து பதினரும் நூற்றுண்டின் முற்பகுதிவரையில் இத் தென்னிந்திய வரலாறு எழுதப்பெறுகிறது. இந்த வரலாற்றுக் கால எல்லையில் தக்காணத்தில் இராட்டிரகூடர்களும், கலியாணபுரத்து மேலைச் சாளுக்கியரும் முறையே கி.பி. 745ஆம் ஆண்டிலிருந்து 973ஆம் ஆண்டுவரையிலும், பின்னர் 973ஆம் ஆண்டிலிருந்து 1200ஆம் ஆண்டுவரையிலும் ஆட்சிபுரிந்தனர். தக்காணத்தின் கிழக்குப் பகுதியாகிய வேங்கிநாட்டில் கீழைச்சாளுக்கியர்களும், பின்னர் காகதீய வமிசத்து அரசர்களும் ஆட்சி செலுத்தினர். இப்பொழுது கர்நாடக அரசு நிலைபெற்றிருக்கும் மைசூர்நாட்டை தலைக்காடு என்ற இடத்தைத் தலைநகராகக் கொண்டு மேலைக் கங்க வமிச மன்னர்கள் ஆட்சிபுரிந்தனர். தமிழ்நாட்டில் பல்லவ மன்னர்களுடைய ஆட்சியும் பின்னர் விஜயாலய சோழனுடைய சந்ததியார்களின் பேரரசும் நிலைபெற்றிருந்தன. பாண்டிய நாட்டில் முதலில் சோழப் பேரரசர்களுக்கு அடங்கியும் பின்னர் சோழப் பேரரசர்களைத் தங்களுக்கு அடங்கும்படிச் செய்தும் பாண்டிய மன்னர்கள் ஆட்சிபுரிந்தனர். சோழப் பேரரசும் பாண்டியப் பேரரசும் வலிகுன்றிய காலத்தில் துவார சமுத்திரத்தைச் சேர்ந்த ஹொய்சள வமிசத்து மன்னர்கள் ஆட்சிபுரியலாயினர். மேற்கூறப்பெற்ற அரச வமிசங்களின் தோற்றம், ஒடுக்கம், ஆட்சியின் தன்மைகளை நாம் நன்கு உணர்ந்து கொண்டால் தென்னிந்திய வரலாற்றில் தெளிவு பெறலாம். ஆகையால், இந் நூலிற்கு முன்னுரையாக மேற்கூறப்பெற்ற அரச வமிசங்களின் வரலாற்றை எழுதுவது மிகவும் இன்றியமையாததாகும்.

# 1. இராட்டிரகூட மன்னர்களின் வரலாறு

இராட்டிரகூடர்கள் துவாரகையில் வாழ்ந்த யாதவ இனத்தைச் சேர்ந்தவர்கள் என்று சில மரபுவழிச் செய்திகள் கூறுகின்றன. அவர்கள் இராதர்கள் என்ற இராசபுத்திர இனத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் ஆந்திர மரபைச் சேர்ந்தவர்கள் என்றும் சில வரலாற்றறிஞர்கள் கூறியுள்ளனர். இராட்டிரகூடர்கள் தெலுங்கு இனத்தைச் சேர்ந்தவர்கள் என்பதற்கு எவ்வித ஆதாரமும் கிடையாது. கன்னடமொழியை அவர்கள் ஆதரித்து வந்தனரேயன்றி தெலுங்கு மொழியை ஆதரிக்கவில்லை. அசோகப் பேரரசருடைய பாறைக் கல்வெட்டுகளில் ராஷ்டிரிகர்கள் (Rashtrikas) என்றழைக்கப்பெற்ற மராட்டியர்களுடைய முன்னோர்களே இராட்டிரகூடர்கள் என்று பேராசிரியர் சத்தியநாதய்யர் கூறுவது மிகப் பொருத்தமாகத் தெரிகிறது. இந்த ராஷ்டிரிகர்கள் மகாராஷ்டிர நாட்டிலும் அதையொட்டியுள்ள கன்னட நாட்டிலும் தங்களுடைய ஆட்சியை நிலைபெறச் செய்திருந்தனர். தொடக்கத்தில் தெலுங்கு, மராத்தி மொழிகளை அவர்கள் ஆதரிக்கவில்லை. அவர்களுடைய கல்வெட்டுகளும் செப்பேடுகளும் கன்னட மொழியில்தான் பொறிக்கப் பெற்றுள்ளன. அந்த மொழியைச் சேர்ந்த இலக்கியங்களையும் புலவர்களையும் இராட்டிரகூடர்கள் போற்றி வந்துள்ளனர்.[1]

இவர்கள் இராசபுத்திர இனத்தைச் சேர்ந்தவர்களாகக் கருதப்பெற்ற போதிலும், இவர்களுடைய உண்மையான இனம் இன்னதென்று வரையறுத்துக் கூறுவதற்கில்லை. இன்றும் கன்னடமொழி வழக்கத்திலுள்ள லாட்டலூரு அல்லது இலட்டூர் என்ற இடம் இராட்டிரகூடர்களுடைய ஆதி இருப்பிடம் எனக் கூறலாம். பேரார் பகுதியில் எலிச்பூருக்குத் தெற்கில் 150 மைல் தூரத்திலுள்ள இலட்டூருக்கு தந்திதுர்க்கனுடைய முன்னோர்கள் எலிச்பூரிலிருந்து குடியேறி வந்தவர்களெனக் கருதப் பெறுகிறார்கள்.

முதலாம் இந்திரன் என்ற இராட்டிரகூடத் தலைவனுடைய மகன் தந்திதுர்க்கன் ப்ரோச் பகுதியை ஆண்ட கூர்ஜ்ஜர

1 R. Sathianathaier, 'A Political and Cultural History of India', Vol. I, P. 311




படம் 1.

தென்னிந்தியா

(கி.பி. 800 முதல் 1000 வரை)

வமிசத்து அரசர்களிடமிருந்தும் குஜராத் பகுதியை ஆண்ட சாளுக்கியர்களிடமிருந்தும் சில நிலப்பகுதிகளை தன்வசப் படுத்திக் கொண்டு இராட்டிரகூட அரசிற்கு அடிகோலினான். வாதாபிச் சாளுக்கிய வமிசத்து கடைசி அரசனாகிய இரண்டாம் கீர்த்திவர்மனைப் போரில் வென்று மேலைச்சாளுக்கிய அரசைத் தன்வசப்படுத்திக் கொண்டான் (கி.பி. 753). தந்திதுர்க்கனுக்குப் பிறகு அவனுடைய சிற்றப்பன் முதலாம் கிருஷ்ணனும், அவனுடைய புதல்வன் இரண்டாம் கோவிந்தனும் ஆட்சி புரிந்து இராட்டிரகூட அரசை ஒரு பேரரசாக மாற்றினர். முதலாம் கிருஷ்ணனுடைய ஆட்சியில் எல்லோரா குகைக் கோவிலாகிய கைலாயமலைக் காட்சியும் இராவணன் கைலை மலையைத் தூக்கும் காட்சியும் குடைவரைச் சிற்பங்களாக அமைக்கப்பெற்றன.

இரண்டாம் கோவிந்தனுக்குப் பிறகு துருவன் என்பானும் அவனுடைய மகன் மூன்றாம் கோவிந்தனும் அரசபதவியை வகித்துப் பெருமை பெற்றனர். மூன்றாம் கோவிந்தனை எதிர்த்து தம்பன் அல்லது கும்பன் என்ற அவனுடைய அண்ணன் போர்புரிந்து உள்நாட்டுக் கலகம் விளைவித்தனன். ஆயினும், மூன்றாம் கோவிந்தன், தம்பனையும் அவனுக்கு உதவி செய்த கங்க, பல்லவ அரசர்களையும் தோல்வியுறச் செய்து பெரும் புகழடைந்தான். மூன்றாம் கிருஷ்ணனுக்குப் பிறகு முதலாம் அமோகவர்ஷன் என்ற அரசன் பதவி வகித்தான் (814—880). அமோகவர்ஷன் கீழைச்சாளுக்கிய அரசனாகிய மூன்றாம் விஜயாதித்தனோடு போரிட்டு வாகைசூடினான். குஜராத் பகுதியில் வாழ்ந்த தன் தாயத்தார்களோடு அமைதி உடன்படிக்கைச் செய்துகொண்டான். வாளின் வன்மையால் மாத்திரம் தன்னுடைய பேரரசை நிலைபெறும்படிச் செய்யும் நோக்கத்தைக் கைவிட்டு, தன்னுடைய சிற்றரசர்களோடும் மற்ற அரசர்களோடும் திருமண உறவுகொண்டு தன்னுடைய நிலையை பலமுறச் செய்தான். மேலைக்கங்கச்சிற்றரசன் பூதுகன் என்பானுக்குத் தன்னுடைய முதல் மகள் சந்திரா என்பாளை மணமுடித்துத் தன்னுடைய மருமகனாக்கிக் கொண்டான். மற்றொரு மகளாகிய சங்கா என்ற இளவரசியைப் பல்லவ வேந்தனாகிய மூன்றாம் நந்திவர்மனுக்கு மணமுடித்தான்.

அமோகவர்ஷன் போர்களில் ஈடுபட்டு வெற்றிபெறுவதை அதிகம் விரும்பாமல், நாட்டில் அமைதி நிலவி மக்கள் நல் வாழ்வு பெறுவதையே விரும்பினான். வன்முறையை வெறுத்து, எல்லா உயிர்களிடத்தும் அன்பு செலுத்தும் மார்க்கமாகிய

ஜைன சமயத்தை மேற்கொண்டான். 'கவிராஜ மார்க்கம்' என்ற அணியலங்கார நூலைக் கன்னட மொழியில் அமோகவர்ஷன் இயற்றியதாக நாம் அறிகிறோம். ஜினசேனர் என்ற ஜைனத் துறவியைத் தன்னுடைய ஞானகுருவாகக் கொண்டிருந்தான். இராட்டிரகூடர்களுடைய தலைநகரமாகிய மானியகேடத்தை அமைத்து, அந் நகரில் எல்லாவித வசதிகளும் நிறைந்த அரண்மனையொன்றையும் அமைத்தமை அமோகவர்ஷனுடைய செயலேயாகும். சுலைமான் என்ற பாரசீக நாட்டு இஸ்லாமிய வரலாற்றாசிரியன் இவ்வரசனை வல்லபன் அல்லது பல்ஹாரன் என்ற பெயருடையவனாக எழுதியுள்ளார். கான்ஸ்டான்டிநோபிள், பாக்தாத், சீனா முதலிய நாட்டு அரசர்களுடன் ஒப்பிடத்தக்கவர் என்றும் கூறியுள்ளார்.

## இரண்டாம் கிருஷ்ணன் (880—912 அல்லது 15)

அமோகவர்ஷனுக்குப் பிறகு அவருடைய மகன் இரண்டாம் கிருஷ்ணன் இராட்டிரகூடப் பேரரசரானார். இவருடைய ஆட்சியில் கீழைச்சாளுக்கிய அரசர்களாகிய மூன்றாம் விஜயாதித்தியனும் முதலாம் பீமனும் தன்னுரிமை பெற்றனர். இரண்டாம் கிருஷ்ணனுக்கு அரசியல் திறமையும் பேரரசை விரிவாக்கும் வன்மையும் இல்லை. ஜைன சமயத்தில் மிகுந்த பற்றுகொண்டு குணபத்திரர் என்ற ஜைனத் துறவியின் போதனையின்படி நடந்தான்.

## மூன்றாம் இந்திரன் (912—917)

இரண்டாம் கிருஷ்ணனுக்குப் பிறகு அவருடைய பெயரன் மூன்றாம் இந்திரன் இராட்டிரகூட அரசனானான். வடநாட்டில் பாரமார குலத்து உபேந்திரன் என்னும் அரசனைப் போரில் வென்று கன்னோஜி நகரத்தை 916ஆம் ஆண்டில் இவன் கைப்பற்றியதாக நாம் அறிகிறோம். மூன்றாம் இந்திரனுக்குப் பின்னர் இரண்டாம் அமோகவர்ஷன், நான்காம் கோவிந்தன் என்ற அரசர்கள் பதவி வகித்தனர். நான்காம் கோவிந்தன் அற்ப சுகங்களில் தன்னுடைய வாழ்வை ஈடுபடுத்தி மக்கள் வெறுக்கத்தக்க செயல்களைப் புரிந்தான். வேங்கிநாட்டு அரசன் இரண்டாவது பீமன் இவனைத் தோல்வியடையும்படிச் செய்தான். இவனுக்குப்பின் மூன்றாவது அமோகவர்ஷன் என்ற அரசன் 935 முதல் 939 வரை ஆட்சி செலுத்தினான். இவன் சமய வாழ்க்கையைத் தன்னுடைய முக்கிய அலுவலாகக் கருதி தன்னுடைய மகன் மூன்றாம் கிருஷ்ணனிடம் ஆட்சியை ஒப்படைத்துவிட்டான். மூன்றாம் அமோகவர்ஷன் தன்னுடைய

மகள் ரேவகா என்ற இளவரசியை மேலைக்கங்க இளவரசனுகிய இரண்டாம் பூதுகன் என்பானுக்கு மணம் செய்துகொடுத்து அவனைத் தன்னுடைய நெருங்கிய உறவினன் ஆக்கிக் கொண்டான்.

## மூன்றும் கிருஷ்ணன் (939—968)

இவ்வரசனுடைய ஆட்சிக் காலத்தில் இராட்டிரகூட மன்னர்களுக்கும் தமிழ்நாட்டில் தஞ்சையைத் தலைநகராகக் கொண்டு ஆட்சிபுரிந்த சோழ மன்னர்களுக்கும் நடந்த அரசியல் போராட்டம் தொடங்கியது. சோழநாட்டு அரசனுகிய முதல் பராந்தக சோழன் தன்னுடைய அரசைத் தொண்டை நாட்டிற்கும் அப்பால் பரவச் செய்யக் கருதியும், இராட்டிரகூட மன்னர்கள் தொண்டை மண்டலத்தின்மீது படையெடுப்பதைத் தடுப்பதற்கும் பல திட்டங்களை வகுத்திருந்தான். அரக்கோணத்திற்கு அருகில் உள்ள தக்கோலம் என்னுமிடத்தில் சோழநாட்டுப் படைகட்கும், இராட்டிரகூட மன்னருடைய சேனைக்கும் பெரும்போர் ஒன்று நடைபெற்றது. இப் போரில் கங்கநாட்டு மன்னன் இரண்டாம் பூதுகன் இராட்டிரகூடர்களுக்கு உதவியாக இருந்தான். தக்கோலப் போரில் பராந்தக சோழனுடைய மூத்த புதல்வன் இராஜாதித்தன் சோழப் படைகட்குத் தலைமை வகித்துப் போர் நடத்தினுன். யானையின்மீது அமர்ந்து போரை நடத்திய பொழுது இரண்டாம் பூதுகன் விடுத்த அம்பொன்று இராஜாதித்தனுடைய உயிரைக் கவர்ந்தது. சோழர் படைகள் தோல்வியுற்றன. மூன்றும் கிருஷ்ணதேவன் சோழராஜ்யத்தின் வடக்குப் பகுதியைத் தன்வசப்படுத்திக் கொண்டான். தொண்டைமண்டலத்தைச் சார்ந்த வடஆர்க்காடு, தென்ஆர்க்காடு, செங்கல்பட்டு முதலிய இடங்களில் மூன்றும் கிருஷ்ணனுடைய கல்வெட்டுகள் பல கிடைத்துள்ளன. இக் கல்வெட்டுகள் மூன்றும் கிருஷ்ணனைக் கச்சியும் தஞ்சையும் கொண்டவன் என்று புகழ்ந்துரைக்கின்றன. தனக்கு உதவி செய்த இரண்டாம் பூதுகன் என்ற கங்க அரசனுக்கு வானவாசி நாட்டை மூன்றும் கிருஷ்ணன் அளித்தான். இவ்வாருக மூன்றும் கிருஷ்ணனுடைய ஆட்சி தக்காணத்திலும் தென்னிந்தியாவிலும் பரவி மிக உன்னத நிலையை அடைந்ததெனக் கூறலாம். பம்பா, பொன்ன என்ற இரண்டு கன்னட கவியரசர்களை மூன்றும் கிருஷ்ணன் ஆதரித்துப் போற்றினுன். இராட்டிரகூட அரசர்களில் மேன்மைபெற்ற கடைசி அரசன் மூன்றும் கிருஷ்ணனேயாவான்.

மூன்றும் கிருஷ்ணனுக்குப் பிறகு இராட்டிரகூடப் பேரரசு சீர்குலைந்துவிட்டது. இவனுடைய தம்பி கொட்டிகன் என்பானுடைய ஆட்சியில் (968 - 72) பாரமார வமிசத்து இரண்டாம் சீயகன் என்னும் அரசன் இராட்டிரகூடத் தலைநகராகிய மானியகேடத்தின்மீது படையெடுத்துவந்து அந் நகரத்தையும் மக்களையும் பல இன்னல்களுக்குட்படுத்தினான். கொட்டிகனுக்குப் பிறகு அரச பதவிக்கு வந்த இரண்டாவது கர்க்கன் என்பான் ஆட்சிபுரிந்த 973ஆம் ஆண்டில் மானியகேடத்தை, மேலைச்சாளுக்கிய வமிசத்தைக் கலியாணபுரத்தில் அமைத்த தைலப்பன் என்பான் கைப்பற்றி இராட்டிரகூட அரசை அடியோடு நீக்கிவிட்டான்.

## இராட்டிரகூட அரசின் பெருமை

இந்த அரச வமிசத்தில் பதினான்கு அரசர்கள் பதவி வகித்தனர். இவர்களுள் தந்திதுர்க்கன், முதலாம் கிருஷ்ணன், துருவன், மூன்றும் கோவிந்தன், மூன்றும் இந்திரன், மூன்றும் கிருஷ்ணன் முதலியோர் மிக்க மாட்சியுடன் ஆட்சிபுரிந்தனர். அமோகவர்ஷனுடைய ஆட்சிக் காலம் மிக்க சிறப்புற்று இருந்தது. பல திறமையற்ற அரசர்கள் இருந்தபோதிலும் பாரசீகநாட்டு சுலைமான் என்ற வரலாற்றாசிரியர் இராட்டிரகூட வமிசத்து மன்னர்கள் மிக்க திறமையும், வன்மையும், பெருமையும் உடையவர்கள் எனக் கூறியுள்ளார். பல வாரிசுரிமைப் போர்களினால் நாட்டில் கலகங்கள் நடந்தபோதிலும் இராட்டிரகூட அரசு கட்டுக்குலையாமல் இருந்தது.

தக்காணத்திற்கும் அரேபியாவிற்கும் சுமுகமான முறையில் வாணிபம் செழித்தோங்கியது. சைவமும் வைணவமும் நாட்டில் பரவியபோதிலும், இராட்டிரகூட அரசில் ஜைன சமயமும் நிலைபெற்றிருந்தது. அக் காலத்தில் தக்காணத்தில் வாழ்ந்த மக்களில் மூன்றில் ஒரு பகுதியினர் சமண சமயத்தைச் சார்ந்திருந்தனர். சமண சமயத்தை அரசர்கள் ஆதரித்த போதிலும் பௌத்த சமயத்தைச் சார்ந்தவர்களுக்கும், அச் சமயத்திற்கும் எவ்விதமான இடையூறும் ஏற்படவில்லை. பம்பாய் நகருக்கு அருகில் உள்ள கன்கேரியிலும், ஷோலாப்பூர், தார்வார் முதலிய இடங்களிலும் பௌத்த மடங்களும் சமய அமைப்புகளும் இருந்தன. விஜயபுரிக்கு அருகில் உள்ள சால்தோகி என்னும் இடத்தில் கிடைத்த ஒரு கல்வெட்டில் அவ்விடத்தில் இருபத்தேழு மாணவ விடுதிகளும், அறுபது ஏக்கர் நிலங்களும் உடைய கல்விக்கூடம் ஒன்று இருந்ததாகத் தெரிகிறது. அப் பகுதியில் வாழ்ந்த மக்கள் திருமணம்,




படம் 2.

இராட்டிரகூடப் பேரரசு
(கி. பி. 950)

திருநாள்கள் முதலிய காலங்களில் பல நன்கொடைகளையும் அளித்து அக் கல்வி நிலையத்தை ஆதரித்தனர். அந்த நிலையத்தில் கன்னடமொழியும் வடமொழியும் போதிக்கப்பெற்றன. ஆயினும், அருங்கலைகளாகிய சிற்பம், சித்திரம், கட்டடக்கலை முதலியவை பெருமளவில் ஆதரிக்கப் பெற்றதாகத் தெரியவில்லை. எல்லோரா, எலிபென்டா என்ற இடங்களைத் தவிர மற்ற இடங்களில் கலையழகு சிறந்த கட்டடங்களை நாம் காண முடியாது. இருப்பினும், இராட்டிரகூடர்களுடைய ஆட்சியில் தக்காணம் வரலாற்றுச் சிறப்புற்றிருந்தது எனவும், மற்ற அரச வமிசங்களைவிட நீண்ட காலத்திற்கு இராட்டிரகூட மன்னர்கள் ஆட்சிபுரிந்தனர் என்றும் அல்டேகர் என்ற வரலாற்றறிஞர் கூறுவர்.

# 2. கலியாணபுரத்து மேலைச்சாளுக்கியர் வரலாறு

இராட்டிரகூடருடைய ஆட்சியை ஒடுக்கி மீண்டும் மேலைச் சாளுக்கிய குலத்தின் ஆட்சியை வளமுறச் செய்த பெருமை இரண்டாவது தைலப்பன் (Taila II) என்பானைச் சாரும். ஆனால், வாதாபியில் ஆட்சிபுரிந்த மேலைச்சாளுக்கிய குலத்து கடைசி அரசனாகிய இரண்டாவது கீர்த்திவர்மனுக்கு தைலப்பன் எம்முறையில் உறவினன் என்பது விளங்கவில்லை. இத் தைலப்பன் திரிபுரநாட்டு காலச்சூரி குலத்தவரின் உதவி கொண்டும், இராட்டிரகூட மன்னர்களுக்கு அடங்கியிருந்த சில சிற்றரசர்களின் உதவியோடும், இரண்டாவது கர்க்கன் என்ற இராட்டிரகூட அரசனை வென்று அவனுடைய இராஜ்யத்தைக் கைப்பற்றினான். தொடக்கத்தில் பல சிற்றரசர்களும், குறிப்பாக தலைக்காட்டில் அரசுபுரிந்த மேலைக்கங்கர்களும் இரண்டாவது தைலப்பனுக்கு மிக்க எதிரிகளாக இருந்தபோதிலும், அவர் களுடைய எதிர்ப்புகளையெல்லாம் சமாளித்து வெற்றிபெற்று கலியாணபுரத்தில் தன்னுடைய ஆட்சியை நிலைநாட்டினான். இரண்டாவது கர்க்கனுடைய மகளை மணம் புரிந்துகொண்டு ஆட்சிப்பீடத்தைக் கைப்பற்றியதால் இராட்டிரகூட அரசை இவன் சமாதான முறையிலேயே கைப்பற்றினான் என்பதை உய்த்துணரலாம். இவன் காலத்திற்குப் பிறகு எழுதப்பெற்ற சில நூல்களில் இரண்டாம் தைலப்பன் ஸ்ரீ கிருஷ்ணபகவானுக்கு ஒப்பிடப்பட்டுள்ளான். கிருஷ்ணபகவான் அசுரர்களிடமிருந்து 88 அரண்களை 108 இடங்களில் போர்கள் நடத்தி வெற்றி பெற்றது போன்று, தைலப்பன் இரட்டர்கள் அல்லது இராட்டிர கூட அரசர்களிடமிருந்து அரசைக் கைப்பற்றியதாக அவைகள் கூறுவதில் எத்துணை உண்மையுள்ளதென்று நாம் அறிய முடியவில்லை. பாரமார குலத்து முஞ்சன் என்ற தலைவனை ஆறு முறைகள் வென்றதாகவும், ஏழாவது தடவையில் அவனைக் கொன்றதாகவும் நாம் கேள்விப்படுகிறோம்.

இரண்டாம் தைலப்பனுக்குப் பிறகு முறையே சத்தியா சிரயன் (997—1008), ஐந்தாம் விக்கிரமாதித்தன் (1008 - 15)

என்ற மேலைச்சாளுக்கிய மன்னர்கள் கலியாணபுரத்தில் ஆட்சி செலுத்தினர். இக் காலத்தில் தமிழ்நாட்டில் முதல் இராஜராஜ சோழன் என்ற பேரரசன் மிக்க பெருமையுடன் ஆட்சிபுரிந்து (கி.பி. 1000) கங்கவாடியையும், நுளம்பப்பாடி நாட்டையும் கைப் பற்றி தன்னுடைய சோழப் பேரரசில் இணைத்துக் கொண்டான். கி.பி. 1008ஆம் ஆண்டில் சாளுக்கியநாட்டின்மீது படையெடுத்து வந்த சோழப் படைகள் ஈவுஇரக்கமின்றி முதியோர், இளையோர், குழந்தைகள், பெண்டிர் என்று பாராமல் பெருங்கொடுமைகளை இழைத்தனர் என்று சாளுக்கிய கல்வெட்டுகள் பறைசாற்று கின்றன.

ஐந்தாம் விக்கிரமாதித்தனுக்குப் பிறகு கி.பி. 1015 முதல் 1042 வரையில் சாளுக்கிய நாட்டையாண்ட இரண்டாவது ஜெயசிங்கனுடைய ஆட்சியில் முதலாம் இராஜேந்திரன் என்ற சோழப் பேரரசன், சாளுக்கியப் படைகளை முசாங்கி (மாஸ்கி) என்னுமிடத்தில் 1021-ல் தோல்வியுறும்படி செய்ததாக நாம் அறிகிறோம்.

இரண்டாவது ஜெயசிங்கனுக்குப் பிறகு முதலாம் சோமேச்வர ஆகவமல்லன் 1042 முதல் 1068 வரையில் சாளுக்கிய அரசனாக விளங்கினான். அவனுடைய ஆட்சியின் தொடக்கத்திலிருந்து சோழர்களோடு பெரும்போர் நடத்த வேண்டிய நிலையில் இருந்தான். கி. பி. 1052-ல் கிருஷ்ணா நதிக் கரையில் உள்ள கொல்காபுரத்திற்கு அருகிலுள்ள கொப்பம் என்னும் பறந்தலையில் சோழர்களுக்கும் மேலைச்சாளுக்கியர் களுக்கும் பெரும்போர் ஒன்று நடைபெற்றது. இராஜேந்திர சோழனுடைய முதற் புதல்வன் முதலாம் இராஜாதிராஜன் என்பான் சோழப்பேரரசின் படைகளுக்குத் தலைமைவகித்துப் போர்புரிந்தான். தீவினைவயத்தால் அவன் மரணமுற்ற போதி லும் சோழப் படைகள் பெரும் வெற்றிபெற்று கொல்காபுரத்திற்கு அருகில், தங்கள் வெற்றியின் அறிகுறியாக வெற்றித்தூண் ஒன்றை நிறுவினர். மீண்டும் 1062ஆம் ஆண்டில் கிருஷ்ணையும் துங்கபத்திரையும் கூடும் இடத்தில் உள்ள கூடல்சங்கமம் என்னுமிடத்தில் நடந்த பெரும் போரில் சாளுக்கிய அரசனாகிய சோமேச்வர ஆகவமல்லன் இரண்டாம் தடவையாக தோல்வி யுற்றான். சோமேச்வரன் தன்னுடைய தலைநகராகிய கலியாண புரத்தை பலவழிகளில் செம்மையுறச் செய்தான். சைவசமயத் தைப் பின்பற்றினான். அவனுடைய கடைசிகாலத்தில், மருத்து வர்களால் தீர்க்கமுடியாத கொடிய நோயின் காரணமாக துங்கபத்திரை நதியில் மூழ்கி 'சல்லேகானம்' அல்லது தற்கொலை செய்துகொண்டதாக நாம் அறிகிறோம்,

## இரண்டாம் சோமேச்வரன் (1068—1076)

சோமேச்வர ஆகவமல்லனுக்குப் பிறகு அவனுடைய மகன் இரண்டாம் சோமேச்வரன் சாளுக்கியப் பேரரசனாக பட்ட மேற்ருன். தன்னுடைய கல்வெட்டுகளில் சோழர்களுடைய படையெடுப்புகளைச் சமாளித்து சோழர் படைகளைத் தன் நாட்டைவிட்டுத் துரத்தியதாகக் கூறிக்கொண்டான். ஆனால், அக் காலத்தில் பொறிக்கப்பெற்ற சோழப் பேரரசர்களுடைய கல்வெட்டுகளும், செப்பேடுகளும் சாளுக்கியர்களுடைய நகரமாகிய கம்பிலியையும், சாளுக்கிய வீரர்களையும் அழித்து வாகை சூடியதாகக் கூறிக்கொள்கின்றன. இரண்டாம் சோமேச்வரன் சைவ சமயத்தைப் பின்பற்றினுன். கி. பி. 1076ஆம் ஆண்டில் இவனுடைய தம்பி ஆருவது விக்கிரமாதித்தன் தன்னுடைய அண்ணனை அரசபதவியிலிருந்து நீக்கிவிட்டுத் தானே அரியணையில் அமர்ந்தான்.

## ஆரும் விக்கிரமாதித்தன் (1076—1127)

இந்த சாளுக்கிய அரசன், தன்னுடைய ஆட்சிக்காலத்திற்கு முன் வழக்கத்திலிருந்த சக ஆண்டிலிருந்து கணக்கிடுவதை விட்டு சாளுக்கிய விக்ரம ஆண்டு என்ற புதிய ஆண்டைத் தொடங்கினுன். திரிபுவனமல்லன் அல்லது விக்கிரமாங்கன் என்ற புதிய பட்டத்தையும் சூடிக்கொண்டான். இவனுடைய ஆட்சிக் காலத்தில் சோழப் பேரரசிற்குப் பேரரசனுக விளங்கியவன் முதல் குலோத்துங்க சோழனுகும்.

ஆரும் விக்கிரமாதித்தனுக்கு அடங்கி சிற்றரசர்களாக இருந்த ஹொய்சள வல்லாளத் தலைவர்கள், கங்கவாடி நாட்டையும் அதன் தலைநகராகிய தலைக்காட்டையும் சோழர்களிடமிருந்து கைப்பற்றிக் கொள்ளுவதற்கு உதவி செய்தான். கி. பி. 1118ஆம் ஆண்டில் சோழப் பேரரசிற்கு உட்பட்டிருந்த வேங்கிநாட்டை தன்வசப்படுத்திக்கொண்டு சோழர்களுடைய ஆட்சி கீழைச்சாளுக்கிய நாடாகிய வேங்கிநாட்டிலிருந்து மறைந்துவிடும்படி செய்துவிட்டான். இவற்ருல் சோழப் பேரரசன் முதற் குலோத்துங்க சோழனுக்கும் ஆரும் விக்கிரமாதித்தனுக்கும் என்றும் நீங்காத பகைமை மேலிட்டு ஒருவரையொருவர் பகைத்துக் கொண்டனர்.

இந்த விக்கிரமாதித்த சாளுக்கிய அரசனுடைய வரலாற்றை நன்ருக உணர்ந்துகொள்வதற்கு அவனுடைய சபையில் ஆஸ்தான கவியாக விளங்கிய பில்ஹணர் என்பார் இயற்றிய ‘விக்கிரமாங்க சரித்திரம்’ என்னும் நூல் மிக்க உதவி

செய்கிறது. நீதிநூலில் வல்லவரும் சிறந்த வடமொழி உரையாசிரியருமாகிய விக்ஞனேசேச்வரர் என்ற வித்தகர் கலியாணபுரத்தில் விக்கிரமாதித்தனுடைய சபையில் சிறப்புற்று விளங்கினர். அக் காலத்திய கல்வெட்டுகளில் விக்கிரமாதித்தன் ஆறு அரசிகளை மணந்துகொண்டு வாழ்க்கை நடத்தியதாகக் கூறப்பெற்றுள்ளன. தொடக்கத்தில் ஜைன சமயத்தைப் பின்பற்றி வந்தபோதிலும் பின்னர் சைவசமயத்தில் ஆழ்ந்த பற்று கொண்டிருந்ததாக நாம் அறிகிறோம்.

## மூன்றும் சோமேச்வரன் (1127—1136)

ஆறும் விக்கிரமாதித்தனுடைய மகன் மூன்றும் சோமேச்வரன் தன் தகப்பனுக்குப்பின் சாளுக்கிய அரசிற்குப் பட்டமேற்றனன். இவ்வரசன் இலக்கியத்திலும், அறிவு ஆற்றல்களிலும் சிறந்து விளங்கி, 'மானேசோ உல்லாசம்' என்ற நூலை வடமொழியில் இயற்றியுள்ளனன். இந் நூலை கௌடில்யர் எழுதிய அர்த்தசாஸ்திரத்திற்கும், திருவள்ளுவருடைய திருக்குறளில் பொருட்பாலுக்கும் ஒப்பிட்டுக் கூறலாம். இந் நூலிலிருந்து மூன்றும் சோமேச்வரன் அரசியல், நீதிநூல், மருத்துவம், சோதிடம், தனுர்வேதம், யானைகளைஅடக்கியாளும் கலை, போர்க் கலை, அணிநூல் முதலிய பல கலைகளில் வல்லமையுடையவனுக இருந்தான் என்று நாம் உணரமுடியும். ஆயினும், சோமேச்வரனுக்குப்பின் போந்த இரண்டாவது ஜெகதேகமல்லன், மூன்றுவது தைலப்பன், மூன்றுவது ஜெகதேகமல்லன் முதலிய அரசர்களுடைய ஆட்சிக் காலங்களில் மேலைச்சாளுக்கியருடைய அரசியல் அதிகாரம் சீர்குலையத் தொடங்கியது.

## மேலைச்சாளுக்கிய அரசகுலத்தின் முடிவு

கி. பி.1184 முதல் 1200ஆம் ஆண்டுவரையில் ஆட்சிசெய்த நான்காம் சோமேச்வரன் தன்னுடைய குலப்பெருமையையும், ஆட்சியையும் நிலைநாட்ட மிக்க முயற்சிகள் எடுத்துக் கொண்டான். காலச்சூரியர்களுடைய ஆதிக்கத்தை அடக்கித் தனக்குக் கீழ்ப்படியும்படி செய்தான். ஆயினும், சாளுக்கியநாட்டின் வடபகுதியில் தேவகிரியைத் தலைநகராகக் கொண்ட யாதவ வமிசத் தலைவர்களும், மைசூர்நாட்டில் ஹொய்சள வல்லாள அரசர்களும் சாளுக்கியர்களுடைய முதன்மை அதிகாரத்தை உதறித்தள்ளி தன்னரசு உரிமைகொண்டு அரசாளத் தொடங்கினர். சுமார் இரு நூற்றுண்டுகள் வரையில் தக்காணநாட்டில் முதன்மை வகித்து கலியாணபுரத்தைத் தலைநகராகக் கொண்டு

ஆட்சி செலுத்திய சாளுக்கிய அரசு வடக்கில் யாதவகுலத்தவராலும், கிழக்கில் வாரங்கல்நாட்டு அரசர்களாலும், தெற்கே ஹொய்சளத் தலைவர்களாலும் சிதறடிக்கப்பெற்றது. மேலைச் சாளுக்கியர்களுடைய நாணயங்கள் வானவாசிநாட்டுக் கடம்பர்களுடைய காசு முறையை ஒத்திருந்தன. ஆனால், கடம்பர்களுடைய தாமரைப்பூவின் உருவத்திற்குப் பதிலாக கோவில் அல்லது அரிமாவின் உருவம் பொறிக்கப்பெற்று, கன்னடமொழியில் எழுத்துகள் பொறிக்கப் பெற்றிருந்தன.

# 3. வேங்கிநாட்டுக் கீழைச்சாளுக்கியர் வரலாறு

வேங்கி அல்லது வேங்கைநாடு வடக்கில் விசாகப் பட்டினத்திலிருந்து தெற்கே நெல்லூர்வரையில், கீழ்க்கரை யோரம் வடபெண்ணாற்றிற்கும் கோதாவரிநதிக்கும் இடையே பரவியிருந்த நாடாகும். இப் பகுதியை விஷ்ணுகுந்தியர் என்ற குலத்தினர் முற்காலத்தில் ஆட்சிபுரிந்து வந்தனர். வாதாபியைத் தலைநகராகக்கொண்டு தக்காணத்தில் ஆட்சி புரிந்த மேலைச்சாளுக்கிய அரசகுலத்தவரில் முதன்மை பெற்று விளங்கிய இரண்டாம் புலிகேசி என்ற அரசர் பெருந்தகை வேங்கிநாட்டை ஆந்திரர்களாகிய விஷ்ணுகுந்தியர்களிட மிருந்து வென்று தன் ஆட்சியின்கீழ் கொண்டுவந்து தன்னுடைய இளவல் விஷ்ணுவர்த்தனன் என்பாரை ஆளுநராக நியமித்திருந்தார். கி.பி. 615 முதல் 633ஆம் ஆண்டுகளுக் கிடையே பொறிக்கப்பெற்று வேங்கிநாட்டில் காணப்பெறும் கல்வெட்டுகளில் முதலாம் விஷ்ணுவர்த்தனருடைய ஆணைகள் குறிக்கப்பெற்றுள்ளன. 'விஷமசித்தி' அல்லது இன்னல்களை வென்றவர் என்ற பட்டத்தைச் சூடியதிலிருந்து விஷ்ணுவர்த் தனருடைய பெருமையை நாம் உணரக்கூடும். விஷ்ணுவர்த் தனர் காலத்தில் வெள்ளியில் செய்யப்பெற்ற நாணயங்களில் சிங்கத்தின் உருவமும், திரிசூலத்தின் உருவமும் அமைக்கப் பெற்று அவற்றின் இருபக்கங்களிலும் இரு விளக்குகளின் உருவங்கள் காணப்பெறுகின்றன. இந் நாணயங்களே கீழைச் சாளுக்கியர்களின் நாணயங்களில் முதன்முதலில் அடிக்கப் பெற்றவையாகக் கருதப்பெறுகின்றன.

மேலைச்சாளுக்கிய நாட்டின்மீது பல்லவ மன்னன் முதலாம் நரசிம்மவர்மனும், அவருடைய படைத்தலைவருமாகிய பரஞ் சோதியும் படையெடுத்து வாதாபியைக் கைப்பற்றி இரண்டாம் புலிகேசியையும் உயிர்நீக்கும்படி செய்த குழப்பமான காலத் திற்குப்பின், கீழைச்சாளுக்கியர்கள் தன்னரசு நிலைமை எய்தி இருக்கவேண்டும். அதற்குப்பின்னர் ஒரு நூற்றாண்டுவரையில் கீழைச்சாளுக்கியர்களுடைய வரலாறு தெளிவற்ற நிலைமையில் உள்ளது. அரசுரிமைக்காக வாரிசுப் போர்களும் வன்முறையில் அரசபதவியை எய்துவதும் அடிக்கடி நடைபெற்றுள்ளன.

வாதாபிச் சாளுக்கிய அரசகுலத்தினர் தாழ்வுற்று, இராட்டிர கூட மன்னர்கள் மாட்சியுற்ற காலத்தில், கீழைச்சாளுக்கிய அரசர்களுடைய நிலைமையில் சில முக்கிய மாற்றங்கள் தோன்றலாயின.

கி. பி. 764 முதல் 799 வரை கீழைச்சாளுக்கிய நாட்டை ஆண்ட நான்காம் விஷ்ணுவர்த்தனன் என்பவர் இராட்டிரகூட அரசன் முதலாம் கிருஷ்ணனுக்கு அடிபணிந்து திரை செலுத்தி வந்தார். முதலாம் கிருஷ்ணன் இறந்தபிறகு மானியகேடத்தில் தோன்றிய வாரிசுரிமைப்போரில் துருவனுக்கு எதிராக இரண்டாம் கோவிந்தன் என்ற அரசகுமாரனுக்கு, விஷ்ணுவர்த்தனன் உதவி செய்ததாகத் தெரிகிறது. இராட்டிரகூட துருவன், கோவிந்தனை வென்றபிறகு, துருவனுக்கு உறுதுணையாக இருந்து மேலைக்கங்கர்களோடு அவன் நடத்திய போர்களில் விஷ்ணுவர்த்தனன் உதவி செய்துள்ளார். துருவனுக்குப் பிறகு ஆட்சிபுரிந்த மூன்றும் கோவிந்தனுக்கு அடங்கியே விஷ்ணு வர்த்தனன் இருந்ததாகத் தெரிகிறது. ஆனல், விஷ்ணுவர்த்தனனுடைய மகன் இரண்டாம் விஜயாதித்தன் (799—843) இராட்டிரகூடர்களுக்கு எதிராகக் கலகம் செய்தான். ஆகையால் மூன்றும் கோவிந்தன் என்ற இராட்டிரகூட மன்னர், வேங்கி நாட்டு அரசனை நாட்டைவிட்டுத் துரத்திவிட்டார். ஆயினும், மூன்றும் கோவிந்தனுடைய ஆட்சிக்குப் பிறகு, முதலாம் அமோகவர்ஷனுடைய ஆட்சியில், வேங்கிநாட்டரசன் இரண்டாம் விஜயாதித்தன், தன்னுட்டு ஆட்சியைக் கைப்பற்றியது மன்றி இராட்டிரகூடர்களுடைய நாட்டின்மீது படையெடுத்துச் சென்று முதலாம் அமோகவர்ஷனைத் தோற்கடித்து வெற்றி பெற்றதாகவும் நாம் அறிகிறோம். அவ் வெற்றியைக் கொண்டாடி மகாராஜாதிராஜன் இராஜப்பரமேஸ்வரன் என்ற முதன்மை அதிகாரத்தைக் காட்டும் புதிய பட்டங்களைச் சூடியும் பல தேவாலயங்களை அமைத்தும் சிறப்படைந்தான்.

இரண்டாம் விஜயாதித்தனுக்குப் பிறகு மூன்றும் குணக விஜயாதித்தன் என்பார் (844—888), கி. பி. 860ஆம் ஆண்டில் முதலாம் அமோகவர்ஷனல் தோற்கடிக்கப்பெற்றார். ஆயினும், தன்னுடைய கல்வெட்டுகளில் பல்லவர், பாண்டியர், மேலைக் கங்கர், கீழைக்கங்கர், இராட்டிரகூடர்கள் முதலிய அரசகுலத் தவர்மீது வெற்றிபெற்றதாகக் கூறிக்கொண்டுள்ளார். பின்னர் 888 முதல் 918ஆம் ஆண்டுவரையில் ஆட்சிபுரிந்த முதலாம் வீமன் என்னும் அரசன், இராட்டிரகூட அரசர்களுடைய ஆதிக்கத்திலிருந்து தன்னுடைய வேங்கிநாட்டை மீட்டு இரண்டாம் கிருஷ்ணனுடைய காலத்தில் தன்னுரிமை அடைந்தான்.

இந்த முதலாம் வீமன் காலத்திலும், மூன்றும் விஜயாதித்தன் காலத்திலும் பாண்டுரங்கன் என்ற பெயர்பெற்ற தானைத் தலைவர் கீழைச்சாளுக்கிய அரசர்கள் போர்களில் வெற்றி பெறுவதற்கு உறுதுணையாக இருந்தார்.

முதலாம் வீமனுக்குப்பிறகு அவனுடைய பேரன் முதலாவது அம்மா என்பவர் 918 முதல் 925 வரை ஆட்சி புரிந்தார். அவருடைய காலத்திற்குப் பிறகு கீழைச்சாளுக்கிய நாட்டில் அரசுரிமைப்போர் தோன்றியபொழுது இராட்டிரகூட மன்னர்கள் தலையிட்டனர். 934 முதல் 945 வரை ஆட்சி புரிந்தவனும் முதலாவாது கம்மாவின் சகோதரனுமான இரண்டாவது வீமன், இராட்டிரகூட அரசன் நான்காம் கோவிந்தனுடைய சேனையை வென்று தன்னாட்சியை அடைந்தான்.

மூன்றுவது கிருஷ்ணன் (இராட்டிரகூடர்) 945 முதல் 970 வரை ஆட்சிபுரிந்த இரண்டாவது கம்மா என்ற அரசனை வேங்கிநாட்டைவிட்டுத் துரத்திக் கலிங்கநாட்டில் கரந்துறையும் படிச் செய்தார். 956-ல் தனக்கு மிகவும் நெருங்கிய நண்பனும், பாதபன் என்ற பெயருள்ள ஒருவரைக் கீழைச் சாளுக்கிய நாட்டிற்கு ஆளுநராக நியமித்தார். 970 முதல் 973 வரை ஆளுநராக இருந்தவரும், இரண்டாவது கம்மா என்பாரின் சகோதரருமாகிய தானர்ணவன் என்பாரை அவருடைய தாயத்தினராகிய தாதபன் என்பான் போரில் வென்று நாட்டைவிட்டுத் துரத்திவிட்டான். பின்னர் பாதபன், இரண்டாம் தாழன், இரண்டாவது யுத்தமல்லன் என்ற அரசர்கள் 956 முதல் 999 வரையில் வேங்கிநாட்டை ஆண்டுவந்தனர்.

## வேங்கிநாட்டின் அரசியலில் சோழமன்னர்களின் பங்கு

கி. பி. 1000-ல் வேங்கிநாட்டை ஆண்ட மூன்றும் யுத்த மல்லன் வேங்கிநாட்டுக் கீழைச்சாளுக்கிய அரசமரபில் இளைய மரபில் வந்தவராகும். பாதபனும், அவரைச் சார்ந்தவர் களும் மூத்தவாரிசின் உரிமையாளராக இருந்தனர். மூத்த வாரிசில் தோன்றிய சக்திவர்மன் என்பாரைச் சோழமன்னன் முதலாம் இராஜராஜன் அரசனுக்கித் தன்னுடைய செல்வாக்கை அந் நாட்டில் நிலைபெறும்படிச் செய்தான். கி.பி. 1000 முதல் 1011ஆம் ஆண்டுவரையில் சக்திவர்மன் என்பார் வேங்கி நாட்டின் தலைவராக ஆட்சி செலுத்திவந்தார். அவருக்குப் பிறகு அவருடைய மகன் முதலாம் விமலாதித்தன் அரசுரிமை

அடைந்து; 1011முதல் 1018 வரையில் அரசபதவியில் அமர்ந்தார். இந்த விமலாதித்தன் இராஜராஜ சோழருடைய மகள் குந்தவை பிராட்டி என்பாரை மணந்து அப் பேரரசரின் மருமகனுக சோழருடைய செல்வாக்கை அந் நாட்டில் நிலைநாட்டி வந்தான்.

முதலாம் விமலாதித்தனுக்கும் குந்தவை பிராட்டிக்கும் பிறந்த புதல்வன் முதலாம் இராஜராஜநரேந்திரன் என்ற அரசிளங்குமரன் 1018 முதல் 1060 ஆம் ஆண்டுவரையில் தன் நாட்டை ஆண்டுவந்தான். இவ்வரசனுக்கு முதலாம் இராஜேந்திர சோழன் தன்னுடைய மகள் அம்மங்கைதேவியை மணம்செய்வித்து வேங்கிநாட்டுச் சாளுக்கிய மன்னர்களுக்கும், சோழர்குலப் பேரரசர்களுக்கும் நெருங்கிய உறவையுண்டாக்கி இவ்விரு அரச குடும்பங்களும் ஒன்றெனக் கருதும்வகையில் பிணைப்பை ஏற்படுத்தினுன். இந்த இராஜராஜநரேந்திரனுக்கும் அம்மங்கைதேவிக்கும் பிறந்த செல்வனே, தமிழ்நாட்டிலும் ஆந்திரநாட்டிலும் புகழ்பரப்பி இராஜேந்திரன் என்ற இயற் பெயரை விடுத்து, முதலாம் குலோத்துங்கசோழன் என்ற அபி டேகப் பெயரை வகித்து சோழப்பேரரசையும், வேங்கிநாட்டை யும் ஒருங்கே ஆண்டு பெரும்புகழ் எய்தினுன். கி.பி. 1070 ஆம் ஆண்டில் கங்கைகொண்ட சோழபுரத்தில் சோழமரபில் ஆட்சி ஏற்பதற்குரிய அரசர் இல்லாமைகண்ட இராஜேந்திரன் அங்குச்சென்று சோழர்குலத்தையும், வேங்கிநாட்டின் கீழைச் சாளுக்கிய மரபையும் ஒன்ருக்கிச் சோழப்பேரரசின் தலைவனுக பதவி ஏற்ருன். கி.பி. 1076ஆம் ஆண்டுவரையில் குலோத்துங்க சோழனுடைய சிற்றப்பன் ஏழாம் விஜயாதித்தன் வேங்கி நாட்டை ஆட்சிசெய்து வந்தான். இவ் விஜயாதித்தன் இறந்த பிறகு தன்னுடைய மகன் விக்கிரமசோழனை வேங்கிநாட்டில் தன்னுடைய ஆளுநராக நியமித்து இவ்விரு நாடுகளையும் ஒற்றுமைப்படுத்தி அரசாண்டான்.

மேலே கூறப்பெற்ற கீழைச்சாளுக்கிய மரபைச் சேர்ந்த அரசர்கள் ஐந்து நூற்ருண்டுகளுக்குமேல் வேங்கிநாட்டை ஆண்டுவந்தனர். வேங்கிநாடு கடற்கரை ஓரமாக அமைந் திருந்தமையால், வங்கக் கடலில் புயலால் அல்லலுற்று அழிவுற்ற கப்பல்களும், அவற்றில் இருந்த பொருள்களும் கடற் கரையோரமாக ஒதுக்கப்பெறுவது வழக்கம். அவற்றைத் தங்கள் வசப்படுத்தியமையால் கீழைச்சாளுக்கிய மன்னர்களுக்கு பெருமளவில் பொருள் வருவாய்க் கிடைப்பதுண்டு. ஆனுல், பிற்காலத்தில் இந் நாட்டில் அரசுரிமை அடைந்த காகதீய மரபைச் சார்ந்த கணபதி என்ற அரசர் தான் விடுத்த மேட்டுப்பள்ளி அபயசாசனத்தின்படி, பிறநாட்டு வியாபாரிகளின்

கப்பல்களும் பொருட்களும் கடற்கரையோரமாக ஒதுக்கப் பெற்றால், அவற்றை அரசாங்கம் எடுத்துக் கொள்ளாமல் அந்தந்த நாட்டு வியாபாரிகளுக்கே கொடுத்துப் பெரும்புகழ் எய்தினர். இச் செய்கையால் தென்னிந்தியாவின் வியாபாரமும், அரசாங்கத்தின் சுயநலமற்ற நன்மையும் எத்திசையிலும் பரவின.

வேங்கிநாட்டில் வைதீக சமயத்தை அடிப்படையாகக் கொண்ட சைவம், வைணவம் முதலிய உயர் சமயங்களும், பௌத்தம், சமணம் முதலிய கொள்கைகளின் தர்மங்களும் நிலைபெற்றிருந்தன. அமராவதி என்னும் இடத்தில் கிடைத்த கல்வெட்டுகளின்படி பௌத்த சங்கங்களும், விகாரங்களும் தூபிகளும் அந் நாட்டில் மக்களிடையே பரவியிருந்தமை நன்கு புலனாகின்றன. கீழைச்சாளுக்கிய மன்னர்களின் ஆட்சியின் தொடக்கத்திலிருந்து வடமொழியும், பத்தாம் நூற்றாண்டிற்குப் பிறகு தெலுங்குமொழியையும் போற்றி வளர்த்தனர். முதலாம் இராஜராஜநரேந்திரன் என்ற அரசர் தெலுங்கு மொழியில் மகாபாரத இதிகாசத்தை மொழிபெயர்த்து எழுதும்படிச் செய்து பெரும்புகழ் அடைந்தார். பதினோரும் நூற்றாண்டில் வாழ்ந்த மல்லண்ணா என்ற புலவர், மகாவீரச்சாரியர் என்பார் வடமொழியில் இயற்றிய கணிதநூல் ஒன்றை தெலுங்கில் கவிதை வடிவில் இயற்றினர். குலோத்துங்க சோழனுடைய மகன் விக்ரமசோழன் ஆட்சியில், வடமொழியில் உள்ள வேதங்களை நன்கு ஆராய்வதற்கென ஒரு வடமொழிக் கல்லூரியை அமைத்ததாக நாம் அறிகிறோம்.

# 4. தலைக்காட்டை ஆண்ட மேலைக்கங்கர்கள் வரலாறு

தற்காலத்தில் மைசூர் அல்லது கர்நாடகநாடு என்று வழங்கப்பெறும் பிரதேசம் பத்தாம் நூற்றுண்டின் தொடக்கத்திலும் அதற்கு முன்னரும் கங்கவாடி என்னும் பெயர் பெற்றிருந்தது. கங்கவாடியை ஆண்டுவந்த அரசகுலத்தினருக்கு மேலைக்கங்கர்கள் என்ற பெயர் வழங்கியது. கொங்கணிவர்மன் என்ற தலைவரால் கி. பி. நான்காம் நூற்றுண்டின் தொடக்கத்தில் மேலைக்கங்க அரசமரபு தோற்றுவிக்கப் பெற்றது. இவருக்கு மாதவன், என்ற பெயரும் வழக்கத்தில் இருந்தது. இவர் குவளாலபுரம் என்று வழங்கிய கோலாருக்கு அருகில் தன்னுடைய ஆட்சியைத் தொடங்கினர். கொங்கணிவர்மனுக்குப்பிறகு இரண்டாவது மாதவன், அரிவர்மன் என்ற அரசர்கள் ஆட்சிபுரிந்தனர். அரிவர்மன் என்பார் குவளாலபுரத்திலிருந்து தலைக்காடு என்னுமிடத்திற்குத் தன்னுடைய தலைநகரை மாற்றினர். சிவசமுத்திரத்திற்கு அருகில் காவிரி நதியின் கரையில் இப்பொழுது மணல் மூடிக்கிடக்கும் இடமே முற்காலத்தில் தலைக்காடு என்னும் பெயருடன் விளங்கியது. மேலைக்கங்க வமிசத்தின் நான்காவது ஐந்தாவது அரசர்கள் விஷ்ணுகோபன், மூன்றும் மாதவன் என்பவர்கள் ஆவர். இவ்வரசர்களுக்குப்பிறகு அவநீதன், துர்வினிதன் என்ற அரசர்கள் முடிசூடி ஆட்சிபுரிந்தனர்.

கி. பி. 726 முதல் 788 ஆம் ஆண்டுவரையில் ஆட்சிசெய்த ஸ்ரீபுருஷன் என்னும் மேலைக்கங்க அரசன், காஞ்சிபுரத்திலிருந்து ஆட்சிசெய்த பல்லவ மன்னரின்மீது பெருவெற்றிக் கொண்டதாகக் கூறிக்கொண்டுள்ளான். இவ்வரசன் தலைக்காட்டிலிருந்து தன்னுடைய தலைநகரத்தை மன்னே என்னுமிடத்திற்கு மாற்றினன். கி. பி.788 முதல் 812ஆம் ஆண்டுவரையில் ஆட்சிசெய் இரண்டாம் சிவமாறன் என்னும் அரசனுடைய ஆட்சிகாலத்தில் இராட்டிரகூட அரசராகிய முதலாம் கிருஷ்ணன் கங்வாடியின்மீது படையெடுத்தார். பின்னர் துருவன், மூன்று கோவிந்தன் என்ற இராஷ்டிரகூட அரசர்களுடைய பல

யெழுச்சிகளால் சிவமாறன் மிக்க அல்லல்களுக்கு ஆளாகினான். கி.பி. 817 முதல் 853ஆம் ஆண்டுவரையில் அரசபதவி வகித்த இராஜமல்லனும், பின்னர்வந்த, நீதிமார்க்கனும் இராஷ்டிர கூடருடைய தலைமையை எதிர்த்தனர். இரண்டாவது இராஜ மல்லனும், முதலாம் பூதுகனும், முதலாம் அமோகவர்ஷன் என்ற அரசனுடன் நட்பு கொண்டனர். முதலாம் அமோகவர்ஷன் தன்னுடைய மகள் ஒருத்தியை மணம் செய்து கொடுத்து கங்கர்களுடைய தன்னுரிமையை ஆதரித்ததாகத் தெரிகிறது.

கி.பி. 853 முதல் 880 வரை கங்கபாடியை ஆண்ட முதலாம் பிருதிவிபதி என்ற கங்கமன்னர் கோலார் பகுதியை ஆண்டு வந்த மற்றொரு கங்கர்குல அரசமரபைச் சேர்ந்தவராவார். இவ்வரசர் 880ஆம் ஆண்டில் திருப்புறம்பயம் என்னுமிடத்தில் நடைபெற்ற போரில் அபராஜித பல்லவனோடு சேர்ந்து போரிட்டு உயிர் துறந்தார். இவருக்குப்பிறகு அரசுரிமை எய்திய இரண்டாம் பிருதிவிபதி 890 முதல் 925ஆம் ஆண்டு வரையில் முதற் பராந்தக சோழனுக்கு அடங்கிய சிற்றரசராக ஆட்சிசெலுத்தி வந்தார்.

இரண்டாம் பிருதிவிபதியின் பின்வந்த இரண்டாம் பூதுகன், சோழ மன்னனுடைய முதன்மையை வெறுத்து இராட்டிரகூட அரசனுடன் மணவுறவு கொண்டு, சோழ அரசனுக்கு எதிராக 949ஆம் ஆண்டில் சோழர்களுக்கும், மூன்றும் கிருஷ்ணனாகிய இராட்டிரகூட அரசனுக்கும் நடந்த தக்கோலப் போரில் பெரும்பங்கு கொண்டான். பராந்தக சோழனுடைய முதல் மகன் இராஜாதித்த சோழன் ஒரு யானையின்மீது அமர்ந்து போர் வீரர்களை ஊக்குவித்து சேனையை நடத்திய சமயத்தில் பூதுகன் விடுத்த கூரிய அம்பொன்றின் வேகத்தால் உயிரிழக்க நேர்ந்தது. சோழர்களுடைய சேனை மனவலியிழந்து பெருந்தோல்வியுற்றது. இராஜாதித்த சோழன் 'யானை மேற்றுஞ்சிய தேவர்' என அழைக்கப்பெற்றான். இரண்டாம் பூதுகன் சமண சமயத்தை மேற்கொண்டு சமண தர்மத்தில் சிறந்த புலமையடைந்திருந்ததாகவும், பௌத்த சமய தர்மத்தில் வல்லவராகிய ஒரு பௌத்தருடன் வாதுசெய்து வெற்றி யடைந்ததாகவும் செய்திகள் உலவுகின்றன.

கி.பி. 960 முதல் 974 வரையில் கங்கநாட்டு அதிபதியாக விளங்கிய மூன்றாம் நரசிம்மன் என்ற கங்கமன்னர், இராட்டிர கூட மன்னனாகிய மூன்றாம் கிருஷ்ணனுடைய நட்பையும் உற வையும் விடாதிருந்தார். ஆயினும், அவர் தன்னுடைய பெயரன்

நான்காம் இந்திரன் என்பானை இராட்டிரகூட அரசின் பதவியை ஏற்பதற்கு செய்த முயற்சிகள் பயன் பெறவில்லை. கல்யாணபுரி சாளுக்கிய அரசமரபைத் தோற்றுவித்த இரண்டாம் தைலபன் என்பான் கடைசி இராட்டிரகூட அரசனாகிய கர்க்கன் என்பானை வென்று தன்னுடைய மரபை நிலைநாட்டினான்.

மூன்றும் நரசிம்மன் என்ற கங்கமன்னர் தன்னுடைய வாழ்நாளின் முடிவில் சமண சமயத்தில் கூறப்பெற்ற 'சல்லேகானம்' என்ற முறைப்படி பட்டினி கிடந்து உயிர் துறந்தார். மூன்றுவது நரசிம்மனுக்குப் பிறகு நான்காம் இராஜமல்லன் என்ற கங்கமன்னன் 974 முதல் 985 வரையில் அரச பதவியை வகித்தார். அவருக்குச் சாமுண்டராயர் என்ற சமணத்தலைவர் தானைத்தலைவராக விளங்கி அருந்தொண்டு புரிந்தார். ஜைன சமயத் தலைவர்களாகிய இருபத்திநான்கு தீர்த்தங்கரர்களின் வாழ்க்கை வரலாற்றைப்பற்றி சாமுண்டராய புராணம் என்ற நூலைக் கன்னட மொழியில் எழுதி பெயர்பெற்றார். சிராவண பெல்கோலா என்னுமிடத்தில் உள்ள கோமதீஸ்வர சிலையை 983ஆம் ஆண்டில் சாமுண்டராயர் தன்னுடைய சொந்த முயற்சியினால் ஆக்குவித்தார். நான்காம் இராஜமல்லனுக்குப் பிறகு இராக்கசகங்கர் என்பார் 985 முதல் 1024 வரை கங்க நாட்டில் ஆட்சிபுரிந்தார். கி. பி. 1004 ஆம் ஆண்டில் இராஜேந்திரசோழர் கங்கபாடியை வென்று சோழப்பேரரசோடு சேர்த்துக் கொண்டார். ஆயினும் கங்க அரசகுலத்தைச் சேர்ந்தவர்கள் மைசூர்நாட்டில் தொடர்ந்து வாழ்ந்துவந்தனர். பன்னிரண்டாம் நூற்றாண்டில் ஹொசாய்ள விஷ்ணுவர்த்தனனிடம் கங்கராஜா என்பார் அமைச்சராக அலுவல் புரிந்தார். பதினாறும் நூற்றாண்டில் சிவசமுத்திரத்தை ஆண்ட கங்கராஜா என்பவர் விஜயநகரத்தரசர் கிருஷ்ணதேவராயரிடம் போரிட்டுத் தோல்வியுற்றார்.

# 5. பாண்டிய மன்னர்களின் வரலாறு

கி. பி. பத்தாம் நூற்றுண்டிற்கு முன்னர் பாண்டியநாட்டை ஆண்ட பாண்டிய மன்னர்களின் வரலாற்றை வேள்விக்குடி, சீவரமங்கலம், சின்னமானூர் முதலிய இடங்களில் கிடைத்த செப்பேடுகளின் மூலம் நாம் உணர்ந்து கொள்ளலாம். வேள்விக்குடி செப்பேட்டில் கூறப்பெற்ற கடுங்கோன் என்ற பாண்டியமன்னன், இறையனூர் அகப்பொருளுரையில் கூறப்பெற்ற பாண்டியமன்னனின் வேருக நாம் கொள்ளவேண்டும். உத்தேசமாக கி. பி. 575 முதல் பத்தாம் நூற்ருண்டின் தொடக்கம்வரையில் (1) கடுங்கோன், (2) மாறவர்மன் அவனி சூளாமணி, (3) செழியன் சேந்தன், (4) மாறவர்மன் பராங்குச அரிகேசரி, (5) கோச்சடையன் ரணதீரன், (6) முதலாம் இராஜ சிம்மன் என்ற அரசர்கள் பாண்டியநாட்டில் ஆட்சிபுரிந்தனர். முதலாம் இராஜசிம்மன் ஆட்சியில் பல்லவ மன்னனுகிய இரண்டாம் நந்திவர்மனுக்கும் இவ்வரசனுக்கும் பெரும் போர்கள் நடைபெற்றன. இராஜசிம்ம பாண்டியனுக்குப் பிறகு பராந்தக நெடுஞ்சடையன் பாண்டிய அரசனுக விளங்கினுன். இவ்வரசனுடைய ஆட்சிக் காலத்தில் ஸ்ரீவில்லிபுத்தூரில் தோன்றிய பெரியாழ்வாரும், அவருடைய வளர்ப்பு மகளாகிய ஆண்டாளும் வாழ்ந்திருக்கலாம் என்று திரு சதாசிவப் பண்டாரத்தார் கூறுவர்.

பராந்தக நெடுஞ்சடையனுடைய புதல்வர் முதலாம் வரகுண பாண்டியன் என்பவராவர். இந்த அரசருடைய ஆட்சிக் காலத்தில் திருவாதவூரர் என்ற மாணிக்கவாசகர் வாழ்ந்து திருவாசகம், திருச்சிற்றம்பலக்கோவை என்ற சிறந்த நூல்களை இயற்றியதாக நாம் அறிகிறோம். முதலாம் வரகுண னுக்குப்பிறகு ஆட்சிபுரிந்த மாறவர்மன் ஸ்ரீவல்லபன், பல்லவ மன்னனுகிய மூன்ரும் நந்திவர்மனுடன் தெள்ளாறு என்னும் இடத்தில் போரிட்டுத் தோல்வி எய்தினன். மாறவர்மன் ஸ்ரீவல்லபனுக்குப் பிறகு பட்டம் எய்திய இரண்டாம் வரகுண பாண்டியன் காலத்திலும் பாண்டிய—பல்லவ போராட்டம் தொடர்ந்து நடைபெற்றது. இரண்டாம் வரகுண பாண்டியன் அபராஜித பல்லவனை எதிர்த்து திருப்புறம்பயம் என்னுமிடத்தில்

கி.பி. 880ஆம் ஆண்டில் போரிட்டான். இப் போரின் விளைவாக பல்லவ—பாண்டிய அரசுகள் மறைந்து சோழப்பேரரசிற்கு வித்திடப்பெற்றது என்பதை நாம் பின்வரும் பகுதிகளில் அறியலாம். மூன்றும் நந்திவர்மன் பாண்டியப் படைகளைத் தெள்ளாறு என்னுமிடத்தில் எதிர்த்துப் பெரும் வெற்றிகொண்டு 'தெள்ளாறு எறிந்த நந்திவர்மன்' என்ற பட்டத்தைப் புனைந்து கொண்டனன். மூன்றும் நந்திவர்மனுடைய ஆட்சியில் வங்கக்கடலைக் கடந்த கீழ்த்திசை நாடுகளிலும் தென்னிந்திய வியாபாரம் பரவியிருந்ததற்குத் தக்க சான்றுகள் உள்ளன. சீயம் நாட்டில் தாகூபா என்னும் இடத்தில் கிடைத்த தமிழ்மொழிக் கல்வெட்டில் மூன்றும் நந்திவர்மனுடைய மற்ெருரு பெயராகிய அவனிநாராயணன் என்ற பெயரால் ஓர் ஏரியும், திருமால் கோவிலும் அமைக்கப் பெற்றிருந்தன என்று கூறப்பெற்றுள்ளது. சுந்தரமூர்த்தி சுவாமிகளால் 'காடவர்கோன் கழற்சிங்கன்' என்றழைக்கப் பெற்ற நாயன்மார், மூன்றும் நந்திவர்மனைக் குறிக்கும் என்ற கருத்து வரலாற்ருசிரியர்களால் ஒப்புக்கொள்வதற்கில்லை.

## மூன்றும் நந்திவர்மனுக்குப் பின்வந்த பல்லவமன்னர்கள்

மூன்றும் நந்திவர்மனுக்கு நிருபதுங்கவர்மன், அபராஜிதன், கம்பவர்மன் என்ற மூன்று புதல்வர்கள் இருந்தனர். முதற் புதல்வன், இராட்டிரகூட அரசன் அமோகவர்ஷ நிருபதுங்க வர்மனுடைய மகள் வயிற்றுப் பெயரன் ஆவான். தன்னுடைய தகப்பன் மூன்றும் நந்திவர்மனுக்குப்பிறகு 870ஆம் ஆண்டில் பல்லவராச்சியத்திற்கு அரசனுனன். இந்த நிருபதுங்கவர்மன் ஆட்சியிலும் பல்லவ—பாண்டிய போராட்டம் தொடர்ந்து நடந்தது. நிருபதுங்கவர்மனுடைய வாகூர்ச் செப்பேடுகள் அப்பொழுது நடந்த போர்ச்செய்திகளைப் பற்றிக் கூறுகின்றன. பாண்டிய அரசன் ஸ்ரீமாற ஸ்ரீவல்லபனுடைய சேனைகள் சோழ நாட்டின் மீது படையெடுத்தபொழுது, பல்லவசேனைகள் அவனை எதிர்த்து அரிசில் என்னுமிடத்தில் போர்புரிந்தன. பாண்டியமன்னனுடைய போர் வன்மையினுல் பல்லவசேனை தோல்வியுற்றது.

நிருபதுங்கவர்மனும், அவனுடைய தம்பி அபராஜித வர்மனும் பல்லவநாட்டு அரசுரிமைக்காக உள்நாட்டுப்போர் ஒன்றைத் தொடங்கினர். இந்த உள்நாட்டுப்போர் பல்லவ ராச்சியம் அழிந்துபடுவதற்குக் காரணமாயிற்று. நிருபதுங்க வர்மன் பாண்டிய மன்னனுடைய உதவியைப் பெற்ருன். அபராஜிதவர்மனுக்கு உதவியாக மேலைக்கங்கர்களும், சோழ

சிற்றரசர்களும் இருந்தனர். வரகுணனுக்குப் பிறகு பராந்தக வீரநாராயணன் என்பானும், இரண்டாம் இராஜசிம்மனும் பாண்டிய நாட்டில் ஆட்சிபுரிந்தனர். பிற்கூறப்பெற்ற பாண்டிய அரசனுடைய ஆட்சிக்காலத்தில், முதலாம் பராந்தக சோழர் பாண்டியநாட்டை வென்று சோழப்பேரரசிற்கு அடங்கியிருக்கும்படிச் செய்தார்.

# 6. பிற்காலப் பல்லவர் வரலாறு

சிம்மவிஷ்ணுப்பல்லவ வமிசத்தின் கடைசி அரசனாகிய இரண்டாம் பரமேஸ்வரவர்மனுக்குப் பிறகு இரண்டாம் நந்தி வர்மன் என்பவன் பல்லவ அரியணையில் அமர்ந்தான். இந்த இரண்டாம் நந்திவர்மன் மிக்க இளமையிலேயே அரசபதவியை ஏற்றுக்கொண்டமையால் அவனுடைய ஆட்சியாண்டுக்காலம் அறுபத்தைந்து ஆண்டுகள்வரையில் நீடித்தது. இம் மன்னனுடைய வரலாற்றுச் செய்திகளை மூன்று பகுதிகளாகப் பிரித்துக் கூறலாம். அவையாவன: (1) பல்லவ—பாண்டிய அரசியல் உறவு, (2) பல்லவ—சாளுக்கிய உறவு, (3) பல்லவ—இராட்டிர கூடர் உறவு என்பனவாகும்.

## 1. பல்லவ—பாண்டிய உறவு

பாண்டிய அரசனாகிய முதலாம் இராஜசிம்மன், இரண்டாம் நந்திவர்மனுக்கு எதிராக சித்திரமாயன் என்ற பல்லவகுல இளைஞனுக்கு உதவிசெய்து, பல்லவ நாட்டின்மீது படையெடுத்து நந்திபுரவிண்ணகரம் என்னும் நாதன்கோவிலில் பல்லவ அரசனுடைய சேனைகளை எதிர்த்து முற்றுகையிட்டான். இப் போராட்டத்தில் இரண்டாம் நந்திவர்மனுக்கு உதவியாக உதயச்சந்திரன் என்ற பல்லவ தானைத்தலைவன், பாண்டிய சேனைகளை எதிர்த்துப் போர்புரிந்து, சித்திரமாயனை வென்று உயிரிழக்கும்படிச் செய்தான். இதனால் பாண்டிய எதிர்ப்பினின்றும் இரண்டாம் நந்திவர்மன் வெற்றி பெற்றான்.

## 2. பல்லவ—சாளுக்கியப் போராட்டம்

இரண்டாம் நந்திவர்மனும் அவனுடைய தளபதி உதயச் சந்திரனும் பாண்டிய சேனைகளை எதிர்த்து நந்திபுர விண்ணகரத்தில் போரிட்டுக் கொண்டிருக்கும் சமயத்தில், சாளுக்கிய விக்கிரமாதித்தன் காஞ்சிபுரத்தின்மீது படையெடுத்து அந் நகரத்தைக் கைப்பற்றினான். ஆயினும், காஞ்சிபுரத்தைக் கைப்பற்றிய விக்கிரமாதித்தன் அந் நகரத்தை அழித்துவிடாமல், அந் நகரத்தையும் அங்கிருந்த கோவில்களையும் காப்பாற்றியதாக நாம் கேள்விப்படுகிறோம்.

## 3. பல்லவ—இராட்டிரகூடர் உறவு

வாதாபிச் சாளுக்கியருக்குப் பிறகு இராட்டிரகூட அரசை அமைத்த தந்திதுர்க்கன் என்பான் இரண்டாம் நந்திவர்மனோடு மணவுறவு கொண்டான். தன்னுடைய மகள் ரேவா என்ற இளவரசியை இரண்டாம் நந்திவர்மனுக்கு மணம் செய்து கொடுத்து, அவனுடன் நெருங்கிய உறவு பூண்டான். இந்த உறவு ஏற்பட்ட மூன்று ஆண்டுகளுக்குள், தந்திதுர்க்கன் வாதாபிச் சாளுக்கிய அரசை நீக்கிவிட்டு மானியகேடத்தில் தன்னுடைய ஆட்சியை ஏற்படுத்தினன்.

## தந்திவர்மப் பல்லவன் (796—847)

இரண்டாம் நந்திவர்மனுக்குப் பிறகு அவனுடைய மகன் தந்திவர்மன் பல்லவ பேரரசனக பதவி ஏற்றான். இவ்வரசனுடைய கல்வெட்டுகள் தெற்கே திருச்சிராப்பள்ளியிலிருந்து வடக்கே திருச்சானூர்வரையில் காணப்பெறுகின்றமையால் இவனுடைய அதிகார எல்லையை நாம் அறிந்துகொள்ளலாம். துருவன் என்ற இராட்டிரகூட அரசன் காஞ்சிபுரத்தின்மீது படையெடுத்துவந்து தந்திவர்மனைப் போரில் வென்றான். தந்திவர்மன் துருவனுக்கு அடங்கி கப்பம் செலுத்தவேண்டிய நிலைமை தோன்றியது. பின்னர், மூன்றும் கோவிந்தன் என்ற இராட்டிரகூடத் தலைவனும் காஞ்சிபுரத்தைக் கைப்பற்றி, அந் நகரத்திலிருந்து இராமேசுரம்வரையில் தன்னுடைய சேனையை நடத்திச் சென்றான் என்று கல்வெட்டுகள் கூறுகின்றன. பாண்டியநாட்டை ஆண்ட முதலாம் வரகுணவர்மன் என்ற பாண்டிய மன்னனும், பல்லவப் பேரரசின்மீது படையெடுத்து சோழமண்டலத்தைத் தன்வசப்படுத்திக் கொண்டான். ஆகையால், தந்திவர்மனுடைய ஆட்சிக்காலத்தில் வடக்கேயிருந்து இராட்டிரகூட மன்னர்களுடைய படையெடுப்புகளினுலும், தெற்கிலிருந்து பாண்டியர்களுடைய படையெடுப்பாலும், பல்லவ அரசு இடைவிடாத நெருக்கடிகளுக்கு உள்ளாகியது. திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலுள்ள ஆலம்பாக்கம் என்னும் கிராமத்தில் உள்ள கைலாசநாதர் கோவில் தந்திவர்மனுடைய ஆட்சிக்காலத்தில் அமைக்கப் பெற்றதாகும்.

## மூன்றும் நந்திவர்மன் (847—869)

தெள்ளாறு எறிந்த நந்திவர்மன் என்றழைக்கப்பெறும் இப் பல்லவ மன்னன் தந்திவர்மனுடைய மகனுவான். பிற்காலப் பல்லவ அரசர்களுள் மிக்க பெருமை வாய்ந்தவன் இவனேயாகும்.

இவனுடைய வரலாற்றை உணர்வதற்குச் செப்பேடுகளும், கல்வெட்டுகளும் தமிழிலக்கிய நூல்களும் பெரும் அளவில் துணைசெய்கின்றன. இவ்வரசனுடைய ஆட்சிக்காலத்தில் பாண்டிய–பல்லவ போராட்டம் மீண்டும் தோன்றியது. பாண்டிய அரசனாகிய ஸ்ரீமாற ஸ்ரீவல்லபன், பல்லவநாட்டின் மீது படையெடுத்துத் தொண்டைமண்டலத்திலுள்ள தெள்ளாறு என்னுமிடம் வரையில் வந்ததாகத் தெரிகிறது. இவ்விதம் நடைபெற்ற உள்நாட்டுப்போரில் சோழப்பேரரசிற்கு அடி கோலிய விஜயாலயனும் அவனுடைய மகன் ஆதித்தசோழனும், அபராஜிதவர்மனுடைய கட்சியில் சேர்ந்திருக்க வேண்டும். பல்லவருடைய ஆட்சிக்காலத்தில் ஒடுங்கிக்கிடந்த சோழ குலத்து தலைவர்கள் மீண்டும் தலைதூக்கலாயினர். தஞ்சைப் பகுதியில் செந்தலை என்னுமிடத்தைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செலுத்திய முத்தரையத் தலைவர்களிடமிருந்து தஞ்சாவூரைக் கைப்பற்றிய விஜயாலயசோழனும், அவனுடைய மகன் ஆதித்த சோழனும் இப்பொழுது அபராஜிதவர்மனுக்குத் துணையாக இருந்தனர். கங்கர்குல அரசனாகிய முதலாம் பிருதிவிபதியும் அவர்களுடன் சேர்ந்துகொண்டான். நிருபதுங் கனுக்கும், அபராஜிதவர்மனுக்கும் இடையே உண்டாகிய இந்த உள்நாட்டுப்போர் முடிவில் திருப்புறம்பயம் என்னுமிடத்தில் 880ஆம் ஆண்டு நடைபெற்றது. நிருபதுங்கவர்மனுக்கு உதவி யாகவந்த இரண்டாம் வரகுணபாண்டியன் தோல்வியுற்று, அபராஜிதவர்மனும் அவனுக்கு உதவிசெய்த சோழர் தலைவன் ஆதித்தனும் வெற்றிபெற்றனர். தென்னிந்திய வரலாற்றில் வரலாற்று நிகழ்ச்சிகளை மாற்றி அமைக்கும்படி நடந்த போர்களில், திருபுறம்பயப்போர் மிகவும் முக்கியமானது எனக் கூறலாம். முதல் பானிப்பட்டுப்போர், தலைக்கோட்டைப்போர், பிளாசியுத்தம் போன்று இத் திருப்புறம்பயப்போரும் வரலாற்றுச் சிறப்பு மிக்கதாகும். அபராஜிதவர்மன் பெயரளவில் வெற்றி பெற்றான். ஆனால், உண்மையில் வெற்றியடைந்தவன் ஆதித்த சோழனேயாவன். பிருதிவிபதி என்ற கங்கர்குலத் தலைவன் இப் போரில் உயிர்நீத்தனன். பின்னர் அபராஜிதவர்மனையும் போரில் வென்று ஆதித்த சோழன் பிற்காலச் சோழர்களின் பேரரசிற்கு அடிகோலினான்.

அபராஜித பல்லவனோடு பல்லவ குலத்தின் தலைமை அதிகாரம் முடிவுற்றது. கம்பவர்மன் முதலிய பல்லவ சிற்றரசர்கள் சோழப்பேரரசர்களுக்கு அடங்கிய சிற்றரசர்களாயினர். கடைசி சோழ மன்னனாகிய மூன்றும் இராஜேந்திர சோழனை வென்று சிறைப்படுத்திய காடவர்குலத்

தலைவன் கோப்பெருஞ்சிங்கனும் பல்லவமரபைச் சேர்ந்தவன் எனக் கருதப்பெறுகிறுன். இவ்விதமாக, பல்லவப் பேரரசு முடிந்து சோழப்பேரரசு தென்னிந்தியாவில் தோன்றியது. கி.பி. பத்தாம் நூற்றுண்டின் தொடக்கத்திலிருந்து பதிமூன்றும் நூற்றுண்டு முடிய சோழப்பேரரசு சிறப்பாக தமிழகத்திலும், பொதுவாக தென்னிந்தியா முழுவதும் நிலைபெற்றிருந்தது.

# 7. பிற்காலச் சோழர்களின் வரலாறு

கி. பி. 880ஆம் ஆண்டிலிருந்து 1279ஆம் ஆண்டு முடிய தென்னிந்திய வரலாற்றில் மேன்மைபெற்று விளங்கியது சோழப் பேரரசாகும். சங்ககாலத்தில் சோழநாட்டை மேன்மையுடன் ஆண்ட கரிகாலனுடைய சந்ததியில் வந்த இச் சோழகுலத்தவர் களப்பிரர் படையெடுப்பிற்குப் பிறகும், பல்லவர் ஆட்சிக்காலத்திலும் தங்களுடைய சிறப்பை இழந்து குறுநில மன்னர்களாகச் சோழநாட்டில் இருந்துவந்தனர். பல்லவர்களுடைய ஆட்சி முடிந்து அவர்களுடைய பெருமை மங்கியபிறகு இச் சோழகுலத்தவர் மீண்டும் தலையெடுத்தனர். இச் சோழ மன்னர்கள் வடக்கே துங்கபத்திரையாற்றிற்கு அப்பால் அரசுபுரிந்த இராட்டிரகூட மன்னர்களோடும், அவர்களுக்குப்பின் கலியாணபுரத்தைத் தலைநகராகக் கொண்டு அரசியற்றிய மேலைச்சாளுக்கியரோடும் அடிக்கடி போர் தொடுக்க வேண்டியிருந்தது. பல்லவ மன்னர்கள் முதலில் வாதாபிச்சாளுக்கியரோடும், பின்னர் இராட்டிரகூடர்களோடும் நடத்திய போர்களுக்கு இவற்றை ஒப்பிடலாம். துங்கபத்திரை — கிருஷ்ணு ஆறுகளுக்குத் தெற்கே தென்னிந்தியா முழுவதிலும் சோழர்களுடைய பேரரசு பரவியிருந்ததெனக் கூறலாம். இப் பேரரசு நிலைபெற்றிருந்த காலத்தில் சைவம், வைணவம் ஆகிய இரு உயர்சமயங்களும் நாடு முழுவதும் பரவின. இவ்விரு சமயங்களின் வளர்ச்சிக்கு அறிகுறியாகப் பல கற்கோயில்கள் அமைக்கப்பெற்றன. சமய வளர்ச்சியோடு மத்திய, மாகாண, கிராம ஆட்சிமுறைகளும் சோழமன்னர்களுடைய காலத்தில் மேன்மையுற்றன. வாணிபமும், கலையும் வளர்ச்சி அடைந்தன. வங்கக்கடலுக்குக் கிழக்கேயுள்ள தீவுகளிலும் தீபகற்பங்களிலும் தமிழர்களுடைய அதிகாரம் பரவியது.

இராட்டிரகூட மன்னர்களோடும், கலியாணபுரத்துச் சாளுக்கியர்களோடும் அடிக்கடி போரில் ஈடுபட நேர்ந்தமையால் சோழமன்னர்களாகிய முதலாம் இராஜராஜன், முதலாம் இராஜேந்திரன் ஆகிய இருவரும் வேங்கிநாட்டுக் கீழைச் சாளுக்கிய அரசர்களோடு நெருங்கிய மணவுறவு கொண்டு அவர்களை அந் நாட்டுச் சிற்றரசர்களாக அமைத்துக்




படம் 3.

சோழப் பேரரசு

(கி. பி. 900 முதல் 1100 வரை)

கொண்டனர். இக் கொள்கையால் பதினேரும் நூற்ருண்டின் முற்பகுதியில் வேங்கிநாடும் சோழநாடும் ஒரே அரசனின் ஆளுகையில் வந்தது. கங்கைகொண்ட சோழபுரத்தில் இருந்து முதல் குலோத்துங்கனும், அவனுக்குப் பின்வந்தோரும் இரு நாடுகளையும் சேர்த்து அரசாண்டனர். இந்த அரசியல் ஒற்றுமையை ஆங்கில வரலாற்றில் இங்கிலாந்தும் — ஸ்காட்லாந்தும், முதலாம் ஜேம்ஸ் என்ற அரசன் காலத்தில் அடைந்த ஒற்றுமைக்கு ஒப்பிடலாம். முதலாம் ஜேம்ஸ் அரசன் தன்னுடைய தந்தைமரபில் ஸ்டுவர்ட் குலத்தையும், தாய்மரபில் டியூடர் குலத்தையும் ஒன்றுபடுத்தி இங்கிலாந்து—ஸ்காட்லாந்து ஆகிய இருநாடுகளையும் ஒரே அரசின்கீழ்க், கொண்டு வந்தது போல் முதற்குலோத்துங்க சோழன் கீழைச்சாளுக்கிய மரபையும், சோழர்குலத்தையும் இணைத்து அரசுபுரிந்தான். ஆனல், சோழ மன்னர்கள் பல குறுநில மன்னர்களை வென்று தங்களுடைய பேரரசின்கீழ்க் கொண்டுவந்து வாளின் வன்மையால் தங்கள் அரசை அமைத்தனர். இராட்டிரகூடர்களோடும், மேலைச்சாளுக்கியர்களோடும் அடிக்கடி போரிட்டு வந்ததோடு போர் செய்வதையே முக்கிய நோக்கமாகவும் கொண்டிருந்தனர் என்பதையும் நாம் மனதில் கொள்ளவேண்டும். இடைவிடாத இப் போர்த்தொழில் மூன்று நூற்ருண்டுகளுக்குப்பிறகு சோழப்பேரரசும், சாளுக்கியப் பேரரசும் சீர்குலைந்து போவதற்குக் காரணமாயிற்று. இவ்விரு பேரரசுகளின் சீர்குலைவிற்குப் பிறகு தக்காணமும், தென்னிந்தியாவும் நான்கு முக்கிய அரசகுலங்களின் ஆட்சிக்கு உட்பட்டன. அவை, தக்காணத்தின் மேற்பகுதியில் தேவகிரிநாட்டு யாதவர்களும், கிழக்குப் பகுதியில் வாரங்கல் நாட்டு காகதீயர்களுமாவர். தென்னிந்தியாவில் மேற்குப் பகுதியில் துவாரசமுத்திரத்தைத் தலைநகராகக் கொண்டு ஆட்சிபுரிந்த ஹொய்சள வமிசத்தவரும், கிழக்குப் பகுதியில் பாண்டியகுலத்தவரும் ஆவர்.

**விஜயாலய சோழன்** (846 — 881)

தஞ்சையை ஆண்டுவந்த முத்தரைய சிற்றரசர்களிடமிருந்து விஜயாலயன் என்ற சோழர் தலைவன் அந் நகரத்தைக் கைப்பற்றியது சோழகுலத்தவர் பின்னர் ஒரு பேரரசை அமைப்பதற்குக் காரணமாயிற்று. இவ் விஜயாலயன் பல்லவ மன்னர்களுக்கு அடங்கிச் சிற்றரசனுக வாழ்ந்த குமாராங்குசன் என்பவருடைய மகனுக இருக்கலாம் என வரலாற்ருசிரியர்கள் கருதுவர். [1] அன்பில், திருவாலங்காடு, கன்னியாகுமரி, ஆனை

[1] T.V.S. Pandarathar, 'Latr Cholas', P. 13.

மங்கலம் முதலிய இடங்களில் கிடைத்த சோழ அரசர்களுடைய செப்பேடுகள், இவ் விஜயாலயன் சங்ககாலத்திய சோழ மரபில் தோன்றியவன் என்று கூறுகின்றன. ஒட்டக்கூத்தர் இயற்றிய மூ வ ரு லா வு ம், ஜெயங்கொண்டார் இயற்றிய கலிங்கத்துப்பரணியும் இச் செய்தியை வலியுறுத்துகின்றன. தஞ்சையையும் அதைச்சுற்றியுள்ள நிலப்பகுதியையும் பல்லவர்களுடைய குறுநிலமன்னராக இருந்த முத்தரையர்களிடமிருந்து விஜயாலயன் கைப்பற்றியிருக்க வேண்டும். சாத்தன் பழியிலி என்ற முத்தரையர் தலைவன், செந்தலை அல்லது சந்திரலேகைச் சதுர்வேதிமங்கலம் என்ற இடத்தைத் தலைநகராகக் கொண்டு முதலில் பல்லவருக்கும், பின்னர் பாண்டியன் ஸ்ரீமாற ஸ்ரீவல்லபனுக்கும் அடங்கித் தஞ்சாவூருக்கு அண்மையிலுள்ள நிலப்பகுதிகளை ஆண்டுவந்தான்.[1]

விஜயாலயன், சாத்தன் பழியிலி என்ற முத்தரையனிடமிருந்து தஞ்சையைக் கைப்பற்றியதைப் பல்லவ மன்னனாகிய நிருபதுங்கவர்மனும் ஒப்புக் கொண்டான். ஏனெனில், முன்னர் தனக்கடங்கியிருந்த சாத்தன் பழியிலி, பின்னர் பாண்டியர்களுக்கு அடங்கித் திரை செலுத்திவந்தனன். விஜயாலயன் தஞ்சையை வென்று தனது தலைநகராகக் கொண்டு பரகேசரி என்ற பட்டம் புனைந்து கொண்டான். தன்னுடைய வெற்றியின் சின்னமாகத் தஞ்சை நகரில் கொற்றவை என்ற காளிதேவி அல்லது நிஷும்பசூதனிக்கு ஒரு கோவில் எடுத்து வழிபட்டதாக அறிகிறோம். தமிழிலக்கியங்களில் 'தன் மேனி முழுவதும் தொண்ணூற்ருறு புண்கொண்ட புரவலன்' என்று போற்றப்படும் அரசன் விஜயாலயனாக இருக்கலாம். பல்லவ அரசனாகிய நிருபதுங்கவர்மனுக்கு கும்பகோணம், அரிசில் முதலிய இடங்களில் பாண்டியர்களுடன் நடந்த போரில் உதவி செய்திருத்தலும் கூடும்.[2]

## திருப்புறம்பயப் போர்

ஸ்ரீமாற ஸ்ரீவல்லபன் அல்லது மாறவர்ம பாண்டியனுக்குப் பிறகு, இரண்டாம் வரகுணன் என்ற அரசன் பட்டம் எய்தினன். இப் பாண்டிய மன்னன் தன் தந்தை ஆட்சியில் இழந்த சோழ நாட்டை மீண்டும் பெறுவதற்கும், முத்தரையரிடமிருந்து விஜயாலயன் கைப்பற்றிய நிலப்பகுதியைப் பெறுவதற்கும் பல்லவ மன்னனாகிய அபராஜிதவர்மனிடமிருந்து சோழ நாட்டையும், தொண்டை மண்டலத்தையும் தன்வசமாக்கு

1 M. S. Govindaswamy, 'Pallava Feudatoris', P. 47.
2 T. V. S. Pandarathar, Ibid. P. 19.

வதற்கும் ஏற்ற திட்டங்களை வகுத்தான். பின்னர், கும்பகோணத்திற்கு அருகில் உள்ள இடவை என்னும் இடத்தைக் கைப்பற்றினான். இவ்வாறு பாண்டியமன்னன் போரிடத் தொடங்கியதைக் கண்ட அபராஜிதவர்மன், தன்னுடைய சிற்றரசர்களாகிய கங்கஅரசன் முதலாம் பிருதிவிபதி, சோழன் விஜயாலயனின் மகன் ஆதித்தசோழன் முதலியவர்களின் உதவியை நாடினான். இம் மூவரும் சேர்ந்து 880ஆம் ஆண்டில் திருப்புறம்பயம் என்னுமிடத்தில் இரண்டாம் வரகுணபாண்டியனை எதிர்த்துப் போரிட்டனர். இப் போர் நடந்தபொழுது விஜயாலய சோழன் உயிருடன் இருந்தபோதிலும் அவனுடைய தள்ளாமையின் காரணமாக இப் போரில் பங்குகொள்ளவில்லை. இப் போரில் நூற்றுக்கணக்கான வீரர்கள் இருதரப்பிலும் உயிரிழந்தனர். கங்கமன்னனாகிய முதலாம் பிருதிவிபதி உயிர் நீத்தபோதிலும் அபராஜித பல்லவன் வெற்றிமாலை சூடினான். இப் போர் திருப்புறம்பயத்தில் நடந்ததற்கு இன்றும் அங்கே பல சின்னங்கள் காணப்பெறுகின்றன. இப் போரின் வெற்றிக்கு அறிகுறியாக ஆதித்த சோழன் தன் தந்தையின் பெயரால் விஜயாலய சோழீஸ்வரம் என்ற சிவன் கோவிலை எடுப்பித்ததாகத் தெரிகிறது. விஜயாலயன் பெயரால் விஜயாலய சதுர்வேதிமங்கலம் என்றும், விஜயாலய நல்லூர் என்றும் பல ஊர்கள் தஞ்சை நகரையடுத்துக் காணப்பெறுகின்றன. 881ஆம் ஆண்டில் விஜயாலயனுக்குப் பிறகு ஆதித்த சோழன் சோழ அரசனாகப் பட்டம் எய்தினான்.

## இராஜகேசரி முதலாம் ஆதித்தன் (881 – 907)

திருப்புறம்பயப் போரில் ஆதித்தன் தனக்கு உதவிசெய்து பெரும் வெற்றிபெறச் செய்தமையால் அபராஜித பல்லவன், ஆதித்தனிடம் மிகுந்த அன்புகொண்டு தஞ்சைப்பகுதியையும், இன்னும் சில இடங்களையும் அவனே ஆண்டுவரும்படி செய்திருந்தான். ஆனால், பல்லவருக்கு அடங்கித் திரை செலுத்திக் கொண்டு குறுநிலமன்னனாக இருப்பதை ஆதித்தன் விரும்பாமல் திரும்புறம்பயம் போருக்குப்பின், சில ஆண்டுகளுக்குள் தொண்டைமண்டலம் முழுவதையும் கைப்பற்றித் தன்னுடைய ஆட்சியைப் பரவச்செய்தான். தில்லைத்தானம் என்ற இடத்தில் காணப்பெறும் ஒரு கல்வெட்டில் ஆதித்தன் தொண்டை மண்டலத்தைக் கைப்பற்றி ராஜகேசரி என்ற பட்டம் புனைந்தான் என்று கூறப்பட்டுள்ளது. அபராஜித பல்லவன் யானைமீது அமர்ந்து போர் செய்தபொழுது ஆதித்த சோழன் அவனைக் கொன்று வெற்றி எய்தினான் என்று கன்னியாகுமரிச் செப்பேடுகள் கூறுகின்றன. அபராஜித பல்லவனுக்குப் பிறகு

சோழ மண்டலமும், தொண்டை மண்டலமும் ஆதித்த சோழனுடைய ஆட்சிக்குட்பட்டன.

தொண்டைமண்டலத்தை வென்றபிறகு கொங்குநாட்டையும் ஆதித்தன் தன்வசத்தில் கொண்டுவந்தான். சேரநாட்டு மன்னன் ஸ்தாணுரவியுடன் நட்புகொண்டு அவனுடைய உதவி பெற்று, மேலைக்கங்கரின் நாடாகிய கங்கபாடியின் சில பகுதிகளையும் ஆதித்தன் தன்வயப்படுத்தினான்.[1] கொங்குதேச ராசாக்கள் என்ற வரலாற்று நூலும், நம்பியாண்டார் நம்பியின் நூலும் ஆதித்தன் கொங்குதேசத்தை வென்றுகொண்டதைக் குறிப்பிடுகின்றன.

## நம்பியாண்டார் நம்பி

'சிங்கத்து உருவனைச் செற்றவன் சிற்றம்பல முகடு
கொங்கிற் கனகம் அணிந்த ஆதித்தன்'

என்று நம்பியாண்டார் நம்பி தன்னுடைய திருத்தொண்டர் திருவந்தாதியில் கூறியுள்ளார். ஆதித்த சோழனுக்குக் கோதண்டராமன் என்ற மற்றொரு பெயரும் வழக்கத்தில் இருந்தது. தக்காணத்தில் அப்பொழுது அரசுரிமை பூண்டிருந்த இராட்டிரகூட அரசன் இரண்டாம் கிருஷ்ணனுடைய மகள் இளங்கோபிச்சி என்பாளை மணந்து இராட்டிரகூடர்களுடன் மணவுறவு கொண்டான். திரிபுவன மாதேவி என்ற பல்லவகுல இளவரசி ஒருத்தியையும் ஆதித்தசோழன் மணந்து கொண்டான்.

சோழ, தொண்டை, கொங்குமண்டலங்களில் தன்னுடைய ஆட்சியை நிலைநிறுத்திய பிறகு, பல தேவாலயங்களை அமைத்து சைவசமயம் பரவுவதற்கும் ஏற்பாடுகள் செய்தான். திருப்புறம்பயத்தில் அமைந்திருக்கும் ஆதித்தேச்சுரம் என்னும் திருக்கோவிலும், திருவெறும்பியூரில் உள்ள கோவிலும் ஆதித்த சோழன் காலத்தில் அமைக்கப் பெற்றவையாகும். தில்லையில் உள்ள திருக்கோயிலை, பொன்வேய்ந்து பொன்னம்பலமாக்கினான். தில்லை அம்பலத்திற்குப் பொன்வேய்ந்த நிகழ்ச்சி ஆதித்தன் ஆட்சியில் தொடங்கி அவனுடைய மகன் முதல் பராந்தகன் ஆட்சியில் முடிவடைந்ததாகக் கொள்ளலாம். தஞ்சை மாவட்டத்தில் இராஜகிரி என்னும் ஊர் இராஜகேசரி நல்லூர் என்பதன் மருஉப் பெயராகும். காளத்திக்கருகில் உள்ள தொண்டைமான் ஆற்றூரில் ஆதித்தசோழன் இறந்து போனதாகத் தெரிகிறது. அவ்வூரில் கோதண்டராமேச்சுரம் என்ற கோவிலையும், சிவலிங்கம் ஒன்றையும் அமைத்துத்

[1] Dr. N. Subramaniam, Op. Cit., P. 168

தன்னுடைய தந்தையாகிய ஆதித்தசோழனுடைய பெருமையைப் பராந்தக சோழன் பரவியுள்ளான்.

## பரகேசரி முதற்பராந்தக சோழன் (907—953)

ஆதித்த சோழனுக்குப் பிறகு அவனுடைய மகன் பராந்தக சோழன் தஞ்சையில் அரியணையில் அமர்ந்து பரகேசரி என்னும் பட்டத்துடன் அரசபதவி எய்தினான். பராந்தகனுடைய ஆட்சியின் தொடக்கத்தில் வடக்கே காளத்திவரையில் சோழ அரசு பரவியிருந்ததெனலாம். பராந்தகனுடைய மூன்றும் ஆண்டில் தோன்றிய கல்வெட்டுகள் அவன் பாண்டியநாட்டை வென்று 'மதுரையும் ஈழமும் கொண்ட' என்ற பட்டத்தைக் கொண்டதைக் குறிப்பிடுகின்றன. கி.பி. 919ஆம் ஆண்டில் வெள்ளூர் என்னும் இடத்தில் பாண்டிய அரசன் மாறவர்மன் இரண்டாம் இராஜசிம்மன் என்பானையும், அவனுக்கு உதவியாக வந்த ஈழநாட்டுப் படைகளையும் வென்று புகழ் எய்தினான். இப் போரில் பராந்தகனுக்கு அடங்கிய கொடும்பாளூர், கீழப்பழுவூர் நாட்டுச் சிற்றரசர்கள் உதவியளித்தனர். வெள்ளூரில் தோல்வியுற்ற இராஜசிம்ம பாண்டியன் தன்னுடைய தலைநகராகிய மதுரையை விட்டு நீங்கி ஈழநாட்டில் தஞ்சம் புகுந்தனன். ஈழநாட்டரசன், இராஜசிம்மனுக்கு உதவியளித்து மீண்டும் தன்னுடைய நாட்டைப் பெறுவதற்கு உதவிசெய்வதாக முதலில் வாக்களித்தபோதிலும், அவன் அவ்விதம் செய்யாது காலந்தாழ்த்தவே, ஈழத்தை விட்டு நீங்கித் தன்னுடைய உறவினனும்—தாய்மாமனுமாகிய சேரஅரசனிடம் தஞ்சமடைந்தனன். சேரநாட்டிற்குச் செல்லுமுன் தன்னுடைய மணிமுடியையும், இந்திரன் ஆரத்தையும் அவ்வரசனிடம் ஒப்படைத்துச் சென்றான்.

பராந்தக சோழன் மதுரை நகரைக் கைப்பற்றி அங்கே பாண்டியநாட்டின் அதிபதியாக முடிசூட்டிக் கொள்ள விரும்பிய பொழுது, பாண்டியர்களுடைய மணிமுடியும் ஆரமும் மற்ற ஆபரணங்களும் காணவில்லையாகையால், அவற்றைப் பெறுவதற்காக, இலங்கையரசனாகிய நான்காம் உதயன் என்பானிடம் ஒரு தூதுக்குழுவையனுப்பி அவற்றைத் திருப்பியனுப்பும்படி செய்தி விடுத்தான். இலங்கையரசன் பாண்டியனுடைய அரசசின்னங்களைத் திருப்பிக் கொடுப்பதற்குச் சம்மதிக்கவில்லை. ஆகையால், அவற்றைப் பெறுவதற்குச் சோழப் படையொன்று இலங்கை நாட்டிற்கு அனுப்பப்பெற்றது. இலங்கை மன்னன் நான்காம் உதயன் போரில் தோல்வியுற்றபோதிலும், பாண்டியன் இராஜசிம்மன் தன்னிடம் ஒப்படைத்த அரசசின்னங்களையும் எடுத்துக்கொண்டு இலங்கையின் தென்பகுதியிலுள்ள பத்திரமானதோர்

இடத்தில் போய் ஒளிந்து கொண்டனன். சோழநாட்டுப் படைகள் பாண்டிய அரசனுடைய அரச சின்னங்களைப் பெருமல் திரும்ப வேண்டியதாயிற்று. மேற்கூறப்பெற்ற வெற்றிகளினுல் பராந்தக சோழன் 'மதுரையும் ஈழமும் கொண்டவன்' என்று கல்வெட்டுகளில் புகழ்ந்து பேசப்படுகிருன். கலிங்கத்துப் பரணியும், மூவருலாவும் பராந்தக சோழன் மதுரையையும் இலங்கையையும் வென்றதைக் குறிப்பிடுகின்றன.

## சோழ—இராட்டிரகூட உறவு

பரகேசரி விஜயாலய சோழன் (846—861)

இராஜகேசரி ஆதித்தசோழன்—(881—907)

பரகேசரி பராந்தக சோழன் (907—953) | கன்னரதேவன்

பராந்தக சோழனுடைய தம்பி கன்னரதேவன் என்பான், இராட்டிரகூட அரசன் இரண்டாம் கிருஷ்ணனுடைய மகள் இளங்கோபிச்சி என்பாளின் மகனுவான். ஆகையால், இராட்டிரகூட அரசன் இரண்டாம் கிருஷ்ணன் தன்னுடைய பெயரன் சோழநாட்டரசனுகப் பதவிவகிக்க வேண்டுமென்று விரும்பியதும் இயற்கையேதான். பராந்தக சோழனை நீக்கிவிட்டுக் கன்னரதேவனை சோழநாட்டின் அரியணையில் அமர்த்துவதற்கு இரண்டாம் கிருஷ்ணன் எல்லாவித முயற்சிகளும் எடுத்துக் கொண்டான். அவ்வித முயற்சிகள் பயனளிக்காது போகவே, சோழநாட்டின் வடக்கு எல்லையில் வசித்த பாணர், வைதும்பர் முதலிய சிற்றரசர்களைத் தன் கட்சியில் சேர்த்துக்கொண்டு 910—11ஆம் ஆண்டில் சோழராச்சியத்தின்மீது படையெடுத்தான். பராந்தக சோழனும், மேலைக்கங்கர் தலைவனுகிய இரண்டாம் பிருதிவிபதியைத் தனக்குத் துணைவனுகக் கொண்டு வல்லம் என்னும் இடத்தில் இராட்டிரகூடப் படைகளைத் தோற்கடித்து வெற்றிகொண்டான். இராட்டிரகூட அரசனுடைய எண்ணமும் ஈடேறவில்லை. இராட்டிரகூடப் படைகளைத் தோற்ருேடும்படி செய்தபிறகு அவர்களுக்கு உதவிசெய்த வாணர்குலத் தலைவனுகிய இரண்டாம் விக்கிரமாதித்தனையும், வைதும்பர் தலைவனையும் தண்டிக்க விரும்பி அவர்கள் நாட்டின் மீது பராந்தக சோழன் படையெடுத்தான். வாணர்களுடைய பெரும்பாணப்பாடி நாட்டையும், வைதும்பர் வசித்த ஆந்திரப் பிரதேசத்தையும் வென்று சோழஅரசுடன் சேர்த்துக்கொண்டது மன்றியும், அவர்களுடைய நாட்டின் ஒரு பகுதியை மேலை

கங்க அரசனாகிய இரண்டாம் பிருதிவிபதியினிடம் ஒப்படைத்தான். சோழ அரசனிடம் தங்களுடைய நாடுகளை இழந்த பாணர்களும், வைதும்பர்களும் தங்களுடைய அரசியல் தலைவர்களாகிய இராட்டிரகூடர்களிடம் தஞ்சம் புகுந்தனர்.

இராட்டிரகூட நாட்டில் இரண்டாம் கிருஷ்ணன் இறந்த பிறகு (913) அவனுடைய முதற்பெயரன் மூன்றும் இந்திரன் மானியகேடத்தின் அரியணையில் அமர்ந்தான். இம் மூன்றும் இந்திரனுடைய இரண்டாவது மகன் நான்காம் கோவிந்தன் என்பவனாவான். இவ்விளவரசன் மிக்க உடலழகும் வனப்பும் வாய்ந்தவனாதலின், பராந்தக சோழன் தன் மகள் வீரமாதேவி என்னும் இளவரசியை அவனுக்கு மணமுடித்திருந்தான். தனனுடைய அண்ணன் இரண்டாவது அமோகவர்ஷனுக்குப் பிறகு இந்த நான்காம் கோவிந்தன் இராட்டிரகூட மன்னனாக முடிசூட்டிக் கொண்டான். ஆனால், நாட்டை நன்முறையில் ஆண்டு மக்களுக்கு நலன் செய்வதை விடுத்து, தன் கடமைகளை மறந்து வீண்காலம் கழித்தமையால் மக்களுடைய வெறுப்பிற்கு ஆளாகினான். இதைக்கண்ட மூன்றும் அமோகவர்ஷன் என்ற இவனது தாயத்தினன், நான்காம் கோவிந்தனை நாட்டை விட்டுத் துரத்தி அரசபதவியை மேற்கொண்டான். நான்காம் கோவிந்தனும், அவன் மனைவி வீரமாதேவியும் சோழநாட்டிற்கு தப்பித்துவந்து தஞ்சையில் தஞ்சம் புகுந்தனர். தன்னுடைய மருமகனாகிய நான்காம் கோவிந்தனை மீண்டும் இராட்டிரகூட அரியணையில் அமர்த்துவது பராந்தக சோழனுடைய முக்கிய கடமையாயிற்று. மானியகேடத்தில் மூன்றும் அமோகவர்ஷன் என்பான் இறந்தபிறகு, அவனுடைய திறமைமிக்க மகன் மூன்றும் கிருஷ்ணன் இராட்டிரகூடப் பேரரசனானன்.

மேலைக்கங்கநாட்டில் அரசுபுரிந்து பராந்தக சோழனுக்கு உறுதுணையாக விளங்கிய இரண்டாம் பிருதிவிபதியும், அவன் மகன் விக்கியாண்ணனும் இறந்தபிறகு, கங்கரின் மற்றொரு கிளையைச் சார்ந்தவனாகிய பூதுகன் என்பானின் ஆட்சி நிலவிற்று. இந்தப் பூதுகன், மூன்றும் கிருஷ்ணனுடைய மைத்துனன் ஆகையால், பராந்தகனோடு பகைமை பாராட்டி இராட்டிரகூட அரசனோடு சேர்ந்துகொண்டான். பராந்தக சோழன்பால் தம் நாடுகளையிழந்து வருந்திய வாணரும், வைதும்பரும் மூன்றும் கிருஷ்ணதேவனிடத்தில் அடைக்கலம் புகுந்து, அவனால் ஆதரிக்கப்பெற்று இரட்டமண்டலத்தில் தங்கியிருந்தனர். ஆகையால், சோழராச்சியத்தின் வடவெல்லையில் பராந்தகனுடைய எதிரிகள், சோழஅரசை வீழ்த்துவதற்குத் தருணம்

பார்த்து இருந்தனர். இவ்வித அரசியல் சூழ்நிலையில், தன்னுடைய மருமகனுகிய நான்காம் கோவிந்தனை மானிய கேடத்தில் அரசனுக்க விரும்பி பராந்தகசோழன் இராட்டிரகூட நாட்டின்மீது படையெடுத்தது விரும்பத்தக்கதல்ல.

ஆயினும், கி.பி. 940ஆம் ஆண்டில் பராந்தக சோழன் இராட்டிரகூட நாட்டின்மீது படையெடுத்தான். இதனுல் மூன்ரும் கிருஷ்ணனுகிய இராட்டிரகூட மன்னன், பராந்தகனுடைய பரமவிரோதியாயினுன். சோழஅரசனுக்கும் இராட்டிரகூட மன்னனுக்கும் இடையே பகைமை வளர்ந்தோங்கியது. இப்பகைமை தன்னுடைய இராச்சியத்தை அழித்துவிடும் என்று பராந்தகன் முன்கூட்டியே உணர்ந்தான். தன்னுடைய இராச்சியத்தின் வடக்குப்பகுதியில் தகுந்த இராணுவ அமைப்புகளை ஏற்படுத்தினுன். திருக்கோவலூர் தாலுக்காவில் உள்ள திருநாவலூர், முடியூர் என்ற இடங்களில் தன்னுடைய குமாரர்கள் இராஜாதித்தன், அரிஞ்சயன் என்ற இருவரையும் தகுந்த யானைப்படைக்கும்; குதிரைப்படைக்கும் தலைவர்களாக நியமித்துத் தன்னுடைய இராச்சியத்தின் வடவெல்லையில், இராட்டிரகூடர்களுடைய படையெடுப்புகள் நேரா வண்ணம் பாதுகாவல் புரியும்படி அமர்த்தியிருந்தான்.

இராட்டிரகூட அரசனுகிய மூன்ரும் கிருஷ்ணன், கங்கர்குல அரசன் இரண்டாம்பூதுகனைத் தன்னுடைய நெருங்கிய உறவினனுக அமைத்துக்கொண்டும், பாணர்களையும், வைதும்பர்களையும் உதவிக்குச் சேர்த்துக்கொண்டும் சோழராச்சியத்தின்மீது கி.பி 949ஆம் ஆண்டில் படையெடுத்து வந்தனன். தொண்டை மண்டலத்தில் பல இடங்களைத் தன்வசப்படுத்திக் கொண்டான். சோழநாட்டின் வடவெல்லையில் காவற்படையின் தலைவனுக இருந்த இராஜாதித்தனும், அரிஞ்சயனும், இராட்டிரகூடர்களுடைய படைகளை அரக்கோணத்திற்கு அருகில் உள்ள தக்கோலம் என்ற இடத்தில் சந்தித்தனர். இராஜாதித்தன் ஒரு யானையின் மீதமர்ந்து சோழர்களின் மூவகைப் படைகளையும் நடத்தி வெகுதீவிரமாகப் போர் செய்தான். ஆயினும், கங்கர் தலைவனுகிய இரண்டாம் பூதுகன் விடுத்த கூரிய அம்பொன்று இராஜாதித்தனுடைய மார்பைப் பிளந்துவிட்டது. யானையின் மீதிருந்து கீழே வீழ்ந்து உயிர் துறந்தான். சேனைத்தலைவன் இறந்துவிடவே சோழப்படைகள் சிதறியோடின. இராட்டிரகூட அரசன் மூன்ரும் கிருஷ்ணன் பெரும் வெற்றியெய்தி, 'கச்சியும் தஞ்சையும் கொண்ட காவலன்' என்று தன்னுடைய கல்வெட்டுகளில் கூறிக்கொண்டான்.

தக்கோலம் என்னுமிடத்தில் சோழநாட்டு இளவரசன் இறந்ததும், சோழப்படைகள் தோல்வியுற்றதும் புதிதாகத் தோன்றி வளர்ந்துவந்த சோழப் பேரரசிற்குப் பெரியதொரு எதிர்ப்பாகி அப் பேரரசின் வளர்ச்சியைத் திடீரெனத் தடை செய்தது. இராஜாதித்தன் எதிர்பாராத வகையில் இறந்தது கேட்ட அவனுடைய குருவாகிய சதுரானன பண்டிதர் என்ற அறிஞர் இவ்வுலக வாழ்வின் நிலையாமையை உணர்ந்து, தன்னுடைய சிறந்த மாணவன் இறந்தபிறகு உயிர் வாழ்வதில் பயனில்லையென்று தானும் உயிர் துறந்ததாக நாம் அறிகிறோம்.[1] தென்னிந்திய வரலாற்றில் தக்கோலப் போர் சோழஅரசிற்கு எதிர்பாராத ஒரு பேரிடியாக அமைந்தது. இதன்பிறகு முப்பது ஆண்டுகள்வரையில் சோழராச்சியம் அரசியல் வளர்ச்சியின்றி தேங்கிய நிலையில் இருந்தது. ஆயினும், பின்னர் இராஜராஜன், இராஜேந்திரன் ஆட்சிக்காலங்களில் சோழராச்சியம் பெரியதொரு வளர்ச்சியடைவதற்குத் தகுந்த திட்டங்களை வகுத்துக் கொள்வதற்கு ஏற்ற ஓய்வுகாலமாக முடிந்தது என்றும் நாம் கருதலாம். உரோமானியர் வரலாற்றில் அலியா (Allia) என்னுமிடத்தில் உரோமானியர்களைக் காலர்கள் முறியடித்த போதிலும், அத் தோல்வியினுல் உரோமானியர் மனமுடைந்து போகாமல் மீண்டும் தங்களுடைய வன்மையை நிலைநாட்டியது போல், சோழப் பேரரசும் முப்பது ஆண்டுகள் கழித்து ஒரு மேன்மையை அடைந்ததெனக் கூறலாம். சோழராச்சியத்தின் வடபகுதியாகிய தொண்டைமண்டலமும், அதைச் சார்ந்த இடங்களும் இராட்டிரகூடர்களுடைய ஆட்சியின்கீழ் வந்தன. தன்னுடைய அரும்பெறற் புதல்வன் இராஜாதித்தன் இளமையில் போரில் இறந்தது பராந்தக சோழனுக்கு ஆற்றெணுத் துயரத்தை விளைத்து, அவனுடைய ஆயுளையும் கொள்ளை கொண்டது. ஆயினும், தான் இறப்பதற்குமுன் தன்னுடைய இரண்டாவது மகன் கண்டராதித்த சோழனை இளவரசனுகப் பட்டம் சூட்டித் தனக்குப்பின் அரசாளும்படி நியமித்தனன்.

முதற் பராந்தக சோழனுடைய ஆட்சியில் சைவமும், சைவசமயத்தின் அடிப்படையாக இருக்கும் திருக்கோவில்களை அமைக்கும் கலையும் வளர்ந்தோங்கின. இவையன்றியும், சபை, ஊர், நாடு என்ற கிராம அரசியல் அமைப்புகளும் சீர்திருத்தம் பெற்றன. கி.பி. 919—921ஆம் ஆண்டுகளுக்கிடையில் உத்திர மேரூர் சிவத்தலத்தின் ஆலயத்தின் சுவர்களில் பொறிக்கப் பெற்ற இருகல்வெட்டுகள், பராந்தக சோழனுடைய காலத்தில் மகாசபை அமைப்பும், வாரியங்களும் எவ்வாறு அமைக்கப்

[1] R. Sathianathaier, Vol. I, P. 405.

பெற்றன என்றும், வாரியப் பெருமக்களின் கடமைகள் எவை என்பதையும் எடுத்துக் கூறுகின்றன. தில்லையம்பலத்தைப் பொன்மயமாக்கி முடித்த பெருமை பராந்தகனையே சாரும். சிற்றம்பலமாக இருந்த கோவில் பொன்னம்பலமாயிற்று. திருவிடைமருதூர், திருவாவடுதுறை, திருச்செந்துறை முதலிய இடங்களில் அமைந்த கோவில்கள் கற்றளிகளாக அமைக்கப் பெற்றன. சிதம்பரத்திற்கு மேற்றிசையில் பதினாறு மைல்களுக் கப்பால் காட்டுமன்னார்கோவில் என்ற ஊர் வீரநாராயணச் சதுர்வேதி மங்கலம் என்றும், அங்குள்ள திருமால்கோவில் வீரநாராயணப்பெருமாள் கோவில் என்றும் இன்றும் வழங்கு கின்றன. வீரநாராயணன் என்பது பராந்தக சோழனுடைய பெயர்களுள் ஒன்றாகும். இக் காட்டுமன்னார்கோவிலிலிருந்து பன்னிரெண்டு மைல் தூரத்திற்குப் பரவியிருக்கும் வீர நாராயணன் ஏரியும், அதற்கு வடக்கில் அமைந்துள்ள பெருமாள் ஏரியும் பராந்தக சோழன் சோழநாட்டை நெற்களஞ்சியமாகச் செய்வதற்கு மேற்கொண்ட முயற்சிகளை எடுத்துக் காட்டு கின்றன. மதுராந்தகன் என்ற பெயரும் பராந்தகனுக்கு வழங்கி வந்தமை மதுராந்தக சதுர்வேதிமங்கலம், மதுராந்தக நல்லூர் என்னும் பெயர்களால் விளக்கம் பெறுகின்றன. மதுராந்தகம் என்ற பேரூரில் அமைந்துள்ள பெரிய நீர்ப்பாசன ஏரியும், மதுராந்தக பராந்தகசோழன் காலத்தில் அமைக்கப்பெற்ற ஏரி என்று கருதுவதும் சாலப் பொருத்தமாகும்.

மேற்கூறப்பெற்ற மறுபெயர்களோடு, வீரசோழன், பண்டித சோழன், குஞ்சரமல்லன் என்ற பெயர்களும் பராந்தக சோழ னுக்கு அமைந்திருந்தன. பராந்தகசோழனுக்குப் பல மனைவியர் கள் இருந்தபோதிலும், சேரர்குலப் பெண்ணாகிய கோக்கிழான் அடிகள் பட்டமகிஷியாக இருந்தனள். சோழர்களுக்கு அடங்கிய சிற்றரசர் குடும்பங்களில் பராந்தக சோழன் திருமண உறவுகொண்டு, அவர்களுடைய அன்பையும் ஆதரவையும் பெற்று சோழராச்சியத்தை வன்மையுறும்படி செய்துள்ளான்.

# 8. முதலாம் பராந்தக சோழனுக்குப்பின் சோழர் வரலாறு

பராந்தக சோழனுடைய மூத்த மகன் இராஜாதித்தன் தக்கோலப் போரில் உயிரிழந்தமையால், அவனுடைய இரண்டாவது மகன் கண்டராதித்தன் ராஜகேசரி என்ற பட்டம் புனைந்து 953 முதல் 957 வரை சோழ அரசராக விளங்கினர். இந்தக் கண்டராதித்த சோழரும், அவருடைய மனைவியாகிய செம்பியன் மாதேவியும் அரசியல் வரலாற்றைவிட சைவ சமய வரலாற்றில் சிறந்த இடத்தை வகித்தனர் என்று கூறலாம். கண்டராதித்தருடைய ஆட்சி சோழமண்டலத்தில் மட்டும் நிலைத்திருந்ததெனக் கூறலாம். ஏனெனில், பாண்டிய மன்னர்கள் தங்களுடைய நாட்டில் மீண்டும் தன்னுரிமைபெற்று ஆளத் தொடங்கினர். பல சதுர்வேதிமங்கலங்களும், நீர்ப்பாசன நீர் நிலைகளும் கண்டராதித்தருடையஆட்சியில்அமைக்கப்பெற்றன. சைவ சமயத்தில் ஆழ்ந்த பற்றுள்ளவரேனும் கண்டராதித்தர் மற்ற சமயங்களையும், அவற்றைப் பின்பற்றியோரையும் சமயப் பொறையுடன் நடத்தினர். 'சிவபக்தியும், தமிழ்ப்புலமையும் ஒருங்கே அமையப்பெற்ற இவ் வேந்தர் தான் வணங்கிய திருப்பதிகளில் எழுந்தருளியுள்ள இறைவன்மீது பல பதிகங்கள் பாடியிருத்தல்கூடும். அவற்றுள், சிதம்பரம் கோவில் பதிகம் ஒன்றே இந் நாளில் நமக்குக் கிடைத்துள்ளது.' இவர் இயற்றிய திருவிசைப்பா என்னும் பதிகத்தில்,

'சீரான்மல்கு தில்லைச்செம்பொன் அம்பலத்தாடி தன்னைக்
காரார்சோலைக் கோழிவேந்தன் தஞ்சையர்கோன் கலந்த
ஆராவின்சொல் கண்டராதித்தன் அருந்தமிழ்மாலை'

என்றும்,

'வெங்கோல் வேந்தன் தென்னாடும் ஈழமும் கொண்டதிறல்
செங்கோற் சோழன் கோழிவேந்தன் செம்பியன்
பொன்னணிந்த
அங்கோல் வளையார் பாடியாடும் அணிதில்லை யம்பலம்'

என்றும், இன்னிசைத் தமிழால் போற்றியுள்ளார்.

இக் கண்டராதித்த சோழருடைய இரண்டாவது தேவியார் மழநாட்டுப் பழுவேட்டரையருடைய குலத்திற் பிறந்த

பெண்ணரசியாவர். அவர் செம்பியன் மாதேவியார் என்று வழங்கப் பெற்ருர். இவ்விருவருடைய புதல்வன் மதுராந்தக உத்தம சோழன் என்ற பெயருடன் 973 முதல் 985 ஆண்டுவரை சோழ அரசனுக விளங்கினுன். சிதம்பரம் தாலுக்கா உடையார்குடியில் கிடைத்த கல்வெட்டொன்று கண்டராதித்தரை 'மேற்கெழுந்தருளிய தேவர்' என்று கூறுகிறது. பெங்களூர் மாவட்டத்தில் காணப்பெறும் கல்வெட்டொன்று இவரை சிவஞான கண்டராதித்தர் என்று குறிப்பிடுகின்றது. சிவஞானியாக விளங்கிய இம் மன்னர் தம் அரசைத் துறந்து மேற்கேயுள்ள சிவஸ்தலங்களுக்கு யாத்திரை செய்திருக்க வேண்டும் என்று நாம் உய்த்துணரலாம். மைசூர்நாட்டில் நந்தி என்னும் ஊரில் உள்ள சிவன் கோவிலில் கண்டராதித்தருடைய உருவம் என்று கூறக்கூடியதும், யோகாசனத்தில் அமர்ந்த வடிவத்துடனும் சிலையொன்று காணப்பெறுகிறது. இஃது, தஞ்சை மாவட்டத்தில் கோனேரிராஜபுரம் சிவன்கோவிலில் காணப்பெறும் கண்டராதித்தருடைய உருவத்துடன் ஒற்றுமையாக இருப்பதால், அவ்வுருவம் கண்டராதித்தருடையது என்று கொள்வதில் தவறு ஒன்றும் இல்லை. ஆகையால், கண்டராதித்தர் மைசூர் நாட்டிற்குப் புனிதயாத்திரைக்குச் சென்று அங்கே சிவபதவி அடைந்தார் என்று கொள்ளலாம்.

கண்டராதித்த சோழருடைய தேவியராகிய செம்பியன் மாதேவியார் சோழருடைய வரலாற்றில் ஓர் ஒப்பற்ற பதவியை வகிக்கிருர் என்று நாம் கூறலாம். 'இவ்வரசி எல்லையற்ற சிவபக்திச் செல்வம் படைத்தவளாய்ச் சிறப்புற்றிருந்தமைபற்றி மாதேவடிகள் எனவும் வழங்கப் பெற்றவள். இவ்வம்மை தன் கணவனை இளமைப்பருவத்தில் இழந்தும், குழந்தையாக இருந்த தன் தனி மகனுகிய உத்தம சோழன் பொருட்டே உயிர் வாழ்ந்தவள். இவ்வம்மையார் தன் கணவன் இறந்த பின்னர் அரிஞ்சயன், சுந்தரசோழன், உத்தமசோழன் ஆகியவர்கள் ஆட்சிக்காலத்திலும், முதல் இராஜராஜ சோழன் ஆட்சியில் கி.பி. 1001 வரையிலும் உயிருடன் இருந்தனள். இவ்வரசி செங்கற்கோவில்களைக் கற்றளிகளாக எடுப்பித்தும், பல கோவில்களுக்கு நிவந்தங்கள் விட்டும் அணிகலன்கள் அளித்தும் புரிந்துள்ள அறங்கள் மிகப்பலவாம்.

'அவற்றுள் முதற்கண்வைத்துப் பாராட்டற்குரியது தஞ்சை மாவட்டத்தில் திருநல்லம் என்னும் கோனேரிராஜபுரத்துச் சிவாலயத்தைக் கற்றளியாக எடுப்பித்து அதற்கு நாள் வழிபாட்டிற்கும், விழாக்களுக்கும் நிவந்தமாக இறையிலி நிலங்கள் அளித்திருப்பதேயாம். இத் திருக்கோவிலுக்கு

ஸ்ரீகண்டராதித்தன் என்ற தன் கணவன் பெயரையே வைத்திருப்பது மிக்க சிறப்புடைத்தாகும். இக் கோவிலில் கண்டராதித்த சோழர் சிவலிங்கத்தை வழிபடுவதாகப் படிமம் ஒன்று அமைத்துவைத்திருத்தலை இன்றும் காணலாம்.

'செம்பியன் மாதேவி கற்றளிகளாக அமைத்த பிற கோவில்கள்—விருத்தாசலம், திருக்கோடிக்கா, தென்குரங்காடு துறை, செம்பியன்மாதேவி, திருவாரூர் அரநெறி, திருத் துருத்தி, திருமணஞ்சேரி, திருவக்கரை என்னும் இடங்களில் உள்ள சிவாலயங்களாகும். முதல் இராஜராஜசோழன் மகனாகிய கங்கைகொண்ட சோழன், செம்பியன்மாதேவியிலுள்ள திருக் கைலாயமுடையார் கோவிலில் கி. பி. 1020-ல், இவ்வம்மையின் படிமத்தை எழுந்தருளுவித்து வழிப்பாட்டிற்கு நிவந்தம் அளித்துள்ளான். எனவே, இவ்வம்மை இறைவன் திருவடியை அடைந்தபின்னர் தெய்வமாகக் கருதப்பெற்று கோவிலில் படிமம் வைத்து அரசனால் வணங்கப் பெற்றமை அறியற் பாலதாகும்'.[1]

## பரகேசரி அரிஞ்சயன்

கண்டராதித்த சோழருக்குப் பிறகு அவருடைய இளவல். அரிஞ்சயன் ஓராண்டுகாலம் சோழமன்னராக ஆட்சிபுரிந்தார். கண்டராதித்தரும், அரிஞ்சயனும் இராட்டிரகூட அரசனாகிய மூன்றும் கிருஷ்ணன் வென்றுகொண்ட தொண்டைமண்டலப் பகுதியை மீட்பதற்குச் செய்த முயற்சிகள் பயன்தரவில்லை. பெரும்பாணப்பாடி நாட்டில் இராட்டிரகூட அரசனுக்கு அடங்கியிருந்த வாணர்குல அரசர்களுடன் மணவுறவுகொண்டு அவர்களை இராட்டிரகூடருடைய பிணைப்பினின்றும் நீக்கித் தன்வயப்படுத்துவதற்கு ஏற்பாடுகள் செய்தார். சோழ மன்னர்களுக்கு அடங்கிய சிற்றரசர்களிடமும், கீழைச்சாளுக்கிய அரசகுலத்திலும் பெண்கொண்டு அவர்களுடன் அமைதியாக வாழ்வதற்கு வழிகள் வகுத்தார். கல்வெட்டுகளில் இவருக்கு 'ஆற்றூர் துஞ்சிய தேவர்' என்ற பெயர் வழங்குகிறது. முதலாம் இராஜராஜசோழன், மேல்பாடி என்ற இடத்தில் ஒரு சிவாலயம் அமைத்து, இவரது நினைவாக அரிஞ்சயேச்வரம் என்று பெயரிட்டுள்ளமை அறியதக்கதாகும்.[2]

## இராஜகேசரி இரண்டாம் பராந்தக சுந்தரசோழன் (957—970)

அரிஞ்சய சோழருக்குப்பின் இரண்டாம் பராந்தகன் என்பார் சோழ மன்னராக அரசாண்டார். இவருடைய உடலமைப்பும்

[1] T. V. S. Pandarathar, 'Later Cholas', PP. 88—90.

[2] Ibid., P. 69.

தோற்றமும் மிக்க பெருமிதத்துடன் விளங்கியமையால் இவருக்குச் சுந்தரசோழர் என்ற பெயர் வழங்கலாயிற்று. இவர் காலத்தில் பாண்டியநாட்டை, இரண்டாம் இராஜசிம்மனுடைய மகனாகிய வீரபாண்டியன் ஆட்சிபுரிந்தனன். பராந்தக சோழருடைய கல்வெட்டுகளில் 'பரகேசரி' என்றும், 'பாண்டியனைச் சுரம் இறக்கின பெருமாள்' என்றும் போற்றப் பெறுகிறார். இவற்றால் இரண்டாம் பராந்தகன் பாண்டியநாட்டில் சோழர்களுடைய ஆட்சியை மீண்டும் நிலைபெறச் செய்ய முயற்சிகளை மேற்கொண்டனர் என்பது தோன்றுகிறது. சோழஅரசனுடைய தாக்குதலினின்றும் தன்னைக் காப்பாற்றிக் கொள்வதற்காக வீரபாண்டியன் இலங்கைஅரசனாகிய நான்காம் மகிந்தனுடைய உதவியைப் பெற்றான். கி.பி. 962 ஆம் ஆண்டில் சேவூர் என்னுமிடத்தில் நடந்த போரில் பராந்தக சோழர் பாண்டியனை வென்று வாகை சூடினார் என்று ஆனைமங்கலச் செப்பேடுகளில் கூறப்பெற்றுள்ளது. ஆயினும், இப் போரில் பாண்டியனுடைய சேனைகள் முழுவதும் அழிந்துவிடவில்லை. மீண்டும் பாண்டிய அரசன் சோழனுக்கு எதிராகக் கலகம் செய்யவே, இரண்டாவது தடவையாகப் பராந்தக சோழர் பாண்டிய நாட்டின்மீது படையெடுத்துச் சென்றார். இப் படையெழுச்சியில் சோழதேசத்துப் படைகளுக்குச் சோழ இளவரசன் ஆதித்த கரிகாலன் தலைமை வகித்துச் சிறப்புற்றான். அவனுக்கு உதவியாகக் கொடும்பாளூர் சிற்றரசனாகிய பூதிவிக்கிரமகேசரியும், தொண்டைமண்டலத்தில் வாழ்ந்த பார்த்திபேந்திரவர்மன் என்ற மற்றொரு சிற்றரசனும் இருந்தனர். ஆதித்த கரிகாலன், பாண்டிய மன்னன் வீரபாண்டியனை வென்று அடக்கியதாக தன்னுடைய கல்வெட்டுகளில் கூறிக்கொண்ட போதிலும், பாண்டியநாடு முழுவதிலும் தன்னுடைய அதிகாரத்தை நிலைபெறச் செய்ய முடியவில்லை. பாண்டியநாட்டில் சாதிக்கவியலாத செயலைப் பராந்தகசோழர் தொண்டைமண்டலத்தில் சாதிக்கமுடிந்தது. படிப்படியாகத் தொண்டைமண்டலத்தை இராட்டிரகூடர்களுடைய ஆட்சியினின்றும் சோழர்கள் கைப்பற்றிக் கொண்டனர்.

பராந்தகன் திருக்கோவலூர் மலையமான்குலத்து இளவரசியாகிய வானவன் மாதேவியை மணந்து கொண்டார். இவ்வரசியின் புதல்வர்கள் இரண்டாம் ஆதித்தகரிகாலனும், அவனுடைய தம்பி அருள்மொழிதேவனாகிய முதலாம் இராஜராஜனும் ஆவர். இவர்களுடைய தங்கையே குந்தவை பிராட்டியார். கி.பி. 966 ஆம் ஆண்டில், இரண்டாம் பராந்தகன் தன்னுடைய முதல் மகனான ஆதித்த கரிகாலனை இளவரசனாகப் பட்டம்

சூட்டியபோதிலும், ஊழ்வினை வயத்தால் சில விரோதிகள் அவனை நயவஞ்சகமாகக் கொலைசெய்துவிட்டபடியால் அவன் மணிமுடி தரிக்கும் நல்லூழ் இல்லாது இறந்துபோனான். இரண்டாம் பராந்தகனுடைய ஆட்சியில் பொறிக்கப்பெற்ற அன்பில் செப்பேடுகள், தன்னுடைய அந்தண அமைச்சனாகிய அநிருத்தபிரமாதிராயன் என்பானுக்குக் கருணாகரமங்கலம் என்ற கிராமத்தைப் பிரமதேயமாக அளித்த செய்தியை உணர்த்துகின்றன.

காட்டுமன்னார்கோவிலுக்கு அண்மையிலுள்ள உடையார் குடியில் கிடைத்த கல்வெட்டொன்றின்படி, இரண்டாம் பராந்தகனுடைய முதல் புதல்வன் ஆதித்த கரிகாலன் என்பானை நான்கு பிராமண சகோதரர்கள் எக் காரணத்தை முன்னிட்டோ அநியாயமாகக் கொலை செய்துவிட்டனர். அந் நால்வரில் இருவர் சோழ அரசாங்கத்தில் பெரும்பதவிகளை வகித்தவராவர். இக் கல்வெட்டின் கூற்றை ஆராய்ந்து அறியாமல் சில வரலாற்று ஆசிரியர்கள் கண்டாரதித்தனுக்கும், செம்பியன் மாதேவிக்கும் மகனாகிய உத்தம சோழன் என்பவன்தான் ஆதித்தகரிகாலனைக் கொலைசெய்தவன் என்று கூறியுள்ளனர். K.A. நீலகண்டசாஸ்திரியாரைப் பின்பற்றி, சத்தியநாதய்யர் அவர்களும், 'உத்தம சோழனை, சிவாஜிக்கும்—சாய்பாயிக்கும் மகனாகத் தோன்றிய சாம்பாஜியைப் போன்ற துர்க்குணமுள்ளவன்' என்று கூறியுள்ளார்.[1] ஆனால், சதாசிவப் பண்டாரத்தார், மேற்கூறப்பெற்ற கொலைபாதகத்திற்கு உத்தம சோழன் எவ்வாற்றானும் பொறுப்பாளி அல்ல என்றும், இத் தீச்செயல் சில அரசாங்க அதிகாரிகளால் செய்யப்பெற்றதென்றும் ஆராய்ந்து கூறியுள்ளார்.[2] எதிர்பாராதவகையில் தன்னுடைய தலைசிறந்த மகன் கொலையுண்டதை மனத்துட்கொண்டு மனமுடைந்து சிலநாட்களில் இரண்டாம் பராந்தகன் இறந்துபட்டதாகத் தோன்றுகிறது. இவ்வரசர் காஞ்சிபுரத்தில் அமைத்திருந்த அரசமாளிகையொன்றில் உயிர்நீத்ததால், 'காஞ்சி பொன்மாளிகையில் துஞ்சிய தேவரென' அழைக்கப் பெற்றார். இரண்டாம் பராந்தகன் இறந்தபொழுது தன் கணவருடைய பிரிவாற்றாது, வானவன் மாதேவி உடன்கட்டை ஏறி உயிர்நீத்தாள் என்று திருவாலங்காட்டுச் செப்பேடுகள் கூறுகின்றன. இரண்டாம் பராந்தகனின் புதல்வியும், இராஜராஜ சோழனுடைய உடன்பிறந்தாளுமாகிய குந்தவை பிராட்டியார், தன் தமையன் இராஜராஜ சோழனால் அமைக்கப்பெற்ற தஞ்சை பெரிய கோவிலில்

[1] R. Sathianathaier Vol. I, P. 406.

[2] T V. S. Pandarathar op. cit., PP. 76—77

தன் பெற்றோர்களுடைய உருவச்சிலைகளை அமைத்து, அவர்களுடைய சேவையை நினைவுப்படுத்தும் வகையில் ஒரு மருத்துவசாலையையும் அமைத்ததாக நாம் அறிகிறோம்.

பராந்தக சோழருடைய ஆட்சிக்காலத்தில் சுந்தரசோழ புரங்கள் என்ற பல பிரமதேய கிராமங்களும், சுந்தரசோழப் பேரேரி என்ற நீர்நிலைகளும் அமைக்கப்பெற்றன. வீரசோழியம் என்ற தமிழிலக்கண நூலில் இரண்டு பாடல்கள், இவ்வரச ருடைய சமயப்பொறையையும், தமிழ்ப்புலவர்களை ஆதரித்தமை யையும் எடுத்துக்காட்டுகின்றன. சோழர்களுடைய பழைய தலைநகராகிய பழையாறை வடதளி என்னும் நகரம், இரண்டாவது பராந்தகனுடைய ஆட்சியில் பல சிற்றூர்களைத் தன்னகத்தே கொண்ட பெரியதொரு தலைநகரமாக விளங்கியது. இந் நகர் ஒன்பது பத்தாம் நூற்றாண்டுகளில் நந்திபுரம் எனவும், 11, 12ஆம் நூற்றாண்டுகளில் முடிகொண்டசோழபுரம் என்றும் வழங்கப்பெற்றது.

## பரகேசரி உத்தம சோழன் (970—985)

இந்த சோழமன்னர் முதல் கண்டராதித்த சோழருடைய புதல்வராவார். சில வரலாற்றாசிரியர்கள், இவரை மிகவும் கொடிய செயலாகிய ஆதித்த கரிகாலனைக் கொன்ற கொலைக் குற்றத்தைச் செய்வித்தவராகக் கருதி, நல்லதொரு தகப்ப னுக்குப்பிறந்த கொடிய பிள்ளை எனக் கூறியுள்ளனர். ஆனால், திரு சதாசிவப் பண்டாரத்தார் அவர்கள், மேற்கூறப்பெற்ற தீச்செயலில் உத்தமசோழருக்கு எவ்விதப் பங்குமில்லை எனக் கல்வெட்டுகளின் சான்றுகள் மூலம் உறுதி செய்துள்ளார். சோழர் வரலாற்றில் இந்த உத்தமசோழர் ஏன் நெடுநாள் வரையில் அரசுரிமைப் பெறாமல் இருந்தார் என்பது ஒரு சிக்கலான பிரச்சினையாகும். ஆனால் பண்டாரத்தார், முதலாம் இராஜராஜனுடைய பெருமையை உயர்த்திக்கூறும் செய்தி யொன்றைக் கூறி இந்தக் காரணத்தை ஒருவகையாக மழுப்பி யுள்ளார். திருவாலங்காட்டுச் செப்பேடுகளைத் துணையாகக் கொண்டு, 970ஆம் ஆண்டில் இரண்டாம் பராந்தகன் இறந்த பிறகு சோழநாட்டு மக்கள் இராஜராஜன் அரசுரிமையை அடைய வேண்டுமென்று விரும்பியதாகவும், ஆனால், இராஜ ராஜன் அவ்விதம் செய்யாது தன்னுடைய பெரியபாட்டன் கண்டராதித்தரின் புதல்வன் உத்தமசோழன் சோழருடைய அரசுரிமையைப் பெறவேண்டுமென்று தன்னுடைய பெருந் தன்மையைப் புலப்படுத்திக்கொண்டான் என்றும் கூறியுள்ளார்.

ஆனால், அறிஞர் N. சுப்பிரமண்யம் அவர்கள், இராஜராஜன் அரசுரிமைப்பெற உரிமை உடையவனல்ல என்று கூறுவர். உத்தம சோழருடைய மகனாகிய மதுராந்தகன் கண்டராதித்தனை சாதாரண அரசியல் அதிகாரியாக்கிவிட்டு அவன் பெறவேண்டிய அரசுரிமையை முதலாம் இராஜராஜன் பெற்றது பெரியதொரு துரோகச் செயலாகும் என்று கூறுவர்.[1]

உத்தம சோழருடைய கல்வெட்டுகள் தொண்டைநாட்டில் உள்ள திருமுல்லைவாயில், காஞ்சிபுரம், திருவொற்றியூர், திருவடந்தை, மீஞ்சூர், பழங்கோயில், திருமால்புரம், திருவதிகை முதலிய இடங்களில் காணப்பெறுகின்றன. தொண்டை மண்டலத்தில் இக் கல்வெட்டுகள் காணப்பெறுகின்றமையால் இராட்டிரகூட அரசர்களிடமிருந்து இப் பகுதி மீண்டும் சோழருடைய ஆட்சிக்கு மீட்கப் பெற்றிருத்தல் வேண்டும். மேற்கூறப்பெற்ற கல்வெட்டுகள், அக் காலத்தில் நிலவிய பொருளாதார, சமூக நிலைமைகளை நன்கு உணர்ந்துகொள்வதற்கும், அக் காலத்தில் தமிழ் வரிவெழுத்தின் நிலைமை எவ்வாறு இருந்ததென நாம் அறிவதற்கும் துணைசெய்கின்றன. இக் கல்வெட்டுகளில், உத்தம சோழருடைய மனைவிமார்களாகிய திரிபுவனமாதேவி, பஞ்சவன்மாதேவி, சொர்ணமாதேவி, ஆரூரன் அம்பலத்தாடிகள் முதலிய பெயர்கள் காணப்பெறுகின்றன. இவ்வரசிகள் எல்லோரும் தங்களுடைய மாமியாராகிய செம்பியன்மாதேவிபால் மிகுந்த பக்திகொண்டு அவர்களுடைய பெயரில் தேவாலயங்களுக்குப் பல நிவந்தங்களை விடுத்துள்ளனர். தஞ்சை மாவட்டத்தில், நாகப்பட்டினம் தாலுக்காவிலுள்ள செம்பியன்மாதேவிச் சதுர்வேதிமங்கலத்தில் உள்ள சிவன் கோவிலுக்கு மேற்கூறப்பெற்ற அரசிகள் பல விலையுயர்ந்த அணிகலன்களை அளித்துள்ளனர்.

திருக்கோவலூர் பகுதியாகிய மலைநாட்டை சித்தவடத்தடிகள் என்ற சிற்றரசன், உத்தமசோழருக்கடங்கி ஆண்டு வந்ததாகத் தெரிகிறது. அம்பலவன் பழுவூர் நக்கன் என்பான், விக்கிரமசோழ மாராயன் என்ற பட்டப்பெயரொடு உயர்தர சோழ அரசாங்க அலுவலாளனாக விளங்கினான். திருச்சி மாவட்டத்திலுள்ள கோவிந்தபுத்தூரில் உள்ள சிவன் கோவிலுக்குப் பல நிவந்தங்களை ஏற்படுத்தியுள்ளான். நடுவில் புலியுருவத்தோடு, வடமொழியில் உத்தமசோழன் என்ற பெயர் பொறிக்கப்பெற்ற ஒரு பொற்காசு கிடைத்துள்ளது. இஃது, சோழ அரசர்கள் வெளியிட்ட பொற்காசுகளில் மிக்க

1 Dr. N. Subramaniam, Ibid., P.178.

பழமையானதென சர் வால்டர் எலியட் என்பார் கருதுவர். உத்தம சோழருடைய ஆட்சிக்காலத்தில் வெளிநாட்டுப் படையெழுச்சிகளும், உள்நாட்டுக் கலகங்களும் இன்றி அமைதி நிலவி மக்கள் நல்வாழ்வு பெற்றனர் எனக் கூறலாம்.

# 9. இராஜகேசரி முதலாம் இராஜராஜ சோழன் (985—1014)

அருள்மொழிவர்மன் என்ற இயற்பெயர் கொண்ட இராஜராஜ சோழன், இரண்டாம் பராந்தகன் சுந்தரசோழனுடைய இரண்டாவது புதல்வனவன். கி. பி. 985-ல் சோழ அரசிற்கு அரசனாக முடிசூடி முப்பது ஆண்டுகள்வரை சோழராஜ்யத்தை ஆண்டான். இவனுடைய ஆட்சியில் சோழஅரசு தென்னிந்தியா முழுவதையும் தன்னகத்தே கொண்ட ஒரு பேரரசாகி மேன்மையுற்றது. இராட்டிரகூடர்களுடைய படையெழுச்சியினால் ஏற்பட்ட தக்கோலப் போரினால் தடுமாற்றமுற்ற சோழஅரசு மீண்டும் தலைதூக்கி, பல்வகை வளங்களும் நிறைந்து,சிறந்த தரைப்படைகளையும் கடற்படையும் கொண்டு சமயச் சிறப்பும், இலக்கிய மேன்மையும் கொண்டது இப் பேரரசன் காலத்திலும், இவனுடைய மகன் கங்கைகொண்ட சோழனுடைய ஆட்சியிலுமாகும்.

தன்னுடைய தாய் வானவன் மாதேவிபால் ஐப்பசி மாதம் சதய நட்சத்திரத்தில் பிறந்தவன் இராஜராஜ சோழன். இவன் பிறந்த ஐப்பசிமீ சதய நட்சத்திரத்தில் தேவாலயங்களில் பிறந்தநாள் விழா கொண்டாடுவதற்காகப் பல நிவந்தங்கள் ஏற்படுத்தப் பெற்றன. இவனுடைய இயற்பெயர் அருள்மொழி வர்மன் என்பதாயினும், தான் சேர, பாண்டிய அரசர்கள்மீது காந்தளூர் முதலிய இடங்களில் பெரும் வெற்றியடைந்தபிறகு இராஜராஜ சோழன் என்னும் பெயர் பூண்டனன் (988). தன்னுடைய இளமைப்பருவத்தில் செம்பியன் மாதேவி என்ற சிவபக்திச்செல்வம் நிறைந்த அம்மையாராலும், தன் தமக்கை குந்தவை பிராட்டியாலும் வளர்க்கப் பெற்றமையால் அவ்விருவருடைய அருட்செல்வ குணங்களெல்லாம் இவனிடம் நிறைந்திருந்தன. தென்னிந்திய வரலாற்றைக் கற்போருக்கும் எழுதுவோருக்கும் இராஜராஜ சோழன் சிறப்பு மிக்கதொரு சேவை செய்துள்ளான். அதாவது அவனுடைய ஆட்சிக்காலத்தில் பொறிக்கப்பெற்ற செப்பேடுகளிலும், கல்வெட்டுகளிலும் ஆட்சியாண்டுதோறும் நிகழ்ந்த வரலாற்று நிகழ்ச்சிகளைத்

தொகுத்து 'மெய்க்கீர்த்தி' என்ற பெயரில் ஒரு முன்னுரை சேர்க்கப் பெற்றதாகும். இம் மெய்க்கீர்த்திகள் மங்கலகரமான சொற்றொடர்களைக் கொண்டு அகவற்பாக்களில் அமைக்கப் பெற்றன. இந்த அகவல் பாக்கள் நல்ல தமிழில் எதுகை மோனை அமைந்து மாணவர்களும், ஏனையவர்களும் படித்தின்புறத்தக்க வகையில் தமிழ்வல்ல புலவர் பெருமக்களால் அமைக்கப் பெற்றவையாகும். இவைகள் சோழமன்னர்களுடைய வெற்றிகளையும், பிறவற்றையும் ஆண்டுதோறும் சேர்த்து இன்னின்ன ஆட்சியாண்டில் இன்னின்ன நிகழ்ச்சிகள் நடைபெற்றன என்று தொகுத்துக் கூறுகின்றன. முதலாம் இராஜராஜ சோழனுடைய எட்டாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டில் உள்ள அவனது மெய்க்கீர்த்தி 'திருமகள் போல' என்று தொடங்குகிறது.

'திருமகள் போலப் பெருநிலச் செல்வியும்
தனக்கே உரிமை பூண்டமை மனக்கொளக்
காந்தளூர்ச் சாலை கலமறுத் தருளி
வேங்கை நாடும் கங்க பாடியும்
தடிகை பாடியும் நுளம்ப பாடியும்
குடமலை நாடும் கொல்லமும் கலிங்கமும்
முரட்டொழில் சிங்களர் ஈழ மண்டலமும்
இரட்டபாடி ஏழரை இலக்கமும்
முன்னீர்ப்பழந்தீவு பன்னீராயிரமும்
திண்டிறல் வென்றி தண்டால் கொண்டதன்
எழில்வளர் ஊழியுள் எல்லா யாண்டும்
தொழுதக விளங்கும் யாண்டே செழியரைத்
தேசுகொள் கோ இராசகேசரி வர்மரான
உடையார் ஸ்ரீ ராசராசதேவர்க்கு யாண்டு.'

மேலே கூறப்பெற்ற மெய்க்கீர்த்தியின்படி இராஜராஜ சோழனுடைய முதல்வெற்றி சேரநாட்டில் இருந்த காந்தளூர்ச் சாலை கலமறுத்தற்காகப் பாண்டியநாட்டின் வழியாகப் படையெடுத்ததாகும். இதுகாறும் வரலாற்றாசிரியர்கள் 'காந்தளூர்ச் சாலை' என்னும் சொற்றொடருக்குக் காந்தளூருக்கு அருகிலிருந்த கப்பல்படை எனப் பொருள்கொண்டு எழுதியுள்ளனர். ஆனால், அறிஞர் N. சுப்பிரமணியம் அவர்கள் 'சாலை' என்ற சொல்லிற்கு 'ஆயுதச்சாலை' என்று பொருள்கொண்டு, இராஜராஜன் அழித்தது சேரர்களுடைய கப்பல்படையல்லவென்றும், தரைப் படைகளுக்குரிய போர்க்கருவிகளைத் தயாரிக்கும் ஆயுதச்சாலை

என்றும் பொருள் கொண்டுள்ளார்.[1] பேரறிஞர் K. K. பிள்ளை அவர்கள், 'காந்தளூர்ச்சாலை கலம் அறுத்தருளி' என்னும் சொற்றொடருக்குப் பின்வருமாறு பொருள் கொண்டுள்ளனர் :

'காந்தளூர்ச்சாலை என்பதை மாணவர்கள் தங்கியிருந்து உணவுகொண்டு கல்வி பயின்றுவந்த பல்கலைக்கழகங்களுக்கு ஒப்பிடலாம். கல்வெட்டுகளில் சாலை, சாலாபோகம் என்ற சொற்கள் அக் கல்வி நிறுவனங்களையும், அவற்றிற்கு விடப் பட்ட நிவந்தங்களையும் குறிப்பனவாகக் கொள்ளவேண்டும். பார்த்திவசேகரபுரத்து சாசனம் ஒன்று பின்வருமாறும் கூறுகிறது: அவ்வூர்ச்சாலையில் கல்வி பயிற்றிய சட்டர்கள் (ஆசிரியர்கள்) சேர, சோழ, பாண்டியரின் ஆட்சியில் பங்கு கொள்ளும் பயிற்சியும் அறிவும் பெற்றவர்களாக இருத்தல் வேண்டும் என்றும், சில ஒழுங்கு முறைகளுக்கு உட்பட்டு அவர்கள் படைக்கலங்கள் தாங்கும் தகுதிபெற்றிருக்கவேண்டு மென்றும், வேதங்கள், வியாகரணங்களோடு, அரசியலிலும் போர்களிலும் பெறவேண்டியவையும் மாணவர்களுக்குச் சுவடி களின் மூலமும், நடைமுறையிலும் அளிக்கப்பட்டு வந்தது என்றும் அறிகிறோம். இராசராச சோழன் காந்தளூர்ச்சாலையை தன்னுடைய ஆணையின்கீழ்க் கொண்டுவந்து, அதனிடம் இருந்த படைபலத்தைக் குறைத்து, சாலையின் நடைமுறையில் பெரிய மாறுதல்களைச் செய்து சாலையைச் சீர்திருத்தி அமைத்திருக்க வேண்டும்'' என்று கூறுவர்.[2]

இராஜராஜ சோழனுடைய ஆட்சியின் தொடக்கத்தில் சேர அரசனாக இருந்த பாஸ்கர இரவிவர்மன் என்பார் சோழமன்னன் அனுப்பிய தூதன் ஒருவனை அவமதித்து உதகை என்னும் இடத்தில் சிறைப்படுத்தியதாகும் என்று மூவருலா என்ற நூலை இயற்றிய ஒட்டக்கூத்தர் கூறியுள்ளார். உதகையில் சிறை யிலிடப்பட்டு அவமானம் செய்யப்பெற்ற தன்னுடைய தூதன் ஒருவனை மீட்பதற்காகச் சேரநாட்டின்மீது படையெடுத்தான் இராஜராஜன். இந்த உதகை என்னுமிடம் தென்பாண்டிநாட்டில் நாகர்கோவிலுக்கு அண்மையிலுள்ளதோர் இடமாகுமென திரு பண்டாரத்தார் கூறியிருக்க, திரு சுப்பிரமணியம் அவ்விடத்தை நீலகிரியிலுள்ள உதகமண்டலமாக இருக்கலாம் என்று கருதுகிறார்.[3] பாதுகாவல் நிறைந்த உதகை என்னுமிடத்தை

[1] Dr. N. Subramaniam, Ibid., P. 180

[2] 'தமிழக வரலாறு—மக்களும் பண்பாடும்,' PP. 249—252

[3] Ibid., P. 181. F. N.

முற்றுகையிட்டு அழித்து தன்னுடைய தூதனை சிறையினின்றும் மீட்டபிறகு பின்வாங்கிய சேரர் படைகள் விழிஞம் என்னும் இடத்தில் மீண்டும் தோல்வியடைந்தன. இவ்வித வெற்றிகளைக் கொண்டு திருவிதாங்கூர் நாட்டில் இராஜராஜ சோழனுடைய பிறந்தநாளாகிய ஐப்பசி மாதத்திய சதய நட்சத்திர திருநாளன்று பிறந்தநாள் விழா கொண்டாடப் பெற்றதென்றும், அவ் விழா ஆண்டுதோறும் நடைபெறுவதற்கு சோழமன்னர் பல ஏற்பாடுகள் செய்தார் என்றும் ஜெயங்கொண்டார் என்னும் புலவர் கூறியுள்ளார்.

> 'சதய நாள் விழா உதியர் மண்டலம்
> தன்னில் வைத்தவன் தனியோர் மாவின்மேல்
> உதயபானு வொத்து உதகை வென்ற கோன்
> ஒருகை வாரணம் பலகவர்ந்ததும்.'

சேரமண்டலத்தில் இராஜராஜன் வெற்றியடைந்து பல பொருள்களைக் கவர்ந்துகொண்டு வந்தவைகளில் திருப்பழனம் என்னும் ஊரில் உள்ள சிவன்கோவிலில் அமைக்கப்பெற்ற மரகத தேவர் உருவம் ஒன்றுகும்.[1] சேரநாட்டின்மீது படையெடுப்பதற்குப் பாண்டிய நாட்டின் வழியாக சோழமன்னனுடைய படைகள் சென்றமையாலும், அப்பொழுது பாண்டிய மன்னன் அமரபுயங்கன் என்பான், சேரமன்னர் பாஸ்கர இரவிவர்மனுடைய நண்பனுகையால் சோழப்படைகள் தன்னுட்டின் வழியாக படையெடுத்துச் செல்வதை தடங்கல் செய்தமையால், பாண்டிய மன்னனேடும் போர்புரிய வேண்டிய தாயிற்று. இராஜராஜனுடைய கல்வெட்டுகளில் பல பாண்டியர் களுடைய தேசத்தை அழித்ததாகக் கூறப்பெற்றுள்ளமையால், பாண்டிய சிற்றரசர்கள் பலர் சேர்ந்து அமரபுயங்கன் தலைமையில் இராஜராஜ சோழனை எதிர்த்தனராதல் வேண்டும். பாண்டிய மன்னர்கள் தோல்வியுற்று இராஜராஜனுக்குக் கப்பம் கட்ட ஒப்புக்கொண்டனர். இரண்டாவது தடவையாகச் சேரநாட்டின்மீது படையெடுத்தபோது கொல்லம், கொடுங் கோளூர் முதலிய இடங்கள் கைப்பற்றப்பெற்றன.

ஆர்நால்டு டாயின்பி என்பார் கூறியவாறு இராஜராஜ சோழனை, 'வாளின் வன்மையால் வெற்றிகொள்ளும் பெரும் வீரனுக்கு ஒப்பிடலாம். ஒருமுறை மனித இரத்தத்தைச் சுவைத்த புலி மீண்டும் மனிதர்களைக் கொல்ல விரும்புவது போன்று'. இராஜராஜ சோழன் முதலில் சேரநாட்டையும், பாண்டிய நாட்டையும் வென்றதுபோல குடகுநாட்டின்மீதும் படை

[1] T. V. S. Pandarathar, Vol. I, P. 100

யெடுத்து அந் நாட்டரசனைப் பனசோகை என்னுமிடத்தில் போர்செய்து தோல்வியுறச் செய்தான். குடகுநாடும் சோழப் பேரரசில் சேர்க்கப்பட்டுக் கொங்காள்வார் மரபைச் சார்ந்த ஒருவர் குடகுநாட்டின் ஆளுநராக நியமிக்கப் பெற்ருர். பின்னர் இராட்டிரகூட அரசர்களுக்கு அடங்கித் திரை செலுத்திவந்த மேலைக்கங்கர்களுடைய நாடாகிய கங்க ாடியும் சோழப் பேரரசோடு இணைக்கப்பெற்றது. கங்கபாடி நாட்டோடு தடிகைப்பாடியும் வென்றடக்கப்பட்டது. இதனுல் தற் காலத்திய மைசூர்நாடு முழுவதும் சோழப் பேரரசோடு. சேர்ந்தது. பல்லாரி மாவட்டத்தில் பல்லவ மரபைச் சேர்ந்த நுளம்பபல்லவர் என்பார் ஆண்டுவந்தனர். இவர்களுடைய நாடு நுளம்பபாடி என்று வழங்கிவந்தது. இந் நாடும் வென்று, அடக்கப்பட்டுச் சோழப்பேரரசில் ஒரு பகுதியாயிற்று. மேற் கூறப்பெற்ற போர்களில் இராஜராஜ சோழனுடைய மகன் இராஜேந்திரன் தலைமை வகித்து சோழர்படைகளை நடத் தினுன். அவன் சேனைகளை மிகுந்த திறமையுடன் நடத்தி வெற்றிபெற்றமையால் பஞ்சவன் மாராயன் என்ற இராணுவப் பட்டம் அளிக்கப்பெற்றுக் கௌரவப்படுத்தப் பெற்ருன்.

## இலங்கைப் படையெழுச்சி

மேற்கூறப்பெற்ற இராணுவ வெற்றிகளுக்குப் பிறகு இராஜராஜ சோழன் இலங்கையின் மீதும் படையெடுத்தான் முதற்பராந்தக சோழன் ஆட்சியில் பாண்டியன் இராஜசிம்மன் இலங்கை அரசன்பால் ஒப்படைத்திருந்த மணிமுடியையும், மற்ற அரசசின்னங்களையும் பெறுவதற்கு இலங்கைக்கு ஒரு சோழப் படையொன்று அனுப்பப் பெற்றதாயினும், அதன் எண்ணம் ஈடேருது திரும்பவேண்டியதாயிற்று. இராஜராஜன் காலத்தில் இலங்கையை வென்று சோழப்பேரரசோடு இணைத்துக் கொள்ளும் நோக்கத்துடன் இப் படையெடுப்பு நேர்ந்ததெனக் கூறலாம். இலங்கை மன்னனுகிய ஐந்தாம் மகிபன் சோழர் படையெழுச்சிக்கு அஞ்சித் தன் தலைநகரத்தைவிட்டு தென் பகுதியிலுள்ள ரோகண நாட்டிற்குச் சென்றுவிட்டான். இலங்கைத் தீவின் வடபகுதி முழுவதும் இராஜராஜனுடைய ஆட்சிக்கு உட்பட்டு மும்முடிச் சோழமண்டலம் என்னும் பெயர்பெற்றது. சோழப்பேரரசின் ஒருபகுதியாக்கப் பெற்ற மும்முடிச் சோழமண்டலத்திற்குப் பொலன்னருவா என்னும் நகரம் சனநாதமங்கலம் என்று பெயரிடப்பெற்று, மும்முடிச் சோழமண்டலத்தின் தலைநகராயிற்று. பொலன்னருவாவில் இன்றும் காணப்பெறும் வானவன் மாதேவீச்சுரம் என்னும் சிவன்கோவில் இராஜராஜசோழன் இலங்கையை ஆட்சிபுரிந்த

தின் சின்னமாக விளங்குகின்றது என்று கூறலாம். அதன் சிற்பவமைதியை நோக்குங்கால் கி. பி. பத்து, பதினொன்றாம் நூற்றாண்டுகளில் கட்டப்பெற்ற சோழர்காலத்துக் கோயில்களைப் போல் அது அமைந்துள்ளது என்பது தெளிவாகும். இக் கோவிலுக்கு வானவன் மாதேவீச்சுரம் என்னும் பெயர் இருத்தலால், தன் தாயாகிய வானவன் மாதேவியை நினைவுகூர்தற் காரணமாக இக் கோவிலை அமைத்திருக்கலாம். கொழும்பு நகரில் உள்ள பொருட்காட்சிச் சாலையில் வைக்கப்பெற்றுள்ள கருங்கற் பாறையொன்றில், சோணாட்டுத் தலைவன் ஒருவன் ஈழ மண்டலத்து மாதோட்ட நகரத்தின்கண் இராஜராஜேச்சுரம் என்னும் சிவாலயம் எடுத்ததாக உள்ள செய்தி கூறப்பட்டுள்ளது. தஞ்சைப் பெருவுடையார் கோவிலிலுள்ள கல்வெட்டொன்று, அக் கோவிலின் நிவந்தமாக இலங்கையில் உள்ள நிலங்கள் அளிக்கப் பெற்றிருந்தமையைப்பற்றிக் கூறுகிறது.[1]

## சோழ—கீழைச்சாளுக்கிய உறவு

கி.பி. பத்தாம் நூற்றாண்டில் முடிவான பகுதியில் ஜடசோழ வீமன் என்ற தெலுங்குச் சோழத் தலைவன், தானார்ணவன் என்ற கீழைச்சாளுக்கிய அரசனைப் போரில் வென்று அவனுடைய நாட்டைத் தன்வசப்படுத்திக் கொண்டான். தானார்ணவனுடைய குமாரர்களாகிய சக்திவர்மன், விமலாதித்தன் என்ற இருவரும் கலிங்கநாட்டில் தஞ்சம் புகுந்தனர். பின்னர் கலிங்க நாட்டின்மீதும் ஜடசோழ வீமன் படையெடுத்துச் சென்று அந் நாட்டையும் தன்வசப்படுத்தியதாகத் தெரிகிறது.[2] கலிங்க நாட்டிலிருந்து தானார்ணவனுடைய மக்கள் சக்திவர்மனும், விமலாதித்தனும் சோழநாட்டில் இராஜராஜ சோழனுடைய உதவியை நாடினர். கி. பி. 973 முதல் 1000 வரையில் இருபத்தேழு ஆண்டுகளுக்கு ஜடசோழ வீமன் என்பான் கீழைச்சாளுக்கிய நாட்டை ஆண்டு வந்தனன். தெலுங்கச் சோழர்களுடைய ஆட்சிக்குட்பட்ட நாட்டிற்கு சீட்புலிநாடு என்னும் பெயரும் வழங்கியது. இராஜராஜ சோழன் தெலிங்கச் சோழநாடாகிய சீட்புலிநாட்டை வென்று, கீழைச் சாளுக்கிய நாடாகிய வேங்கிநாட்டில் சக்திவர்மனை அரசனாக்குவதற்கும் எண்ணினான். மும்முடிச்சோழன் என்ற சேனைத் தலைவரின் கீழ் அனுப்பப்பெற்ற சோழப்படையில் வேங்கி நாட்டுச் சக்திவர்மனும் சேர்ந்து கொண்டான். இப் படை

[1] T. V. S. Pandarathar, Vol. I, PP. 107—8

[2] K. A. N. Sastri, 'A. History of South India,' P. 181

யெடுப்பில் சக்திவர்மன் மிகுந்த திறமையுடன் போர்புரிந்து வெற்றியடைந்தான். சீட்புலிநாடும், வேங்கிநாடும் சோழ அரசிற்கு உட்பட்டன.

இராஜராஜனுடைய செல்வாக்கு வேங்கிநாட்டில் பரவுவதற்கும், கீழைச்சாளுக்கிய நாட்டு அரசர்கள் சோழப் பேரரசிற்குத் துணைவர்களாக அமைவதற்கும் இதுவே முதற்படியாயிற்று. கி.பி. 999ஆம் ஆண்டில் தானார்ணவனின் முதல் மகனாகிய சக்திவர்மன் என்பான் வேங்கிநாட்டு அரசனாகவும் அவனுடைய தம்பி விமலாதித்தன் இளவரசனாகவும் ஆக்கப் பெற்றனர். விமலாதித்தனுக்கு இராஜராஜ சோழனின் மகளாகிய இரண்டாம் குந்தவை என்ற இளவரசி மணம் செய்து கொடுக்கப் பெற்றனள். இவ்வித மணவுறவால் கீழைச் சாளுக்கிய அரசகுலத்திற்கும் சோழப்பேரரசர்களுக்கும் மிக்க நெருங்கிய தொடர்பு உண்டாகியது. பின்னர், கலியாண புரத்து மேலைச்சாளுக்கியரோடு இராஜராஜனும், அவனுடைய மகன் இராஜேந்திரனும் நடத்திய போர்களில் கீழைச்சாளுக்கிய அரசர்கள் சோழர்களோடே சேர்ந்துகொண்டனர்.

## கலியாணிச் சாளுக்கியர்களும்—இராஜராஜ சோழனும்

தென்னிந்திய வரலாற்றில் பல்லவர் காலமுதற்கொண்டு தக்காணத்தை ஆண்ட அரசர்களுக்கும், தென்னிந்தியாவை ஆண்ட அரசர்களுக்கும் அடிக்கடி போர்கள் நடந்தமையை நாம் முன்னரே கண்டோம். பல்லவர்களுடைய ஆட்சிக் காலத்தில் அது பல்லவ—வாதாபிச்சாளுக்கிய போராட்டமெனக் கூறலாம். சோழ அரசனாகிய முதலாம் பராந்தகனுடைய ஆட்சியில் அது சோழ—இராட்டிரகூடபோராட்டமாக மாறியது. இராஜராஜ சோழன், இராஜேந்திர சோழன் முதலிய சோழப் பேரரசர்கள் காலத்தில் அப் போராட்டம் சோழ—கலியாணிச் சாளுக்கிய போராட்டமாக மீண்டும் தோன்றியதெனக் கூறலாம்.

கலியாணபுரத்தில், இராட்டிரகூட அரசர்களுடைய ஆட்சியை நீக்கிவிட்டு கி. பி. 973-ல் இரண்டாம் தைலபன் என்பானும், அவனுடைய மகன் சத்தியாசிரயன் என்பானும் அரசுரிமை எய்தினர் என்பதை நாம் முன்னரே கண்டோம். இராட்டிரகூடருக்கும், சோழர்களுக்கும் உண்டாகிய பகையும் போராட்டமும், கலியாணபுரத்து மேலைச்சாளுக்கியர் ஆட்சியிலும் தொடர்ந்து நடைபெற்றது. தஞ்சைப் பெருவுடையார்

கோவிலில் காணப்பெறும் கல்வெட்டொன்று, 'சத்தியா சிரயனை எறிந்து எழுந்தருளிவந்து ஸ்ரீபாத புஷ்யமாக அட்டித் திருவடி தொழுதன' என்ற தொடர்கள் காணப்பெறுகின்றன. இராஜராஜனது ஆனைமங்கலச் செப்பேடுகளும் இவன் சத்தியா சிரயனை வென்ற செய்தியைக் குறிப்பிடுகின்றன. சத்தியாசிரயன் இராஜராஜனது கடல்போன்ற பெரும்படையைக் கண்டு அஞ்சிப் போர்க்களத்தை விட்டு ஓடிவிட்டான் என்று திரு வாலங்காட்டுச் செப்பேடுகள் கூறுகின்றன.[1] முதல் இராஜ ராஜ சோழனுக்கும், கலியாணபுரத்துச் சாளுக்கிய அரசன் சத்தியாசிரயனுக்கும் நடந்த போர்களைப் பற்றி மேலைச் சாளுக்கியக் கல்வெட்டுகளும் கூறுகின்றன. தார்வார் ஜில்லா ஹொட்டூரில் உள்ள கல்வெட்டில், 'சோழர் குலத்திற்கு அணி கலமாக விளங்கியவனும், இராசராசநித்த விநோதன் மகனும் ஆகிய நூர்மடிச்சோழ இராஜேந்திரன் என்பவன் ஒன்பது லட்சம் வீரர்கள் அடங்கிய பெரும்படையுடன் பீசப்பூர் ஜில்லாவிலுள்ள தோனூர் வரையில் வந்து பெரும்போர் புரிந்து, நாட்டைச் சூறையாடிப் பாழ்படுத்தியும்...... அளவற்ற பொருள்களைக் கவர்ந்துகொண்டும் தன் நாட்டிற்குத் திருச் சென்றான்' என்று கூறுகின்றது. அத்தகைய வீரனை நாட்டை விட்டோடும்படி செய்தவன் சத்தியாசிரயன் : என்று அக் கல்வெட்டுப் புகழ்ந்து கூறுகின்றது.[2]

கீழைச்சாளுக்கிய நாட்டில் சோழமன்னன் முதலாம் இராஜ ராஜ சோழனுடைய செல்வாக்கும் அதிகாரமும் பரவியதைக் கண்டு மனம் பொருத சத்தியாசிரயன், தன்னுடைய தளபதி பாயநம்பி என்பானை ஒரு சேனையுடன் அனுப்பித் தரணிக் கோட்டை என்ற கோட்டையைப் பிடித்தான். இவ்வாறு வலுவில் தானே போருக்கு வந்ததைக்கண்ட இராஜராஜன், தன்னுடைய மகன் இராஜேந்திரசோழன் தலைமையில் பெரும்படையொன்றை அனுப்பி மேலைச்சாளுக்கிய நாட்டின்மீது படையெடுக்கும்படிச் செய்தான். அச் சேனை விஜயபுரி ஜில்லாவில் உள்ள தோனூர் வரையில் சென்று மிக அழிவை உண்டாக்கி, முதியோர் பெண்டிர் அந்தணர் குழந்தைகள் என்று பாராமல் கொன்று குவித்துப் பின்னர் நாட்டைச் சூறையாடித் திரும்பியது. இப் போரின் விளைவாக இராய்ச்சூர் பகுதி என்ற இடைதுறைநாடும், வனவாசியும் கைப்பற்றப்பட்டன. மானியகேடம் என்ற நகர்

1 T. V. S. Pandarathar, Ibid., P. 108.

2 Epigraphia Indica, Vol 16, P. 74

சூறையாடப்பட்டது. வேங்கிநாட்டிலிருந்து மற்ருெரு சேனை புறப்பட்டுச் சென்று கொள்ளிப்பாக்கை என்னும் அரண் சூழ்ந்த இடத்தைச் சூறையாடியபின் துங்கபத்திரை நதியைக் கடந்து மீண்டது.

இனி, இராஜராஜ சோழனது போர்செயல்களுள் இறுதியில் நிகழ்ந்தது இவன் முந்நீர்ப்பழந்தீவு பன்னீராயிரமும் கைப்பற்றும் பொருட்டுப் படையெடுத்தாகும். இத் தீவுகள் சேர நாட்டிற்குத் தென்மேற்கே அராபிக் கடலிலுள்ள மால்தீவுகளைக் குறிக்கும் பழைய பெயராகும். சேரநாட்டிற்குத் தென்மேற்கே அண்மையில் இருந்தமையின் அத் தீவுகளில் இருந்த மக்களால் சேரநாட்டினர்க்குப் பல இன்னல்கள் நேர்ந்திருக்கலாம். இராஜராஜன் கைப்பற்றிய தீவுகள் கடல் நடுவில் இருந்தமை யால், அவற்றின்மீது படையெடுத்துச் சென்றமை சோழக் கடற்படையின்மூலம் நடைபெற்றிருக்க வேண்டும் என்று உணரலாம்.

கி.பி. 1012ஆம் ஆண்டில் தன்னுடைய மகன் இராஜேந் திரனை இளவரசனுகப் பட்டம் சூட்டி தனக்குப்பின் அரசுரிமை பெறுவதற்கு ஏற்பாடுகள் செய்து, 1014 ஆம் ஆண்டில் திருவியலூர் கோவிலில் துலாபாரம் செய்து பெரிய தானம் அளித்தாக உணருகிரேம். கி.பி. 1014ஆம் ஆண்டிற்குப்பிறகு இராஜராஜசோழனுடைய கல்வெட்டுகள் காணப்பெருமையால் அவ்வாண்டிற்குபிறகு இராஜேந்திர சோழன் பட்டம் எய்தியிருக்கவேண்டும்.

## சோழப்பேரரசின் நிலைமை

இராஜராஜ சோழன் ஆட்சியின் பிற்பகுதியில் சோழ ராச்சியம் உயர்நிலையில் இருந்தது எனலாம். பாண்டிமண்டல மும், சேரமண்டலமும் அடங்கிய இராஜராஜத் தென்னுடும் தொண்டைமண்டலமாகிய சயங்கொண்ட சோழமண்டலமும், கங்க, கொங்கு மண்டலமும், நுளம்பப்பாடிநாடும், ஈழமாகிய மும்முடிச் சோழமண்டலமும் இவன் ஆட்சிக்குட்பட்டிருந்தன என்று உறுதியாகக் கூறலாம். இம் மண்டலங்களுள் சில வற்றிற்கு இராஜராஜனது சிறப்புப் பெயர்கள் வழங்கப் பெற்றமை அறியத்தக்கது. இராஜராஜன் பலதுறைகளிலும் சிறப்புற்று விளங்கியவனுதலின் க்ஷத்திரிய சிகாமணி இராஜேந்திரசிம்மன், உய்யக்கொண்டான், பாண்டியகுலாசனி கேரளாந்தகன், நித்தவிநோதன், சிவபாத சேகரன், நிகரிலிச் சோழன், தெலுங்கர்குல காலன், கீர்த்திப்பராக்கிரமன் என்ற பல சிறப்புப் பெயர்கள் வழக்கத்திலிருந்தன.

இராஜராஜன் என்ற தன் பெயர் என்றும் நிலவவேண்டும் என்ற எண்ணமுடையவனாய்த் தலைநகராகிய தஞ்சாவூரில் மாபெருங் கோவில் ஒன்று எடுப்பித்து அதற்கு இராஜராஜேச்வரம் எனப் பெயரிட்டுள்ளான். இம் மாடக்கோவில் பிற்காலச் சோழர்காலத்துச்சிற்பத்திறத்திற்கு எடுத்துக்காட்டாகவும், இராஜராஜ சோழனது பெருமைக்கும் சிவபக்திக்கும் ஒரு கலங்கரைவிளக்கமாகவும் வானளாவ நின்று நிலவுவது யாவரும் அறிந்ததாகும். 'பாண்டிய குலாசனி வளநாட்டுத் தஞ்சாவூர்க் கூற்றத்துத் தஞ்சாவூர் நாம் எடுப்பித்த திருக்கற்றளி இராஜராஜேச்வரம்' என்னும் கல்வெட்டுப் பகுதியினால் இக் கோவில் அமைந்துள்ள இடமும் பெயரும், அது அமைந்துள்ள நாடும், வளநாடும் நாம் அறிந்து கொள்ளலாம்.

இக் கோவில் 793 அடி நீளமும் 397 அடி அகலமும் உடையது. இதன்கண் அமைந்துள்ள நடுவிமானம் 216 அடி உயரம் உடையது. அதன் உச்சியில் அமைக்கப்பெற்ற பிரமந்திரக்கல் 80 டன் எடையுள்ள ஒரே கருங்கல்லாகும். விமானத்தின்மேல் அமைக்கப்பெற்ற செப்புக்குடம் 3083 பலம் நிறையுடையது என்றும், அக் குடத்தின்மேல் போடப்பட்டுள்ள பொற்றகடு 2926½ கழஞ்சு கொண்டது என்றும் கூறுவர். இக் கோயிலின் திருப்பணி இராஜராஜனுடைய ஆட்சியின் 19ஆம் ஆண்டில் தொடங்கப்பெற்று 23ஆம் ஆண்டில் நிறைவேறியது. இராஜராஜனுடைய ஆட்சியின் 25ஆம் ஆண்டு 275ஆம் நாளில் தூபித்தறியில் வைப்பதற்குப் பொற்றகடு வேய்ந்தசெப்புக்குடம் கொடுக்கப்பட்டிருத்தலால், அக் காலத்தில்தான் திருப்பணி நிறைவேறி கடவுண்மங்கலமும் நடைபெற்றிருக்க வேண்டும். இக் கோவிலிலுள்ள முதற்கோபுர வாயிலாகிய திருத்தோரண வாயில் கேரளாந்தகன் வாயில் எனவும், இரண்டாவது வாயில் இராஜராஜன் வாயில் எனவும் அந் நாளில் வழங்கியுள்ளன. இக் கோயிலின் விமானம் தட்சிணமேரு என்று வழங்கியது. கோவிலின் வெளித் திருச்சுற்றிலுள்ள நந்தி ஒரே கல்லில் அமைக்கப்பட்டது. அது 12 அடி உயரமும் 19½ அடி நீளமும் எட்டேகால் அடி அகலமும் உடையது. கோவிலின் திருச்சுற்றில் பழைய அடியாராகிய சண்டேசுவரர்க்கும், நந்திக்கும் இடங்கள் அமைக்கப் பெற்றிருந்தனவேயன்றி வேறு தெய்வங்கட்கு இடமின்மை அறியல்பாலது.

இனி, இராஜராஜேஸ்வரமுடைய பெருமான்மீது கரூர்த் தேவர் என்னும் பெரியார் ஒரு பதிகம் பாடிப் பரவியுள்ளார். அது சைவத் திருமுறைகளுள் ஒன்றாகிய ஒன்பதாம் திருமுறை

யில் சேர்த்துத் தொகுக்கப்பட்டுள்ளது. இக் கோவிலில் காணப்படும் கல்வெட்டுகளில் இருந்து இராஜராஜசோழனும், அவனது சுற்றத்தாரும், பின்வந்த அரசர்களும் அக் கோவிலுக்கு மிக்க வருவாயுள்ள ஊர்களும் பெரும் பொருளும் அணிகலன்களும் அளித்தனர் என்பது தெரிகின்றது. இத் தஞ்சைப் பெருங் கோயில் அப்பர் சுவாமிகளால், 'தஞ்சைத் தளிக்குளத்தார்' என்று போற்றப்பெற்ற பழைய வைப்புத்தலத்தின்மீதுதான் பெரிய கற்றளி எடுத்து இராஜராஜன் சிறப்பித்தான் என்பதும் விளங்குகிறது. தஞ்சை மாவட்டம் நாகப்பட்டினத்தில் கடாரத்து அரசனாகிய சூளாமணிவர்மனால் கட்டத் தொடங்கப்பெற்று, அவன் மகன் மாற விஜயோத்துங்கவர்மனால் முடிக்கப்பெற்ற புத்தவிகாரத்திற்கு, இராஜராஜப் பெரும்பள்ளி என்று பெயரிட்டும், அதற்கு நிவந்தமாக ஆனைமங்கலம் என்னும் ஊரைப் பள்ளிச்சந்தமாக அளித்து ஆதரித்தமையும், இவ்வரசன் பிறசமயங்களைப் போற்றிய தன்மையை விளக்குகின்றன. தஞ்சைப் பெரியகோவில் சுவர்களில் புத்தப் படிமங்கள் சில இருப்பதை இன்றும் காணலாம். பெங்களூருக்கு அருகில் உள்ள மணலூரிலும், தலைக்காட்டுக்கு அருகில் ஓர் ஊரிலும் முறையே ஜயங்கொண்ட சோழ விண்ணகரம், இரவிகுலமாணிக்க விண்ணகரம் என்ற திருமால் கோவில்கள் எடுத்தமையும் நோக்கற்பாலது.

இவ்வரசனுடைய ஆட்சியின் 16ஆம் ஆண்டாகிய 1001-ல், சோழராஜ்யம் முழுவதிலுமுள்ள நிலங்களை அளக்குமாறு ஆணையிட்டுள்ளான். இவ்வலுவல் உலகளந்தான் இராஜராஜ மாராயன் தலைமையில் தொடங்கப்பெற்று இரண்டாண்டுகளில் நிறைவேறியது. நிலமளந்த கோல் பதினாறு சாண் நீளமுடையது. அதனை உலகளந்த கோல் என்று மக்கள் அழைத்தனர். சோழ இராஜ்யத்தில் நிலைபெற்றிருந்த ஒவ்வொரு மண்டலத்தையும் பல வளநாடுகளாகப் பிரித்து, அரசியல் செவ்வனே நடைபெறுமாறு செய்தது இராஜராஜனுடைய 18ஆம் ஆண்டாகிய கி.பி 1003-ல் செய்த மற்றொரு செயலாகும். அதற்குமுன் ஒவ்வொரு மண்டலமும் பல நாடுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. சிலநாடுகளைக்கொண்ட வளநாடு என்னும் பிரிவு இராஜராஜ சோழனுடைய காலத்திற்குமுன் கிடையாது. பல வளநாடுகள் இராஜராஜ சோழனுடைய பெயர்களுடன் சேர்த்து அழைக்கப்பட்டன. எடுத்துக்காட்டாக, 'சோழமண்டலத்து க்ஷத்திரிய சிகாமணி வளநாட்டு திருநறையூர்நாட்டு வண்டாழஞ்சேரி' என்னும் கல்வெட்டுப்பகுதியில் மண்டலம், வளநாடு, நாடு என்பன முறைப்படிக் குறிக்கப்பட்டுள்ளன,

இராஜராஜ சோழனுக்குப் பல மனைவியர் இருந்தனர் என்பது கல்வெட்டுகளால் தெரியவருகின்றது. அவர்களுள் பட்டத்து அரசியாக விளங்கியவள் உலோகமாதேவியாவாள். இவ்வம்மையே இம் மன்னனுடைய வாழ்நாள் முழுவதும் பட்டத்தரசியாக இருந்தனள் என்பது இவன் தன் ஆட்சியின் 29 ஆம் ஆண்டில் திருவியலூர்க் கோவிலில் துலாபாரம் புகுந்த போது, இவ்வரசியும் இரணியகர்ப்பம் புகுந்துள்ளமையால் தெளிவாகின்றது. இந்த உலகமாதேவியார் திருவையாற்றில் ஐயாறப்பருடைய கோவிலின் வடக்குச்சுற்றில் உலோக மாதேவீச்சுரம் என்னும் கோவில் ஒன்று எடுப்பித்துள்ளாள். இப்பொழுது அது உத்தரகைலாயம் என வழங்குகிறது. இராஜராஜ சோழனுடைய மற்ற மனைவிமார்கள் சோழ மாதேவி, திரைலோக்கிய மாதேவி, பஞ்சவன் மாதேவி, அபிமானவல்லி, வீரநாராயணி, வானவன் மாதேவி என்போர். இவர்களுள் வானவன் மாதேவியே இராஜேந்திர சோழனைத் தன் மகனாகப்பெற்ற பெருமையுடையவள். இராஜராஜனுக்குப் பெண்மக்கள் இருவர் இருந்தனர். அவர்களுள் மூத்த பெண் மாதேவடிகள் என்னும் பெயரினள். இளைய பெண் இரண்டாம் குந்தவையாவாள். அவள் கீழைச்சாளுக்கிய மன்னனாகிய விமலாதித்தனுக்கு மணம் செய்து கொடுக்கப்பெற்றனள்.

# 10. பரகேசரி முதலாம் இராஜேந்திரன் கங்கைகொண்ட சோழன் [1014–1044]

'பூர்வதேசமும் கங்கையும் கடாரமும் கொண்ட கோப்பரகேசரி வர்மன்' என்று கல்வெட்டுகளில் புகழ்ந்து கூறப் பெறும் இவ்வரசன், முதல் இராஜராஜ சோழனுக்கு வானவன் மாதேவி என வழங்கும் திரிபுவன மாதேவிபால் பிறந்த புதல்வன் ஆவான். இவன் மார்கழித் திங்கள் திருவாதிரை நாளில் பிறந்தவன் என்பது திருவொற்றியூர், பழமலை முதலிய இடங்களில் கிடைக்கும் கல்வெட்டுகளால் உறுதியாகின்றன. இவ்வரசனுடைய 'திருமன்னிவளர' என்று தொடங்கும் மெய்க்கீர்த்தியும், திருவாலங்காட்டுச் செப்பேடுகளும் இவனுடைய வரலாற்றை எழுதுவதற்கு மிக்கத் துணை புரிகின்றன. திருவாலங்காட்டுச் செப்பேடுகளும், கன்னியாகுமரிக் கல்வெட்டும் இவனுக்கு மதுராந்தகன் என்ற பெயர் இளமையில் வழங்கியதாகக் கூறுகின்றன. 'இறைவன் நெற்றிக்கண் காணாத மற்றொரு காமவேள்' என்று திருவாலங்காட்டுச் செப்பேடுகளில் கூறப்பெற்றுள்ளமையால் இவன் பேரழகு வாய்ந்தவனாக இருந்திருக்க வேண்டும்.

## சோழ—சாளுக்கியப் போராட்டத்தின் தொடர்ச்சி

இராஜேந்திரனுடைய ஆட்சியின் தொடக்கத்தில் சோழப் பேரரசு வடக்கே துங்கபத்திரை—கிருஷ்ணா நதிவரை பரவியிருந்தமையால், அவ்வாற்றிற்கு வடக்கே நிலைபெற்றிருந்த கலியாணபுரத்து மேலைச் சாளுக்கியர்களோடு போரிட வேண்டியது இன்றியமையாததாயிற்று. இவனுடைய மெய்க்கீர்த்திகள் இராய்ச்சூர் நகரம் அமைந்துள்ள இடைதுறை நாட்டையும், வனவாசி, கொள்ளிப்பாக்கை, மானியகேடம் முதலிய இடங்களையும் வென்றதாகக் கூறுகின்றன. தன்னுடைய தந்தையின் ஆட்சிக்காலத்தில் யுவராசனாகவும், சோழச் சேனையின் சேனாதிபதியாகவும் இருந்தபொழுது இவ்வரசன் இந் நாடுகளை வென்றடக்கியதை நாம் முன்னரே கண்டோம்.

இராஜேந்திர சோழன் அரியணையில் அமர்ந்து ஆட்சி செலுத்திய காலத்தில் மேலைச்சாளுக்கிய நாட்டில் ஐந்தாம் விக்கிரமாதித்தனும், இரண்டாம் ஜெயசிம்மனும் சாளுக்கிய மன்னர்களாக இருந்தனர். இவர்களுள் பின்னர் கூறப்பெற்ற அரசன் 1015ஆம் ஆண்டில் அரசபதவியை ஏற்றபொழுது வடக்கேயிருந்த பாரமாரகுலத்து போஜ அரசனும், தெற்கிலிருந்து இராஜேந்திர சோழனும் சாளுக்கியப்பேரரசை எதிர்த்துப் போரிடத் தொடங்கினர். சோழருக்கும், சாளுக்கியருக்கும் தொடர்ந்து நடந்த இப் போராட்டம் இவ்விரு அரசர்களும் கீழைச்சாளுக்கிய நாடாகிய வேங்கிநாட்டில் தங்களுடைய அதிகாரத்தையும் செல்வாக்கையும் ஓங்கச் செய்யவேண்டும் என விரும்பியதாகும். இராஜேந்திர சோழனும் தன்னுடைய தந்தையைப்போல் சோழப்பேரரசை உன்னதமானதொரு நிலையை அடையச் செய்யவேண்டுமென விரும்பியதுமாகும். சோழர்களுக்கும், மேலைச்சாளுக்கியருக்கும் இராஜேந்திர சோழனுடைய ஆட்சியில் தொடர்ந்து நடந்த போராட்டத்தை உணர்வதற்கு, சோழமன்னர்களுக்கும்—கீழைச்சாளுக்கிய மன்னர்களுக்கும் இடையே நிலவிய உறவு முறையை உணர்ந்து கொள்ளுவது அவசியமாகும்.

வேங்கி நாட்டில் முதலாம் சக்திவர்மன் இறந்தபிறகு அவனுடைய தம்பி விமலாதித்தன் கி. பி. 1018-ல் அரியணை ஏறினன். இந்த விமலாதித்தனுடைய முதல் மனைவி இராஜராஜ சோழனுடைய புதல்வியும், இராஜேந்திர சோழனுடைய தங்கையுமான இரண்டாம் குந்தவை பிராட்டியாவாள். இவ்விருவருக்கும் பிறந்த புதல்வனே இராஜராஜ நரேந்திரன் என்ற கீழைச்சாளுக்கிய இளவரசன். விமலாதித்தனுடைய இரண்டாவது மனைவியாகிய மகாதேவி என்பவள்பால் பிறந்தவன் ஏழாம் விஜயாதித்தன் என்ற இளவரசன். இராஜராஜ நரேந்திரனுக்கும், ஏழாம் விஜயாதித்தனுக்கும் இடையே வாரிசுரிமைப்போர் ஒன்று தொடங்கியதில், ஜெயசிம்மன் என்ற மேலைச்சாளுக்கிய அரசன் ஏழாம் விஜயாதித்தனை ஆதரித்தான். முதலாம் இராஜேந்திர சோழன் தன்னுடைய நெருங்கிய உறவினனாகிய இராஜராஜ நரேந்திரனுக்கு உதவி செய்வதும் இயல்பேயாகும். இவ்வாறு மேலைச்சாளுக்கிய அரசனாகிய இரண்டாம் ஜெயசிம்மனும், சோழப்பேரரசனாகிய இராஜேந்திர சோழனும் கீழைச்சாளுக்கிய அரசியல் விவகாரங்களில் தலையிட்டமையால் இவ்விரு அரசுகளுக்கும் இடையே போராட்டம் ஏற்படுவது தவிர்க்க முடியாததாயிற்று.

## சோழர் மரபு

## கீழைச்சாளுக்கியர் மரபு



ஜெயசிம்ம சாளுக்கியன் துங்கபத்திரையைக் கடந்து பல்லாரி மாவட்டத்தையும், கங்கவாடியையும் தன்வசப்படுத்திக் கொண்டான். வேங்கிநாட்டில் விஜயாதித்தன் தன்னுடைய எதிரியாகிய இராஜராஜ நரேந்திரன் அரியணையில் அமர்ந்து முடிசூடிக்கொள்ளாதவாறு தடுத்துவிட்டான். இராஜேந்திர சோழன் இருசேனைகளை அனுப்பி இராய்ச்சூர் மாகாணத்தின் மீது படையெடுத்து முசாங்கி அல்லது மாங்கி என்னுமிடத்தில் சாளுக்கியர்களைத் தோல்வியடையும்படி செய்ததும் அன்னியில், வேங்கிநாட்டில் இராஜராஜ நரேந்திரனுக்கு உதவிசெய்ததும் ஆகும். வேங்கிநாட்டில் விஜயாதித்தனைப் பல இடங்களில் தோல்வியுறும்படி செய்து இராஜராஜ நரேந்திரன் அரசுரிமையைப் பெறுமாறு செய்தான். பின்னர், சாளுக்கிய அரசனுக்கு உதவியாக இருந்த கீழைக் கங்கர்குல அரசனாகிய மதுகாமார்ணவனுடைய நாட்டையும் வென்று, அந் நாட்டிற்கு அப்பால் சென்று கங்கைநதிவரையில் பல நாடுகளை வெல்லவும் நினைத்தனன். இராஜேந்திரன் இவ்விதமாக வடநாட்டின்மீது படையெடுத்ததை முன்னர் சமுத்திரகுப்தன் தென்னாட்டு அரசர்களை வென்று காஞ்சிபுரம் வரையில் படையெடுத்துவந்த திக்விஜயத்திற்கு ஒப்பிடலாம். இவ்விதம் சோழப்பெரும்படையினால் படையெடுக்கப்பெற்ற நாடுகள் இன்னவையென்று திருவாலங்காட்டுச் செப்பேடுகளில் கூறப்பெற்றுள்ளன.

இராஜேந்திர சோழனுடைய மெய்க்கீர்த்தியில் அந் நாடுகளின் பெயர்கள் வரிசைக்கிரமமாகத் தொகுத்துக் கூறப் பெற்றுள்ளது :

'விக்கிரம வீரர் சக்கரக் கோட்டமும்
முதிர்பட வல்லை மதுரைமண்டலமும்
காமிடை வளைஇய நாமணைக் கோணமும்
வெஞ்சின வீரர் பஞ்சப் பள்ளியும்
பாசடைப் பழன மாசுணி தேசமும்
அயர்வில்வண் கீர்த்தி யாதிநக ரகவயிற்
சந்திரன் தொல்குலத்து இந்திர ரதனை
விளையமர்க்களத்துக் கிளையுடன் பிடித்துப்
பலதனத்தொடு நிறை குலதனக் குவையும்
கிட்டரும் செறிமிளை யொட்ட விஷயமும்
பூசுரர் சேருநற் கோசல நாடும்
தம்மபாலனை வெம்முனை யழித்து
வண்டுறை சோலை தண்டபுத்தியும்

இரணசூரனை முரணறத் தாக்கி
திக்கணைக் கீர்த்தித் தக்கணலாடமும்
கோவிந்த சந்தன் மாவிழிந் தோட
தங்காத சாரல் வங்காள தேசமும்
தொடுகடல் சங்குகொடு அடல் மகிபாலனை
வெஞ்சமர் வளாகத்து அஞ்சுவித் தருளி
ஒண்டிறல் யானையும், பெண்டிற் பண்டாரமும்'
கொண்டதாக இம் மெய்க்கீர்த்திக் கூறுகிறது.

மேலே தொகுத்துக் கூறப்பெற்றுள்ள நாடுகளில், இந்திராவதியாற்றின் தென்கரையில் உள்ள சித்திரகூடம் என்னும் இடம் சக்கரக்கோட்டம் என்று கூறப்பெற்றுள்ளது. இந் நாட்டை நாகமரபைச் சேர்ந்த ஆதிவாசிகள் வசிக்கின்ற வத்சலநாடு அல்லது பஸ்தார் மண்டலம் எனக் கூறலாம். இஃது, நாகர்கள் வாழ்கின்ற நாடாகலின் மாசுணிதேசம் என்று அழைக்கப்பட்டுள்ளது. மதுரைமண்டலம், நாமணைக்கோணம் பஞ்சப்பள்ளி ஆகிய இடங்கள் அந்த வத்ச இராச்சியத்தில் இருந்தன போலும். பின்னர் தன்மபாலனுடைய தண்டபுத்தியும், இரணசூரனது தக்கணலாடமும், கோவிந்த சந்தனுக்குரிய வங்காளதேசமும், மகிபாலனது உத்தரலாடமும் இராஜேந்திரனுடைய படைத்தலைவனுல் கைப்பற்றப்பெற்றன. பின்னர் அப் படைத்தலைவன் கங்கைக்கரையை அடைந்தான் என்று மெய்க்கீர்த்தி கூறுகின்றது.

பேராசிரியர் கே. கே. பிள்ளையவர்கள் மாசுணிதேசம் என்பது சிந்துநதி பாய்கின்ற மேற்குப்பகுதியில் இருந்ததெனவும், மதுரைமண்டலம் யமுனை நதிக்கரையில் இருந்ததெனவும் கூறுவர்.[1] மேலும், வடநாட்டின்மீது ஆப்கானிஸ்தானத்திலிருந்து படையெடுத்துவந்த கஜனிமுகம்மதுவின் கொடுமைகளைக் கண்டு அஞ்சிய வடநாட்டு மன்னர்களின் வேண்டுகோட்களுக்கு இணங்கி வடநாட்டின்மீது படையெடுத்திருக்கலாம் எனக் கூறுவர். இக் கூற்றுகளுக்கு இராஜேந்திர சோழனுடைய மெய்க்கீர்த்திகளில் ஆதாரமில்லை. வங்காளம், பீகார் முதலிய வடகிழக்குப் பகுதிகள்மீது இராஜேந்திர சோழனுடைய சேனைகள் சென்றனவேயொழிய, கன்னோஜி, சிந்து, வடமதுரை முதலிய இடங்களுக்கும் சோழநாட்டுச் சேனுவீரர்கள் படையெடுத்தனர் என்று கூறுவதற்கு இல்லை. மேற்கூறியவாறு வடநாட்டின்மீது படையெடுத்ததற்குத் தகுந்த ஆதாரங்கள் இருப்பதால், இராஜேந்திர

1 Dr. K. K. Pillay, 'தமிழக வரலாறு', PP. 260–61




படம் 4.

முதலாம் இராஜேந்திரன் ஆட்சியில் சோழப் பேரரசு

னுடைய படையெடுப்பே, கல்வெட்டுகளினால் உறுதி செய்யக் கூடியதும், தென்னிந்திய சேனைவீரர்கள், வடவிந்திய நாடுகளின் மீது வெற்றிகொண்டதுமாகிய முதல் படையெடுப்பாகும்.

சோழப்பேரரசின் சேனைகள் வங்காளத்தை நோக்கி சென்றபொழுது கோதாவரி நதிப்பிரதேசத்தில் ஒரு கலகம் தோன்றியது என்று பேராசிரியர் கே.ஏ. நீலகண்ட சாஸ்திரியார் அவர்கள் கூறுவர். அக் கலகத்தையடக்க இராஜேந்திர சோழன் கோதாவரி நதிக்கரையில் ஒரு சேனையை அமைத்தான். திக் விஜயத்திலிருந்து திரும்பிவரும் சேனையின் பாதுகாப்பிற்காகவும் அந் நிலப்படை அமைக்கப்பெற்றிருக்கக் கூடும். இந்த வடநாட்டுப் படையெடுப்பிற்குப் பிறகுதான், அவனுடைய உறவினனாகிய இராஜராஜ நரேந்திரன் வேங்கிநாட்டரசனாக முடிசூடி இருக்கலாம். இராஜேந்திரன் வடநாட்டின் மீது படையெடுத்ததற்குக் காரணம், கங்கைநீரைக் கொணர்ந்து தன் நாட்டைத்தூய்மையாக்க வேண்டும் எனக் கருதியதாக திருவாலங்காட்டுச் செப்பேடுகளிலிருந்து நாம் உணர்ந்து கொள்ளலாம். கங்கையாற்றைக் கடப்பதற்காக அப் பேராற்றில் யானைகளை வரிசையாக நிறுத்திப் பாலம் அமைத்து அவ்வாற்றை எளிதாகச் சோழ சேனைவீரர்கள் கடந்துசென்றனர் என்றும் நாம் உணருகிறோம். இவ்விதமான வெற்றிகளுக்குப் பிறகு கங்கைகொண்ட சோழபுரம் என்ற புதிய தலைநகர் ஒன்றையும், அந் நகரில் இராஜேச்சுரம் என்ற திருக்கோவிலையும், அக் கோவிலுக்கு மேற்கே இரண்டு கல் தூரத்திற்கு அப்பால் சோழகங்கம் என்னும் பெயருடைய நீர்ப்பாசன ஏரி யொன்றையும் அமைக்கும்படி செய்தனன். இவ்வேரி கல்வெட்டுகளில் 'நீர்மயமான வெற்றித்தூண்' எனக் கூறப் பெறுகிறது. இக் காலத்தில் அது பொன்னேரி என்று அழைக்கப் பெறுகிறது.

### கடாரங்கொண்டது

இராஜேந்திரன் தன்னுடைய சிறந்த கப்பற்படையின் துணை கொண்டு, கடலாதிக்கம் செலுத்திய ஸ்ரீவிஜயப் பேரரசை வென்றமையையும் அவனுடைய மெய்க்கீர்த்தி மூலம் உணர்ந்து கொள்ளலாம். ஸ்ரீவிஜயப்பேரரசு, மலேயா தீபகற்பத்தையும் சுமத்ரா, ஜாவா முதலிய தீவுகளையும் தன்னகத்தே கொண்டு தென்னிந்தியாவிற்கும், சீனதேசத்திற்கும் கடல் மூலமாக நடைபெற்ற வணிக வழியை தன்னாதிக்கத்தில் கொண்டிருந்தது. இராஜராஜ சோழனுடைய ஆட்சியில் சோழ பேரரசிற்கும், ஸ்ரீவிஜயப்பேரரசிற்கும் அமைதியான உறவு

நிலைபெற்றிருந்ததென நாம், முந்திய அதிகாரத்தில் கண்டோம். இராஜேந்திரன் எக் காரணங்களினால் ஸ்ரீவிஜயராச்சியத்தின் மீது படையெடுத்தான் என்பது தெளிவாக விளங்கவில்லை. கீழ்த்திசை நாடுகளுக்கும், சோழப்பேரரசிற்கும் நடைபெற்ற வணிகத்தை நிலையுள்ளதாகச் செய்வதற்கு ஸ்ரீ விஜய பேரரசனாகிய சங்கிராம விஜயோத்துங்கனுடைய நாடுகளின்மீது படையெடுத்திருக்கலாம். கடாரத்தின்மீதும், ஸ்ரீவிஜய ராச்சியத்தின்மீதும் கடற்படையின் வன்மையால் இராஜேந்திரன் பெருவெற்றி கொண்டு, ஸ்ரீவிஜயப் பேரரசனையும் சிறைப்படுத்தியதாகவும் நாம் உணருகிறோம். இக் கடற்படை-யெடுப்பின் வரலாற்றிற்கு ஆதாரமாக உள்ளது இராஜேந்திர சோழனுடைய மெய்க்கீர்த்தியேயாகும். அம் மெய்க்கீர்த்தி:

'அலைகடல் நடுவுட் பலகலம் செலுத்திச்
சங்கிராம விசையோத்துங்க வர்மனாகிய
கடாரத் தரசனை வாகையும்
பொருகடல் கும்பக் கரியொடும் அகப்படுத்தி
உரிமையிற் பிறக்கிய பருநிதிப் பிறக்கமும்
ஆர்த்து அவன்நகர் போர்த்தொழில் வாசலில்
விச்சாதிரத் தோரணமும் மொய்த்து ஒளிர்
புனைமணிப் புதவமும் துறைநீர்ப் பண்ணையும்
வன்மலையூர் எயில் தொன்மலையூரும்
ஆழ்கடல் அகழ்சூழ் மாயிருடிங்கமும்
கலங்கா வல்வினை இலங்கா சோகமும்
காப்புறு நிறைபுனல் மாப்பப்பாளமும்
காவலம் புரிசை மேவு இலிம்பங்கமும்
விளைப்பந்தூருடை வளைப்பந்தூரும்
கலைத்தக்கோர் புகழ் தலைத்தக்கோலமும்
தீதமர் வல்வினை மாதமா லிங்கமும்
கலாமுதிர் கடுந்திறல் இலாமுரி தேசமும்
தேனக்க வார்பொழில் மாநக்க வாரமும்
தொடுகடல் காவல் கடுமுரட் கடாரமும்
மாப்பொரு தண்டால் கொண்ட கோப்பரகேசரிவர்மரான
உடையார் ஸ்ரீஇராசேந்திரசோழ தேவர்க்கு யாண்டு'

எனத் தொகுத்துக் கூறுகிறது. மேலே கூறப்பெற்றவற்றுள் கடாரம் என்பது 'பரக்கும் ஒதக் கடாரம்' எனவும், 'குளிறு தெண்டிரைக் குரை கடாரம்' எனவும் கலிங்கத்துப்பரணியில் கூறப்பட்டுள்ளது. இத்தகைய சிறப்பு வாய்ந்த கடாரம் மலேயா நாட்டின் மேல்கரையில் அமைந்துள்ள கெடா

என்னுமிடமாகும். ஸ்ரீவிஜயம், சுமாத்திராவில் உள்ள பாலம்பாங் என்னும் நாடாகும். மலையூர் என்பது சுமாத்திராவின் ஒரு பகுதியாகும். மாயிருடிங்கம், இலங்காசோகம், பப்பாளம் முதலிய இடங்களும் மலேயா நாட்டைச் சூழ்ந்திருந்த தீவுகளாக இருத்தல் வேண்டும். கிரா என்னும் பூசந்திக்குத் தெற்கேயுள்ள தகோபா நகரமே தலைத்தக்கோலம் என அழைக்கப்பட்டது. தமாலிங்கம் என்பது தெம்பலிங் என்று இக்காலத்தில் வழங்குகிறது. இலாமுரிதேசம் என்பது சுமாத்திரா தீவின் வடபகுதியிலும், நக்கவாரம் என்பது அந்தமான் - நீக்கோபார் தீவுகளில் ஒன்றுமாகும். மேற்கூறப் பெற்ற இடங்களை எல்லாம் பேராசிரியர் நீலகண்ட சாஸ்திரி அவர்களும், திரு சதாசிவப் பண்டாரத்தாரார் அவர்களும் தங்களுடைய சோழர் வரலாற்றில் இன்னின்ன இடங்கள் என்று எழுதியுள்ளனர். அவற்றைப் பின்பற்றியே இச் செய்திகள் தரப்பட்டுள்ளன.

சோழப்பேரரசின் கடலாதிக்கத்தை ஒப்புக்கொண்ட பிறகு ஸ்ரீவிஜயத்து அரசன் மீண்டும் தன்னுட்சியுரிமையைப் பெற்றதாகத் தெரிகிறது. சுமாத்திரா தீவில் 1088 ஆம் ஆண்டு பொறிக்கப்பெற்ற தமிழ்க் கல்வெட்டொன்று ஸ்ரீவிஜயராச்சியத்திற்கும், தென்னிந்தியாவிற்கும் நடைபெற்ற வணிகத் தொடர்பை உணர்த்துகிறது.[1]

பாண்டிய, சேர நாடுகளில் இராஜேந்திர சோழனுடைய ஆட்சியில் ஏற்பட்ட அரசியல் கலகங்கள் இவ்வரசனுடைய மூத்தமகனும், இளவரசனுமாகிய இராசாதிராசன் என்பவனுல் அடக்கப்பெற்றது. பாண்டிய, சேரமன்னர்கள் தங்களுடைய சுயாட்சியை அமைப்பதற்குச் செய்த முயற்சிகள் பலனளிக்கவில்லை. கி. பி. 1041 ஆம் ஆண்டில் இலங்கையில் அரசு வகித்த விக்கிரமபாகு, சோழர்களுடைய தலைமை ஆட்சியை உதறித் தள்ளுவதற்குச் செய்த கலகத்தை இராசாதிராசனே அடக்க வேண்டியிருந்தது. விக்கிரமபாகுவிற்குப் பிறகு இலங்கையில் பெரியதொரு அரசியற் குழப்பம் தோன்றியது. இக் குழப்பத்தில் அரசுரிமையிழந்த பாண்டிய நாட்டு சிற்றரசர்களும், கன்னோஜி நாட்டிலிருந்து இலங்கைக்கு வந்த ஜெகதிபாலன் என்ற தலைவனும் சேர்ந்துகொண்டு சோழப்பேரரசை எதிர்த்தனர். ஆனல், அவர்கள் செய்த கலகங்கள் அடக்கப் பெற்று அமைதி ஏற்பட்டது.

[1] K. A. N. Sastri, 'A. History of South India,' P. 175

## மீண்டும் சோழ—சாளுக்கியப் போராட்டம்

இராஜேந்திர சோழனுடைய ஆட்சியின் இறுதியில் சோழப் பேரரசிற்கும், மேலைச்சாளுக்கியருக்கும் நடந்த போராட்டம் மீண்டும் நடைபெற்றது. கி. பி. 1042-ல் மேலைச் சாளுக்கிய அரசனாகிய இரண்டாம் ஜெயசிம்மன் இறந்தபிறகு அவனுடைய மகன் சோமேச்வர ஆகவமல்லன் பட்டம் எய்தினன். அவன் சிறந்த போர் வீரன். தனக்குமுன் ஆண்ட அரசர்களைவிட பலவழிகளில் சிறப்புற்று விளங்கினான். மானியகேடத்தைவிட்டு கலியாணபுரத்தைத் தன்னுடைய தலைநகராகக் கொண்டான். கோசலநாட்டிலும், கலிங்கதேசத்திலும் தன்னுடைய ஆட்சியைப் பரவச் செய்தான். சக்கரக்கோட்டத்தைச் சேர்ந்த மாசுணிநாட்டின் அரசனாகிய தாராவர்ஷனை வென்று, தனக்குக் கப்பம் கட்டும்படி செய்தான். கீழைச்சாளுக்கிய அரசாகிய வேங்கி நாட்டிலும் தன்னுடைய செல்வாக்கை நிலைநாட்டிச் சோழர் களுடைய செல்வாக்கை அழிப்பதற்கு ஆவன செய்யலுற்றான்.

இராஜேந்திர சோழனுடைய மைத்துனனாகிய இராஜராஜ நரேந்திரனுக்கும், அவன் தாயத்தினனான ஏழாம் விஜயாதித்த னுக்கும் வேங்கிநாட்டின் அரசுரிமைக்காக உள்நாட்டுப்போர் ஒன்று தொடங்கியது. தொடக்கத்தில் இராஜராஜ நரேந்திரன் தோல்வியுற்றபோதிலும், பின்னர் விஜயாதித்தனை வென்று வேங்கிநாட்டை விட்டுத் துரத்தினான். விஜயாதித்தனும் கலியாணபுரத்தையடைந்து சோமேச்சுவர ஆகவமல்லனிடம் தஞ்சம் புகுந்தனன். சோமேச்வரன், விஜயாதித்தனுக்கு ஆதரவளித்து மீண்டும் வேங்கிநாட்டில் அவனை அரசனாக்கு வதற்கு ஏற்ற செயல்களை மேற்கொண்டான்.

கீழைச்சாளுக்கிய அரசனும், இராஜேந்திர சோழனின் மைத்துனனுமாகிய இராஜராஜ நரேந்திரனுக்கு எதிராக ஆகவ மல்லன் விஜயாதித்தனுக்கு உதவிசெய்வதைக் கேள்வியுற்று, சாளுக்கிய அரசனுடன் போர்த் துவக்குவது தவிர்க்கமுடியாத தொன்றாயிற்று. தன்னுடைய முதல் மகன் இராசாதிராசன் தலைமையிலும், அனுபவம்மிக்க சேனைத்தலைவர்களுடைய உதவிகொண்டும், சாளுக்கியரை எதிர்ப்பதற்குப் பெரும் சேனையொன்று அனுப்பப்பெற்றது. சோழப்படைகட்கும். சாளுக்கியப் படைகட்கும் காளிதிண்டி (Kalidiadi) என்ற, போர்க்களத்தில் கடுமையான போர் நடந்தது. ஆனால், இரு படைகளில் வெற்றிபெற்றது யாரென்று கூறமுடியாத நிலை தோன்றியது. கங்கைகொண்ட சோழபுரத்தில் முதலாம்

இராஜேந்திர சோழன் இறந்துபோனமையால் அவனுடைய முதல் மகன் இராசாதிராசன் சோழநாட்டின் அரசுரிமையைப் பெற்றனன். சாளுக்கியரோடு போர் தொடுத்தான். கிருஷ்ணை யாற்றங்கரையில், கீழைச்சாளுக்கிய விஜயாதித்தனுக்கு உதவியாக வந்த ஆகவமல்லனாகிய விக்ரமாதித்தனை, தானிய கடகம் என்னுமிடத்தில் வெற்றிகொண்டான். சாளுக்கிய சேனைகள் தோல்வியுற்றுப் பின்வாங்கின. சோழப்படைகள் அவர்களைத் துரத்திச்சென்று கொள்ளிப்பாக்கை என்னும் அரண்சூழ்ந்த இடத்தைக் கைப்பற்றின.

சாளுக்கிய ராஜ்யத்தின் மேற்குப்பகுதியிலும் இவ்விரு படைகளுக்கும் போர்கள் நடந்தன. கம்பிலி என்ற கோட்டையைக் கைப்பற்றிய பிறகு, பூந்தூர் என்னுமிடத்தில் சாளுக்கியப் படைகள் பெருந்தோல்வியடைந்தன. யதுகிரி என்னுமிடத்தில் வெற்றித்தூண் ஒன்றை அமைத்து அதன்மீது புலியுருவம் பொறிக்கப்பெற்றது. பின்னர் சோமேச்வர னுடைய தலைநகராகிய கலியாணபுரத்தை முற்றுகையிட்டு அதைத் தன்வசப்படுத்தி, இராசாதிராசன் 'வீராபிஷேகம் செய்துகொண்டு, 'விஜயராஜேந்திரன்' என்ற பட்டமும் புனைந்துகொண்டான். கலியாணபுரமும் சோழப்படைகளின் தாக்குதலுக்குள்ளாகிக் கொள்ளையும் கொலையும் நடந்தேறின. இவ் வெற்றியின் அறிகுறியாக துவாரபாலக உருவமொன்று கலியாணபுரத்திலிருந்து கொண்டுவரப்பெற்று தாராசுரம் கோவிலில் வைக்கப்பெற்றது. ஆனால், அது இப்பொழுது தஞ்சையில் உள்ள கலைக்கூடத்தில் காணப்பெறுகிறது.

மேற்கூறப்பெற்றவாறு இராசாதிராசன் அடைந்த வெற்றிகளை ஜெயங்கொண்டார் தான் இயற்றிய கலிங்கத்துப் பரணியிலும், ஒட்டக்கூத்தர் இயற்றிய மூவருலாவிலும் புகழ்ந்து போற்றியுள்ளனர். [1]

முதலாம் இராஜேந்திரனுடைய ஆட்சிக்காலத்தின் இறுதியில் இதற்கு முன்னும்பின்னும் காணமுடியாத நிலையை

[1] 'கம்பிலிச் சயத்தம்பம் நட்டதும்
கடியரண்கொள் கல்யாணர் கட்டறக்.'
'கிம்புரிப்புணைக் கிரி யுகைத்தவன்
கிரிகள் எட்டினும் புலிபொறித்தது.'

'மும்முடிபோயக் கல்யாணி செற்ற
தனி யாண்மைச் சேவகனும்.'

(விக்ரம சோழன் உலா)

சோழப்பேரரசு அடைந்ததெனக் கூறலாம். சோழப்பேரரசின் மத்திய அரசாங்கமும், கிராமச்சபைகளும் முதற்பராந்தகன் ஆட்சியில் சீரமைக்கப் பெற்றன. அதைத்தொடர்ந்து இவ்வாட்சி முறைகள் இராஜராஜன் காலத்திலும், இராஜேந்திரன் ஆட்சியிலும் மேன்மேலும் சிறப்புற்று விளங்கின. பல குறுநில மன்னர்களும், பெருந்தர அரசியல் அதிகாரிகளும் இவ்விரு அரசர் பெருமக்களுக்கும் அடங்கி கடமையுடனும், நன்றியுடனும் பணியாற்றினர். கீழைச்சாளுக்கிய மரபைச் சார்ந்த வந்தியத்தேவ வல்லவரையன் என்பார் இராஜராஜன் காலத்தில் வாழ்ந்த குறுநில மன்னராவர். இக் காலத்தில் திருக்கோவலூர் எனப்பெறும் மலையமான்நாட்டில் யாதவவீமன் என்பார் ஆட்சி செலுத்தினர். தண்டநாயகன் நக்கன் கிருஷ்ணன் ராமன் என்பார் இராஜராஜன், இராஜேந்திரன் ஆட்சிக்காலத்தில் படைத்தலைவராக விளங்கிப் புகழடைந்தார். அவருடைய மகன் உத்தமசோழ மாராயன் இராஜேந்திர சோழனுக்குச் சேனைத்தலைவராகப் பணிபுரிந்தார்.

முடிகொண்டசோழன், பண்டிதசோழன், கங்கைகொண்டான், கடாரங்கொண்டான் என்ற பல பட்டங்கள் இராஜேந்திரனுடைய கல்வெட்டுகளில் காணப்பெறுகின்றன. இவ்வரசனுல் அமைக்கப்பெற்ற கங்கைகொண்ட சோழபுரம் என்ற பெருநகர் கங்காபுரியென்று மெய்க்கீர்த்திகளில் பெயர் பெற்றுள்ளது. இது தஞ்சையம்பதியைப் போல் பெருநகரமாக இருந்திருத்தல் வேண்டுமென நாம் உய்த்துணரலாம். இப்பெருநகர் இப்பொழுது தில்லையிலிருந்து அரியலூர்ச் செல்லும் பெருவழியில் ஒரு சிற்றூராக விளங்குகிறது. இக் காலத்தில் உட்கோட்டை, மாளிகைமேடு, ஆயிரக்கலம், வாணதரையன் குப்பம், கொல்லாபுரம், சுண்ணும்புக்குழி, குருகைபாலப்பன் கோயில் என்பன கங்கைகொண்ட சோழபுரத்தின் பகுதிகளாக விளங்கியிருக்கக்கூடும். அம்மாநகரின் பழம்பெருமையையும், இராஜேந்திரன் பெருமையையும் உணர்வதற்கு ஏதுவாக இன்றும் நிலைபெற்றுள்ள கங்கைகொண்ட சோழேச்சுரம் என்னும் திருக்கோவிலாகும். தஞ்சைப் பெரியகோவிலின்மீது பதிகம் பாடியுள்ள கருர்த்தேவர், கங்கைகொண்ட சோழேச்சுரப் பெருமான்மீதும் ஒரு பதிகம் பாடியுள்ளார். அப் பதிகம் ஒன்பதாம் திருமுறையில் திருவிசைப்பா என்னும் பகுதியில் காணப்பெறுகிறது. இக் கோவில் தஞ்சைப் பெரியகோவிலுக்கு ஒப்பானதாயினும் சிற்பத்திறனில் மிகவுயர்ந்ததாகும். கர்ப்பகிரகம், பிராகாரம் இடிந்த கிழக்குக் கோபுரம் என்பவற்றைத் தவிர எஞ்சிய பகுதிகள் எல்லாம் இடிந்து அழிந்துபோன

நிலையில் உள்ளன. இக் கோயிலின் பல பகுதிகளை இடித்து அக் கருங்கற்களைக் கொண்டு கொள்ளிடநதியின் குறுக்கே ஆங்கில அரசியலார் கீழணையைக் கட்டியிருப்பதை நாம் காணலாம். இந்தக் கோவிலில் உள்ள சண்டேச அனுக்கிரக மூர்த்தியின் சிற்பம் மிகுந்த வேலைப்பாடு அமைந்ததாகும். இத் தலைநகருக்கு அருகில் பெரியதொரு ஏரியையும் வெட்டுவித்து அதற்குச் சோழகங்கம் என்று பெயரிடப்பெற்றது. சிதம்பரம் தாலுக்காவில் உள்ள வீராணத்தேரியும், இவ்வேரிக்கு வடிகாலாக இருந்திருக்க வேண்டுமெனக் கருதப்பெறுகிறது.

கங்கைகொண்ட சோழபுரம், சோழர்களுக்கு, குலதெய்வக் கோவிலாகக் கருதப்பெற்ற சிதம்பரம் கோவிலுக்கருகில் இருப்பதைக் கருதி தன் தலைநகரை இங்கு மாற்றியிருக்கலாம்] என்று, அறிஞர் சுப்பிரமணியம் கருதுகிறார். மேலும், வடநாட்டின்மீது படையெடுப்பதற்குத் தஞ்சையிலிருந்து சோழப் படைகள் காவிரி, கொள்ளிடம் ஆகிய ஆறுகளைக் கடந்து செல்லும் இன்னலைத் தவிர்க்கவும் இந்த ஏற்பாட்டைச் செய்திருக்கலாம். முதலாம் இராஜேந்திரன் கி. பி. 1044ஆம் ஆண்டில் இயற்கை எய்திய பிறகு, அவருடைய புதல்வன் சோழச்சக்கரவர்த்தியாக முடி சூட்டப்பெற்றான்.

# 11. இராஜகேசரி முதலாம் இராசாதிராசன் (1044—1054)

செங்கற்பட்டு மாவட்டத்தில் கிடைத்துள்ள ஒரு கல்வெட்டின்படி இராசாதிராசன் பூரநட்சத்தில் பிறந்தவன் ஆகும். கி. பி. 1018 ஆம் ஆண்டில் இளவரசுப்பட்டம் கட்டப் பெற்றுத் தன் தகப்பன் இராஜேந்திர சோழனுக்கு அரசியல் விவகாரங்களில் உதவியாக இருந்து வந்தனன். இவ்வரசனுடைய வரலாற்றை 'திங்களேர் தரு, திருக்கொடியொடு, திங்களேர்பெற வளர்' என்று தொடங்கும் மூன்று மெய்க் கீர்த்திகளின்மூலம் நாம் உணர்ந்து கொள்ளலாம்.

## இலங்கை நாட்டோடு தொடர்பு

இராசாதிராசனுடைய மெய்க்கீர்த்திகளில் காந்தளூர்ச்சாலை கலமறுத்ததும், இலங்கையை வென்றதும் கூறப்பெற்றுள்ளன. ஐந்தாம் மகிபன் என்ற இலங்கை மன்னன் சோழர்களுக்கடங்கி ஆட்சி செலுத்தி வந்தான். அவனுடைய மகன் காசபன் சுயாட்சிபெற விரும்பி கலகம் செய்தான். இலங்கைநாட்டின் தென்கிழக்குப் பகுதியிலுள்ள ரோகணம் என்ற இடத்தைத் தலை நகராகக் கொண்டு விக்கிரமபாகு என்ற பெயருடன் ஆண்டு வந்தான். பன்னிரு ஆண்டுகளுக்குப் பிறகு மகாலானகித்தி என்பவன் இராசாதிராசனுக்கு எதிராக கலகம் விளைத்தனன். மகாலானகித்தி என்னும் அத் தலைவன் போரில் தோல்வியுற்று உயிரிழந்தான். அவனுடைய மகன் இலங்கையிலிருந்து தப்பித்து ஓடிவிட்டான். மீண்டும் தன் தாய்நாட்டிற்கு வந்து சோழர்களோடு போரிட்டு வெற்றிபெருமல் உயிரிழந்தான்' ஆனல், மகாவமிசத்தில் விக்கிரமபண்டு என்ற தலைவன் சோழ அரசிற்கு எதிராக சுதந்திரப் போரைத் தொடங்கினன் என்று கூறப்பெற்றுள்ளது. இந்த விக்கிரமபண்டு என்னும் அரசன் சோழர்களுடைய கல்வெட்டுகளில் விக்கிரம பாண்டியன் என்றழைக்கப் பெறுகிருன். இவன் இலங்கை அரச குலத்தையும், பாண்டிய குலத்தையும் இணைத்துப் பிறந்தவனுக இருக்கக் கூடும். விக்கிரம பாண்டியனும், ஜெகதிபாலன் என்ற தலைவனும் சேர்ந்து சோழப் படைகளை எதிர்த்தபோதிலும்

தோல்வியுற்றனர். இரண்டாம் இராஜேந்திரன் ஆட்சிக் காலத்தில், வீரசலாமேகன், ஸ்ரீவல்லப மதனராசன் என்ற இலங்கை அரசர்களின்மீது வெற்றி பெற்றதாக அவனுடைய கல்வெட்டுகள் கூறுகின்றன. கி. பி. 1070 ஆம் ஆண்டு முதல் இலங்கையில்சோழமன்னருடைய ஆட்சியின் நிலைமைகுறைந்து கொண்டேவந்து பின்னர் மறைந்துவிட்டது என்று கூறலாம்.

## சோழ—மேலைச்சாளுக்கிய உறவு

முற்பகுதியில், இராஜேந்திர சோழனுடைய ஆட்சியில் சோழப்படைகளுக்குத் தலைமை வகித்து மேலைச்சாளுக்கிய அரசனாகிய சோமேச்வர ஆகவமல்லன்மீது, இராசாதிராசன் வெற்றிகொண்டதைக் கண்டோம். அந்த வெற்றிக்குப் பிறகு, இராசாதிராசன் தன்னிடமிருந்து கைப்பற்றிக் கொண்ட நிலப் பகுதிகளை மீண்டும் ஆகவமல்லன் தன்வசப்படுத்திக் கொண்டான். சோழப் பேரரசின்மீது படையெடுத்து காஞ்சிபுரம் வரையில் வந்ததாக பேராசிரியர் நீலகண்ட சாஸ்திரியார் கூறுவர்.[1] சாளுக்கிய அரசன் வலுவிற்குப் போருக்கு வந்ததைச் சமாளிக்க இராசாதிராசனும் முடிவு செய்தான். தன்னுடைய தம்பி இரண்டாம் இராஜேந்திரனுடன் சேர்ந்து, இராசாதிராச சோழனும், சோமேச்வரனுடைய நாட்டின்மீது படையெடுத்துச் சென்றனன். பண்டாரத்தார் அவர்கள் இப் படையெடுப்பு இராசாதிராசன் மேலைச்சாளுக்கியர் மீது நடத்திய மூன்றுவது படையெடுப்பாகும் என்று கூறுவர். சோழப் பேரரசின் சேனைக்கும், மேலைச்சாளுக்கியருடைய படைகட்கும் கிருஷ்ணையாற்றங்கரையில் உள்ள கொப்பம் என்னுமிடத்தில் பெரும்போர் நடைபெற்றது. சோழர்களுக்கும் சாளுக்கியர்களுக்கும் இடையே நடந்த பேராட்டத்தில் இப் போர் மிகக் கொடியது எனக் கருதலாம். இராசாதிராசன் யானையின் மீதமர்ந்து தன் சேனையை நடத்தி பெரும்போர் புரிந்தான். ஆயினும், சாளுக்கிய வீரர்கள் இராசாதிராசன் வீற்றிருந்த யானையின்மீதும், அரசன்மீதும் அம்புமாரி பொழிந்தனர். இராசாதிராசனும் மார்பில் புண்பட்டு, யானைமீதிருந்து கீழே விழுந்து உயிர்துறந்தான். சோழநாட்டுப் படைகள் நாற்புறமும் சிதறியோடத் தொடங்கின. அந்நிலையில், இரண்டாம் இராஜேந்திரன் தன் பட்டத்து யானை மீதேறிப் போர்க்களம் சேர்ந்து 'அஞ்சேல், அஞ்சேல்' என அபயங்கூறி சோணாட்டுப் படைகட்கு வீர உணர்ச்சியுண்டாக்கி, மீண்டும் சாளுக்கியருடன் போர் செய்யத் தொடங்கினன். இப் போரில்

[1] K. A. N. Sastri, 'A. History of South India,' P. 177

சோமேச்வரனுடைய தம்பியாகிய ஜெயசிம்மன் முதலிய வீரர்கள் உயிரிழந்தனர். சோழப்படைகள் பெரும் வெற்றி யடைந்தனர். கணக்கில் அடங்காத கொள்ளைப் பொருட்கள் கைப்பற்றப் பெற்றன. போர்களத்திலேயே இரண்டாம் இராஜேந்திரன் சோழப் பேரரசனாக முடிசூடிக் கொண்டான். பின்னர் கொல்காபுரத்திற்குத் தன்னுடைய சேனையை நடத்தி வெற்றித்தூண் ஒன்றமைத்து திரும்பினான். இராஜேந்திரன் அடைந்த மேற்கூறப்பெற்ற வெற்றிகள் சாளுக்கியர்களுடைய பட்டயங்களில் சிறிதளவுகூட காணப்படவில்லை. பராந்தக சோழன் காலத்தில் தக்கோலம் என்னுமிடத்தில் நடந்த போரில் இராஜாதித்தன் உயிர்துறந்து 'ஆனை மேற்துஞ்சிய தேவர்' என்னும் பட்டம் பெற்றதுபோல், முதலாம் இராசாதி ராசனும் 'ஆனை மேற்துஞ்சிய தேவர்' என அழைக்கப் பெற்றான்

முதலாம் இராசாதிராசன் பெரும் வீரனாகத் திகழ்ந்து, பல போர்களை நடத்திப் போர்களத்திலேயே உயிர் துறந்த பெரு வீரனாவான். தன்னுடைய தம்பிமார்களை தனக்கு உற்றவிடத்தில் உதவி செய்யுமாறு பழக்குவித்துப் பெரும்புகழ் எய்தினான். 'கலியாணபுரம் கொண்டான்,' 'ஆகவமல்ல குலகாலன்' என்ற பட்டப் பெயர்களுமுடைய இராசாதிராசனுடைய ஆட்சியில், உலகளந்த சோழப் பிரமமாராயன் என்பான் தலைமையில் சோழராச்சியத்தில் இருந்த நிலங்கள் எல்லாம் அளக்கப்பெற்று, நிலவரியும் மற்ற வரிகளும் நிச்சயிக்கப்பெற்றன. இராசேந்திர சோழ மாவலி வாணராயன் என்பான், இராசாதிராசனுடைய சேனாதிபதியாக அலுவல் பார்த்துப் பெரும் புகழடைந்தான்.

## பரகேசரி இரண்டாம் இராஜேந்திரன் (1054—1063)

இரண்டாம் இராஜேந்திரன், தன் தமையன் இறந்தபின்னர் கொப்பத்துப் போர்க்களத்திலேயே சோழப் பேரரசனாக முடி சூடிக் கொண்டான். அப் போரில் இராஜேந்திர சோழன் காட்டிய பெருவீரத்தை ஜெயங்கொண்டாரும், ஒட்டக்கூத்தரும் வெகுவாகப் புகழ்ந்துள்ளனர் :

'ஒரு களிற்றின்மேல் வருகளிற்றை யொத்து
உலகுயக் கொளபொருது கொப்பையில்
பொருகளத்திலே முடிகவித்தவன்.'
(க. பரணி)

'கொலையானை பப்பத்து ஒருபசிப்பேய் பற்ற
ஒருபரணி கொப்பத்து ஒருகளிற்றால் கொண்டகோன்.'
(மூவருலா)

கி.பி. 1053ஆம் ஆண்டில் நடந்த கொப்பத்துப் போரில் சாளுக்கிய அரசனாகிய ஆகவமல்லன் தோல்வியுற்ற போதிலும், இரண்டாம் இராஜேந்திரன் ஆட்சியிலும் சோழ—சாளுக்கியப் போராட்டம் தொடர்ந்து நடைபெற்றது. திருச்சி மாவட்டம் திருமழப்பாடியில், இரண்டாம் இராஜேந்திரனுடைய ஒன்பதாம் ஆட்சியாண்டில் வரையப்பெற்ற கல்வெட்டு ஒன்று, சோழப் படைகட்கும்—சாளுக்கியருக்குமிடையே முடக்காறு என்னும் இடத்தில் நடந்த போரைப்பற்றிக் கூறுகிறது. திருப்பாதிரிப் புலியூரிலும், பெரும்பேரூரிலும் கிடைத்த கல்வெட்டுகள் இந்த முடக்காற்றுப் போர் நடைபெற்றதைக் குறிப்பிடுகின்றன. கொப்பத்தில் நடந்த போரில் தான் தோல்வியுற்றதைக் கண்டு மனம் புழுங்கிய ஆகவமல்லன், தன் தோல்வியின் இழிவைத் துடைப்பதற்கு துங்கபத்திரை நதியைக் கடந்து சோழப் பேரரசின்மீது படையெடுத்தான். முடக்காறு என்னுமிடம் துங்க பத்திரை நதி வளைந்து செல்லுகின்ற இடத்தைக் குறிக்கும். N. சுப்பிரமணியம் அவர்கள், முடக்காறு என்ற இடம் கூடல் சங்கமேயாகும் என்று கூறியுள்ளது ஆராய்ச்சியாளர்கள் ஏற்றுக்கொள்ளத் தக்கதன்று. முடக்காறு என்பது பாம்புபோல் வளைந்து செல்லும் துங்கபத்திரையைத்தான் குறிப்பதாகும்.

இரண்டாம் இராஜேந்திரன், இராஜமகேந்திரன், வீர ராஜேந்திரன் முதலிய சோழ அரசர்கள் இப் போரில் பங்கு கொண்டனர். இப் போரிலும் சாளுக்கிய ஆகவமல்லன் தோல்வியுற்று துங்கபத்திரை நதியைக் கடந்து பின்வாங்க நேர்ந்தது.

முடக்காற்றுப் போரில் தோல்வியுற்ற சோமேச்வர ஆகவமல்லன், வேங்கிநாட்டில் நிலைப்பெற்றிருந்த சோழருடைய செல்வாக்கையும் அதிகாரத்தையும் அழிப்பதற்கு ஒரு திட்டம் வகுத்தனன். வேங்கி நாட்டில் இரண்டாம் சக்திவர்மன் என்பவனை இராஜராஜ நரேந்திரனுக்கு எதிராக கலகம் செய்யத் தூண்டியது அன்றியும், சாமுண்டராயன் என்னும் தன் சேனைத் தலைவனை வேங்கிநாட்டின்மீது படையெடுக்கும்படி செய்தான். இராஜராஜ நரேந்திரன் நாட்டை விட்டுத் துரத்தப்பட்டான். ஆகவமல்லனுடைய புதல்வர்களாகிய விக்கிரமாதித்தனும், ஜெயசிம்மனும் சேர்ந்து துங்கபத்திரையைக் கடந்து கங்கவாடி நாட்டைக் கைப்பற்றினர். இவ்விதம் தோன்றிய இரண்டு போர் முனைகளிலும் இரண்டாம் இராஜேந்திர சோழன் சாளுக்கியப் படைகளை எதிர்த்து தோற்கடிப்பதற்கு ஏற்ற நடவடிக்கைகளைக் கைக்கொண்டான். சாளுக்கியத் தலைவர்களாகிய விக்கிரமாதித்

தனும், ஜெயசிம்மனும், துங்கபத்திரையும்—கிருஷ்ணை நதியும் கூடுகின்ற கூடல்சங்கமம் என்னுமிடத்தில் தோல்வியுற்று களத்தை விட்டோடினர். வேங்கி நாட்டின்மீது படை யெடுத்த சாமுண்டராயனும் தோல்வியுற்று, கீழைச்சாளுக்கிய அரசனாகிய சக்திவர்மனும் உயிரிழந்தான். கொப்பத்தில் தானடைந்த தோல்வியை வெற்றியாக மாற்ற முயன்ற சோமேச்வரனுடைய எண்ணம் ஈடேருது தோல்வியுற்றது.

இரண்டாம் இராஜேந்திரன் கங்கைகொண்ட சோழ புரத்திலிருந்து கி. பி. 1063ஆம் ஆண்டுவரையில் அரசாண்டான். அவனுடைய புதல்வி மதுராந்தகி என்பாள் கீழைச் சாளுக்கிய இளவரசனாகிய குலோத்துங்கனை மணந்து கொண்டாள். இவ்விளவரசனே கி. பி. 1070ஆம் ஆண்டில், கங்கைகொண்ட சோழபுரத்தில் சோழப் பேரரசிற்கு அரசனாக அமர்ந்தான். இராஜேந்திரனுடைய தம்பி இராஜ மகேந்திரன் என்பான், திருவரங்கப் பெருமான் கோவிலுக்கு சிறந்த தானங்களைச் செய்துள்ளான்.

## (இராஜகேசரி) வீரராஜேந்திரன் (1063—1069)

இரண்டாம் இராஜேந்திரசோழனுக்குப் பிறகு இவனுடைய தம்பி வீரராஜேந்திரன் சோழப் பேரரசனானன். இவனுடைய மெய்க்கீர்த்திகள் 'திருவளர் திரள்புயத்து' என்றும், 'வீரமே துணையாகவும் தியாகமே அணியாகவும்' என்றும் தொடங்குகின்றன. பின்னர் கூறப்பெற்ற மெய்க்கீர்த்தி வீரராஜேந்திரன், ஆகவமல்லனை ஐந்துமுறை போரில் வென்றதாகக் கூறுகிறது. முன் அதிகாரத்தில் சோழர்களுக்கும், சாளுக்கியர்களுக்கும் மூன்று தடவைகளில் போர்கள் நடந்தவற்றைக் கண்டோம். மூன்ருவது போர் கூடல்சங்கமம் என்ற இடத்தில் நடந்தது. நான்காம் தடவை நடந்த போரும் கிருஷ்ணை—துங்கபத்திரை நதிகளின் தீரத்தில்தான் நடந்திருக்கும். இந்த நான்காவது போரில் மல்லியண்ணன், பிரம்மதேவன், அசோகய்யன், சத்தியண்ணன், வீமய்யன் முதலிய சாளுக்கியத் தலைவர்களும், சாளுக்கிய சிற்றரசர்களாகிய நுளம்பர்களும், வைதும்பர்களும் தோல்வியுற்றனர். இவ்விதம் சோழமன்னர்களிடம் நான்கு முறை தோல்வியுற்ற சோமேச்வர ஆகவமல்லன், தன்னுடைய மானத்தையே பெரிதாக எண்ணி எவ்வாற்ருனும் சோழமன்னன் மீது வெற்றிகொள்ள வேண்டுமெனத் துணிந்து ஐந்தாவது முறையாக தன்னை எதிர்க்கும்படியும், கூடல்சங்கமத்திலே இருபடையினரும் மோதிக்கொள்ள வேண்டும் என்றும்

நிச்சயித்து மீண்டும் வீரராஜேந்திரனைப் போருக்கழைத்தனன். வீரராஜேந்திரனும் ஒப்புக்கொண்டான்.

சோழப் படைகள் கூடல்சங்கமத்திற்கு அருகே கரந்தை என்னுமிடத்தில் முகாமிட்டு இருந்தன. வீரராஜேந்திரனும், ஆகவமல்லனை எதிர்பார்த்து ஒரு திங்கள் வரையில் காத்து இருந்தபோதிலும், ஆகவமல்லனும் அவனுடைய சேனையும் போர்புரிவதற்கு முன்வரவில்லை. தன்னுடன் போர்புரிவதற்கு சவால்விடுத்து பின்னர் வராது காலங்கடத்தியதைக் கண்டு மிக்க சினங்கொண்ட சோழன், இரட்டப்பாடி நாட்டில் வாழ்ந்த தேவநாதன், சித்தி, கேசி என்ற மூன்று சாளுக்கியத் தலைவர்களையும் போரில் தோற்கடித்து அவர்களுடைய தலைநகரங்கள் அழிவுறும்படி செய்தான். துங்கபத்திரை நதிக்கரையில் ஒரு வெற்றித்தூணையும் நிறுவி, ஆகவமல்லனைப்போல் ஓர் உருவம் அமைத்து கழுத்தில் கண்டிகை பூட்டி, அவனும் அவன் மக்களும் தனக்கு அஞ்சி ஐந்துமுறை புறமுதுகிட்டு ஓடிய செய்தியை ஒரு பலகையில் எழுதி அவ்வுருவத்தின் மார்பில் தொங்கவிட்டு, மற்றும் சில அவமானங்களும் செய்தான். ஆகவமல்ல சோமேச்வரன் போர்புரிவதற்கு ஏற்றுக் கொண்டபடி போர்க்களத்திற்கு வராத காரணம் இன்னதென்று புரியவில்லை. பில்ஹணருடைய விக்ரமாங்கசரிதத்தில், சோமேச்வரனுக்கு அவனுடைய மருத்துவர்களால் அகற்றமுடியாத கடுஞ்சுரங்கண்டு, அந் நோயின் கொடுமை தாங்காமல் துங்கபத்திரையில் மூழ்கி உயிர் துறந்தான் என்று கூறப்பட்டுள்ளது.

கூடல்சங்கமத்தில் சில சாளுக்கியத் தலைவர்களின்மீது வெற்றிகொண்ட பிறகு, வீரராஜேந்திரன் வேங்கிநாட்டை நோக்கித் தன் படைகளைச் செலுத்தலானன். அந் நாட்டில் மேலைச்சாளுக்கியருடைய செல்வாக்கை அறவே அழித்து விடுவதற்கும் திட்டமிட்டு, சாளுக்கியத் தலைவர்களாகிய ஜனநாதன், திப்பரசன், இராசமய்யன் என்போரை விஜய வாடைக்கருகில் தோற்கடித்தான். கோதாவரி நதியையும் கடந்து சக்கரக்கோட்டம், கலிங்கம் முதலிய இடங்களையும் கைப்பற்றியதாகத் தெரிகிறது.

சோமேச்வர ஆகவமல்லன் துங்கபத்திரையில் மூழ்கி தன்னுயிரை மாய்த்துக்கொண்ட பிறகு, அவனுடைய மூத்த மகன் இரண்டாம் சோமேச்வரன் கி. பி. 1068-ல் கலியாண புரத்தில் அரசுரிமை எய்தினன். ஆனல், அவ்னுடைய தம்பி

யாகிய விக்கிரமாதித்தன் அல்லது விக்கிரமாங்கன் என்பவன் தன் தமையனுடன் அரசுரிமைக்காகப் போரிட்டான். இவ் வரசுரிமைப் போரில் வீரராஜேந்திர சோழன், விக்கிரமாதித்தனை ஆதரித்து அவனுக்குதவியாகப் பெரியதொரு சேனையையும் அனுப்பி வைத்தான். அச் சேனை குத்தி என்னும் இடத்தைக் கைப்பற்றி, கம்பிலி நகரத்தையும் முற்றுகையிட்டது. வீர ராஜேந்திரனுடைய தலையீட்டால் இரண்டாம் சோமேச்வர னுக்கும் அவனுடைய தம்பிக்கும் ஓர் உடன்பாடு தோன்றியது. அவ்வுடன்பாடு சோழர்களுக்கும், சாளுக்கியருக்கும் இடையே இதுகாறும் நடந்துவந்த பகைமையை மாற்றி நட்பு உண்டாவதற்கு ஏற்றதாயிற்று. ஆறும் விக்கிரமாதித்தன் இளவரசனாக ஒப்புக்கொள்ளப்பெற்று சாளுக்கியநாட்டின் தென்பகுதிக்கு அரசனானான். வீரராஜேந்திரன் தன்னுடைய மகள் ஒருத்தியை விக்கிரமாதித்தனுக்கு மணஞ்செய்து கொடுத்து தன்னுடைய மருமகனாகவும் ஒப்புக்கொண்டான் என்று நாம் அறிகிறோம்.

## இலங்கை அரசனுடன் போர்

விஜயபாகு என்ற தலைவன் சோழர்களுடைய ஆட்சி யிலிருந்து தன்னுடைய நாட்டை மீட்டு சுதந்திரமாக ஆட்சி புரிய பல செயல்களை மேற்கொண்டான். இலங்கையை ஆண்டு வந்த சோழ ஆளுநர்களிடமிருந்து பல இடங்களைக் கைப்பற்றிக் கொண்டனன். இதைக்கண்ட வீரராஜேந்திரன் பெரியதொரு சேனையை அனுப்பி, விஜயபாகுவைத் தோற்கடித்து மீண்டும் சோழராட்சியை நிலைநாட்டினான். ஆயினும் வீரராஜேந்திர னுக்குப்பின் அதிராஜேந்திரன் ஆட்சியிலும், முதற்குலோத்துங் கனுடைய ஆட்சியிலும் இலங்கை தன்னரசு நாடாகியது.

வீரராஜேந்திரனுடைய ஆட்சியின் இறுதியில் பொறிக்கப் பெற்ற கல்வெட்டு ஒன்றில், ஸ்ரீவிஜயநாட்டு இளவரசன் ஒருவனுக்கு வீரராஜேந்திரன் உதவிசெய்து அவன் அரசபதவி வகிக்கும்படி செய்ததாக நாம் அறிகிறோம். வீரசோழன், கரிகாலன், ஆகவமல்ல குலகாலன், வல்லபவல்லவன் என்ற பல பட்டங்களை மேற்கொண்டான். மேலைச்சாளுக்கிய அரசனாகிய ஆகவமல்லனை பலமுறை வெற்றிகொண்டதினால் பின்னிரண்டு பட்டங்களையும் அவன் கொண்டிருக்க வேண்டும். வீரராஜேந்திரன் காலத்தில் புத்தமித்திரன் என்ற புலவர் வீர சோழியம் என்ற தமிழ் இலக்கணநூலை இயற்றியதாக நாம் அறிகிறோம்.

## பரகேசரி அதிராஜேந்திரன் (கி.பி. 1070)

வீரராஜேந்திரனுக்குப் பிறகு அவனுடைய மகனாகிய அதிராஜேந்திரன் கங்கைகொண்ட சோழபுரத்தில் அரசுரிமை எய்தினன். இவ்வரசன் இரண்டொரு திங்களே ஆட்சிபுரிந்து பின்னர் இறந்துவிட்டதாகத் தெரிகிறது. அதிராஜேந்திரனின் மரணமானது சோழவரலாற்றில் ஒரு புதிராகக் கருதப் பெறுகிறது. அதிராஜேந்திரனுடைய மரணத்தைப்பற்றி இரண்டு விதக் கேள்விகள் எழுப்பப்பெறுகின்றன. நோய்வாய்ப்பட்டு இயற்கை மரணம் எய்தினனா? அல்லது அரசியல் புரட்சி ஒன்று ஏற்பட்டு அதனால் கொலையுண்டனனா? என்பது ஒன்றாகும். இரண்டாவதாக, இராஜேந்திரன் என்ற சோழ—சாளுக்கிய இளவரசன் எவ்வாறு சோழப் பேரரசிற்கு சக்கரவர்த்தியாயினன் என்பதாகும்.

பேராசிரியர் நீலகண்ட சாஸ்திரியார், 'திவ்யசூரி சரிதத்தில் இராமானுஜரைத் துன்புறுத்திய கிரிமிகண்ட சோழன் என்பவன் இந்த அதிராஜேந்திரனாக இருக்கலாம் என்றும், அதனால் மனம் புண்பட்ட வைணவப் பெரியோர்கள் அவனுக்குச் சாபமிட்டு அவனுக்குக் கழுத்தில் புற்றுநோய் கண்டு இறந்தான்' என்றும் கூறியுள்ளார்.[1] திவ்யசூரி சரிதத்தில் கூறப்பெற்ற கிரிமிகண்ட சோழன் யார் என்று இங்கு நிச்சயம் செய்தல் நலமாகும். இராமானுஜரைத் துன்புறுத்திய சோழமன்னன் இரண்டாம் குலோத்துங்கனாகத்தான் இருக்க வேண்டும். ஏனெனில், இராமானுஜர் வாழ்ந்தகாலம் இரண்டாம் குலோத்துங்கனுடைய காலமாகும் என்று பல வரலாற்றாராய்ச்சியாளர்கள் நிச்சயித்துள்ளனர். வைஷ்ணவர்களைத் துன்புறுத்தியதும், தில்லையிலுள்ள கோவிந்தராசருடைய உருவச்சிலையை அப்புறப்படுத்தியதும் கி.பி. 1133 முதல் 1150 முடிய அரசாண்ட இரண்டாம் குலோத்துங்கனாகத்தான் இருக்க வேண்டும். திருவாளர் சதாசிவப்பண்டாரத்தார் அவர்கள், 'தில்லையில் கோவிந்தராசருடைய சிலையைக் கர்ப்பகிருகத்திலிருந்து அகற்றியவன் இரண்டாம் குலோத்துங்கனே என்று' இலக்கியச் சான்றுகள் கொண்டு நிச்சயம் செய்துள்ளார். இராமானுஜர் சோழநாட்டிலிருந்து ஹொய்சள நாட்டிற்குத் தப்பிச் சென்றபொழுது விஷ்ணுவர்த்தனனால் ஆதரிக்கப் பெற்றுள்ளார். இரண்டாம் குலோத்துங்கனுடைய ஆட்சிக் காலமும், ஹொய்சள விஷ்ணுவர்த்தனனுடைய ஆட்சிக்

[1] 'Cholas,' PP. 295-96

காலமும் ஒன்றேயாகும்.[1] ஆகையினால் அதிராஜேந்திரன் இராமானுஜர் காலத்தில் வாழ்ந்த சோழமன்னனும், கிரிமிகண்ட சோழனும் ஆவன் என்பது வரலாற்று உண்மை ஆகாது. வைணவர்களுடைய சாபத்தினால் அதிராஜேந்திரன் நோயுற்று இறந்தான் எனக் கூறுவது பொருந்தாக் கூற்றாகும்.

தஞ்சை மாவட்டத்தில் உள்ள குகூர் என்னுமிடத்தில் கிடைத்த கல்வெட்டின்படி, அதிராஜேந்திரன் அரியணையில் அமர்ந்த பிறகு கொடியதொரு நோய்வாய்ப்பட்டனன் என்றும், அந் நோயினின்றும் அவன் பிழைத்துக்கொள்வதற்காக தேவாரப் பதிகங்கள் திருக்கோவில்களில் ஓதப்பெற்றன என்றும் கூறப்பெறுகிறது.[2] இவற்றால் அதிராஜேந்திரன் நோய்வாய்ப் பட்டு இறந்தனனாதல் வேண்டும். அவனை யாரும் கொலை செய்ததாகச் சான்றுகள் இல்லை. மேலும், அதிராஜேந்திரனைக் கொலை செய்வித்தவன் முதல் குலோத்துங்க சோழனாக இருக்கலாம். ஏனெனில், அதிராஜேந்திரன் இறந்தவுடன் முதற்குலோத்துங்க சோழன் அரியணையில் அமர்ந்தான் என்று சில வரலாற்றாராய்ச்சியாளர் கூறுவர்.[3] இச் செய்தி உண்மையாக இருந்தால், முதற்குலோத்துங்கனுடைய குறைகளையே எடுத்துக்கூறி, அவனுடைய பெருமைகளைக் குறைத்துக்கூறும் இயல்புடைய பில்ஹணர் என்ற புலவர் தான் எழுதிய விக்கிரமாங்க தேவசரிதையில் கட்டாயமாகக் கூறியிருப்பார். பில்ஹணர் அவ்விதம் கூறாமையினால் அதிராஜேந்திரனுடைய மரணத்திற்கு முதற் குலோத்துங்க சோழன் எவ்வாற்றானும் பொறுப்புடையவனல்லன். மேற்கூறப்பெற்ற சான்றுகளைக் கொண்டு, அதிராஜேந்திரன் நோய்வாய்ப்பட்டு இறந்தனனேயன்றிக் கொலை செய்யப்பெறவில்லை என்பதனைத் தெளிவாகக் காணலாம்.

விஜயாலய சோழனால் தொடங்கப்பெற்ற சோழ வமிசமானது அதிராஜேந்திரனோடு முடிவுற்று, பின்னர் கீழைச் சாளுக்கிய—சோழமரபுகளைச் சார்ந்த முதற் குலோத்துங்கன் பட்டம் எய்தினன் என்பதும், அதிராஜேந்திரன், கிரிமிகண்ட சோழன் அல்ல என்பதும் தெளிவாகின்றன.

[1] T. V. S. பண்டாரத்தார், Vol. II, PP. 96-97

[2] Ins. No., 280—1917

[3] M. E. R. 1904., Para—II

# 12. சாளுக்கிய—சோழர் வரலாறு

## பரகேசரி முதலாம் குலோத்துங்க சோழன் (1070—1120)

முதலாம் குலோத்துங்க சோழன் கங்கைகொண்ட சோழபுரத்தில் சோழப் பேரரசனாகப் பதவியேற்றது, பிற்கால சோழ வரலாற்றில் மிக முக்கியமான ஒரு கட்டமாகும். குலோத்துங்க சோழன் தன் தந்தையின் வழியில் கீழைச்சாளுக்கிய அரச குலத்தைச் சேர்ந்தவனாவான். தாய் வழியில்தான் சோழ குலத்தைச் சேர்ந்தவனாவான். கி. பி. 1070 ஆம் ஆண்டிலிருந்து சுமார் இருநூறு ஆண்டுகளுக்குமேல் முதற்குலோத்துங்க சோழனும், அவனுடைய சந்ததியாரும் சோழப் பேரரசை ஆண்டனர். விஜயாலய சோழனுடைய ஆட்சியில் தொடங்கி வீரராஜேந்திரன் ஆட்சி வரையில், ஒரு சிறிய நாடாக இருந்த சோழநாடு, சோழப்பேரரசாக ஓங்கி வளர்ந்து தென்னிந்தியா முழுவதற்கும் ஒரு பேரரசை நிலைநாட்டி மேன்மையுற்றது. இவ் விதமாகப் பேரரசை உண்டாக்கியது சோழமன்னர்களுடைய இராணுவ மேன்மையும், போர்புரிந்து நாடு சேர்க்கும் வன்மையையுமே எனத் தெளிவாகக் கூறலாம். முதற்குலோத் துங்கசோழன் சோழப் பேரரசனாக பதவியேற்ற காலம் முதற் கொண்டு வாளின் வன்மையால் பேரரசைத் தாபிக்கும் வழக்கம் ஓய்ந்துவிட்டது. முதற்குலோத்துங்க சோழனும், அவனுக்குப் பின்வந்த சோழ அரசர்களும் தங்களுடைய முன்னோர்களால் அமைக்கப்பெற்ற பேரரசை அழியாமல் காப்பதற்கு ஏற்ற போர்களை மேற்கொண்டனரேயன்றி, சோழப்பேரரசை விரிவு படுத்துவதற்காக அன்று. ஆயினும், சோழப்பேரரசை என்றும் நிலையானதாகச் செய்வதற்கு அவர்களால் முடியவில்லை. ஏனெனில், மனிதர்களால் அமைக்கப்பெற்ற எந்த அமைப்பும் என்றும் நிலைபெறுது என்பது வரலாறுகண்ட உண்மையாகும். காலச்சுழற்சியினால் சாளுக்கிய—சோழப் பேரரசும் குலைந்து பாண்டியப் பேரரசிற்கு வழிகோலியது.

முதற்குலோத்துங்க சோழன், இராஜராஜசோழன் மகள் வயிற்றுப் பெயரனுக்கு மகனாவான். அவனுடைய தாய் அம்மங்கைதேவி முதல் இராஜேந்திரனுடைய மகளாவாள். குலோத்துங்கனுடைய தகப்பன் இராஜராஜ நரேந்திரன், முதல்

இராஜராஜனுடைய மகள் இரண்டாம குந்தவைக்கும் கீழைச் சாளுக்கிய விமலாதித்தனுக்கும் பிறந்த அரசகுமாரனுவான். ஆகையால், அவனுடைய உடலில் முக்கால்பகுதி சோழ இரத்தமும், கால்பகுதி சாளுக்கிய இரத்தமும் கலந்திருந்தது எனக் கூறலாம். எதிர்பாராதபடி நோயுற்று இறந்த அதிராஜேந்திரன் தனக்குப்பின் சோழப்பேரரசை ஏற்று அரசாளுவதற்குரிய சந்ததியில்லாது போயினன். கங்கைகொண்ட சோழபுரத்தில் இருந்த அமைச்சர்களும் படைத்தலைவர்களும் கலந்து, முதற்குலோத்துங்கன் ஆட்சியுரிமைப் பெறுவதற்கு உதவி செய்திருக்க வேண்டுமென திரு பண்டாரத்தார் அவர்கள் கூறுவர்.[1] கி. பி. 1070 ஆம் ஆண்டு ஜுன் திங்கள் ஆரும் தேதியன்று குலோத்துங்கனுடைய முடிசூட்டு விழா நடந்தேறியது. இவ்வேந்தன் சோழப்பேரரசை 50 ஆண்டுகளுக்கு அரசாண்டமையால், அவனுடைய ஆட்சிக்காலத்தில் பொறிக்கப்பெற்ற செப்பேடுகளும், கல்வெட்டுகளும் அவனுடைய வரலாற்றை உணர்வதற்குப் பேருதவி செய்கின்றன. அக் காலத்தில் இயற்றப்பெற்ற கலிங்கத்துப்பரணி, மூவருலா, குலோத்துங்கன் பிள்ளைத்தமிழ் முதலிய நூல்களும் பல வரலாற்றுண்மைகளைத் தம்முள் கொண்டுள்ளன. இவற்றின் துணைகொண்டு முதற்குலோத்துங்கனுடைய வரலாற்றை உணர்வது அறிவுடைமையாகும்.

தன்னுடைய இளமைப்பருவத்தில் சோழர்களுக்கும், மேலைச்சாளுக்கிய அரசர்களுக்கும் இடையே தோன்றிய போர்களில்—முக்கியமாக வீரராஜேந்திரன் பங்குகொண்ட போர்களில் குலோத்துங்கன் ஈடுபட்டிருந்ததை மேற்கூறப் பெற்ற சான்றுகளில் காணலாம். குலோத்துங்கனுடைய ஆட்சிக் காலத்தில் மேலைச்சாளுக்கிய அரசனுக கலியாணபுரத்தில் ஆட்சிபுரிந்தவன் ஆருவது விக்கிரமாதித்தன் ஆவன். இவ்விரு அரசர்களும், தங்களுடைய முன்னேர்களைப்போல் பகைமை பூண்டிருந்தனர். குலோத்துங்கன், கீழைச்சாளுக்கியருடைய வேங்கிநாட்டையும் சேர்த்து சோழப்பேரரசனுக ஆட்சி புரிந்ததையும், சோழப்பேரரசு, மேலைச்சாளுக்கியருடைய பேரரசைக் காட்டிலும் வளத்திலும், செல்வச்சிறப்பிலும், ஆட்சிமுறையிலும் மேன்மைபெற்று விளங்கியதையும் கண்ட ஆரும் விக்கிரமாதித்தன், குலோத்துங்கன்மீது பொருமை கொண்டிருந்தனன். அவ்வித பொருமையினுல் குலோத்துங்கனை எதிர்ப்பதற்கு தனக்கடங்கிய சிற்றரசர்களுடைய உதவிகொண்டு பெரிய

1 T. V. S. பண்டாரத்தார், Vol. II, P. 7

தொரு கூட்டணியைத் தோற்றுவித்தான். அக் கூட்டணியில் ஹொய்சள ஏரியங்கன், யாதவசேனன், கடம்பஜெயகேசி, நுளம்ப பாண்டியர்கள் முதலியோர் பங்கு கொண்டிருந்தனர். குலோத்துங்கன் கட்சியில் விக்கிரமாதித்தனின் தமையனாகிய சோமேச்வரன் மாத்திரம் சேர்ந்திருந்தான். மேற்கூறியவாறு பெரும்படை யொன்றை திரட்டிக்கொண்டு, சோழப்பேரரசின் வடக்குப் பகுதியின்மீது விக்கிரமாதித்தன் படையெடுத்தான் நங்கிலி, மணலூர், அளத்தி என்னுமிடங்களில் இவ்விரு அரசர்களுக்கும் பல போர்கள் நடைபெற்றன. துங்கபத்திரை நதியின் இரண்டு தீரங்களும் போர்க்களங்களாக மாறின. விக்கிரமாதித்தன் அப் போர்களில் தோல்வியடைந்ததாகத் தெரிகிறது. குலோத்துங்க சோழன், விக்கிரமாதித்தன்மீது பெரும் வெற்றி பெற்று, சாளுக்கிய அரசனுடைய ஆயிரம் யானைகளைக் கைப்பற்றிக்கொண்டதாக நாம் அறிகிறோம். ஆயினும், குலோத்துங்கனுடைய நண்பனாகிய சோமேச்வரன், விக்கிரமாதித்தனால் சிறை செய்யப்பட்டு தன்னுடைய நாட்டில் ஒரு பகுதியை இழக்கவேண்டிய நிலைமை தோன்றியது.

## பாண்டிய—சேரமன்னர்களுடன் தொடர்பு

அதிராஜேந்திரசோழன் மரணமடைந்த பிறகும், முதற் குலோத்துங்க சோழன் சோழப்பேரரசைக் கைப்பற்றியதற்கு முன்னும் ஆகிய இடைக்காலத்தில் பாண்டியநாட்டை ஆண்டு வந்த பஞ்சவர் ஐவரும் தன்னரசு அடைந்தனர். குலோத்துங்கன் அவர்கள்மீது படையெடுத்துச் சென்று, அவர்கள் தன்னுடைய தலைமை அதிகாரத்தை ஒப்புக்கொள்ளும்படி செய்தனன். பாண்டிய அரசர்களைப் போன்று உரிமைபெற விரும்பிய திருவிதாங்கூர் நாட்டுச் சிற்றரசன், கோட்டாறு, விழிஞம் என்ற இடங்களில் தோல்வியுற்றனன். மீண்டும் அந் நாட்டில் கலகம் நேராதவாறு, கோட்டாறு என்னுமிடத்தில் சோழஅரசின் நிலைப்படை ஒன்று அமைக்கப்பெற்றது.

## கலிங்கத்தை வென்றது

ஜெயங்கொண்டார் இயற்றிய கலிங்கத்துப்பரணியில் கருணாகரத் தொண்டைமான், முதற்குலோத்துங்கனுடைய ஆணையின்படி வடகலிங்க நாட்டின்மீது படையெடுத்து வெற்றி பெற்றுத் திரும்பிய செய்திகள் கூறப்பெற்றுள்ளன. முறையாக, கப்பங்கட்டாத அனந்தவர்மன் சோழகங்கன் என்ற அரசன் தோல்வியுற்றுக் கப்பம் கட்டுவதற்கு ஒப்புக்கொண்டனன். அனந்தவர்மன், முதற்குலோத்துங்க சோழனுடைய மகள்

சூரியவல்லியின் புதல்வனுவன் என்ற கூற்றில் உண்மை இருப்பதாகத் தோன்றவில்லை. கருணுகரத் தொண்டைமானுடைய வெற்றியைக் கூறும் கலிங்கத்துப்பரணி, சோழ வரலாற்றை எழுதுவதற்கு முக்கியமான ஆதாரநூலாகக் கருதப்பெறுகிறது.

குலோத்துங்க சோழனுடைய ஆட்சிக்காலத்தில், இலங்கையில் ஆட்சியை மேற்கொண்ட விஜயபாகு என்பான் சோழ அரசின் இறைமையைத் தவிர்த்து சுதந்தரமடைந்தான். மைசூர் நாட்டைச் சேர்ந்த கங்கபாடியும், தலைக்காடும் ஹொய்சள வமிசத்து அரசர்களின் ஆட்சியின்கீழ் வந்தன. கங்கபாடிப் பகுதியை சோழப் பேரரசர்களுக்கு அடங்கி ஆண்டுவந்த தகடூர் அதிகமான்களிடமிருந்து, ஹொய்சள வமிசத்து தலைவர்கள் கைப்பற்றிக் கொண்டனர். குலோத்துங்க சோழனுடைய ஆட்சியின் தொடக்கத்திலிருந்து சோழப் பேரரசின் பகுதியாக விளங்கிய வேங்கிநாட்டை, அவ்வரசனுடைய புதல்வர்களாகிய வீரசோழனும், இராசராச சோழ கங்கனும் ஆளுநர்களாக இருந்து ஆண்டுவந்தனர். ஆனுல், இப் பேரரசனுடைய ஆட்சியின் இறுதிக்காலத்தில் சாளுக்கிய அரசனுகிய ஆறும் விக்கிரமாதித்தன் வேங்கிநாட்டைத் தன்னுடைய ஆளுகைக்குட்படுத்தி விட்டான். மேற்கூறப்பெற்ற சோழப்பேரரசின் பகுதிகளை, குலோத்துங்க சோழன் இழந்து விட்டபோதிலும் இதனுல் சோழப்பேரரசிற்கு ஒரு நன்மையும் உண்டாயது எனக் கூறலாம். ஒரு பேரரசின் பெருமை அதனுடைய நிலப்பரப்பை மாத்திரம் பொறுத்தது ஆகாது. இராஜேந்திர சோழனுடைய ஆட்சியில் மிக்க வளர்ச்சியுற்ற சோழப்பேரரசைக் காப்பாற்றுவதற்காக அடிக்கடி போர்களில் ஈடுபட வேண்டியிருந்தது. அவ்வித போர்களினுல் உயிர்ச்சேதமும், பொருட்சேதமும் பெரும் அளவில் தோன்றின. போர்களினுல் நாட்டுமக்களுக்கு உண்டாகிய துன்பங்களும் பலவாகும். அத் துன்பங்கள் இப்பொழுது ஒருவாறுக முடிவுற்றன.

## வெளிநாட்டுறவு

சீனதேசத்து வரலாற்றுக் குறிப்புகளில், சோழநாட்டிலிருந்து 72 பேர் கொண்ட தூதுக்குழுவொன்று குலோத்துங்கனுடைய சபையிலிருந்து சீன தேசத்திற்குச் சென்றதாகக் கூறப்பெற்றுள்ளது. ஆயினும், இச் செய்தி குலோத்துங்க சோழனுடைய கல்வெட்டுகளில் காணப்பெறவில்லை. குலோத்துங்கன் காலத்தில் சோழநாட்டிற்கும் — கெடா

மலேயா முதலிய நாடுகளுக்கும் வியாபார உறவு செழித்து விளங்கியது. காம்போஜ நாட்டிற்கு குலோத்துங்க சோழன் சென்றதாகவும், அங்கிருந்து சீனப் பேரரசனுடைய தலைநகரத்திற்கும் விஜயம் செய்ததாகவும் அறிஞர் சுப்பிரமணியம் அவர்கள் கூறுவர்.[1] கங்கைகொண்ட சோழபுரத்துக் கோவிலில் காணப்பெறும் வடமொழிக் கல்வெட்டு ஒன்று, கன்னோஜி நாட்டு அரசன் கோவிந்தசந்திர தேவனுடைய கல்வெட்டுப் போல் இருக்கின்றமையாலும், அந் நாட்டில் வழங்கிய சூரிய தேவனின் வணக்கம் தென்னிந்தியாவில் பரவியதும், சோழப் பேரரசிற்கும்—கன்னோஜி நாட்டிற்கும் பல தொடர்புகள் நிலவியதை எடுத்துக் காட்டுகின்றன. சூரியனைத் தெய்வமாகக் கொண்டு வழிபடும் வழக்கம் கன்னோஜி நாட்டிலிருந்து தென்னிந்தியாவிற்குப் பரவியது என்று கொள்வோரும் உளர்.[2]

## குலோத்துங்க சோழனுடைய சீர்திருத்தச் செயல்கள்

'சுங்கத் தவிர்த்திருள் நீக்கி உலகாண்ட ஸ்ரீகுலோத்துங்க சோழதேவர்' என்று கல்வெட்டுகளில் புகழப்பெறுபவர் முதற் குலோத்துங்க சோழனேயாவர். ஆனால், எவ்வெப் பொருள்களின் மீது சுங்கம் தவிர்க்கப்பட்டது என்றும், அதனால் அரசாங்கத்திற்கு வருமானம் எவ்வளவு குறைந்தது என்றும் நாம் அறிந்துகொள்ள முடியவில்லை. கி. பி. 1086ஆம் ஆண்டில் இங்கிலாந்து நாட்டில், வெற்றிவீரனாகிய முதலாம் வில்லியம் என்ற அரசன் 'தீர்ப்புநாள்கணக்கு' என்ற ஒன்றை தயார் செய்த அதே ஆண்டில், சோழப் பேரரசிலும் நிலங்கள் எல்லாம் அளக்கப்பெற்று ஒழுங்குமுறை செய்யப்பெற்றன. குலோத்துங்க சோழன் மேற்கொண்ட திருநீற்றுச் சோழன் என்னும் பெயர் அவனுடைய சைவ சமயப்பற்றைத் தெற்றென எடுத்துக்காட்டுவதாகும். பரணி பாடுவதில் வல்லவராகிய ஜெயங்கொண்டார், குலோத்துங்கனுடைய அவைக்களப் புலவர் பெருமானாக விளங்கினார். தமிழிலும், தெலுங்கிலும் பல இயல் இசை நாடக நூல்கள் அக் காலத்தில் எழுதப்பெற்றன.

'வாளின் வன்மைகொண்டு போர்நடத்திப் பிறநாடுகளை வென்று தன்னுடைய பேரரசைப் பெருகச்செய்ய வேண்டுமென்ற கொள்கையைக் குலோத்துங்க சோழன் பின்பற்றவில்லை. பேரரசின் எல்லைகள் : குறைவுற்றபோதிலும், தன் குடைக்கீழ் வாழும் மக்கள் நல்வாழ்வு அடையவேண்டும்

1 Dr. N. Subramaniam, 'History of Tamil Nad', P. 219.

2 T. V. S. Pandarathar, Vol. II, P. 43.

என்ற கொள்கையுடையவன். இக் கொள்கையின் அடிப்படையில்தான் அவன் தன்னுடைய நாட்டைப் பாதுகாத்தான்,' என்ற பேராசிரியர் நீலகண்ட சாஸ்திரியாரின் கூற்று பொருள் படைத்ததாகும். அந்நிய நாடுகளை வென்று தன் பேரரசில் சேர்த்துக்கொள்வதை விட்டு, அரசியல் முறையை ஒழுங்கு படுத்துவதையே முக்கிய நோக்கமாகக் குலோத்துங்கன் கடைப்பிடித்தான்.

## பரகேசரி விக்கிரமசோழன் (1120—1136)

முதற்குலோத்துங்க சோழனுடைய மகனாகிய விக்கிரம சோழன் தன் தகப்பனுக்குப் பிறகு சோழப் பேரரசின் சக்கரவர்த்தியாக அமர்ந்தான். தன் தகப்பன் காலத்தில் இழந்துவிட்ட நாடுகளைத் திரும்பப் பெறுவதற்காக பல தற்காப்புப் போர்கள் நடந்தனவேயன்றி, மேன்மேலும் சோழப்பேரரசை பரவச்செய்வதற்கு இவ்வரசன் விரும்பவில்லை. மேலைச் சாளுக்கிய விக்கிரமாதித்தன் வென்றுகொண்ட வேங்கி நாட்டை மீண்டும் குலோத்துங்க சோழன் வென்று தன்னுடைய ஆட்சியின்கீழ்க் கொண்டுவந்ததாக நாம் கல்வெட்டுகளிலிருந்து அறிகிறோம். வேலாநாண்டு சோழ சிற்றரசர்களும், விக்கிரம சோழனுக்கு அடங்கி கப்பம் செலுத்தினர். மைசூர் மாநிலத்தில் உள்ள கங்கவாடியில் விக்கிரம சோழனுடைய கல்வெட்டுகள் பல காணப்பெறுகின்றமையால், அந் நாட்டை ஹொய்சள மன்னர்களிடமிருந்து திருப்பிப் பெற்றிருக்க வேண்டும் என்று நாம் உணருகிறோம்.[1]

ஆர்னல்டு டாயின்பி என்ற சிறப்புற்ற ஆங்கில வரலாற்றுப் பேராசிரியரின் கொள்கையின்படி, சாளுக்கிய — சோழ மன்னர்கள் தென்னிந்தியாவின் நாகரிகத்தைப் பாதுகாப்பதற்கென, சோழப்பேரரசை நிலைபெறச் செய்த பெருந்தலைவர்கள் என நாம் கொள்ளலாம். உலக வரலாற்றில் பல பேரரசுகள் தோன்றி நிலைபெற்று பின்னர் சிதறுண்டு போவது மறுக்கமுடியாத உண்மையாகும். பேரரசுகள் சிதைவுற்ற போதிலும், அப் பேரரசின் பாதுகாப்பில் தோன்றிய உயர்சமயங்கள் இன்றும் நிலைபெற்றுள்ளன. அவ்வுயர் சமயங்களைப் பரவச்செய்வதற்கேற்ற கோவில்களும் வளர்ந்துள்ளன. இவ்வித அளவுகோல்கொண்டு பார்த்தால், விக்கிரம சோழன் தன் ஆட்சியில் சைவம் என்ற உயர்சமயம் சோழப் பேரரசில் பரவுவதற்குத் தகுந்த நடவடிக்கைகள் எடுத்துக்

[1] T. V. S. Pandarathar, Op. Cit., P. 75

கொண்டான். சோழமன்னர்களுக்கு குலதெய்வமாக விளங்கிய தில்லை நடராசப் பெருமான் கோவிலில் பல சீர்திருத்தங்களைச் செய்தான். தில்லைச் சிற்றம்பலத்தைச் சூழ்ந்த திருச்சுற்று மாளிகை, கோபுரவாயில், கூடசாலை, பலிபீடம் முதலியவற்றை இவன் அமைத்ததாக அவனுடைய மெய்க்கீர்த்திகள் உணர்த்துகின்றன.

'தன்குல நாயகன் தாண்டவம் பயிலும்
செம் பொன்னம்பலம் சூழ்திரு மாளிகையும்
கோபுரவாசல் கூடசாலைகளும்
உலகு வலங்கொண்டு ஒளிவிளங்கு நேமி
குலவரை உதய குன்றமொடு நின்றென
பசும்பொன் வேய்ந்த பலிவளர் பீடமும்
விசும்பொளி தழைப்ப விளங்கு பொன்வேய்ந்து
இருநிலம் தழைப்ப இமையவர் களிப்ப
பெரிய திருநாள் பெரும்பெயர் விழாவெனும்
உயர் பூரட்டாதி உத்திரட்டாதியில்
அம்பலம் நிறைந்த அற்புதக் கூத்தர்
இம்பர் வாழ எழுந்தருளுவதற்கு
திருத்தேர்க் கோவில் செம்பொன் வேய்ந்து
பருத்திரள் முத்தின் பயில்வடம் பரப்பி
நிறைமணி மாளிகை நெடுந்திரு வீதிதன்
திருவளர் பெயரால் செய்து சமைத்தருளி
பைம்பொன் குழித்த பரிகலம் முதலாம்
செம்பொற் கற்பகத்தொடு பரிச்சின்னமும்
அளவில்லாத வொளிபெற அமைத்து'

என்னும் மெய்க்கீர்த்தியால் நன்கு அறியலாம். மேலே கூறப்பெற்றவை அன்றியும், தில்லையில் சிவகங்கை திருக்குளத்திற்கு மேற்குப்பகுதியில் உள்ள நூற்றுக்கால் மண்டபம் விக்கிரம சோழனுடைய காலத்தில் அமைக்கப்பெற்றதாகும். இம் மண்டபத்தை அரசனுடைய ஆணைக்கு ஏற்ப கட்டியவன் இவனுடைய படைத்தலைவன் அரும்பாக்கிழான் மணவிற் கூத்தன் காலிங்கராயன் என்பான் ஆவான். தில்லையிலிருந்து கிள்ளை என்னும் கிராமத்திற்கு ஒரு சாலையும், அக் கிராமத்தில் ஒரு மண்டபமும் அமைத்து, மாசித்திங்களில் மகநட்சத்திரத்தன்று தில்லை அம்பலவாணருடைய உருவச்சிலையைக் கொண்டுபோய்க் கடலில் தீர்த்தம் அளிப்பதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பெற்றன. இவ்வரசனுக்கு கங்கைகொண்ட சோழபுரமே தலைநகராக இருந்தது. பழையாறை என்ற

முடிகொண்ட சோழபுரம் இரண்டாவது தலைநகராக இருந்தது சிதம்பரம், காட்டுமன்னார் கோவில் முதலிய பெரிய ஊர்களில் அரண்மனைகளும், கொட்டகாரம் என்று வழங்கப்பெற்ற மண்டபங்களும் இருந்தன. விக்கிரம சோழன் அணிந்து கொண்ட 'தியாக சமுத்திரம்' என்ற பெயர், அவ்வரசன் தந்நலம், குடிநலம் கருதி செங்கோலோச்சியதைக் குறிக்கும். விக்கிரம சோழனுடைய அவைக்களப் புலவராகத் திகழ்ந்தவர் கவிச்சக்கரவர்த்தியாகிய ஒட்டக்கூத்தர் என்பவராவார். அவரால் இயற்றப்பெற்ற தக்கயாகப் பரணியும், மூவருலா என்ற நூலும் பல வரலாற்றுண்மைகளைத் தம்பால் கொண்டுள்ளன.

## இராஜகேசரி இரண்டாம் குலோத்துங்கன் (1336—1150)

கல்வெட்டுகளின் துணைகொண்டு இரண்டாம் குலோத்துங்கன் தில்லையம்பலத்திலுள்ள நூற்றுக்கால் மண்டபத்தில் முடிசூடிக் கொண்டமையை உணரக்கூடும். இன்னும், தில்லையில் நான்கு தேரோடும் வீதிகள் அமைத்தும், பற்பல மண்டபங்கள் கட்டுவித்தும் அந் நகரைச் சிறப்பித்தான். பேரம்பலத்தையும், உட்கோபுரத்தையும், திருச்சுற்று மாளிகையையும், மாமேரு போல பொன்மயமாக்கினன், எழுநிலைக் கோபுரங்கள் அமைத்தான். சிவகாமக்கோட்டம் மிகப்பெரியதாக அமைக்கப் பெற்றது. அவ்வம்மையார் திருவிழா நாட்களில் வீதிவலம் வருவதற்கு மிக்க எழில் பொருந்திய தேரொன்று செய்து அளிக்கப்பெற்றது. சிவகங்கை திருக்குளமும் இவ் வேந்தன் காலத்தில் அமைக்கப் பெற்றதாகும்.

தில்லைத் திருச்சித்திரகூடத்தில் இருந்த திருமாலின் உருவத்தைப் பெயர்த்தெடுத்து வங்காளக்குடாக் கடலிலோ அல்லது ஆற்றிலோ, குளத்திலோ இரண்டாம் குலோத்துங்கன் போகும்படி செய்ததாக ஒட்டக்கூத்தர் கூறியுள்ளார்.

'தில்லைத் திருமன்றின் முன்றில் சிறுதெய்வத்
தொல்லைக் குறும்பு தொலைத் தெடுத்து.'
(குலோத்துங்கன் உலா.)

'மூன்றில் கிடந்த கருங்கடல் போய்
முன்னைக் கடல்புக பின்னைத் தில்லை
மன்றிற்கு இடங்கண்ட கொண்டல் மைந்தன்.'
(தக்கயாகப் பரணி.)

இவ்வாறு இரண்டாம் குலோத்துங்கன், தில்லைத் திருமால் உருவத்தைப் பெயர்த்து எடுத்ததற்குக் காரணம் யாது? சைவ

சமயத்தில் அவன்கொண்ட பற்று காரணமாகுமா அல்லது வைணவ சமயத்தையும், வைணவர்களேயும் வெறுத்து இச் செய்கையைப் புரிந்தனனு என்று ஆராய்வது அமைவுடைத் தாகும். வைணவ ஆசாரியராகிய இராமானுஜரும் ஸ்ரீரங்கத்தை விட்டகன்று மைசூரில் உள்ள மேலக்கோட்டை அல்லது திருநாராயணபுரத்திற்கு தப்பிச்சென்ருர் என்றும் அறிகிருேம். ஆகையால், வைணவ சமய நூல்களாகிய திவ்யசூரி சரிதம், குருபரம்பரை, கோயில்ஒழுகு முதலிய நூல்கள், குலோத்துங்க சோழனுக்கு, 'கிருமிகண்ட சோழன்' என்ற பரிகாசப் பெயரிட்டு அழைத்தாக நாம் கேள்விப் படுகிருேம்.

இவற்றின் உண்மையை ஆராயுமிடத்து இரண்டாம் குலோத்துங்கன் வைணவ சமயத்தின்மீதோ அல்லது வைணவர்கள்மீதோ சமயவெறி கொண்டு மேற்கூறப்பெற்ற செய்கைகளே இயற்றியதாகக் கூறமுடியாது. குலோத்துங்க சோழனுடைய ஆட்சியில் சமயப் போர்களோ அல்லது கலகங் களோ நடந்ததாகக் கூறுவதற்கேற்ற ஆதாரங்களில்லே சைவ சமயத்தில் குலோத்துங்கனுக்கு ஆழ்ந்த பற்று நிறைந்திருந்த போதிலும் வைணவ சமயத்தை வெறுத்தவனுகக் கருதுவதற்கு இடமில்லே. உண்மையென்ன வெனில், இரண்டாம் குலோத்துங்கன் மேற்கூறப்பெற்றவாறு தில்லேயிலுள்ள அம்பலவாணர் கோவிலுக்குப் பல புதிய திருப்பணிகள் செய்தபொழுது, திருச்சித்திரகூடத்தைச் சேர்ந்த வைணவத் தலேவர்கள் அரசனுக்கு இடையூறு விளேவித்திருக்க வேண்டும். அரசனே எதிர்த்து, சிவன் கோவிலுக்கு மாத்திரம் திருப்பணிகள் செய்யக்கூடாதென்று தடுத்திருக்கலாம். இச் செய்கையினுல் சீற்றம்கொண்ட குலோத்துங்க சோழன், திருச்சித்திரகூடத்திலிருந்த திருமால் உருவத்தைப் பெயர்த்துக் கொண்டுபோய் வேறு இடங்களில் போட்டுவிடும்படி ஆணேயிட்டிருக்க வேண்டும்.

குலோத்துங்கனுடைய ஆட்சியில் சோழப்பேரரசில் எவ்விதமான உள்நாட்டு வெளிநாட்டுப் போர்களின்றி சுமுகமான முறையில் அமைதி நிலவியது. சைவ சமயத்திற்கு இருதயம்போல் விளங்குகின்ற தில்லேத் திருக்கோவிலுக்குப் பலவித திருப்பணிகளும், திருவிழாக்களும் எடுப்பதற்கு ஏற்ற அறக்கட்டளேகள் பல வழங்கப்பெற்றன. தில்லேநகர் சைவர் களுக்கு கோவில் என்ற சிறப்புப்பெயர் பெற்றது. இரண்டாம் குலோத்துங்கனுக்கு வழங்கிய 'ஞான கம்பீரன்,' 'நித்யகீத

பிரமோகன்' என்ற பெயர்கள், அவன் சைவ சமயத்தைப் பின்பற்றினுன் என்பதை மெய்ப்பிக்கின்றன.

## பரகேசரி இரண்டாம் இராஜராஜன் (1150—1163)

இரண்டாம் குலோத்துங்கனுக்குப் பிறகு அவனுடைய புதல்வன் இரண்டாம் இராஜராஜன் சோழப்பேரரசனுக பதவி ஏற்ருன். வடக்கில் கோதாவரி நதியிலிருந்து, மேற்கே சேலம், கோலார் பகுதிகளிலும் அவனுடைய கல்வெட்டுகள் காணப் பெறுகின்றன. இவற்ருல் இராஜராஜனுடைய ஆட்சியில் சோழப்பேரரசின் எல்லேகளே நாம் உணர்ந்துகொள்ள முடிகிறது. தன்னுடைய பாட்டனும், தகப்பனும் போன்று போர்களைத் தவிர்த்து அயல்நாட்டரசர்களோடும், தனக்கு அடங்கிய சிற்றரசர்களோடும் அமைதியான முறையில் தன்னுட்சியை நடத்தி நற்பெயரெடுத்தான். இராஜராஜனுக்கு ஆசிரியராக விளங்கிய ஒட்டக்கூத்தரிடம் தமிழும், கேசவ சுவாமி என்ற வடமொழிப் புலவரிடம் வடமொழியும் கற்றுணர்ந்து இவ்விரு மொழிகளிலும் சிறந்த புலமைபெற்று விளங்கினுன். தன் தகப்பன் இரண்டாம் குலோத்துங்கன் வைணவ சமயத்தார்களிடம் கோபங்கொண்டு சில தீய செயல்களைச் செய்த கொள்கைகளைக் கைவிட்டு, அச் சமயத்தினரை தன்வயப்படுத்த முயன்று வெற்றியும் பெற்ருன். சேர நாட்டிலும், பாண்டிய நாட்டிலும் நடந்த சில கலகங்களைத் தவிர, சோழப் பேரரசில் அமைதியும் இன்பமும் நிலே பெற்றிருந்தன. இராஜராஜன் ஆட்சியில் காவிரிநதியில் போதிய அளவிற்குத் தண்ணீர் வராமல் சோழநாட்டின் உழவுத்தொழில் சிறுமையடைந்தது. அந்த தடங்கல் இயற்கையினுல் உண்டாகியதா அல்லது சோழநாட்டின் விரோதிகளால் ஏற்பட்டதா என்று அறியமுடியவில்லே. எங்ஙனமாயினும், இராஜராஜன் அந்த தடங்கலே நீக்கி மீண்டும் காவிரியில் போதுமான நீர் வரும்படி செய்து உணவுப் பஞ்சம் ஏற்படாதவாறு தகுந்த நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டான்.

கங்கைகொண்ட சோழனுடைய ஆட்சியிலிருந்து தலே நகராக விளங்கிய கங்கைகொண்ட சோழபுரத்தை விடுத்து கும்பகோணத்திற்கு மேற்கில் அமைந்துள்ளதும், இக் காலத்தில் தாராசுரம் என்று வழங்கப் பெறுவதுமாகிய இராஜராஜபுரத்திற்கு தன் தலேநகரை மாற்றினுன். இப்பொழுதும் தாராசுரத்தில் நிலேபெற்றுள்ள இராஜராஜேச்சுரம் என்ற சிவன்கோவில்

சோழர்காலத்திய கட்டட அமைப்பிற்கும், சிற்பத் திறமைக்கும் எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது.

தன்னுடைய முற்காலத்திய பெருமையையெல்லாம் இழந்து காணுர் கேட்பாரில்லாமல் இருந்தபோதிலும், இக் கோவில் சைவசமய வரலாற்றிலும், அருங்கலைகளை தன்னுள் அடக்கிக் கொண்டு இருப்பதிலும் பெரியதொரு கலைக்களஞ்சியமாக நிற்கிறது. இக் கோவிலின் பிரகாரங்களில் சைவசமயக் குறவர்களாகிய தனியடியார் அறுபத்திமூவரும், தொகையடியார் ஒன்பதின்மரும் ஆகிய எழுபத்திரண்டு திருத்தொண்டர்களாகிய நாயன்மார்களுடைய வரலாறு சிற்ப வடிவில் அமைந்துள்ளதை நாம் கண்ணுல் கண்டு களித்தல் வேண்டும் மூன்ரும் குலோத்துங்கனுடைய முதலமைச்சராகவும், சிறந்த கவியரசராகவும் திகழ்ந்து பெரியபுராணம் என்ற திருத்தொண்டர் புராணத்தைப் பக்திச்சுவை பொருந்த எழுதிய சேக்கிழார் பெருமான், இக்கோவிலில் காணப்பெறும் சிற்பங்களை ஆதாரமாகக் கொண்டு தன்னுடைய நூலை இயற்றி இருத்தல் வேண்டும். இராஜராஜ சோழனுலா என்ற பிரபந்தத்தை இயற்றிய ஒட்டக்கூத்தர், தன்னுடைய தக்கயாகப் பரணியை இராஜராஜபுரத்தில் எழுதி இக் கோவிலில் அரங்கேற்றம் செய்ததாக நாம் அறிகிறோம். சோழேந்திர சிங்கன், தெய்வப் பெருமாள், சொக்கப்பெருமாள், இராசகம்பீரன் என்ற பட்டப் பெயர்களை இராஜராஜ சோழன் மேற்கொண்டனன். மேற்கூறப்பெற்ற கலைக்கோவிலில் 'இராசகம்பீரன் மண்டபம்' என்ற கலைக்கூடம், இரண்டாம் இராஜராஜனுடைய நினைவுச் சின்னமாக விளங்குகிறது.

## இராஜராஜ சோழனுடைய இறுதிக்காலம்

கி. பி. 1163ஆம் ஆண்டில் கொடியதொரு நோய்வாய்ப்பட்டு இராஜராஜன் இறக்கும் தருவாயில் இருந்தனன். அவனுடைய குமாரர்கள் இருவர் இருந்தபோதிலும் அவர்கள். இரண்டாண்டும், ஓராண்டும் நிரம்பிய பாலகர்களாக, இருந்தனர். அரியணையில் அமர்ந்து ஆட்சிபுரிவதற்கு ஏற்ற பருவமுடையவரல்லர். ஆகையால், இராஜராஜ சோழன் கங்கை கொண்ட சோழபுரத்தில் வாழ்ந்த தன்னுடைய தாயத்தினனாகிய நெறியுடைப் பெருமாள் என்பாரின் புதல்வன், எதிரிலிப் பெருமாள் என்பவனை அழைத்து தனக்குப்பின் சோழப் பேரரசனுக நியமித்தான். அந்த எதிரிலிப் பெருமாள், இரண்டாம் இராசாதிராசன் என்ற அபிடேகப் பெயர்பூண்டு சோழப்பேரரசின் சக்கரவர்த்தியாயினன்.

ஆனால், இரண்டாம் இராசாதிராசன் சோழப்பேரரசனாக, முடிசூட்டப் பெறுவதற்குமுன் பல சங்கடங்கள் தோன்றின. இவ்விடைஞ்சல்களையெல்லாம் நீக்கி அமைதியை நிலைநாட்டி, எதிரிலிப் பெருமாளையும், இரண்டாம் இராஜராஜனுடைய குழந்தைகள் இருவரையும் காப்பாற்றியவர் பெருமான் நம்பி பல்லவராயர் என்ற தளபதியாவர். தான் இறப்பதற்குமுன் தன்னுடைய இரு குழந்தைகளையும், மற்ற குடும்பத்தினரையும் பல்லவராயரிடம், இராஜராஜன் அடைக்கலமாக ஒப்படைத்தான். அவ்வரசன் எதிரிலிப் பெருமாளை தனக்குப்பின் சோழப் பேரரசனாக நியமித்திருந்த போதிலும், அவனுக்கு எதிராகப் பல வாரிசுதாரர்கள் தோன்றினர். சோழ அரசியல் அதிகாரிகளும் தங்களுக்குள் ஒற்றுமையின்றிக் கலகம் செய்வதற்குத் திட்டமிட்டிருந்தனர். இவ்விதக்கலகங்களையும், எதிர்ப்புகளையும் நீக்கி அமைதியை நிலைநாட்டுவதற்குப் பெருமான் நம்பி பல்லவராயருக்கு நான்கு ஆண்டுகளுக்குமேல் சென்றது. பின்னர், எதிரிகளையெல்லாம் ஒருவகையாக அமைதிப்படுத்தி எதிரிலிப் பெருமாளுக்கு இராசாதிராசன் என்ற அபிடேகப் பெயருடன் சோழப்பேரரசனாக முடிசூட்டினார்.

ஆயினும், இரண்டாம் இராஜராஜ சோழன் தன்னிடம் அடைக்கலமாக ஒப்படைத்த குமாரர்கள் இருவரும் இராஜராஜபுரத்தில் இருந்தால் அவர்களுடைய உயிர்க்கு ஆபத்து ஏற்படும் என்று பல்லவராயர் உணர்ந்தார். அக் குமாரர்களையும், மற்றையோரையும் காப்பாற்றுவதில் தன் கடமையையுணர்ந்து பத்திரமானதோர் இடத்திற்குக் கொண்டுபோய் தகுந்த பாதுகாப்புடன் போற்றி வந்தார். பதினைந்து ஆண்டுகளுக்குப் பிறகு அந்த இரு அரசகுமாரர்களில் மூத்தவன், இரண்டாம் இராசாதிராசனுக்குப் பிறகு மூன்றாம் குலோத்துங்கன் என்ற அபிடேகப் பெயரொடு சோழப் பேரரசிற்கு சக்கரவர்த்தியாயினன்.

# 13. இராஜகேசரி இரண்டாம் இராசாதிராசன் (1163–1178)

இரண்டாம் இராசாதிராசனுக்கு, கரிகாலன் என்பதோர் பெயரும் வழங்கியது. இவனுடைய ஆட்சிக்காலத்தில் பாண்டிய நாட்டில் அரசுபுரிந்த பாண்டிய அரசர்களுக்கிடையே கொடியதொரு உள்நாட்டுப் போர் தொடங்கி நெடுநாள்வரை நீடித்தது. இந்த உள்நாட்டுப் போரைப்பற்றி உணர்ந்து கொள்வதற்கு இலங்கை வரலாருகிய மகாவமிசம் என்ற நூலும், இராசாதிராசன் ஆட்சிக்காலத்தில் பொறிக்கப்பெற்ற கல்வெட்டுகளும் மிக்க துணைசெய்கின்றன. பன்னிரெண்டாம் நூற்ருண்டின் இடைப்பகுதியில் பாண்டிய நாடு ஐந்து சிற்றரசாகப் பிரிந்து, இரண்டு பேரரசுகளுக்கு அடங்கியிருந்த தெனத் தோன்றுகிறது. மதுரை நகரைத் தலைநகராகக் கொண்டு பராக்கிரம பாண்டியனும், திருநெல்வேலியைத் தலைநகராகக் கொண்டு குலசேகர பாண்டியனும் அரசு செலுத்தி வந்தனர். இவ்விரு அரசர்களுக்குமிடையே தோன்றிய விரோத மனப் பான்மையால் குலசேகர பாண்டியன் மதுரையின்மீது படையெடுத்து அந்த தலைநகரை முற்றுகையிட்டான். பராக்கிரமபாண்டியன் இலங்கை மன்னனுகிய பராக்கிரமபாகுவின் துணையை நாடவே, அவ்வரசனும் அவனுக்கு உதவிசெய்ய முன்வந்தனன். ஆனல், இலங்காபுர தண்டநாயகன் என்ற தளபதி தன்னுடைய சேனையுடன் பாண்டிய நாட்டில் கால் வைப்பதற்குமுன், குலசேகர பாண்டியன் மதுரை நகரைத் தன்வசப்படுத்தி, பராக்கிரம பாண்டியனையும் அவனுடைய சுற்றத்தாரையும் கொலை செய்வித்து, பாண்டியநாடு முழுவதையும் தன்னுடையதாக்கிக் கொண்டான்.

ஆயினும் இலங்கை நாட்டரசனுகிய பராக்கிரமபாகு, தன்னுடைய சேனுதிபதி இலங்காபுர தண்டநாயகனைத் தொடர்ந்து போரை நடத்தும்படியும், இறந்துபோன பராக்கிரம பாண்டியனுடைய புதல்வரில் ஒருவனை மதுரைக்கு அரசனுக்கும் படியும் உத்தரவிட்டான். குலசேகர பாண்டியனும் இலங்கை

நாட்டுப் படைகளை எதிர்த்து தன்னுடைய முழுபலத்தையும் காட்டிப் போரிட்டான். ஆயினும் இரண்டு போர்களில் இலங்கைப் படைகளிடம் தோல்வியுற்றான். இந்த உள்நாட்டுக் கலகம் தொடர்ந்து நடந்தமையால் இலங்காபுர தண்டநாயகன், மேலும் தன்னுடைய நாட்டிலிருந்து போர்ப்படைகளைத் தருவித்துப் போரைத் தொடர்ந்து நடத்தினான். குலசேகர பாண்டியன் சோழப் பேரரசனாகிய இரண்டாம் இராசாதி ராசனுடைய துணையை நாடினான். சோழ மன்னனும் குலசேகரனுக்குதவி செய்ய முன்வந்து, பெருமான் நம்பி பல்லவராயர் தலைமையில் ஒரு பெருஞ்சேனையொன்றை அனுப்பிவைத்தான்.

தொடக்கத்தில் இலங்கைநாட்டுப் படைகளுக்குச் சில வெற்றிகள் கிடைத்த போதிலும், பெருமான் நம்பியின் சோழப்படைகள், இலங்கைப் படைகளைப் பல இடங்களில் தாக்கி, இலங்காபுர தண்டநாயகனையும் சிறைப்படுத்தி உயிரிழக்கும்படி செய்தன. இலங்கைநாட்டுச் சேனாவீரர் களுடைய தலைகளை மதுரைநகர் நுழைவாயிலில் தொங்கவிடும் படி செய்தான். குலசேகர பாண்டியன் மீண்டும் மதுரையில் அரசனாக்கப் பெற்றான். இதைக்கண்ட பராக்கிரமபாகு, குலசேகர பாண்டியனை அரியணையைவிட்டு அகற்றுவதற்கு ஏற்றதொரு சேனையைப் பாண்டிய நாட்டிற்கு அனுப்பி, இறந்துபோன பராக்கிரம பாண்டியனுடைய மகன் வீர பாண்டியனை மதுரையில் அரசனாக்கத் திட்டமிட்டான். இச் செய்கையைக் கண்ட பெருமான் நம்பி பல்லவராயர், இலங்கையில் பராக்கிரமபாகுவின் எதிரியாகிய ஸ்ரீவல்லபன் என்பானுக்கு உதவிசெய்து இலங்கை அரசிற்கு ஒரு போட்டியை உண்டாக்கினார். பாண்டிய நாட்டிலிருந்து ஸ்ரீவல்லபனுக்கு உதவியாக பெரியதொரு சேனையும் அனுப்பப் பெற்றது. இந்த சோழப்படைகள் இலங்கைத் தீவில் காலூன்றிப் பராக்கிரமபாகுவின் சேனையைப் பல இடங்களில் தோற்கடித்துப் பல முக்கியமான இடங்களைக் கைப்பற்றிக் கொண்டன. பராக்கிரமபாகுவும் தான் வீரபாண்டியனுக்கு உதவி செய்வதால் எவ்வித பயனுமில்லை என்பதை உணர்ந்து, குலசேகர பாண்டியனுடன் சந்து செய்துகொண்டு அவனைப் பாண்டியமன்னனாக ஒப்புக்கொண்டான்.

பின்னர், பாண்டிய நாட்டில் மற்றொருவிதமான அரசியல் சூதாட்டம் தலையெடுத்தது. சோழப் பேரரசனுடைய உதவியினால் அரியணை ஏறிய குலசேகர பாண்டியன், நன்றி

மறந்து இலங்கையரசன் பராக்கிரமபாகுவுடன் சேர்ந்து கொண்டு, இராசாதிராசனுக்கு எதிராகக் கலகம் செய்தனன். குலசேகர பாண்டியனுடைய நன்றி மறந்த செயலைக்கண்ட இராசாதிராசன், தன்னுடைய தானைத்தலைவராகிய அண்ணன் பல்லவராயர் என்பாரை ஒரு சேனையுடன் அனுப்பி, குலசேகர பாண்டியனை அரியணையிலிருந்து நீக்கி மீண்டும் வீரபாண்டியன் அப் பதவியைப் பெறும்படி ஆணையிட்டான். சோழப் பேரரசனின் ஆணையின்படி குலசேகர பாண்டியன் தன்னுடைய பதவியை இழந்து, வீரபாண்டியன் அரசுரிமையடையும்படி நேர்ந்தது. இரண்டாம் இராசாதிராசன் ஆட்சிக்காலம் முழுவதிலும் வீரபாண்டியனே சோழப்பேரரசிற்கு அடங்கி பாண்டிய நாட்டை ஆண்டுவந்தனன்.

மேற்கூறப்பெற்ற, பாண்டிய நாட்டில் நடந்த உள்நாட்டுக் கலகம் கி. பி. 1167 முதல் 1175 வரையில் நடைபெற்றிருக்க வேண்டும்.[1] மதுரைமண்டலத்திலும், இலங்கையிலும் சோழப் படைகள் அடைந்த வெற்றிகளுக்கறிகுறியாக இரண்டாம் இராசாதிராசன், 'மதுரையும் ஈழமுங் கொண்ட கோ இராச கேசரி' என்ற பட்டத்தை மேற்கொண்டனன்.

## பரகேசரி மூன்றும் குலோத்துங்க சோழன் (1178—1218)

பரகேசரி இரண்டாம் இராஜராஜன் (1150—1163) இறக்குந் தருவாயில் தன்னுடைய இரு குழந்தைகளைப் பெருமான் நம்பி பல்லவராயரிடம் அடைக்கலமாகக் கொடுத்து வளர்க்கும்படி செய்தான் என்று முன்னர் கூறினோம். அக் குழந்தைகளில் மூத்தவனே இப்பொழுது மூன்றும் குலோத்துங்கன் என்ற அபிடேகப் பெயருடன் சோழப்பேரரசிற்குச் சக்கரவர்த்தி யாயினன். இவ்விளவரசன் அரசபதவியை வகித்தபொழுது பதினெட்டு வயது நிரம்பிய இளமைநலம் பொருந்திய அரசனுகையால் மேலும் நாற்பதாண்டுகள் வரையில் சோழப் பேரரசனுக விளங்கினுன். இம் மன்னனுடைய மெய்க்கீர்த்தி களும், கல்வெட்டுகளும் சோழப்பேரரசு முழுவதிலும் பரந்து காணப்பெறுகின்றன. அவற்றின் துணைகொண்டு இவ் வரசனுடைய வரலாற்றை உணர்வது அமைவுடைத்தாகும்.

## மூன்றும் குலோத்துங்கனும்—பாண்டிய நாடும்

முன் அதிகாரத்தில் இரண்டாம் இராசாதிராசன் பாண்டிய நாட்டில் நடைபெற்ற உள்நாட்டுப் போரில் ஈடுபட்ட

[1] T. V. S. Pandarathar, Vol. II, P. 135

வரலாற்றைப்பற்றி நாம் அறிந்து கொண்டோம். சோழப் பேரரசன் இராசாதிராசன், குலசேகர பாண்டியனை அரியணையிலிருந்து நீக்கிவிட்டு வீரபாண்டியன் என்பானை பாண்டிய நாட்டின் அரசனாக்கினான். இப்பொழுது மூன்றாம் குலோத்துங்க சோழன் ஆட்சியின் தொடக்கத்தில், குலசேகர பாண்டியனுடைய மகனாகிய விக்கிரம பாண்டியன் என்பான் சோழப் பேரரசனிடம் தஞ்சம் புகுந்து, தனக்குப் பாண்டிய நாட்டின் அரசுரிமையை அளிக்கும்படி வேண்டிக்கொண்டனன். மேலும், பாண்டிய நாட்டை ஆண்டுவந்த வீரபாண்டியன், பாண்டிய அரசர்களுடைய வழக்கத்தைப் பின்பற்றி, சோழமன்னர்கள் செய்த நன்றியை மறந்து சிங்கள மன்னனுடன் சேர்ந்து கொண்டு குலோத்துங்க சோழனிடம் பணியாது இருந்தான். வீரபாண்டியனுடைய கலகத்தை அடக்குவதற்கு இதுவே தகுந்த தருணமென்றுணர்ந்த குலோத்துங்க சோழன், விக்கிரம பாண்டியனுக்கு உதவியாக சோழப்படைகளை அனுப்பினான். சோழப் படைகட்கும், பாண்டிய சேனைக்கும் மதுரைக்கு அருகில் நடந்த போரில் வீரபாண்டியனும், அவனுக்கு உதவியாக வந்த சிங்கள வீரர்களும் முற்றிலும் தோல்வி அடைந்தனர். வீரபாண்டியன் உயிர்தப்பி சேரநாட்டிற்கு ஓடி ஒளிந்து கொண்டனன். அவனுக்குப் பதிலாக விக்கிரம பாண்டியன் அரசுரிமை எய்தினன்.

ஆயினும், தோல்வியடைந்த வீரபாண்டியன், சேரநாட்டு மன்னனுடைய உதவிபெற்று மீண்டும் தன்னுடைய நாட்டு ஆட்சியைப் பெறும் நோக்கத்தோடு மதுரையின்மீது படையெடுத்தான். விக்கிரம பாண்டியனைக் காப்பதற்கு இரண்டாவது முறையாக பாண்டிய நாட்டிற்கு சோழப் படைகளை குலோத்துங்கன் அனுப்பவேண்டி வந்தது. வீரபாண்டியனுக்கும், சோழச்சேனைக்கும் கொடுமையான போர் நடந்தது. பாண்டியனுக்கு உதவியாக வந்த சேரநாட்டுப் படைகள் சிதறியோடின. இரண்டாவது தடவையாக தன்னுடைய அரசையும், சேனையையும் இழந்த வீரபாண்டியன் மீண்டும் சேரமன்னனிடம் அடைக்கலம் புகுந்தனன். அச் சேரமன்னன் குலோத்துங்க சோழனின் பேராண்மையையும், வன்மையையும் சீர்தூக்கி—சோழப் பேரரசனுடன் போர்புரிந்து வெற்றிபெறுவது இயலாததொன்று என்று உணர்ந்தனன். சேரமன்னன், வீரபாண்டியனையும் அழைத்துக்கொண்டு குலோத்துங்க சோழனிடம் தஞ்சம் புகுந்து தங்களைக் காப்பாற்றும்படி வேண்டி நின்றான். குலோத்துங்க சோழனும் அவர்களுடைய

குற்றங்களை மன்னித்து ஆதரவளித்து, பாண்டிய நாட்டில் ஒருபகுதியை ஆண்டுவரும்படி ஆணையிட்டனன்.

கி. பி. 1190ஆம் ஆண்டில் விக்கிரம பாண்டியன் விண்ணுலகை எய்தினன். அவன் மகன் சடையவர்மன் குலசேகர பாண்டியன் மதுரையில் அரசுரிமையெய்தினன். தன் முன்னோர்களைப்போல சடையவர்மன் குலசேகர பாண்டியனும் சோழப்பேரரசன் செய்த நன்றியை மறந்து திரை செலுத்தாது காலம் கழித்தமையால், மூன்றாவது முறையாக மூன்றாம் குலோத்துங்கன் பாண்டிய நாட்டின்மீது படையெடுக்க வேண்டிவந்தது. குலசேகர பாண்டியனுக்கும், சோழப்படைகட்கும் மட்டியூர், கழிக்கோட்டை என்ற இடங்களில் பெரும் போர்கள் நடைபெற்றன. குலசேகரன் முற்றிலும் தோல்வியுற்று நாட்டைவிட்டு ஓடவேண்டி வந்தது. குலோத்துங்க சோழன் மதுரைநகரைக் கைப்பற்றி வீராபிடேகமும் விசயாபிடேகமும் செய்துகொண்டு மதுரைமண்டலத்தின் பெயரை சோழ—பாண்டிய மண்டலம் என மாற்றியமைத்தனன்.

சேர, சோழ, பாண்டிய நாடுகள் மூன்றிலும் குலோத்துங்க சோழனுடைய இறைமை அதிகாரம் நிலைபெற்றிருந்தமையால், 'திரிபுவன வீரதேவன்' என்ற பட்டத்தையும் மேற்கொண்டான். திருவாலவாயிலில் கோவில்கொண்டுள்ள மீனாட்சி—சுந்தரேச்வர தேவருக்குப் பல திருப்பணிகளும், நன்கொடைகளும் அளித்து அவருடைய அருளையும் பெற்றனன்.

## குலோத்துங்க சோழனுடைய மற்ற வெற்றிகள்

குலோத்துங்கன் காலத்தில் கொங்குநாட்டை சேர மரபைச் சேர்ந்த சிற்றரசர்கள் ஆண்டுவந்தனர். இச் சிற்றரசர்கள் கருவூரைத் தங்களுடைய தலைநகராகக் கொண்டிருந்தனர் கொங்குநாட்டுச் சிற்றரசன் குலோத்துங்கனுக்கு திரை செலுத்தாது காலந்தாழ்த்தமையால் கருவூரின்மீது படையெடுத்து, அந் நகரைக் கைப்பற்றி அங்கு சோழகேரளன் என்னும் பெயருடன் விசயமாமுடி சூடினான் என்று கல்வெட்டுகளில் கூறப்பெற்றுள்ளது. தோல்வியடைந்த கொங்கு வேந்தன், சோழவேந்தனிடம் அடைக்கலம் புகவே அவனுக்குரிய அரசளித்து முடிவழங்கினான். இதனால் கருவூருக்கு 'முடிவழங்கு சோழபுரம்' என்ற பெயர் வழங்குவதாயிற்று.

நெல்லூரைத் தலைமை நகராகக் கொண்டு ஆந்திரநாட்டுப் பகுதியை ஆண்டுவந்த தெலுங்குச்சோழ சிற்றரசர்கள், காஞ்சிபுரத்தின்மீது படையெடுத்து அந் நகரைத் தங்கள்

வசப்படுத்தியிருந்தனர். குலோத்துங்கன் அவர்களிடமிருந்து காஞ்சிபுரத்தை வென்று தன்னடிப்படுத்தினான். வாரங்கல் நாட்டுக் காகதீய மன்னர்கள் வேங்கிநாட்டின்மீது படை யெடுத்ததையும் தடுத்து அவர்களைத் தோற்கடித்தான். இலங்கைநாட்டை மீண்டும் தன்னாட்சிக்கு உட்படுத்த குலோத்துங்கன் எடுத்துக்கொண்ட முயற்சிகள் பலனளிக்க வில்லை.

மூன்றும் குலோத்துங்கனுடைய கல்வெட்டுகள் தெற்கே குமரிமுனையிலிருந்து, வடக்கேயுள்ள வேங்கிநாடு வரையில் காணப்பெறுவதால், சேரநாடு, பாண்டியநாடு, கொங்கு, கங்கம், தெலுங்கு முதலிய நாடுகளிலும் சோழப்பேரரசு பரவியிருந்த தெனக் கொள்ளலாம். ஆகையால், குலோத்துங்கன் காலத்தில் சோழப்பேரரசு நிலைகுன்றாமல் சிறப்புற்றிருந்தது என அறியலாம். திரிபுவனத்திலும், திருவாரூரிலும் காணப்பெறும் கல்வெட்டுகள், மூன்றாம் குலோத்துங்கனை 'தில்லைச் சிற்றம்பல வாணருடைய ஏக பக்தன்' என்றும், 'தம்பிரான் தோழன்' என்றும் போற்றிப் புகழ்கின்றன. இவற்றாலும், இவ்வரசன் எடுப்பித்த திருக்கோவில்களைக் கொண்டும், மூன்றும் குலோத்துங்கன் சைவசமய வரலாற்றில் ஒப்புயர்வற்ற பெருவேந்தனாக விளங்கினான் என்று நாம் உய்த்துணரலாம்.

குடுமியான்மலை, திரிபுவனம் ஆகிய இரண்டிடங்களில் காணப்பெறும் கல்வெட்டுகள் குலோத்துங்கன் எடுப்பித்த திருக்கோவில்களைப்பற்றிக் கூறுகின்றன. திருவிடைமருதூருக்கு அருகிலுள்ள திரிபுவன வீரேச்சுரம் என்னும் கோவில் சிற்பத் திறத்திலும், வனப்பிலும், பிற்காலச்சோழர் காலத்துக் கோவில் களுக்கு ஓர் எடுத்துக்காட்டாக விளங்குகிறது. தில்லையம் பதியில் பேரம்பலம் பொன்வேய்ந்தமையும், முகமண்டபம், மூன்றாம்பிராகாரம், சிவகாமக்கோட்ட கோபுரம் முதலியனவும் மூன்றாம் குலோத்துங்கன் காலத்தில் அமைக்கப்பெற்றனவாகும். திரிபுவன வீரேச்சுரத்திலும், தில்லையில் உள்ள பேரம்பலத்திலும் மூன்றாம் குலோத்துங்கனுடைய உருவச்சிலைகள் காணப் பெறுகின்றன. திருவாரூரில் உள்ள கீழைக் கோபுரத்தில் காணப்பெறும் உருவச்சிலைகளும் அவற்றை ஒத்துள்ளன. திருவாரூரில் கிழக்குக் கோபுரமும், சபாமண்டபமும், தில்லையில் உள்ள ஆயிரக்கால் மண்டபமும் மூன்றாம் குலோத்துங்கன் ஆட்சியில் அமைக்கப்பெற்றவையெனக் கருதப்படுகிறது. வைணவ ஆலயங்களுக்கும், சமணப் பள்ளிகளுக்கும் குலோத்துங்கன் பல நன்கொடைகளை வழங்கியுள்ளான்.[1]

1 T. V. S. Pandarathar, Vol. II, PP. 161—63

## குலோத்துங்கன் காலத்தில் இலக்கியத்தின் நிலை

மூன்றும் குலோத்துங்கனுடைய அவைக்களப் புலவராக விளங்கியவர் வீராந்தப் பல்லவரையர் ஆவர். நேமிநாதம், வச்சணந்திமாலை என்ற தமிழிலக்கண நூல்களை இயற்றிய குணவீர பண்டிதரும் இக் காலத்தில் வாழ்ந்தவரே. வட திருவாலங்காட்டில் கிடைத்த கல்வெட்டொன்று, 'அரும்பாக்க முடையான் அருள்நிலை விசாகன்' என்பார் மகாபாரதத்தைத் தமிழில் இயற்றிய செய்தியைப்பற்றிக் கூறுகிறது. ஆனல், இந்த தமிழ்நூல் இப்பொழுது கிடைக்கவில்லை. தமிழிலக்கணக் கனத்தைக் கற்போருக்கு இன்றியமையாத நூலாகிய நன்னூலை இயற்றிய பவணந்தி முனிவர், குலோத்துங்க சோழனுக்கு அடங்கிய 'அருங்கலைவிநோதன் அமராபரணன்' என்று புகழப் பட்ட கங்கபாடியை ஆண்ட சீயகங்கனல் ஆதரிக்கப்பெற்ருர்

சைவ சமயத்திற்கும், தமிழ்மொழியின் வளர்ச்சிக்கும் குலோத்துங்கன் செய்த பெருந்தொண்டு, சேக்கிழார் அடிகளைக் கொண்டு பெரியபுராணம் என்னும் திருத்தொண்டர் புராணத்தை இயற்றி தமிழுலகத்திற்குத் தந்தமையாகும். சேக்கிழாரடிகள் தாமியற்றிய பெரியபுராணத்தில் மூன்றும் குலோத்துங்கனை 'அநபாயச் சோழன்' என்ற பெயரில் பன்னிரெண்டிடங்களில் குறிப்பிட்டுள்ளார். மூன்றும் குலோத்துங்கனுக்கு 'வீர ராஜேந்திரன், முடிவழங்கு சோழன், சோழ கேரள தேவன், திரிபுவன வீரதேவன், முடித்தலைகொண்ட பெருமாள், உல குடைய நாயனூர், இராஜாக்கள் தம்பிரான் என்ற சிறப்புப் பெயர்கள் வழங்கின.

## இராஜகேசரி மூன்றும் இராஜராஜன் (1218—1256)

சோழப்பேரரசின் இறுதிக் காலமாகிய மூன்றும் இராஜ ராஜன், மூன்றும் இராஜேந்திரன் ஆகிய இரு சோழமன்னர் களுடைய ஆட்சியில் பல இன்னல்கள் தோன்றி அப் பேரரசு வீழ்ச்சியடைந்ததெனக் கூறலாம். பேரரசின் தெற்குப்பகுதி யிலிருந்து பாண்டியர்களுடைய படையெடுப்பும், மேற்கிலிருந்து ஹொய்சள வமிச அரசர்களுடைய வெற்றிகளும், பேரரசிற்கு முன்னர் அடங்கியிருந்த பல சிற்றரசர்கள் செய்த கலகங்களும் அப் பேரரசின் வீழ்ச்சிக்கு முக்கிய காரணங்களாயின. கி. பி 1279ஆம் ஆண்டுக்குப் பிறகு சோழப்பேரரசு பாண்டிய மன்னர்களுடைய பேரரசில் ஒருபகுதியாக அமைந்தது.

## பாண்டியர் படையெழுச்சி

மூன்றும் குலோத்துங்க சோழனால் வென்று அடக்கப்பெற்ற சடையவர்மன் குலசேகரபாண்டியனுக்குப் பிறகு, அவனுடைய தம்பி மாறவர்மன் சுந்தரபாண்டியன் என்பான் பாண்டிய மன்னனாக கி. பி. 1216-ல் அரியணையில் அமர்ந்தான். இப் பாண்டிய அரசனே மூன்றும் குலோத்துங்கனுடைய ஆட்சியின் இறுதிக்காலத்தில் சோழ நாட்டின்மீது படையெடுத்தான் என்று பேராசிரியர் நீலகண்ட சாஸ்திரியும், அவரைப் பின்பற்றி சுப்பிரமணியம் அவர்களும் சாதித்துள்ளனர்.[1] ஆனால் பண்டாரத்தார் அவர்கள், மூன்றும் குலோத்துங்கனுடைய ஆட்சிக்குப் பிறகு, அவனுடைய மகன் மூன்றும் இராஜராஜன் ஆட்சியில் (கி.பி. 1218-) இப் படையெழுச்சி நடைபெற்றதெனக் கூறுவர்.[2] முதற்பராந்தக சோழனுடைய ஆட்சியிலிருந்து மூன்றும் குலோத்துங்கனின் ஆட்சிக்காலம்வரையில், சோழமன்னர்கள் பாண்டிய நாட்டில் செய்த தீச்செயல்களுக்குப் பழிவாங்குவதுபோன்று இப்பொழுது பாண்டிய அரசர்கள் சோழநாட்டின்மீது படையெடுத்தனர். தக்க தருணத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்த மாறவர்மன் சுந்தரபாண்டியன் 1219ஆம் ஆண்டில் சோழநாட்டின்மீது படையெடுத்து தஞ்சையையும், உறந்தையையும் செந்தழல் கொளுத்தினன். பல மாடமாளிகைகளும், கூடகோபுரங்களும், ஆடரங்குகளும், மணிமண்டபங்களும் இடிக்கப் பெற்றன. நீர்நிலைகள் அழிக்கப் பெற்றன. சோழன் கரிகாலன் காலத்தில் பட்டினப்பாலை பாடிய உருத்திரன் கண்ணனருக்குப் பரிசிலாகக் கொடுத்த பதினாறுகால் மண்டபத்தைத்தவிர மற்றவையெல்லாம் இடிக்கப்பட்டன என்று, திருவெள்ளறை என்னும் இடத்தில் காணப்பெறும் கல்வெட்டு ஒன்று கூறுகிறது. மூன்றும் இராஜராஜன் தன் தலைநகரை விட்டு நீங்கி ஓரிடத்தில் பதுங்கிக்கொள்ள வேண்டியதாயிற்று. வெற்றியடைந்த சுந்தரபாண்டியன் பழையாறை வடதளி என்ற நகரத்தைத் தன்வசப்படுத்தி அங்கு வீராபிடேகமும் விசயாபிடேகமும் செய்துகொண்டான். பின்னர் சிதம்பரத்திற்குச் சென்று தில்லையம்பலவாணரை வணங்கி, பாண்டிய நாட்டிற்குத் திரும்புகையில் பொன்னமராவதியில் தங்கி, மூன்றும் இராஜராஜனுக்குச் செய்திவிடுத்து தனக்கு அடங்கி கப்பம்கட்டும்படி செய்து, மீண்டும் சோழநாட்டை ஆண்டு வரும்படி செய்தனன். இவ் வெற்றிகளினால், 'சோழநாடு

1 K. A. N. Sastri, 'A. History of South India,'. P. 202.

2 T. V. S. Pandarathar, Vol. II, PP. 185—186

கொண்டருளிய சுந்தரபாண்டிய தேவர்' என்றும், 'சோணாடு வழங்கியருளிய சுந்தரபாண்டிய தேவர் என்றும் கல்வெட்டு கள் அவரைப் புகழ்ந்து கூறுகின்றன.

இனி, மேற்கூறப்பெற்றவாறு பாண்டியமன்னன் சோழ அரசனுக்குத் தான் வென்றுகொண்ட நாட்டைத் திருப்பிக் கொடுத்த காரணம் யாது என்று நாம் ஆராயவேண்டும். இராஜராஜ சோழனுடைய நிலைமையைக் கண்டு இரக்கம் கொண்டு இவ்விதம் செய்தனனா அல்லது வேறு ஏதுக்களால் செய்தனனா? இராஜராஜசோழனுக்கு உதவியாக ஹொய்சள வமிசத்து அரசர்களாகிய இரண்டாம் வல்லாளதேவனும், அவனுடைய மகன் வீரநரசிம்மனும் பாண்டியநாட்டின்மீது படையெடுத்ததேயாகும் எனலாம். இரண்டாம் வல்லாள தேவனும், இராஜராஜசோழனும் நெருங்கிய உறவு கொண் டிருந்தமையால், சோழநாட்டைக் காப்பாற்றுவதற்குத் தக்க நடவடிக்கையை அவன் எடுத்துக் கொண்டான். மேலும், ஹொய்சள நாட்டிற்கும், பாண்டிய நாட்டிற்கும் இடையில் சோழநாடு அமைந்திருந்தமையால், தங்களுடைய நாட்டை பாண்டிய அரசர்களுடைய படையெழுச்சியினின்று சுலப மாகக் காப்பாற்றிக் கொள்வதற்காகவும் சோழநாட்டை ஓர் இடைப்பட்ட நாடாக (baffer-state) அமைக்க விரும்பினான். இரண்டாம் வல்லாள தேவன், சோழ மன்னனுக்குச் செய்த இவ்வுதவி அக் காலத்திய கல்வெட்டுகளிலும், இலக்கியங் களிலும் உறுதிசெய்யப் பெறுகின்றன. வல்லாளதேவன் இவ்விதம் உதவிசெய்த பெருமையை விளக்க, 'சோழராச்சியப் பிரதிட்டாச்சாரியன்', 'பாண்டிய கஜகேசரி,' 'சோழகுல ஏக ரட்சகன்' என்னும் பட்டங்களைப் புனைந்துகொண்டான். உருத்திரபட்டர் என்பார் எழுதிய ஜெகந்நாத விஜயம் என்னும் கன்னடநூலும், வல்லாளதேவன் இராஜராஜனுக்குச் செய்த உதவியைப்பற்றிக் கூறுகிறது.

## சோழருக்குகடங்கியிருந்த சிற்றரசர்களின் தொல்லை

வல்லாளதேவனால் மறுபடியும் தன்னுடைய அரசபதவியை யடைந்த மூன்றாம் இராஜராஜனுக்கு மீண்டும் பல இன்னல்கள் தலையெடுத்தன. முன்னர் சோழப்பேரரசிற்கு அடங்கிக் கப்பம் கட்டிவந்த வாணர்களும், காடவராயர்களும் இப்பொழுது திரை செலுத்த மறுத்துக் கலகம் செய்தனர். மகதை அல்லது மலாடு என்று வழங்கப்பெற்ற திருக்கோவலூர் பகுதியில் சிற்றரசனாக இருந்த வாணகோவரையன் என்பான், தன்னாட்சியடைந்து சோழநாட்டின் மேற்குப்பகுதியைத் தன்வசமாக்கினான் என்று

திருவேள்விக்குடி என்னும் இடத்தில் கிடைத்த கல்வெட்டு கூறுகிறது. மற்றொரு கல்வெட்டு, நீடூர் என்னும் இடத்தைச் சேர்ந்த நிலப்பகுதிகள் காடவமன்னன் கோப் பெருஞ்சிங்கனுடைய ஆட்சியில் அடங்கியதெனக் கூறுகிறது. மேற்கூறப்பெற்ற இரு சிற்றரசர்களும் பாண்டிய மன்னனுடைய தூண்டுதல்பேரில் கலகம் செய்திருக்க வேண்டும். தென்னார்க் காடு மாவட்டத்தில் திருவரத்துறையென்னும் இடத்தில் காணப் பெறும் கல்வெட்டொன்று இச் செய்தியைப்பற்றிக் கூறுகிறது. இதைக் கேள்வியுற்ற ஹொய்சள மன்னனாகிய வீரநரசி மன் இராஜராஜனுக்கு உதவியாக கோப்பெருஞ்சிங்கனுடைய நாட்டின்மீது படையெடுத்துப் பல இன்னல்களை விளைவித்தான்.

## பாண்டியருடைய இரண்டாவது படையெழுச்சி

மாறவர்மன் சுந்தரபாண்டியனுக்குத் திரை செலுத்துவதாக ஒப்புக்கொண்ட மூன்றாம் இராஜராஜனால் அவ்விதம் நடந்து கொள்ள முடியவில்லை. ஏனெனில், சோழ சிற்றரசர்களாகிய வாணர்கள், காடவராயர்கள், சேதிராயர்கள் முதலியோர் தனக்குச் சேரவேண்டிய திரைப்பொருட்களைச் செலுத்த மறுத்துக் கலகம் செய்தமையால், பாண்டியமன்னனுக்கு இராஜ ராஜனால் கப்பம் செலுத்த முடியவில்லை. இதையே காரண மாகக்கொண்டு மாறவர்மன் சுந்தரபாண்டியன் இரண்டாம் முறையாகச் சோழநாட்டின்மீது படையெடுத்தான். கி.பி. 1231 ஆம் ஆண்டில் இவ்விரு அரசர்களுக்குமிடையே நடந்த போரில் மூன்றாம் இராஜராஜன் தன்சேனையையும், நாட்டையும், அரசபதவியையும் இழந்தான். 1218ஆம் ஆண்டில் நடந்த வரலாற்று நிகழ்ச்சிகள் மீண்டும் நடைபெற்றன. மாறவர்மன் சுந்தரபாண்டியன் மீண்டும் பழையாறையாகிய முடிகொண்ட சோழபுரத்தில் வீராபிடேகமும் விசயாபிடேகமும் செய்து கொண்டான். மூன்றாம் இராஜராஜன் பேரரசு இல்லாத ஒரு பேரரசனானான். ‘கத்திய கர்ணாமிர்தம்’ என்னும் கன்னட நூலில், தந்நாட்டையிழந்த இராஜராஜன் ஹொய்சளமன்னனிடமிருந்து உதவிபெறுவதற்காக, தன்னுடைய சுற்றத்தார்களோடு வடக்கு நோக்கிச் சென்றதாகக் கூறப்பெற்றுள்ளது. இவ்விதம் பலவித இன்னல்களுக்குள்ளாகிய சோழஅரசனை தெள்ளாறு என்னுமிடத்தில் காடவர்குலத்துக் கோப்பெருஞ்சிங்கன் கைதி யாக்கித் தன்னுடைய தலைநகரமாகிய சேந்தமங்கலத்தில் சிறையிலிட்டனன். வயலூர், திருவகீந்திரபுரம் என்னும் இரண்டிடங்களில் காணப்பெறும் கல்வெட்டுகள் மேற்கூறப் பெற்ற நிகழ்ச்சிகளைத் தெளிவாகக் கூறுகின்றன.

சோழப் பேரரசனாக விளங்கிய மூன்றாம் இராஜராஜன் இவ்வாறு சிறுமையுற்றதையும், சோழநாட்டின் அவலநிலைமையும் உணர்ந்த வீரநரசிம்மன் என்னும் ஹொய்சள அரசன், பாண்டியன்மீதும், கோப்பெருஞ்சிங்கன்மீதும் பெருங்கோபங்கொண்டு 'மீண்டும் சோழவரசனையும், சோழநாட்டையும் நிலை நிறுத்தாது நான் விடப்போவதில்லை' என்று சபதம் செய்தனன். துவாரசமுத்திரத்திலிருந்து தன்னுடைய படைகளை அனுப்பி வாணர்குல மன்னர்களின் நாடாகிய மகதைநாட்டைக் கைப்பற்றி, திருவரங்கத்திற்கு அருகிலுள்ள பாச்சூர் என்னும் இடத்தில் தங்கியிருந்தான். பின்னர் அப்பணன், கோபயன் என்ற இரு தண்டநாயகர்களை அனுப்பி மூன்றாம் இராஜராஜ சோழனை சிறையிலிருந்து விடுவிக்கும்படி அனுப்பினன். இந்த தண்டநாயகர்கள் எள்ளேரி, கலியூர்மூலை, தொழுதூர் முதலிய இடங்களைக் கைப்பற்றி, தொண்டைமான் நல்லூர், திருவதிகை, திருவக்கரை முதலிய இடங்களையும் பிடித்து, கோப்பெருஞ் சிங்கனுடைய சேந்தமங்கலத்தையும் முற்றுகையிட்டனர். கோப்பெருஞ்சிங்கனும், வீரநரசிம்மனுடைய வீரத்திற்கு அஞ்சி சோழ அரசனை விடுதலை செய்தனன். இவ்வாறு, இராஜராஜ சோழன் தன்னுடைய அரசபதவியை கி. பி. 1231ஆம் ஆண்டில் மீண்டும் பெற்றான்.[1] மூன்றாம் இராஜராஜன் கி. பி. 1256ஆம் ஆண்டுவரையில் பெயரளவில் அரசனாக இருந்து, இறந்த பிறகு அவனுடைய மகன் மூன்றாம் இராஜேந்திரன் சோழமன்னனாக பதவியேற்றனன்.

## பரகேசரி மூன்றாம் இராஜேந்திரன் (1256—1279)

முதற்குலோத்துங்க சோழனுடைய வழிகாலில் தோன்றிய சாளுக்கிய—சோழவமிசத்தின் கடைசி அரசன் மூன்றாம் இராஜேந்திரன். இவ்வரசனுக்குப் பிறகு சோழ வமிசமே அழிந்துபட்டது எனக் கூறலாம். ஆயினும், இவ்வரசன் தன் தகப்பனைவிட ஆட்சியிலும், அரசியல் சூழ்ச்சியிலும் சிறப்புற்று விளங்கினான். இவ்வரசன் பாண்டிய நாட்டின்மீது படை எடுத்துச்சென்று மாறவர்மன் சுந்தரபாண்டியனை வென்று தன் தகப்பன் காலத்தில் ஏற்பட்ட தோல்வியின் இழிவுகளை நீக்கிக் கொண்டான். மாவிலங்கை என்றழைக்கப்பெறும் ஓய்மா நாட்டுத் தலைவனாகிய சம்புவராய மன்னனையும் தனக்கு அடிபணியும்படி செய்தான். ஆனால், தொண்டைமண்டலத்தின் முக்கிய நகராகிய காஞ்சிபுரத்தையும், அதைச்சூழ்ந்த இடங்களையும் தெலுங்குச்சோழத் தலைவனாகிய திக்ககண்ட

1 K. R. Venkatarama iyer, 'Hoysalas in the Tamil Country,'. P. 12

கோபாலன், மூன்றும் இராஜேந்திரனிடமிருந்து கைப்பற்றிக் கொண்டு தன் சொந்த ஆட்சிபுரிந்தான்.

கி. பி. 1251-ல், மாறவர்மன் சுந்தரபாண்டியனுக்குப் பிறகு பாண்டிய மன்னனுக முடிசூடிக்கொண்ட சடையவர்மன் சுந்தர பாண்டியன் ஒப்புயர்வற்ற பேரரசனுக விளங்கினுன். அவன் ஹொய்சள, சோழ, காகதீய வமிச அரசர்களையெல்லாம் வென்று தென்னிந்தியாவின் பெரும்பகுதியைத் தன்னுடைய பாண்டியப் பேரரசின்கீழ்க் கொண்டுவந்தான். திருச்சிராப் பள்ளிக்கு அருகில் உள்ள கண்ணனூர் என்னுமிடத்தில் ஹொய்சள மன்னனுகிய சோமேச்வரனை வென்று அவனுடைய நாட்டைக் கைப்பற்றினுன். காஞ்சிபுரத்தைத் தலைநகராகக் கொண்டு ஆட்சிபுரிந்த திக்ககண்டகோபாலனும் பாண்டிய னுக்கு அடங்கினுன். 1257ஆம் ஆண்டில் சோழமன்னன் மூன்றும் இராஜேந்திரனும் தோல்வியுற்ற பிறகு, சோழநாடு பாண்டிய பேரரசில் ஒரு பகுதியாயிற்று. சேந்தமங்கலத்தில் அரசுபுரிந்த கோப்பெருஞ்சிங்க காடவராயனும், மற்ற சிற்றரசர்களும் பாண்டிய மன்னனுடைய பேரரசிற்குத் தலைவணங்கினர்.

# 13 அ. சோழப்பேரரசின் ஆட்சிமுறை

## தென்னிந்திய அரசியல் ஆட்சிமுறை (கி .பி. 900—1200)

கி. பி. பத்தாம் நூற்றுண்டிலிருந்து பதின்மூன்றும் நூற்றுண்டுவரையில் தென்னிந்தியாவில் சோழ, இராட்டிரகூட, மேலைச்சாளுக்கிய பேரரசுகள் நிலைபெற்றிருந்த வரலாற்றையும், இம் மூன்று அரசுகளுக்குமிடையே நடைபெற்ற போராட்டங்களையும்பற்றி இதுகாறும் கண்டறிந்தோம். இத் தென்னிந்திய பேரரசுகளின் ஆட்சிமுறையைப்பற்றி இனி நாம் உணர்ந்து கொள்ளவேண்டும். இம் மூன்றினுள் இராட்டிரகூடர், மேலைச் சாளுக்கியர் அரசியல்களைப்பற்றித் தெளிவாக அறிந்துகொள் வதற்கேற்ற வாய்ப்புகள் அதிகம் இல்லை. ஆயினும், சோழப் பேரரசில் நடைபெற்ற மத்திய, மாகாண, கிராம ஆட்சிமுறைகளைப்பற்றி நாம் உணர்ந்துகொள்ளுவதற்கேற்ற வரலாற்றுச் சான்றுகள் நிரம்பவும் கிடைத்துள்ளன.

மேற்கூறப்பெற்ற மூன்று அரசுகளிலும் தகப்பனுக்குப் பின் தனயன் அரசு உரிமைப்பெற்ற பரம்பரை உரிமையுள்ள முடியரசே நிலைபெற்றிருந்தது. சோழப் பேரரசு தோன்றிய பிறகு, சோழமன்னர்களுடைய அதிகாரங்களும், முடிசூட்டு விழாக்களும், தலைநகரங்களும், அவற்றில் அமைக்கப்பெற்று இருந்த அரண்மனைகளும், அங்கு நடைபெற்ற ஆடம்பர வாழ்க்கையும் மிக்க சிறப்புற்றிருந்தன. சாளுக்கிய மன்னர் களும், சோழமன்னர்களும் தங்களுடைய முடிசூட்டு விழாக்களை மிக்க ஆடம்பரத்துடனும் பெருஞ் செலவுகள் செய்தும் கொண்டாடினர். சாளுக்கிய மன்னர்கள் தங்களுடைய முடிசூட்டு விழாக்களைப் பட்டடைக்கல் என்ற இடத்தில் நடத்துவது வழக்கம். சோழமன்னர்கள் தஞ்சை, கங்கை கொண்ட சோழபுரம், தில்லை, காஞ்சி முதலிய நகரங்களில் கொண்டாடினர். அரசபதவியைப் பெறுவதற்கு அரசுரிமைப் போர்களும் நடைபெற்றன. ஓர் அரசனுடைய முதல் மகனுக்கு அரசுரிமை ஏற்பதற்குரிய உரிமை வழக்கத்தில் இருந்தது. ஆட்சிபுரியும் அரசன் உயிருடன் இருக்கும்பொழுதே தனக்குப் பின் இன்னவர்தான் பட்டம் பெறுவதற்குரியவர் என்று நிச்சயிப்பதற்கும் உரிமை இருந்தது. முதலில் பிறந்த மகனுக்கு

இளவரசுப்பட்டம் கட்டி அரச காகரியங்ம்ளில் ஈடுபடுத்தும், வழக்கும் இருந்தது. பேரரசர்களுக்கும், சிற்றரசர்களுக்கும் இடையே நிலைபெற்றிருந்த உறவுமுறை காலத்திற்கும், தேசத்திற்கும் ஏற்றுற்போல மாறுபட்டிருந்தது. சாளுக்கியப் பேரரசைவிட சோழப் பேரரசு ஆட்சிமுறையில் சிறந்து விளங்கியதெனக் கூறலாம். சாளுக்கிய மன்னர்கள் தங்களுடைய சிற்றரசர்களைச் சந்திவிக்ரகிகள் என்ற அலுவலர்கள் மூலம் அடக்கியாண்டு வந்தனர். இவ்விரு அரசுகளிலும் அரச குடும்பத்தில் பிறந்த இளவரசர்கள் மாகாண அல்லது மண்டலங்களின் தலைவர்களாக நியமிக்கப்பெற்றனர்.

சோழ மன்னர்களின் ஆட்சியை ஒரு தனி அரசனது செங்கோலாட்சி எனக் கூறலாம். அவ் வேந்தர்கள் தாம் விரும்பியவாறு எதனையும் செய்யும் ஆற்றலும் அதிகாரமும் உடையவர்கள் எனினும், அமைச்சர் முதலானவர்களுடன் நன்கு ஆராய்ந்துதான் எக் கருமத்தையும் நிறைவேற்றுவது வழக்கம். அவர்களுக்கு அரசியல் நிருவாகங்களில் உதவிபுரிந்த அமைச்சர்கள், 'உடன்கூட்டத்ததிகாரிகள்' என அழைக்கப் பெற்றனர். முடிசூட்டப்பெறும்பொழுது, உடையார் சக்கர வர்த்திகள், திரிபுவனச் சக்கரவர்த்திகள், கோனிரின்மை கொண்டான், இராஜகேசரி, பரகேசரி என்ற பட்டங்களையும் புனைந்துகொண்டனர். சோழப்பேரரசில் வாழ்ந்த மக்கள் சோழ மன்னர்களைத் திருமாலின் அவதாரமாகவே எண்ணி அன்புபூண்டு ஒழுகிவந்தனர்.

## அரசியல் அதிகாரிகள்

அரசியலை நடத்துவதற்கு மன்னர்களால் தேர்ந்தெடுக்கப் பெற்ற அதிகாரிகள், ஒழுக்கம், அறிவு, ஆற்றல், குடிப்பிறப்பு முதலிய நல்லியல்புகளைப்பற்றி ஆராய்ந்து தேர்ந்து எடுக்கப் பெற்றவர்களாவர். அரசியல் அதிகாரிகளில் பெருந்தரம், சிறுதரம் என இருவகையினர் இருந்தனர். சோழர்களுடைய ஆட்சியில் அரசியல் அலுவலாளர்களுக்குத் திங்கள்தோறும் ஊதியம் கொடுக்கப்படவில்லை. அதிகாரிகள் ஒவ்வொருவரும் தம்தம் தகுதிக்கு ஏற்ப அரசனிடமிருந்து நிலங்களைப்பெற்று அவற்றை அனுபவித்து வந்தனர். இவ்வித நிலங்களுக்கு சீவிதம் என்ற பெயர் வழங்கியது. இந் நிலங்களை அரசிறை யின்றி அவர்கள் உயிரோடு இருக்கும் வரையில் மட்டும் அனுபவித்துக் கொள்ளலாம். தலைநகரில் அரசனோடு உடன் இருந்து நாட்டை ஆட்சிபுரிவதில் துணைபுரிந்தவர்கள் அமைச்சர்களேயாவர். இந்த அமைச்சர் குழுவில் எத்தனை

அமைச்சர்கள் இருந்தனர் என்பது தெரியவில்லை. சௌ-ஜு-குவா என்ற சீன ஆசிரியன் ஒருவன் கி. பி. 13ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் எழுதியுள்ள நூல் ஒன்றில், சோழ மன்னன் தன்னுடைய அவையில் அமைச்சர்கள் நால்வரோடு வீற்றிருந்ததை தான் நேரில் பார்த்ததாகக் குறித்துள்ளனன் இவ்விதம் அரசனிடத்தில் அண்மையிலிருந்த அரசாங்க அதிகாரிகள்: திருமந்திர ஓலை, திருமந்திர ஓலைநாயகன், விடையில் அதிகாரி, அரசியற் கருமங்களை ஆராயும் அதிகாரிகள் என்போர். ஒவ்வோர் உள்நாட்டின் தலைநகரிலும் நாடுகாவல் அதிகாரி ஒருவன் இருந்தனன்.

## புரவுவரித் திணைக்களத்தார்

நாட்டிலுள்ள விளைநிலங்களை நன்கு அளந்து தரமிட்டு அவற்றிற்குரிய வரிகளை முறைப்படி விதித்து, ஆண்டுதோறும் குடிகளிடம் அவற்றை வாங்குவது அரசாங்கத்தின் முக்கிய கடமையாயிற்று. அதனால், நிலவரி வசூல் செய்யும் அதிகாரிகள் பலரை உறுப்பினராகக்கொண்ட நிலவரிக் கழகம் ஒன்று, ஒவ்வொரு மண்டலத்திற்கும் தனித்தனியாக அமைக்கப் பெற்றிருந்தது. இக் கழகம் புரவுவரித் திணைக்களம் என்று அழைக்கப்பெற்றது.

சோழமன்னர்கள் தங்களுடைய ஆட்சிக்குட்பட்ட நாடுகளைச் சுற்றிப்பார்த்து மக்களுக்கு வேண்டிய நலன்களைப் புரிவது வழக்கமாகும். புரவுவரித் திணைக்களத்து உறுப்பினர்களும் பிற அதிகாரிகளும் அரசனைப்போல நாட்டைச் சுற்றிப்பார்த்து குடிகளின் நலன்களைக் கவனித்து வந்தனர். மேலும் இவ் வதிகாரிகள், கிராமசபை நிகழ்ச்சிகள், அறநிலையங்கள், கோயில் களின் வரவு செலவுகள் முதலானவற்றையும் தாம் செல்லும் காலங்களில் கண்காணிப்பதும் வழக்கமாகும்.

சோழமன்னர்கள் தங்களுடைய அரசியல் அதிகாரிகளுக்குப் பல பட்டங்களை வழங்கி அவர்களைச் சிறப்பிப்பது வழக்கம். அவ்விதம் வழங்கப்பெற்ற பட்டங்களில் முக்கியமானவை: மூவேந்த வேளான், தொண்டைமான், பல்லவராயன், காலிங்க ராயன், காடவராயன், கச்சிராயன், சேதிராயன், வாண கோவரையன், மழவராயன், பிரம்மாராயன் முதலியவையாகும்.

## மாகாண அரசியல்

தொன்றுதொட்டுச் சோழமன்னர்களின் ஆட்சிக்குரியதாய் அரசாளப்பட்டுவந்த தமிழகப்பகுதி சோழமண்டலம் என

வழங்கப்பட்டது. சிதம்பரத்திற்கு வடக்கேயுள்ள வட வெள்ளாற்றிக்கும், புதுக்கோட்டைக்கு அண்மையிலுள்ள தென் வெள்ளாற்றிற்கும் இடையிலுள்ள நாடு சோழமண்டலமாகும். இதன் மேற்கு எல்லை திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலுள்ள மதுக் கரையைச் சார்ந்துள்ள கோட்டக்கரையாகும். இதன் கிழக் கெல்லை வங்கக்கடலாகிய கிழக்குக் கடற்கரையாகும். இக் கரை சோழ மண்டலக்கரையென வழங்கியது. சோழமன்னர்கள் பிற நாடுகளையும் வென்று சோழப்பேரரசை நிறுவியபொழுது அவர் களுடைய ஆட்சிக்கடங்கிய நாடுகள் எல்லாம் சோழப்பேரரசு என்று வழங்கியது. முதல் இராஜராஜனது ஆட்சியில் இப் பேரரசு பல மண்டலங்களாகப் பிரிவுற்றிருந்தது. அவை: (1) சோழமண்டலம் (2) இராசராசப் பாண்டிய மண்டலம் (3) ஜெயங்கொண்ட சோழமண்டலம் (4 மும்முடிச் சோழ மண்டலம் (5) நிகரிலி சோழமண்டலம் (6) அதிராசராச சோழ மண்டலம், (7) மலைமண்டலம் (8) வேங்கைமண்டலம் முதலியனவாகும்.

ஒவ்வொரு மண்டலமும் பல வளநாடுகளாகவும், ஒவ்வொரு வளநாடும் பல நாடுகளாகவும் பிரிக்கப்பட்டிருந்தன. நாடுகளில் சில கூற்றங்கள் எனவும் வழங்கிவந்தன. ஒவ்வொரு நாடும் பல சதுர்வேதி மங்கலங்களையும், சில தனியூர்களையும் தன்னகத்தே கொண்டிருந்தது. ஒவ்வொரு சதுர்வேதிமங்கலமும் சில சிற்றூர்களைக் கொண்டிருந்தது. முதலாம் இராஜராஜ சோழன் காலத்தில் சோழமண்டலம் ஒன்பது வளநாடுகளாகப் பிரிக்கப்பெற்றிருந்தது. அவையாவன: (1) இராசேந்திர சிங்க வளநாடு (2) இராசாசிரய வளநாடு (3) கேரளாந்தக வளநாடு (4) பாண்டிய குலாசனி வளநாடு (5) நித்தவிநோத வளநாடு (6) உய்யக்கொண்டார் வளநாடு (7) க்ஷத்திரிய சிகாமணி வளநாடு (8) அருள்மொழிதேவ வளநாடு (9) இராச ராச வளநாடு என்பனவாகும். இவ்வாறே பிற மண்டலங்களும் பல வளநாடுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தன. ஜெயங்கொண்ட சோழமண்டலம் என்று அழைக்கப்பெற்ற தொண்டைமண்டலம் மாத்திரம் இருபத்திநான்கு கோட்டங்களாகப் பிரிவுற்றிருந்தது. வளநாட்டின் உட்பகுதியாகிய நாடுகளில் சில கூற்றங்கள் என்று வழங்கின. நாடுகளும், கூற்றங்களும் இக்காலத்தில் உள்ள தாலுக்காக்கள் போன்றவையாகும். வளநாடுகள் ஜில்லாக்களுக்குச் சமமாகவும், மண்டலங்கள் மாகாணங் களுக்குச் சமமாகவும் கொள்ளலாம். இவையன்றியும், பற்று என்ற ஒரு பிரிவும் இருந்ததாகக் கல்வெட்டுகளிலிருந்து நாம் அறிகிறோம். மண்டலங்களுக்கு த் தலைவர்களாக அரச குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் நியமனம் செய்யப்பெற்றனர்.

## மகாசபைகள்—கிராம ஆட்சி

சோழமன்னர்களின் ஆட்சியில் ஊராட்சி நடத்திவந்த சபைகளை நான்குவகைகளாகப் பிரிக்கலாம். அவையாவன: (1) பிராமணர்கள் பிரமதேய உரிமையுடன் வசித்துவந்த சதுர்வேதிமங்கலங்களில் இருந்த சபைகள். (2) திருக்கோவில்களுக்கு உரிய தேவதானங்களில் இருந்த சபைகள். (3) அந்தணர்கள் அல்லாத பிற வகுப்பினர் வசித்த ஊர்களில் இருந்த சபைகள். (4) வணிகர்கள் வசித்த நகரங்களில் இருந்த சபைகள். இவை அன்றியும் நாடுகளில் இருந்த சபைகளும் இருந்ததாகத் தெரிகிறது. சோழப்பேரரசில் நிலைபெற்றிருந்த மகாசபைகளின் அலுவல்களைப்பற்றிய செய்திகளை அக் காலத்தியக் கல்வெட்டுகளில் இருந்து நாம் உணர்ந்துகொள்ள முடியும். இக் கல்வெட்டுகளை மகாசபையைப்பற்றிக் கூறும் கல்வெட்டுகள் என்று கூறலாம். இக் கல்வெட்டுகளின் துணைகொண்டு சோழப் பேரரசு மகாசபைகளின் பொற்காலம் எனப் பேராசிரியர் சத்தியநாதய்யர் கூறுவர்.[1] இந்த மகாசபைகளைப்பற்றிக் கூறும் கல்வெட்டுகள் தொண்டைமண்டலத்தில் 307-ம், சோழ மண்டலத்தில் 300-ம், பாண்டியமண்டலத்தில் 25-ம், கொங்கு மண்டலத்தில் 14-ம் கிடைத்துள்ளன.

பல்லவர், பாண்டியர் முதலிய அரசர்களுடைய ஆட்சிக் காலங்களிலும் இம் மகாசபைகள் இருந்தன என நாம் அறிதல் வேண்டும். தந்திவர்மப்பல்லவன் காலத்தில் பல்லவப்பேரரசில் தொண்டைமண்டலத்தில் இருபத்தைந்து இடங்களில் மகாசபைகள் இருந்தன. பாண்டியநாட்டில், திருநெல்வேலி மாவட்டத்தில் மானூர் என்ற பிரம்மதேய கிராமத்தில் கிடைத்த கல்வெட்டொன்று எவ்விதம் மகாசபை அமைக்கப்பெற்றிருந்ததெனக் கூறுகிறது. தொண்டைமண்டலத்தில் உத்திரமேரூர், கூரம், வெண்குன்றம், மணலி, சீயபுரம், புல்வானூர், தெங்கங்குடி, திருத்தணி, திருவல்லம், உக்கல் முதலிய இடங்களில் மகா சபைகள் இருந்தன. இச் சபைகளின் அங்கத்தினர்கள் தங்களை, 'சபையாக இசைந்த சபையோம்,' 'ஊராக இசைந்த ஊரோம்,' 'நாடாக இசைந்த நாட்டோம்' என்றழைத்துக் கொண்டனர். வடமொழியில் உள்ள இருக்குவேதத்தில் இச் சபைகள் கூறப்பட்டிருப்பதால் இவை வடநாட்டு ஆரியருடைய தொடர்பால் தென்னாட்டில் வேரூன்றியிருக்க வேண்டுமென்ற சில வரலாற்று ஆசிரியர்களுடைய கூற்றை

[1] R. Sathianathaier, 'Studies in the ancient History of Tondaimandalam,' P. 27

திரு சதாசிவப்பண்டாரத்தார் மறுத்து, இவை தமிழ்நாட்டில் தோன்றியவை என நிலைநாட்டியுள்ளார்.[1]

சதுர்வேதி மங்கலங்கள், ஊர்கள், நாடுகள் முதலியவற்றில் நிலைபெற்றிருந்த சபைகளின் அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுப்பதற்குரிய உரிமை எல்லா ஆண்மக்களுக்கும் இருந்தது. அவர்கள் திருவடியர் என அழைக்கப்பெற்றனர். அச் சபைகள் குறி, பெருங்குறி, மகாசபை எனவும் வழங்கப்பெற்றன. குடவோலை வாயிலாகத் தேர்ந்தெடுக்கப்பெற்ற உறுப்பினர்களைக்கொண்ட நிறைவேற்றுக் கழகங்களே, கிராம காரியங்கள் முழுவதையும் நடத்தி வந்தன. இக் கழகங்களுக்கு வாரியங்கள் என்ற பெயரும், இக் கழக அங்கத்தினர்களுக்கு வாரியப் பெருமக்கள் என்ற பெயரும் வழங்கின. முதற் பராந்தக சோழனது ஆட்சியில் செங்கற்பட்டு மாவட்டத்தில் உள்ள உத்தரமேரூரில் வரையப்பெற்ற இரு கல்வெட்டுகள், கிராம சபையாரால் தேர்ந்தெடுக்கப்பெற்ற நிறைவேற்றுக் கழகங்களின் உறுப்பினர்களின் தகுதி, அன்னோரைத் தேர்ந்தெடுத்த முறை, அக் கழகங்களின் அமைப்பு முதலான பலவற்றை நன்கு விளக்குகின்றன.

கிராம சபையால் வாரியப் பெருமக்களாகத் தேர்ந்தெடுக்கப்பெறும் உரிமையுடையவர்கள்:

(1) தம் சொந்த மனையில் வீடுகட்டிக் குடியிருப்பவகளாகவும்,

(2) காணிக்கடன் செலுத்துதற்குரிய கால் வேலி நிலமுடையவர்களாகவும்,

(3) கல்வியறிவுயுடையவர்களாய் அறநெறி பிழையாமல் தூயவழியில் பொருள் ஈட்டி வாழ்ந்து வருபவர்களாகவும்,

(4) 35 வயதிற்குமேல் 70 வயதிற்கு உட்பட்ட வயதினர்களாகவும்,

(5) மூவாண்டிற்குள் எந்த வாரியத்திற்கும் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப் பெறாதவர்களாகவும்,

(6) சிறந்த கல்வியுடையோர்-அரைக்கால் வேலி நிலமுடையவர்களாக இருப்பினும்,

வாரியங்களின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பெறும் உரிமையுடையவராவர்.

[1] T. V. S. Pandarathar, 'History of the Later Cholas,' Vol. III, P. 20

1. வாரியங்களில் உறுப்பினராயிருந்து சரியான முறையில் கணக்கு காட்டாதவர்களும், இவர்களுடைய நெருங்கிய உறவினர்களும்,

2. கூடத்தகாதவர்களோடு கூடியவர்களும், ஐம்பெரும் பாதகங்களில் முதல்நான்கும் புரிந்தவர்களும், இவ்விரு வகையாருடைய நெருங்கிய சுற்றத்தினரும்,

3. தீயோர்களுடைய கூட்டுறவினால் கெட்டுப் போனவர்களும்,

4. கொண்டது விடாத கொடியோர்களும், பிறர் பொருளைக் கவர்ந்தவர்களும்,

5. இலஞ்சம் வாங்கிப் பிறகு பிராயசித்தம் செய்து தூய்மை அடைந்தவர்களும், மாபாதகம், ஊர்த்துரோகம் செய்த குற்றம் காரணமாகக் கழுதைமேல் ஏற்றப்பட்டவர்களும், கள்ளக் கையெழுத்திட்டவர்களும்,

வாரியப் பெருமக்களாகத் தெரிந்தெடுக்கப்பெறும் உரிமை இழந்தவர்களாகக் கருதப்பெற்றனர்.

## குடவோலை முறை

ஒவ்வொரு சதுர்வேதி மங்கலமும், ஊரும் அக் காலத்தில் பல பகுதிகளாகப் பிரிக்கப்பெற்றிருந்தன. ஒவ்வொரு பகுதியும் குடும்பு (Ward) என்று வழங்கப்பெற்றது. ஒவ்வொரு குடும்பிற்கும் ஒவ்வோர் உறுப்பினரே தெரிந்தெடுக்கப்பெற்றனர். குடும்புகளின் எண்ணிக்கை சதுவேதி மங்கலங்களின் பெருமைக்கும் சிறுமைக்கும் ஏற்றவாறு இருந்தது. எடுத்துக்காட்டாக உத்தரமேரூர் முப்பது குடும்புகளை உடையதாகவும், செந்தலை அறுபது குடும்புகளையுடையதாகவும் இருந்தது. ஒவ்வொரு குடும்பிலுமுள்ளவர்கள் தாமே கூட்டம் நடத்தி, வாரியங்களில் அங்கத்தினர்களாக இருத்தற்குரிய தகுதியும் உரிமையும் உடைய எல்லோருடைய பெயர்களையும் தனித்தனி ஓலைகளில் எழுதி, அவ்வோலைகள் எந்தக் குடும்பிற்கு உரியவை என்பது நன்கு புலப்படுமாறு வாயோலை ஒன்றைச் சேர்த்துக்கட்டி. அந்த ஓலைக்கட்டை ஒரு குடத்தில் இட்டு வைப்பர். ஒரு குறிப்பிட்ட நாளில் அவ்வூரிலுள்ள இளைஞர் முதல் முதியோர் ஈருக எல்லோரும் ஓர் இடத்தில் கூடுவர். அக் கூட்டத்திற்கு அரசாங்க அதிகாரி ஒருவர் வந்திருந்து அங்கு நடைபெறும் நிகழ்ச்சிகளைக் கவனிப்பது வழக்கம். கூட்டத்தில் உள்ள நம்பிமாருள் வயது முதிர்ந்தோர் ஒருவர், குடும்புகளின் ஓலைக்

கட்டுகள் போடப்பெற்றிருந்த குடத்தை எல்லோரும் காணுமாறு எடுத்துக்கொண்டு கூட்டத்தின் நடுவில் நிற்க வேண்டும். பிறகு ஒன்றும் உணராத இளம்பிராயத்தன் ஒருவனைக் கொண்டு, அக் குடத்திலிருந்து ஒரு குடும்பிற்குரிய ஓலைக்கட்டை எடுப்பித்து அவிழ்த்து வேறொரு குடத்திலிட்டுக் குலுக்கி, அக் குடத்திலுள்ள ஓலைத்துண்டுகளில் ஒன்றை அச் சிறுவனைக்கொண்டு எடுக்கச்செய்து அதனை மத்தியஸ்தன் கையில் கொடுப்பித்தல் வேண்டும். அவன் தன்னுடைய ஐந்து விரல்களையும் அகலவிரித்து அவ்வோலைத்துண்டை உள்ளங் கையில் ஏற்று, அப் பெயரை சபையிலுள்ளளோர் யாவரும் தெரிந்துகொள்ளும்படி படிப்பான். அங்குள்ள நம்பிமார்கள் எல்லோரும் ஒவ்வொருவராக அப்பெயரை வாசிப்பார்கள். பிறகு அப் பெயர் ஓலையில் வரைந்து கொள்ளப்படும். அவ்வோலை யில் குறிக்கப்பெற்றவரே மகாசபை உறுப்பினராகத் தேர்ந் தெடுக்கப்பெற்றவராவர். இவ்வாறே மற்றைக் குடும்புகள் ஒவ் வொன்றிற்கும் ஒவ்வோர் உறுப்பினர் தேர்ந்தெடுக்கப்பெறுவர்.

உத்தரமேரூரில் கிடைத்துள்ள முதல் கல்வெட்டின்படி அந்த சதுர்வேதி மங்கலத்திலிருந்த முப்பது குடும்புகளிலும் இருந்து தேர்ந்தெடுக்கப்பெற்ற முப்பது உறுப்பினருள் பன்னிருவர் சம்வற்சர வாரியராகத் தேர்ந்தெடுக்கப் பெற்றனர். மற்றையோருள் பன்னிருவர் தோட்டவாரியராகவும், எஞ்சிநின்ற அறுவர் ஏரி வாரியராகவும் இருந்தனர். மேற்குறித்த முப்பது குடும்புகளிலும் இருந்து குடவோலைமூலம் மீண்டும் பன்னிருவர் தேர்ந்தெடுக்கப்பெற்று, அறுவர் பஞ்வார வாரியராகவும், எஞ்சியுள்ள அறுவர் பொன் வாரியராகவும் இருப்பர். முன்னர் ஏரி வாரியத்திலும், தோட்ட வாரியத்திலும் உறுப்பினராக இருந்து அனுபவம் மிக்கவர்கள் சம்வற்சர வாரியத்தின் உறுப்பினர்களாக அமைவர். மேற்கூறப்பெற்ற வாரியங்கள் அன்றியும், கழனி வாரியம், கலிங்கு வாரியம், தடிவழி வாரியம், குடும்பு வாரியம் முதலிய வாரியங்களும் அமைக்கப்பெற்றன. கிராம சபையில் குடவோலை மூலம் தேர்ந்தெடுக்கப்பெற்று உறுப்பினராயமர்ந்தவர்கள் ஏதேனும் குற்றம்பற்றி இடையில் விலக்கப்பட்டால் அன்றி, ஓராண்டு முடிய எவ்வகை ஊதியமும் பெற்றுக்கொள்ளாமல் கிராம காரியங்களைச் செய்வதற்கு உரிமையுடையவர் ஆவர். வாரியங்களில் அங்கம் வகித்தவர்கள் ஆளுங்கணத்தார், வாரியப்பெருமக்கள் என அழைக்கப் பெற்றனர். இவ் வாரியங்கள் கோவில் மண்டபங்களிலும், நாடகசாலைகளிலும், மரங்களின் நிழலடிகளிலும் கூட்டம்

கூட்டுவதுண்டு. பகல்—இரவு என்ற வேறுபாடின்றி எந்த நேரத்திலும் கிராம சபைகள் கூடியதாகத் தெரிகிறது.

## வாரியங்களின் கடமைகள்

நியாய விசாரணை செய்து முடிவு கூறுவதும், அறக்கட்டளைகளை ஏற்று நடத்துவதும், அறநிலையங்களைக் கண்காணிப்பதும் சம்வற்சர வாரியரது கடமைகள் ஆகும். ஏரி, குளம், ஊருணி முதலிய நீர்நிலைகளைப் பாதுகாத்தல் ஏரி வாரியரது கடமைகள் ஆகும். புன்செய் நிலங்களையும், தோட்டங்களையும் பற்றிய எல்லாவற்றையும் பார்த்துக் கொள்ளுதல் தோட்ட வாரியரது கடமையாகும். பொன் நாணயங்களை ஆராய்ந்து அவற்றின் மதிப்பை நிச்சயிப்பது பொன் வாரியரது கடமையாயிற்று.

அரசாங்கத்திற்கு குடிகள் செலுத்தவேண்டிய நில வரியையும், பிறவரிகளையும் வாங்கி ஆண்டுதோறும் அனுப்ப வேண்டிய கடமையை பஞ்சவார வாரியர் ஆற்றிவந்தனர்.

நீர் நிலங்களாகிய நன்செய்களைக் கவனித்து வந்தவர்கள் கழனி வாரியராவர். ஊர்க்கணக்கரும், மத்தியஸ்தரும் எழுதும் கணக்குகளை ஆராய்ந்து உண்மை காண்பது கணக்கு வாரியரது கடமையாகும். பயிரிடப்பெற்ற நிலங்களை அளந்து அவற்றின் பரப்பையும், விளைவுப் பொருள்களையும் கிராமக் கணக்கில் எழுதிவைப்பது தடிவழி வாரியரது கடமையாகும். ஒவ்வொரு குடும்பிலும் வாரியத்தில் உறுப்பினராதற்குத் தகுதியுடையவர்களைத் தெரிந்துரைப்பது குடும்பு வாரியரது கடமையாகும். சில சதுர்வேதிமங்கலங்களில் சம்வற்சர வாரியம் ஒன்றே மேற்கூறப்பெற்ற எல்லா கடமைகளையும் ஆற்றி வந்தது என்பது கல்வெட்டுகளால் அறியக்கிடக்கின்றது.

## ஊர் அல்லது ஊரவர்

சதுர்வேதி மங்கலங்களில் அமைக்கப்பெற்றிருந்த மகா சபைகளும், அவற்றின் கூறுகளாகிய வாரியங்கள் அன்றியும், ஊர் அல்லது ஊரவர் என்ற அமைப்புகளும் சோழர்களுடைய ஆட்சியில் நிலைபெற்றிருந்தன. பிரமதேயம் என்று வழங்கப் பெற்ற சதுர்வேதி மங்கலங்களில் அந்தணர்களே நிலங்களை அனுபவித்து வந்தனர். சில கிராமங்களில் அந்தணரல்லாத மற்றையோர்களும் வாழ்ந்தனர். அக் கிராமங்களில் அமைந்திருந்த சபைகளுக்கு ஊர்ச்சபைகள் என்ற பெயர் வழங்கியது. தஞ்சை மாவட்டத்திலுள்ள சாத்தமங்கலம் என்ற ஊரில் இந்து சமயத்தைச் சேர்ந்த தேவதானப் பகுதியில் ஓர் ஊர்ச்

சபையும், சமணர்கள் வாழ்ந்த பள்ளிச்சந்தம் பகுதியில் சமணருக்குரிய ஊர்ச்சபையொன்றும் அமைந்திருந்தது. புதுக் கோட்டைப் பகுதியில் உள்ள குமாரமங்கலம், அம்மன்குடி என்ற இரண்டு ஊர்களிலும் ஊர்ச்சபைகள் இருந்தன. ஊர்ச் சபையின் அங்கத்தினர்கள், 'ஊராக இசைந்த ஊரோம்' என்ற வாக்கியத்தினால் தங்களுடைய தீர்மானங்களை ஏற்படுத் தினர். இந்த ஊர்ச்சபைகளின் நிருவாகத்தை கணம், ஆளும் கணம், மீயாளுங்கணம் என்ற உட்சபைகள் நடத்திவந்தன. வரிவசூல் செய்யும் தண்டல்நாயகம் என்னும் அதிகாரியும், நியாயத்தார் என்ற நீதிபதிகளும் இருந்தனர்.

## நாடும் — நாட்டுச் சபைகளும்

சதுர்வேதி மங்கலம், ஊர் என்ற பிரிவுகளில் அமைந்திருந்த சபைகள் அன்றியும், நாடு என்ற பெரும்பிரிவிலும் அதே பெயர்கொண்ட நாட்டுச் சபை அமைவுற்றிருந்தது. இச் சபைகளின் அங்கத்தினர்கள், 'நாடாக இசைந்த நாட்டோம்' என்ற வாக்கியத்தை தங்களுடைய தீர்மானங்களில் உபயோகித்தனர். இந்த நாட்டுச் சபைகள் அல்லது நாட்டவர் களின் தீர்மானங்களில் அந்த நாட்டின் பிரதிநிதிகளாகிய சிலரே தங்களுடைய கையெழுத்திட்டுள்ளனர்.

மேற்கூறப்பெற்ற சபை, ஊர், நாடு முதலிய அமைப்புகள் அந்தந்த பகுதிகளில் அமைந்திருந்த கோவில்களையும், சமண, பௌத்த விகாரங்களையும் மேற்பார்வை செய்து அவற்றை ஒழுங்கான முறையில் நடத்திவந்தன. இந்துக் கோவில் களைப் பராமரித்துவந்த வாரியங்களுக்கு மூலபௌருடர், கிருஷ்ணகணத்தார், குமாரகணத்தார், சங்கரபாடியர், காளி கணத்தார், பன்மகேச்சுரர் என்ற பெயர்கள் வழங்கின., சாத்த கணத்தார் என்போர் கிராமத்திலிருந்த ஐயனார், சாத்தன் முதலிய தெய்வங்களுக்குரிய கோவில்களைப் பராமரித்தனர்.

## வரிவிதிப்பு முறை

சோழப்பேரரசில் அரசாங்கத்திற்குரிய வருவாய்களுள் முதன்மைபெற்று விளங்கியது நில வரியே ஆகும். இதனைக் கடமை எனவும், காணிக்கடன் எனவும், இறை எனவும் கல்வெட்டுகள் கூறுகின்றன. இவ் வரியை பஞ்சவார வாரி யத்தினர் குடிகளிடமிருந்து ஆண்டுதோறும் பெற்று ஒருங்கு சேர்த்து தலைநகருக்கும், அரசாங்கப் பொருள்நிலையங்கள் இருந்த பிற இடங்களுக்கும் அனுப்பிவந்தனர். பஞ்சவார

வாரியர், நிலங்களில் விளைந்த நெல்லை ஆறு கூறுக்கி, ஐந்து கூறுகளை வெள்ளான்வகையில் நிலவுரிமையுடைய குடிகளுக்கு அளித்துவிட்டு, எஞ்சிய ஒரு பகுதியை அரசாங்கத்திற்கு உரிய ஆறில் ஒரு கடமையாகப் பெறுவது வழக்கம். ஆகையால், பஞ்சவார வாரியம் என்பது அரசாங்கத்திற்குரிய நெல்வரியை வசூல் செய்த வாரியமாகுமேயன்றி பஞ்சநிவாரணம் செய்த வாரியமன்று. இவ்விதம் மொத்த மகசூலில் ஆறில் ஒரு பகுதியை நெல்வரியாகவோ அல்லது நாணயமாகவோ செலுத்தலாம். இதற்குக் காணிக்கடன் அல்லது புரவு வரி என்ற பெயர்களும் வழங்கியது.

இந் நில வரியேயன்றி தறியிறை, செக்கிறை, மனையிறை, அங்காடிப்பாட்டம், தட்டாரப்பாட்டம், இடைப்பாட்டம், ஈழம்பூட்சி, வண்ணாரப்பாறை, கண்ணாலக்காணம், குசக் காணம், ஓடக்கூலி, நீர்க்கூலி, நாடுகாவல் வரி முதலிய பல வித வரிகளும் கல்வெட்டுகளில் கூறப்பெற்றுள்ளன. இவ் வரிகளின் பெயர்களைக் கொண்டு சோழர்களுடைய ஆட்சியில் நடைபெற்ற எல்லாத் தொழில்களுக்கும் வரிகள் விதிக்கப் பெற்றமை விளங்குகின்றது. ஒவ்வொரு வரியும் அந்தத் தொழில் செய்தவரிடம் வாங்கப்பட்டதேயன்றி எல்லாரிடமும் வாங்கப் பெறவில்லை. இக் காலத்தில் வழக்கத்தில் உள்ள தொழில் வரி ஒன்றே மேற்கூறப்பெற்ற எல்லா வரிகளையும் தன்னகத்தே கொண்டிருப்பதெனக் கூறலாம். இவையன்றியும் இரவு வரி, போர் வரி, காவிரிக்கரை விநியோகம், சபா விநியோகம் என்ற வரிகளும் வசூலிக்கப்பெற்றன. இக் காலத்தில் நில வரி செலுத்துவோரிடம் கூடுதலாக வசூலிக்கப்பெறும் சர்சார்ஜ் (Surcharge) போன்ற வரி இரவு வரி என வழங்கியது. பகைப் புலத்து அரசர்களோடு போர் நடந்த காலத்தில் மாத்திரம் மக்களிடம் வசூலிக்கப்பெற்றதற்குப் போர் வரி என்றும், காவிரியாற்றில் வெள்ளங்கள் ஏற்பட்ட காலங்களில் கரைகளைப் பலப்படுத்துவதற்கு அக் கரைகளின் ஓரங்களில் வசித்த மக்களிடம் வசூலிக்கப்பெற்ற வரிக்குக் காவிரிக்கரை விநியோகம் என்றும் பெயர்கள் வழங்கின. சபா விநியோகம் என்பது மகா சபைகளைத் திறம்பட நடத்துவதற்கு ஏற்படும் செலவுகளை ஈடு செய்வதற்கு வசூலித்த வரியாகும். நாடுகாவல் அல்லது பாடி காவல் வரி என்பது, கிராமங்களில் களவு நிகழாதவாறு காத்தற் பொருட்டுக் குடிமக்களிடம் வாங்கிவந்த ஒரு வரியாகும். கல் வெட்டுகளில் இவை பெரும்பாடிகாவல், சிறுபாடிகாவல் என்று இருவகையாகக் குறிக்கப்பெற்றுள்ளன. வாணிகத்தின் பொருட்டு வெளிநாடுகளிலிருந்து கடல்வழியாகவும், உள்நாடு

களிலிருந்து பெருவழிகள் மூலமாகவும் வரும் பண்டங்களின்மீது விதிக்கப்பெற்றது சுங்க வரியாகும்.

## நிலஅளவு

சோழப்பேரரசில் கி. பி. 1001ஆம் ஆண்டில் முதல் இராஜ ராஜ சோழன் ஆட்சியிலும், 1086-ல் முதல் குலோத்துங்கன் ஆட்சியிலும், 1236-ல் மூன்றும் குலோத்துங்கன் ஆட்சியிலும் மூன்றுதடவைகள் நிலங்கள் அளக்கப்பெற்றதை நாம் உணர முடிகிறது. நிலங்கள் பதினாறு சாண் நீளமுள்ளதாக உள்ள ஒரு கோலினால் அளக்கப்பெற்றன. அக் கோல் உலகளத்த கோல் எனவும், நிலவளவைச் செய்த அதிகாரி உலகளந்தான் என்றும் அழைக்கப்பெற்றமை அறியத்தக்கதாகும். நிலங்கள் நீர்நிலம் (நன்செய்), கொல்லை (புன்செய்), நத்தம், காடு என்று பாகுபாடு செய்யப்பெற்றன. குழி, மா, வேலி, என்ற முறையில் நிலங்கள் அளக்கப்பெற்றன. நிலங்களின் எல்லைகள் நன்கு விளங்கும்படிக் காணிக்கற்கள் நடப்பெற்றன. சிவாலயங்களுக்குரிய நிலங்களுக்கு திரிசூலம் பொறிக்கப் பெற்ற கற்களும், திருமால் கோவில்களுக்குரிய நிலங்களுக்கு திருவாழிப் (சக்கரம்) பொறிக்கப்பெற்ற கற்களும், சைன—பௌத்த பள்ளிகளுக்கு விடப்பட்ட நிலங்களுக்கு குண்டிகை அல்லது மூன்று குடைகள் பொறிக்கப்பெற்ற கற்களும் எல்லைக் கற்களாக நாட்டப்பெற்றன.

## நிலவுரிமை

சோழப்பேரரசில் நிலங்களை அனுபவித்து வந்தோரின் உரிமைகளைக் கொண்டு அந் நிலங்களை மூவகையாகப் பிரிக்கலாம். அவை :

(1) உழவுத் தொழிலையே வழிவழியாகக் கொண்டு நிலங்களை அனுபவித்துவந்த குடிகளுக்கே உரிமையுள்ள வெள்ளான்வகை ஒன்றாகும். இவ்வகை நிலங்களை இக் காலத்தில் வழங்கும் ரயத்வாரி முறை நிலங்களுக்கு ஒப்பிடலாம்.

(2) தேவதானம், திருவிடையாட்டம், பள்ளிச்சந்தம் மடப்புறம், சாலாபோகம், பிரமதேயம் என்று அழைக்கப் பெற்று தானமாகக் கொடுக்கப்பெற்ற நிலங்கள் மற்றொரு வகையாகும்.

(3) மூன்றாவது வகை நிலங்கள், சில குறிப்பிட்ட காரியங்களைச் செய்தற்கு அவற்றைச் செய்வோர்க்கு கொடுக்கப் பெற்றவையாகும். இவை: சீவிதம் போகம், விருத்தி,

காணி, பற்று, புறம், பட்டி, முற்றூட்டு என அக் காலத்தில் அழைக்கப்பெற்றன. மேற்கூறப்பெற்ற நிலவகைகள் பிற்காலக் கல்வெட்டுகளில் மானியம் என்று அழைக்கப்பெற்றுள்ளன.

வெள்ளான்வகையொழிந்த பிற நிலங்களின் மீது காராண்மை, மீயாட்சி என்ற இருவேறு உரிமைகள் இருந்தன. காராண்மை என்பது பயிரிடும் குடிகளது உரிமையாகும். மீயாட்சி என்பது நிலத்தின் சொந்தக்காரரது உரிமையாகும். இக் காலத்தில் இவை குடிவாரம் எனவும், மேல்வாரம் எனவும் வழங்குகின்றன. அரசாங்க அதிகாரிகளுக்குக் கொடுக்கப் பட்டிருந்த சீவிதங்களிலும் இருவகையிருந்தன. ஒன்று, சீவிதம் பெற்றிருக்கும் அதிகாரிகள் அரசாங்கத்திற்குரிய நிலவரி முதலான வரிகளை மாத்திரம் குடிகளிடமிருந்து ஆண்டு தோறும் வாங்கிக்கொள்வது. மற்றொன்று, சீவிதமாகத் தமக்கு கிடைத்துள்ள நிலங்களை இறையிலியாகத் தாமே நேரில் அந்த அதிகாரிகள் அனுபவித்துக்கொள்வதாகும். பிரமதேய கிராமங் களில் ஏகபோகம், கணபோகம் என்ற இருவகை உரிமைகள் இருந்தன. ஓர் அந்தணப் பெருமகனே பிரமதேயமாகப் பெற்று இறையிலி உரிமையுடன் அனுபவித்து வந்தால் அவ்வூர் ஏகபோகப் பிரமதேயம் என்று கூறப்பெற்றது. சில கிராமங்களில் உள்ள நிலங்கள் அங்கு வசித்த பிராமணர்கள் எல்லோருக்கும் உரிமையாக இருந்தால் அதற்குக் கணபோகம் என்ற பெயர் வழங்கியது. சில ஊர்களில் ஒரு பகுதி தேவ தானமாகவும், மற்றொரு பகுதி பிரமதேயமாகவும் இருந்தது. தஞ்சை மாவட்டத்திலுள்ள திருவிசலூர், திரைமூர், திருவேதி குடி முதலான ஊர்கள் தேவதான பிரமதேயங்களாக இருந்தன என்பதைக் கல்வெட்டுகள் உணர்த்துகின்றன. திருநெய்த் தானம், திருவடந்தை முதலிய கிராமங்களில்ஒருபகுதி தேவதான மாகவும், மற்றொருபகுதி வெள்ளான்வகையாகவும் இருந்தன என்பது கல்வெட்டுகளில் கூறப்பெற்றுள்ளன. இராசகிரி என வழங்கும் இராசகேசரிச் சதுர்வேதிமங்கலம், வேளச்சேரி முதலிய இடங்களில் ஒருபகுதி பிரமதேயமாகவும், மற்றொரு பகுதி வெள்ளான் வகையாகவும் இருந்தது என்றும் நாம் அறிகிறோம்.

சோழமன்னர்கள் வெள்ளான்வகை நிலங்களைப் பிரமதேய மாகவும் தேவதானமாகவும்; பிரமதேயங்களை வெள்ளான் வகையாகவும் தேவதானங்களாகவும் மாற்றியமைப்பதும் உண்டு.

மேற்கூறப்பெற்ற நிலங்களில் தேவதானம் என்பது சிவன் கோவில்களுக்கு அளிக்கப்பெற்ற இறையிலி நிலங்களாகும்,

திருமால் கோவில்களுக்கு அளிக்கப்பெற்ற நிலங்கள் திருவிடையாட்டம் எனவும், சைன, பௌத்த ஆலயங்களுக்கு விடப்பெற்ற நிலங்கள் பள்ளிச்சந்தம் எனவும், மடாலயங்களுக்குக் கொடுக்கப்பெற்ற கிராமங்கள் மடப்புறம் எனவும் வழங்கின. அந்தணர்கள், சிவயோகிகள் முதலியவர்களுக்கு உணவு அளிக்கும் அறச்சாலைகளுக்கு அளிக்கப்பெற்ற நிலங்கள் சாலாபோகம் எனவும், சீலமும், புலமையும் படைத்த அந்தணர்களுக்கு வழங்கப்பெற்ற நிலங்கள் பிரமதேயங்கள் எனவும் வழங்கின. அருச்சனுபோகம், வைத்தியபோகம், நிருத்தபோகம், பாரதவிருத்தி, பட்டவிருத்தி என்ற நிலங்களும் மானியங்களாகக் கொடுக்கப்பெற்றன. திருக்கோயில்களில் சேவைபுரிந்த பதியிலார், நட்டுவர் சாக்கையர், கூத்தர், வீணை மீட்டுவோர், உவச்சர், கணக்கர், ஓதுவார் முதலியவர்களுக்கு அளிக்கப்பெற்ற நிலங்கள் பதியிலார்க்காணி, நட்டுவக்காணி, சாக்கைக்காணி, கூத்தாட்டுக்காணி, வீணைக்காணி என வழங்கிவந்தன.

போரில் உயிர்துறந்த வீரர்களுடைய மனைவி மக்களுக்கு அரசர்களும், தலைவர்களும் வழங்கிய நிலங்கள் உதிரப்பட்டி எனவும், நீர்ப்பாசன ஏரிகளைப் பாதுகாத்தற் பொருட்டுக் கொடுக்கப்பெற்ற நிலங்கள் ஏரிப்பட்டி எனவும், அரசர்கள் விரும்பியபொழுது போர்ப்படைகளை அனுப்பி உதவிபுரியும் பொருட்டு அப் படைகளின் தலைவர்களுக்கு அளிக்கப்பெற்ற நிலங்கள் படைப்பற்று, வன்னியப்பற்று எனவும் வழங்கின.

## நீர்ப்பாசனம்

சோழவள நாட்டைக் காவிரிநாடு எனவும், பொன்னிநாடு எனவும் புலவர் பலர் புகழ்ந்துள்ளனர். கரிகாற்பெருவளத்தானை, 'வேலியாயிரம் விளையுட்டாகக் காவிரிபுரக்கும் நாடு கிழவோனே' என்று முடத்தாமக்கண்ணியார் என்ற புலவர் புகழ்ந்துள்ளார். கரிகாலன் என்ற பெருவேந்தன் காவிரியின் இருமருங்கும் கரையெடுப்பித்து அதனை சோழநாட்டின் நெல்விளைவிற்குப் பயனுள்ளதாகச் செய்ததை, 'பொன்னிக் கரைகண்ட பூபதி' என்னும் பெயரால் ஒட்டக்கூத்தர் குறிப்பிட்டுள்ளார். கரிகாலனுக்குப் பிறகு கி. பி. 1068 ஆம் ஆண்டில் வீரராஜேந்திர சோழனும் காவிரியாற்றிற்குக் கரைகள் அமைத்ததாக நாம் கேள்விப்படுகிறோம்.[1] மண்ணி, கொள்ளிடம், கடுவாய் வெண்ணி என்ற சோழநாட்டு

[1] T. V. S. Pandarathar, Vol. III, P. 85

ஆறுகளை கி. பி. ஏழாம் நூற்றுண்டில் வாழ்ந்த சைவசமயக் குரவர்கள் குறித்துள்ளனர். ஆகையால், அக் காலத்திற்கு முன்னரே இக் கிளையாறுகள் வெட்டப்பட்டனவாகும். கி. பி. பத்தாம் நூற்றுண்டு முதல் ஆட்சிபுரிந்த சோழமன்னர்கள் பல ஆறுகளையும் ஏரிகளையும் அமைத்தனர். கொள்ளிடத்தில் அமைந்துள்ள அணையிலிருந்து பிரிந்து வீராணத்தேரிக்கு நீரைக் கொண்டுசெல்லும் மதுராந்தக வடவாறும், தஞ்சாவூருக்கு வடபுறத்தில் பாயும் வடவாறும், மதுராந்தக சோழன் என்ற முதற்பராந்தக சோழன் காலத்தில் தோன்றியவையாகும். மண்ணியாற்றிற்கு குஞ்சரமல்லன் என்ற பெயர் வழங்குவதால், அப் பெயரையுடைய முதற்பராந்தக சோழன் காலத்தில் அது வெட்டப்பட்டதாகும். உய்யக் கொண்டான், கீர்த்திமான் ஆகிய ஆறுகள் முதல் இராஜராஜ சோழனாலும், முடிகொண்டான் என்னும் சிற்றுறு கங்கை கொண்ட சோழனாலும் அமைக்கப்பெற்றன. வீரசோழனாறு வீரராஜேந்திர சோழன் காலத்திலும், விக்கிரமனாறு விக்கிரம சோழன் காலத்திலும் உண்டாக்கப்பெற்றன.

வடஆர்க்காடு மாவட்டத்தில் உள்ள சோழவாரிதியும், சிதம்பரத்திற்கு அண்மையில் உள்ள வீராணம் ஏரியும் முதற்பராந்தகன் காலத்தில் அமைக்கப்பெற்றவையாகும். பாண்டிய நாட்டில் ஆனைமலைப் பக்கத்திலுள்ள கலியனேரியும் பராந்தக சோழன் ஆட்சியில் அமைக்கப்பெற்றதாகும். தென்ஆர்க்காடு மாவட்டத்திலுள்ள உலகபுரம் கண்டராதித்தப் பேரேரியும், திருமழப்பாடிக்கு அருகிலுள்ள செம்பியன்மாதேவிப் பேரேரியும், முதற்பராந்தக சோழனுடைய புதல்வர் கண்டராதித்த சோழர் காலத்தில் அமைக்கப்பெற்றன. கண்டராதித்தருடைய புதல்வர் உத்தம சோழருடைய ஆட்சியில் மதுராந்தகத்திலுள்ள ஏரியும், திரிபுவனியிலுள்ள (புதுச்சேரி) ஏரியும் வெட்டப்பெற்றன.[1] வடஆர்க்காடு மாவட்டத்தில் பிரமதேசம் என்னும் ஊரில் சுந்தரசோழப் பேரேரி, குந்தவைப் பேரேரி என்ற இரண்டு ஏரிகள் சுந்தர சோழன் என்பாருடைய ஆட்சியில் அமைக்கப்பெற்றன கங்கைகொண்ட சோழபுரத்திற்கு அருகில் உள்ள சோழ கங்கம் என்ற ஏரி முதல் இராஜேந்திர சோழன் காலத்தில் அமைவுற்றது. திருவரங்கத்திற்குக் கிழக்கே கோவிலடிக்கு அருகில் உள்ள கிராண்ட் அணைக்கட்டு 1063 முதல் 1070 வரை ஆட்சிபுரிந்த வீரராஜேந்திர சோழனால் அமைக்கப்பெற்றது. நீர்ப்பாசனத்திற்கு ஏற்ற ஏரிகளை ஆண்டுதோறும் ஆழமாக,

[1] Ibid., P. 89

வெட்டியும், கரைகளை உயரமாகக் கட்டியும், மழைக்காலத்தில் தண்ணீரால் நிரப்பியும் மக்களுக்குப் பயன்படும்படி செய்தவர்கள் ஏரி வாரியப் பெருமக்களாவர்.

## வாணிகமும் கைத்தொழில்களும்

சோழமண்டலக் கரையில் வாணிகத்தில் சிறந்து விளங்கிய கடற்றுறைப்பட்டினங்கள் நாகப்பட்டினம், காரைக்கால், மாமல்லபுரம், வீரசோழப்பட்டினம், மைலாப்பூர் முதலியவை யாகும். சோழநாட்டு வணிகர்கள் மேற்கேயுள்ள அராபிய நாட்டினரோடும், பாரசீகரோடும், கிழக்கேயுள்ள சுவர்ணபூமி, ஸ்ரீவிஜயம், சுவர்ணதீபம், யவத்தீபம் (Java), காம்போஜம், சீனம் ஆகிய நாட்டினரோடும் வாணிபம் நடத்தினர். இவ் வணிகர்கள் நானுதேச திசையாயிரத்து ஐந்நூற்றுவர், மணிக்கிராமத்தார், நகரத்தார், வளஞ்சியர், ஐந்து வண்ணத்தார் என பல குழுவினர்களாகப் பிரிந்திருந்தனர் எனக் கல்வெட்டு களிலிருந்து நாம் அறிகிறோம். முதன்முதலில் கூறப்பெற்றுள்ள நானுதேச திசையாயிரத்து ஐந்நூற்றவர் என்பார் பலதிசை களுக்கும் சென்று வாணிகம் செய்த ஐந்நூறு வணிகர்கள் அடங்கிய குழுவாகும். கி. பி. 1088 ஆம் ஆண்டில் சுமாத்திரா தீவில் வரையப்பெற்றுள்ள தமிழ்க் கல்வெட்டு ஒன்றில், 'திசையாயிரத்து ஐந்நூற்றுவர்' என்ற வணிகக் குழுவினரைப் பற்றிய குறிப்பொன்று காணப்பெறுகிறது. மணிக்கிராமத்தார் என்ற குழுவினர் தலைநகரங்களிலும், கடற்றுறைப் பட்டினங் களிலும் வசித்து அயல்நாடுகளுக்குச் சென்று வாணிகம் நடத்திய செய்திகள் கல்வெட்டுகளிலும், செப்பேடுகளிலும் காணப்பெறுகின்றன. உறையூர் மணிக்கிராமம், காவிரிப்பூம் பட்டினத்து மணிக்கிராமம், கொடும்பாளூர் மணிக்கிராமம், இளங்கோப்பட்டினத்து மணிக்கிராமத்தார் என்று கல்வெட்டு களில் கூறப்பெற்றுள்ளனர். பல்லவ வேந்தனுகிய தெள்ளாறு எறிந்த நந்திவர்மன் ஆட்சிக்காலத்தில் சீயம் நாட்டில் வரையப்பெற்ற கல்வெட்டு ஒன்றில், மணிக்கிராமத்தார் என்ற வணிகக் குழுவினர் வியாபாரம் செய்துவந்ததாக நாம் அறியக் கிடக்கின்றது.

இனி, நகரத்தார் என்பார் காஞ்சிபுரம், மாமல்லபுரம் நந்திபுரம், பழையாறை, மைலாப்பூர் முதலிய நகரங்களிலிருந்து வாணிகத்தொழிலை நடத்தியும், நகர ஆட்சியில் முக்கிய பங்கு கொண்டும் இருந்த செய்திகள் கல்வெட்டுகளிலும், இலக்கியங் களிலும் காணப்பெறுகின்றன.[1] வளஞ்சியர் என்ற குழுவினர்

1 Ibid., P. 112

தென்னிலங்கை வளஞ்சியர்' எனக் கூறப்பெற்றுள்ளமையால், அவர்கள் ஈழநாட்டிலிருந்து தமிழ்நாட்டில் குடியேறி வாணிகம் செய்தவர்கள் என்று நாம் உணர்ந்துகொள்ளலாம். இராமநாத புரம் மாவட்டம் அருப்புக்கோட்டையில் உள்ள சுந்தரேச்வரர் கோவிலில் காணப்பெறும் கல்வெட்டு ஒன்றில், தென்னிலங்கை வளஞ்சியரில் ஒருவராகிய சேவகத்தேவன் என்பார் குறிப்பிடப் பெற்றுள்ளார். திருக்கண்ணபுரத்தில் காணப்பெறும் கல்வெட் டொன்று, அவ்வூரில் இருந்த கருணாகர வீரர் மடத்தில் வைணவர்களுக்கு உணவளிப்பதற்கு, ஒவ்வொரு வணிகரும் ஒரு குறிப்பிட்ட தொகையைக் கொடுக்கவேண்டுமென்று தென்னிலங்கை வளஞ்சியர்கள் தமக்குள் செய்துகொண்ட உடன்படிக்கையொன்றைப்பற்றிக் கூறுகிறது.

## அஞ்சுவண்ணத்தார்

சேரநாட்டில், முதல் ஆதித்தசோழன் காலத்தில் இருந்த சேரமான் தாணுரவியின் ஆட்சியிலும், முதல் இராஜராஜ சோழன் காலத்தில் இருந்த பாஸ்கர ரவிவர்மன் ஆட்சியிலும் வரையப்பெற்ற கல்வெட்டுகளில் அஞ்சுவண்ணத்தார் என்ற வாணிகக் குழுவினர் குறிப்பிடப்பெற்றுள்ளனர். இந்த வியாபாரக் குழுவினர் யாவர் என்பதைப்பற்றி வரலாற்றுசிரியர் களிடையே மிகுந்த கருத்து வேற்றுமைகள் காணப்பெறு கின்றன. அறிஞர் குண்டர்ட், அறிஞர் பர்னல் என்போர் அஞ்சுவண்ணத்தார் என்பார் சேரநாட்டில் வாழ்ந்த யூதர் களாக இருக்கலாம் எனக் கூறிப்போந்தனர். எல்லிஸ் என்ற மற்றொரு ஆராய்ச்சியாளரும், மற்றும் சிலரும் இத் தொடர் ஐந்துவகையான சாதியினரையும், அவர்களுடைய சில வியாபார உரிமைகளையும் குறிக்கும் எனக் கூறினர். ஆனால் திருவாளர் சதாசிவப் பண்டாரத்தார், 'பல்சந்த மாலை' என்னும் பழைய தமிழ்நூலிலிருந்து சில ஆதாரங்களைக் காட்டி, அஞ்சு வண்ணத்தார் என்பார் முகம்மதிய சமயத்தைச் சேர்ந்த வியாபாரக் குழுவினர் எனப் பொருள் கொண்டுள்ளார். 'இயவனராசன் கலுபதிதாம் முதல் எண்ணவந்தோர், அயன் மிகு தானையர் அஞ்சுவண்ணத்தவர்' என்றும், 'ஏழ்பெருந் தேரங்கத்து யவனர்கள் அல்லா எனவந்து' என்றும் கூறப்படும் தொடர்களைக் கொண்டும், அஞ்சுவண்ணத்தார் என்னும் குழுவினர் இஸ்லாமிய வணிகர்களைக் குறிக்கும் எனக் கூறுவர். அவர்கள் மத்தியதரைக்கடல் பிரதேசத்து யவனர்கள் என்றும், கலுபதி என்ற காலிப் ஆட்சிக்கு அடங்கியவர்கள் என்றும், அல்லாவை வணங்குபவர்கள் என்றும் கூறும் இத் தொடர்கள்

அவர்களுடைய சமயத்தை நன்கு எடுத்துக்காட்டுகின்றன. தினந்தோறும் ஐந்துமுறைகள் இறைவனை வணங்கவேண்டும் என்ற கொள்கையுடையவர்களாகையாலும், இஸ்லாம் சமயத்தில் ஐந்து முக்கிய கொள்கைகளைப் பின்பற்றியபடியாலும் அவர்கள் அஞ்சுவண்ணத்தார் என அழைக்கப்பெற்றிருக்க வேண்டும். கிழக்குக் கடற்கரையின் ஓரமாக உள்ள கீழக்கரை என்னும் ஊரிலும், நாகப்பட்டினத்திலும் இந்த அஞ்சு வண்ணத்து வியாபாரக் குழுவினர் தங்கி வாணிகம் செய்ததற்கு கல்வெட்டுகளில் ஆதாரங்கள் உள்ளன.

## நாணயங்களும் அளவைகளும்

சோழப் பேரரசில் தங்கம், வெள்ளி, செம்பு முதலிய உலோகங்களில் செய்யப்பெற்ற நாணயங்கள் வழங்கிவந்தன. இதுவரையில் கிடைத்துள்ள சோழவேந்தருடைய நாணயங் களில், உத்தமசோழருடைய ஆட்சிக்காலத்தில் வெளியிடப் பெற்ற பொற்காசுதான் மிக்கப் பழமை வாய்ந்தது என்பது அறிஞர்களின் கருத்தாகும். இந்த நாணயத்தின் நடுவில் புலியுருவமும், அதன் வலப்பக்கத்தில் மீன் உருவமும் பொறிக்கப்பெற்று, ஓரத்தில் உத்தமசோழன் என்று கிரந்த எழுத்தில் எழுதப்பெற்றுள்ளது. வட்டவடிவமாக இருந்த இந்தப் பொன் நாணயம் சர் வால்டர் எலியட் என்பாரிடம் கிடைத்தபோதிலும், பின்னர் அது காணுமற் போய்விட்டமை யால் அதைப்பற்றிய பிற செய்திகளை நாம் உணர்ந்துகொள்ள முடியவில்லை. முதல் இராஜராஜசோழன் காலத்திற்கு முன்னும் பின்னும் மாடை, காசு என்ற இருவகை நாணயங்கள் வழக்கத்தில் இருந்தன. மாடை என்பது ஒரு கழஞ்சு எடை உள்ளதும், ஒன்பதரை மாற்றுடையதும் ஆகிய செம்பொன்னால் அமைந்த நாணயமாகும். இரண்டு குன்றிமணிகள் கொண்டது ஒரு மஞ்சாடி எனவும், இருபது மஞ்சாடிகள் கொண்டது ஒரு கழஞ்சு எனவும் வழங்கியது. மாடை என்பது 40 குன்றிமணி எடையுடைய பொன் நாணயமாகும். காசு என்பது இருபது குன்றிமணி எடையுடைய பொன்நாணயமாகும். ஈழக்காசு என்ற ஒருவகைப் பொற்காசு சோழர்களுடைய ஆட்சிக் காலத்தில் வழங்கியுள்ளமை கல்வெட்டுகளால் அறியக் கிடக்கின்றது. இலங்கையை வென்று தங்களுடைய ஆட்சிக் குட்படுத்திய சோழமன்னர்கள் அந் நாட்டில் வழங்குவதற்கு வெளியிட்ட பொற்காசுகள் ஈழக்காசு என வழங்கியிருக்கலாம். ஒரு கழஞ்சு எடையுள்ளதும், அதிற்பாதி எடையுள்ளதுமான வெள்ளி நாணயங்களும் 'சோழ நாராயணன்' என்ற பெயருடன் வழக்கத்தில் இருந்தன. கல்வெட்டுகளிலிருந்தும், இலக்கியங்

களிலிருந்தும் 'காணம்' என்ற மற்றொரு நாணயமும் வழக்கத்தில் இருந்ததாகத் தெரிகிறது.

சோழமன்னர்களுடைய கல்வெட்டுகளில் கச்சாணம், அக்கம், திரமம் என்ற நாணயங்களின் பெயர்களும் கூறப் பெற்றுள்ளன. கச்சாணம் என்பது இராட்டிரகூடர்களுடைய நாட்டில் வழங்கிய கத்யாணம் என்னும் நாணயத்தின் தமிழ் மொழிபெயர்ப்பாக இருக்கலாம் என்று சிலர் கூறுவர். தஞ்சையில் உள்ள இராஜராஜேச்சுரம் கல்வெட்டுகளில் அக்கம் என்ற நாணயத்தின் பெயர் மிகுதியாகப் பயின்றுள்ளது. பன்னிரெண்டு அக்கம் கொண்டது ஒரு காசுக்கு ஈடாக மதிக்கப்பெற்றது. ஆனால், அக்கம் என்ற நாணயம் வெள்ளியால் செய்யப் பெற்றதா அல்லது செம்பினால் செய்யப்பெற்றதா என்பது விளங்கவில்லை. காஞ்சிபுரம், உடையார்க்குடி, திருப்புகலூர் முதலிய இடங்களில் காணப்பெறும் கல்வெட்டுகளில் திரமம் என்ற நாணயம் கூறப்பெற்றுள்ளது. இது டிராக்மா என்ற கிரேக்க நாணயத்தின் தமிழ் மொழிபெயர்ப்பாக இருக்கலாம் என சில அறிஞர்கள் கூறுவர்.[1]

## சோழர்கள் காலத்தில் இராணுவம்

ஆங்கிலநாட்டு மன்னர்கள், தங்களுடைய இராணுவ அமைப்பிற்குத் தலைவராகக் கருதப்பெறுவதுபோல், சோழ மன்னர்களும் கரி, பரி, காலாட்படைகளின் தலைவர்களாக விளங்கினர். யானைக்கூட்டங்களும், குதிரைப்படைகளும் சோழர்களுடைய அணிவகுப்பில் முதலிடம் பெற்றிருந்தன. வன்மை மிக்க காலாட்படையும், கப்பற்படையும் சோழப் பேரரசை அமைப்பதற்கு உதவிபுரிந்தன. காலாட்படையினர் வாள், கேடயம், வில், அம்பு, ஈட்டி முதலிய ஆயுதங்களைக் கொண்டு தான் போரிட்டிருக்க வேண்டும். சோழர்களுடைய காலாட் படையினர் துப்பாக்கி அல்லது பீரங்கிகளைக்கொண்டு போரிட்டிருக்க முடியாது. இலங்கை, கிழக்கிந்திய தீவுகளுக்குப் படையினரை ஏற்றிச்சென்ற கப்பல்கள் பாய்மரக் கப்பல்களாகத்தான் இருந்திருக்கும். கல்வெட்டுகளில், சுமார் எழுபதிற்கு மேற்பட்ட பட்டாளங்கள் இருந்ததெனக் கூறப் பெற்றுள்ளது. இந்தப் பட்டாளங்களில் கைக்கோளப் பெரும் படை சிறப்பிடம் பெற்றிருந்தது. கேடயத்தையும், வாள், ஈட்டி முதலியவற்றையும் கைகளினால் பிடித்துப் போரிட்டமையால் இவர்களுக்குக் கைக்கோளர் என்ற பெயர் உண்டாகியிருக்கக்

[1] Ibid., P. 132

கூடும். வில்லம்பு கொண்டு போரிட்ட படைகளும், வேலாயுதங்களையும் மற்ற போர்க்கருவிகளையும் உபயோகித்த பட்டாளங்களும் இருந்தன. சோழச் சேனைகளுக்கு அரசர்களும், இளவரசர்களும், குறுநில மன்னர்களும், படைத்தலைவர்களும் தலைமை வகித்துப் போரை நடத்தினர். சேனைத்தலைவரின் இடது பக்கத்திலும், வலதுபக்கத்திலும் நின்று போரிட்ட வீரர்களுக்கு இடங்கைப்படை, வலங்கைப்படை என்ற பெயர்கள் இடப்பட்டிருக்கலாம். பின்னர், இப் பெயர்கள் அப் படையில் சேர்ந்திருந்த சாதிப்பெயர்களைச் சுட்டும் பிரிவுகளாயின. சேனாதிபதிக்கும், அரசனுக்கும் போரில் துன்பம் நேராத வண்ணம் பாதுகாப்பதற்காக அமைக்கப்பெற்றிருந்த படைகளுக்கு ஆபத்துதவிகள் என்றும், வலங்கை வேளைக்காரர் படை என்றும் பெயர்கள் வழங்கின. இடங்கை வேளைக்காரர் என்ற பிரிவு இலங்கையில் உள்ள பொலன்னருவைக் கல்வெட்டு ஒன்றில் கூறப்பெற்றுள்ளது. அரசனுக்கும், இளவரசனுக்கும் எவ்வித இன்னல்களும் ஏற்படாதவாறு மிக்க அருகில் நின்று தொண்டு செய்தவர்கள் வேளைக்காரர்கள் என்று அழைக்கப்பெற்றனர்.

முதலாம் இராஜராஜன், முதலாம் இராஜேந்திரன் ஆகிய இரு மன்னர்களின் ஆட்சிக்காலங்களில் 'மூன்றுகை மகா சேனை' என்ற ஓர் இராணுவப் பிரிவு அமைக்கப்பெற்றிருந்தது. இதில் பங்குகொண்ட வீரர்கள் வைணவ சமயத்தைச் சார்ந்தவர்கள். இச் சேனை, கடல்கடந்து சென்று பல போர்கள் புரிந்து சோழப்பேரரசு விரிவடைவதற்கு உதவி செய்தது. பேரரசின் பல பகுதிகளில் யானைப்படை, குதிரைப்படை, காலாட்படை முதலியவைகள் தங்கியிருந்த இடங்கள் 'கடகங்கள்' (cantonments) எனப் பெயர்பெற்றன. இந்த கடகங்கள் நிலவியிருந்த இடங்களில் அமைந்திருந்த தேவாலயங்கள், கோபுரங்கள், அக்ரகாரங்கள் முதலியவற்றிற்குச் சேதம் ஏற்படாமல் காப்பாற்றுவது இப் படைகளின் கடமையாயிற்று. ஆனால், இப் படைகளில் இடம்பெற்ற வீரர்கள் எவ்விதமாகத் திரட்டப் பெற்றனர் என்றும், எவ்வித பயிற்சிகள் அளிக்கப்பெற்றன என்பதும் விளங்கவில்லை. சோழர்களுடைய இராணுவத்தில் ஆயிரக்கணக்கான யானைகளும், குதிரைகளும் இருந்திருக்க வேண்டும். அக் காலத்திய கப்பல்படையை, தற்காலத்தில் இயந்திர சாதனங்களோடுக்கூடிய கப்பல்படைக்கு ஒப்பிட முடியாது. ஆயினும், வங்கக்கடலின் கிழக்கேயுள்ள பல தீவுகளையும், இலங்கை நாட்டையும் வென்று சோழப்பேரரசை விரிவடையச் செய்வதற்கு ஏற்ற வன்மையும், ஆர்வமும்

அப் படையினரிடம் அமைந்திருந்தது. மெய்க்கீர்த்திகளில் 'அலைகடற் நடுவிற் பலகலம் செலுத்தி' என்று கூறப்பெறுவதால், சோழர்களுடைய கடற்படையில் பல கப்பல்கள் இருந்திருக்க வேண்டும். ஆனால், அவைகள் எவ்வித முறையில் அமைக்கப்பெற்றன, மாலுமிகளுக்கு எவ்வித பயிற்சி அளிக்கப் பெற்றன என்ற கேள்விகளுக்கு ஏற்ற பதில் கூறமுடியாது.

சோழப்படைகளின் போர்த்திறமையினால் சோழப்பேரரசு அமைவுற்றது. ஆனால், இப் படைகளின் போர்முறை சங்க காலத்திய போர்முறையிலிருந்து வேறுபட்டதாகும். மேலைச் சாளுக்கிய நாட்டையும், பாண்டியநாட்டையும் வென்ற சோழச் சேனைகள் பல அழிவுவேலைகளையும் செய்தன. நகரங்களை அழித்தும், தீயிட்டும், தோல்வியுற்ற வீரர்களை அவமானம் செய்தும், அந்தணர், அறவோர், பெண்டிர், இளஞ்சிறுர் முதலியோரைத் துன்புறுத்தியும், தோல்வியுற்ற மக்களுடைய செல்வப் பொருள்களையும், கலைத்திறன் வாய்ந்த மற்றப் பொருள்களையும் கவர்ந்து வந்தமைக்கும் கல்வெட்டுகளில் ஆதாரங்கள் உள்ளன. பாண்டியநாட்டில் சோழப்படைகள் செய்த அழிவுச் செயல்களுக்குப் பழிக்குப்பழியாக பிற்காலப் பாண்டிய மன்னர்கள் சோழநாட்டில் செய்தனர். இராணுவ வன்மையால் தோன்றி வளர்ந்த சோழப்பேரரசு, அந்த இராணுவ வன்மை குறைந்தபிறகு அழிவுற்றதெனக் கூறுவதில் பேருண்மை பொதிந்துள்ளது.

### சோழர்கள் காலத்திய சமூக நிலை

தஞ்சாவூர், கங்கைகொண்ட சோழபுரம், மதுரை, காஞ்சிபுரம் முதலிய நகரங்களில் மக்கள் பெருமளவில் வாழ்ந்தனர். பல்லவர் ஆட்சியில் தோன்றிய சாதிப்பிரிவுகள் சோழர்கள் காலத்தில் நூற்றுக்கணக்கில் மலிந்து புதுப்புது பிரிவுகள் தோன்றலாயின. வடநாட்டிலிருந்து குடிபெயர்ந்துவந்து தென்னாட்டில் குடியேறிய அந்தணர்களின் செல்வாக்கு அரசவைகளிலும், பொதுமக்களிடையேயும் பரவலாயிற்று. அந்தணரல்லாத சாதிகளிடையே வலங்கை சாதியினர், இடங்கை சாதியினர் என்ற இரண்டு பிரிவுகள் தோன்றின.

இவ்விரு பிரிவினருக்கும் இடையே பல கடுமையான போராட்டங்கள் உண்டாயின. இப் பூசல்கள் சோழப் பேரரசில் தோன்றி, பின்னர் விஜயநகரத்துப் பேரரசு காலத்திலும் தொடர்ந்து, ஆங்கிலப்பேரரசு நிலைபெற்றிருந்த பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியிலும் நடைபெற்றன.

இந்த வலங்கை, இடங்கைப் பிரிவுகளின் தோற்றத்தைப்பற்றி 'மக்கன்சி நூற்சுவடி' என்னும் கையெழுத்துப் பிரதி நூலில் பல காரணங்கள் கூறப்பெற்றுள்ளன. வலங்கைப் பிரிவில் 98 சாதிகளும், இடங்கைப்பிரிவில் 98 சாதிகளும் சேர்ந்திருந்தனவென்றும் இக் குலங்களுள் பெரும்பாலானவை கலப்புச்சாதிகள் என்றும் அச் சுவடியில் கூறப்பெற்றுள்ளது. கரிகாற்சோழன் காலத்தில் இப் பிரிவுகள் தோன்றின என்றும் ஒருவரலாறு கூறப்பெறுகிறது. இங்கு கரிகாலன் என்றழைக்கப்பெற்ற அரசன் மூன்றும் குலோத்துங்கன் என்றும், அவன் காலத்தில் பொறிக்கப்பெற்ற கல்வெட்டில்தான் இப் பிரிவுகள் முதன்முதலில் கூறப்பெற்றுள்ளன என்றும் சிலர் கூறுவர். இந்தக் கல்வெட்டின்படி, 'காசிப முனிவர் என்பார் இயற்றிய வேள்வியை அரக்கர்கள் அழித்தனர் என்றும், தன் வேள்வியையும் தன்னையும் காப்பாற்றிக் கொள்ள வேள்விக்குண்டத்தினின்றும் இடங்கை 98 சாதியினரை அம் முனிவர் தோன்றும்படி செய்தார்' என்பதாகும். இச் செய்தியை வரலாற்றறிஞர்கள் ஒப்புக்கொள்ளமாட்டார்கள் வலங்கை சாதியினரைப்பற்றிய தோற்ற வரலாறு ஒன்றும் கிடைக்கவில்லை.

வரலாற்று முறைப்படி ஆராய்ந்து பார்த்தால் போர்க்களத்தில் சேனைத்தலைவரின் வலதுகைபுறத்தில் நின்று போர் செய்தவர்கள் வலங்கையார் என்றும், இடதுகைபுறத்தில் நின்று போரிட்டவர்கள் இடங்கையார் எனவும் அழைக்கப்பெற்றனர் என்பது பகுத்தறிவிற்கு உகந்ததாகத் தெரிகிறது. பின்னர், இப் பிரிவுகள் சமூக உறவிலும் வேரூன்றிவிட்டதெனக் கொள்ளலாம். 'காஞ்சிபுரத்தில் வலங்கை - இடங்கைக் கோவில்கள் என்றும், வலங்கை - இடங்கை மண்டபங்கள் என்றும், வலங்கை இடங்கைத் தேவரடியார்கள் என்றும் பாகுபாடுகள் நிலைபெற்றிருந்தது. முதலாம் குலோத்துங்கனுடைய ஆட்சியில் திருவரங்கம் கோவிலில் பொறிக்கப்பெற்ற கல்வெட்டு ஒன்றால், இவ்விருகட்சியினரும் தங்களுக்குள் முரண்பட்டுப் பெருங்கலகம் விளைத்து ஒரு கிராமத்தைச் சூறையிட்டு எரித்து, கோவில்களைக் கொள்ளையடித்துப் பெரும்சேதம் விளைவித்தனர் என்றும் அக் கிராமமும், கோவிலும் தஞ்சைமாவட்டத்தில் பாபநாசம் அல்லது நன்னிலம் தாலுக்காவில் இருந்ததெனவும் நாம் அறிகிறோம். இக் கலகத்திற்கு முக்கியமான காரணம், வலங்கை வகுப்பினர்க்கு அரசாங்கச்செல்வாக்கும், வாழ்க்கை வசதிகள் விருதுகள்போன்ற சலுகைகளும், சிறப்புகளும் ஏராளமாக இருந்ததென்றும், அச் சலுகைகளும் சிறப்புகளும் இல்லாத இடங்கையார், வலங்கை சாதியினரை எதிர்த்து

போரிட்டனர் என்பதாகும். மேலும், வலங்கைப் பிரிவைச் சேராத அந்தணர், வேளாளர், வன்னியர் போன்ற இதர சாதியினரும், இடங்கையாருக்குப் பல இன்னல்களை விளைவித்தனர் என்றும் நாம் உணரவேண்டும். வலங்கையினர் அரசாங்கப் படைகளில் சில சிறப்புச் சலுகைகளைப் பெற்றிருந்தனர். இடங்கை சாதியினர் போரில்லாத காலங்களில் வணிகர்களாகவும், தொழிலாளர்களாகவும் பிழைப்பு நடத்திவந்தனர். சோழர்களுடைய ஆட்சிக்காலத்தில் பல கோவில்கள் மூன்று கை மகா சேனை என்ற படைப்பிரிவினரிடம் ஒப்படைக்கப் பெற்றிருந்தன. இப் பிரிவுகளில் ஒன்று வலங்கைப் பிரிவு என்றும், மற்றொன்று வணிகர்களையும், தொழிலாளர்களையும் தன்னகத்தே கொண்ட இடங்கைப் பிரிவென்றும், மூன்றும் பிரிவு கோவில் அலுவலாளர்களும் பணியாளர்களும் சேர்ந்ததென்றும் நாம் உய்த்துணரலாம். இவர்களுள் இடங்கை வகுப்பினர் மற்றைய வகுப்பினருடைய இடைஞ்சல்களுக்குள்ளாயினர். ஒரு சமயத்தில் இடங்கை சாதியர்களுடைய பசுக்கள், எருமைகள்மீது வரிகள் விதிக்கப்பெற்றன. வரி கொடுக்க முடியாதவர்கள் பட்டினி போட்டுத் துன்புறுத்தப் பெற்றனர். இவ்வித கொடுமைகளுக்கு எதிராக அரசாங்கச் சலுகையுடைய வலங்கையர்மீது இடங்கை சாதியார் போர் தொடுத்தனர்.

சிற்சில சமயங்களில், வலங்கையினர், இடங்கையினர் ஆகிய இரு வகுப்பினருமே சேர்ந்து, பிராமணர்களையும் வேளாளர்களையும் எதிர்த்துப் போராடுவதும் நடைபெற்றுள்ளது. தஞ்சை மாவட்டத்திலுள்ள ஆடுதுறையில் பிராமணர்களும் வேளாளர்களும், வலங்கை - இடங்கை சாதியர்களுடைய காணியாட்சி நிலங்களைத் தம் வசப்படுத்திக் கொண்டனர். இச் செய்கையை எதிர்த்து, இவ்விரு பிரிவினரும் மத்திய அரசாங்கத்திடம் முறையிட்டனர். அரசாங்க அதிகாரிகளும், சீவித நிலங்களின் உரிமையாளர்களும், காணியாட்சிக்காரர்களும், பிராமணரும் அரசாங்கத்தின் சார்பாக வலங்கை, இடங்கை சாதியாரிடம் இருந்து வசூலித்த வரிகளை, அரசாங்கக் கருவூலத்தில் சேர்க்காமல் தாங்களே வைத்துக் கொண்டனர். இதை எதிர்த்த வலங்கை, இடங்கை மக்கள் மேற்கூறப்பெற்றவர்களுக்கு குடியிருக்க வீடுகள் கட்டி கொடுக்கக்கூடாதென்றும், அவர்களுக்குக் கணக்குகள் எழுதக் கூடாதென்றும், தமக்குள் ஓர் ஒப்பந்தம் செய்துகொண்டனர். இவ் வொப்பந்தத்தை மீறியவர்களைக் கண்ட இடத்தில் கத்தியால் குத்திக் கொல்ல வேண்டுமென்றும் முடிவுசெய்தனர். 'வலங்கை இடங்கை மகமை' என்றொரு வரி வசூலிக்கப்பெற்று, அவ் வரித்தொகை

கோவிலுக்குக் கொடுக்கப்பட்டது என்று திருவெண்காட்டில் கிடைத்த கல்வெட்டு ஒன்றில் கூறப்பெற்றுள்ளது.

இடங்கைப் பிரிவைச் சேர்ந்த சாதியினர் உழவையும் வாணிகத்தையும் நம்பி வாழ்க்கை நடத்தினர். இவர்கள்மீது சுங்கவரியும் விதிக்கப்பட்டது. இவ் வரி வலங்கை சாதியினர், அந்தணர், வேளாளர்களுக்கு விதிக்கப்படவில்லைபோல் தோன்றுகிறது. ஆகையால், இடங்கையார் முதற்குலோத்துங்க னுடைய ஆட்சிக்காலத்தில் பெரிய கலகம் செய்ய முன்வந்து பல கலகச் செயல்களில் ஈடுபட்டனர். கோவில்களை இடித்தும் விக்ரங்களை உடைத்தும், கோவில்களுக்குத் தீயிட்டும் பெருங் கலகம் விளைவித்தனர். இக் கலகத்தை அடக்கி இடங்கை சாதியர்களின் இன்னல்களை நீக்குவதற்கு முதற்குலோத்துங்கன் பண்டைக்கால முதல் நிலைபெற்றிருந்த சுங்கவரியை நீக்கி, 'சுங்கம் தவிர்த்த சோழன்' என்ற பெயர் கொண்டிருக்கக் கூடும். வலங்கையினருக்கும், கைக்கோளாருக்கும் இடையே உரிமைகளுக்காகவும், விருதுகளுக்காகவும் பெரும்பூசல்கள் நடைபெற்றுள்ளன.[1]

வலங்கை-இடங்கைப் பிரிவுகளன்றியும், இரதகாரர் எனும் வேறுகுலப் பிரிவும் இருந்தது. இவர்கள் அனுலோம குலத்தவர் என்று என்றழைக்கப்பெற்றனர். அதாவது, உயர்சாதி தந்தைக்கும்-தாழ்ந்த குலத்துத் தாய்க்கும் பிறந்தவர்களாவர் இந்த இரதகாரர்கள் கட்டடம் கட்டுதல், இரதங்களைச்செய்தல், அந்தணர்களுடைய வேள்விகளுக்கு வேண்டிய சட்டுவங்கள், தட்டுகள் முதலியவற்றை செய்துகொடுத்தல், மண்டபங்களை அமைத்தல், மன்னர்களுக்கு மணிமுடி செய்தல் முதலிய தொழில்களைச் செய்துவந்தனர். இவர்கள் பிரதிலோமர்களைவிட உயர்ந்தவர்களாகக் கருதப்பெற்று உபநயனம் செய்து கொள்ளும் உரிமையும் பெற்றிருந்தனர்.

சாதிகள் ஒன்றேடொன்று கலந்ததினுல் பல புதிய சாதிகளும் நூற்றுக்கணக்கில் தோன்றின. பறையர் என்ற சாதி யினரைப்பற்றி இலக்கியங்களிலும், கல்வெட்டுகளிலும் கூறப் பெற்றுள்ளன. சில காரியங்களுக்கு இவர்கள் பறையடித்தமை யால் இப் பெயர் வந்திருக்கக்கூடும். இவர்கள் தனிச்சேரிகளில் வாழ்ந்தனர். புல்லுப் பறிக்கிற பறையரும், ஆவுரித்துத் தின்னும் பறையரும் தீண்டத்தகாதவர்களாகக் கருதப்பெற்றனர். பிற்காலங்களில் இத் தீண்டாமை என்னும் கொடிய பழக்கம்

[1] Dr. K. K. Pillay 'History Tamilaham', PP. 303—312

தென்னிந்திய சமூகத்திற்குப் பெரியதொரு இழுக்கை உண்டாக்கியது. இவ்வாறு, தீண்டத்தகாதவர்கள் என்று கருதப் பெற்றவர்களுக்கும், மற்றையோருக்கும் அடிக்கடி பூசல்கள் விளைந்ததுண்டு. இப் பூசல்களுக்கு வேலைக்கு ஏற்ற கூலி கொடுக்காததே முக்கிய காரணமாயிற்று.

பிராமணரையும், வேளாளரையும் எதிர்த்துப் பல கலகங்கள் சோழர்கள் காலத்தில் நடந்துள்ளன. இவ்விரு வகுப்பாரையும் எதிர்த்துக் கிளர்ச்சி செய்தவர்களுக்கு இருபதினுயிரம் காசுகள் தண்டம் விதிக்கப்படும் என்றும், அத் தண்டத்தை செலுத்தத் தவறினுல் குற்றவாளிகளின் நிலங்கள் பறிமுதல் செய்யப்படும் என்றும், மூன்ரும் குலோத்துங்க சோழன் காலத்திய ஆணையொன்று கூறுகிறது. பிராமணர்களுக்குள் கலகம் நடந்தற்கும் சோழர்களுடைய கல்வெட்டுகளில் ஆதாரங்கள் உள்ளன. கௌணியன், ஸ்ரீகபாடன், ஸ்ரீகிருஷ்ணன், பெரியாண்டான் என்ற அந்தணர்கள் சேர்ந்துகொண்டு, ஹரிநாரயணன் என்ற மற்ருெரு அந்தணனுடைய வீட்டிற்குக் கொள்ளி வைத்து எரித்ததற்காகக் குற்றவாளிகளுக்கு பெருந்தண்டம் விதிக்கப்பெற்றதெனக் கீழையூர்க் கல்வெட்டுச் செய்தியொன்று கூறுகிறது.[1]

## சோழர் காலத்தில் இலக்கியம்

சோழ மன்னர்களுடைய ஆட்சிக்காலத்தில் தமிழ் இலக்கிய வளர்ச்சி சிறப்புற்றிருந்தது. ஐம்பெருங் காப்பியங்களில் முதன்மைபெற்று விளங்கும் சீவகசிந்தாமணி என்னும் நூலின் ஆசிரியர் திருத்தக்க தேவர் பத்தாம் நூற்ருண்டில் வாழ்ந்தவராவார். இக் காவியம் வரலாற்று உண்மையை அடிப்படையாகக் கொள்ளாது சமண சமயத்தின் பெருமையை விளக்க எழுந்த நூலாகும். தமிழில் இராமாயணத்தைப் பாடிய கம்பநாட்டாழ்வாரும் பத்தாம் நூற்ருண்டின் தொடக்கத்தில் வாழ்ந்தவர் எனக் கருதப்பெறுகிருர். 'எண்ணிய சகாப்தம் எண்ணூற்றேழின்மேல் சடையன் வாழ்வு என்னும் செய்யுள்படி, கி. பி. 885ஆம் ஆண்டைச் சார்ந்து சடையப்ப வள்ளல் வாழ்ந்தபடியால், பத்தாம் நூற்ருண்டின் தொடக்கத்தில் கம்பர் வாழ்ந்திருக்கலாம். கல்லாடம் என்னும் அகத்துறை நூலும், திருக்கண்ணப்பதேவர் திருமறம் என்ற மற்ருெரு நூலும் கல்லாடதேவ நாயனூரால் இயற்றப்பெற்றன. 'பரணிக்கோர் செயங்கொண்டார்

1 Dr. K. K. Pillay, Op. Cit., PP. 314—15

என்று பாராட்டப்பெற்ற ஜெயங்கொண்டார் இயற்றிய கலிங்கத்துப்பரணி என்னும் நூல், முதலாம் குலோத்துங்க னுடைய தானைத்தலைவராகிய கருணாகரத் தொண்டைமான் கலிங்கநாட்டின்மீது படையெடுத்துச்சென்று வெற்றிபெற்ற வரலாற்றுச் செய்தியை விளக்குவதாகும்.

கம்பருடைய இராமாயணம் வடமொழியில் வான்மீக முனிவரால் எழுதப்பெற்ற இராமாயணத்தைப் பின்பற்றிய தாயினும், தமிழர்களுடைய பண்பாட்டிற்கு ஏற்றவழியில் பல மாற்றங்களை உட்புகுத்தியதாய், தமிழில் ஏற்பட்ட முதல்நூல் போலவே விளங்குகிறது. இன்னும் ஒட்டக்கூத்தர், புகழேந்தி, சேக்கிழார் முதலிய பெரும்புலவர்கள் சோழமன்னர்களின் காலத்தில் வாழ்ந்தனர். மூவருலா, தக்கயாகப் பரணி, குலோத்துங்கன் பிள்ளைத்தமிழ், இராமாயணத்தில் உத்தர காண்டம் முதலிய நூல்கள் ஒட்டக்கூத்தரால் எழுதப்பெற்றன. புகழேந்திப் புலவர் தொண்டைமண்டலத்தில் வாழ்ந்து, மள்ளுவநாட்டு சிற்றரசன் சந்திரன்சுவர்க்கி என்பவரால் ஆதரிக்கப்பெற்றார் எனத் தெரிகிறது. ஆனால் மள்ளுவநாடு எங்கே இருந்தது என்றும், சந்திரன்சுவர்க்கி எப்பொழுது அரசாண்டார் என்பதும் விளங்கவில்லை. சமண காவியமாகிய பெருங்கதை, கொங்குவேளிர் என்பாரால் பாடப்பெற்றது. குணாத்தியர் என்பார் பைசாசமொழியில் இயற்றிய உதயணன் கதையை இந் நூல் தமிழில் கூறுகிறது. கொங்குநாட்டு வேளாள வகுப்பைச்சேர்ந்த கொங்குவேளிர் விசயமங்கை என்னும் ஊரில் வாழ்ந்தவராவர். வளையாபதி, நீலகேசி என்ற சமண காவியங்களும், குண்டலகேசி என்ற பௌத்த காவியமும், சோழர்களுடைய ஆட்சியில் தோன்றின. திவாகரம், பிங்கலந்தை என்ற நிகண்டுகளும், நன்னூல், நேமிநாதம், யாப்பருங்கலம், புறப்பொருள் வெண்பாமாலை, வீர சோழியம், தண்டியலங்காரம் ஆகிய இலக்கண, அணி யலங்கார நூல்களும் அக் காலத்தில் எழுதப்பெற்றன. வட மொழிநூலாகிய இருக்குவேதபாஷ்யம் என்னும் நூலை எழுதிய வேங்கடமாதவர் முதலாம் பராந்தக சோழன் காலத்தில் வாழ்ந்தவர் ஆவர். சேக்கிழார் இயற்றிய பெரியபுராணத்தைப் பற்றி சைவசமய வரலாற்றுப் பகுதியில் கூறப்பெறும். தஞ்சை வாணன் கோவை என்னும் நூல் பொய்யாமொழிப் புலவரால் இயற்றப்பட்டது.

### ஓவியக்கலை

சிற்றண்ணவாயிலில் பல்லவர்கால ஓவியங்களும், திருமலை புரம் குகையில் பாண்டியர்காலத்து ஓவியங்களும் காணப்

பெறுகின்றன. அஜந்தா குகைகள், காஞ்சி கைலாசநாதர் கோவில், தஞ்சைப் பெருவுடையார் கோவில் முதலியவற்றில் காணப்பெறும் ஓவியங்களும், இலங்கை சிகிரியா மலைச்சுவர் ஓவியங்களும் தென்னிந்திய ஓவியமரபைச் சேர்ந்தவையாகும். தஞ்சைப் பெருவுடையார் கோவிலில் காணப்பெறும் சுவர் ஓவியங்கள், நாயக்கர்கள் காலத்தில் வரையப்பெற்ற ஓவியங்களால் மூடப்பெற்றிருந்தன. அவற்றை முதன்முதலில் கண்டுபிடித்த பெருமை உயர்திரு S. K. கோவிந்தசாமிப் பிள்ளையவர்களுக்கு உரியதாகும். தஞ்சைக் கோவிலில் காணப்பெறும் ஓவியங்களில் சுந்தரமூர்த்திநாயனாரை சிவபெருமான் அந்தண வடிவில் வந்து தடுத்தாட்கொள்ளுவதும், சேரமான் பெருமாள் நாயனாரும், சுந்தரமூர்த்தியும் கைலாயத்திற்குச் செல்வதும், கைலாயத்தில் பார்வதிதேவியுடன் சிவபெருமான் வீற்றிருக்கும் காட்சியும் தீட்டப்பெற்றுள்ளன. இசைக்கருவிகளுடன் பாடிக்கொண்டும் ஆடிக்கொண்டும் மக்கள் மகிழ்ச்சியுறும் காட்சிகளும் காணப்பெறுகின்றன. இவையன்றியும், இராஜராஜ சோழன், கரூர்த்தேவர் ஆகிய இருவருடைய ஓவிய உருவங்களும் காணப்பெறுகின்றன.

இப்பொழுது வழக்கில் இல்லாத சில தமிழ்நூல்கள் சோழவரசர்களுடைய கல்வெட்டுகளில் கூறப்பெற்றுள்ளன. சைவநெறிகண்ட அரும்பாக்கத்து அறநிலைவிசாகன் திரைலோக்கிய மல்லன் என்பான், பாரதத்தைத் தமிழில் மொழிபெயர்த்து எழுதினான் என்று மூன்றும் குலோத்துங்கனுடைய கல்வெட்டு ஒன்றில் கூறப்பெற்றுள்ளது. குலோத்துங்க சோழன் சரிதை என்ற நூல், கவி குமுதசந்திர பண்டிதன் என்பாரால் இயற்றப்பெற்றதாக அறிகிறோம். கன்னிவன புராணம் என்ற நூலையும், நாடகம் ஒன்றையும் கமலாலயபட்டன் என்ற புலவர் இயற்றியதாக கல்வெட்டு ஒன்று உணர்த்துகிறது. ஆயினும், இந் நூல்கள் இப்பொழுது கிடைக்கப்பெறவில்லை.

# 14. நான்கு அரசுகளின் வரலாறு

தென்னிந்திய வரலாற்றில் இராட்டிரகூடர்களுக்குப்பின் தக்காணத்தில் தோன்றிய கலியாணபுரத்துச் சாளுக்கியப் பேரரசு பன்னிரண்டாம் நூற்றாண்டின் இறுதியோடு மறைந்தது. தென்னிந்தியாவில் புகழ்பெற்று விளங்கிய சோழப்பேரரசு பதின்மூன்றும் நூற்றாண்டின் இறுதியில் பாண்டியப் பேரரசில் கலந்து மறைந்தது. தக்காணத்தின் மேற்குப்பகுதியில் தேவகிரி யாதவர்களுடைய அரசும், கிழக்குப்பகுதியில் வாரங்கல்நாட்டு காகதீய வமிசமும் மேன்மையுற்றன. தமிழ் நாட்டில் பாண்டியப்பேரரசும், மைசூர்நாட்டில் ஹொய்சள அரசும் தோன்றின. இந்த நான்கு அரசுகளுக்கும் இடையே தோன்றிய போர்களும் மற்றை உறவுகளுமே பதினான்காம் நூற்றாண்டில் தென்னிந்தியாவின் வரலாறாகும். பாண்டியப் பேரரசில் கிழக்குக் கடற்கரைப்பகுதிக்கு 'மாபார்' என்ற அராபியப் பெயர் வழங்கியது. மாபார் என்றால் 'உட்புகும் வழி' என்று பொருள்படும். அராபிய வணிகரான வாசாப் என்பாரும், இத்தாலியநாட்டு வழிப்போக்கராகிய மார்க்கோபோலோவும் பாண்டிய நாட்டிலும், சோழநாட்டிலும் பிரயாணம் செய்து அப்பொழுது தென்னிந்தியாவின் பொருளாதார - சமூக நிலைகளைப்பற்றிய குறிப்புகள் வரைந்துள்ளனர். பதினான்காம் நூற்றாண்டின் தொடக்கத்தில் விந்திய மலைத்தொடர்களுக்கு வடக்கிலிருந்து கடலலைகள்போல் பரவிவந்த இஸ்லாமிய படையெழுச்சிகளால், தென்னிந்திய அரசுகளின் அரசியல், சமூக, பொருளாதார நிலைமைகளில் பெரிய மாற்றங்களும், வேற்றுமைகளும் தோன்றின. சமுக-சமய இயக்கங்களின் பயனாக தக்காணத்தில் பாமினி அரசும், தமிழ்நாடு, ஆந்திரம், கன்னடநாடு உள்ளிட்ட பகுதிகளில் விஜயநகரப்பேரரசும் தோன்றின. மேற்கூறப்பெற்ற நான்கு இராச்சியங்களின் வரலாறே இப் பகுதியில் வரையப்படும்.

## 1. தேவகிரிநாட்டு யாதவர் வரலாறு

புராணங்களிலும், இதிகாசத்திலும் பெரும்புகழுடைந்த கிருஷ்ணபரமாத்மாவின் கால்வழியில் தோன்றியதாக யாதவ குலத்தினர் பெருமை கொண்டிருந்தனர். இவர்களுடைய பூர்வீக

மான இருப்பிடம் பஞ்சவடி (நாசிக்) என்னும் இடத்திலிருந்து தேவகிரி வரையில் பரவியிருந்த சேவுனநாடு என்ற பகுதியாகும். ஆகையால் இவர்களுக்கு சேவுனர்கள் என்ற பெயரும் வழங்கியது. கி. பி. 1187—1191 ஆண்டுகளில் பில்லாமன் என்ற யாதவத்தலைவன், கலியாணபுரத்துச் சாளுக்கிய அரசனாகிய நான்காம் சோமேச்வரனுக்கு அடங்கிய சிற்றரசனாக ஆண்டுவந்தான். இத் தலைவன், சாளுக்கியப் பேரரசு தளர்ச்சியுற்ற நிலையில் 1187ஆம் ஆண்டில் தேவகிரி கோட்டையை அமைத்து அதைத் தன்னுடைய தலைநகராகக் கொண்டான். மைசூரில் ஆட்சிசெலுத்திய இரண்டாவது வல்லாளனுடன் நடத்திய போரில் பில்லாமான் தார்வாருக்கு அருகில் உள்ள வதாக் என்ற இடத்தில் தோல்வியுற்றனன். பில்லாமனுடைய மகன் ஜெயதிரிபாலன் வதாக் என்னும் இடத்தில் நடந்த போரில் தன்னுடைய சேனைகளைச் சீரமைத்து ஹொய்சளருடைய சேனையை கிருஷ்ணை நதிக்குத் தெற்கே துரத்திவிட்டான். ஆயினும் பில்லாமன் இப் போரில் உயிரிழந்தான்.

ஜெயதுகி அல்லது ஜெயதிரிபாலன் என்ற அரசன் கி. பி. 1196-ல் திரிபுரநாட்டு காலச்சூரியர்களையும், காகதீய அரசன் மகாதேவன் என்பவரையும் வெற்றிகொண்டான். காகதீய அரசன் கணபதிதேவன் என்பாரை முதலில் சிறையிலிட்டு, பின்னர் அவனுக்கு உதவிசெய்து வாரங்கல் நகரத்தில் அரசு செலுத்தும்படி செய்தான். வேதங்கள், தர்க்கம், மீமாம்சம் முதலிய பல கலைகளில் வல்லவனாக விளங்கினான். போஜசீலஹரன் என்ற அரசனிடமிருந்து கொல்காபுரத்தையும் கைப்பற்றினான் என்று கேள்விப்படுகிறோம். கணிதத்திலும், சோதிடத்திலும் வல்லவராகிய பாஸ்கராசாரியருடைய புதல்வன் இலக்குமிதரன் என்பாரை ஜெயதுகி ஆதரித்தான்.

### சிங்கணன் (1210—47)

ஜெயதிரிபாலனுடைய மகனாகிய சிங்கணன் என்பான் யாதவநாட்டின் எல்லைகளைப் பரவும்படி செய்தான். கூர்ஜரம், வாரங்கல், தார், திரிபுரம் முதலிய நிலப்பகுதிகளை வென்று, ஹொய்சள வமிசத்து அரசர்களையும் தோற்கடித்த தாகவும் நாம் கேள்விப்படுகிறோம். இன்னும் பல புதிய பட்டப்பெயர்களையும் மேற்கொண்டனன். அருங்கலைகளும் இலக்கியங்களும் வளர்வதற்கேற்ற சூழ்நிலையை தந்நாட்டில்

ஏற்படுத்தினன். சாரங்கதரன் இயற்றிய சங்கீத ரத்னுகரம் என்ற நூலும், பாஸ்கராசாரியர் இயற்றிய சித்தாந்த சிரோன் மணி என்ற நூலும் சிங்கணனுடைய ஆட்சிக்காலத்தில் தோன்றின.

## கிருஷ்ணன் (1247—60)

சிங்கணனுக்குப் பிறகு அவனுடைய பெயரன் கிருஷ்ணன் என்பான் அரசுரிமை எய்தினன். இவ்வரசன் வைதீக சமயத்தைப் பின்பற்றி அதற்கு ஆதரவளித்தான். தேவகிரி நாட்டின் தென்மேற்கு ஆந்திரப்பகுதியில் சில நிலப்பகுதிகளைக் காகதீய அரசன் கணபதியினிடம் இழந்துவிட்டபோதிலும், இவன் காலத்தில் தேவகிரி ராஜ்யம் மிக்க பரப்புடையதாக இருந்தது. இவனுடைய ஆட்சியில் இலக்கியக்கலை மிகுந்த ஆதரவைப் பெற்றது. கிருஷ்ணனுடைய அமைச்சனும், சேனைத்தலைவனுமாகிய ஜலஹனன் என்பான் வடமொழி சுலோகங்கள் அடங்கிய தொகைநூல் ஒன்றை எழுதுவித்தான். அமலானந்தர் இயற்றிய வேதாந்தகல்பதரு என்னும் இலக்கியம் இவன் காலத்தில் எழுதப்பெற்றது.

## மகாதேவன் (1260—71)

கிருஷ்ணனுக்குப் பிறகு அவனுடைய தம்பி மகாதேவன் என்பான் ஆட்சியுரிமையெய்தினன். காகதீய நாட்டரசி உருத்திராம்பாளுடன் போரிட்டு அவள் தோல்வியுறும்படி செய்தான். அவ்வரசியின் யானைப்படை, அரசசின்னங்கள் முதலியவற்றைக் கைப்பற்றியபோதிலும், பெண்பாவம் பெரும் பாவம் என்று கருதி அவளைக் கொலைசெய்யாது விடுத்தனன் கொண்கானநாட்டின் வடபகுதியின்மீது கடற்படை யொன்றை அனுப்பி அந் நாட்டு அரசன் சோமேஸ்வரன் என்பானை வென்று, அந் நிலப்பகுதியைத் தன்வசப்படுத்திக் கொண்டான். மகாதேவனுடைய சபையில் ஹேமாத்ரி என்ற புலவர் பெருமான் வாழ்ந்தார்.

## இராமச்சந்திரன் (1271—1309)

இராமச்சந்திரனுடைய ஆட்சியில் தேவகிரிநாடு, அரசியலில் உச்சக்கட்டத்தையும் பின்னர் வீழ்ச்சியையும் அடையும்படி நேர்ந்தது. இவ்வரசன் மாளவநாட்டு மன்னனேடும், காகதீயநாட்டு அரசன் இரண்டாம் பிரதாப ருத்திரனேடும் போர்களை நடத்தினன். மூன்ரும் நரசிம்மன் ஆட்சிக்காலத்தில் ஹொய்சளநாட்டின் தலைநகரத்தை

முற்றுகையிடுவதற்கு தன்னுடைய சேனைத்தலைவன் சாளுவ திக்கண்ணனைப் பணித்தான். அந்த சேனைத்தலைவன் துவார சமுத்திரத்தை முற்றுகையிட்டு விலையுயர்ந்த பல பொருள்களைக் கொள்ளைகொண்டு தேவகிரிக்குத் திரும்பினான். இதனால் யாதவ அரசர்களுக்கும், ஹொய்சள மன்னர்களுக்கும் பகைமை நீடித்தது. அலாவுதின் கில்ஜியும், பின்னர் மாலிக்கபூரும் தேவகிரியின்மீது படையெடுத்த பிறகு இராமச்சந்திர தேவனுடைய ஆட்சி சீர்குலையத் தொடங்கியது. இம் மன்னனுடைய ஆட்சியில் பகவத்கீதைக்கு மராட்டியமொழியில் உரையெழுதிய ஞானேச்வரன் என்ற மராட்டிய அறிஞர் வாழ்ந்து வந்தார்.

## 2. வாரங்கல்நாட்டு காகதீய மன்னர்கள்

காகதீயமன்னர் குலத்திற்கு தலைமையாக விளங்கிய பேடன் என்பான், கலியாணபுரத்துச் சாளுக்கிய அரசன் ஆறும் விக்கிரமாதித்தனுக்கு அடங்கிய சிற்றரசனாக இருந்தான். மேலைச் சாளுக்கிய அரசின் சீர்குலைவிற்குப் பிறகும், முதலாம் குலோத்துங்க சோழனுக்குப் பிறகு வேங்கிநாட்டில் தோன்றிய குழப்பமான காலத்திலும் ஆட்சிபுரிந்த முதலாம் புரோலன் மேன்மை அடைந்தான். கிருஷ்ணா—கோதாவரியாகிய பேராறுகளுக்கு இடைப்பட்ட நாட்டில் அனுமக் கொண்டை என்னும் இடத்தை மையமாகக்கொண்டு காகதீய அரசை உருவாக்கினான். கி. பி. 1155 - ல் கலியாணபுரத்து மூன்றும் தைலபன் என்னும் அரசன்மீது வெற்றிகொண்டு பின்னர் அவனுக்கு உதவி செய்ததாகவும் அறிகிறோம்.

### முதலாம் பிரதாபருத்திரன் (1162—1185)

வாரங்கல் நகரத்தை அமைத்து அதைத் தன்னுடைய தலைநகராகக்கொண்ட அரசன் முதலாம் பிரதாபருத்திரன். வாரங்கல் நாட்டின் எல்லைகள் பரவும்படி செய்தான். இவனுடைய ஆட்சியில் கல்வியும், கலைகளும், தேவாலயங்களும் சிறப்புற்று இருந்தன. தெலுங்கிலும், வடமொழியிலும் நீதிசாரம் என்ற நூல் எழுதப்பெற்றது. முதலாம் பிரதாபருத்திரன் வீரசைவ சமயத்தைப் பின்பற்றினான். வீரசைவ சமயத்தைப்பற்றி தெலுங்கு, கன்னடம், வடமொழியாகிய மூன்று மொழிகளிலும் நூல்கள் எழுதிய சோமநாதர் என்பாரை ஆதரித்தான். காளத்தி நாட்டுத் தலைவனான நன்னுச்சோழன் என்ற தெலுங்குச் சோழத் தலைவன் குமாரசம்பவத்தைத் தெலுங்கில் எழுதியுள்ளான். பிரதாபருத்திரனுடைய தம்பி மகாதேவன் என்பான் தேவகிரி ஜெயதிரிபால தேவனால் தோற்கடிக்கப் பெற்றான்

பன்னிரண்டாம் நூற்றுண்டின் பிற்பகுதியில் அரசுபுரிந்த காகதீய மன்னர் கணபதி என்பவராவர் (1199—1261). யாதவ குல அரசன் சிங்கணனுக்கும் கணபதிக்கும் பெரியதொரு போராட்டம் நடைபெற்றது. கணபதி தோல்வியுற்றபோதிலும் பின்னர் சிங்கணனுல் உதவி செய்யப்பெற்றுர். தமிழ்நாட்டில் சோழப்பேரரசு வீழ்ச்சியுற்ற காலத்தில் (கி.பி. 1250) கணபதி காஞ்சிபுரத்தைக் கைப்பற்றினுர். அறுபதாண்டுகள் வரையில் ஆட்சிசெலுத்தி சிறந்த அரசியல் ஒன்றை அமைத்தார். வெலநாண்டுச் சோழர்களுடைய வீழ்ச்சிக்காலத்தில் ஆந்திரதேசத்தின் பல பகுதிகளைத் தன்வசப்படுத்தினுர். நெல்லூர்ப் பகுதியில் ஆட்சிசெலுத்திய தெலுங்குச் சோழர்களை வென்று தன்னுட்சியின் கீழடக்கினுர். ஆந்திர நாட்டில் கிடைத்த இரும்புச் சுரங்கங்களையும், வைரக்கற்களையும் வெட்டுவதற்கு முயற்சிகள் எடுத்தார். கடப்பை, கர்நூல் மாவட்டங்களில் வாழ்ந்த காயஸ்தர்கள் என்பவர்கள்மீது வெற்றிபெற்றுர். தன்னுடைய மகள் உருத்திராம்பாளுக்கு உருத்திரதேவன் என்ற ஆண் பெயரிட்டழைத்து, தனக்குப்பின் நாட்டை ஆட்சிபுரிவதற்கேற்ற அரசியற்பயிற்சியை அளித்தார். இவ்வரசரால் அளிக்கப்பெற்ற மேட்டுப்பள்ளி அபயசாசனம் தென்னிந்திய வணிகத்திற்குப் பேருதவி செய்ததெனக் கூறலாம். கி.பி. 1244-45-ல் அளிக்கப்பெற்ற இச் சாசனம் வாணிகம் செய்தவர்களுக்கு பல நன்மைகளைப் பயத்தது. ‘முன்னெல்லாம் கப்பல்கள் சேதமுற்றதினுல் கரையோரங்களில் ஒதுக்கப்பெற்ற யானைகள், குதிரைகள், நவரத்தினங்கள், தங்கம், பொன் வெள்ளி முதலிய உலோகங்கள் முதலியவற்றை இந் நாட்டு அரசர்கள் தங்கள் வசப்படுத்தியதுண்டு. ஆனுல், இனிமேல் சட்டப்படி அரசாங்கத்திற்குச் சேரவேண்டிய சுங்கவரிகளைத் தவிர மற்றவற்றை நாம் வலுவில் கொள்ளமாட்டோம். சந்தனம், கற்பூரம், முத்துகள், பன்னீர், யானைத்தந்தம், கற்பூரத்தைலம், செம்பு, துத்தநாகம், பட்டுநூல், பவழம், நறுமணப்பொருட்கள் முதலியவற்றுக்கு, முப்பதில் ஒருபங்கு வரியாக விதிக்கப்பெறும்.’ இச் சாசனம் அயல்நாட்டு வியாபாரத்தில் ஈடுபட்டிருந்த வணிகர்களுக்குப் பேருதவியளித்தது.

சடையவர்மன் சுந்தரபாண்டியன் ஆந்திரநாட்டின்மீது படையெடுத்தபொழுது கணபதியுடன் போரிட்டான். நெல்லூரையாண்ட மாளுமசித்த தெலுங்குச்சோழனுக்கு உதவி செய்தான். தமிழ்நாட்டில் அரசுசெலுத்திய காடவகுல கோப்பெருஞ்சிங்கனும், பிரதாபருத்திர கணபதிக்குக் கப்பம் செலுத்தியதாக நாம் அறிகிறோம்.




படம்—5.

**நான்கு அரசுகளின் எல்லைகள்**

## உருத்திராம்பாள் (1261—91)

பிரதாபருத்திர கணபதிக்குப் பிறகு அவருடைய மகள் உருத்திராம்பாள் பட்டம் எய்தினாள். அவளுடைய ஆட்சியின் தொடக்கத்தில் காடவகுல கோப்பெருஞ்சிங்கன் முதலிய தமிழ்நாட்டு சிற்றரசர்கள் கலகம் செய்தனர். இக் கலகங்கள் உருத்திராம்பாளுடைய சேனைத்தலைவனாகிய அம்பதேவன் என்பவரால் அடக்கப்பெற்றன. உருத்திராம்பாளுடைய ஆட்சிக் காலத்தில் நாட்டில் அமைதியும் வளப்பமும் செழிப்புற்றன என்பதை மார்க்கோபோலோ என்ற வெனிஸ் நகரத்து வழிப்போக்கருடைய கூற்றிலிருந்து உணர்ந்துகொள்ளலாம்.

'மேட்டுப்பள்ளி என்ற நாட்டை (உருத்திராம்பாள்) ஒரு பெண்ணரசி ஆண்டுவருகின்றாள். மிகுந்த அரசியல் திறமையும், குடிமக்களிடையே அன்பும் கொண்டு நாற்பது ஆண்டுகளுக்கு மேல் ஆட்சிசெலுத்தினாள். தன் கணவன் இறந்தபிறகும் வேறு யாரையும் மறுமணம் செய்துகொள்ளாமல், கற்புநிலை தவறாது, தன்கணவனைவிட மிக்க திறமையுடனும், நியாயம் நடுநிலைமை தவறாமல் நாட்டில் அமைதி நிலவும்படி ஆட்சி செலுத்தினாள். அந் நாட்டு குடிமக்கள் இவ்வரசியைத் தங்களுடைய தாய்போலக் கருதி வாழ்கிறார்கள். இந் நாடு வேறு எந்த அரசிற்கும் அடங்கி இருக்கவில்லை.'

'இந் நாட்டில் விலையுயர்ந்த வைரக்கற்கள் ஏராளமாகக் கிடைக்கின்றன. மிக்க விலையுர்ந்ததும், வெகு திறமையுடன் நெய்யப்பெற்றதுமான போர்வைகள் கிடைக்கின்றன. அப் போர்வைகளையும் ஆடைகளையும் அரசிகளும், அரசர்களும் விரும்பி அணிந்துகொள்ளுகின்றனர். இந் நாட்டில் மக்களுடைய நல்வாழ்விற்கேற்ற எல்லாப் பொருட்களும் கிடைக்கின்றன. இந் நாட்டில் காணப்பெறும் ஆடுகள் மிக்க உயர்ந்த இனத்தைச் சேர்ந்தவை.'

மார்க்கோபோலோவின் மேற்கூறப்பெற்ற செய்திகள் பெரும்பாலும் உண்மையானவை. ஆயினும், உருத்திராம்பாள் பிரதாபருத்திர கணபதியின் மனைவியல்ல; அவருடைய மகள். அவள் தன்நாட்டை ஆட்சிபுரிந்த காலத்தில் விதவையாக இருந்திருக்கலாம். அவள் முப்பது ஆண்டுகளுக்கு ஆட்சி புரிந்தாள்; நாற்பது ஆண்டுகள் அல்ல. அங்கு கிடைத்த மெல்லிய துணிகளைப் போர்வைகள் என்று மார்க்கோபோலோ கூறியதும் பொருத்தமானதல்ல. உருத்திராம்பாளுடைய மகள்

வயிற்றுப் பெயரன் இரண்டாம் பிரதாபருத்திரனுக்குத் தகுந்த வயது வந்தவுடன், தன்னுடை அரசப்பதவியைத் துறந்து தன் பெயரனை ஆட்சிப்பீடத்தில் அமர்த்தினுள்.

## இரண்டாம் பிரதாபருத்திரன் (1291—1323)

தன்னுடைய பாட்டி உருத்திராம்பாளுக்குப் பிறகு கி. பி. 1291-ல் பிரதாபருத்திரன் காகதீயநாட்டின் மன்னனாக அரியணை ஏறினுன். ஆட்சியின் தொடக்கத்திலேயே குந்தளநாட்டின் மீது படையெடுத்து, அதோனி, இராய்ச்சூர் என்ற இடங்களை தேவகிரி யாதவமன்னனிடமிருந்து கைப்பற்றினுன். காகதீய நாட்டை 77 நாயக்கத்தானங்களாகப் பிரித்து, ஒவ்வொரு நாயக்கத்தானத்திலும் ஒரு நாயக்கனை தலைமைப் பதவிக்கு நியமித்து ஆட்சிமுறையை ஒழுங்குப்படுத்தினுன். பத்ம நாயக்கர்கள் என்ற இனத்தைச் சேர்ந்தவர்கள் நாயக்கர்களாக நியமனம் செய்யப்பெற்றனர். இஸ்லாமியர்கள் படையெடுத்த பொழுது, இந்த நாயக்கத் தலைவர்கள் தங்களுடைய நாட்டைக் காப்பதற்குப் பெரும்முயற்சிகள் எடுத்துக் கொண்டனர். அவர்களுள் காப்பைய்ய நாயக்கர் என்பார் மிக்க புகழ் வாய்ந்தவராவார். பிரதாபருத்திரனுடைய ஆட்சிக்காலத்தில் தோன்றிய இந்த நிலமானிய—நாயக்கத்தான முறை பிற்காலத்தில் விஜயநகர மன்னர்களால் பலவழிகளில் சீர்திருத்தி அமைக்கப் பெற்றது. இஸ்லாமியரின் படையெழுச்சிகளால் காகதீய அரசு சீர்குலைந்தது.

தேவகிரியை வசப்படுத்திக் கொள்ளையடித்தப் பிறகு 1309ஆம் ஆண்டில் வாரங்கல் கோட்டையை மாலிக்கபூர் முற்றுகையிட்டான். வாரங்கல், களிமண்ணுலும் கருங்கல்லாலும் அமைக்கப்பெற்ற இரண்டு கோட்டைச்சுவர்களால் சூழப் பெற்றிருந்தது. இவ்விரண்டு அரண்களையும் அழித்து இஸ்லாமியப்படைகள் வாரங்கலைப் பிடித்த பிறகு பிரதாபருத்திரன் சரணடைய வேண்டிவந்தது. அந் நகரத்தில் வாழ்ந்த மக்கள் எல்லோரையும் கொன்றுவிடப் போவதாக பயமுறுத்தி, பிரதாபருத்திரனுடைய செல்வங்கள் முழுவதையும் மாலிக்கபூர் கைப்பற்றிக் கொண்டான். ஆண்டுதோறும் டெல்லி சுல்தானுக்குத் திரை செலுத்தவும் பிரதாபருத்திரன் ஒப்புக்கொண்டான். மாலிக்கபூர், பிரதாபருத்திரனிடமிருந்து 300 யானைகளையும், 7000 குதிரைகளையும், 1000 ஒட்டகங்களின் மீது ஏற்றிச்செல்லக்கூடிய பொன், வெள்ளி, இரத்தினங்கள் அணிகலன்கள் முதலியவைகளையும் பெற்றதாக பெரிஷ்டா கூறுவர். 1313ஆம் ஆண்டில் திருவிதாங்கூர் நாட்டு மன்னனுகிய

இரவிவர்மன் குலசேகரன், காஞ்சிபுரத்தைக் கைப்பற்றிக் கொண்டு நெல்லூர்வரையில் படையெடுத்து வந்தனன். மூன்றாண்டுகள் கழித்து முப்பிடி நாயக்கன் என்ற காகதீய படைத்தலைவன் காஞ்சிபுரத்தைத் திரும்பக் கைப்பற்றி, திருச்சிராப்பள்ளிவரையில் சென்றதாகத் தெரிகிறது.

கி. பி. 1318ஆம் ஆண்டில் குஸ்ருகான் என்ற இஸ்லாமியத் தலைவன் வாரங்கல் நகரத்தை முற்றுகையிட்டுப் பிடித்தான். பிரதாபருத்திரனை இஸ்லாம் சமயத்தை மேற்கொள்ளும்படி வற்புறுத்தினான். தவறினால் அவனுடைய செல்வங்களையும் உயிரையும் கொள்ளைகொண்டு விடுவதாகப் பயமுறுத்தி, பெரும் பொருளுடன் தேவகிரிக்குத் திரும்பினான். மூன்றாண்டுகள் சென்றபின்னர் துக்ளக் முகம்மது என்று பெயர்பெற்ற உலூக் கான் என்பான், பிருதாபருத்திரனிடமிருந்து ஆண்டுதோறும் வர வேண்டிய திரைப்பொருட்களைப் பெறுவதற்காகப் படையெடுத்து வந்தான். பலவித எதிர்ப்புகளிடையே உலூக்கான் வாரங்கல் நகரத்தை முற்றுகையிட்டான். பிரதாபருத்திரனும் அவனுடைய வீரர்களும் மிக்க வீராவேசத்துடன் போரிட்டும் பயனில்லாது போயிற்று. 1323ஆம் ஆண்டில் வாரங்கல் வீழ்ச்சியுற்று பிதாபருத்திரதேவனும் கைது செய்யப்பெற்று டெல்லி நகருக்கு அனுப்பப்பெற்றான். ஆயினும், டெல்லிக்குச் செல்லும் வழியில் மன்தானி என்னுமிடத்தில் பிரதாபருத்திரன் இவ்வுலக வாழ்வை நீத்ததாக அறிகிறோம்.[1] வாரங்கல்லுக்கு, சுல்தான்புரி என்று பெயரிடப்பெற்று ஓர் இஸ்லாமிய ஆளுநரும் நியமிக்கப் பெற்றார். 1327ஆம் ஆண்டில் துக்ளக் முகம்மதுவின் படையெடுப்பிற்குப் பிறகு வாரங்கல்நாடு முழுவதும் அவருடைய பேரரசில் ஒருபகுதியாயிற்று.

பிரதாபருத்திரனுக்குப் பிறகு காகதீய அரசவமிசத்தைச் சேர்ந்தவர்களைப்பற்றி தெளிவான வரலாறு கிடைக்கவில்லை. துக்ளக் முகம்மதுவின் ஆட்சிக்கு எதிராகக் கலகம் விளைவித்த கிருஷ்ணப்ப நாயக்கன், பிரதாபருத்திரனுடைய மகன் என்று பெரிஷ்டா கூறுவர். 1362ஆம் ஆண்டில் பாமினி சுல்தானாகிய முதலாம் முகம்மதுவால் கொலைசெய்யப்பெற்ற விநாயகதேவன் என்பார், கிருஷ்ணப்ப நாயக்கனுடைய மகன் எனக் கருதப் பெறுகிறார். காகதீய அரசர்களுடைய நாணயங்களில் தலை நிமிர்ந்து படுத்திருக்கும் நந்தியின் உருவம் காணப்பெறுகிறது.

[1] R. Sathianathaier, Vol. II, P. 101.

## 3. துவாரசமுத்திரத்து ஹொய்சள மன்னர்களின் வரலாறு

மைசூர்நாட்டில் உள்ள துவாரசமுத்திரத்தைத் தலைநகராகக்கொண்டு ஆட்சிபுரிந்த ஹொய்சள வமிசத்தைத் தோற்றுவித்தவன் சளன் என்ற தலைவனுவான். அவனுக்குப் பிறகு வினயாதித்தன், நிருபகாமன் என்பவர்கள் ஆட்சி செலுத்தினர். இரண்டாம் வினயாதித்தன் கலியாணபுரத்துச் சாளுக்கியர்களுக்கு அடங்கிய சிற்றரசனுக இருந்தான். மேற் கூறப்பெற்ற தலைவர்கள் சசகபுரம் என்னும் இடத்தில் வாழ்ந்தனர். மைசூர்நாட்டில் சோழப் பேரரசர்களுக்கும், கலியாணபுரத்துச் சாளுக்கியர்களுக்கும் இடையே நடந்த போராட்டத்தில் பங்குகொண்டு தங்களுடைய செல்வாக்கை உயர்த்திக்கொண்டனர். ஏரியங்கன் (1063—1100) சாளுக்கிய அரசனுகிய ஆரும் விக்கிரமாதித்தனுடன் நட்புகொண்டு முதற் குலோத்துங்கசோழனுக்கு எதிரியாக விளங்கினுன். முதலாம் வல்லாளன் என்ற அரசன் (1100—1106), வேளூர் (Belur) என்ற இடத்திற்குத் தன் தலைநகரை மாற்றினுன். துவாரசமுத்திரத்தை எதிரிகளுடைய படையெடுப்பினின்றும் பாதுகாத்தான்.

முதலாம் வல்லாளனுடைய தம்பியாகிய பிட்டிதேவன் ஹொய்சள வமிசத்தின் ஆட்சியை நிலைநிறுத்தியவனுவான். தன்னுடைய படைத்தலைவன் கங்கராசன் என்பானை அனுப்பி சோழப் பேரரசன் முதற்குலோத்துங்கனுடைய ஆட்சியில் இருந்த கங்கபாடிப்பகுதியை 1117-ல் கைப்பற்றி, 'தலைக்காடு கொண்டான்' என்னும் பட்டத்தையும் மேற்கொண்டான். சோழமன்னர்களுடைய ஆட்சியிலிருந்த தமிழ்நாட்டின்மீதும் படையெடுத்து இராமேஸ்வரம் வரையில் சென்றதாக சொல்லப்படுகிறது. கி. பி. 1137ஆம் ஆண்டுக்குமுன் தற் காலத்திய மைசூர்நாடு முழுவதையும் தன்வசப்படுத்திக் கொண்டு துவாரசமுத்திரத்தைத் தன் தலைநகராகக்கொண்டான். பெயரளவில் மேலைச்சாளுக்கியருக்கு அடங்கியிருந்தபோதிலும் உண்மையில் சுதந்திர அரசனுகவே விளங்கினுன். பிட்டிதேவ னுடைய தண்டநாயகன் மாதவன், துளுநாடு, குவலாளபுரம், கொங்குநாடு முதலிய பகுதிகளைக் கைப்பற்றி ஹொய்சள நாட்டோடு சேர்த்துக்கொண்டான். கொங்குநாட்டில் தண்ட நாயக்கன் கோட்டை என்ற அரணை அமைத்தான். தொடக்கத் தில் சமண சமயத்தைச் சார்ந்திருந்த பிட்டிதேவன், இராமானுச ருடைய போதனையால் வைணவ சமயத்தைப் பின்பற்றி, விஷ்ணுவர்த்தனன் என்ற பெயரும் கொண்டான்.

## முதலாம் நரசிம்மன் (1141—1173)

விஷ்ணுவர்த்தனனுடைய மகன் முதலாம் நரசிம்மன் தன்னுடைய இளமைப் பருவத்திலேயே அரசுரிமை பெற்றான். அக் காலத்தில் வானவாசி, நுளம்பப்பாடி ஆகிய இருபகுதிகளும் சாளுக்கிய ஆளுநர்களின் ஆட்சியில் இருந்தன. ஆயினும், நரசிம்மனுடைய தண்டநாயகன் போகணன் என்பான் மேற் கூறப்பெற்ற இருபகுதிகளையும் ஹொய்சள நாட்டோடு சேர்த்துக் கொண்டான். முதலாம் நரசிம்மன் மனவடக்கமின்றி சிற்றின்ப நுகர்ச்சியில் மூழ்கியிருந்தான்.

## இரண்டாம் வல்லாளன் (1173—1220)

முதலாம் நரசிம்மனுக்குப்பின் இரண்டாம் வல்லாளன் அரசுரிமை எய்தினன். தேவகிரி நாட்டரசனாகிய பில்லாம னுடன் 1191-ல் போர்தொடுத்து, வெற்றிபெற்றுத் தன்னுடைய நாட்டின் எல்லையைக் கிருஷ்ணைப் பேராறுவரையில் பரவும்படி செய்தான். இந் நிலையில் கலியாணபுரத்துச் சாளுக்கியப் பேரரசனாகிய நான்காம் சோமேச்வரனுடைய பேரரசு சீர் குலைந்தமையால், ஹொய்சள மன்னனும், தேவகிரி யாதவவமிச மன்னர்களும் சுதந்திரமடைவது சுலபமாயிற்று. 1192ஆம் ஆண்டில் இரண்டாம் வல்லாளன் தன் நாட்டிற்கு முதன்மை அதிகாரத்தை மேற்கொண்டு தன்னுடைய ஆட்சியின் நினைவாக ஓர் ஆண்டையும் தோற்றுவித்ததாக நாம் அறிகிறோம். இவ்விதம், பன்னிரெண்டாம் நூற்றாண்டில் ஹொய்சளர்கள் முன்னேற்றமடைந்து, தென்னிந்தியாவில் விஜயநகரப்பேரரசு அமையும் வரையில் சிறந்ததொரு அரசியல் சேவை செய்தனர். இரண்டாம் வல்லாளன் மகாராசாதிராசன் என்ற பேரரசு பட்டத்தையும் மேற்கொண்டான்.

## இரண்டாம் நரசிம்மன் (1220—1235)

இவ்வரசனுடைய ஆட்சியில் தேவகிரிநாட்டு யாதவ மன்னர்களோடு நடந்த போராட்டத்தில் ஹொய்சள அரசன் தோல்வியடைந்து, கிருஷ்ணை, துங்கபத்திரை நதிகளுக்கிடையிலுள்ள இடைதுறைநாட்டை இழக்கவேண்டி வந்தது. ஆயினும், இரண்டாம் நரசிம்மன் தமிழ்நாட்டில் சோழமன்னர்களுடன் உறவுகொண்டு பல நன்மைகளை அடைந்தான். சோழ அரசகுலத்தில் மணவுறவு கொண்டு பாண்டியர்களுக்கு எதிராக சோழமன்னனுக்கு உதவி செய்தான். காஞ்சிபுரம், திருவரங்கம் முதலிய இடங்களைத்

தன்வசப்படுத்தி இராமேஸ்வரம்வரையில் சென்று வெற்றித் தூண் ஒன்றை நிறுவினுன். மூன்ரும் இராஜராஜன் என்ற சோழ அரசன் பாண்டிய மன்னனுகிய மாறவர்மன் சுந்தர பாண்டியனுல் தோற்கடிக்கப்பட்டு, ஹொய்சள மன்னனுடைய உதவியை நாடிச் சென்றபொழுது காடவர்குலத் தலைவன் கோப்பெருஞ்சிங்கனுல் சேந்தமங்கலத்தில் சிறையிலிடப் பட்டான். இரண்டாம் நரசிம்மனுகிய ஹொய்சள மன்னன், கோப்பெருஞ்சிங்கனேடு போர்தொடுத்து மூன்ரும் இராஜ ராஜனுக்கு உதவிசெய்து மீண்டும் தன் அரசைப் பெறுமாறு செய்தனன். ஆகையால், இரண்டாம் நரசிம்மன் 'சோழராஜ்ய பிரதிட்டாசாரியன்' என்ற பட்டத்தையும் மேற்கொண்டான்.

## சோமேச்வரன் (1235—1254)

இரண்டாம் நரசிம்மனுக்குப் பிறகு அவனுடைய மகன் சோமேச்வரன் திருச்சிராப்பள்ளிக்கு அருகில் உள்ள கண்ணனூர் என்ற இடத்தைத் தன்னுடைய தமிழ்நாட்டுத் தலைநகராகக் கொண்டு, சுருங்கிக்கொண்டிருந்த சோழப் பேரரசில் பங்குகொண்டான். திருவானைக்கா கோயிலின் முதற்கோபுரம் இவ்வரசனுல் அமைக்கப்பெற்றதாகும். சோமேச் வரன் ஹொய்சளப் பேரரசை இருபகுதிகளாகப் பிரித்து கன்னடநாட்டுப் பகுதியை தன் மகன் மூன்ரும் நரசிம்மனுக்கும், தமிழ்நாட்டுப் பகுதியை இராமநாதன் என்ற தன்னுடைய மற்றெரு புதல்வனுக்கும் பிரித்துக்கொடுத்தான். கி பி. 1254ஆம் ஆண்டில் சோழநாட்டின்மீது படையெடுத்துவந்த சடைய வர்மன் சுந்தர பாண்டியன், சோமேச்வரனைத் தோற்கடித்து, கண்ணனூரைப் பிடித்துக் கொண்டான். இப் போரில் சோமேச்வரன் உயிர் துறந்தான்.

சோமேச்வரனுக்குப் பிறகு தமிழ்நாட்டில் இராமநாதன் ஆட்சிசெலுத்தி வந்தான். திருச்சிக்கருகிலுள்ள கண்ணனூரும், சேலம் மாவட்டத்தில் உள்ள குந்தானியும் அவனுடைய முக்கிய நகரங்களாக இருந்தன. இராமநாதனுடைய கல்வெட்டுகள் தஞ்சை, திருச்சி மாவட்டங்களில் காணப்பெறு கின்றன. கன்னட நாட்டில் மூன்ரும் நரசிம்மன் ஆட்சிசெலுத்தி தேவகிரிநாட்டு யாதவர்களுடைய படையெழுச்சிகளிலிருந்து தன்னுடைய நாட்டைக் காப்பாற்றினுன். கி.பி. 1291ஆம் ஆண்டில் நரசிம்மனுக்குப் பிறகு அவனுடைய மகன் மூன்ரும் வல்லாளன் துவாரசமுத்திரத்தில் அரசனுனன். தமிழ்நாட்டில் ஹொய்சள அரசனுக இருந்த இராமநாதனுடைய மகன்

விஸ்வநாதன் 1297-ல் சந்ததியின்றி இறந்தபின், ஹொய்சள அதிகாரத்திற்குட்பட்ட நாடுகள் முழுவதும் மூன்றும் வல்லாளனுடைய ஆட்சியின்கீழ் வந்தன.

## மூன்றும் வல்லாளன் (1291—1342)

மூன்றும் வல்லாளதேவன் ஹொய்சள வமிசத்து பேரரசர்களுள் மிக்க சிறப்புற்றவனுவான். 1303ஆம் ஆண்டில் ஆளுபர்கள் என்ற இனத்தவர்களிடமிருந்து துளுநாட்டை வென்று ஹொய்சளப் பேரரசுடன் சேர்த்துக் கொண்டான். மூன்றும் வல்லாளதேவன் மேலேச்சாளுக்கியர், கடம்பர், பல்லவர், சோழ, பாண்டிய அரச வமிசத்தவர்களோடு தொடர்பு கொண்டிருந்ததாக சில வரலாற்றறிஞர்கள் கூறுவர். 1305ஆம் ஆண்டில் தேவகிரிநாட்டு யாதவ அரசனுடன் மூன்றும் வல்லாளன் போரிட நேர்ந்தது. மாலிக்கபூர் என்பான் துவார சமுத்திரத்தின்மீது படையெடுத்த காலத்திற்குச் சற்றுமுன், பாண்டியநாட்டில் குலசேகர பாண்டியன் இறந்தபிறகு அவனுடைய குமாரர்களிடையே தோன்றிய வாரிசுரிமைப் போரில் ஈடுபட்டு, இராமநாதன் ஆட்சியில் பாண்டியர் கைப்பற்றிய தமிழ்நாட்டுப் பகுதியைத் தன்வசத்தில் கொண்டு வருவதற்கு முயற்சி செய்தான். ஆயினும், விதிவலியால் அவனுடைய எண்ணம் ஈடேறவில்லை. தேவகிரியையும், வாரங்கல்லேயும் கொள்ளையடித்த பிறகு மாலிக்கபூர் துவாரசமுத்திரத்தையும் முற்றுகையிட்டான். 1310ஆம் ஆண்டில் மூன்றும் வல்லாளதேவன் தோல்வியை ஒப்புக்கொண்டு ஏராளமான செல்வத்தை மாலிக்கபூருக்கு அளிக்கவேண்டி வந்தது. மூன்றும் வல்லாளனுடைய மகனுகிய வல்லாளதேவன் என்ற இளவரசனும், மாலிக்கபூருடன் டெல்லிக்குச் சென்று பின்னர் 1313-ல் திரும்பிவந்ததாகத் தெரிகிறது. மூன்ருண்டுகளுக்குப் பிறகு துவாரசமுத்திரத்தின் அரண்கள் செப்பனிடப்பெற்றன.

1326ஆம் ஆண்டில் முகமது துக்ளக்கிற்கு எதிராகக் கலகம்செய்த பகா-உ-தீன் என்பான் கம்பிலிநாட்டிலிருந்து தப்பித்துவந்து துவாரசமுத்திரத்தில் தஞ்சமடைந்தான் ஆனல் வல்லாளதேவன், அவனே முகம்மது துக்ளக்கிடம் ஒப்படைத்துவிட்டான். அடுத்த ஆண்டில் முகம்மது துக்ளக் துவாரசமுத்திரத்தைத் தன்வசப்படுத்தித் தன்னுடைய பேரரசில் சேர்த்துக்கொண்டான். 1336ஆம் ஆண்டில் துங்கபத்திரை நதிக்கரையில் அரண்கள் அமைந்த நகர் ஒன்றையமைத்து

தன்னுடைய மகன் வீரவிஜய விருபாக்ஷ வல்லாளனுடைய பெயரை அதற்கு வைத்து விஜயநகர் என்று பெயரிட்டதாக பெரிஷ்டா என்ற வரலாற்றுசிரியர் கூறுவர். இரண்டு கல்வெட்டுகளில், இந்த வீரவிஜய விருபாக்ஷபுரத்தில் மூன்றும் வல்லாளன் தங்கியிருந்ததாகக் கூறப்பெற்றுள்ளது.[1] தமிழ் நாட்டில் உள்ள திருவண்ணாமலையையும் மூன்றும் வல்லாளன் தன்னுடைய தலைநகரமாகக் கொண்டிருந்ததாகத் தெரிகிறது.

சங்கம வமிசத்து அரிஹரன், புக்கன் என்போருடைய உதவியுடன் விருபாக்ஷபுரத்தில் (ஹம்பி) தன்னுடைய நாட்டின் வடக்கு எல்லையைப் பாதுகாப்புள்ளதாகச் செய்துகொண்டு பின்னர் மதுரைநகரையாண்ட சுல்தான்மீது மூன்றும் வல்லாளன் படையெடுத்ததாகத் தெரிகிறது. மூன்றும் வல்லாளதேவன் மிக்க வயது சென்றவனுயினும் விடாமுயற்சியுடன் போரிட்டுத் தென்னிந்தியாவில் நிலைபெற்றிருந்த இஸ்லாமிய ஆட்சியைக் குலைப்பதற்கு ஏற்ற முயற்சிகளைக் கைக்கொண்டான். தன்னுடைய சேனையில் 20 ஆயிரத்திற்கு மேற்பட்ட இஸ்லாமிய வீரர்களையும் சேர்த்துக்கொண்டு, குதிரைப்படையைச் செம்மையுறச் செய்தான். 1340 ஆம் ஆண்டில் பொறிக்கப்பெற்ற கல்வெட்டு ஒன்று, வல்லாளதேவன் இராமேஸ்வரத்தில் வெற்றித்தூண் ஒன்றை நிறுவியதாகக் கூறுகிறது. 1342ஆம் ஆண்டில் மதுரை சுல்தான் கியாத்-யுதீன் என்பானுடன் கண்ணனூருக்கருகில் போர் தொடுத்துத் தொடக்கத்தில் வெற்றிபெற்றுன். ஆயினும், இஸ்லாமியத் தலைவர்களுடைய சூழ்ச்சியினுல் பின்னர் தோல்வியுற்றுன். மதுரை சுல்தானும் வல்லாளதேவனைச் சிறைப்படுத்தி அநாகரீக முறையில் அவன்மீது பழிதீர்த்துக் கொண்டான். ஹொய்சள ஆட்சியையும், இந்து சமயத்தையும் பாதுகாக்க முயன்ற மூன்றும் வல்லாளதேவனின் வாழ்க்கைப் பரிதாபகரமாக முடிந்தது.

மூன்றும் வல்லாளனுடைய மகன் நான்காம் வல்லாளதேவன் 1346ஆம் ஆண்டுவரையில் திருவண்ணாமலையைத் தலைநகராகக்கொண்டு ஆட்சிபுரிந்து வந்ததாகத் தெரிகிறது. திருவண்ணாமலைக் கோவிலில் உள்ள வல்லாளகோபுரத்தில் இன்றும் நான்காம் வல்லாளதேவனுடைய உருவச்சிலையொன்று காணப்பெறுகிறது. அவனுடைய வாழ்நாளின் இறுதிக்காலத்தைப்பற்றிப் பல கதைகள் வழங்குகின்றன.

[1] R. Sathianathaier, Vol. II, p. 106.

1346ஆம் ஆண்டில் நான்காம் வல்லாளதேவனுடைய மறைவிற்குப் பிறகு, விஜயநகர வேந்தனாகிய முதலாம் அரிஹரன் ஹொய்சளநாட்டைத் தன்னுடைய ஆட்சியின் கீழ்க் கொண்டுவந்தான்.

## 4. பாண்டிய மன்னர்களின் வரலாறு

மூன்றாம் குலோத்துங்க சோழனுடைய ஆட்சிக் காலத்தில் பாண்டியர்கள், சோழ மன்னனுக்கு அடங்கிக் கப்பம் செலுத்தி வந்தனர் என்று முற்பகுதியில் கண்டோம். மூன்றாம் குலோத்துங்கனுக்குப் பிறகு சடையவர்மன் சுந்தர பாண்டியனும், மாறவர்மன் குலசேகர பாண்டியனும் சுயேச்சை யடைந்து, பதின்மூன்றாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பாண்டியப் பேரரசை நிறுவினர். வரலாற்று ஆசிரியர்கள் இக் காலத்தைப் பாண்டிய மன்னர்களின் இரண்டாவது பேரரசு என்றழைப்பர்.

### சடையவர்மன் முதலாம் குலசேகர பாண்டியன் (1190—1215)

இக் காலத்திய பாண்டிய மன்னர்களின் வரலாற்றை உணர்வதற்கு அவர்களுடைய கல்வெட்டுகள் மிக்கத் துணை செய்கின்றன. சடையவர்மன் குலசேகர பாண்டியனுக்கு இராச கம்பீரன் என்ற மற்றொரு பெயரும் வழங்கியது. இவன் மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்களைச் சேர்த்து அரசுபுரிந்தான். இவ்வரசன் அமர்ந்து ஆட்சிபுரிந்த அரியாசனங்களுக்கு மழவராயன், காலிங்கராயன், முனைய தரையன் என்ற பெயர்கள் வழங்கின. 1030 அந்தணர்களுக்குப் பிரமதேயமாகப் பல சதுர்வேதி மங்கலங்களை அமைத்து உள்ளான்.[1]

### மாறவர்மன் முதலாம் சுந்தர பாண்டியன் (1216—1238)

இப் பாண்டியமன்னன், சடையவர்மன் குலசேகர பாண்டிய னுக்கு மகனாக அல்லது தம்பியாகக் கருதப்பெறுகிறான். கலியுக ராமன், அதிசய பாண்டியதேவன், சோனாடு கொண்டான் முதலிய பட்டப்பெயர்கள் இவ்வரசனுக்கு வழங்கின. சோழப் பேரரசன் மூன்றாம் இராஜராஜ சோழன் காலத்தில் இவன் பாண்டிய மன்னனாக விளங்கினான். மூன்றாம் இராஜராஜனோ திறமையும் நல்லூழும் இல்லாத அரசனாக இருந்தான். மாறவர்மன் எல்லாவித உயர்குணங்களும் பொருந்திய பெரு

[1] Dr. N. Subramanian, 'History of Tamil Nadu, pp.260 61.

வீரனுகத் திகழ்ந்தான். மூன்றும் குலோத்துங்க சோழன் பாண்டியநாட்டின்மீது படையெடுத்து நாட்டிற்கும், மக்களுக்கும் இழைத்த தீயசெயல்களை மனத்துட்கொண்டு, சோழப் பேரரசனுல் தன்னுடைய நாடு அடைந்த துன்பங்களைப் பதிலுக்குப் பதில் அந் நாடு அடையவேண்டும் எனக் கருதி, 1219ஆம் ஆண்டில் சோழநாட்டின்மீது படையெடுத்தான். மூன்றும் இராஜராஜனுடைய படைகளைப் பல இடங்களில் தோற்கடித்து உறையூரையும், தஞ்சையையும் கைப்பற்றிப் பல இடிபாடுகளை உண்டாக்கினுன். சோழப்பேரரசின் தெற்குப் பகுதியைத் தன்னுடைய ஆட்சியின்கீழ்க் கொண்டுவந்தான். தோல்வியுற்ற மூன்றும் இராஜராஜன் பழையாறை வடதளியில் மறைந்து வாழ்க்கை நடத்தவேண்டி வந்தது. சுந்தர பாண்டியன் பழையாறை நகரைத் தன்வசமாக்கி அங்கே வீராபிடேகமும் விசயாபிடேகமும் செய்துகொண்டான்.

சோழநாட்டின்மீது மாறவர்மன் சுந்தர பாண்டியன் படையெடுத்து வெற்றிபெற்று மூன்றும் இராஜராஜ சோழனைத் துன்புறுத்திய செய்திகளை, ஹொய்சள மன்னர்களாகிய இரண்டாம் வல்லாளனும், வீரநரசிம்மனும் கேள்வியுற்று, சோழ அரசனுக்கு உதவியாக பாண்டிய நாட்டின்மீது படையெடுத்தனர். மாறவர்மன் சுந்தர பாண்டியனை மகேந்திரமங்கலம் என்னுமிடத்தில் தோல்வியுறச்செய்து, மீண்டும் மூன்றும் இராஜராஜனுக்கு சோழநாட்டைத் திருப்பி அளிக்கும்படி வீரநரசிம்மன் பணித்தருளினுன். இவ்விதம் ஹொய்சள மன்னன் சோழ அரசனுக்கு உதவி செய்தது, தங்களுடைய நாட்டைப் பாண்டிய மன்னர்கள் பிடித்துவிடாமல் பாதுகாப்பதற்கும், பாண்டியப் பேரரசிற்கும் ஹொய்சளப் பேரரசிற்கும் இடையில், சோழநாடு ஓர் இடைப்பட்ட நாடாக விளங்க வேண்டும் என்ற அரசியல் சமநிலைக்கொள்கையாகும்.

ஹொய்சள மன்னன் வீரநரசிம்மனுடைய தலையீட்டினுல் மூன்றும் இராஜராஜன், பாண்டிய மன்னனுக்குத் திறை செலுத்துவதற்கு ஒப்புக்கொண்டு, பிறகு தன்னுடைய அரசபதவியை ஏற்ற போதிலும், சோழ மன்னன் தன்னுடைய வாக்குறுதியை நிறைவேற்றத் தவறி விட்டான். தன்னுடைய முன்னேர்களின் பெருமையை எண்ணி பெருமூச்சு விட்டுக் கொண்டிருந்தான். ஆகையால், இரண்டாவது முறையாக சோழநாட்டின்மீது மாறவர்மன் சுந்தர பாண்டியன் படையெடுக்க வேண்டிய அவசியம் நேர்ந்தது. மூன்றும் இராஜராஜன் பெருந்தோல்வி அடைந்து தன்னுடைய உரிமைச் சுற்றத்தோரும், மற்றவரும்

பின்வர ஹொய்சள மன்னனுடைய உதவியை நாடிக் குந்தள நாட்டிற்குச் செல்லுகையில், காடவர்குலத் தலைவனாகிய கோப்பெருஞ்சிங்கனால் பெரும் துன்பம் உற்றான். இவ் வரலாறு பதின்மூன்றாம் பகுதியில் விரிவாகக் கூறப்பெற்றுள்ளமையால் ஆண்டு காண்க.

முதலாம் மாறவர்மனுக்குப் பிறகு, இரண்டாம் மாறவர்மன் சுந்தர பாண்டியன் அரசுரிமை ஏற்றனன் (1238—1251). இப் பாண்டிய அரசன் ஹொய்சள வீரசோமேச்வரனுடனும் கொங்குநாட்டை ஆண்ட விக்கிரமசோழனுடனும் நெருங்கிய மணவுறவு கொண்டிருந்தான். இதனால் வீரசோமேச்வரனுடைய செல்வாக்கு பாண்டியநாட்டில் கையோங்கி அவனுடைய சொற்படி பாண்டிய அரசன் நடக்க வேண்டியிருந்தது. மூன்றாம் இராஜராஜனின் மகனாகிய மூன்றாம் இராஜேந்திரன், பாண்டியநாட்டின்மீது படையெடுத்து மாறவர்மனைத் தோற்கடித்து தனக்குக் கப்பம் கட்டும்படி செய்தான். இத் தருணத்தில் முன்னர் சோழஅரசன் மூன்றாம் இராஜராஜனுக்கு வீரநரசிம்மன் உதவிசெய்ததுபோல் வீரசோமேச்வரன், மாறவர்ம பாண்டியனுக்கு உதவிசெய்து மீண்டும் தன்னுடைய நாட்டையும் அரச பதவியையும் அவன்பெறும்படி செய்தான். பாண்டியகுல ரக்ஷகன் என்னும் பட்டத்தையும் வீரசோமேச்வரன் புனைந்துகொண்டனன்.

## சடையவர்மன் முதலாம் சுந்தர பாண்டியன் (1251—1268)

இப் பாண்டிய மன்னன் ஆட்சியில் பாண்டிய அரசு முதன்மைபெற்று, சோழப்பேரரசு போன்று பெருமிதம் அடைந்தது. திருவரங்கம், திருப்பூந்துருத்தி முதலிய இடங்களில் காணப்பெறும் கல்வெட்டுகள் இவ்வரசனுடைய வெற்றிச் செயல்களை விரித்துக் கூறுகின்றன. தெற்கே கன்னியாகுமரியிலிருந்து வடக்கே நெல்லூர்வரையிலும் பாண்டியப்பேரரசு பரவியது. சோழப்பேரரசு பாண்டியப்பேரரசில் ஒருபகுதியாயிற்று. ஹொய்சள மன்னர்கள் அடிபணிந்தனர். இலங்கையும் சேரநாடும் பாண்டியப்பேரரசிற்கு உட்பட்டன.

தொடக்கத்தில் சேரநாட்டரசனாகிய இரவி உதய மார்த்தாண்டவர்மன் என்பானை வென்று சடையவர்மன் தன்னடிப்படுத்தினான். பின்னர் சோழநாட்டின்மீது படையெடுத்து மூன்றாம் இராஜேந்திரனையும் தோல்வியுறச்செய்து அவனுடைய நாட்டையும் பாண்டியப்பேரரசோடு இணைத்தான்.

மூன்றும் இராஜேந்திரனேடு சோழகுலமும் அரசும் மறைந் தொழிந்ததெனக் கூறலாம். கண்ணனூரில் இருந்து அரசாண்டு வந்த வீரசோமேச்வரனும் தோல்வியுற்று உயிரிழந்தனன். அவனுடைய தண்டநாயகர்களாகிய சிங்கணன் முதலியோர் விண்ணுலகையடைந்தனர். சோமேச்வரனின் மகன் இராம நாதன் பாண்டியருக்கடங்கிய சிற்றரசனுனன். சேந்தமங்க லத்தில் வெற்றிக்கொடி கொண்டிருந்த காடவ கோப்பெருஞ் சிங்கனும் தன்னுடைய சுதந்திரமிழந்து பாண்டியனுக்கு அடி பணிந்தான். காஞ்சிநகரத்தையும், அதைச் சூழ்ந்துள்ள நிலப் பகுதியையும் ஆண்ட தெலுங்குச் சோழத் தலைவனுகிய விஜய கண்டகோபாலனும் தோல்வியுற்றனன். பாண்டியமன்னன் அவனுடைய நாட்டை அவன் தம்பிக்கு அளித்து தனக்குக் கப்பம் கட்டும்படி செய்தான். மகதைநாட்டு வாணர்குலத் தலைவர்களும், கொங்குச் சோழர்களும் பாண்டியனுக்கு அடி பணிந்தனர். காகதீய அரசனுகிய பிரதாபருத்திர கணபதியும் தோல்வியுற்றுப் பாண்டிய அரசில் சிற்றரச பதவியை ஒப்புக் கொண்ட பிறகு, சடையவர்ம சுந்தர பாண்டியன் நெல்லூரில் வீராபிடேகமும் விசயாபிடேகமும் செய்து கொண்டான். இலங்கைநாட்டு மன்னனும் பாண்டியனுடைய பேரரசிற்கு வணங்கித் திரைப்பொருளாக நூற்றுக்கணக்கான யானைகளை அனுப்பிவைத்தனன்.

மேற்கூறப்பெற்ற வெற்றிகளினுல் சடையவர்மன் சுந்தர பாண்டியன், 'எம்மண்டலமும் கொண்டருளிய', 'எல்லாம் தலையாய பெருமாள்' என்னும் பட்டங்களை மேற்கொண்டான். சைவ சமயத்தின் முக்கிய தலமாகிய தில்லையும், வைணவ சமயத்தின் இருதயமாகிய திருவரங்கமும் சுந்தர பாண்டிய னுடைய நன்கொடைகளினுல் மிகுந்த பேறுகள் பெற்றன. சமணப்பள்ளிகள் பலவும் பாண்டியமன்னனுடைய உதவியைப் பெற்றன. சடையவர்மன் வீரபாண்டியன், சடையவர்மன் விக்கிரம பாண்டியன் என்ற பாண்டிய இளவரசர்கள் சோழ நாட்டின் ஆளுநர்களாக நியமிக்கப்பெற்றிருந்தனர். சடைய வர்மன் விக்கிரம பாண்டியனுக்குப் புவனேகவீரன் என்ற பெயரும் வழங்கியது. சிதம்பரத்திற்கு அண்மையிலுள்ள புவனகிரி என்னும் பேரூர், புவனேகவீரன்பட்டினம் என்பதன் மருஉமொழியாகும்.

## மாறவர்மன் குலசேகர பாண்டியன் (1268—1310)

இந்தப் பாண்டிய மன்னனுடைய ஆட்சியில் கொல்லமும், இலங்கையும் பாண்டியப்பேரரசில் இணைக்கப்பெற்றன. ஆரியச் சக்கரவர்த்தி என்ற சேனுதிபதி இலங்கையின்மீது படை

யெடுத்துச்சென்று அந் நாட்டை பெருந்துன்பத்திற்கு உள்ளாக்கினுன். இலங்கையிலிருந்து கௌதமபுத்தருடைய சின்னமாகிய பல் ஒன்றைப் பாண்டியநாட்டிற்குக் கொண்டு வந்தனன். பின்னர், அச் சின்னத்தை இலங்கை வேந்தனுகிய பராக்கிரமபாகு, குலசேகர பாண்டியனை வேண்டி திரும்பப் பெற்றுச்சென்ருன். சோழ, தொண்டை மண்டலங்களில் குலசேகர பாண்டியனுடைய கல்வெட்டுகள் நிரம்பக் கிடைத்துள்ளன. இவற்ருல் பாண்டியப்பேரரசின் எல்லைகளை நாம் உணரமுடிகிறது. புவனேகவீரன், கொல்லம் கொண்டான் முதலிய பட்டங்களைக் குலசேகர பாண்டியன் மேற் கொண்டனன்.

இந்தப் பாண்டியப் பேரரசனுடைய ஆட்சிக்காலத்தில் மார்க்கோபோலோ என்ற வெனிஸ் நகரத்து வழிப்போக்கரும், வாசாப் (wassaf) என்ற இஸ்லாமிய வரலாற்ருசிரியரும் பாண்டியநாட்டிற்கு வந்தனர். மார்க்கோபோலோ, குலசேகர பாண்டியனை 'அஷார்' என்றும், வாசாப் 'கலேஷ் தேவர்' என்றும் அழைத்துள்ளனர். கி. பி. 1293-ல் பாண்டியநாட்டில் பிரயாணம் செய்த மார்க்கோபோலோ பின்வருமாறு கூறி யுள்ளார்:

'இந்திய துணைக்கண்டத்தில் தென்கிழக்குப் பகுதியில் மாபார் (பாண்டியநாடு) உள்ளது. இது உலகில் உள்ள நாடுகளில் மிகச் சிறந்ததாகும். இப் பாண்டியப் பேரரசை ஒரு பேரரசனுக்கு அடங்கி நான்கு சகோதரர்கள் ஆண்டு வருகின்றனர். இந் நாட்டின் தெற்குப் பகுதியில் சுந்தர பாண்டியதேவன் ஆட்சிபுரிகிருன். இந் நாட்டில் விலையுயர்ந்த முத்துகள் கிடைக்கின்றன. காயல்பட்டினம் (தாமிரவர்ணியின் முகத்துவாரத்திலுள்ளது) குலசேகர பாண்டியனுக்குச் சொந்தமான முக்கிய துறைமுகமாகும். இந்த ஐந்து பாண்டியர்களுக்குத் தலைமை வகித்தவன் குலசேகர பாண்டியன். இக் காயல் துறைமுகத்தில், மேற்கில் ஆர்மூஸ், கிஸ், ஏடன், அரேபியா முதலிய நாடுகளிலிருந்து குதிரைகளையும், மற்ற பொருள்களையும் கொண்டுவந்துள்ள கப்பல்கள் நிரம்பவும் காணப்பெறுகின்றன. இந் நகரத்தில் வாணிபம் மிகவும் செழிப்புற்று உள்ளது.'

'பாண்டிய மன்னனிடம் ஏராளமான பொன்னும், மணியும், முத்துகளும், பவழங்களும் உள்ளன. மன்னனுடைய ஆடைகளில் சிறந்த முத்துகளும், உயர்ந்த அணிகலன்களும்

காணப்பெறுகின்றன. தன்னுடைய அரண்மனையையும், சபை யையும் அரசன் உயர்ந்த நிலையில் வைத்துள்ளான். நீதியுட னும் நடுநிலைமையுடனும் அரசன் செங்கோல் செலுத்துகிறான். அயல்நாட்டு வணிகர்கள் பாண்டிய நாட்டோடு வியாபாரம் செய்வதற்குப் போட்டியிடுகின்றனர்.'[1]

இன்னும், பாண்டியநாட்டு அரசன், மக்கள் முதலி யோருடைய சமூக வாழ்வையும் பற்றி மார்க்கோபோலோ குறிப்பிட்டுள்ளார். அரசனுக்கு ஐந்நூறு மகளிர் கொண்ட உவளகம் இருந்ததாகவும், மக்கள் மேல்சட்டை அணிந்து கொள்ளாமல் இடுப்பில் மாத்திரம் உடையணிந்திருந்த தாகவும், உடன்கட்டையேறுதல், சோதிடத்தில் நம்பிக்கை, சகுனம் பார்த்தல் முதலிய மூடப்பழக்கங்களும் மக்களிடையே பரவியிருந்ததையும் குறிப்பிட்டுள்ளார். தென்னிந்திய கோவில் களில் ஏராளமான தேவரடியார்கள் இருந்தனர் என்றும், பாண்டியநாட்டில் இறக்குமதி செய்யப்பெற்று, அரசாங்கத் தால் வாங்கப்பெற்ற குதிரைகள் தகுந்த பார்வையாளர்கள் இல்லாமலும், உணவு அளிக்கப்பெருமலும் வெகுவிரைவில் இறந்துவிட்டன என்றும், அதனால் அரசாங்கத்திற்குப் பெருவாரியான நஷ்டமுண்டாயிற்று என்றும் கூறியுள்ளார். பாண்டியநாட்டுப் போர்வீரர்களுக்குத் தகுந்த போர்க் கருவிகளும், பயிற்சியும் அளிக்கப்பெறவில்லையென்றும், அவர்களுடைய போரிடும் திறமை பிறரால் நகைக்கத்தக்கது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

### வாசாப் கூறும் செய்திகள்

வாசாப் என்ற இஸ்லாமிய வரலாற்றாசிரியர், குலசேகர பாண்டியனுடைய ஆட்சியில் பாண்டியநாட்டின் பெருமையைப் பற்றிக் கூறியுள்ளது மிகவும் போற்றத்தக்கதாகும்.

'சீனம், கான்டன் முதலிய நாடுகளிலிருந்து கிடைக்கும் வினோதமான பொருள்களும், சிந்து, ஹிந்து முதலிய நாட்டின் அழகிய பொருள்களும் மலைபோன்ற கப்பல்களில் வந்து இறங்குகின்றன. இக்கப்பல்களின் பாய்மரங்களில் கட்டப்பெற்ற பாய்கள் காற்றின் உதவியால் கடல்களின்மீது செல்கின்றன. மாபார்(பாண்டிய) நாட்டோடு நடைபெறும் வியாபாரத்தினால் பாரசீகக்குடாவில் உள்ள தீவுகளின் செல்வமும், இராக்,

[1] R. Sathianathaier, Vol. II, p. 113

கொரசான், துருக்கி,ஐரோப்பா முதலிய நாடுகளின் வியாபாரச் செழிப்பும் ஓங்கியுள்ளன. மேலைநாடுகளின் வியாபார்த்திற்குப் பாண்டியநாடு ஓர் இருதயம்போன்று விளக்குகிறது.'

'குலசேகர பாண்டியன் தன்னுடைய நாட்டை அன்னியர் படையெழுச்சி இன்றியும் சிறந்த உடல்நலத்தோடும் நாற்பது ஆண்டுகள்வரை ஆண்டு வந்துள்ளார். அவருடைய அரசாங்கக் கருவூலம் மதுரைநகரில் அமைந்திருந்தது. அக் கருவூலத்தில் 1,200 கோடி பொன் நாணயங்களுக்குமேல் இருந்தன. இன்னும் முத்துகளும், இரத்தினங்களும், கோமேதகம், மரகதம் முதலிய நவரத்தினங்களும் நிறைந்துள்ளன. அவைகளின் விலை மதிப்பு நாவினுல் கூற வொண்ணுததாகும்.'

'மேற்கூறப்பெற்றவாறு செல்வத்திலும், ஆட்சித்திறனிலும் சிறப்புற்றிருந்த குலசேகர பாண்டியன், அரசதர்மத்தை மீறி தன் பட்டமகிஷியின் மகனை மூத்தவ உப் புறக்கணித்து, உரிமையில்லாத தன்னுடைய இளையமகனுக்குப் பாண்டிய நாட்டு அரசுரிமையை அளித்தது வெறுக்கத்தக்கச் செயலாகும். இச் செய்கையினுல் மணப்பெண்போல இருந்த நாடு உள்நாட்டுப் போரால் சீர்குலைந்தது.'[1]

மேலும், குலசேகர பாண்டியன் ஆட்சியில் அராபிய நாட்டைச்சேர்ந்த அப்துர் ரஹிமான் என்பவர் ஏற்றுமதி இறக்குமதி வரித்துறை அதிகாரியாக நியமிக்கப்பெற்றிருந்ததாகவும், அவருடைய மகனும், பெயரனும் தொடர்ந்து பதவி வகித்தாகவும் வாசாப் அவர்கள் கூறியுள்ளார்.

மாறவர்மன் குலசேகர பாண்டியனுக்கு சடையவர்மன் சுந்தர பாண்டியன் என்றும், சடையவர்மன் வீரபாண்டியன் என்றும் இரு புதல்வர்கள் இருந்தனர். முதலில் சொல்லப்பட்ட சுந்தர பாண்டியன் குலசேகரபாண்டியனுடைய பட்டமகிஷியின் புதல்வன். அரசுரிமைக்கு உரிமையுள்ளவன். குலசேகரன் அவனைப் புறக்கணித்து, தன் ஆசைநாயகியின் மகனுகிய வீரபாண்டியனைத் தனக்குப்பின் அரியணையில் அமர்வதற்கு உரிமையுள்ளவனுக ஒப்புக்கொண்டான். இத் தீச்செயலைக் கண்ட சுந்தர பாண்டியன் தன் தகப்பனைக் கொன்றுவிட்டு,

[1] R. Sathianathaier, Vol. II, p. 115

வீரபாண்டியனையும் நாட்டைவிட்டுத் துரத்திவிட்டுத் தானே அரியணையில் அமர்ந்தான். வீரபாண்டியனும், அவனுடைய உதவியாளரும் சேர்ந்து சுந்தர பாண்டியனை எதிர்த்துப் போரிட்டதனுல் பாண்டியநாட்டில் பெரியதொரு உள்நாட்டுப் போர் தோன்றியது. மாலிக்கபூர் என்ற இஸ்லாமியத் தலைவன் பாண்டியநாட்டின்மீது படையெடுத்து நாட்டைச் சின்னுபின்ன மாக்குவதற்கு இந்த உள்நாட்டுப் போரே காரணமாயிற்று.

# 15. தக்காணத்திலும் தென்னிந்தியாவிலும் ஏற்பட்ட இஸ்லாமியப் படையெழுச்சிகள்

பதின்மூன்றும் நூற்றுண்டின் தொடக்கத்தில் கோரி முகம்மதுவின் அடிமையாகிய குத்புதீன் அய்பெக் என்பார், டெல்லி நகரத்தில் இஸ்லாமிய சுல்தான்களுடைய ஆட்சிக்கு அடிகோலினர். அவருக்குப்பின்வந்த அடிமை வமிசத்து சுல்தான்கள் ஆட்சியில் இஸ்லாமிய அரசானது விந்தமலைக்கு வடக்கேயுள்ள பகுதிகளில் மாத்திரம் பரவியது. இஸ்லாமிய ஆட்சி வடஇந்தியாவில் பரவியதினுல் ஆரியவர்த்தம் என்ற பெயர் மறைந்து இந்துஸ்தானம் என்ற பெயர் தோன்றியது. தக்காணத்தையும் தென்னிந்தியாவையும் இஸ்லாமிய ஆட்சியில் கொண்டுவருவதற்கு முயற்சி செய்தவன் அலாவுதீன் கில்ஜி என்ற கில்ஜி வமிசத்து சுல்தானுவான்.

அடிமை வமிசத்து சுல்தான்களுக்குப் பிறகு ஜலாலுதீன் கில்ஜி என்பார் சுல்தானுக இருக்கும்பொழுது, அவருடைய தம்பி மகனும் மருமகனுமாகிய அலாவுதீன், தன்னுடைய மனைவியும், மாமியும் தன்னை மதியாது நடந்துகொண்டதால். தான் எவ்வாற்றுனும் சுல்தானுக வேண்டுமென்று திட்டமிட்டான். சுல்தான் பதவியைக் கைப்பற்றுவதற்கு, ஏற்ற இடம், பொருள், ஏவலர்களைத் தேடிக் கொள்வதற்காக, தேவகிரியைத் தலைநகராகக் கொண்டு ஆட்சிசெலுத்திய யாதவ வமிசத்து இராமச்சந்திர தேவனுடைய தலைநகர்மீது படையெடுத்துச் சென்றுன். சுமார் 4,000 வீரர்கள் அடங்கிய குதிரைப்படையுடன் (1296ஆம் ஆண்டு பிப்ரவரிமீ 26உ) காரர் என்னுமிடத்திலிருந்து புறப்பட்டு, தேவகிரி கோட்டையை முற்றுகையிட்டான்.

யாதவமன்னனுகிய இராமச்சந்திர தேவன், தங்கம், வெள்ளி, நவரத்தினங்கள் முதலியவற்றை ஏராளமாகச் சேகரித்து வைத்திருந்தபோதிலும், தன்னுடைய நாட்டையும் செல்வத்தையும் அன்னியர்கள் படையெடுத்துக் கொள்ளை கொண்டுபோகாமல் தடுப்பதற்கு ஏற்ற சேனையை அமைத்

திருக்கவில்லை. மேலும், அவனிடமிருந்த சிறியதொரு படையை அழைத்துக்கொண்டு இராமச்சந்திர தேவனுடைய மகன் சங்கரதேவன் தென்னிந்தியாவிற்குப் புனிதயாத்திரை செய்ய போய்விட்டபடியால் தேவகிரி கோட்டைப் பாதுகாப்பின்றி இருந்தது. திடீரென்று ஏற்பட்ட இஸ்லாமியப் படையெடுப்பை யும், முற்றுகையையும் எதிர்த்து நின்று சமாளிப்பதற்கு ஏற்ற படைவன்மை இல்லாமையால், இராமச்சந்திர தேவன் அலாவுதீனுடன் சமாதான உடன்படிக்கை செய்துகொள்ள வேண்டி வந்தது.

அலாவுதீன், தேவகிரியில் கொள்ளையடித்த இராமச்சந்திர தேவனுடைய செல்வங்களை எவ்வளவு விரைவில் கொண்டு போக முடியுமோ அவ்வளவு விரைவில் கொண்டுசெல்ல திட்ட மிட்டான். ஆகவே, அவன் கைப்பற்றிய யானைகள், குதிரைகள் அன்றியும் ஏராளமான செல்வப்பொருளையும் பெறுவதற்குச் சம்மதித்தான். இத் தருணத்தில் புனிதயாத்திரை செய்து முடித்தபிறகு சங்கரதேவன் தன்னுடைய சேனையோடு திரும்பி வந்துவிடவே, அவன் தன்னுடைய தகப்பனுடைய சமாதான உடன்படிக்கையை ஒப்புக்கொள்ளாது போர்புரிவதற்கு முனைந்தான். போர் தொடங்குவதற்குமுன் அலாவுதீன், இராமச்சந்திர தேவனைத் தந்திரமாகக் கைதுசெய்து தன்னுடைய பாசறைக்குள் மறைத்து வைத்துவிட்டான். போர் நடந்தால் இராமச்சந்திரனைக் கொலை செய்துவிடுவதாகவும் பயமுறுத்தி னான். தன் தகப்பனுடைய உயிருக்கு ஆபத்து வந்துவிடும் என்று கருதிய சங்கரதேவனும், அலாவுதீனுடன் உடன்படிக்கை செய்துகொள்ளச் சம்மதித்தான்.

அவ்வுடன்படிக்கையின்படி யாதவமன்னன் 600 மணங்கு முத்துகளும், இரண்டு மணங்கு நவரத்தினங்களும், 1,000 மணங்கு வெள்ளியும், 4,000 பட்டுத்துண்டுகளும், மற்றும் ஏராளமான செல்வத்தையும் கொடுக்கவேண்டி வந்தது. இவை யன்றியும் எலிச்புரி என்ற இடத்தையும் அலாவுதீனுக்கு அளித்து, ஆண்டுதோறும் கப்பம் செலுத்துவதாகவும் ஒப்புக் கொண்டான். அலாவுதீன் தேவகிரியின்மீது படையெடுத்து பெற்ற வெற்றியையும், அங்கு அவனுக்குக் கிடைத்த பெரும் பொருள்களைப்பற்றியும் பெரிஷ்டா என்ற இஸ்லாமிய வரலாற்று அறிஞரின் கூற்று நம்மால் சிந்திக்கத்தக்கதாகும். 'அலாவுதீன் கில்ஜி தீர்க்கமாக எண்ணியும், தான் எண்ணிய விதமே திண்ணியமுறையில் தான் மேற்கொண்ட காரியத்தை

முடித்தும், அம் முடிவினுல் அளவற்ற செல்வத்தைப் பெற்றதையும் ஆராய்ந்துபார்த்தால், உலக வரலாற்றில் இவ்வித செயற்கருஞ் செயல்களைக் காண்பது அரிதாகும்'எனக் கூறுவர்.

இவ்விதமாக, தேவகிரிநாட்டிலிருந்து அலாவுதீன் பெற்ற பெருஞ்செல்வமானது, தன்னுடைய மாமன் ஜலாலுதீனைக் கொன்றுவிட்டு, அலாவுதீனே டெல்லியில் சுல்தான் பதவியை அடைவதற்குப் பேருதவி புரிந்தது.

அலாவுதீன் டெல்லியில் சுல்தானுகப் பதவி ஏற்ற பிறகு வடஇந்தியாவைத் தன்னுட்சியில் கொண்டுவருவதற்கு முயற்சி செய்தான். தக்காணத்தையும், தென்னிந்தியாவையும் கொள்ளைகொண்டு அரண்மனைகளிலும், ஆலயங்களிலும் தேங்கிக்கிடந்த பெருஞ்செல்வத்தைப் பெற்று தன்னுடைய ஆட்சியை வன்மையுறச்செய்வதற்கு விரும்பினனேயன்றி விந்தமலைக்குத் தெற்கிலுள்ள பெருநிலப்பகுதிகளைத் தன்னுடைய பேரரசில் சேர்த்துக்கொள்ள விரும்பவில்லை. 1304ஆம் ஆண்டில், பின்னர் முகம்மது துக்ளக் என்று பெயர்பெற்ற ஜூனுகான் என்பவனை வங்காளநாட்டின் வழியாக வாரங்கல் நாட்டின்மீது படையெடுத்துக் கொள்ளையடித்து வரும்படி அலாவுதீன் அனுப்பியதாகத் தெரிகிறது. ஆனல், பிரதாப ருத்திரதேவனுடைய சேனைவீரர்கள் இஸ்லாமியப் படைகளைத் தோற்கடித்து வெறுங்கையோடு திரும்பிச்செல்லுமாறு செய்த தாக நாம் அறிகிருேம். இவ்விதம் டெல்லி சுல்தானுடைய படைகள் தோல்வியுற்றதைக் கேள்வியுற்ற தேவகிரிநாட்டு சங்கரதேவன், தான் செலுத்தவேண்டிய கப்பத்தொகையைச் செலுத்தாது காலந்தாழ்த்தினன். மேலும், கூர்ஜரநாட்டுக் கரன்தேவன் என்ற இராசபுத்திர மன்னனுக்கும், அவனுடைய புதல்வி தவளதேவி என்ற பெண்ணழகிக்கும் தஞ்சம் அளித்து அவர்களைக் காப்பாற்றினுன். இச் செய்கைகளை அலாவுதீன் வெறுத்து தேவகிரி சங்கரதேவனைத் தண்டிப்பதற்கு 1307ஆம் ஆண்டில், தன்னுடைய அடிமையாகிய மாலிக்கபூர் என்பான் தலைமையில் ஒரு பெருஞ்சேனையொன்றை தேவகிரிக்கு அனுப்பினுன்.

இந்து அரசர்களின் வழக்கத்தின்படி சங்கரதேவன் வெகு சுலபமாகத் தோல்வியெய்தினன். மாலிக்கபூர் தேவகிரி கோட்டையைப் பிடித்து, அரண்மனையைத் துப்புரவாகக் கொள்ளைகொண்டு, இராமச்சந்திர தேவனையும் கைதியாக்கி, அவனுடைய உறவினர்களோடு டெல்லிக்கு அழைத்துச்

சென்றனன். தேவகிரியும் டெல்லி சுல்தானுடைய ஆட்சியில் சேர்க்கப்பெற்றது. ஆயினும் அலாவுதீன் கில்ஜி, இராமச்சந்திர தேவனை மிக்க அன்புடன் நடத்தி, ஆறு திங்கட்களுக்குப் பிறகு மீண்டும் தேவகிரிக்கு அனுப்பினுன். இந்த யாதவத் தலைவனும் சுல்தானுக்கு அடங்கி தேவகிரியை ஆண்டுவந்தனன்.

## வாரங்கல் நாட்டின்மீது படையெடுப்பு

முன்னர் ஜூனகானுடைய தலைமையில் அனுப்பப்பெற்ற இஸ்லாமிய சேனை தோல்வியுறும்படி செய்த பிரதாபருத்திர தேவனையும், அவனுடைய வாரங்கல் நகரத்தையும் கைப்பற்றி, முன்னர் அனுபவித்த தோல்வியின் இழிவைத் தீர்ப்பதற்கு 1309ஆம் ஆண்டில் மாலிக்கபூர் வாரங்கல் நாட்டிற்கு அனுப்பப்பெற்ருன். இப் படையெடுப்பின் தொடக்கத்தில் மாலிக்கபூர் தேவகிரிக்குச் சென்று, இராமச்சந்திரனுடைய உதவியையும் பெற்று 1310ஆம் ஆண்டில் வாரங்கல் கோட்டையை முற்றுகையிட்டான். இருவிதமான அரண்களால் சூழப்பெற்று இருந்த வாரங்கல் முற்றுகை ஒருமாத காலத்திற்கு மேல் நீடித்தது. களிமண்ணுல் கட்டப்பெற்றிருந்த முதல் கோட்டைச் சுவர்கள் தகர்க்கப்பட்டு, பின்னர் கற்கோட்டை வாயிலும் வீழ்ந்தது. பிரதாபருத்திரனும் போர்செய்வதில் பயனில்லை என்பதை உணர்ந்து மாலிக்கபூருக்குக் கீழ்ப் படிந்தான். தன்னிடம் இருந்த யானைகள், குதிரைகள் முதலியனவும், மற்றுமுள்ள விலைமதிப்புள்ள செல்வப்பொருள் களையும் கொடுத்துவிடும்படி நேர்ந்தது. பிரதாபருத்திரனுடைய உடலமைப்பைப்போல் தங்கத்திஞல் உருவம் ஒன்றமைத்து, அதன் கழுத்திலிருந்து பாதம்வரையில் தொங்கக்கூடிய பொற்சங்கலியோடுத் தரவேண்டும் என்றும், ஆண்டுதோறும் அலாவுதீனுக்குக் கப்பம் செலுத்தவேண்டுமென்றும் உடன்பாடு ஆயிற்று. மாலிக்கபூரும் மேற்படி திட்டங்களுக்கு ஒப்புக் கொண்டு, தான் பெற்ற கொள்ளைப்பொருள்களோடு டெல்லிக்குத் திரும்பினன். அலாவுதீன், மாலிக்கபூருடைய திறமையைப் போற்றித் தக்க கௌரவமளித்தான்.

## துவாரசமுத்திரத்தின்மீது படையெடுப்பு

தென்னிந்தியாவில் இதுவரையில் கொள்ளையடிக்கப்பெருது இருந்த துவாரசமுத்திரத்தையும், மாபார் என்ற பாண்டிய நாட்டையும் பாழ்படுத்த, 1311ஆம் ஆண்டில் மாலிக்கபூர் மீண்டும் அனுப்பப்பெற்ருன். இரண்டரை திங்கட்களுக்குமேல்




படம் 6

தென்னிந்தியாவின்மீது மாலிக்கபூரின் படையெழுச்சி

பிரயாணம் செய்து இஸ்லாமிய சேனைகள் தேவகிரியை அடைந்தன. இராமச்சந்திர தேவனுக்கும், அப்பொழுது துவாரசமுத்திரத்தை ஆண்டுவந்த மூன்றும் வல்லாளதேவனுக்கும் தீராப்பகைமை குடிகொண்டிருந்தது. ஆகையால், இராமச்சந்திர தேவன் மாலிக்கபூருக்கு எல்லாவித உதவிகளையும் செய்து துவாரசமுத்திரத்தின்மீது படையெடுப்பதற்கு ஏற்ற காலத்தையும் தெரிவித்தான். மாலிக்கபூர் தேவகிரியில் தங்கி ஓய்வுகொண்டிருந்தபோது மூன்றும் வல்லாளனே தனக்கு ஏற்பட இருக்கும் ஆபத்தை எதிர்பாராது, பாண்டியநாட்டில் வீரபாண்டியனுக்கும், சுந்தர பாண்டியனுக்கும் நடந்த உள்நாட்டுப் போரில் தனக்கு வேண்டிய சில இலாபங்களைப் பெறுவதற்குப் படையெடுத்துச் சென்றனன். இத் தருணத்தை மாலிக்கபூர் தகுந்தமுறையில் பயன்படுத்திக்கொண்டான். தகுந்த பாதுகாவலின்றி இருந்த ஹொய்சளநாட்டில் புகுந்து இஸ்லாமிய சேனைகள் கொள்ளையும் கொலையும் நடத்தின. துவாரசமுத்திரமும் முற்றுகையிடப்பெற்றது. மூன்றும் வல்லாளதேவனும் பாண்டியநாட்டிலிருந்து விரைவில் திரும்பிவந்தபோதிலும், தான் வருவதற்கு முன்னரேயே அவனுடைய தலைநகரை மாலிக்கபூர் வசப்படுத்திவிட்டதைக்கண்டு துணுக்குற்றான். வேறுவழியின்றி இஸ்லாமியத் தலைவனுடன் சமாதான உடன்பாடு செய்துகொள்ள வேண்டியவனுனன். 'வல்லாளதேவன் 55 யானைகளையும், மனதினுலும் சிந்திக்கமுடியாத அளவு செல்வங்களையும், அரிக்காணு என்ற நாட்டையும் மாலிக்கபூருக்கு அளித்தான்' என்று வாசாப் கூறுவர். 'இஸ்லாமியர் துவாரமுத்திரத்தில் காலெடுத்து வைத்தவுடனே அந் நகரம் வீழ்ந்தது. 36 யானைகளையும், எண்ணிக்கையற்ற பொருட்குவியல்களையும் வல்லாளன் கொடுக்கவேண்டி வந்ததென,' சயாவுதீன் பரானி கூறியுள்ளார்.

## பாண்டியநாட்டின்மீது படையெடுப்பு

துவாரசமுத்திரத்தில் சிறிதுகாலம் தங்கியிருந்த பிறகு மாலிக்கபூர் பாண்டியநாட்டை நோக்கிப் படையெடுத்தனன். தொடக்கத்தில் வீரபாண்டியன் தங்கியிருந்த வீரதவளப் பட்டிணம் என்ற இடத்தை முற்றுகையிட்டான். இந்த வீரதவளப்பட்டிணம் இப்பொழுது திருச்சிராப்பள்ளிக்கருகில் உள்ள உய்யக்கொண்டான் திருமலையாகும். இதை இஸ்லாமிய வரலாற்று அறிஞர்கள் 'பீர்துல்' என்று அழைப்பர். ஆனால், வீரபாண்டியன் அவ்விடத்தைவிட்டு நீங்கி கண்ணனூர் என்ற இடத்திற்குப் போய்விட்டான். இஸ்லாமியப் படைகளோடு

நேரே எதிர்த்து நின்று போர்க்களத்தில் போரிடாமல் கொரில்லாமுறைப்படி நின்று மறைந்து தாக்கியும், போர்த் தளவாடங்களும், உணவுப் பொருட்களும் இஸ்லாமியர்களுக்குக் கிடைக்காதவாறும் செய்தனன். பிரமாஸ்திபூர் அல்லது மரகதபுரி என்ற இடத்தில் இருந்த பெரியதோர் ஆலயத்தை மாலிக்கபூர் கொள்ளையடித்ததாக வாசாப் என்ற வரலாற்று ஆசிரியர் கூறியுள்ளார். இந்த பிரமாஸ்திபூர் என்ற இடம், காஞ்சிபுரம் அல்லது சிதம்பரம், சீர்காழி என்ற இடங்களில் ஒன்ருக இருக்கக்கூடும் என்று சில ஆராய்ச்சியாளர்கள் கூறியுள்ளனர். ஆனுல், மாலிக்கபூர் துவாரசமுத்திரத்திலிருந்து மேற்குப்பகுதியோரமாக வீரதவளப்பட்டிணத்திற்கு வந்ததாகத் தெரிகிறதேயன்றி, கீழைக் கடற்கரைப் பாதையாக வந்ததாகத் தோன்றவில்லை. பரானி என்ற இஸ்லாமிய ஆசிரியர் கூறும் அடையாளங்களிலிருந்து பிரமாஸ்திபூர் என்னும் இடம், திருவரங்கம் அல்லது திருவானைக்காவாக இருத்தல் வேண்டும்.

'அந்தக் கோவில் இராமனுடைய இலங்கைத் தீவாகும்; அதன் மேற்கூரை முத்துகளாலும், நவரத்தினங்களாலும் அலங்கரிக்கப்பெற்றிருந்தது. அது இந்துக்களுக்கு முக்கியமான புண்ணிய தலமாக விளங்கியது. மாலிக்கபூர் அந்தக் கோவிலின் அடிப்படையையும் அழித்தான். உருவ வணக்கம் செய்த பிராமணர்களுடைய சிரசுகள் கீழே விழுந்து உருண்டன. இலிங்கமகாதேவருடைய உருவம் சிதையுண்டது. நாராயண தேவருடைய உருவம் கீழே விழுந்தது. மற்ற சிறு தெய்வங்களும், ஆகாயத்தில் கிளம்பி இலங்கைத் தீவில் போய் ஒளிந்துகொண்டன. இலிங்கங்களுக்கு கால்கள் இல்லாமையால் அவைகளால் ஓடமுடியவில்லை.'[1] இவ்வித அடையாளங்களினுல் மாலிக்கபூர் கொள்ளையடித்த கோவில்கள் ஸ்ரீரங்கத்தீவிலுள்ள திருவரங்கமும், திருவானைக்காவும் ஆக இருக்கக்கூடும். இவ்விரு கோவில்களில் கொள்ளையடித்த தங்கத்திஞலான உருவச்சிலைகளும், வெள்ளிச்சிலைகளும், நவரத்தினங்களும் யானைகளின்மீது ஏற்றப்பெற்று வீரதவளப்பட்டிணத்திற்கு அனுப்பப்பெற்றன.

வீரதவளப்பட்டிணத்திலிருந்து, பாண்டியர்களுடைய முக்கிய தலைநகரமாகிய மதுரையின்மீது மாலிக்கபூர் படையெடுத்துச் சென்றனன். மதுரையில் ஆட்சிசெலுத்திய சுந்தர பாண்டியன் தன்னுடைய செல்வங்களையெல்லாம் அப்புறப்

[1] Felliot and Dowson, Vol. III, PP. 90—91

படுத்தி, நகரைவிட்டு கிராமப்புறத்திற்குச் சென்று ஒளிந்து கொண்டான். மதுரைநகரை முற்றுகையிட்டு அரண்மனையையும் கோவிலையும் ஆராய்ந்து பார்த்தபொழுது இரண்டு வயது சென்ற யானைகளைத் தவிர வேறொன்றும் அகப்படவில்லை. விக்கிரமபாண்டியன் என்ற சேனைத்தலைவன் பெரிய சேனையொன்றைத் தயார்செய்து மதுரைக்கருகில் மாலிக்கபூரையும், அவனுடைய படைகளையும் தோல்வியுற்று ஓடும்படி செய்தான். மாலிக்கபூரும் மதுரையைவிட்டு நீங்கவேண்டி வந்தது.[1]

மேற்கூறியவாறு மதுரையில் தோல்வியுற்றபோதிலும், திருவரங்கத்திலும் மற்ற இடங்களிலும் கொள்ளையடித்தப் பொருள்களை இழந்துவிடாமல் சாமர்த்தியமாக மாலிக்கபூர் காப்பாற்றிவிட்டான். அவற்றை யானைகளின்மீது ஏற்றிக் கொண்டு துவாரசமுத்திரத்தின் வழியாக டெல்லிக்குப் புறப்பட்டுச் சென்றான். துவாரசமுத்திரத்தில் தங்கி மூன்றாம் வல்லாளதேவனுடைய மகனாகிய வீரவசந்த வல்லாளனையும் தன்னுடன் அழைத்துக்கொண்டு டெல்லிக்குப் புறப்பட்டதாக நாம் அறிகிறோம் 1311ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் டெல்லியை அடைந்தான். மாலிக்கபூர் தென்னாட்டிலிருந்து கொண்டுவந்த பெரும்பொருள் திரளைக்கண்ட அலாவுதீன் மனம்மிக மகிழ்ந்து மாலிக்கபூருக்குப் பலவித சிறப்புகளைச் செய்தான். முன்னர் தேவகிரி இராமச்சந்திர தேவனை வெகு மரியாதையுடன் நடத்தியதைப்போலவே, வீரவசந்த வல்லாளனையும் அன்புடன் உபசரித்து, பத்துலட்சம் பொன்னும் இனுமாக அளித்து துவாரசமுத்திரத்திற்கு அவனைத் திருப்பியனுப்பியதாக நாம் அறிகிறோம்.[2]

## தேவகிரியை டெல்லிப் பேரரசோடு இணைத்தல்

1312ஆம் ஆண்டில் இராமச்சந்திர தேவன் இறந்த பிறகு அவனுடைய மகன் சங்கரதேவன் தேவகிரியில் அரசனானான். இவ்வரசன் டெல்லி சுல்தானுக்குச் செலுத்துவதாக ஒப்புக் கொண்ட திரைப்பொருளைச் செலுத்தாது கலகம் செய்தனன். ஆகையால், தேவகிரிக்கு மாலிக்கபூரை அனுப்பிவைத்தனன். மாலிக்கபூரும், சங்கரதேவனைத் தோற்கடித்து தேவகிரிநாட்டை அலாவுதீனுடைய நேரடி ஆட்சியில் கொண்டுவந்தான். அந் நாட்டிலிருந்த பல தேவாலயங்கள் அழிக்கப்பெற்று, அந்த

[1] Ibid, P. 50

[2] N. Venkataramanaya, 'Early Muslim ExPansion in the South', P. 67




படம் 7.

**பாமினி ராச்சியமும், மாபார் சுல்தானிய அரசும்**

இடங்களில் மசூதிகள் அமைக்கப்பெற்றன. அரசியல் அமைப்பும் ஒழுங்கு செய்யப்பெற்றது. ஆயினும், தேவகிரி நாட்டின் தென்பகுதி டெல்லிசுல்தானுடைய ஆட்சிக்கு அடங்காமலே இருந்தது. பல்லாரி, இராய்ச்சூர், தார்வார் முதலிய பகுதிகள் அடங்கிய பிரதேசத்தில் சிங்கய்ய நாயக்கர் என்பாருடைய தலைமையில் கம்பிலி ராச்சியம் என்ற புதிய அரசு தோன்றியது. இப் புதிய நாடு தெற்கே துங்கபத்திரை நதிவரையில் பரவி இருந்தது. அந் நாட்டில் கம்பிலி, கும்மாட்டா, ஆனைகொந்தி முதலிய அரண் அமைந்த இடங்களும் இருந்தன. மாலிக்கபூர் இந் நாட்டையும் வெல்லுவதற்குத் திட்டமிட்டிருந்தான். ஆனால், திடீரென்று டெல்லி சுல்தான் அலாவுதீன் அவனை டெல்லிநகருக்குத் திரும்பிவரும்படி உத்தரவிட்டான். அலாவுதீன் கில்ஜி இறந்த பிறகும், குத்புதீன் முபராக்ஷா சுல்தானாகப் பதவி ஏற்பதற்கு முன்னும் நடந்த அரசியல் கலகத்தில் மாலிக்கபூர் உயிரிழந்தான். இந்த அரசியல் சூழ்நிலையில் தேவகிரியிலிருந்த இஸ்லாமிய இராணுவம் டெல்லிநகருக்குத் திரும்பிச் சென்றுவிட்டது. இராமதேவனுடைய மருமகனாகிய ஹரபாலதேவன் என்பான், மீண்டும் யாதவ வமிசத்து அரசனாக தேவகிரியில் அரசாளத் தொடங்கினான்.

அலாவுதீன் கில்ஜிக்குப் பிறகு பட்டம் எய்திய குத்புதீன் முபராக்ஷாவின் ஆட்சியில், தேவகிரி அரசனாக இருந்த ஹரபாலதேவன்மீது படையெடுத்து வந்தான். 1318ஆம் ஆண்டில் குஸ்ருகான் என்பானுடைய தலைமையில் தேவகிரிக்கு ஓர் இஸ்லாமியப்படை அனுப்பப்பெற்றது. ஹரபாலதேவன் தோல்வியுற்று சிறைப்படுத்தப்பெற்று சித்திரவதைக்குள்ளாகி உயிரிழந்தான். மாலிக் யாக் லகி என்பான் தேவகிரிநாட்டிற்கு ஆளுநராக நியமிக்கப்பெற்றான். பின்னர், குஸ்ருகான் வாரங்கல் நாட்டுப் பிரதாபருத்திரன்மீதும் படையெடுத்துச் சென்றான். தேவகிரியில் ஆளுநராக நியமிக்கப்பெற்ற மாலிக் யாக் லகி என்னும் இஸ்லாமியத் தலைவனும் தன்னாட்சியுரிமை அடைவதற்கு முயற்சி செய்தான். ஷாம்ஸ் உதீன் என்ற புனைபெயர் கொண்டு சுயாட்சி அடைந்தான். ஆனால், அவனுடைய எதிரிகள் அவனைப் போரில் வென்று கை கால்களைக் கட்டி டெல்லி நகருக்கு அனுப்பி வைத்தனர்.

## குஸ்ருகான் பாண்டிய நாட்டின்மீது படையெடுத்தது

மாலிக்கபூர் பாண்டிய நாட்டிலிருந்து திரும்பிய பிறகும் சுந்தர பாண்டியனும், வீரபாண்டியனும் தொடர்ந்து தங்களுக்குள் போரிட்டுக் கொண்டிருந்தனர். சுந்தர பாண்டியன்

வீரபாண்டியனால் தோற்கடிக்கப்பெற்று நாட்டையும் விட்டுத் துரத்தப் பெற்றான். இப்பொழுது சுந்தர பாண்டியன் இஸ்லாமியத் தலைவனாகிய குஸ்ருகானுடைய உதவியை நாடினான். திருவிதாங்கூர்நாட்டு இரவிவர்மன் குலசேகரன் பாண்டிய நாட்டின்மீது படையெடுத்துவந்து காஞ்சிபுரம் வரையில் தன் படைகளை நடத்திச்சென்றான். வீரபாண்டியன், குலசேகரனுடைய உதவியை நாடியதாகத் தோன்றுகிறது. சுந்தர பாண்டியன் காகதீயநாட்டு மன்னன் இரண்டாம் பிரதாபருத்திரனுடைய உதவியை நாடினான். முப்பிடி நாயக்கனுடைய தலைமையில் சுந்தர பாண்டியனுக்கு உதவியாக ஒரு சேனையும் வந்தது. இவ்விரு தலைவர்களும் சேர்ந்து இரவிவர்மன் குலசேகரனையும், வீரபாண்டியனையும் போரில் வென்றனர். வீரதவளப்பட்டிணத்தில் சுந்தர பாண்டியன் அரியணையில் அமர்த்தப்பெற்றான். இந்தச் சூழ்நிலையில் குஸ்ருகானுடைய இஸ்லாமிய படையெடுப்பும் ஏற்பட்டது. ஆனால், குஸ்ருகானால் சுந்தர பாண்டியனுக்கு எவ்வித இடையூறும் செய்யமுடியவில்லை.

# 16. தென்னிந்தியாவின்மீது முகம்மது துக்ளக்கின் படையெடுப்பு

டெல்லியில் கில்ஜி வமிசத்து சுல்தான்களுக்குப் பிறகு கியாஸ் உதீன் துக்ளக் சுல்தானாகப் பட்டம் ஏற்றார். அவருடைய ஆட்சியில் தக்காணத்திலும்,தென்னிந்தியாவிலும் இருந்த சிற்றரசர்கள் பலர் சுயேச்சை அடைவதற்கு முயற்சிகளை மேற்கொண்டனர். வாரங்கல்நாட்டு இரண்டாம் பிரதாபருத்திரனும், தேவகிரி நாட்டு ஆளுநரும் கலகம் செய்தனர். கியாஸ்உதீன் துக்ளக்கும் இக் கலகங்களை அடக்கி விந்தமலைக்குத் தெற்கிலுள்ள நிலப்பகுதிகளைத் தன்னுடைய ஆட்சியிலடக்கத் திட்டமிட்டார். 1321ஆம் ஆண்டில் உலூக்கான் என்பாருடைய தலைமையில் அனுப்பப் பெற்ற சேனையொன்று தேவகிரி வழியாக வாரங்கல் நாட்டை அடைந்தது. வாரங்கல் கோட்டை முற்றுகையிடப் பெற்றது. ஆயினும், உலூக்கானுடைய படைவீரர்களுக்கு இடையே சச்சரவு தோன்றியமையால் வாரங்கல்கோட்டையைக் கைப்பற்ற முடியாமல் தேவகிரிக்குப் பின்வாங்கவேண்டி வந்தது. தன்னுடைய படைத்தலைவர்களைச் சமாதானம் செய்து இரண்டாவது தடவையாக உலூக்கான் வாரங்கல்மீது படையெடுத்தான். ஐந்து திங்கட்கள்வரையில் பிரதாபருத்திரன் தன்னுடைய கோட்டைக்குள்ளிருந்து எதிர்த்துப் போரிட்டான். ஆயினும், படைவீரர்களுக்குப் போதிய உணவுப்பொருட்கள் கிடைக்காமையால் போர்செய்வதை நிறுத்தி அமைதி ஏற்படுத்துவதற்குத் திட்டமிட்டான். இரண்டாம் பிரதாப ருத்திரன், உலூக்கானுடன் சமாதானம் செய்துகொள்ள வந்த பொழுது வஞ்சகமாகக் கைது செய்யப்பெற்று டெல்லிநகருக்கு அழைத்துச் செல்லும்படி உத்தரவிடப்பட்டான். தலைநகருக்குச் செல்லும் வழியில் பிரதாபருத்திரன் பரிதாபகரமாக உயிர் இழந்தான். வாரங்கல்லைக் கைப்பற்றிய இஸ்லாமியப் படைகள் அந் நகரத்தையும் நாட்டையும் ஈவிரக்கமின்றிக் கொள்ளை யடித்தன. 1323ஆம் ஆண்டில் வாரங்கல்நாடு துக்ளக் பேரரசோடு இணைவுற்றது.

1325ஆம் ஆண்டில் எதிர்பாராத ஆபத்தினுலோ அல்லது திட்டமிட்டுச் செய்த சதியினுலோ கியாஸ்உதீன் துக்ளக் இறந்த பிறகு முகம்மது துக்ளக் டெல்லியில் சுல்தானுனர். இந்திய துணைக்கண்டம் முழுவதிலும் தன்னுடைய பேரரசுப் பரவவேண்டுமென்று விரும்பிய முகம்மது துக்ளக், தேவகிரி, வாரங்கல் ஆகிய இரண்டு நாடுகளையும் சேர்த்துக்கொண்டு பாண்டியநாட்டின்மீதும் படையெடுத்தார். 1327ஆம் ஆண்டில், இரண்டாவது தடவையாக திருவரங்கத்திலுள்ள அரங்கநாதர் ஆலயம் கொள்ளையடிக்கப் பெற்றதாக கோயில்ஒழுகு என்னும் நூலில் இருந்து நாம் அறிகிறோம். புதுக்கோட்டை மாவட்டம் இராங்கியம் என்னும் கிராமத்தில் கிடைத்துள்ள ஒரு கல்வெட்டில், ஆதிசூரத்தன் என்ற இஸ்லாமியத் தலைவன் பாண்டியநாட்டின்மீது படையெடுத்து வந்து பராக்கிரம பாண்டியதேவன் என்பாரைக் கைதுசெய்து டெல்லி நகருக்குக் கொண்டுசென்ருன் எனக் கூறப்பெற்றுள்ளது.[1]

இந்தக் கல்வெட்டில் கூறப்பெற்ற ஆதிசூரத்தன் என்பான் முகம்மது துக்ளக்காக இருக்கலாம் என்று ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர். ஆகையால், பாண்டியநாடும் துக்ளக் முகம்மதுவின் பேரரசில் ஒருபகுதியாக இணைக்கப்பட்டது. கூர்ஜரமும், தேவகிரிநாட்டின் ஒரு பகுதியும் சேர்ந்த மாகாணத்திற்கு மாலிக்சாடா என்பவர் ஆளுநராக நியமனம் செய்யப்பெற்ருர். தேவகிரிநாட்டின் வடக்குத் தெற்குப் பகுதிகளில் மஜீர் அபுரிஜா என்பாரும், பகாஉதீன் கார்ஷப் என்பாரும் முறையே ஆளுநர்களாக நியமனம் பெற்றனர். மாபார் என்றழைக்கப்பெற்ற பாண்டியநாட்டிற்கு ஜலாலுதீன் அக்சன்ஷா என்பார் ஆளுநராக இருந்தார். கம்பிலி ராஜ்யமும், துவாரசமுத்திரமுமே இந்துமன்னர்களுடைய ஆட்சியில் இருந்தன. கம்பிலிநாட்டைக் கம்பிலிராயனும், துவார சமுத்திரத்தை மூன்ரும் வல்லாளதேவனும் ஆண்டுவந்தனர். இவ்விரண்டு பகுதிகள் தவிர, தென்னிந்தியா முழுவதும் துக்ளக் பேரரசின் ஆட்சியில் இருந்ததெனக் கூறலாம். தன்னுடைய பேரரசின் பரப்பிற்கு ஏற்ருற்போல 1327ஆம் ஆண்டில், டெல்லியில் இருந்து தேவகிரிக்குத் தன்னுடைய தலைநகரை துக்ளக் முகம்மது மாற்றினுர்.

தலைநகரை மாற்றியதும், பின்னர் டெல்லிநகருக்கு மக்களை யெல்லாம் திரும்பிச்செல்லுமாறு உத்தரவிட்டதும், வெள்ளி

[1] No. 669 of Pudukkottai State Inscriptions

நாணயங்களுக்குப் பதிலாக செப்புநாணயங்களை வெளியிட்டதும்-பின்னர் அவற்றைத் திரும்பப்பெற்றதும், மக்கள் மீது தாங்கொணாத வரிச்சுமையை விதித்தமையும், துக்ளக்பேரரசில் கலகங்களையும், போராட்டங்களையும் தூண்டுவித்தன. சாகர் என்னுமிடத்தில் ஆளுநராக இருந்த பகாஉதீன் கார்ஷப் என்பான் இக் கலகங்களுக்கு வழிகாட்டியாக இருந்தான். இந்த பகாஉதீன், முகம்மது துக்ளக்கிற்கு நெருங்கிய உறவினனாக இருந்தபோதிலும், பேரரசின் நன்மையைக் கருதாது தன் சுயநலத்தையே முக்கியமாகக் கொண்டு முகம்மது துக்ளக்கிற்கு எதிராகக் கலகம் செய்தனன். கூர்ஜரம், தேவகிரி நாடுகளின் ஆளுநர்களாக இருந்த மாலிக்சாடா, மஜீர் அபுரிஜா என்ற இருவரையும், பகாஉதீனுடைய கலகத்தை அடக்குமாறு முகம்மது துக்ளக் ஆணையிட்டார். கோதாவரி நதிக்கரையில் நடந்த போரில் பகாஉதீன் தோல்வியுற்று, போர்க்களத்தை விட்டு நீங்கி கம்பிலி நாட்டிற்குத் தப்பித்துக் கொண்டு போய்க் கம்பிலிராயனிடத்தில் தஞ்சம் புகுந்தனன்.

கம்பிலிநாட்டை ஆண்ட கம்பிலிராயன் என்னும் அரசன் பதினான்காம் நூற்றாண்டின் முற்பகுதியில், தேவகிரி இராமச் சந்திரதேவனுக்கு அடங்கிய சிற்றரசனாக இருந்தான். யாதவ மன்னனுக்கும், மூன்றாம் வல்லாளதேவனுக்கும் நடைபெற்ற அரசியல் போராட்டத்தில் இராமச்சந்திர தேவனுக்கு உதவி செய்ததன் பயனாக, அனந்தபுரி, சித்திரதுர்க்கம், ஷிமோகா இராய்ச்சூர், பல்லாரி முதலிய பகுதிகள் அடங்கிய கம்பிலி நாட்டிற்கு அரசனானான். அவனுடைய நாடு தெற்கே கிருஷ்ணைப் பேராறுவரையில் பரவியிருந்தது. இஸ்லாமிய ஆட்சித் தென்னாட்டில் பரவுவதைக் கண்டு கம்பிலிராயன் மிகுந்து துன்பமுற்று, எவ்வாற்றானும் அதைத் தடுப்பதற்குத் திட்டமிட்டிருந்தான்.

இந்தக் கம்பிலிராயனுடைய உதவியை நாடிய பகாஉதீன், அவனிடம் தஞ்சம்புகுந்து தன்னைக் காப்பாற்றும்படி வேண்டிக் கொண்டனன். அவனுக்கு உதவிசெய்தால் தனக்கு நேரும் பேராபத்தைக் கம்பிலிராயன் உணர்ந்தபோதிலும், தன்னிடம் அடைக்கலம் புகுந்தவனைக் காப்பாற்றுவது அவனுடைய கடமையாயிற்று. கம்பிலிநாட்டிலுள்ள கும்மாட்டா, ஆனை கொந்தி ஆகிய இரண்டு இடங்களையும் மாலிக்சாடாவும், பின்னர் முகம்மது துக்ளக்கும் நேரில்வந்து முற்றுகையிட்டனர். மூன்றாவது முறையில் மேற்கூறப்பெற்ற இரண்டிடங்களும்

கம்பிலிராயனிடமிருந்து பிடிபட்டன. தான் தோல்வியடைவது நிச்சயம் என்றுணர்ந்த கம்பிலிராயன், பகாஉதீனை அவ்விடமிருந்து தப்பித்துக்கொண்டு சென்று துவாரசமுத்திரத்து மூன்றும் வல்லாளதேவனிடம் தஞ்சமடையும்படி அறிவுறுத்தினன். பின்னர் ஜோகர் என்ற பெருந்தீ ஒன்றை வளர்த்து, அதில் அரண்மனையிலிருந்த மகளிர், குழந்தைகள் மடிந்து சாம்பலாகும்படி செய்தான். அவனும், அவனுடைய பதினொரு குமாரர்களும் முகம்மது துக்ளக்கிற்கு எதிராக வீராவேசத்துடன் போர்புரிந்து வீரசொர்க்கம் அடைந்தனர். கம்பிலிநாடும் துக்ளக் பேரரசோடு இணைக்கப்பட்டது.

இவற்றிற்குப் பிறகு, பகாஉதீனைத் தொடர்ந்துசென்று கைப்பற்றுமாறு மாலிக்சாடாவிற்கு, துக்ளக் முகம்மது ஆணையிட்டனன். மூன்றும் வல்லாளதேவன் பகாஉதீனைக் காப்பாற்றுவதற்காகத் தன்னுடைய நாட்டை இழப்பதற்கு விரும்பவில்லை. பகாஉதீன், மாலிக்சாடாவிடம் ஒப்படைக்கப்பெற்றுக் கைதியாயினன். பகாஉதீனுக்கு மரணதண்டனை விதிக்கப்பெற்றுக் கொலையுண்டனன். அவனுடைய உடலைத் துண்டுதுண்டுகளாக வெட்டி அரிசியோடு சேர்த்து சமைத்து ஒருவித புலவுச்சோறு செய்யப்பெற்றது. அச் சோற்றை யானைகளுக்கு வைத்தபோது அவைகள் அதை முகர்ந்துகூட பார்க்கவில்லை. பின்னர், அப் புலவுச்சோறு பொட்டலங்களாகக் கட்டப்பெற்று பகாஉதீனுடைய உறவினர்களுக்கு அனுப்பப்பெற்றதாக இஸ்லாமிய வரலாற்றுசிரியர்கள் கூறியுள்ளனர். மேற்கூறப் பெற்றவாறு தேவகிரி, தெலிங்கானம், கம்பிலி, பாண்டிய நாடு முதலிய இடங்கள் துக்ளக்பேரரசின் பகுதிகளாயின

## சங்கம வமிசத் தலைவர்கள்

தென்னிந்திய வரலாற்றின் இந் நிலையில், 1336ஆம் ஆண்டில் துங்கபத்திரை நதிக்கரையில் விஜயநகரம் என்ற நகரத்தை அமைத்த ஹரிஹரன், புக்கன் என்ற இரு தலைவர்களின் வரலாற்றைப்பற்றி நாம் அறிந்துகொள்வது அமைவுடைத்தாகும். சங்கமன் என்பவருக்கு ஹரிஹரன், புக்கன், கம்பணன், மாரப்பன், முத்தப்பன் என்ற ஐந்து புதல்வர்கள் இருந்தனர். இவர்களுள் மூத்தவர்களாகிய ஹரிஹரனும், புக்கனும் வாரங்கல் நாட்டில் இரண்டாம் பிரதாபருத்திரனிடம் அலுவல் பார்த்ததாகவும், 1323ஆம் ஆண்டில் வாரங்கல்நாட்டை முகம்மது துக்ளக் கைப்பற்றிய பிறகு கம்பிலிநாட்டிற்குச் சென்று கம்பிலிராயனுடைய அரண்மனையில் அலுவலில் அமர்ந்ததாகவும்

கூறப்பெறுகிறது. 1327ஆம் ஆண்டில் கம்பிலிநாட்டையும் முகம்மது துக்ளக் கைப்பற்றி ஹரிஹரன், புக்கன் என்ற இருவரையும் கைதிகளாக்கி டெல்லிக்கு அழைத்துச் சென்றதாகவும் கேள்விப்படுகிறோம்.[1] டெல்லியில், முகம்மது துக்ளக் இவ்விருவரையும் இஸ்லாம் சமயத்தில் சேரும்படி செய்ததாகவும், அவ்விதம் இருவரும் முஸ்லிம்களாகச் சமயமாற்றம் செய்து கொண்டமையால் சுல்தானிடம் பெருஞ்செல்வாக்குப் பெற்றனர் என்றும், திரு நீலகண்டசாஸ்திரியாரும், அறிஞர் N. வெங்கட்டரமணய்யாவும் கூறுவர். ஆனால், இச் செய்திக்குத் தகுந்த ஆதாரங்கள் கிடையாது. ஹரிஹரனும், புக்கனும் ஆந்திர வகுப்பைச் சேர்ந்தவர்கள் என்பதைச் சாதிப்பதற்கு இவ்வித கட்டுக்கதையொன்றைத் தொகுத்திருப்பதாகக் கொள்ள வேண்டும். அஃதெங்ஙனமாயினும் ஹரிஹரன், புக்கன் என்ற இரு சகோதரர்களும் 1336ஆம் ஆண்டில் சிருங்கேரி சங்கராசாரியாருடைய அருளையும், ஆசியையும் பெற்று, 1336ஆம் ஆண்டில் விஜயநகரத்தில் அரசுரிமை எய்தினர் எனக் கொள்வது வரலாற்று உண்மையாகும்.

கம்பிலிநாட்டைப் பிடித்து பகாஉதீன் கார்ஷப்பைத் தண்டித்த பிறகு 1329ஆம் ஆண்டில் முகம்மது துக்ளக் டெல்லிக்குத் திரும்பிச் சென்றுவிட்டார். 1329 முதல் 1336ஆம் ஆண்டுவரை தக்காணத்திலும், தென்னிந்தியாவிலும் இஸ்லாமிய ஆட்சியை அழித்து இந்துக்களின் சுதந்திரத்தை நிலைநாட்டுவதற்கு ஒரு தேசீய இயக்கம் தோன்றியதெனக் கூறலாம். கி. பி. 1310ஆம் ஆண்டிலிருந்து தக்காணத்திலும், தென்னிந்தியாவிலும் ஏற்பட்ட இஸ்லாமியபடையெழுச்சிகளால் சைவ, வைணவச் சமயங்கள் சீர்குலைந்தோடன்றி, அச் சமயங்களின் சின்னங்களாக விளங்கிய தேவாலயங்களும், மடாலயங்களும் இஸ்லாமியப் படைகளால் கொள்ளையடிக்கப் பெற்று இடிபாடுகளுக்கும் உள்ளாயின. வேதங்களையும், ஆகமங்களையும் தேவாரப்பதிகங்களையும் ஓதி தீவளர்த்து யாகங்களைச் செய்யாதவாறு அந்தணர்கள் துன்புறுத்தப்பெற்றனர். வடமொழியிலும், தென்மொழிகளிலும் பயிற்சியுடையவர்கள் அம் மொழிகளைப் போற்றி வளர்க்காதவாறு தடைசெய்யப் பெற்றனர். இஸ்லாம் சமயத்தினராக மதமாற்றம் செய்யாதவர்கள் வாளுக்கிரையாயினர். கோவில்களிலிருந்த விக்கிரகங்களும், மற்ற விலையுயர்ந்த அணிகலன்களும் கொள்ளை போயின. விக்கிரகங்கள் எல்லாம் வடநாட்டிற்கு எடுத்துச் செல்லப்பட்டு

[1] K. A. N. Sastri, 'A. History of South India,' P. 227,

முஸ்லிம்கள் காலடிகளில் மிதிக்கப்பெற்றுச் சிறுமையடைந்தன. கற்பழிப்பும், பசுவதையும், அந்தணர்வதையும் எங்கும் பரவி நின்றன. மேற்கூறப்பெற்ற தீச் செயல்கள் அனைத்தும் இந்து சமயத்தையும், இந்து தர்மத்தையும் அழித்து எங்கும் இஸ்லாம் பரவிவிடும் என்ற பயத்தைத் தென்னிந்தியத் தலைவர் களிடையே உண்டாக்கியது. ஆந்திரர்களும், தமிழர்களும், கன்னடியர்களும் இப் புதிய உணர்ச்சியிலும், இயக்கத்திலும் தங்களுடைய சக்திக்கு ஏற்றவாறு பங்கு கொண்டனர். இந்த சமய-சமூக இயக்கங்களின் முக்கிய பயனாகவும், சிருங்கேரி சங்கராசாரியாருடைய உதவியாலும், இந்த இயக்கத்தின் சிகரமாக விஜயநகர ராச்சியம் தோன்றியதெனக் கூறலாம்.

வடக்கே மகாநதி தீரத்திலிருந்து தெற்கே நெல்லூர் வரையிலுமுள்ள ஆந்திரநாட்டில் வசித்த நாயக்கத் தலைவர்கள் இத் தேசீய இயக்கத்தில் பெரும்பங்கு கொண்டனர். இவர்களுள் முன்னர் பிரதாபருத்திரதேவனால் நியமிக்கப்பெற்ற நாயக்கன் மார்கள் முன்னிலையில் நின்றனர். அவர்களுள் ப்ரோலைய்ய நாயக்கரும், அவருடைய உறவினர் காப்பய்ய நாயக்கரும் முக்கியமானவர்கள். ஆந்திர தேசத்தின் மேற்குப்பகுதியில் சோமதேவன் என்பார், கம்பிலியில் ஆட்சிபுரிந்த இஸ்லாமிய ஆளுநருக்கு எதிராகக் கலகம் விளைவித்தார். கர்நூலைத் தன்னுடைய முக்கிய இருப்பிடமாகக் கொண்டு ஆனைகொந்தி, இராய்ச்சூர், முதுகல் என்ற இடங்களைத் தன்வசப்படுத்திக் கொண்டார். இந்த சோமதேவன் சாளுக்கிய வமிசத்தில் தோன்றிய தலைவனாவார். இவரே, பின்னர் மேன்மையடைந்த ஆரவீடு வமிச அரசர்களில் முதல்வராகக் கருதப்பெறுகின்றார்.

ஹொய்சளநாட்டு அரசனாகிய மூன்றாம் வல்லாளதேவனும், முகம்மது துக்ளக்கின் ஆட்சியை எதிர்த்துக் கம்பிலிநாட்டின் மீது படையெடுத்தனன். கம்பிலிநாட்டில் ஆளுநராகப் பணி ஆற்றிய மாலிக் முகம்மது என்பான், அந் நாட்டில் இந்துக்கள் எல்லோரும் ஒன்றுகூடி இஸ்லாமிய ஆட்சியைக் கவிழ்ப்பதற்குச் சதி செய்துவிட்டனர் என்றும், தனக்கு உதவியாக ஒருவரும் இல்லையென்றும், முகம்மது துக்ளக்கிற்குச் செய்தியனுப்பியதாக நாம் அறிகிறோம்.[1]

ப்ரோலைய்ய நாயக்கருக்குப் பிறகு,காப்பய்ய நாயக்கர் இந்த தேசீய இயக்கத்திற்குத் தலைமை வகித்தார். துக்ளக் முகம்மதால் ஏற்படுத்தப்பெற்ற பேரரசுத் தென்னகத்தில் நிலைதடுமாறி

[1] Robert Sewell, 'Chronide of Fernao Nuniz', P. 284

ஆட்டங்கண்ட போதிலும், புதிதாக இஸ்லாமிய சமயத்தை மேற்கொண்டவர்களும், இஸ்லாமிய காவற்படைகளும் எங்கு பார்த்தாலும் தங்கியிருந்தன. இந்தக் காவற்படைகளால் தென்னிந்திய தேசீய இயக்கத்திற்கு ஆபத்து ஏற்பட்டாலும் ஏற்படலாம் ஆகையால், இவற்றை அழித்து ஒடுக்குவது அந்த இயக்கத்தின் முக்கிய கடமையாகக் கருதப்பெற்றது. இந்த எண்ணத்தை ஈடேற்றுவதற்காகக் காப்பய்ய நாயக்கர், துவாரசமுத்திரத்து மூன்றும் வல்லாள தேவனுடன் ஓர் உடன்படிக்கை செய்துகொண்டார். வல்லாளதேவனுடைய உதவிகொண்டு வாரங்கல்நாட்டில் ஆளுநராகப் பணியாற்றிய மாலிக் மாக்பல் என்பானைத் தோற்கடித்து வாரங்கல்லைவிட்டுத் துரத்தினர். தெலிங்கானதேசம் முழுவதிலிருந்தும் இஸ்லாமிய ஆட்சி அடியோடு அழிக்கப்பெற்றது.

பின்னர், தமிழ்நாட்டில் தொண்டைமண்டலத்தில் குறுநில மன்னனாக விளங்கிய ஏகாம்பரநாத சம்புவராயனுக்கு, மூன்றும் வல்லாளதேவன் உதவி செய்தாகத் தெரிகிறது. அவனுடைய உதவிகொண்டு தொண்டைமண்டலத்தில் தங்கியிருந்த இஸ்லாமிய படைகளைத் துரத்திவிட்டு நாட்டைத் தன்வசப் படுத்திய ஏகாம்பரநாத சம்புவராயன், 'வென்று மண்கொண்டான்' என்ற பட்டத்தை மேற்கொண்டு படைவீடு என்னும் இடத்தில் தன் தலைநகரை அமைத்து, படைவீட்டு ராச்சியம் என்ற சிற்றரசைத் தோற்றுவித்தான். திருப்பதிமலையைச் சூழ்ந்த இடத்தில் யாதவராயர்கள் என்ற சிற்றரசு ஒன்று தோன்றியது. ஆந்திரநாட்டில் கொண்டவீடு, ராஜகொண்டா, பித்தாபுரம் முதலிய இடங்களிலும் சிறுசிறு இந்து ராச்சியங்கள் தோன்றின.

## மதுரையில் சுல்தான்களின் ஆட்சி

1327ஆம் ஆண்டில் பாண்டிய நாட்டின்மீது துக்ளக் முகம்மது படையெடுத்து வெற்றிபெற்றதின் பயனாக, மதுரையும் அதைச் சுற்றியுள்ள இடங்களும் துக்ளக் பேரரசின் தென் பகுதியில் ஒரு மாகாணமாயிற்று. இந்த மாகாணத்தை ஆட்சி செய்வதற்கு முகம்மதுநபிநாயகத்தின் குடிவழியில் தோன்றியவன் எனக் கருதப்பெற்ற ஜலாலுதீன் அக்சன்ஷா என்பானை, துக்ளக் முகம்மது மதுரைக்குச் சுல்தானாக நியமித்திருந்தார். கி.பி. 1330, 1333, 1334 முதலிய ஆண்டுகளின் எண்ணிக்கைப் பொறிக்கப்பெற்ற முகம்மது துக்ளக்கின் நாணயங்கள் அகப்பட்டுள்ளன. ஆகையால், 1334ஆம் ஆண்டுவரையில் ஜலாலுதீன் அக்சன்ஷா, துக்ளக் முகம்மதுவின் இறைமைக்கு

அடங்கி மதுரையில் ஆட்சிபுரிந்திருந்திருக்க வேண்டும். சாகர் என்னுமிடத்தின் ஆளுநராகிய பகாஉதீன் கார்ஷப் என்பான் டெல்லி சுல்தானுக்கு அடங்காமல் கலகம் செய்ததையும், தொண்டைமண்டலத்தில் ஏகாம்பரநாத சம்புவராயன் சுதந்திரம் அடைந்ததையும், அக்சன்ஷா கேள்வியுற்றிருக்கக் கூடும். அவர்களைப் பின்பற்றி ஜலாலுதீனும், துக்ளக்கின் பேரரசிற்கு எதிராகக் கலகம் செய்து, பேரரசைச் சார்ந்த அலுவலாளர்களை எல்லாம் கொலைசெய்வித்துத் தான் சுதந்திரமுள்ள சுல்தானாக ஆட்சியை மேற்கொண்டான். தன்னுடைய வெற்றிக்கும் சுதந்திரத்திற்கும் அறிகுறியாகப் பொன்னாலும், வெள்ளியாலும் செய்யப்பெற்ற நாணயங்களை வெளியிட்டு, அவற்றின்மீது ஜலாலுதீன் அக்சன்ஷா என்ற பெயரும், 1335ஆம் ஆண்டும் பொறிக்கும்படி ஆணையிட்டான்.

சையாஉதீன் பரானியும், முகம்மது காசிம் பெரிஷ்டாவும் ஆகிய இருபெரும் இஸ்லாமிய வரலாற்று அறிஞர்களும் இந்த மதுரை சுல்தானை, 'சையது ஹாசன்' என்றும், 'சையது ஹுசான்' என்றும் தங்கள் நூல்களில் அழைத்துள்ளனர்.[1] துக்ளக் முகம்மதுவின் ஆட்சியின் இறுதிக்காலத்தில், பேரரசு முழுவதிலும் பல இடங்களில் அரசியல் கலகங்கள் தோன்றியமையால், வெகுதூரத்திலிருந்த தென்மதுரையில் ஜலாலுதீன் கலகம் செய்து சுதந்திரம் அடைந்ததை அவரால் அடக்க முடியாமல் விட்டுவிட்டார். ஆயினும், ஜலாலுதீனுடைய மகன் இப்ராஹிம் டெல்லியில் கருவூல அதிகாரியாகப் பணியாற்றி வந்தான். தகப்பன் செய்த கலகத்திற்காக, அவனைப் பிடித்து அவனுடலை இருகூறுகப் பிளந்து கொன்று துக்ளக் முகம்மது வஞ்சம் தீர்த்துக் கொண்டார். மதுரையில் சுல்தான் பதவியை அடைந்த ஜலாலுதீன் அக்சன்ஷாவின் மகளை, மொராக்கோ நாட்டில் இருந்து இந்தியாவிற்கு வந்த வரலாற்றுசிரியராகிய இபன்பதூதா என்பார் மணந்துகொண்டார்.

இபன்பதூதாவின் வரலாற்றில் கூறப்பெற்றபடி, ஜலாலுதீன் அக்சன்ஷாவை அவனுடைய பிரபுக்களில் ஒருவனாகிய அலாவுதீன் உதாஜி என்பான் கொலை செய்வித்துவிட்டு, மதுரை சுல்தான் பதவியைக் கைப்பற்றிக் கொண்டான். இரண்டாம் சுல்தானாகிய இந்த அலாவுதீன் ஒரே ஆண்டுதான் ஆளமுடிந்தது. ஏனெனில், அந்த ஆண்டிற்குள் இனந் தெரியாத ஒருவனால் அவன் கொல்லப்பட்டு இறந்தான்.

1 Briggs Ferishta, Vol. I, P. 423 and Elliot and Dowson, Vol. III, P. 243




படம் 8.

கி. பி. 1350ஆம் ஆண்டில் தென்னிந்தியா

திருவண்ணுமலேக்கு அருகில் மூன்றும் வல்லாளதேவனுக்கும், அலாவுதீனுக்கும் போர் நடந்திருக்க வேண்டுமென்றும், அதில் வல்லாளதேவன் எய்த கூரிய அம்பொன்று பாய்ந்து அலாவுதீன் இறந்திருக்க வேண்டுமென்றும் திரு நீலகண்டசாஸ்திரியார் கூறுவர்.[1] அலாவுதீனுக்குப் பிறகு அவனுடைய மருமகன் குத்புதீன் என்பாண மதுரையிலிருந்த இஸ்லாமிய பிரபுக்கள் சுல்தாளுக ஏற்றுக் கொண்டனர். ஆயினும், குத்புதீன் தன்னுடைய பிரபுக்களும், அலுவலாளர்களும் கண்டு நகை யாடத்தக்க வகையில் நடந்து கொண்டனன். அவன் சுல்தான் பதவியெய்திய 40 தினங்களுக்குள் கொலேயுண்டான்.

பின்னர் மதுரையில் இருந்த இஸ்லாமிய சேஊயில் சாதாரண வீரளுக இருந்த கியாத்உதீன் தமகன்ஷா என்பான் மதுரையில் சுல்தாளுகப் பதவி ஏற்ருன். இந்த கியாத்உதீன் ஈவு இரக்கமற்ற கொடுங்கோல் மன்னன் என இபன்பதூதா கூறி யுள்ளார். திருச்சிராப்பள்ளிக்கு அருகில் உள்ள கண்ணனூர் குப்பத்தில் மூன்றும் வல்லாளனுக்கும், மதுரை சுல்தானுக்கும் பெரியதொரு போர் தொடங்கியது. கண்ணனூர் கோட்டையில் இருந்த இஸ்லாமியப் படைகளை மூன்றும் வல்லாளதேவன் மூற்றுகையிட்டு வெற்றியும் பெற்றுவிட்டான். ஆயினும், இஸ்லாமிய தலேவனுடைய சூழ்ச்சியினுலும், துரோகச் செயலா லும் கைதியாக்கப் பெற்று சித்திரவதைக்குள்ளாகி உயிரிழந் தான். 'அவனுடைய உடல் வைக்கோல் திணிக்கப்பெற்று மதுரை நகரத்தின் நுழைவாயிலில் தொங்கவிடப் பெற்றிருந்தது' என இபன்பதூதா கூறியுள்ளார். தென்னிந்திய மக்களின் சுதந்திரத்திற்காகத் தன்னுடைய வாழ்நாளேயும் உயிரையும் தியாகம் செய்த பெருமை மூன்றும் வல்லாளனேயே சாரும். அவனுக்கு இஸ்லாமியர் செய்த வஞ்சகத்தையும், தீமையையும் சேர்த்து மதுரை சுல்தான்கள் குமாரகம்பணனிடம் பழிக்குப் பழியாகப் பெற்றனர். கியாத்உதீன், மூன்றும் வல்லாளதேவனே வஞ்சகமாகக் கொன்று வெற்றியடைந்த போதிலும், அவ னுடைய குடும்பத்தாரும் அவனும் பதினைந்து நாட்களுக்குள் கொடிய விஷபேதி கண்டு இறந்தொழிந்தனர்.

கியாத்உதீனுக்குப் பிறகு நாசர்உதீன் என்பவன் மதுரை யில் சுல்தாளுகப் பதவியேற்ருன். இந்த நாசர்உதீன் டெல்லி யில் சுல்தானுடைய அரண்மனையில் அலுவலாளனுக பணி யாற்றிய ஒருவனுகும். இஸ்லாமிய பிரபுக்கள் இவனே சுல்தாளுக ஒப்புக் கொண்டபொழுது அரண்மனையில் இருந்த பொன்னேயும்

[1]K. A. N. Sastri. Op. Cit., P. 229.

பொருளையும் தன்னை ஆதரித்தவர்களுக்கு வாரி வழங்கியதாக நாம் கேள்விப்படுகிறோம். இபன்பதூதா என்பவருக்கு ஓர் உயர்ந்த பொன்னுடையும், 300 பொன் நாணயங்களும் கிடைத்தன. இந்த நாசர்உதீனும் கொடுங்கோலாட்சியே புரிந்தான். கியாத்உதீன் என்ற மதுரை சுல்தானுடைய மருமகன் ஒருவன் இவனுடைய நெருங்கிய உறவினன். அவனை அநியாயமாகக் கொன்றுவிட்ட பிறகு அவனுடைய மனைவியைத் தன் வசப்படுத்திக் கொண்டான். இதனால் அக்காலத்திய இஸ்லாமிய சுல்தான்களின் பண்பாட்டை நாம் நன்கு உணர்ந்து கொள்ளலாம்.

கி. பி. 1344 முதல் 1356ஆம் ஆண்டுவரையில் மதுரை சுல்தானுடைய நாணயங்கள் இதுகாறும் அகப்படவில்லை. நாசர்உதீனுக்குப் பிறகு குர்பத் ஹாசன் கங்கு என்ற ஓர் இஸ்லாமியத் தலைவன் சுல்தான் பதவியை வகித்தாகத் தோன்றுகிறது. இவனும் ஒரு விதூஷகன்போல் நடந்து கொண்டு தன்னைப் பார்த்து பிறர் நகையாடும்படி ஆட்சி செலுத்தினன். இந்த குர்பத் ஹாசன் என்பானை விஜயநகரத்து அரசனை முதலாம் புக்கன் 1352ஆம் ஆண்டில் மதுரையின்மீது படையெடுத்துத் தோற்கடித்துக் கொன்றான்.[1] முதலாம் புக்கன் அடைந்த இவ் வெற்றியினால் மதுரையில் சுல்தான்களுடைய ஆட்சி மறைந்து விடவில்லை. மீண்டும் இருபதாண்டுகளுக்கு, 1371ஆம் ஆண்டுவரையில் நீடித்தது. குர்பத்ஹாசனுக்குப் பிறகு அடில்ஷா என்பானும், பக்ருதீன் முபாரக்ஷா என்பானும் சுல்தான் பதவியை வகித்தனர். இந்த பக்ருதீன் முபராக்ஷா என்பானை, முதலாம் புக்கனுடைய மகனாகிய குமாரகம்பணன் மதுரையின்மீது படையெடுத்துத் தோற்கடித்துக் கொன்று இஸ்லாமிய ஆட்சியை அழித்தான். மதுரையும் விஜயநகரப் பேரரசோடு இணைவுற்றது.

[1] Dr A. Krishnaswamy, 'The Tamil Country under Vijayanager,' p. 30

# 17. பாமினி இராச்சியத்தின் வரலாறு

கி. பி. 1336ஆம் ஆண்டில் துங்கபத்திரை நதியின் தென்கரையில் அமைக்கப்பெற்று தென்னிந்தியா முழுவதிலும் பரவிய விஜயநகரப் பேரரசின் வரலாறும், 1346ஆம் ஆண்டில் குல்பர்காவைத் தலைநகராகக் கொண்டு தக்காணத்தில் அமைவுற்ற பாமினி இராச்சியத்தின் வரலாறும் ஒன்றிற்கொன்று மிகுந்த தொடர்புடையவையாகும். பல்லவர் ஆட்சிக்காலத்தில் தக்காணத்தில் தோன்றிய வாதாபிச் சாளுக்கியருடனும், பின்னர் இராட்டிரகூட மன்னர்களுடனும், நடந்த தக்காண-தென்னிந்திய போராட்டம், சோழர்களுக்கும் – இராட்டிரகூடர் களுக்கும், பின்னர் கலியாணபுரச் சாளுக்கியர்களுக்கும் இடையே தொடர்ந்தது. பாண்டிய மன்னர்களுக்கும், காகதீய மன்னர் களுக்கும் போராட்டமாக நடந்தது. பின்னர் தென்னிந்தியா விலும் தக்காணத்திலும் தோன்றிய ஹொய்சளர்களும், பாண்டியர்களும், யாதவ மன்னர்களும், காகதீய அரசர்களும், வடநாட்டிலிருந்து வந்த இஸ்லாமிய படையெடுப்புகளினுல் மிக்க அல்லலுற்றனர். துக்ளக் பேரரசு நலிவுற்ற காலத்தில் தக்காணத்தில் பாமினி இராச்சியமும், தென்னிந்தியாவில் விஜய நகரப்பேரரசும் தோன்றின. இவ்விரண்டு இராச்சியங்களின் தொடர்பே 14, 15, 16ஆம் நூற்ருண்டுகளின் வரலாருகும். பாமினி இராச்சியம் இஸ்லாமியப் பண்பாட்டையும், விஜயநகரப்பேரரசு இந்துக்களுடைய பண்பாட்டையும், காப்பாற்றுவதற்காக ஏற்பட்டவை எனக் கருதலாம். இவ்விரண்டில் பாமினி இராச்சியத்தின் வரலாற்றை முதலில் கண்டு, விஜயநகரின் வரலாற்றைப் பின்னர் இந் நூலில் காண்போம்.

## பாமினி இராச்சிய வரலாற்றிற்குரிய ஆதாரங்கள்

பாமினிஇராச்சியத்தின் வரலாற்றை எழுதுவதற்கும் அறிந்து கொள்வதற்கும் முகம்மது காசிம் பெரிஷ்டா என்பார் எழுதிய வரலாற்று நூலும், அலிபின் அஜிஸ்உல்லா டபடாபா என்பார் இயற்றிய பர்ஹானி-மாசிர் என்ற நூலும் மிக்க துணை செய்கின்றன. முகம்மது காசிம் பெரிஷ்டா என்பார், பராசீக நாட்டிலிருந்து தக்காணத்திற்குத் தன் தகப்பனுருடன், மூர்த

தாசா நிசாம்ஷா என்ற அகமது சுல்தானுடைய ஆட்சிக்காலத்தில் வந்தார். 1589ஆம் ஆண்டில் விஜயபுரி சுல்தானுடைய அரச சேவையில் அமர்ந்தார். தொடக்கத்தில் இராணுவத்தில் சேர்ந்து போர்வீரனாகச் சேவைபுரிந்து—போரில் காயமுற்று, உடல்நிலை தேறிய பிறகு இராணுவத்தை விட்டு விலகி, தூசிடைடிஸ் என்ற கிரேக்க வரலாற்றாசிரியரைப் போல, பின்னர் தன்னுடைய இஸ்லாமிய வரலாற்றை எழுதினார். இவ் வரலாற்றை, விஜயபுரி சுல்தான் இப்ராஹிம் அடில்ஷாவின் ஆதரவுடன் 1611ஆம் ஆண்டில் எழுதி முடித்தார். 1606ஆம் ஆண்டில் மொகலாயப் பேரரசனாகிய ஜஹாங்கீரின் சபைக்குத் தூதராக அனுப்பப்பெற்று, 1623ஆம் ஆண்டுவரையில் உயிருடன் இருந்தார்.

தான் எழுதிய வரலாற்று நூலுக்கு ஆதரவாகத் தன்னுடைய வாழ்நாளுக்கு முன்பிருந்த முப்பத்தைந்து வரலாற்று நூல்களை உபயோகித்துத் தன்னுடைய நூலை எழுதியதாகக் கூறுவர். இவர் இஸ்லாமிய சமயத்திலும், இஸ்லாமிய அரசர்களுடைய நல்வாழ்விலும் மிகுந்த பற்றுள்ளவராகையால் இந்தியாவில் இஸ்லாமியருடைய பெருமையைக் கூறுவதில் மிக்க ஈடுபாட்டைக் காட்டினார். இவருடைய நிலநூல் அறிவும், பாமினி-விஜயநகர இராச்சியங்களில் இருந்த இடங்களைப்பற்றிய செய்திகளும் போற்றத்தக்கன அல்ல. உண்மையைக் கூறுவதே தன்னுடைய நோக்கம் என்று இவர் கூறியபோதிலும் பல வரலாற்றுச் செய்திகளின் உண்மையை மறைத்து, பாமினி சுல்தான்களுடைய குறைகளைக் கூறாது நிறைகளைமட்டும் புகழ்ந்து தன்னுடைய இலக்கியத் திறமையைக் காட்டியுள்ளார். அவருடைய வரலாற்றில் இஸ்லாமிய மன்னர்களைப்பற்றி வானளாவப் புகழ்ந்துள்ளார். விஜயநகரப் பேரரசர்களைப் பாமினி சுல்தான்களுக்கு அடங்கி கப்பம் செலுத்திய இந்து அரசர்களாகப் பாவித்து, அவர்களுடைய பெயர்களையும், பெருமைகளையும் உண்மைக்கு மாறாக எழுதியுள்ளார். ஒரு வரலாற்றாசிரியருக்கு இன்றியமையாத குணநலன்களாகிய நடுநிலைமையுடன் உண்மை கூறுவதைப் புறக்கணித்து, தன்னுடைய இஸ்லாமிய மனப்பான்மையை உறுதி செய்துள்ளார். ஆயினும், மற்ற இஸ்லாமிய வரலாற்று ஆசிரியர்களைப்போல் இவர் இந்துக்களை பற்றி இழிவாக எழுதிவிடவில்லை.

## டபடாபா (TABA-TABA)

அகமது நகரத்துச் சுல்தான் பர்ஹான் நிசாம்ஷாவின் ஆதரவு கொண்டு தன்னுடைய நூலை எழுதிய டபடாபா,

அதற்கு பர்ஹானி-மாசிர் என்று பெயரிட்டுள்ளார். அகமது நகரச் சுல்தானிய வரலாறு இந் நூலில் கூறப்பெற்றிருந்த போதிலும், பாமினி சுல்தான்களுடைய வரலாறு இதற்கு முகவுரையாக அமைந்து உள்ளது. சொல் நடை அமைப்பில் மிகுந்த பகட்டோடு எழுதப் பெற்றிருந்தாலும், வரலாற்றுச் செய்திகள், அரசியல், சமய வரலாறுகள் முதலியவற்றைத் தொகுத்துக் கூறுவதில் பெரிஷ்டாவின் நூலைப்போல் முழுமை பெறவில்லை. ஆனால், பல இடங்களில் பெரிஷ்டாவினால் விளக்கப்பெறாத செய்திகள் இவருடைய நூலில் தெளிவாக்கப் பெறுகின்றன. பல இடங்களில் அகமது நகரச் சுல்தான்களைப் பற்றி வானளாவப் புகழ்ந்துள்ளார்.

பாமினி சுல்தான்களுடைய மரபு விளக்கம், காலவரையறை முதலியவற்றை அறிவதற்குப் பாமினி சுல்தான்களுடைய நாணயங்கள் உதவி செய்கின்றன. ருஷ்ய நாட்டிலிருந்து பீதார் நகரத்திற்கு வந்த நிகிதின் என்பாருடைய வரலாற்றுக் குறிப்புகள் பாமினி சுல்தான்களுடைய வரலாற்றை அறிவதற்கு மிகத் துணை செய்கின்றன.

## பாமினி இராச்சியத்தின் தோற்றம்

1344ஆம் ஆண்டில் தக்காணத்தில் தௌலதாபாத் மாகாணத்தைத் தவிர மற்ற நிலப்பகுதிகள் எல்லாம் முகம்மது துக்ளக்கின் பேரரசில் இருந்து நீங்கின. அந்த ஆண்டில் தன்னுடைய உடன் பிறந்தோரான நைசாமுதீன் என்பாரைத் தௌலதாபாத்தின் ஆளுநராக நியமித்தார். அந்த ஆளுநர் திறமையற்றிருந்தமையாலும் நாடெங்கிலும் கலகங்கள் தோன்றியமையாலும், அவரை நீக்கிவிட்டு ஹாசன் என்பாரைத் தக்காணத்தின் தலைவராக இஸ்லாமிய பிரபுக்கள் ஒப்புக் கொண்டனர். 1347ஆம் ஆண்டில் ஹாசன் என்பார் அலாவுதீன் பாமன்ஷா என்ற பெயருடன் அரசபதவியை ஏற்றார்.

## அலாவுதீன் ஹாசன் கங்கு (பாமன்ஷா)

கங்கு என்ற டெல்லி நகரத்து பிராமணனுடைய உதவியைப் பாராட்டும் முறையில் தன்னைக் கங்கு என்றும், பாமன்ஷா என்றும் அலாவுதீன் அழைத்துக் கொண்டான் என்று பெரிஷ்டா கூறியுள்ளார். ஆனல் இச் செய்தி வரலாற்று உண்மையெனக் கொள்ளுதற்கில்லை. ஏனெனில், கல்வெட்டுச் சான்றுகளும் நாணயஆதாரங்களும் அதைப்புறக்கணிக்கின்றன. பாரசீகத்திலிருந்து இந்தியாவிற்கு வந்த பாமன்ஷா என்ற தலைவனுடைய கால்வழியில் வந்தவன் இந்தப் பாமன்ஷா

என்று வரலாற்றறிஞர்கள் ஒப்புக் கொள்ளுவர். 1347ஆம் ஆண்டு ஆகஸ்டு 3ஆம் தேதி அலாவுதீன் ஹாசன் பாமன்ஷா தக்காணத்தில் சுல்தான் பதவியை ஏற்று பாமினி வமிச பரம்பரையைத் தோற்றுவித்தான். இஸ்லாமியப் பிரபுக்களிடம் சாம, தான, பேத, தண்ட முறைகளைப் பின்பற்றித் தன்னுடைய ஆட்சியை வன்மையுறச் செய்தான். வாரங்கல்நாட்டுக் காப்பைய்ய நாயக்கர் என்பாரைத் தோற்கடித்து, கௌலாஸ் என்னும் அரண்மிகுந்த இடத்தைக் கைப்பற்றினான். விஜய நகரத்து அரசர்களுக்கும், பாமினி சுல்தான்களுக்கும் நடந்த இடைவிடாத போராட்டம் 1349ஆம் ஆண்டிலேயே தோன்றிய தெனக் கூறலாம். முன்னர் தேவகிரிநாட்டு யாதவ மன்னர் களுக்கும், ஹொய்சள வமிசத்து அரசர்களுக்கும் நடைபெற்ற போராட்டம், இப்பொழுது மீண்டும் பாமினி — விஜயநகரப் போராட்டமாக மாற்றமடைந்தது.

அலாவுதீன் ஹாசன் கங்கு, மதுரையில் ஆட்சிசெலுத்திய சுல்தானுடன் நட்பு பூண்டு, விஜயநகர அரசனாகிய முதலாம் ஹரிஹரன்மீது போர் தொடுத்தாகத் தெரிகிறது. இஸ்லாமிய வரலாற்று ஆசிரியர்களின் கூற்றுப்படி துங்கபத்திரை நதிவரை யில் உள்ள எல்லா நிலப்பகுதிகளையும் அலாவுதீன் தன் இராச்சியத்தில் சேர்த்துக் கொண்டான். முதலாம் ஹரிஹரன் மீதும் வெற்றிக் கொண்டதாகவும் சிலர் கூறுவர். மேற்கே அராபிக்கடலிலிருந்து கிழக்கே போன்கீர் (Bhongir) வரை யிலும், தெற்கே கிருஷ்ணைப் பேராற்றிலிருந்து வடக்கே பெனுகங்கா நதிவரையிலும் பாமினி இராச்சியம் பரவியிருந்த தாகவும் கூறுவர்.

எகிப்தில் ஆட்சி செலுத்திய காலிப்பின் சம்மதத்தைப் பெற்று சிக்கந்தர் என்ற பட்டப் பெயரையும் அலாவுதீன் அணிந்ததாகத் தெரிகிறது. பாமினி இராச்சியம் குல்பர்கா, தௌலதாபாத், பீதார், பேரார் என்ற நான்கு மாகாணங் களாகப் பிரிக்கப்பெற்று மாகாண ஆட்சி நடைபெற்றது. பாமினி இராச்சியத்தின் முதல் தலைநகரம் குல்பர்காவாகும்.

### முதலாம் முகம்மது (1357—1377)

அலாவுதீன் ஹாசனுக்குப் பிறகு அவனுடைய மூத்த மகன் முகம்மது என்பான் பாமினிநாட்டுச் சுல்தானாகப் பதவி யேற்றான். இவனுடைய ஆட்சியில், பிற்காலத்தில் மராட்டிய மன்னனாகிய சிவாஜி பின்பற்றிய அஷ்டப்பிரதான் சபைக்கு அடிப்படையாக விளங்கிய எட்டு அமைச்சர்கள் கொண்ட

அமைச்சர் குழுவொன்று அமைக்கப்பெற்றது. மாகாண அரசியலும் சீர்திருத்தமடைந்தது. சுல்தானுடைய மெய்க்காப்பாளர்களுக்கு நௌபாட் என்ற பெயரளிக்கப் பெற்றது. ஒவ்வொரு மெய்க்காப்பாளரும் நான்கு நாட்களுக்குச் சேர்ந்தாற்போல் கடமையாற்றி வந்தனர். நாட்டில் மக்களுடைய பொருள்களையும், உயிரையும் கொள்ளைகொண்ட கள்ளர் கூட்டங்கள் ஒழிக்கப்பெற்று அமைதி நிலவியது. குல்பர்காவில் உள்ள சிறப்புமிக்க மசூதி இக் காலத்தில் அமைக்கப் பெற்றதாகும். முகம்மதுவின் தாயார் 1361ஆம் ஆண்டில் மெக்கா நகருக்குப் புனிதயாத்திரை செய்து திருப்பிய பிறகு எகிப்துநாட்டின் காலிப்பால் கௌரவிக்கப் பெற்றதாக அறிகிறோம்.

முகம்மது, தன் ஆட்சியில் பாமினி சுல்தானுடைய தலைமை அதிகாரத்தைத் தெலுங்கானு நாட்டுக் காப்பைய்ய நாயக்கரும், விஜயநகரத்தரசன் முதலாம் புக்கதேவராயனும் ஒப்புக் கொள்ளும்படி செய்வதற்கு ஏராளமான பொன்நாணயங்களை வெளியிட்டான். மேற்கூறப்பெற்ற இந்து அரசர்கள் இருவரும் சுல்தான் முகம்மதுவின் தலைமையை ஒப்புக்கொள்ள இசையாது, அவனுடைய பொன்நாணயங்களை உருக்கிவிடும்படி செய்தனர். இதனால் பாமினி சுல்தானுக்கும் இந்து அரசர்களுக்கும் இடையே பெரும்போர்கள் நடைபெற்றன. பாமினி இராச்சியத்திலிருந்த பொற்கொல்லர்கள் சுல்தானுடைய தங்க நாணயங்களை உருக்கி விட்டபடியால் அவர்களை நாட்டை விட்டுத் துரத்திவிட்டு, வடநாட்டிலிருந்து **கத்திரியர்கள்** என்ற இனத்தவரை வரவழைத்துப் பொன்நாணயங்களை அச்சிடும்படி உத்திரவிட்டான்.

தெலுங்கானு நாட்டரசராகிய காப்பைய்ய நாயக்கர் தன்னிடமிருந்து அலாவுதீன் கைப்பற்றிக்கொண்ட கௌலாஸ் என்னும் கோட்டையைத் திருப்பவும் பெறுவதற்கு முயற்சிகளை மேற்கொண்டார். விஜயநகரத்தரசன் முதலாம் புக்கதேவன் கிருஷ்ணை-துங்கபத்திரை யாறுகளுக்கு இடையிலுள்ள இடைத்துறை நாட்டைத் தன்வசப்படுத்திக் கொள்ள நினைத்து ஒரு தூதனைக் குல்பர்காவிற்கு அனுப்பி வைத்தான். அத் தூதனை 18 மாதங்கள் வரையில் திரும்பியனுப்பாது முகம்மது காலந் தாழ்த்தினன். இந்த 18 மாதங்களில் காப்பைய்ய நாயக்கர் மீதும், புக்கதேவராயன்மீதும் போர்தொடுப்பதற்குத் தகுந்த வசதிகளைத் தேடிக் கொண்டான்.

காப்பைய்ய நாயக்கர் கௌலாஸ் என்ற அரணைத் தன் வசப்படுத்திக் கொள்வதற்காக, 20 ஆயிரம் குதிரைப்படை

வீரர்கள்கொண்ட சேனை ஒன்றை தயார் செய்து தன்னுடைய மகன் விநாயகதேவனுடைய தலைமையில் அனுப்பினுர். ஆனுல் பாமினி சுல்தானுடைய சேனுதிபதியாகிய பகதூர்கான் விநாயகதேவனைத் தோற்கடித்து வாரங்கல் நாட்டையும் பிடித்து ஏராளமான பொருளைப் பெற்றுத் திரும்பினுன். 1362ஆம் ஆண்டில், பாமினி சுல்தானுக்காக அரேபியாவில் இருந்து வரவழைக்கப்பெற்ற சில குதிரைகளை விநாயகதேவன் தன்னுடைய குதிரைப்படைகளுக்கு வாங்கியதாகத் தெரிகிறது. இதையொரு பெருங்குற்றமாகக் கருதி விநாயகதேவனைச் சிறைப்படுத்தி விலங்குகளைக் கொல்வதைப்போல் அவனைக் கொன்றுவிடும்படி செய்து பெரும்பழி கொண்டான்.

வாரங்கல்நாடும் முகம்மதுவின் படையெழுச்சிக்குள்ளாகி, காப்பைய்ய நாயக்கர் கோல்கொண்டா கோட்டையை இழக்க வேண்டி வந்தது. பல யானைகளையும், பெருவாரியான பொருட்களையும் கொடுத்தும், நவரத்தினங்கள் வைத்து இழைக்கப்பெற்ற அரியணையொன்றைக் கொடுத்தும் காப்பைய்ய நாயக்கர் சந்து செய்துகொண்டார். 1365ஆம் ஆண்டில் குல்பர்காவில் அந்த அரியணையின் மீது அமர்ந்து தன்னுடைய வெற்றியை முகம்மது கொண்டாடியதாகத் தெரிகிறது.

## விஜய நகரத்தரசருடன் போர்

குல்பர்காவில், முகம்மது சுல்தான் நடத்திய வெற்றிக் கொண்டாட்டத்தின் பயனுக, விஜயநகரத்தரசன் முதலாம் புக்கதேவனுடன் பெரும்போர் தொடங்க வேண்டியதாயிற்று. அந்தக் கொண்டாட்டத்தின்பொழுது சுல்தானுடைய சபையில் இன்னிசையும், நடனமும் நிகழ்த்திய சில பாணர்களுக்கு விஜயநகரத்து அரசன் தன்னுடைய கருவூலத்திலிருந்து பெரும்பொருள் கொடுக்க வேண்டுமென்று முகம்மது ஒரு கடிதத்தை அனுப்பினுன். இக் கடிதத்தைக் கொண்டுவந்தவனைப் புக்கதேவராயன் அவமானம் செய்து அனுப்பினன். இதையே காரணமாகக் கொண்டு முதலாம் முகம்மது விஜய நகரத்தின்மீது படையெடுத்தான். ஆதோனி என்ற இடத்தை முற்றுகையிட்ட பின்னர் காந்தள் என்ற போர்க்களத்தில் பெரும்போர் நிகழ்ந்தது. பாமினி சுல்தானுடைய சேனையில் பீரங்கிப் படைகள் இருந்தமையால் விஜயநகரப்படைகள் தோல்வியுற்றன. மல்லிநாதன் என்ற விஜயநகரத்துச் சேனைத் தலைவன் படுகாயமுற்றனன். புக்கதேவராயன் விஜயநகரத்துக் கோட்டைக்குள் பதுங்கிக்கொள்ள வேண்டியதாயிற்று. பாமினி நாட்டுப்படை வீரர்கள் விஜயநகரத்துக் கிராமங்களையும்

மக்களையும் ஈவு இரக்கமின்றி கொலை செய்தனர். ஆனால், பெரிஷ்டா தன்னுடைய வரலாற்று நூலில், மூன்று மாத காலத்திற்குப் புக்கதேவராயனை மலைகளின்மீதும், காடுகளிற் குள்ளும் துரத்திச் சென்றதாகவும், பின்னர் விஜயநகரத்தின் கோட்டைக்குள் அவரை முற்றுகையிட்டதாகவும் கூறுவர். ஆனால் உண்மையென்னவென்றால், முகம்மதுவும் அவனுடைய படைவீரர்களும் விஜயநகரத்தை முற்றுகையிட்டும் வெற்றி பெறாமல் திரும்ப வேண்டியதாயிற்று.

அடுத்து நடந்த போரில் விஜயநகரத்துப் படைகள் தோல்வியுற்றன என்றும், ஆயிரக்கணக்கான இந்துக்கள் கொலை செய்யப்பெற்றனர் என்றும் பெரிஷ்டா கூறியுள்ளார். தான் விரும்பியவாறு விஜயநகரத்து அரசன் இன்னிசை வாணர்களுக்குப் பொருள் கொடுத்தால் ஒழிய, போரைத் தொடர்ந்து நடத்தப் போவதாகவும் முகம்மது கூறினதால், புக்கதேவராயன் அவ்விதமே பொருளைக்கொடுத்து சமாதானம் செய்துகொண்டதாகத் தெரிகிறது. நான்கு லட்சத்திற்கு மேற்பட்ட பிராமணர்கள் கொலையுண்டதாகக் கூறும் பெரிஷ்டாவின் கூற்றை நம்புதற்கில்லை. இவ்வித உயிர்ச்சேதம் இரு கட்சிகளிலும் நேர்ந்திருக்க வேண்டும். ஆகையால் இவ்விரு அரசுகளும், இனிமேல் போர்களில் பங்கு கொண்ட வர்களைத் தவிர மற்றவர்களுக்கு உயிர்ச்சேதம் விளைவிப்பதில்லை என்ற கட்டுப்பாட்டிற்கு உட்பட்டன.

முஸ்லிம் அல்லாத மக்களையும் பிறரையும் கொலை செய்வதைத் தன்னுடைய முக்கிய நோக்கமாகக் கொண்டிருந்த முகம்மதுவின் குண நலன்களைப்பற்றி பெரிஷ்டா வானளாவப் புகழ்ந்துள்ளாரேனும், அவனுடைய இரத்த வெறியும் பொறுப்பற்ற செயல்களும் நன்கு விளங்குகின்றன. மயக்கம் தரும் மதுவகைகளைப் பருகித் தன்னுடைய வாழ்நாளைக் குறைத்துக் கொண்டதாக டபடாபா என்ற வரலாற்றாசிரியர் கூறுவர். அலாவுதீன், முதலாம் முகம்மது ஆகிய இரு சுல்தான் களுடைய ஆட்சிக்காலங்களிலும், பின்னரும் பாமினி அரசர் களுக்கு உதவிசெய்து ஆட்சிமுறையில் பல சீர்திருத்தங்களைச் செய்தவர் சைபுதீன் கோரி என்ற அறிஞர் ஆவர்.

## முஜாஹித் (1373—1378), இரண்டாம் முகம்மது (1378—1397)

முதலாவது முகம்மதுவிற்குப் பிறகு அவனுடைய மூத்த மகன் முஜாஹித் என்பான் குல்பர்காவில் பாமினி சுல்தானாக

முடிசூட்டப் பெற்றனன். அவன் மிக்க இளைஞனாக இருக்கும் பொழுதே அரசுரிமை அடைந்தனன். துங்கபத்திரைக்கும், கிருஷ்ணா நதிக்கும் இடையிலுள்ள நிலப்பகுதி விஜயநகரத்து அரசர்களுக்கு உரிமையுள்ளதா அல்லது பாமினி சுல்தான்களுக்குச் சொந்தமானதா என்பதை நிச்சயிக்க இவ்விரு அரசுகளுக்குமிடையே போர் தொடங்கியது. பாமினி இராச்சிய படைகள் ஆதோனி நகரத்தை முற்றுகையிடத் தொடங்கின. புக்கதேவராயனை விஜயநகரத்திலிருந்து சேதுபந்தன இராமேச்வரம் வரையிலும் துரத்திச்சென்று, மீண்டும் விஜயநகரத்திற்குத் துரத்தி வந்ததாக கூறும் பெரிஷ்டாவின் கூற்று எத்துணை உண்மையுடையது என்று அறியமுடியவில்லை. எல்லோராலும் புகழ்ந்து விவரிக்கப்பெற்ற விஜயநகரத்தின் பெருமையை நேரில் காண்பதற்காக முஜாஹித் அந் நகரத்தை முற்றுகையிட்டதாகத் தெரிகிறது. ஆனால், விஜயநகரத்தைக் கைப்பற்ற முடியாமல் திரும்புகையில் அவனுடைய உயிருக்கே ஆபத்து உண்டாக்கத் தக்க காயமுற்று தன்னுடைய அமைச்சன் சைபுதீன் கோரியின் சொற்படி தன தலைநகருக்குத் திரும்பி விட்டான். விஜய நகரத்தைப்பற்றி டபடாபா கூறும் செய்திகள், பெரிஷ்டாவின் வரலாற்றைவிட நம்பத்தக்கனவாக உள்ளன. ஆயினும் விஜயநகரத்தரசர்கள், பாமினி சுல்தான்களைவிட செல்வத்திலும் செல்வாக்கிலும் உயர்ந்திருந்தனர் என பெரிஷ்டா கூறுவர். விஜயநகரத்தை முற்றுகையிட்ட பொழுது நேர்ந்த தோல்வியைக் கண்டு தன்னுடைய உறவினன் தாதுக்கான் என்பானை, முஜாஹித் சினங்கொண்டு நாவினால் சுட்டு விட்டான். அத் தீச்சொற்களைப் பொறுத்துக் கொள்ளாத தாதுக்கான், முஜாஹித் சுல்தானைக் கொலை செய்துவிட்டு தானே சுல்தான் பதவியை மேற்கொண்டான். ஆனால், அவன் ஒருமாத காலத்திற்குத்தான் உயிருடன் இருக்க முடிந்தது. முஜாஹித்தின் உடன்பிறந்தாள் ஒருத்தி தாதுக்கானைக்கொலை செய்யும்படி சதிசெய்து அதில் வெற்றியும் பெற்றாள்.

முஜாஹித்திற்குப் பிறகு அலாவுதீனுடைய நான்காவது மகன் இரண்டாம் முகம்மது என்ற பெயருடன் சுல்தான் பதவியை வகித்து 1378 முதல் 1397வரையில் ஆட்சிபுரிந்தனன். இவனுடைய ஆட்சிக்காலத்தில் விஜயநகரத்துடனோ அல்லது வாரங்கல்நாட்டுடனோ எவ்விதமான போர்களும் ஏற்படவில்லை. ஆயினும், 1387 முதல் 1395 வரையில் ஏழாண்டுகளுக்குமேல் வானம் வழங்காது கொடிய பஞ்சம் தோன்றி, உணவும் நீரும் இன்றி மக்கள் தவித்தனர். இத் துன்பத்தினின்றும் குடிமக்களைக் காப்பாற்றுவதற்குச் சுல்தான் முகம்மதுவும் அவனுடைய

அமைச்சர்களும் பெருமுயற்சிகளை மேற்கொண்டனர். முகம்மது வின் ஆட்சியில் ஒரு பாரசீக அறிஞர் தலைமை நீதிபதியாகப் பதவி வகித்தார். அவருடைய சொற்படி பாரசீகநாட்டில் ஷிராஜ் என்ற ஊரில் பிறந்த ஹபீஸ் என்ற பாரசீகக் கவியரசனைக் குல்பர்காவிற்கு வந்து தங்கும்படி வேண்டிக் கொண்டனன். ஹபீஸ் கவியும் தக்காணத்திற்கு வருவதற்கு மனமிசைந்த போதிலும், பாரசீக வளைகுடாவில் ஏற்பட்ட புயலின் காரணமாக இந் நாட்டிற்கு வரமுடியவில்லை. மற்ற சுல்தான்களைப்போல, நாட்டின் செல்வம் முழுவதும் தன் னுடைய நலத்திற்குத்தான் என்ற எண்ணத்தை விடுத்து, தன்னுடைய இராச்சியத்தின் பொருள்கள் அனைத்திற்கும் தன்னை ஓர் அறநிலையக் காவலன்போலக் கருதி வீண் செலவுகளை நிறுத்தித் தர்மமார்க்கத்தையே முகம்மது கடைப் பிடித்தான். சைபுதீன் கோரி என்ற சிறந்த அமைச்சர் இவனுடைய ஆட்சியில் வாழ்ந்தார்.

## பிரோஸ் (1397—1422)

### இவர் காலத்திய விஜயநகரத்தரசர்கள்: இரண்டாம் ஹரிஹரன், இரண்டாம் புக்கன், முதலாம் தேவராயர்

'பிரோஸ் ஒப்புயர்வற்ற சுல்தானாக விளங்கினான். அவனுடைய நற்செயல்கள் வரலாற்றின் ஏடுகளில் பொன் னெழுத்துகளால் எழுதத்தக்கன' என்று டபடாபா இவனைப் புகழ்ந்து பேசியுள்ளார். ஆயினும் இவனுக்கு இஸ்லாம் சமயப்பற்று மிக்கிருந்தமையால், முஸ்லிம்களால் ஆளப்பெருத விஜயநகரத்தின்மீது இவன் அடிக்கடி போர்தொடுத்து வன்முறைகளில் ஈடுபட்டான்.

பிரோஸின் ஆட்சியில் இரண்டாவது ஹரிஹரதேவன் இடைதுறை நாட்டின்மீது படையெடுப்பதற்குத் துங்கபத்திரை நதியின் தென்கரையில் முகாம் இட்டிருந்தான். துங்க பத்திரையைக் கடந்து விஜயநகரத்துச் சேனைகளை எதிர்ப்ப தற்குச் சில முகம்மதியத் தலைவர்கள் எவ்வித சூட்சித்திறனைக் கையாண்டனர் என்பதை பெரிஷ்டா தன்னுடைய வரலாற்றில் விவரமாகக் கூறியுள்ளார். 'சிராஜ்உதீன் என்ற காசியும் (முறை வழங்குநர்), அவனைச் சேர்ந்த மற்றவர்களும் இசைக்கூத்தில் வல்லவர்கள்போல மாறுவேடம் புனைந்து ஹரிஹர தேவராயருடைய சேனை தங்கியிருந்த இடத்திற்குச் சென்றனர். ஹரிஹரதேவருடைய மகனுக்கு முன் தங்களுடைய நடனத் திறமையைக் காட்டுவதற்கு உத்தரவுபெற்று, வாட்போர் நடனம் ஒன்றை நடித்தனர். திடீரென்று உருவிய கத்தியுடன்

விஜயநகரத்து இளவரசன்மீது பாய்ந்து அவனைக் கொன்று விட்டனர். தன்னுடைய மகனுடைய உயிரைப் பறிகொடுத்த விஜயநகரத்தரசன் தன் சேனையோடு பின்வாங்க நேர்ந்தது.' பெரிஷ்டா கூறும் இச் செய்தி மற்ற ஆதாரங்களால் உறுதி பெறவில்லை. ஆயினும் பிரோஸ், விஜயநகரத்து அரசனிட மிருந்து இடைதுறைநாட்டைக் கைப்பற்றித் தன்னுடைய ஆட்சியில் சேர்த்துக்கொண்டான். புலாத்கான் என்ற ஒருவரை அந் நிலப்பகுதிக்கு ஆளுநராக நியமித்தான்.

மேற்கூறப்பெற்ற போருக்குப்பின் வார்தா நதிக்கும், வாணிகங்கை நதிக்கும் இடைப்பட்ட நிலப்பகுதியை ஆண்ட காண்டு(Ghond) வமிசத்து சிற்றரசன் நரசிங்கனுடைய நாட்டின் மீது பிரோஸ் படையெடுத்துச் சென்றான். நரசிங்கன் தோல்வி யடைந்து, 40 யானைகளையும் மிகுந்த பொருட்களையும் கப்பமாகக் கொடுத்துச் சந்து செய்துகொண்டான். மத்திய ஆசியாவில் இருந்து இந்தியாவின்மீது படையெடுத்து டெல்லி நகரத்தைக் கொள்ளையடித்த தைமூர் என்பாருக்கு ஒரு தூதுக்குழுவை அனுப்பி, அவருடைய நன்மதிப்பை பிரோஸ் பெற்றதாக நாம் அறிகிறோம். தைமூரும், பிரோஸிற்குத் தக்காணம், மாளவம், கூர்ஜரம் முதலிய இடங்களை அளித்ததாக நாம் கேள்விப் படுகிறோம். இவ்வித செயல்கள் பிரோஸின் ஆட்சியை எவ்விதத்தில் பலப்படுத்தின என்று நாம் உணரமுடியவில்லை.

பிரோஸ் பாமினி சுல்தானாக அரசுபுரிந்த பொழுது, விஜய நகரத்தை முதலாம் தேவராயர் அரசாண்டார். இவ்விரு நாடுகளுக்கும் போர்மூண்டதற்குப் பெரிஷ்டா கூறும் கதை யொன்று வழக்கத்தில் உள்ளது. தேவராயர், ஓர் அந்தண னுடைய வார்த்தையைக் கேட்டு முதுகல் நகரத்தில் வாழ்ந்த ஒரு பொற்கொல்லருடைய அழகிய குமாரத்தியை மணந்து கொள்வதற்காக முதுகல் நகரத்தைக் கைப்பற்ற விரும்பிய கதையை பெரிஷ்டா கூறுவர். இதன் காரணமாக பாமினி இராச்சியப் படைகள் விஜயநகரத்தின்மீது படையெடுத்து முற்றுகையிட்டனர். வெற்றியும் தோல்வியும் மாறிமாறி ஏற்பட்டனவென்று நாம் அறிகிறோம். பின்னர், இரண்டு அரசர்களுக்கும் அமைதிப் பேச்சுகள் நடைபெற்று மணவுறவும் ஏற்பட்டதென பெரிஷ்டா கூறியுள்ளார். முதலாம் தேவராயர் தன்னுடைய குமாரத்தி ஒருத்தியை பிரோஸிற்கு மணமுடித்துக் கொடுத்து தார்வாருக்கு அருகிலுள்ள பங்காபூரைச் சீதன மாகக் கொடுத்ததாகவும் நாம் கேள்விப்படுகிறோம். ஆனால், இவ்விரு அரசுகளும் மணவுறவு கொண்டிருந்தால் பிற்காலத்தில் மிகுந்த மனவேற்றுமை ஏற்பட்டிருக்காது. முதுகல் நகரத்து

அழகியாகிய பெர்த்தால் என்னும் பெண் பிரோஸின் மகனுக்கு மணமுடிக்கப் பெற்ருள்.

1417ஆம் ஆண்டில் வாரங்கல் நாட்டின்மீது படையெடுத்துச்சென்று தனக்குச் சேரவேண்டிய கப்பத்தொகையை பிரோஸ் பெற்றுக்கொண்டான். பின்னர் பாங்கல் என்னும் இடத்தைக் கைப்பற்ற விரும்பியதால் விஜயநகரத்தரசனேடு போர் தொடங்கியது. பாங்கல் நகரத்து முற்றுகையில் பிரோஸ் சுல்தானுக்குப் பெரிய தோல்வி உண்டாயிற்று. அதிலிருந்து போர் செய்வதையே விடுத்து இறைவனை வணங்குவதில் தன்னுடைய வாணுளைக் கழித்து வந்தான் என டபடாபா கூறியுள்ளார். தனக்குப் பிறகு தன்னுடைய தம்பி ஆமதுஷா என்பான், சுல்தான் பதவியைப் பெறக்கூடாதென்று முயன்ற போதிலும் அம் முயற்சியில் வெற்றிபெற முடியவில்லை.

## ஆமதுஷா (1422–1435)

### விஜயநகர அரசர்கள்: முதலாம் தேவராயர், விஜயராயர், இரண்டாம் தேவராயர்

பிரோஸ்ஷாவிற்குப் பிறகு சுல்தான் பதவியை வகித்த ஆமதுஷா, தன்னுடைய நற்காலத்தைப்பற்றி வரும் பொருளுரைத்த இஸ்லாமிய அறிஞருக்குத் தகுந்த மரியாதை செய்தான். அவன் அரசுரிமை எய்துவதற்கு உதவியாக இருந்த பல நண்பர்களும் பல வெகுமதிகளைப் பெற்றனர். இரண்டாயிரம் குதிரைவீரர்களுக்கு தலைவர் என்ற பதவி வழங்கப்பெற்றது.

பிரோஸ் சுல்தானுடைய ஆட்சியில் பாங்கல் நகரத்தை முற்றுகையிட்டபொழுது ஏற்பட்ட தோல்வியின் இழிவைப் போக்கிக்கொள்ள விஜயநகரப் பேரரசோடு ஆமதுஷா போரைத் துவக்கினுன். துங்கபத்திரை நதிக்கரையில் விஜயநகரத்து சேனைகளை முறியடித்துப் பெரும் வெற்றியடைந்ததாக நாம் அறிகிருேம். இந்துக்களை ஈவிரக்கமின்றிக் கொன்று குவித்தும், அடிமைகளாக்கியும், பசுக்களை வதைத்தும் தன்னுடைய வஞ்சத்தைத் தீர்த்துக்கொண்டான். தேவாலயங்கள் இடிக்கப்பெற்றன. விஜயநகர அரசராகிய வீரவிஜயராயர் பெரியதொரு தொகையைக் கொடுக்க வேண்டியவரானுர். உயர்ந்த வகுப்பைச் சேர்ந்த இந்துக்கள் பலர் இஸ்லாமிய சமயத்தைச் சாரும்படி வற்புறுத்தப் பெற்றனர். இவ்வித சமய மாற்றத்தினுல் மேன்மையுற்ற இருவர் பேரார் நாட்டையும், அகமது நகரத்து சுல்தானிய அரசையும்

ஏற்படுத்தினர். 1428ஆம் ஆண்டில் தெலுங்கானு நாடு பாமினிப் பேரரசோடு இணைக்கப்பெற்றது. மாளவநாட்டுச் சுல்தான் ஹோஷங்ஷாவின் மீதும் ஆமதுஷா வெற்றிகொண்டான்.

ஆமதுஷாவின் ஆட்சியில் மாகாண ஆட்சிமுறை செம்மையுற்று, அரசாங்க அலுவலர்களின் கடமைகளும் உரிமைகளும் இன்னின்னவையென வரையறை செய்யப்பெற்றன. அரசியல் சேவையிலும், இராணுவத்திலும் பாரசீகம், மத்திய ஆசியா, அரேபியா முதலிய நாடுகளிலிருந்து வந்து குடியேறிய எண்ணற்ற அன்னிய முஸ்லிம்கள் பதவிகளில் அமர்த்தப் பெற்றனர். இவர்கள் எல்லோரும் ஷியா பிரிவைச் சேர்ந்திருந்தனர். இவர்களுக்கு எதிராகத் தக்காணத்தில் பிறந்து வளர்ந்த இஸ்லாமியர்களும், ஆப்பிரிக்க நாட்டு நீக்ரோ வகுப்பினரும் ஒன்றுசேர்ந்து தக்காணக்கட்சி என்ற வகுப்பில் சேர்ந்தனர். இவர்கள் எல்லோரும் சன்னி என்ற வைதீக இனத்தைச் சேர்ந்தவர்கள். இவ்விரு கட்சியினரிடையே தோன்றிய இன, சமூக, சமய வேற்றுமைகள், பாமினி இராச்சியத்தில் கலகத்தையும் உள்நாட்டுப் பூசலையும் தோற்றுவித்து, சுல்தானிய அரசு ஐந்து பிரிவுகளாகப் பிரிவதற்குக் காரணமாயின.

ஆமதுஷா தன்னுடைய தலைநகரத்தை குல்பர்கா நகரிலிருந்து பீதாருக்கு 1429ஆம் ஆண்டில் மாற்றினுன். இஸ்லாமியப் பெரியோரிடம் மிக்க அன்புகொண்டு அவர்களுக்குத் தொண்டுபுரிந்தமையால் 'தொண்டர் ஆமது' என்று மக்களால் அழைக்கப்பெற்ருன்.

## இரண்டாம் அலாவுதீன் (1435—1458)

'தொண்டர் ஆமது'க்குப் பிறகு இரண்டாம் அலாவுதீன் என்பார் சுல்தான் பதவியை ஏற்ருர். இவருடைய ஆட்சியில் அயல்நாட்டு இஸ்லாமியர் கட்சியைச் சேர்ந்தவர்கள் மிகுந்த செல்வாக்குப் பெற்றனர். இதனுல் தக்காண முஸ்லிம் கட்சியினர், பொருமைகொண்டு நாட்டில் கலகத்தையும், சதிச் செயல்களையும் விளைவித்தனர்.

அலாவுதீன், தன்னுடைய தம்பி முகம்மது என்பானை, விஜயநகர வேந்தன் இரண்டாம் தேவராயனிடமிருந்து, கப்பப் பொருளைப் பெறுவதற்காக ஒரு பெருஞ்சேனையுடன் அனுப்பி வைத்தார். அச் செயலில் மிக்க சாமர்த்தியமுடன் வெற்றிபெற்ற

முகம்மது, தன் தமையனுக்கு எதிராகக் கலகம் செய்தனன். நாட்டில் சரிபாதி பகுதியைத் தான் ஆட்சிபுரியும் உரிமை பெறவேண்டுமென்று போர்தொடுத்தான். அப் போரில் முகம்மது தோல்வியுற்றபோதிலும், அலாவுதீன் அவனை மன்னித்து இராய்ச்சூர் பகுதிக்கு ஆளுநராக நியமித்தார். கொண்கானநாட்டை வென்று சங்கமகேஷ்வரத்துச் சிற்றரசனுடைய மகளை அலாவுதீன் இரண்டாவது தடவையாக மணம் செய்துகொண்டார். இத் திருமண உறவினால் முதல் மனைவியின் தகப்பனாகிய கான்தேஷ்நாட்டு நசீர்கான் என்பான், அலாவுதீனுக்கு எதிராகக் கலகம் செய்தனன். பேரார்பகுதியின்மீது நசீர்கான் படையெடுத்தபொழுது, தக்காண முஸ்லிம்கள் அவனுடைய கட்சியில் சேர்ந்துகொண்டனர். தௌலதாபாத்தின் ஆளுநராக இருந்த மாலிக் துஜ்ஜார் என்பான், அயல்நாட்டு இஸ்லாமியரின் கட்சித்தலைவனாகி நசீர்கானைத் தோற்கடித்து வெற்றிகொண்டான். இவ்வெற்றியின் பயனாகத் தக்காண முஸ்லிம்களின் செல்வாக்குக் குறைந்தது.

அலாவுதீன் ஆட்சிக்காலத்தில் விஜயநகரத்தில் பேரரசனாக இரண்டாம் தேவராயர் ஆட்சிபுரிந்து வந்தார். விஜயநகரத்து சேனைகள் பாமினி சுல்தான்களுடைய சேனைகளால் அடிக்கடி தோல்வியுறுவதைக் கண்டு தன்னுடைய படையமைப்பில் பல மாற்றங்களை உண்டாக்கினார். இஸ்லாமிய குதிரை வீரர்களைத் தன்னுடைய சேனையில் அமர்த்தி அவர்களுக்குப் பல சலுகைகளையும் செய்தார். இஸ்லாமிய இராணுவத் தலைவர்களுக்கு நிலமானியங்கள் வழங்கப்பெற்றன. அவர்கள் இறைவனைத் தொழுவதற்கு மசூதிகள் அமைக்கப்பெற்றன. அரியணைக்குமுன் திருக்குரானின் படியொன்று வைக்கப் பெற்றது. ஏனெனில், இஸ்லாமியக் கொள்கையின்படி இஸ்லாமிய வீரர்கள் குரானுக்கு வணக்கம் செலுத்த வேண்டுமேயன்றி, மற்ற சமயத்தைச் சேர்ந்த அரசர்களுக்கு வணக்கம் செலுத்தக்கூடாது. தன்னுடைய சேனையை இஸ்லாமிய குதிரைப்படையினால் வலிமைபெறச் செய்த பிறகு, 1443ஆம் ஆண்டில் இரண்டாம் தேவராயர் பாமினிநாட்டின் மீது படையெடுத்தார்.

இடைத்துறைநாட்டிலுள்ள இராய்ச்சூர், முதுகல், பங்காபூர் முதலிய இடங்களைக் கைப்பற்றி நாட்டிற்கும், மக்களுக்கும் மிகுந்த சேதங்களை விளைவித்தனர். மாலிக் துஜ்ஜார் என்பாரின் தலைமையில் பாமினி இராச்சியத்தின் படைகள் முன்னேறி வந்த பொழுது, விஜயநகரத்து சேனைகள் இராய்ச்சூர், பங்காபூர்

முதலிய இடங்களை விட்டுப் பின்வாங்க நேர்ந்தது. மூன்று மாதங்கள் வரையில் நடந்த போர்களில் வெற்றியும், தோல்வியும் மாறிமாறி ஏற்பட்டன. முடிவில் இரண்டாம் தேவராயர், சுல்தான் அலாவுதீனுடன் உடன்பாடு செய்துகொண்டு, முறையாகக் கப்பம் செலுத்த ஒப்புக்கொண்டார் என இஸ்லாமிய வரலாற்றாசிரியர்கள் கூறியுள்ளனர். 1446 முதல் 1453ஆம் ஆண்டுகளுக்கிடையில் அந்நிய நாட்டு இஸ்லாமிய கட்சியினருக்கும், தக்காண முஸ்லிம் கட்சியினருக்கும் இடையே மிகுந்த வேற்றுமைகள் தோன்றின. சுல்தான் அலாவுதீன் தக்காண முஸ்லிம்களின் கட்சியை ஆதரித்துப் பல அயல் நாட்டுத் தலைவர்களையும், சையதுகளையும் கொன்றுவிடும்படி உத்தரவிட்டார். ஆயினும், காசிம்பெக் என்பாருடைய தலைமையில் அன்னியநாட்டு முஸ்லிம்கள் தங்களுடைய செல்வாக்கை மீண்டும் பெற்றனர்.

தான் மதுவுண்டு களித்தபோதிலும், தன்னுடைய குடிகள் கள்ளுண்ணாதவாறு கண்டிப்பான திட்டங்களை வகுத்தார் அலாவுதீன். பீதார் நகரத்தில் இலவச மருத்துவசாலையொன்று அமைக்கப்பெற்றது. இந்துக்களுடைய தேவாலயங்கள் இடிக்கப்பெற்று அவற்றின் இடிபாடுகளைக்கொண்டு மசூதிகள் அமைக்கப்பெற்றன. அலாவுதீனுடைய ஆட்சியின் இறுதிக்காலத்தில் அவருடைய நடத்தை மிக்க சீர்கேடுற்று, கட்டுக்கு அடங்காத சிற்றின்ப வாழ்வில் ஈடுபட்டார். அதனால் உடல்நலம் குன்றி 1458ஆம் ஆண்டில் உயிர்துறந்தார்.

## ஹுமாயூன் (1458—1461)

இரண்டாவது அலாவுதீனுக்குப் பிறகு அவருடைய மகன் ஹுமாயூன் பாமினி சுல்தானாகப் பதவியேற்றான். சில அந்நிய முஸ்லிம்களின் தலைவர்கள் ஹுமாயூனுடைய தம்பி ஹாசன்கான் என்பானை சுல்தான் பதவியில் அமர்த்த எடுத்துக்கொண்ட முயற்சிகள் வீணாயின. கலகம் செய்த தலைவர்கள் மிகக் கொடிய தண்டனைகளுக்குள்ளாயினர். ஹாசன்கான் சிறையில் இடப்பெற்று அவனுடைய விழிகள் பாழாக்கப்பெற்றன. அயல்நாட்டு முஸ்லீம்களின் கட்சியை ஆதரித்து அவர்களுக்குப் பல சலுகைகள் வழங்கப்பெற்றன. மாமூதுகவான் என்ற அறிஞர் ஒருவர் அமைச்சராகப் பதவி ஏற்றார். தெலுங்கானா பகுதியிலும், பீதார் நகரத்திலும் பல உள்நாட்டுக் கலகங்கள் தோன்றின. ஆனால், இக் கலகங்கள் எல்லாம் மிகக் கொடூரமான முறையில் அடக்கப்பெற்றன.

பீதார் நகரத்தின் கொத்தவால் பதவியிலிருந்த அரசாங்க அலுவலர் ஓர் இரும்புக்கூண்டில் அடைக்கப்பெற்றூர். ஒவ்வொரு தினமும் அவருடைய ஒவ்வோர் உடல் பகுதி வெட்டப்பெற்று அவையே அவருக்கு உணவாக அளிக்கப்பெற்றதாம். சுல்தானுடைய தம்பி ஒருவன், பட்டினியால் வாடிய புலிக்கு இரையாகும்படி தண்டனை விதிக்கப்பட்டான். அவனுடைய உற்றூரும் உறவினரும் பலவிதமான கொடுந்தண்டனைகளுக்கும் சித்திரவதைக்கும் உள்ளாயினர். ஹுமாயூனுடைய தாய் மகடூமா ஜகானும், அமைச்சர் மாமூதுகவானும் எத்துணை முயன்றும் ஹுமாயூனுடைய கொடுங்கோன்மைச் செயல்களை அடக்கமுடியவில்லை. மேற்கூறப்பெற்ற வரலாற்றுச் செய்திகள் ஹுமாயூனுடைய கொடுங்கோன்மையைத் தெற்றென எடுத்துக்காட்டுகின்றன.

சுல்தானுடைய ஈவிரக்கமற்ற கொடுஞ்செயல்களைக் கண்ட அவனுடைய ஏவலாளர்களே அவனைக் கொலை செய்வித்தனர். கள்ளுண்டு மயங்கிக் கிடக்கும்பொழுது அவனை வெட்டி இரு துண்டாக்கி உயிரிழக்கும்படி செய்தனர். அவன் இறந்த பின்னர் நாட்டுமக்கள் ஒருவாறு துன்பத்திலிருந்து விடுதலை பெற்றனர். ஹுமாயூனுக்குப் பிறகு எட்டுவயது நிரம்பாத நிசாம்ஷா என்னும் இளைஞன் சுல்தானுகப் பதவி வகித்தான். அவனுடைய தாய், கவாஜாஜஹான், மாமூதுகவான் என்ற மூவரும் சேர்ந்து ஆட்சிக்குழு ஒன்றை அமைத்து அரசியலை நடத்தினர். இந்த ஆட்சிக்குழுவின் காலத்தில் ஒரிசா, மாளவம், தெலுங்கானம் முதலிய நாடுகளிலிருந்து பாமினி இராச்சியத்தை எதிரிகள் தாக்கத்தொடங்கினர். கூர்ஜரநாட்டுச் சுல்தானுடைய உதவிகொண்டு மேற்கூறப்பெற்ற படையெழுச்சிகளின்றும் மாமூதுகவான் பாதுகாத்தார். இளைஞனுகிய நிசாம்ஷா திடீரென இறந்த பிறகு அவனுடைய தம்பி, மூன்ருவது முகம்மது என்ற பெயருடன் 1463ஆம் ஆண்டில் பாமினி சுல்தானுகப் பதவி ஏற்ருன்.

## மூன்ரும் முகம்மதுவும் மாமூதுகவானும்

மூன்ருவது முகம்மது என்ற சுல்தானுடைய ஆட்சிக் காலத்தில், மாமூதுகவான் என்ற அமைச்சருடைய நன்றியறிவு மிக்க தன்னலமற்ற சேவையினுல் பாமினி இராச்சியம் பெருமையுற்று விளங்கியது. சுல்தான் இளைஞனுக இருந்தமையால் மாமூதுகவானும், கவாஜாஜஹானும், சுல்தானுடைய தாயும் ஆட்சிக்குழுவொன்றை அமைத்து அரசியல் காரியங்களைக் கவனித்தனர். கவாஜாஜஹான்,

மாமூதுகவானிடம் பொருமைகொண்டு ஆட்சிக்குழுவிலிருந்து விலகும்படிசெய்து, பாமினி இராச்சியத்தின் வடக்கு எல்லையில் ஆளுநராக இருக்கும்படி செய்துவிட்டார். ஆனால் சுல்தானுடைய தாய், கவாஜாஜஹானுடைய சூழ்ச்சியை அறிந்து, அவன்மீது அரசுத்துரோகக் குற்றம்சாட்டிப் பதவியிலிருந்து விலக்கி உயிரிழக்கும்படி செய்தாள்.

பின்னர், மாமூதுகவான் திருப்பியழைக்கப்பெற்று அமீர்-உல்-உமார் என்ற பட்டத்துடன் முக்கிய அமைச்சராக நியமனம் செய்யப்பெற்றுர்.

பாரசீகத்திலிருந்து இந்தியாவிற்கு வியாபாரம் செய்தற் பொருட்டு வந்துதங்கிய மாமூதுகவான், உயர்குலத்தைச் சேர்ந்த நன்மகனுவர். இரண்டாவது அலாவுதீன் ஆட்சிக் காலத்தில் பாமினிநாட்டின் அரச சேவையில் அமர்ந்து அரசியல் பணியாற்றினுர். ஹுமாயூன், மாமூதின் திறமையை உணர்ந்து 1469ஆம் ஆண்டில் விஜயபுரிக்கு ஆளுநராக நியமனம் செய்தார். விஜயபுரியில் ஆளுநராக இருந்தபொழுது தென்கொங்கணம், விஷால்கார் என்ற இடங்களைப் பிடித்து பாமினி இராச்சியத்தோடு சேர்த்தார். விஜயநகரத்து அரசர்களுடைய ஆட்சியிலிருந்து கோவாதீவைக் கைப்பற்றினுர். 1472ஆம் ஆண்டில் மீண்டும் பீதார் நகரத்திற்குத் திரும்பிய பொழுது சுல்தானும், மக்களும் அவரை மனமாற வாழ்த்தினர். பலவிதமான கௌரவப் பட்டங்கள் அளிக்கப்பெற்றன. மாலிக் ஹாசன் என்ற மற்றொரு இஸ்லாமியத் தலைவரின் துணைகொண்டு இராஜமகேந்திரவரம், கொண்டவீடு முதலிய இடங்களைப் பிடித்து, ஆந்திரப்பிரதேசம் முழுவதும் பாமினி சுல்தானுடைய ஆட்சியில் அடங்கும்படி செய்தார். இவற்ருல் மாமூதுகவானுடைய ஆட்சியில் பாமினி இராச்சியம் மேற்குக் கடலிலிருந்து, வங்கக்கடல் வரையில் பரவியது. பெல்காம் அல்லது வேளகம் என்ற நாட்டு இந்து சிற்றரசருடைய கலகம் அடக்கப்பெற்றது.

1478ஆம் ஆண்டில் சுல்தான் முகம்மது ஒரிசா நாட்டின்மீது படையெடுத்து நாட்டைக் கொள்ளையடித்தான். கொண்டவீடு என்னுமிடத்தில் தோன்றிய கலகத்தை அடக்கி அங்கிருந்த தேவாலயத்தை இடித்து மசூதியொன்று அமைத்தான். பல அந்தணர்களைக் கொன்று காசி (Kazi) என்ற பட்டத்தை மேற்கொண்டான். 1481ஆம் ஆண்டில் கொண்டபள்ளி என்னும் இடத்திலிருந்து கிளம்பி, விஜயநகரப் பேரரசின் வழியாகத் தமிழ்நாட்டில் உள்ள காஞ்சிபுரம்வரையில் படை

யெடுத்துச் சென்ருன். காஞ்சிபுரத்திலிருந்த பல கோயில்களைக் கொள்ளையடித்த பிறகு மசூலிப்பட்டினத்தையும் பிடித்து, மீண்டும் கொண்டபள்ளிக்குத் திரும்பியதாக நாம் அறிகிறோம். மூன்ருவது முகம்மது காஞ்சிபுரத்தின்மீது படையெடுத்ததைப் பற்றி பெரிஷ்டாவும், டபடாபாவும் வேறுவேறு விதமாகத் தங்களுடைய வரலாற்று நூல்களில் விவரித்துள்ளனர். அவற்றில் சில செய்திகள் மிகைப்படுத்திக் கூறப்பெற்றிருப் பினும், காஞ்சிபுரத்தில் இருந்த கோவில்களை இஸ்லாமியப் படைகள் கொள்ளைகொண்டது உண்மையான செய்தியாக இருக்கக்கூடும். இப் படையெழுச்சி நிகழ்ந்தகாலத்தில் விஜய நகரத்தில் அரசனுக இருந்த இரண்டாவது விருபாக்ஷதேவன் அரசியல் திறமையின்றி ஆட்சிபுரிந்து நாட்டை நன்முறையில் பாதுகாக்கவில்லை என்பதை நாம் உணரக்கூடும். ஆனல், காஞ்சிபுரத்திலுள்ள கோவில்களெல்லாம் முகம்மது சுல்தானல் அழிக்கப்பெற்றன என்பதும், விக்கிரகங்களை வணங்கும் பொய்ச்சமயமாகிய இந்துசமயம் அடியோடு அழிக்கப்பெற்றது என்றும், டபடாபா என்பார் கூறுவதை நாம் ஒப்புக்கொள்ளுவதற்கில்லை. 1470 முதல் 1474 வரையில், ரஷ்ய நாட்டிலிருந்து வந்து பாமினி இராச்சியத்தின் தலைநகராகிய பீதார் நகரத்தில் தங்கியிருந்த அதனேஷியஸ் நிகிதின் என்பார், பீதார் நகரத்தின் பெருமையையும், சுல்தானுடைய அரண்மனை, வேட்டையாடும் இடங்கள் முதலியவற்றைப் பற்றியும் கூறியுள்ளார். அவருடைய கூற்றின்படி பாமினி இராச்சியத்தில் மக்கள்தொகை அதிகமாக இருந்ததென நாம் உணரலாம்.

## மாமூதுகவானுடைய சீர்திருத்தச் செயல்கள்

மாமூதுகவானுடைய காலத்திற்குமுன் பாமினி இராச்சியம் நான்கு பெரும் தரப்புகளாகப் (பிரிவுகளாகப்) பிரிக்கப் பெற்றிருந்தது. ஒவ்வொரு தரப்பும் ஒரு தரப்புதார் (ஆளுநர்) வசம் ஒப்படைக்கப் பெற்றிருந்தது. இந்த ஆளுநர்களுக்குப் பல விதமான அதிகாரங்கள் இருந்தன. மாகாணங்களின் பரப்பளவும் மிகுதியானதாக இருந்தது. முன்பிருந்த நான்கு மாகாணங்களும் இரண்டிரண்டு மாகாணங்களாகப் பிரிக்கப்பெற்றன. விஜயபுரி, ஜுன்ஞர், மாகூர், இராஜமகேந்திரி என்ற நான்கு புதிய மாகாணங்கள் தோற்றமுற்றன. ஒவ்வொரு மாகாணத்திலும் இருந்த முக்கியமான ஓர் அரணைத்தவிர மற்ற இடங்கள் எல்லாம் சுல்தானுடைய நேரடியான ஆட்சியில் கொண்டு வரப்பெற்றன. அவ்விடங்களில் சுல்தானுடைய அலுவலாளர் களும் படைவீரர்களும் நிலையாக அமர்த்தப்பெற்றனர். மத்திய

அரசாங்கத்தின் அதிகாரம் வலிமையடைந்தது. இதற்குமுன் அயல்நாட்டு முஸ்லிம்களின் செல்வாக்கு நிறைந்திருந்த இடங்களில், அவர்களுடைய ஆதிக்கம் குறைந்தது. தெலுங்கான மாகாணத்தில் ஆட்சிபுரிந்த மாலிக் ஹாசன் என்பார் மாமூதுகவானுடைய பரமவிரோதியாக மாறிவிட்டார்.

பிற்காலத்தில் இராஜா தோடர்மால், மாலிக் அம்பார் முதலிய அறிஞர்கள் பின்பற்றிய நிலவரிச் சீர்திருத்த முறையையும் மாமூதுகவான் பாமினி இராச்சியத்தில் உண்டாக்கினர். அதன்படி நிலங்கள் ஒரேவிதமான அளவு கோலால் அளக்கப்பெற்று, நிலவரி இன்னதென்று வரையறை செய்யப்பெற்று, நிலவரி, நாணயமாக வசூல் செய்யப்பெற்றது.

சேனவீரர்களின் ஊதியம் அதிகரிக்கப்பெற்று, சேனையின் கட்டுப்பாடும் அதிகரித்தது. '1830ஆம் ஆண்டில் இந்தியப் படைவீரர்களுக்கு அளித்த ஊதியத்தைக்காட்டிலும், 1470-ல் பாமினி இராச்சியப் படையினர் ஊதியம் பெற்றனர்' எனக் கூறலாம். மாகாணத் தலைவர்களும் தங்களுடைய ஊதியத்திற்கு ஏற்றாற்போன்ற படைவீரர்களை வைத்துக்கொள்ளும்படி வற்புறுத்தப்பெற்றனர். அவ்விதம் செய்யாத மாகாணத் தலைவர்களின் ஊதியங்கள் குறைவுற்றன. 'மேற்கூறப்பெற்ற சட்டதிட்டங்களால், பாமினி இராச்சியமெங்கும் அமைதி நிலவியது. அரசாங்கத்தின் செல்வாக்கும் தலைமையும் ஓங்கின. நீதியும் நியாயமும் நிலைபெற்றன. மாமூதுகவானுடைய பெருமையும் சிறப்பும் வளர்ந்தோங்கியதுபோல் அவருடைய எதிரிகளும் தோன்றினர்' என பெரிஷ்டா கூறியுள்ளார். அரசாங்கத்தின் எல்லாவிதமான இலாகாகளிலும் மாமூது கவானுடைய சீர்திருத்தச் செயல்கள் காணப்பெற்றன. கல்வி வளர்ச்சியைக் கருதி பீதார் நகரத்தில் ஓர் உயர்தரக் கல்லூரி அமைக்கப்பெற்றது. இலஞ்சம் பெறுதல், கைக்கூலி வாங்குதல் முதலிய ஊழல்கள் அகற்றப்பெற்றன.

மேற்கூறப்பெற்ற சீர்திருத்தச் செயல்களினால் மாமூது கவான் தன்னுடைய எதிரிகளையும் அதிகப்படுத்திக்கொண்டார். அவர்மீது அரசியல் துரோகக் குற்றத்தைச் சாட்டுவதற்கு, அவர்கள் தக்கதொரு சதித்திட்டத்தை உருவாக்கினர். மாமூது கவானுக்குத் தெரியாமல் அவருடைய அரசியல் முத்திரையை ஒரு வெற்றுக்காகிதத்தில் பதித்து அதில் ஒரு கடிதமும் எழுதப்பெற்றது. அக் கடிதத்தில் ஒரிசா நாட்டரசனை, பாமினி இராச்சியத்தின்மீது படையெடுக்கும்படி மாமூதுகவான் தூண்டி

விடுவதாக எழுதப்பெற்று, அக் கடிதமும் சுல்தான் முகம்மது விடம் தக்கசமயத்தில் காட்டப்பட்டது. உண்மையறியாத சுல்தான் முகம்மது, கவான்மீது அளவிற்குமீறிய சினங் கொண்டு அவரைத் தன்னுடைய முன்னிலைக்கு அழைத்தான். மாமூதுகவானிடம் இராசத்துரோகத்திற்கு ஏற்ற தண்டனை என்னவென்று கேட்க, அவர், அது கொலைக்குற்றமாகும் எனப் பதிலளித்தார். அப்பொழுது மாமூதுகவானுடைய முத்திரை யிட்ட கடிதத்தை அவரிடம் காட்டினன். மாமூதுகவான் முத்திரை தன்னுடையதாயினும் தான் அந்தக் கடிதத்தை எழுதவில்லையென வாதாடினர். ஆய்ந்து ஓய்ந்து பாராமல் மாமூதுகவானைச் சிரச்சேதம் செய்துவிடும்படி உத்தரவிட்டான் சுல்தான். பாமினி சுல்தானுடைய நல்வாழ்வுக்காகவும், பாமினி இராச்சியத்தின் நன்மைக்காகவும் தன்னுடைய வாழ்நாள் முழுவதையும் தியாகம் செய்தவரும், நன்றியறிவும் இராஜ விசுவாசமும் நிரம்பியவருமான மாமூதுகவான், வீணான பழிச் சொல்லுக்கும் செய்யாத குற்றத்திற்கும் பலியாகித் தன்னுடைய அரசனல் அநியாயமாகக் கொலையுண்டார். வாழ்க்கையில் தூய்மையும், தெய்வபக்தியும் நிறைந்த கவான் அநியாயமாகக் கொலைசெய்யப் பெற்றார்.

மாமூதுகவான் இறந்த பிறகு அவருடைய இருப்பிடத்தை சுல்தானுடைய சேனைவீரர்கள் கொள்ளையடிப்பதற்காகச் சென்றனர். கவானுடைய காரியதரிசி தன்னுடைய தலைவன் தன்னுடைய பொருள்களையெல்லாம் தர்மத்திற்கு வாரி வழங்கி விட்டதாகவும், தன்னிடத்தில் ஒன்றும் வைத்துக்கொள்ள வில்லை என்றும் கூறியதை அவர்கள் நம்ப மறுத்தனர். சுல்தானை நேரில் சந்தித்த காரியதரிசி கவானைக் கொலை செய்தது மன்னிக்க முடியாத பெருங்குற்றமென்றும், துரோகச் செயல் நிறைந்த கடிதத்தைக் கவானுடைய விரோதிகளே எழுதினர் என்றும் கூறினர். அப்பொழுதுதான் சுல்தான் முகம்மது தான் அவசரப்பட்டுச் செய்த செயலுக்கு மிக்க வருத்தமுற்றான். தன்னை மாமூதுகவானுடைய எதிரிகள் ஏமாற்றியதைப் புரிந்துகொண்டு தன்னைத் தானே சபித்துக் கொண்டான். அவனுடைய அமைச்சர்களும் ஏவலாளர்களும் அவனுக்கருகில் செல்வதற்கும் பயந்தனர். அவசரப்பட்டுச் செய்த தீச்செயலை உன்னிஉன்னி மனமுடைந்து பிரோசாபாத் என்னுமிடத்திற்குச் சென்று, மதுக்குளத்தில் மூழ்கி தன்னுடைய துன்பத்தை மறப்பதற்கு முயன்றான். 1482ஆம் ஆண்டு மார்ச்சு மாதத்தில் மாமூதுகவான் தன்னைக் கொன்றதாகக் கூவிக்கொண்டே உயிர் துறந்தான்.

## மாமூத்ஷா (1482—1578)

மூன்றும் முகம்மதுவிற்குப் பிறகு அவனுடைய மகன் மாமூத்ஷா, தன்னுடைய இளமையிலேயே பாமினி சுல்தான் பதவியை அடைந்தான். தகுந்த வயதுவந்த பிறகு சித்தப் பிரமை பிடித்து அரசகாரியங்களைக் கவனிக்காமல் வீண்காலம் கழித்தான். நெடுநீர், மறதி, மடி, துயில் என்ற தீயகுணங் களைக் கைக்கொண்டு கள்ளுண்டு களித்தான். மதுபானம் அருந்துவதும், மதுக்கடைகளில் போரிட்டுக் கொண்டு மாளுவதும் மக்களுடைய முக்கியமான தொழில்களாயின. அயல்நாட்டு உள்நாட்டு இஸ்லாமிய கட்சிப்பூசல்கள் நாடெங்கும் பரவின. மாகாணத் தலைவர்கள் எல்லோரும் சுல்தான் மாமூத்ஷாவின் ஆணையை மதிக்காது சுயாட்சி செலுத்தலாயினர். பீதார் நகரத்தைச் சூழ்ந்திருந்த நிலப் பகுதிகளில் மாத்திரம் சுல்தானுடைய ஆட்சி நிலவியது. மாமூது ஷாவும், அவனுக்குப்பின் பதவியெய்திய நான்கு சுல்தான் களும் காசிம் ப்ரீத் என்பவனுக்கும், அவனுடைய மகன் அமீர் அலி ப்ரீத் என்பானுக்கும் விளையாட்டுப் பொம்மைகளாக இருந்தனர். கலிம் உல்லாஷா என்ற இளைஞன் 1524-ல் சுல்தான் பதவியை ஏற்று மூன்றுண்டுகள் கழித்து உயிர் துறந்தான். அவனோடு பாமினி சுல்தான்களுடைய ஆட்சியும் முடிவுற்றது.

## பாமினி இராச்சியத்தின் சிதைவு

மூன்றும் முகம்மதுவின் ஆட்சிக்குப் பிறகு பாமினி இராச்சியம் சிதைவுற்று ஐந்து சிற்றரசுகளாகப் பிரிந்தது. மாமூது கவானுடைய காலத்தில் மிகத்திறமை வாய்ந்த மாகாணத் தலைவராக யூசப் அடில்ஷா என்பவர் விளங்கினர். 1489ஆம் ஆண்டில் விஜயபுரியைத் தன்னுடைய சுயஆட்சியில் கொண்டுவந்து விஜயபுரி அடில்ஷாகி அரசகுலத்தைத் தோற்றுவித்தார். இவர் ஷியா இனத்தைச் சேர்ந்த முஸ்லீம் ஆயினும், பிற சமயத்தாரையும் வகுப்பைச் சேர்ந்தவர்களையும் வெறுக்கவில்லை. இந்த சுல்தானுடைய சபையில் பாரசீகம், துர்க்கிஸ்தானம், மத்திய ஆசியா முதலிய நிலப்பகுதிகளில் இருந்து பல கல்விமான்கள் வந்து கலைத்தொண்டாற்றினர். யூசப் அடில்ஷாவிற்குப் பிறகு இஸ்மேயில், இப்ராஹிம், அலி, இரண்டாவது இப்ராஹிம் என்ற நான்கு சுல்தான்கள் விஜய புரியை ஆட்சிபுரிந்தனர். அவர்களுக்குள் 1579 முதல் 1625 வரையில் ஆட்சிபுரிந்த இப்ராஹிம் மிகச் சிறந்த சுல்தானுகக் கருதப்பெறுகிறூர். 1618ஆம் ஆண்டில் பீதார்நாடு

விஜயபுரியுடன் இணைக்கப் பெற்றது. 1686ஆம் ஆண்டில் விஜயபுரியை மொகலாயப் பேரரசர் அவுரங்கசீப் வென்று தன்னுடைய பேரரசில் சேர்த்துக் கொண்டார்.

## அகமது நகரம்

நைசாம் ஷாஹி குலத்தைச் சேர்ந்த மாலிக் அகமது என்பாரால் அகமது நகர இராச்சியம் தோற்றுவிக்கப்பட்டது. மாலிக் அகமதுவின் தந்தை பாமினி சுல்தானுக்கு அமைச்சராகப் பணியாற்றினர். 1490-ல் மாலிக் அகமது சுயேச்சையடைந்து அகமது நகரத்தை அமைத்தார். 1508ஆம் ஆண்டில் பர்ஹான் நைசாம்ஷா என்பார் சுல்தான் பதவியை வகித்தார். ஹுசேன் நைசாம்ஷா என்பார் மூன்ருவது சுல்தாருவார். 1565ஆம் ஆண்டில் விஜயநகரப் பேரரசிற்கு எதிராகத் தோன்றிய இஸ்லாமியக் கூட்டுறவில் ஹுசேன் பங்கு கொண்டார். 1636-ல் அகமதுநகர் மொகலாயப் பேரரசுடன் இணைக்கப் பெற்றது.

## பேரார்

பேராரில் தோன்றிய இமாத் ஷாஹி அரசை இமாத்ஷா என்பார் தோற்றுவித்தார். 1574ஆம் ஆண்டில் இந் நாடு அகமது நகரத்தின் ஒருபகுதியாயிற்று.

## கோல்கொண்டா

பாமினி இராச்சிய அரசாங்க அலுவலரான குத்புஷா என்பவரால் கோல்கொண்டா அரசு உண்டாக்கப்பெற்றது. பாமினி சுல்தான்களுடைய ஆட்சியில் குத்புஷா என்பார் தெலுங்காரு பகுதியில் ஆளுநராக இருந்தார். 1512 ஆம் ஆண்டில் சுயேச்சையெய்தி 1543 வரையில் ஆட்சிபுரிந்தார். இப்ராஹிம் குத்புஷா என்பார் காலத்தில் அவர் விஜய நகரத்திற்கு எதிராகப் போரிட்டார். 1687-ல் கோல்கொண்டா இராச்சியம் மொகலாயப் பேரரசோடு சேர்க்கப்பெற்றது.

# 18. விஜயநகர வரலாறு

## வரலாற்று ஆதாரங்கள்

விஜயநகரப் பேரரசின் வரலாற்றை எழுதுவதற்குக் கல்வெட்டுகளும், செப்பேடுகளுமே மிக்கத் துணை செய்கின்றன. விஜயநகரத்தைத் தோற்றுவித்த சங்கம வமிசத்தினருடைய கல்வெட்டுகளும், செப்பேடுகளும் அவர்களுடைய மரபு விளக்கத்திற்கும், ஆட்சியாண்டுகளை நிச்சயம் செய்வதற்கும் மிக்க உதவியாக இருக்கின்றன. சங்கம, சாளுவ வமிசத்து அரசர்கள் மேற்கொண்ட பட்டங்களையும், அவர்களுடைய சமயம், ஆட்சியின் நிலப்பரப்பு முதலியவற்றையும் உணர்வதற்குக் கல்வெட்டுகளே துணையாக உள்ளன. முதலாவது ஹரிஹரனுடைய யாகப்பள்ளி செப்பேடுகளும், இரண்டாவது சங்கமனுடைய பித்ரகுண்டா செப்பேடுகளும் மிக உபயோகமுள்ளவையாகும். சங்கம வமிசத்து அரசர்களுடைய மரபு விளக்கமும், மாயனருடைய தம்பியாகிய சாயனருடைய சேவைகளும் பித்ரகுண்டா செப்பேடுகளில் கூறப்பெற்றுள்ளன. சிராவண பெல்கோலா என்னுமிடத்தில் கிடைத்த இராமானுஜக் கல்வெட்டு 1368ஆம் ஆண்டில் முதலாம் புக்கதேவன் சமண சமயத்தவருக்கும், வைணவ சமயத்தாருக்கும் தோன்றிய வேற்றுமையை விலக்கிய செய்தியைக் கூறுகிறது. மாயூரத்திற்கு அருகிலுள்ள கோமல் என்னுமிடத்தில் கிடைத்த செப்பேடுகள்,சோழநாட்டில் முதன் முதலில் விஜயநகர ஆட்சி பரவிய செய்தியைக் கூறுகிறது. இரண்டாவது புக்கனுடைய மகன் குமாரகம்பணனுடைய கல்வெட்டுகள் தமிழ்நாட்டில் 132-க்குமேல் அகப்பட்டுள்ளன. இக் கல்வெட்டுகள், குமாரகம்பணன் தமிழ்நாட்டை வென்று விஜயநகர ஆட்சியில் கொண்டுவந்த செய்திகளை விளக்குகின்றன.

## இலக்கியச் சான்றுகள்

குமாரகம்பணனுடைய மனைவி கங்காதேவி வடமொழியில் எழுதிய மதுராவிஜயமும், பாண்டியர் வரலாறு, கொங்குதேச ராசாக்கள், மதுரை திருப்பணி மாலை, மிருத்துஞ்சய சுவடிகள், கோயில்ஒழுகு, பிரபன்னாமிர்தம், திவ்யசூரி சரிதம் முதலிய

தமிழ்நூல்களும் முக்கிய இலக்கிய சான்றுகளாகும். கங்காதரன் என்பார் எழுதிய கங்காதாசப் பிரதாபவிலாசம் என்ற வடமொழிநூல் இரண்டாம் தேவராயருக்கும், பாமினி சுல்தானுக்கும் இடையே நிலவிய உறவை விளக்குகிறது. பீன வீரபத்திரர் எழுதிய ஜெய்மினி பாரதமும், நந்திமல்லையாவும், கண்டசிங்கையாவும் எழுதிய வராகபுராணம் என்ற நூலும், சாளுவ, துளுவ வமிசத்து அரசர்களுடைய வரலாற்றை உணர்வதற்குத் துணைசெய்கின்றன.

## பெரிஷ்டாவும், டபடாபாவும்

இவ்விரு இஸ்லாமிய வரலாற்று ஆசிரியர்களுடைய வரலாற்று நூல்கள் விஜயநகரத்துப் பேரரசர்களுக்கும், பாமினி சுல்தான்களுக்கும் இடையே நடந்த போர்கள், மற்ற உறவுகள் முதலியவற்றை விளக்குகின்றன. ஆயினும், இவ்விருவரும் பாமினி சுல்தான்களுடைய பெருமைகளைப் புகழ்ந்தும், விஜய நகர அரசர்களை இழித்துக்கூறியும் எழுதியுள்ளனர். விஜய நகர அரசர்களைப் பாமினி சுல்தான்களுக்கு அடங்கி கப்பம் செலுத்தியவர்களாக இவர்கள் சித்தரித்துள்ளனர். விஜய நகரத்து அரசர்களுடைய மரபு விளக்கத்தையும், சரியான கால எல்லையையும் இவர்கள் உணர்ந்து கொள்ளவில்லை. பிற்காலத்தில் ஆண்ட அரசர்களின் பெயரை முதலில் கூறியும், சேனைத்தலைவர்களின் பெயர்களை அரசர்களின் பெயரோடு சேர்த்துக் குழப்பியும் தங்களுடைய வரலாறுகளை எழுதியுள்ளனர். ஆயினும், விஜயநகரத்திற்கும், பாமினி அரசிற்கும் நிலவிய அரசியல் உறவை நன்கு உணர்ந்து கொள்வதற்கு இந் நூல்கள் துணைசெய்கின்றன.

## அயல்நாட்டுச் சான்றுகள்

வட ஆப்பிரிக்காவில் உள்ள மொராக்கோ நாட்டின் தாஞ்சியர் என்னும் ஊரில் பிறந்த இபன்பதூதா என்பார், முகம்மது துக்ளக்கின் ஆட்சிக்காலத்தில் டெல்லி நகருக்கும், மதுரை சுல்தான்களுடைய ஆட்சியில் மதுரைக்கும் வந்து தான் கண்டறிந்த செய்திகளை வரைந்துள்ளார். மதுரை சுல்தானுக்கும், மூன்றும் வல்லாளதேவனுக்கும் நடந்த போரைப்பற்றியும், மதுரை சுல்தான்களுடைய கொடுங் கோன்மைச் செயல்களைப் பற்றியும் இபன்பதூதாவின் கூற்றுக்கள் மிக்க நம்பத்தக்கவையாகும். வெனிஸ்நாட்டு வழிப்போக்கர் நிக்கோலோ கான்டி என்பாரும், கள்ளிக் கோட்டை சாமோரின் அரசரிடம் தூதராக வந்த பாரசீக




படம் 9.

**விஜயநகரப் பேரரசும் தக்காணத்து சுல்தான்களுடைய நாடுகளும்**

நாட்டவராகிய அப்துர்ரசாக்கும் எழுதிய குறிப்புகளும் மிக்கத் துணைசெய்கின்றன. ரஷ்யாவில் இருந்து பாமினி இராச்சியத்திற்கு வந்த அதேனிஷியஸ் நிகிதின் என்பாருடைய குறிப்புகளும், வர்த்திமா என்ற இத்தாலியருடைய குறிப்புகளும் உள்ளன. இவற்றையெல்லாம்விட, டாமிங்கோஸ் பீயாஸ், பெர்னோ நூனிஸ் என்ற இரண்டு போர்த்துக்கீசிய வணிகர்கள் எழுதியுள்ள வரலாறுகளும், மானுவல் பாரதாஸ் என்பார் எழுதிய வரலாற்றுச் செய்திகளும்தான் விஜயநகர வரலாற்றிற்கு ஆணிவேர்போல் உள்ளன. பீயாஸ் என்பாரின் வரலாற்றில் இருந்து கிருஷ்ணதேவராயருடைய பெருமையையும், வீரச் செயல்களையும், அவருடைய வாழ்க்கையையும், தோற்றப் பொலிவையும் நாம் அவரை நேரில் காண்பதுபோல் அறிந்து கொள்ளலாம். நூனிஸ் என்பாருடைய வரலாறு சங்கம, சாளுவ, துளுவ வமிசத்து அரசர்களுடைய வரலாற்றைத். தொடர்ச்சியாக அச்சுததேவராயர் ஆட்சிவரையில் கூறுகிறது. துங்கபத்திரை நதிக்கரையில் உள்ள ஹம்பி என்னும் இடத்தில் காணப்பெறும் விஜயநகரத்தின் சிதைவுகளும், இடிந்துபோன சிலைகளும் கோபுரங்களும் கோவில்களும், அரண்மனைகளும், மதில்களும் விஜயநகரப் பேரரசின் நினைவுச் சின்னங்களாக இன்றும் உள்ளன. தென்னிந்தியாவில் விஜய நகரத்து அரசர்களால் அமைக்கப்பெற்ற கோவில்கள், கோபுரங்கள், ஆயிரக்கால் மண்டபங்கள், கலியாண மண்டபங்கள் ஆகியவை இன்றும் நாம் கண்டுகளிக்கும் படியான நிலையில் உள்ளன. இவற்றிலிருந்து விஜயநகர மன்னர்கள் ஆட்சிக்காலத்தில் நிலைபெற்றிருந்த சிற்பக்கலை, கட்டடக்கலை முதலியவற்றை நாம் உணர்ந்துகொள்ளலாம்.

## விஜயநகரத்தின் தோற்றம்

விஜயநகர அரசை தோற்றுவித்துப் பின்னர் அதையொரு தென்னிந்தியப் பேரரசாக மாற்றியமைத்த சங்கம வமிசத்து மன்னர்களின் வரலாற்றைப்பற்றி இருவேறு கருத்துகள் பேசப்படுகின்றன. அறிஞர் N. வெங்கட்டரமணய்யாவும், பேராசிரியர் நீலகண்ட சாஸ்திரியார் அவர்களும், சங்கமனின் புதல்வர்களாகிய ஹரிஹரனும், புக்கனும் ஆந்திர இனத்தைச் சேர்ந்தவர்கள் என்றும், காகதீய வமிசத்தைச் சேர்ந்த பிரதாபருத்திரதேவனுடைய அரசவையில் அலுவல் பார்த்து, பின்னர் 1323ஆம் ஆண்டில் வாரங்கல்நாட்டை இஸ்லாமியர் கைப்பற்றிய பிறகு கம்பிலி என்னும் நாட்டிற்குச்

சென்றனர் என்றும் கூறுவர். 1327ஆம் ஆண்டில் கம்பிலி நாட்டையும் முகம்மது துக்ளக் கைப்பற்றிய பிறகு, மேற்கூறப் பெற்ற ஹரிஹரனும், புக்கனும் கைதிகளாகி டெல்லி நகரத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டனர். டெல்லியில் அவ்விருவரும் இஸ்லாம் சமயத்தில் சேர்ந்ததாகவும் ஒரு செய்தி வழங்குகிறது. கம்பிலி நாட்டு மக்கள் இஸ்லாமிய ஆளுநராகிய மாலிக்முகம்மது என்பாருக்கு எதிராகக் கலகம் செய்தனர். ஹரிஹரன், புக்கன் என்ற இருவர்மீதும் மிகுந்த நம்பிக்கை வைத்திருந்த முகம்மது துக்ளக் இவர்களைக் கம்பிலிநாட்டிற்குத் திரும்ப அனுப்பி வைத்தார். அவர்களிடம் கம்பிலிநாட்டின் அரசு ஒப்படைக்கப் பட்டது. அவர்கள் கம்பிலிநாட்டின் ஆட்சியைக் கைப்பற்றி அமைதியை நிலைநாட்டினர். பின்னர் இஸ்லாமிய சமயத்தைக் கைவிட்டு, சுதந்திரமடைந்து விஜயநகர அரசிற்கு அடிகோலினர்.[1]

மேற்கூறப்பெற்ற செய்திகளை மறுத்து, ஹரிஹரனும், புக்கனும் ஆந்திரர்கள் அல்லவென்றும், அவர்கள் கன்னடியர்கள் என்றும் B. A. சாலட்டோர், ஹீராஸ் பாதிரியார், திரு சத்தியநாதய்யர் முதலிய வரலாற்று அறிஞர்கள் சாதிப்பர். இவர்களுடைய கருத்தின்படி சங்கமனுடைய புதல்வர்களாகிய ஹரிஹரனும், புக்கனும் கன்னடிய இனத்தைச் சேர்ந்த ஹொய்சளநாட்டு வல்லாள அரசர்களாகிய மூன்றுவது, நான்காவது வல்லாளதேவர்களுக்கு அடங்கி ஆட்சிபுரிந்த சிற்றரசர்களாக இருந்தனர். மூன்றும் வல்லாளதேவனுடைய மகன் நான்காம் வல்லாளதேவனின் மறைவிற்குப் பிறகு, அவர்களுடைய நாட்டைத் தங்கள் வசத்திற் கொண்டுவந்து விஜயநகர அரசைத் தொடங்கினர் என்றும் கூறுவர். மறைந்த மாநகர் என்ற வரலாற்று நூலை எழுதிய இராபர்ட் சிவெல் என்ற ஆங்கில வரலாற்றறிஞர் தன்னுடைய முதனூலில், விஜயநகரத்தின் தோற்றத்திற்கு ஆதரவாக வழங்கப்பெற்ற ஏழுவிதமான மரபுச் செய்திகளைப் பின்வருமாறு தொகுத்துக் கூறியுள்ளார்.

1. வாரங்கல்நாட்டின் அரசசேவையில் அமர்ந்திருந்த ஹரிஹரனும், புக்கனும் ஒருசிறிய குதிரைப்படையுடன் 1323ஆம் ஆண்டில் ஏற்பட்ட இஸ்லாமிய படையெழுச்சியிலிருந்து தப்பித்து ஆனெகொந்தி என்ற இடத்திற்குச் சென்று, மாதவ வித்யாரண்யர் என்ற முனிவருடைய உதவியால் விஜய நகரத்தை அமைத்தனர் என்பது முதல் செய்தியாகும்.

[1] K. A. N. Sastri, 'A History of South India', p. 227

2. இரண்டாவது செய்தியின்படி, வாரங்கல்நாட்டை இஸ்லாமியர் பிடித்துத் தங்களுடைய ஆட்சியை நிலைநிறுத்திய பிறகு ஹரிஹரனும், புக்கனும் இஸ்லாமிய ஆளுநரிடம் அலுவல் பார்த்தனர் என்றும், பின்னர் அவ்விருவரும் 1310ஆம் ஆண்டில் மாலிக்கபூரின் படையுடன் சேர்த்து மூன்றும் வல்லாள தேவனுக்கு எதிராக அனுப்பப்பெற்றனர் என்பதுமாகும். இவ்விருவரும் மூன்றும் வல்லாளதேவனால் தோற்கடிக்கப்பெற்று ஆனைகொந்தி நகருக்குத் தப்பித்துச் சென்று, மாதவ சாரியாரைக் கண்டு அவருடைய உதவியினால் விஜயநகரத்தை அமைத்தனர் என்பதாகும்.

3. மூன்றாவது செய்தி, ஹரிஹரனும், புக்கனும் வாரங்கல் நாட்டில் இருந்தபொழுது இஸ்லாம் சமயத்தைத் தழுவும்படி வற்புறுத்தப்பட்டனர் என்றும், அங்கிருந்து ஆனை கொந்திக்குச் சென்று இஸ்லாமியருக்கு எதிராக மற்ற இந்து தலைவர்களுடன் சேர்ந்து, தென்னிந்திய கலாச்சாரத்தை இஸ்லாமியருடைய பிடியினின்றும் காப்பாற்றுவதற்கு விஜயநகர அரசை ஏற்படுத்தினர் என்பதாகும்.

4. மாதவ வித்யாரண்யரே பெரும் புதையல் ஒன்றைப் பெற்று அதைக்கொண்டு விஜயநகரத்தை அமைத்துத் தானே ஆட்சிபுரிந்த பிறகு, குறும்பர் இனத்தைச் சேர்ந்த ஒரு தலைவனிடம் ஒப்படைத்ததாகவும், அத் தலைவனே சங்கம வமிசத்து முதல்வனாவன் என்றும், நான்காவது செய்தியொன்று கூறுகிறது.

5. போர்த்துக்கீசிய வரலாற்றாசிரியர் கூட்டோ (Couto) என்பார் வேறுவிதமாக ஐந்தாவது செய்தியொன்றைக் கூறுவர். 'துங்கபத்திரை நதிதீரத்திலுள்ள மலைப்பிரதேசத்தில் மாதவர் என்ற சந்நியாசி ஒருவர் வாழ்ந்தார். புக்கன் என்ற ஆட்டிடையன் ஒருவன் அவருக்குத் தினந்தோறும் உணவு கொண்டுவந்து கொடுத்து உதவி செய்தான். இந்த சந்நியாசி புக்கனிடத்தில் அன்புகொண்டு, 'தென்னிந்தியா முழுவதற்கும் நீ முதலில் அரசனாகவும், பின்னர் சக்கரவர்த்தியாகவும் விளங்குவாய்' என்று முன்கூட்டியே உரைத்ததற்கிணங்க, புக்கராயன் விஜயநகரத்தைத் தோற்றுவித்தான் என்பதாகும்.

6. மற்றொரு செய்தியின்படி ஹரிஹரனும், புக்கனும், ஹொய்சள வல்லாள அரசர்களுக்கு அடங்கிய நிலமானியக் காரர்களாக இருந்து பின்னர் அவர்களுடைய அரசுரிமையை, மேற்கொண்டனர் என்பதாகும்.

7. அதேனிஷியஸ் நிகிதின் என்ற ரஷ்ய வழிப்போக்கர் வேறுவித செய்தியைக் கூறியுள்ளார். ஹரிஹரனும், புக்கனும் வானவாசி நாட்டையாண்ட கடம்பர் அல்லது கதம்பர் என்ற அரசமரபைச் சேர்ந்தவர்கள் என்று கூறியுள்ளார்.

மேற்கூறப்பெற்ற செய்திகளெல்லாவற்றையும் தொகுத்துக் கூறியபின்னர் இராபர்ட் சிவெல் என்பார், ஹரிஹரனும், புக்கனும் வாரங்கல்நாட்டுக் காகதீய மன்னர்களிடம் அரச சேவையில் இருந்தார்கள் என்பதை ஒப்புக்கொண்டு, ஆனால், அவர்கள் ஆந்திர இனத்தைச் சேர்ந்தவர்களா அல்லது கன்னடிய இனத்தைச் சேர்ந்தவர்களா என்பதை உறுதிப் படுத்தாது விட்டுவிட்டார்.

வாரங்கல்நாட்டை வென்று தன்னடிப்படுத்திய முகம்மது துக்ளக், ஹரிஹரன், புக்கன் என்ற இரு சகோதரர்களையும் சிறையிலிருந்து விடுதலை செய்து கம்பிலிநாட்டிற்கும், ஆனெகொந்திக்கும் அரசர்களாக நியமித்தார் என்று கூறுவது நம்பத்தகுந்த செய்தியாகாது. அவ்விதம் வேறு எவருக்கும் முகம்மது துக்ளக் உதவி செய்ததாக அவருடைய வரலாற்றில் நாம் கேள்விப் பட்டதில்லை. தன்னுடைய சிற்றரசர்களையும், ஆளுநர்களையும் கொடுமைப்படுத்தியதாக அறிகிறோமேதவிர, சமாதானமுறையில் கலகங்களை அவர் அடக்கியதற்கு ஏற்ற சான்றுகள் கிடையாது. ஹரிஹரனும், புக்கனும் வாரங்கல்நாட்டுப் பிரதாபருத்திர தேவனிடத்தில் அலுவல் பார்த்திருக்கலாம். ஆயினும், அவர்கள் ஆந்திர இனத்தைச் சேர்ந்தவர்கள் என்பதை உறுதி செய்ய முடியாது. ஏனெனில், அவர்களால் வழங்கப்பெற்ற கொடைகளைக் கூறும் கல்வெட்டுகளும்,செப்பேடுகளும் கன்னட மொழியில் எழுதப்பெற்றுள்ளன.

மூன்றும் வல்லாளதேவன் துங்கபத்திரை நதிக்கரையில் எதிரிகளால் சுலபமாகத் தாக்க முடியாத இடத்தில் ஒரு நகரை அமைத்து, வடநாட்டிலிருந்த முஸ்லிம்களின் படையெடுப்புகளில் இருந்து தன்னுடைய ஹொய்சளநாட்டைக் காப்பாற்றுவதற்காக ஏற்பாடுகள் செய்தான் என்ற பெரிஷ்டாவின் கூற்றை நாம் நுணுகிப் பார்த்தல் வேண்டும். துங்கபத்திரை நதியின் கரையில் உள்ளதும், விருபாக்ஷர் கோவிலுக்கு இருப்பிடமாகவும் உள்ள ஹம்பி என்னும் இடமே மூன்றும் வல்லாளன் அமைத்த நகரமாகும். அந் நகரத்திற்குத் தன்னுடைய மகன் நான்காம் வல்லாளனுடைய பெயரைத் தொடர்புபடுத்தி வீரவிஜய விருபாக்ஷபுரம் என்ற பெயரிட்டு

அழைத்தனன். 1339ஆம் ஆண்டு பொறிக்கப்பெற்ற கல்வெட்டு ஒன்று, மூன்றும் வல்லாளன் ஹம்பி-ஹஸ்திருவதியில் இருந்ததாகவும், தன்னுடைய மகன் நான்காம் வல்லாளனுக்கு அந் நகரத்தில் முடிசூட்டு விழா நடத்தியதாகவும் கூறுகிறது. ஹரிஹரனும், புக்கனும் ஹொய்சள வல்லாள அரசர்களுக்கு அடங்கிய சிற்றரசர்களாகவும், நிலமானியக்காரர்களாகவும் இருந்தனர் எனக் கருதுவதற்கு ஏற்ற கல்வெட்டுச் சான்றுகள் நிரம்ப உள்ளன.

1348ஆம் ஆண்டில் எழுதப்பெற்ற கல்வெட்டு ஒன்றில் முதலாவது ஹரிஹரதேவன், ஹொய்சள வமிசத்தை மேன்மையுறும்படி செய்த தலைவன் எனப் புகழப்படுகிருன். 1352ஆம் ஆண்டில் பொறிக்கப்பெற்ற மற்ருெரு கல்வெட்டு, முதலாம் புக்கராயன் துவாரசமுத்திரத்திலிருந்து செங்கோல் செலுத்தியதாகக் கூறுகிறது.

மற்றும் இரண்டு கல்வெட்டுகள் ஹம்பி நகருக்கு, ஹோசப் பட்டினம், வித்யாரண்யநகர் என்ற பெயர்கள் வழங்கியதைக் குறிப்பிடுகின்றன. ஹோசப்பட்டினம் என்ருல் 'புதிய பட்டினம்' என்ற பொருளுடையதாகும். ஹரிஹரனும், புக்கனும் அந் நகரத்தின் பாதுகாவலைப் புதுப்பித்திருக்க வேண்டும். மாதவ வித்யாரண்யர், ஹரிஹரனுக்கும், புக்கனுக்கும் தென்னிந்திய கலாச்சாரத்தையும், சைவம், வைணவம் ஆகிய இந்து சமயங்களையும், அத்துவிதம் முதலிய இந்திய மெய்க்கலைகளையும் இஸ்லாமியர்கள் அழித்துவிடாத முறையில் உதவி செய்திருக்க வேண்டும். ஆகையால் அவருடைய உதவியை மறக்காமல் தங்களுடைய தலைநகருக்கு வித்யாரண்யநகர் என்ற பெயரையும் வைத்திருந்தனர் போலும். இதுகாறும் கூறியவற்ருல் விஜயநகரத்தை மூன்றும் வல்லாளதேவன், தன்னுடைய மகன் வீரவிஜய விருபாக்ஷ வல்லாளதேவனுடைய பெயரில் 1336ஆம் ஆண்டில் அமைத்தனன். ஹரிஹரனும், புக்கனும் இவ்விரு அரசர்களுக்கும் அடங்கிய சிற்றரசர்களாகவோ அல்லது நிலமானியக்காரர்களாகவோ இருந்தனர். 1342ஆம் ஆண்டில் மதுரை சுல்தானுடன் நடத்திய கண்ணனூர்ப் போரில் மூன்றும் வல்லாளன் முஸ்லிம் தலைவர்களின் சூழ்ச்சியினுல் பரிதாபகரமாக உயிரிழக்க நேர்ந்தது. அவனுக்குப் பிறகு அரியணை ஏறிய நான்காம் வல்லாளதேவன், மதுரை சுல்தான்களுடன் போரிட்டு உயிர்துறந்தனுே அல்லது திருவண்ணுமலையில் வழங்கும் ஒரு செய்திப்படி அண்ணுமலையாரின் அடியானுக முக்தியடைந்தனுே என்பதை உறுதியாகக் கூற முடியவில்லை.

எங்ஙனமாயினும், நான்காம் வல்லாளனுக்குப்பிறகு ஹரிஹரனும், புக்கனும் ஹொய்சள மன்னர்களின் வாரிசுகளாகவே தங்களைப் பாவித்துக்கொண்டனர். விஜயநகர ஆட்சியைக் கைப்பற்றி சங்கம வமிசத்தைத் தொடங்கினர். சங்கம வமிசத்து அரசர்கள் ஆந்திர இனத்தைச் சேர்ந்தவர்கள் அல்லர். ஹொய்சள வல்லாள அரசர்களுக்கு அடங்கிய கன்னடியர்களே என்பது தேற்றம்.

## விஜயநகரம்—இடத்தின் சிறப்பும் மகிமையும்

கி. பி. 1336ஆம் ஆண்டில் வீரவிஜய விருபாக்ஷபுரம் என்ற ஹம்பி நகரத்தை மூன்றும் வல்லாளதேவன் அமைத்தான் என்ற பரம்பரைச் செய்தியை நாம் ஒப்புக்கொள்ளலாம். பின்னர், ஹம்பிக்குக் கிழக்கே ஐந்துமைல் தூரத்தில் அழிவுற்ற நிலையில் இன்று அரசாங்கத்தாரால் பாதுகாக்கப்பெற்றுள்ள புதிய இடத்தில் விஜயநகரத்தை மாதவ வித்யாரண்யருடைய அறிவுரையின்படி ஹரிஹரனும், புக்கனும் அமைத்திருக்க வேண்டும். இந்தப் புதிய நகரம் துங்கபத்திரை நதியின் வடகரையில் அமைந்துள்ள ஆனைகொந்தி என்ற இடத்திற்கு நேர் தெற்கே அமைந்திருந்தது. இப் புதிய தலைநகரை ஹரிஹரன் அமைத்தமையைப்பற்றி நூனிஸ் ஒரு செவிவழிச் செய்தியைக் கூறியுள்ளார். 'ஹரிஹரன் ஆனைகொந்தியிலிருந்து துங்கபத்திரை நதியைக் கடந்து, வேட்டையாடுவதற்காக தன்னுடைய வேட்டை நாய்களுடன் காட்டுக்குச் சென்றார். காட்டில் சென்று வேட்டையாடும்பொழுது ஒரு முயல் தோன்றி ஹரிஹரனுடைய வேட்டை நாய்களை எதிர்த்து நின்றது. இதற்கு முன்னர் நடந்த விலங்கு வேட்டைகளில் புலிகளையும் சிங்கங்களையும் எதிர்த்துப் போரிட்ட வேட்டை நாய்கள், இந்த முயலுக்கு முன் நிற்கமாட்டாமல் பயந்து ஓடின. இதைக்கண்ட ஹரிஹரன் அந்த முயலின் வீரத்தன்மையைப் புகழ்ந்து வியப்படைந்தான். இந்த வியத்தகு சம்பவம் நடந்த இடத்தில் தன்னுடைய தலைநகரத்தை அமைக்க வேண்டும் என்று மாதவ வித்யாரண்யரோ அல்லது வேறு ஓர் அறிஞரோ ஹரிஹரனுக்கு அறிவுறுத்தியிருக்க வேண்டும்[1]".

பாமினி சுல்தான்கள் பீதார் (Bidar) நகரத்தை அமைத்ததற்கும், தமிழ்நாட்டில் பாஞ்சாலங்குறிச்சியில் கட்டபொம்ம நாயக்கருடைய மூதாதையர்கள், கோட்டையை அமைத்ததற்கும், இதேபோன்ற சம்பவங்கள் நிகழ்ந்ததாக நாம்

[1] Robert Sewell, Op. Cit., p. 287

கேள்வியுறுகிறோம். இஃது உண்மையான வரலாற்று நிகழ்ச்சி என்றும் நாம் நம்பாமல் போனாலும், விஜயநகரத்தை அமைத்ததில், இந்து சமயத்தையும், இந்துக்களுடைய 'பூர்வ மரியாதை பத்ததியையும்' காப்பாற்றித் தென்னிந்திய கலாச்சாரத்தை நிலைநிறுத்துவதற்காக விஜயநகரத்தை ஹரிஹர தேவன் அமைத்திருக்கவேண்டும் என உணரவேண்டும்.மேலும் துங்கபத்திரை நதியின் இருகரையிலும் உள்ள இடங்கள் இராமாயணத்தில் கூறப்பெறும் கிஷ்கிந்தைநாடு எனவும், வாலி, சுக்கிரீவன், அனுமான் முதலிய வானரத் தலைவர்கள் வாழ்ந்த இடம் எனவும் மக்கள் இன்றும் நம்புகின்றனர். ஆனைகொந்திக்கு அருகில் உள்ள ஒரு குளத்தைப் பம்பாசரஸ் என்றும் அழைக்கின்றனர். பம்பாசரஸ் என்ற பெயரே ஹம்பி என மாற்றம் அடைந்திருக்கவேண்டும். இதிகாச வீரர்களாகிய இராமனும் இலக்குவனும், வானரத்தலைவர்களாகிய சுக்கிரீவனோடும் அனுமானுடனும் நட்புகொண்டு, பம்பாசரசிற்கும் வந்ததாக நாம் அறிகிறோம். துங்கபத்திரை நதியின் வடகரையில் உள்ள குன்றுகள் இராமாயணத்தில் கூறப்பெற்றுள்ளன. ரிஷ்யமுக பர்வதம், மதங்க மலைகள், மலைய வந்த மலைகள் என நம்பப் பெறுகின்றன. இம்மலைகளில் வசிக்கும் வானரங்கள் இராமாயணத்தில் பேசப்பெற்றுள்ள வானரங்களின் வழிவந்தவை எனவும், இப் பகுதியில் வாழும் மக்கள் அனுமான் என்ற ஆஞ்சநேயரைத் தங்களுடைய குலதெய்வமாகவும் கொண்டு வணங்குகின்றனர். இப்பகுதியில் எங்கு பார்த்தாலும் சிதறிக் கிடக்கும் கருங்கற்களும், பாறைகளும், இலங்கையை அடைவதற்குக் கட்டப்பெற்ற அணைக்காக உடைக்கப்பட்டு, மிகுந்து போனவை எனவும் கூறப்பெறுகிறது. ஆகையால், விஜயநகரம் அமைந்த இடம் இந்துக்களுடைய முக்கிய இதிகாசமாகிய இராமாயணத்தோடும், இராமன், இலக்குவன், அனுமான் ஆகிய இதிகாச வீரர்களுடைய வாழ்வோடும் தொடர்புள்ளது ஆகும். இந்த சமயக் கருத்தும் விஜயநகரத்தை அமைப்பதற்குத் துணை புரிந்திருக்க வேண்டும்.

மேற்கூறப்பெற்ற சமய உணர்ச்சியன்றியும், விஜய நகரத்தை அன்னியர்களுடைய படையெடுப்பிலிருந்து எளிதில் பாதுகாப்பதற்கு ஏற்றஇடமாக அது இருந்ததையும் நாம் உணர வேண்டும். ஹம்பிக்கும் விஜயநகரத்திற்கும் அருகில் துங்க பத்திரை நதி வளைந்துவளைந்து பாய்கிறது. வெள்ளப் பெருக்கெடுத்துத் தண்ணீர் வேகமாகச் செல்லும் பொழுது பல நீர்ச் சுழல்கள் ஏற்படுகின்றன. நதியின் அடிப்பாகத்தில் கருங் கற்களும், பாறைகளும் நிறைந்துள்ளன. இவ்வித அபாயமுள்ள

ஆற்றை இஸ்லாமிய குதிரைப் படைகள் எளிதில் கடந்து தலைநகரத்தை முற்றுகையிடுவது எளிதல்ல. விஜயநகரம் அமைந்திருந்த இடத்தைச் சூழ்ந்து பல ஆழமான பள்ளத் தாக்குகளும், மலைமுழைகளும் உள்ளமையால் வடக்கிலிருந்து குதிரைப்படைகள் வெகுவிரைவில் படையெடுப்பதைத் தடுத்து விடக்கூடும். மேலும், விஜயநகரம் அமைந்திருந்த பல்லாரி மாவட்டத்தில்தான் ஆந்திர-சாதவாகனர்களுடைய ஆதி இருப்பிடம் அமைந்திருந்தது. வரலாற்றுக்காலத்திற்கு முந்திய ஆதிமனிதனின் வாழ்க்கையும் இவ்விடங்களில் தோன்றிய தற்குப் பல அகழ்வாராய்ச்சிச் சான்றுகளும் உள்ளன. வரலாற்றுச் சிறப்பும், இதிகாசப் பெருமையும் அமைந்த இவ்விடத்தைத் தங்களுடைய தலைநகரமாக ஹரிஹரனும் புக்கனும் தேர்ந்தெடுத்தது போற்றத்தக்க செய்தியேயாகும். இன்னும், துன்பமும் இடைஞ்சல்களும் நிறைந்த இடத்தை இன்பமும், எளிமையும் உள்ள இடமாக மாற்றுவதே மக்களுடைய சிறந்த பண்புடைமையாகும். விஜயநகரத்தை முதன்முதலில் தோற்றுவித்த சங்கமச் சகோதரர்கள் கற்பாறை யிலிருந்து தண்ணீரை எடுக்கவும், பாலைவனத்தைச் சோலையாக மாற்றவும்வல்ல நாகரிகத் தலைவர்களாவர்.

சிருங்கேரியில் அமைந்துள்ள சாரதா பீட சங்கர மடத்தின் தலைவராக இருந்த மாதவ வித்யாரண்யர், முதலாம் ஹரிஹரன் காலத்திலிருந்து இந்துசமயத்தையும் தர்மத்தையும் இஸ்லாமிய படையெடுப்புகளிலிருந்தும் காப்பாற்றுவதே விஜயநகரப் பேரரசின் அடிப்படைத் தத்துவமாக இருக்கவேண்டுமென போதித்து வந்தார். விஜயநகரத்திற்கு அவர் மகத்தான ஆசியையும் ஆதரவையும் தந்துள்ளார். இந்த ஆசியை மனத்துட்கொண்டு சங்கம சகோதரர்கள் 1346-1347ஆம் ஆண்டில் சிருங்கேரி மடாலயத்திற்குப் பெரியதொரு நன் கொடையை அளித்துள்ளனர்.

ஹொய்சள வல்லாள வமிச மன்னர்களுக்கு அடங்கிய நிலமானியக்காரர்களாக, சங்கமனுடைய புதல்வர்கள் இருந்தனர் என்பதற்குக் கல்வெட்டுகளில் பல ஆதாரங்கள் காணப்பெறுகின்றன. முதலாம் புக்கதேவன் தன்னை ஹொய்சளருடைய மகாமண்டலேச்வரன் என்று கூறிக் கொள்வார். சம்புவராயர்களையும் மதுரை சுல்தானையும் வென்று தமிழ்நாட்டில் விஜயநகர ஆட்சியைப் பரவச்செய்த குமாரகம்பணன் என்பவர் மைசூர்நாட்டு ஹொய்சள மன்ன

ருடைய வாயிற்காவலன் என்று அழைக்கப்பட்டுள்ளார்[1]. மூன்றும் வல்லாள தேவனும், வாரங்கல்நாட்டுக் கிருஷ்ணப்ப நாயக்கனும், இஸ்லாமிய படையெடுப்புகளை எதிர்த்துப் போராடுவதற்கேற்ற சுதந்திர இயக்கத்தைத் தொடங்கினர் என்ற பெரிஷ்டாவின் கருத்தையும் நாம் மனதில் கொள்ள வேண்டும். ஆகையால் ஹொய்சள வல்லாள மன்னர்களுக்குப் பிறகு, தென்னிந்திய சுதந்திரத்தைப் பாதுகாக்க வேண்டிய கடமை ஹரிஹரன்-புக்கன் ஆகிய இருவருடையதாயிற்று.

1 R. Sathianathaier, 'The Nayaks, of Maduras' p. 374.

# 19. சங்கம வமிசத்தரசர்கள்

## முதலாம் ஹரிஹரன் (1336—1355)

துவாரசமுத்திரத்தின்மீது முகம்மது துக்ளக் படையெடுத்து அந்நாட்டைத் தன்னுடைய பேரரசில் சேர்த்துக்கொள்ள முயன்றதின் பயனாக, ச ங் க ம வ மி ச த் து ஹரிஹரனும் அவனுடைய உடன் பிறந்தார்களும் விஜயநகர அரசை அமைப்பது சாத்தியமாயிற்று. மூன்றும் வல்லாளதேவன் மதுரையில் ஆட்சிபுரிந்த சுல்தானுடைய ஆட்சியை எவ்வாற்றானும் அகற்றி விடவேண்டுமென திட்டமிட்டு அதற்காக வேண்டிய இராணுவ நடவடிக்கைகளை மேற்கொண்டான். ஆகையால் புதிதாகத் தான் அமைத்த வீரவிஜய விருபாட்க்ஷபுரமாகிய ஹம்பி நகரத்தையும், அதைச் சூழ்ந்த இடங்களையும் முதலாம் ஹரிஹரனுடைய ஆட்சியில் இருக்கும்படி இசைந்திருக்க வேண்டும். 1340ஆம் ஆண்டில் எழுதப்பெற்ற கல்வெட்டு ஒன்று ஹரிஹரனுக்கு அடங்கிய சிற்றரசன் ஒருவன் வாதாபி நகரத்தில் அரண் ஒன்றை அமைத்ததாகக் கூறுகிறது. மேலைக் கடற்கரையில் ஆட்சிபுரிந்த ஜமாலுதீன் என்ற இஸ்லாமியத் தலைவன் முதலாம் ஹரிஹரனுக்கு அடங்கிய சிற்றரசனாக இருந்தான் என இபன்பதுதா கூறியுள்ளார். கிருஷ்ணைப் பேராற்றிற்குத் தெற்கேயுள்ள நிலப்பகுதிகளில் இஸ்லாமிய ஆட்சி மறைவதற்கு, முதலாம் ஹரிஹரனும், வாரங்கல் நாட்டு கிருஷ்ணப்ப நாயக்கரும் காரணமாயிருந்தனர் என பெரிஷ்டா கூறியுள்ளார். சிருங்கேரியிலுள்ள சாரதாபீட மடலாயத்திற்கு அளித்த கல்வெட்டு ஒன்றில் முதலாம் ஹரிஹரதேவர், மேற்கு கிழக்கு ஆகிய இருகடல்களுக்கு உட்பட்ட அரசின் தலைவர் எனப்புகழப்பட்டுள்ளார்.

1350ஆம் ஆண்டில். தமிழ்நாட்டை, மதுரை சுல்தான்களுடைய ஆட்சியினின்றும் மீட்பதற்கு தன்னுடைய தம்பி முதலாம் புக்கனுடைய தலைமையில் முதலாம் ஹரிஹரன் ஒரு சேனையை அனுப்பியதாகத் தெரிகிறது. முதலாம் ஹரிஹரதேவனுடைய கோமல் செப்பேடுகளிலிருந்தும், இஸ்லாமிய வரலாற்று ஆசிரியர் ஷாம்சி சிராஜ் அபிப் (Shamsi-Serjaj Afif)

[1] Dr. A Krishnaswamy, 'The Tamil Country under Vijayanagar, p. 2&3

என்பாருடைய கூற்றிலிருந்தும் இச் செய்தி உறுதியாகிறது. பாமினி சுல்தான் அலாவுதீன் ஹாசன் கங்கு என்பான் விஜய நகரத்தின்மீது படையெடுத்து, ஹரிஹரதேவனுடைய படைகளைத் தோற்கடித்தான் என்று பெரிஷ்டாவும், டபடாபாவும் கூறும் செய்திகளை நாம் நம்புவதற்கில்லை. ஹரிஹரதேவன் தனக்குப்பிறகு தன்னுடைய தம்பி முதலாம் புக்கனை வாரிசாக நியமித்திருந்தார்.

## முதலாம் புக்கதேவன் (1355—1377)

முதலாம் புக்கதேவன் பல நிலப்பகுதிகளை வென்று விஜய நகர அரசின் எல்லைகளைப் பெருக்கினான் என்று நூனிஸ் கூறியுள்ளார். ஆயினும், ஒரிசாநாட்டைப் புக்கதேவன் கைப் பற்றினான் என்று நூனிஸ் கூறுவதை நாம் ஒப்புக் கொள்வதற் கில்லை. முதலாம் புக்கனுடைய ஆட்சிக் காலத்தில் பாமினி இராச்சியத்தில் சுல்தானாக இருந்தவன் முதலாம் முகம்மது என்பவனாவன். இந்த சுல்தான், தான் கொண்டாடிய வெற்றி விழாவில் இசைவிருந்தளித்த இசைவாணர்களுக்கு முதலாம் புக்கதேவன் வெகுமதியளிக்க வேண்டுமென்று விரும்பி, அதை ஏற்க மறுத்ததற்காக விஜயநகரத்தின்மீது போர்தொடுத்தான் என்று பெரிஷ்டா கூறுவர். பாமினிப்படைகள் துங்கபத்திரை நதியைக் கடந்து விஜயநகரத்தை முற்றுகையிட்டதாகவும் முதலாம் புக்கதேவனை விஜயநகரத்திலிருந்து இராமேச்வரம் வரையில் துரத்தி மீண்டும் அங்கிருந்து விஜயநகரத்திற்குத் துரத்தியதாகவும் பெரிஷ்டா கூறுவது எவ்வளவு உண்மை யுள்ளது என்பது தெரியவில்லை. ஆயினும், விஜயநகரத்தை முற்றுகையிட்டு வெற்றிபெற முடியாமல் பாமினிப்படைகள் திரும்பியதாகத் தெரிகிறது. வீணாகப் போரிடுவதைத் தவிர்க்க புக்கதேவனும், இஸ்லாமிய இசைவாணர்களுக்குக் கொஞ்சம் பொருளைக் கொடுத்துச் சமாதானம் செய்துகொண்டார் என நாம் உய்த்துணரலாம்.

முதலாம் புக்கருடைய ஆட்சிக்காலத்தில் அவருடைய முதல் மகனாகிய குமாரகம்பணன் என்பார் தமிழ்நாட்டின்மீது படையெடுத்துத் தொண்டைமண்டலத்தில் ஆட்சிபுரிந்த சம்புவராய மன்னனையும், மதுரையை ஆண்ட சுல்தானையும் வென்று தமிழ்நாடு முழுவதையும் விஜயநகர ஆட்சியில் கொண்டுவந்தது முக்கியமானதோர் வரலாற்று நிகழ்ச்சியாகும். குமாரகம்பணன் முதலாம் புக்கனுக்கும் தேவாயி என்ற அரசிக்கும் பிறந்த முதல் மகனாவர். கோலார் பகுதியில்

கிடைத்த ஒரு கல்வெட்டின்படி தொடக்கத்தில் முல்பாகல் அல்லது கண்டக சூனனம் என்ற பகுதிக்கு மகாமண்டலேச் வரஞக குமாரகம்பணன் நியமிக்கப்பெற்றிருந்தார். பின்னர் தன்னுடைய தகப்பனுடைய ஆணையின்படி படைவீட்டு இராச்சியத்தை ஆண்ட சம்புவராய மன்னன் மீது வெற்றி கொண்டு தொண்டைமண்டலத்தை வென்ருன். சம்புவராய மன்னனையும், மதுரை சுல்தானையும், குமார கம்பணன் வென்று வாகைசூடிய செய்திகளை, அவர் காலத்தில் எழுதப்பெற்ற கல்வெட்டுகளிலிருந்தும், கங்காதேவி என்ற அவருடைய மனைவியால் எழுதப்பெற்ற மதுராவிஜயம் என்ற வடமொழி காவியத்திலிருந்தும் நாம் உணர்ந்து கொள்ளலாம்.

தமிழ்நாட்டில் இப்போதுள்ள செங்கல்பட்டு, வடஆற்காடு தென்ஆற்காடு மாவட்டங்கள் சம்புவராய மன்னர்களின் ஆட்சியில் இராஜ கம்பீர ராச்சியம் என்ற பெயருடன் இருந்தன சம்புவராயர்கள் என்பார் சங்ககாலத்திய ஓய்மா நாட்டு நல்லியக்கோடான் என்பாருடைய சந்ததியில் தோன்றிய வன்னிய மரபைச் சேர்ந்தவர்களாவர். அவர்களுள், ஏகாம்பர நாதச் சம்புவராயனும், அவருடைய மகன் இராஜநாராயண சம்புவராயனும் சுதந்திர ஆட்சி புரிந்துவந்தனர். அவர்களுடைய தலைநகரம் படைவீடு, காஞ்சிபுரம் என்ற இரு இடங்களிலும் அமைந்திருந்தது. கி. பி. 1363ஆம் ஆண்டில் முல்பாகல் என்னும் இடத்திலிருந்து தமிழ்நாட்டின்மீது படையெடுத்த குமாரகம்பணன் பாலாற்றைக் கடந்து, விரிஞ்சி புரத்தை கைப்பற்றிப் படைவீடு என்னும் அரண் சூழ்ந்த இடத்தை முற்றுகையிட்டான். முதலில் தீவிரமாகப் போர் செய்தபோதிலும் பின்னர் இராஜநாராயண சம்புவராயன் தோல்வியை ஒப்புக்கொண்டு குமாரகம்பணருக்கு அடங்க வேண்டியதாயிற்று.

சம்புவராயனுடைய படைவீட்டு இராச்சியத்தைத் தன் வசப்படுத்திய பிறகு, குமாரகம்பணன் காஞ்சிபுரத்தில் தங்கி இருந்தபொழுது ஓர் அதிசயமான நிகழ்ச்சி ஏற்பட்டதாக, கங்காதேவியின் மதுராவிஜயம் என்னும் நூலில் கூறப் பெற்றுள்ளது. பாண்டியநாட்டிற்கும், பாண்டியமன்னர்களுக்கும் குலதெய்வமாகிய மீனுட்சி அம்மையே ஒரு பெண்ணுருவில் வந்து, குமாரகம்பணனுடைய கனவில் தோன்றி, பாண்டிய நாட்டை மதுரை சுல்தான்களுடைய ஆட்சியினின்று மீட்கும் படியும், இந்துசமயத்தையும் கோவில்களையும் காப்பாற்றும்படியாகவும் வேண்டிக்கொண்டதாக நாம் அறிகிறோம்.

மதுரையில் நிலைப்பெற்றிருந்த சுல்தான்களுடைய ஆட்சியினால் தமிழ்நாட்டிற்கும், தமிழ் மக்களுக்கும் தோன்றிய இன்னல்களை கங்காதேவி எழுதியுள்ளவாறு நாம் அறிந்து கொள்வது அமைவுடைத்தாகும். 'குமாரகம்பணனே! பெரும் பற்றப் புலியூர் என வழங்கும் சிதம்பரம், உண்மையில் புலியூராகவே காட்சியளிக்கின்றது. (ஏனெனில், அங்குள்ள காட்டில் மனிதர்கள் மறைந்து புலிகள் வாசம் செய்கின்றன.) திருவரங்கத்தில் ஆதிசேஷன்மீது பள்ளி கொண்டிருந்த அரங்கநாதர் கோவிலில் இப்பொழுது பாம்புகள்தான் குடியிருக்கின்றன. யானையின் தோலை உரித்து ஆடையாக அணிந்த சிவபெருமானுடைய திருக்கோவிலாகிய திருவானைக்காவில் உள்ள சிவலிங்கத்திற்குச் சிலந்திக்கூடுதான் ஆடையாக உள்ளது. இன்னும் தமிழ்நாட்டில் உள்ள பல கோவில்களின் கர்ப்பகிரகங்கள் இடிந்து விழுகின்றன. வாயிற்படிகளும் மண்டபங்களும் சீர்கேடுற்றுள்ளன. பசுக்களும் அந்தணர்களும் கொலை செய்யப்பட்டனர். பசுக்களையும், அந்தணர்களையும் கொலை செய்வித்ததனால் இரத்தம் பெருக்கெடுத்து காவிரி நதியின் தண்ணீர் செந்நீராக (இரத்தமாக) மாறிவிட்டது, என்று கூறப்பெற்றுள்ளது.

மேற்கண்டவாறு, தமிழ்நாட்டின் அவலநிலையை குமார கம்பணருக்கு உணர்த்திய பிறகு, தமிழ்த் தெய்வம், குமார கம்பணருக்கு ஒரு வாளையும் கொடுத்து அதைக்கொண்டு மதுரை சுல்தான்களுடைய ஆட்சியை அழிக்கும்படி வேண்டிக் கொண்டதாகவும் நாம் அறிகிறோம். மதுரையின்மீது படையெடுப்பதற்குமுன், கொங்குநாட்டையும் குமாரகம்பணன் கைப்பற்றியதாகத் தெரிகிறது. கி. பி. 1371ஆம் ஆண்டில் மதுரையில் ஆட்சிசெலுத்திய பக்ருதீன் முபராக்ஷா என்ற சுல்தான், குமாரகம்பணனால் தோற்கடிக்கப்பெற்று உயிரிழந்தான். மதுரையைக் கைப்பற்றிய பிறகு தமிழ்நாட்டின் பெரும் பகுதி விஜயநகரப் பேரரசுடன் இணைக்கப்பெற்றது. மேற்கூறப் பெற்றவாறு தமிழ்நாட்டின்மீது படையெடுத்து வெற்றிபெற்ற செயல்களில் குமாரகம்பணனுக்கு உதவியாக சோமப்ப தண்ட நாயக்கன், கண்டாரகுளி மாரய்ய நாயக்கர், ஆனைகொந்தி விட்டப்பர், சாளுவ மங்கு, கோபணரியா முதலிய தலைவர்கள் இருந்தனர். தமிழ்நாட்டில் உள்ள மதுரை, திருவரங்கம், திருவானைக்கா, சிதம்பரம் முதலிய புண்ணியதலங்களில் வழிபாடும், நித்திய நைவேத்தியங்களும் மீண்டும் கொண்டு வரப்பெற்றன. குமாரகம்பணன் காலத்தில் எழுதப்பெற்ற கல்வெட்டுகள் மேற்கூறப்பெற்ற செய்திகளை உணர்த்துகின்றன,

இராசகம்பீர இராச்சியமும் பாண்டிய இராச்சியமும் ஆகிய இரண்டிற்கும் குமாரகம்பணன் மகாமண்டலேசுவரனுக ஆட்சி புரிந்தான். 1374ஆம் ஆண்டில் தன்னுடைய தகப்பனுக்கு முன் குமாரகம்பணன் இவ்வுலக வாழ்வை நீத்தார்.

மேற்கூறப் பெற்றவாறு குமாரகம்பணன் தமிழ்நாட்டையும் மற்ற பகுதிகளையும் விஜயநகரத்தோடு சேர்த்த பிறகுதான் பூர்வதட்சிண, பச்சிம சமுத்திராதிபதி என்ற பட்டத்தை முதலாவது புக்கன் மேற்கொண்டார். இவ்வரசர் பெருமானுடைய ஆட்சியில் மைசூர்நாட்டில் வைணவர்களுக்கும் ஜைனர்களுக்கும் தோன்றிய சமயவேற்றுமையைச் சுமுகமாகத் தீர்த்து வைத்தார். சீனதேசத்து மிங் வமிசத்து அரசனுடன் நட்புறவு கொண்டிருந்ததாக சீனதேச வரலாற்றிலிருந்து நாம் அறிகிறோம். முதலாம் புக்கருடைய ஆட்சிக்காலத்தில் பாமினி இராச்சியத்தைவிட விஜயநகர இராச்சியம் செல்வத்திலும்சேனு பலத்திலும், நிலப்பரப்பிலும் மிக்க உயர்நிலையில் இருந்ததென பெரிஷ்டா கூறுவர்.

## இரண்டாவது ஹரிஹரன் (1337—1404)

குமாரகம்பணன் 1371-ல் மதுரை சுல்தான் முபராக்ஷா என்பானைத் தோற்கடித்த போதிலும், அவனுக்குப்பின் சில சுல்தான்கள் மதுரைநகரின் தெற்குப்பகுதியில் இருந்து ஆட்சிபுரிந்ததாகத் தெரிகிறது. அலாவுதீன் சிக்கந்தர்ஷா என்பானை 1378-ல் இரண்டாம் ஹரிஹரன் முறியடித்து மதுரையில் முஸ்லிம் ஆட்சி முற்றிலும் மறையும்படிச் செய்தார். இரண்டாம் ஹரிஹரனுடைய ஆட்சிக்காலத்தில் பாமினி இராச்சியத்தை பிரோஸ் என்ற சுல்தான் ஆட்சிபுரிந்தார். 1398ஆம் ஆண்டில் இவ்விரு நாடுகளுக்கும் நடந்த போரில் இராய்ச்சூர் கோட்டையை விஜயநகரத்துச் சேனை முற்றுகை யிட்டது. பிரோஸ் வெற்றியடைந்ததாக பெரிஷ்டா கூறியுள்ள போதிலும் வெற்றியோ, தோல்வியோ இவ்விரு அரசர்களுக்கும் நிச்சியமாகக் கிடைத்ததாகத்தெரியவில்லை.

1399ஆம் ஆண்டில் விடுக்கப்பெற்ற நல்லூர் செப்பேடுகளில் இரண்டாம்ஹரிஹரன் மேற்கொண்ட பேரரசுப்பட்டங்கள் குறிப்பிடப்பெற்றுள்ளன, 'பூர்வ, தட்சிண, பச்சிம (உத்தர) சது சமுத்திராதிபதி, அரசர்களுக்கு அரசன், வேதங்களுக்கு உரை கண்டவன், வேத விதிப்படி ஆட்சி செலுத்தியவன்' என்று ஹரிஹரன் புகழப்பெற்றுள்ளான். பல கல்வெட்டுகளில் 'ராஜ வியாசன்', 'ராஜ வால்மீகி', என்ற பெயர்களும் குறிக்கப்பட்டு

உள்ளன. சைவம், வைணவம், சமணம் முதலிய சமயங்களை வேற்றுமை பாராட்டாது ஹரிஹரன் ஆதரித்துள்ளான். காளத்தி, ஸ்ரீசைலம், சிதம்பரம், அகோபலம், திருப்பதி, திருவரங்கம் முதலிய சைவ-வைணவ தலங்களுக்கு இவ்வரசன் ஏற்படுத்திய கட்டளைகளைப்பற்றி கல்வெட்டுகள் புகழ்ந்து கூறுகின்றன ஹரிஹரதேவராயன் என்ற பெயரை 'புராரிதேவராயன்' என்று தன்னுடைய மொழிக்கேற்ப திரித்து நூனிஸ் கூறியுள்ளார்.

நானார்த்த ரத்தினமாலை என்ற வடமொழி நிகண்டை எழுதிய இருகப்பன் என்ற ஜைனர், ஹரிஹரனுடைய அமைச்சராகவும் சேனைத்தலைவனாகவும் பதவி வகித்தார். இவர் 1442ஆம் ஆண்டுவரையில் இப் பதவியைத் தொடர்ந்து வகித்ததாகத் தெரிகிறது. பதினான்காம் நூற்றாண்டின் இறுதிக் காலத்தில் கிருஷ்ணை-துங்கபத்திரை நதிகளுக்குத் தெற்கேயுள்ள தென்னிந்தியா முழுவதிலும் பரவி விஜயநகரப் பேரரசு நிலைபெற்றது என்று கூறலாம். இரண்டாம் ஹரிஹரனுடைய ஆட்சியில் விஜயநகரப்பேரரசு ஏழு இராச்சியங்களாகப் பிரிவுற்று இருந்ததென கல்வெட்டுகளிலிருந்து உணர முடிகிறது.

| இராச்சியத்தின் பெயர் | தலைநகர்கள் |
|---|---|
| (1) துளு ராஜ்யம் | பரகூர், மங்களூர் |
| (2) மலை ராஜ்யம் | வானவாசி |
| (3) உதயகிரி ராஜ்யம் | நெல்லூர், உதயகிரி |
| (4) பெனுகொண்டா ராஜ்யம் | பெனுகொண்டா |
| (5) முலுவி ராஜ்யம் | முல்பாகல் |
| (6) ராஜகம்பீர ராஜ்யம் | காஞ்சிபுரம் |
| (7) பாண்டிய ராஜ்யம் | மதுரை |

மாலிக்கபூர், முபராக்ஷா, முகம்மதுபின் துக்ளக் முதலிய இஸ்லாமியத் தலைவர்கள் தென்னிந்தியாவின்மீது படையெடுத்து நாட்டின் செல்வத்தையும் கலாச்சாரத்தையும் அழிக்க முயன்ற காலத்தை துன்பகாலம் (Time of Trouble) என்று கூறுவது மிகையன்று. இத் துன்ப காலத்திலிருந்து தப்பி, அந்நிய ஆட்சியும், சமயமும் பரவாமல் தடுப்பதற்காகவே விஜயநகரப்பேரரசு தோன்றியதெனக் கூறலாம். மூன்றாம் வல்லாள தேவனால் தொடங்கப்பெற்ற இந்த எதிர்ப்பு இயக்கம் வலிமை பெற்று சங்கம வமிசத்து அரசர்கள் ஆட்சியில் முதிர்ச்சி அடைந்ததென நாம் உணரவேண்டும். இந்த இஸ்லாமிய

எதிர்ப்பு இயக்கத்திற்கு இருதயஸ்தானம் போல ஹம்பியிலுள்ள விருபாக்ஷர் ஆலயமும், சிருங்கேரி சாரதாபீட மடலாயமும் விளங்கின. இவ்விரண்டு அமைப்புக்களும் தென்னிந்திய கலாச்சாரத்தையும், சமயத்தையும், அரசியலையும் காப்பாற்று வதற்கு வரிந்து கட்டிக்கொண்டு நின்றன. இவற்றையும், தென்னிந்தியாவையும் காப்பாற்ற ஹொய்சள காகதீய மன்னர்களும், சம்புவராய, யாதவராயத் தலைவர்களும் மற்ற சிற்றரசர்களும், பொதுமக்களும் விஜயநகரத்து சங்கமவமிசத் திற்கு உதவி புரிந்தனர். ஆகையால், விஜய நகர ஆட்சியின் தொடக்கத்தில் சங்கம வமிசத்து அரசர்கள் தென்னிந்தியாவின் சுதந்திரத்தைக் காப்பாற்றுவதற்குச் செயற்கரும் செயல்களைக் செய்ய முடிந்தது.

## இரண்டாவது புக்கனும் (1404—1406) முதலாம் தேவராயனும் (1406–1422)

கி. பி. 1404ஆம் ஆண்டில் இரண்டாவது ஹரிஹரன் இறந்த பிறகு அவருடைய புதல்வர்களாகிய விருபாக்ஷனுக்கும் இரண்டாம் புக்கனுக்கும் இடையே அரசபதவிக்காக, உள் நாட்டுப்போர் ஒன்று நடந்ததென்றும், அப்போரில் இரண்டாம் புக்கதேவன் வெற்றி பெற்று இரண்டாண்டுகள் விஜயநகரப் பேரரசனுக ஆட்சிபுரிந்தான் என்று பேராசிரியர் நீலகண்ட சாஸ்திரியார் கூறுவர்.[1] இறுதியாக மூன்ருவது மகனுகிய முதலாம் தேவராயன் ஆட்சிப்பீடத்தைக் கைப்பற்ற 1406ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 5உ விஜயநகரப்பேரரசனுக முடி சூடிக்கொண்டார்.[2] இரண்டாம் புக்கதேவனும் முதலாம் தேவராயனும் விஜயநகரத்தைச் சுற்றி வன்மைமிக்க மதிற் சுவர்களையும் கோட்டைக் கொத்தளங்களையும் அமைத்து நகரத்தின் பாதுகாப்பைப் பெருக்கினர் என நூனிஸ் கூறுவர் துங்கபத்திரை நதியின் மீது அணைக்கட்டு ஒன்றை அமைத்து கற்பாறைகளைக் குடைந்து கால்வாய்கள் அமைத்து அவற்றின் வழியாக விஜயநகரத்திற்கு வேண்டிய நீர்ப்பாசன வசதிகள் இவர்களுடைய ஆட்சிக்காலத்தில் ஏற்படுத்தப்பெற்றன. அந்தக் கருங்கற் கால்வாய்களின் சின்னங்கள் இன்றும் காணப் பெறுகின்றன.

முதலாம் தேவராயருடைய ஆட்சியில் பாமினி சுல்தானுகிய பிரோஸ்ஷாவுடன் ஓர் அற்ப விஷயத்திற்காகப் பெரும் போர்

[1] K. A. N. Sastri, op cit. p. 268

[2] R. Sewell, p. 289

நடந்ததென பெரிஷ்டா கூறுவர். தேவராயன் முதுகல் நகரத்தில் வசித்த ஓர் அழகிய பெண்ணைத் தான் மணந்து கொள்வதற்காக அந் நகரத்தின் மீது படையெடுத்ததாகவும், அதையொரு காரணமாகக் கொண்டு பிரோஸ் சுல்தான் விஜய நகரத்தின்மீது ஜிகாத் என்ற சமயப்போரை தொடங்கிய தாகவும் கூறப்பெறுகிறது. தொடக்கத்தில் பிரோஸ் வெற்றி அடைந்து நூற்றுக்கணக்கான மக்கள் கொலை செய்யப்பெற் றனர். பின்னர், இவ்விரு அரசர்களும் சமாதானம் செய்து கொண்டு அவர்களுக்குள் திருமண உறவும் ஏற்பாடு செய்யப் பெற்றது. தேவராயன் தன்னுடைய குமராத்தியை பிரோஸ் சுல்தானுக்கு மணம் செய்து கொடுப்பதாக ஒப்புக் கொண்டு திருமணமும் வெகு ஆடம்பரமாக நடந்ததென்றும் பெரிஷ்டா கூறியுள்ளார். அத்திருமணத்திற்கு பிறகும், தேவராயனும், பிரோஸ்ஷாவும் ஒருவரோடு ஒருவர் போர் தொடுக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டதால் அத்திருமணம் நடைபெறுமல் இடையில் நின்று விட்டதென நாம் உய்த்துணர வேண்டி யுள்ளது.

கொண்ட வீடு என்னும் இடத்தை ஆண்ட ரெட்டித் தலைவனுடனும், தெலுங்குச்சோழத் தலைவனுகிய அனதேவன் என்பானுடனும் சேர்ந்து கொண்டு பாமினி சுல்தான் பிரோஸ் ஷா விஜயநகரத்தின்மீது படையெடுத்தான். தேவராயன் இராஜமகேந்திரவரத்தில் ஆட்சி புரிந்த காத்தயவேமன் என்ற ரெட்டித் தலைவனுடன் உடன்பாடு செய்து கொண்டு தன்னுடைய விரோதிகளை எதிர்த்தார். இவ்வித இராணுவக் கூட்டுறவுகளினுல் விஜயநகரத்து அரசனுக்கும் பாமினி சுல்தான்களுக்கும் நீண்டநாட்களுக்குப் போர்கள் தொடர்ந்து நடந்தன. இப்போர்களில் அரச குமாரனுகிய வீரவிஜயராயனும், அமைச்சன் இலக்குமிதரனும் தேவராயனுக்கு உதவியாக இருந்து 1419ஆம் ஆண்டில் பிரோஸ் சுல்தான் மீது பெரும் வெற்றியடைந்தனர். 1422ஆம் ஆண்டில் முதலாம் தேவராயன் இறந்த பின்னர் அவருடைய மகன் வீரவிசயராயன் என்பார் விஜயநகரப் பேரரசனுகப் பதவி ஏற்ருர்.

தேவராயனுடைய ஆட்சியின் இறுதியில் இத்தாலி நாட்டில் இருந்து நிக்கோலோ கான்டி என்பார் விஜயநகரத்திற்கு வந்து அந்நகரத்தின் எழிலைப்பற்றிக் கூறியுள்ளதை நாம் அறிதல் நலமாகும். தொடக்கத்தில் கம்பேயா துறைமுகத்தில் இறங்கி, அங்கே இருபது நாட்களுக்கு தங்கியிருந்தார். பின்னர் பரகூர், எழில் மலை முதலிய இடங்களின் வழியாக விஜயநகரத்தை

அடைந்தார். நிக்கோலோ கான்டி விஜய நகரத்தின் பெயரை 'பிஸ்னகாலியா' என்று பிழைப்படக் கூறியுள்ளார். 'இந்நகரம் மிக்க உயரமான மலைகள் சூழ்ந்த பிரதேசத்தில் உள்ளது. இந் நகரம் அறுபது சதுரமைல்களுக்கு மேல் பரவியுள்ளது. இந் நகரத்தைச் சூழ்ந்துள்ள மதிற்சுவர்கள் கருங்கற்களினால் அமைக்கப் பெற்று மிக்க உயரமாக இருக்கின்றன. விஜய நகரத்தின் சேனையில் தொன்னூராயிரத்திற்கு மேற்பட்ட படை வீரர்கள் உள்ளனர்.'

'விஜயநகரத்தில் வாழ்கின்ற செல்வர்கள் பல திருமணங் களைப் புரிந்து கொள்ளுகின்றனர். அவர்கள் இறக்கும் தருவாயில் அவர்களுடைய மனைவிமார்களும் உடன்கட்டை ஏறி உயிர் விடுகின்றனர். விஜயநகரத்தை ஆளுகின்ற பேரரசர், அந்நாட்டி லுள்ள மற்ற அரசர்களை விட மிக்க செல்வாக்கும் அதிகாரமும் உடையவர். அவருடைய உவளகத்தில் 12000மகளிர்உள்ளனர். அரசன் தன்னுடைய நாட்டைச் சுற்றிப் பார்ப்பதற்குச் செல்லும்போது அவருடன் கூடவே 4000 மகளிர் செல்லுகின் றனர். அரண்மனையில் நடக்கும் சமையல் வேலைகளை இந்த மகளிரே கவனித்துக் கொள்ளுகின்றனர். அரசன் வேட்டை ஆடுவதற்குச் செல்லும் பொழுது பலமகளிர் வெகுஆடம்பரமான உடைகளை உடுத்திக் கொண்டு குதிரைகளின் மீது அமர்ந்து சவாரி செய்கின்றனர். மற்றும் பலர் பல்லக்குகளில் அமர்ந்து தூக்கிச் செல்லப்படுகின்றனர். இந்த பன்னிரண்டாயிரம் மகளிர்களில், 2000 அல்லது 3000 பேர்கள் அரசன் இறக்கும் பொழுது உடன்கட்டை ஏறுவதற்கு சம்மதித்து அரண்மனையில் உவளகத்தில் இடம் பிடித்துக் கொள்ளுகின்றனர். அரசனுடன் உடன்கட்டை ஏறி உயிர் துறப்பது சிறந்ததொரு தியாகச் செயலாகக் கருதப் பெறுகிறது.'[1]

இன்னும், நிக்கோலோ கான்டி, விஜயநகரத்தில், தீபாவளி நவராத்திரி காமன்பண்டிகை முதலிய விசேஷ தினங்களை மக்கள் எவ்வாறு கொண்டாடினர் என்றும் விவரித்துள்ளார். பலதாரங்களை மணந்து கொள்ளும் வழக்கமும், உடன்கட்டை ஏறி உயிர் துறக்கும் வழக்கமும் பொதுமக்களிடமும் பரவி இருந்ததெனவும் கூறுவர். மக்கள் இருவிதமாகத் தங்களுடைய உயிரை மாய்த்துக் கொண்டனர் என்றும் தங்கள் மீது குற்றம் இல்லை என்பதைச் சாதிப்பதற்கு,நெருப்பு, நீர், உணவு முதலிய குற்றச் சோதனைகளுக்கு (ordeal) உடன்பட்டனர் என்றும்

[1] R. Sewell, 'A Forgotten Empire,' pp.80—83.

கூறியுள்ளார். விஜயநகரத்தில் அரசாங்கக் கணக்குகள் எல்லாம் பனைவோலைச் சுவடிகளில் எழுதப்பெற்றன என்றும், வாங்கிய கடனை திருப்பித் தர முடியாதவர்கள் கடன் கொடுத்தவர்களுக்கு அடிமையாயினர் என்றும் கூறுவர்.

## வீர விசய ராயர் (1422—1426)

இந்த அரசன் இளவரசனாக இருந்தபொழுது முல்பாகல் இராச்சியத்தின் மகாமண்டலேசுவரனாகப் பணியாற்றினார். அப்பொழுது இவரால் எழுதுவிக்கப் பெற்ற தண்டபள்ளி செப்பேடுகளில் தன்னுடைய குருதேவர் கிரியாசக்தி என்பாருக்குக் கிரியாசக்திபுரம் என்ற கிராமத்தைத் தானம் செய்ததாகக் கூறப்பெற்றுள்ளது. 1408 முதல் 1414ஆம் ஆண்டுவரையில் இவருடைய கல்வெட்டுகள் காணப்பெறுகின்றன. ஆயினும் 1422ஆம் ஆண்டிலிருந்து தான் பேரரசனுக்குரிய பட்டங்கள் வழங்கியுள்ளன. வீர விசய ராயருடைய பெயரை, நூனிஸ் 'விசாராவ்' என்று கூறியுள்ளார். ஆறு ஆண்டுகளுக்கு அவராட்சி செய்த போதிலும் வரலாற்றாசிரியர்கள் போற்றத்தக்க வகையில் எந்த காரியத்தையும் செய்யவில்லை என்றும் கூறுவர்.

ஆனால், வீர விசய ராயர் ஆட்சியில், பாமினிநாட்டுச் சுல்தான் ஆமது என்பார் விஜயநகரத்தின்மீது படையெடுத்துப் பெரிய வெற்றியடைந்ததாக பெரிஷ்டா கூறுவர். விசய ராயருடைய சேனைகள் துங்கபத்திரை நதிக்கரையில் கூடாரமிட்டிருந்ததாகவும், திடீரென்று பாமினி சேனைகள் விஜயநகரத்துப் படைகளை எதிர்த்து முறியடித்ததாகவும் எழுதியுள்ளார். வீர விசய ராயர் தன்னுடைய கூடாரத்திலிருந்து தப்பித்துச் சென்று ஒரு கரும்புத் தோட்டத்தில் பதுங்கிக் கொண்டிருந்ததாகவும் கூறுவர். இச் செய்திகள் எவ்வளவு உண்மையானவை என்று துணிவதற்கேற்ற ஆதாரங்கள் இல்லை. பாமினி சுல்தான் ஆமது, விஜயநகரத்து மக்களை எதிர்த்து ஈவு இரக்கமின்றி கொன்று குவிக்கும்படி கூறியும் இருபதினாயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் கொலை செய்யப்பெற்ற பிறகு ஒரு திருவிழா கொண்டாடியும் தன்னுடைய வெற்றியை உலகிற்கு எடுத்துக் காட்டினார் என்று பெரிஷ்டா கூறியுள்ளார். தேவாலயங்களும் மடங்களும் இடிக்கப் பெற்றன. இவ்வித கொடுஞ்செயல்களைக் கண்ட வீர விசய ராயர் பாமினி சுல்தானுக்குக் கப்பம் கட்ட ஒப்புக் கொண்டு சமாதானம் செய்துக் கொண்டார் என்றும் கூறப்பெறுகிறது.

# 20. இரண்டாம் தேவராயர் [1426—1449]

இரண்டாம் தேவராயர் ஆட்சியில் விஜயநகரப் பேரரசு ஓர் உன்னத நிலையை அடைந்ததெனக் கூறலாம். இவ் வேந்தன் 'கஜவேட்டைக் கண்டருளிய' என்ற பட்டத்தை மேற்கொண்டார். இந்த பட்டமானது யானைப்போன்ற வலிமை யுடைய தன்னுடைய எதிரிகளை வென்று அடக்கியமையாலோ அல்லது யானைகளை வேட்டையாடி அவற்றைப் பிடித்துப் பழக்குவதற்குச் செய்த ஏற்பாட்டையாவது குறிக்குமென்று வரலாற்ருராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர். தேவராயருடைய ஆட்சியின் தொடக்கத்தில் கொண்டவீடு இராச்சியத்தை வென்று தன்னுடைய பேரரசில் இணைத்துக் கொண்டார். இவ் வெற்றியினுல் கலிங்கநாட்டின் அரசனுகிய கபிலீஸ்வர கஜபதி என்ற பேரரசரோடு நெருங்கிய தொடர்பு கொள்ளுவது சாத்திய மாயிற்று. 1435ஆம் ஆண்டில் கபிலீஸ்வர கஜபதி இராச மகேந்திரவரம் என்ற இடத்தை வென்று தன்னுடை ஆட்சியின் கீழ் கொண்டுவருவதற்கு முயன்ருர். இராசமகேந்திரவரத்தை ஆண்ட சிற்றரசர்கள் தேவராயருடைய உதவியை நாடினர். தேவராயனும் அவர்களுக்கு உதவி செய்து கபிலீஸ்வர கஜபதி இராசமகேந்திர நாட்டை வென்று விடாதபடி காப்பாற்றினுர். இரண்டாம் தேவராயர் காலத்தில், விஜயநகரப் பேரரசு மலையாள நாட்டிலும் பரவியிருந்ததென்றும், கொல்லம் நாட்டை வென்றதாகவும் நீலகண்டசாஸ்திரியார் கூறுவர். கள்ளிக் கோட்டை அரசனுகிய சாமோரின் மாத்திரம் தேவராயனுக்கு அடங்கியிருக்கவில்லை. ஆயினும், தேவராயருக்கு பயந்து கொண்டு இருந்தார் என்று அப்துர் ரசாக் என்ற பாரசீகத் தூதர் கூறியுள்ளார்.[1] தேவராயருடைய ஆட்சியில் விஜய நகரப் பேரரசு இலங்கைதீவிலிருந்து குல்பர்கா வரையிலும் வங்காளத்திலிருந்து மலையாளம் வரையிலும் பரவியிருந்தது எனவும் அவர் கூறுவர். 'இலங்கை, கொல்லம், பழவேற்காடு, பெகு டெனுசரீம் முதலிய நாடுகளின் சிற்றரசர்கள் இரண்டாம் தேவராயருக்கு கப்பம் செலுத்தினர்' என்று நூனிஸ் கூறி யுள்ளார்.

1. K. A. N. Sastri. op cit p. 270

இரண்டாவது தேவராயர் காலத்தில் பாமினி சுல்தாளுக இருந்தவர் இரண்டாவது அலாவுதீன் என்பவராவார். பாமினி சுல்தான் தேவராயரிடமிருந்து சேரவேண்டிய திரைப் பொருளேப் பெறுவதற்காகத் தன்னுடைய தம்பி முகம்மது என்பாரை அனுப்பியதாகவும் பாமினி நாட்டுப் படைகள் தேவராயனுடைய சேனைகளைத் தோற்கடித்தன என்றும் பெரிஷ்டா கூறியுள்ளார். தேவராயரும் பாமினி சுல்தானுக்கு கப்பங்கட்ட வேண்டியதாயிற்று. இவ்விதம் பாமினி படைகளினுல் விஜயநகரத்துச் சேனைகள் தோல்வியுறுவதின் காரணத்தை உணர்ந்து தன்னுடைய சேனையில் சில மாற்றங்களை உண்டாக்குவதற்குத் தேவராயர் புதிய திட்டங்களை வகுத்தார். முஸ்லிம்கள் வெற்றியடைவதற்கு அவர்களுடைய குதிரைப்படைகளின் வன்மையே என உணர்ந்து இஸ்லாமிய வீரர்களைத் தன்னுடைய படைகளில் சேர்த்துக்கொண்டு குதிரைப்படை வீரர்களுக்குத் தகுந்த பயிற்சியும் அளிக்கப் பெற்றது. விஜயநகரத்து சேனையில் இருந்த வில்வீரர்களுக்கு முன்னரைவிட நல்ல பயிற்சியும் அளிக்கப்பெற்றது. இவ்வித மாற்றங்களை மூன்ரும் வல்லாளதேவனும் இதற்கு முன்னரே செய்திருந்தார். 1442ஆம் ஆண்டில் இஸ்லாமிய வீரர்கள் விஜயநகரப்படைகளில் சேர்த்துக்கொள்ளப்பெற்றனர். குதிரை வீரர்களுக்கும், வில்வீரர்களுக்கும் தகுந்த பயிற்சியளிக்கப் பெற்றமையால், அவர்களுடைய போர் செய்யும் திறமை அதிகரித்தது.

இரண்டாவது தேவராயருடைய தம்பியொருவன் அவரை விருந்தொன்றிற்கு வரவழைத்து அவரைக் கொன்றுவிடுவதற்கு சதித்திட்டம் ஒன்றை வகுத்ததாக அப்துர் ரசாக் கூறியுள்ளார். ஆனுல் நூனிஸ் என்பார் தேவராயருடைய மகனுகிய பீனராயர் என்பாரைக் கொன்றுவிடுவதற்காக அவனுடைய தாயத்தான் ஒருவனுல் திட்டமிடப்பட்டதெனக் கூறுவர். இந்த பீனராயரும் இரண்டாம் தேவராயரும் ஒருவர்தாளு அல்லது இருவேறு நபர்களா என்பது விளங்கவில்லை.[1] இவ்வாறு விஜயநகரப் பேரரசனைக் கொலைசெய்வதற்கு வகுக்கப்பெற்ற சதித்திட்டம், பாமினிசுல்தாளுகிய இரண்டாவது அலாவுதீனுடைய தூண்டுதல் பேரில் ஏற்பட்டிருக்க வேண்டும். ஏனெனில் இச் சதித்திட்டம் நடைபெற்ற சமயத்தில் பாமினி சுல்தான் அலாவுதீன் இராய்ச்சூர் நாட்டுப் பகுதியின் மீது படையெடுத்து வந்து

[1] R. Sewell, ibid

நாட்டைக் கைப்பற்ற முயன்றதை நாம் மனதில் கொள்ள வேண்டும். தொடக்கத்தில் பாமினிப்படைகள் தோல்வியடைந்த போதிலும், இறுதியில் விஜயநகரத்து சேனைகள் தோல்வியுற்றன. இரண்டாம் தேவராயரும் பெரும் பொருட் குவியலைக் கொடுத்து அமைதி உடன்படிக்கையொன்றைச் செய்துகொள்ள வேண்டியதாயிற்று.

தேவராயருடைய கல்வெட்டுக்கள் விஜயநகரப் பேரரசு முழுவதிலும் காணப்பெறுகின்றன. தமிழ்நாட்டில் இதுகாறும் நூற்றுக்கு மேற்பட்ட தேவராயர் காலத்திய கல்வெட்டுக்கள் கண்டுபிடிக்கப்பெற்றுள்ளன. அப்துர் ரசாக் என்பாரின் உத்தேசப்படி வங்காளத்திலிருந்து, மலையாளக்கரை வரையில் மூவாயிரம் மைல்களுக்கு மேல் விஜயநகரப்பேரரசு வியாபித்திருந்ததென நாம் அறிகிறோம். இரண்டாம் தேவராயருடைய அமைச்சர்களாகிய இலக்குமிதரன் அல்லது இலக்கணனும் அவரது உடன்பிறந்தான் மாதணனும் தேவராயருடைய ஆட்சியில் விஜயநகரப் பேரரசிற்குச் சிறந்த சேவை செய்துள்ளனர்.

## இரண்டாவது தேவராயர் காலத்தில் விஜயநகரத்தின் பெருமை

இரண்டாம் தேவராயர் காலத்தில் 1443 ஆம் ஆண்டில் பாரசீக நாட்டின் தூதராகிய அப்துர் ரசாக் என்பார் விஜயநகரத்திற்கு வந்து தங்கியிருந்தார். விஜயநகரத்துப் பேரரசனைப் பற்றியும், நகரத்தில் நடந்த திருவிழாக்கள், பெருநாட்கள் முதலியவைகளைப் பற்றியும் அவருடைய கூற்றுக்கள் நம்பத் தகுந்தவையாகும். தான் எழுதிய பாரசீகநாட்டு வரலாற்றில் விஜயநகரப் பேரரசின் ஆட்சி முறையைப்பற்றியும், மக்களின் சமூகவாழ்க்கை, நகரத்தின் அமைப்பு முதலியவைகளைப் பற்றியும் அவர் கூறியுள்ளவை வரலாற்றாராய்ச்சிக்கு மிக்க பயன்படுகின்றன. கள்ளிக்கோட்டையில் சாமோரின் அரசருடைய சபையில் அப்துர் ரசாக் தங்கியிருந்தபொழுது தேவராயர் அவரைத் தன்னுடைய தலைநகரத்திற்கு வந்து செல்லும்படி வேண்டிக்கொண்டார். அவ் வேண்டுகோளுக்கிணங்க, அப்துர் ரசாக்கும் கள்ளிக்கோட்டையில் இருந்து கடல் வழியாக மங்களூரில் இறங்கிப் பின்னர் பெட்னூர் மார்க்கமாக விஜயநகரத்திற்கு வந்து சேர்ந்தார். பெட்னூரில் அரண்மனை போன்ற இல்லங்களையும், வெண்கலத்தினால்

அமைக்கப்பெற்ற கோவில் ஒன்றையும் தான் கண்டதாகக் கூறியுள்ளார்[1].

அப்துர் ரசாக் விஜயநகரத்தை அடைந்தபொழுது பல வழிகளில் வசதிகள் நிறைந்த வீடு ஒன்றைக் கொடுத்து அவருக்கு ஏற்ற குற்றேவல்களைச் செய்வதற்குப் பல ஏவலாட்களையும் அரசர் நியமித்திருந்தார். 'விஜயநகரத்தில் சிறிய குன்றுகளைப் போன்ற யானைகள் ஓராயிரத்திற்கு மேல் இருந்தன. போரில் ஈடுபடும் வீரர்கள் பதினொரு லட்சம் பேர் இருந்தனர், விஜயநகரத்து அரசனுக்கு மிகுந்த அதிகாரங்கள் இருந்தன. அவருக்கு ஈடான செல்வமும், அதிகாரமும் நிறைந்த வேறு அரசர்களை இந்துஸ்தானத்தில் காண முடியாது.'

'விஜயநகரத்தைப்போல் செல்வமும், வளமும், அழகும் நிறைந்த தலைநகரத்தை என்னுடைய கண்களால் நான் இது வரையில் கண்டதுமில்லை, காதுகளால் கேட்டதும் இல்லை. விஜயநகரத்தைச் சுற்றி ஏழு அரண்மிக்க கோட்டைச்சுவர்கள் இருந்தன. முதல் கோட்டைச்சுவருக்கு முன்னால் ஓர் ஆள் உயரத்திற்குமேல் உயரமுள்ள கருங்கற்கள் வரிசையாகப் புதைக்கப்பெற்றுள்ளன. இக் கருங்கல் வரிசைகளைக் கடந்து, குதிரைப்படையினரோ அல்லது காலாட்படையினரோ வெகு சுலபமாக நகரத்திற்குள் புகமுடியாது. ஏழாவது கோட்டைச் சுவருக்குள் விஜயநகரத்து அரசனுடைய அரண்மனை அமைந்திருந்தது. தெற்கு வடக்கில் இருந்த கோட்டைச் சுவர்களுக்கு இடையே இரண்டு மைல்கள் தூரமுள்ள இடை வெளிகள் இருந்தன. முதல் மூன்று கோட்டைச் சுவர்களுக்கு இடைவெளிகளில், வீடுகள் நிறைந்த தெருக்களும், தோட்டங் களும், நன்கு பயிரிடப்பெற்ற நிலங்களும் நிறைந்திருந்தன. மூன்றாவது கோட்டைச் சுவற்றிலிருந்து ஏழாவது கோட்டைச் சுவர் வரையில் பெரிய கடைத்தெருக்கள் அமைந்துள்ளன. இக் கடைவீதிகளில் எண்ணிக்கையில் அடக்கமுடியாத மக்கள் நிரம்பியுள்ளனர். அரசனுடைய அரண்மனையை அடுத்து ஒன்றிற்கு ஒன்று எதிராக நான்கு கடைத்தெருக்கள் அமைந் துள்ளன. ஒவ்வொரு கடைத்தெருவின் நுழைவாயிலில் வில்வளைவு ஒன்றிருக்கிறது. அதன் பக்கத்தில் மக்கள் உட்காரு வதற்கு வரிசையான உட்காருமிடங்கள் அமைந்துள்ளன. அரசர்கள் அமர்ந்து மக்களுக்கு காட்சியளிக்கும் இடம் மிக

[1] R. Sewell, p. 85.

உயரமான இடத்தில் அமைந்துள்ளது. விஜயநகரத்தில் காணப்பெறும் கடைவீதிகள் அகலமாகவும், நீளமாகவும் உள்ளன.'

'விஜயநகரத்தில் உள்ள மலர்க்கடைகளில் ஏராளமான ரோஜாமலர்கள் கிடைக்கின்றன. இந் நகரத்து மக்கள் தங்களுடைய உணவிற்கு அடுத்தாற்போல் ரோஜா மலர்களை விரும்பி அணிந்து கொள்ளுகின்றனர். கடைவீதிகளில் ஒரே விதமான பொருட்களை வியாபாரம் செய்யும் கடைகள் ஒரு வரிசையில் காணப்பெறுகின்றன. அணிகலன்களை வியாபாரம் செய்யும் வணிகர்கள், முத்து, இரத்தினம் வைரம், மரகதம், கோமேதகம் முதலிய நவரத்தினங்களை விற்று வாங்கித் தொழில் செய்கின்றனர். இந் நகரத்தின் இடைவெளிகளிலும், அரண்மனைக்கு அடுத்தாற்போல் உள்ள இடங்களிலும் சலவை செய்த கருங்கற்களினால் அமைக்கப்பெற்ற கால்வாய்கள் உள்ளன. இக் கால்வாய்களில் பளிங்கு போன்று தெளிந்த தண்ணீர் ஓடிக்கொண்டிருக்கிறது.'

'இந் நகரத்தைக் காவல் புரிவதற்குப் பன்னீராயிரத்திற்கு மேற்பட்ட காவல்துறை அலுவலர்கள் உள்ளனர். அவர்களுக்குத் தலைவனாக ஓர் அதிகாரியும் இருந்தார். விஜய நகரத்தில் இருந்த படைவீரர்களுக்கு நான்கு தினங்களுக்கு ஒரு முறை ஊதியங்கள் வழங்கப்பெற்றன. காவல் படையினருக்கு உரிய ஊதியத்தை விலைமகளிர்களிடம் இருந்து பெற்ற வருமானத்தைக் கொண்டு கொடுத்தனர். விஜய நகரத்தில் வாழ்ந்த பொதுமகளிர் தனியான தெருக்களில் வாழ்ந்தனர். அவர்கள் வசித்த வீடுகள் மிக்க வசீகரம் பொருந்தியிருந்தன. அவர்கள் ஆடவர்களை மயக்கி தங்களுடைய சொற்களாலும், சைகைகளாலும், பொருள் பறிப்பதில் வல்லவர்கள். அவர்களுடைய அழகையும், ஆடை ஆபரணங்களையும் கண்டு மையல் கொள்ளாத ஆடவர்களைக் காண முடியாது. அரசனுக்குரிய உவளகம் ஒன்றும் இருந்தது. அதில் ஏழுநூறுக்கு மேற்பட்ட அழகு வாய்ந்த பெண்ணரசிகளும், ஆசைநாயகிகளும் வாழ்ந்தனர்.'[1]

அரண்மனைக்கு இடது பக்கத்தில் அரண்மனையைப் போலவே தோற்றமளித்த திவான்கானா என்ற அரசாங்க அலுவலகம் அமைந்திருந்தது. அவ்வலுவலகத்தின் மத்தியில் தன்னாயகர்

1 Elliot and Dowson. Vol. IV pp. 106—114.

அல்லது திவான் என்பவர் அமர்ந்து குடிமக்களுக்கு நீதி வழங்குவது வழக்கம்.

அப்துர் ரசாக் தான் நேரில் பார்த்த இரண்டாம் தேவராயருடைய தோற்றத்தைப்பற்றி கூறுவதையும், கிருஷ்ண தேவராயரை நேரில் கண்டு விவரித்து எழுதிய பியாஸ் என்பாருடைய விவரமான சொற்சித்திரத்துடன் ஒப்பிட்டுக் கூறலாம்.

'விஜயநகரத்து அரசர், மன்னர்களுக்குரிய படாடோபங்கள் நிறைந்த மணிமண்டபத்தில் அமர்ந்திருந்தார். அவருடைய அரியணையின் இருபக்கங்களிலும், வட்டவடிவமாக அமர்ந்திருந்த பல ஏவலாளர்கள் இருந்தனர். பச்சைநிறம்பொருந்திய பளப்பளப்பான பட்டாடைகளை அரசர் அணிந்துகொண்டிருந்தார். தன்னுடைய மார்பில் முத்துக்களும் நவரத்தினங்களும் வைத்திழைக்கப்பெற்ற ஆரம் ஒன்றை அணிந்திருந்தார். அவருடைய நிறம் மாவிலையின் துளிர் போன்று இருந்தது. உயரமாகவும், சதைப்பற்று அதிகமில்லாமலும், இருந்தார். முகத்தில் வயது சென்றமைக்கு ஏற்ற அறிகுறிகள் இருந்தன. தாடி மீசை வைத்திருக்கவில்லை. அவருடைய தோற்றம் காண்பதற்கு இனிமையாக இருந்தது.' என இரண்டாம் தேவராயருடைய தோற்றத்தைப்பற்றிக் கூறியுள்ளார்.

அப்துர் ரசாக் விஜயநகரத்தில் தங்கியிருந்த பொழுது தான் நேரில் பார்த்து அனுபவித்த மகாநவமி அல்லது தசரா பண்டிகை நடந்த முறையைப்பற்றி பின்வருமாறு கூறுவர்.

'இந்த மகாநவமித் திருவிழா நடப்பதற்கு முன்கூட்டியே தன்னுடைய பேரரசில் உள்ள நாயக்கன்மார்களுக்கும் சேனைத் தலைவர்களுக்கும் ஓலை போக்கி எல்லோரும் மேற்படி திருவிழாவில் பங்கு கொள்வதற்கு விஜயநகரத்திற்கு வந்து சேர வேண்டுமென உத்திரவிட்டிருந்தார். அவ்விதம் அழைக்கப்பெற்ற தலைவர்கள் எல்லோரும் ஓராயிரம் எண்ணிக்கையுள்ள யானைகளை கொண்டு வந்தனர். அந்த யானைகள் எல்லாம் பளப்பளப்பான முகப்படாம் கொண்டு அலங்காரம் செய்யப் பெற்றிருந்தன. ஒரு விசாலமான மைதானத்தில் இந்த யானைகள் வரிசை வரிசையாக நிறுத்தப்பெற்றிருந்தன. அவை வரிசையாக நகர்ந்து சென்றதைப் பார்த்தால் பெரிய கடல் களின்மீது நகர்ந்து செல்லும் அலைகளைப் போல் தெரிந்தன. அந்த மைதானத்தின் ஒரு பகுதியில் நூற்றுக்கணக்கான கூடாரங்கள் அமைக்கப்பெற்றிருந்தன. சில கூடாரங்கள்

மூன்று, நான்கு அல்லது ஐந்து மாடிகளும் கொண்டவைகளாக இருந்தன. அந்தக் கூடாரங்களின் சுவர்களில் பலவிதமான உருவங்களை வைத்து அழகுபடுத்தியிருந்தனர். சில கூடாரங்கள் சுழன்று சுழன்று பலவிதக் காட்சிகளை மக்கள் கண்டு களிக்கும்படி அமைக்கப் பெற்றிருந்தன.

இந்த கூடராங்களுக்கு எதிரில், ஒன்பது மாடிகள் கொண்டதும், வெகு ஆடம்பரமாக அமைக்கப்பெற்றதுமான அரண்மனை போன்ற கட்டிடம் ஒன்று அமைக்கப்பெற்று இருந்தது. ஒன்பதாவது மாடியில் விஜயநகரத்து அரசனுடைய அரியாசனம் அமைக்கப்பெற்றிருந்தது. இந்த அரண்மனைக்கும் கூடாரங்களுக்கும் இடையில் இசைக் கலைஞர்களும், கதாகாலட்சேபம் செய்பவர்களும் கூடியிருந்தனர். அரசன் அமர்ந்திருக்கும் ஆரியணைக்கு முன், ஒரு திரைமறைவில் ஆடற்கலையில் வல்ல நடனமாதர்கள் குழுமியிருந்தனர். யானைகளைப் பழக்கி விசித்திரமான முறையில் நடிக்கும்படி சிலர் செய்தனர். மூன்று நாட்களுக்கு வாணவேடிக்கைகளும் மல்யுத்தங்கள், சிலம்ப விளையாட்டுகள், வில், வாள், ஈட்டிகளைக் கொண்டு விளையாடும் விளையாட்டுகளும் நடைபெற்றன.

மூன்று நாட்களுக்குப் பிறகு விஜயநகரத்து அரசன் அமர்ந்திருந்த கூடாரத்திற்கு முன் அப்துர் ரசாக் செல்லுவதற்கு அனுமதிக்கப் பெற்றார். அந்தக் கூடாரத்தின் சுவர்களில் தங்கத்தினாலும், வெள்ளியினாலும் செய்யப்பெற்ற தகடுகளும் உயர்ந்த கல்வகைகளும் பதிக்கப்பெற்றிருந்தன. தங்கத்தினால் செய்யப்பெற்ற ஆணிகளைக்கொண்டு தகடுகள் இணைக்கப்பெற்றிருந்தன. இந்தக் கூடாரத்தின் மத்தியில் அமைக்கப்பெற்றிருந்த மேடையின்மீது அரசனுடைய அரியணை போடப்பெற்றிருந்தது. இந்த அரியணை தங்கத்தகடுகளைக் கொண்டு செய்யப் பெற்று விலையுயர்ந்த நவரத்தினக்கற்கள் வைத்து இழைக்கப் பெற்றிருந்தது. அந்த அரியணைக்கு எதிரில் சதுரவடிவமுள்ள மேடையொன்று இருந்தது. அதன்மீது மிகப் பளபளப்பானதும், மெத்தென்று இருந்ததுமான விரிப்பு ஒன்று பரப்பப்பெற்றிருந்தது. அதனுடைய நான்கு மூலைகளிலும் மூன்று வரிசைகளில் முத்துக்கள் பதிக்கப்பெற்றிருந்தன. இந்த மேடையில் அமைக்கப்பெற்ற மெத்தையின்மீது மூன்று நாட்களிலும் அரசன் அமர்ந்திருந்தார்.[1]

[1] R. Sewell, op. cit. pp. 92-93

அரசாங்கத்திற்குரிய வரிக்கணக்குகளும், செலவுக் குறிப்புகளும் மற்ற முக்கிய ஓலைகளும் பத்திரமாகப் பாதுகாக்கப் பெற்றன. அக் காலத்தில் காகிதங்கள் இன்மையால் எல்லா விதப் பத்திரங்களும் பனையோலைச் சுவடிகளில் எழுத்தாணி கொண்டு எழுதப்பெற்றன. மன்னிக்க முடியாத குற்றமிழைத்த பெருங்குற்றவாளிகளுக்கு யானைக்கால்களில் வைத்து நசுக்கும் படியான தண்டனை அளிப்பதுண்டு. விஜயநகரத்தில் வாழ்ந்த மக்களில் பெரும்பாலோர் வெற்றிலைபாக்கு மென்று தின்பதை வழக்கமாகக் கொண்டிருந்தனர்.'[1]

[1] Sathianathaier, Vol. II, p. 162.

# 21. சங்கம வமிசத்தின் இறுதிக்காலம்

## மல்லிகார்ச்சுனராயர்

இரண்டாவது தேவராயருக்குப் பிறகு அவருடைய மகன். மல்லிகார்ச்சுனன் என்பார் பேரரசுப் பதவியை ஏற்ருர். இரண்டாவது தேவராயருடைய மறைவிற்குப்பின் பாமினி சுல்தானும் கஜபதி அரசர்களும் விஜயநகரப்பேரரசின்மீது படையெடுத்தனர் என்று கங்காதாசப் பிரதாப விலாசம் என்ற வடமொழி நாடகத்தில் கூறப்பெற்றுள்ளது. மல்லிகார்ச்சுனன் தலைநகரத்திலிருந்து வெளிப்பட்டு நகரத்தை முற்றுகையிட்ட ஒரிசா நாட்டுப்படைகளைத் துரத்தியடித்து வெற்றி பெற்ருன் என்று மேற்கூறப்பெற்ற நூலில் கூறப் பெற்றுள்ளது. இவ் வெற்றி உண்மையாகவும் இருக்கக் கூடும். ஏனெனில் மல்லிகார்ச்சுனராயருடைய ஆட்சியின் முற்பகுதியில் விஜய நகரப் பேரரசின் எப்பகுதியும் கபிலீஸ்வர கஜபதியின் ஆட்சிக் குட்பட்டிருக்கவில்லை.

ஆனல், ஆட்சியின் தொடக்கத்தில் மல்லிகார்ச்சுனன் காட்டிய அரசியல் சுறுசுறுப்பும் திறமையும் நாளடைவில் மங்கலாயின. அரசன் தன்னுடைய முக்கிய கடமைகளை மறந்து சிற்றின்ப நுகர்ச்சியில் ஈடுபட்டு செய்யத்தகாத காரியங்களைச் செய்து வந்தனன். இதனல் அவனுடைய எதிரிகள் விஜய நகரப்பேரரசின்மீது படையெடுப்பது எளிதாயிற்று. இத் தருணத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்த ஒரிசா நாட்டரசன் கபிலீஸ்வரகஜபதி தன்னுடைய கலிங்கப் பேரரசை தமிழ்நாடு வரையில் பரவச் செய்வதற்கு வாய்ப்புகள் தோன்றின. 1462ஆம் ஆண்டில் உதயகிரியைத் தன்வசப்படுத்திய கபிலீஸ் வரகஜபதி அடுத்த ஆண்டுகளில் தமிழ்நாட்டிலுள்ள திருக் கோவலூர் வரை படையெடுத்துச் சென்று பெரும் வெற்றி பெற்ருன்.

திருக்கோவலூருக்கு அருகில் உள்ள முன்னூர் என்னும் இடத்தில் கிடைத்த கல்வெட்டில் சக வருஷம் 1386ல் கபிலீஸ்வரதேவனுடைய மகன் ஹம்வீரதேவன் என்பான் தமிழ் நாட்டிலுள்ள திருக்கோவலூர் பகுதியைக் கைப்பற்றிய செய்தி

குறிப்பிடப்பெற்றுள்ளது.[1] கபிலீஸ்வர கஜபதியின் மகனுகிய ஹம்வீரதேவன் தமிழ்நாட்டின் மீது படையெடுத்த செய்தி தென்னிந்திய வரலாற்றில் ஒட்டியன் கலாபை என்றழைக்கப் பெறுகிறது. தென்னுற்காடு மாவட்டத்தில், இடையாறு, அரகண்ட நல்லூர், நெற்குணம், சம்பை முதலிய இடங்களில் காணப்பெற்ற கல்வெட்டுக்களில் மேற்கூறப்பெற்ற இடங்களை எல்லாம் வடக்கேயிருந்து வந்த ஒட்டியர்கள் படையெடுத்து வந்து நாட்டைப் பிடித்து, மக்களையும், கோவில்களையும் கொள்ளையடித்துக் கொண்டு திரும்பினர் என்று கூறுகின்றன. ஆனல், ஒட்டியன் கலாபை, அல்லது ஒரிசா தேசத்தினர் தமிழ் நாட்டைஆட்சி புரிந்தமை நீண்டகாலத்திற்கு இருக்கவில்லை. மல்லிகார்ச்சுனராயர் வாளாக இருந்து விட்டபோதிலும், சந்திரகிரி இராச்சியத்தில் மகாமண்டலேசுவரனுக பதவி வகித்த சாளுவ நரசிம்மர் என்பார் ஒட்டியருடைய சேனைகளை நாட்டை விட்டுத் துரத்தி மீண்டும் விஜயநகரப் பேரரசின் ஆட்சியை நிலைநிறுத்தினுர்.

மல்லிகார்ச்சுனராயர் தன் தகப்பனைப் போல் 'கஜவேட்டை கண்டருளிய தேவன்' என்ற பட்டப்பெயரை புனைந்து கொண்டார். இம்மடித்தேவராயன் என்ற பெயரும் வழங்கியது. சோதிடக்கலையில் மிகத் தேர்ச்சிப் பெற்றிருந்தார் என நாம் கேள்விப்படுகிறேம்.

## இரண்டாம் விருபாட்சதேவன் (1465—1485)

மல்லிகார்ச்சுனன் இறந்தபொழுது இராசசேகரன் என்ற பெயருள்ள ஒரு மகன் இருந்தான். அவனுக்கு அரசாளுவதற்கு உரிய வயதின்மையால் பிரதாபதேவாராயர் என்பாருடைய மகன் இரண்டாம் விருபாட்சன் என்பார் விஜயநகரப்பேரரசனுனன். ஸ்ரீசைலம் செப்பேடுகளும் மற்றும் பல கல்வெட்டுக்களும், விருபாட்சன் தன்னுடைய வாளின் வன்மையால் விஜயநகரப் பேரரசின் பதவியைப் பெற்றதாகக் கூறுகின்றன. பிரபன்னு மிர்தம் என்ற நூல் அவன் தன்னுடைய தாயத்தார்களை எல்லாம் கொன்று விட்டு நியாயமற்ற முறையில் ஆட்சியை கைப்பற்றி ஞன் எனக் கூறுகின்றது. ஆகையால், விருபாட்சன் தகுதியற்ற முறையில் அரசப் பதவியை வகித்த அரசனுக கருதப் பெறு கிருன்.[2] தன்னுடைய தாயத்தார்களையெல்லாம் கொன்ற பிரம்மஹத்தி தோஷம் விருபாட்சனைப் பீடித்து கொலை செய்யப்

[1] No. 51 of 1919.

[2] R. Sathianatbaier, Vol. II, pp. 165—66.

பெற்றவர்களுடைய ஆவிகள் அவ்வரசனுக்கு மிகுந்த துயரத்தை உண்டாக்கின. இத் துக்கரமான துன்பத்தினின்றும், பாவத்தினின்றும் தன்னைக் காப்பாற்றிக் கொள்ள ஒரு வைணவ ஆசாரியாரைக் கொண்டு இராமாயணத்தைப் பாராயணம் செய்து தன்னைப் பாதுகாத்துக் கொண்டதாக ஒரு செய்தி வழங்குகிறது. விருபாட்சனும் வைணவ சமயத்தை மேற்கொண்டு, ஸ்ரீ விருபாட்ச என்ற சமயத் தொடரை விட்டு ஸ்ரீராம என்ற தொடரை தன்னுடைய கல்வெட்டுக்களில் பின்பற்றியதாக அறிகிறோம்.

பெர்ஞே நூனிஸ் என்ற போர்த்துகிசிய வரலாற்று ஆசிரியர், விருபாட்சன் அரச காரியங்களை செவ்வனே கவனிக்காது, கள்ளுண்டு களித்தும், மகளிர் கூட்டத்தையே விரும்பியும் தன் காலத்தைக் கழித்தனன் என்று கூறியுள்ளார். தன்னுடைய நாயக்கன்மார்களை அடக்கியாளாமலும் மக்களுடைய நலனைச் சிறிதும் பேணுமலும் தன்னுடைய அரண்மனையிலேயே அடைப்பட்டுக் கிடந்தான்.[1] இவ்விதமாக, விருபாட்சன் ஆட்சி புரிந்தமையால் பாமினி சுல்தான் விஜயநகரத்திற்குச் சொந்தமான கோவா, சௌல், தபோல் என்ற இடங்களைக் கைப்பற்றிக் கொண்டனன். பாண்டிய நாட்டில் விஜயநகரத்திற்கு அடங்கியிருந்த புவனேகவீரன் சமரகோலாகலன் என்ற பாணர்குலத்தலைவன் விருபாட்சனுக்கு எதிராகக் கலகம் செய்து சுயேச்சை அடைந்தனன். 1469ஆம் ஆண்டில் புவனேகவீரன் தமிழ்நாட்டின் மீது படையெடுத்து வந்து காஞ்சிபுரத்தைக் கைப்பற்றிக் கொண்டனன். காஞ்சிபுரத்தில் உள்ள ஏகாம்பரநாதர் கோவிலில் காணப்பெறும் கல்வெட்டு ஒன்றில் காஞ்சிநகர் புவனேகவீரனுடைய ஆட்சியில் அடங்கியிருந்ததாகக் கூறப்பட்டுள்ளது.[2]

கி. பி. 1470ஆம் ஆண்டில், கிருஷ்ணை—கோதாவரி நதிகளுக்கிடைப்பட்ட நாட்டில் பாமினி சுல்தான் மூன்ருவது முகம்மதுஷாவும், புருஷோத்தம கஜபதி என்ற கலிங்கமன்னன் விஜயநகரத்து சாளுவ நரசிம்மர் ஆகிய மூன்று தலைவர்களுடைய ஆதிக்கப் போட்டியொன்று நிகழ்ந்தது. மூன்ருவது முகம்மது (பாமினி) சுல்தான் விஜயநகரப் பேரரசின் கிழக்குப் பகுதியின் மீது படையெடுத்து கொண்டபள்ளி என்ற இடத்தைத் தன் வசப்படுத்திக் கொண்டான். பின்னர், நெல்லூரையும் பிடித்து

[1] R. Sewell, pp. 292.

[2] Dr. A. Krishnaswami, op. cit p. 123

அங்கிருந்து காஞ்சிபுரம் வரையில் படையெடுத்துச் சென்றான். பெரிஷ்டா, டபடாபா என்ற இரு இஸ்லாமிய வரலாற்றாசிரியர் களும், முகம்மது ஷா காஞ்சிபுரத்திலிருந்த கோவில்களைக் கொள்ளையடித்து அச் செல்வங்களையெல்லாம் வாரிக் கொண்டு சென்றனன் எனக் கூறியுள்ளனர். ஆனால், சாளுவ நரசிம்மனும் அவருடைய சேனைத் தலைவர் ஈஸ்வர நாயக்கரும், கண்டுக்கூர் (Kandukur) என்னுமிடத்தில் முகம்மது ஷாவின் படைகளை எதிர்மடக்கி அவர்கள் கவர்ந்து சென்ற பொருட்களைத்திருப்பப் பெற்றுக் கொண்டனர்.[1] மேற்கூறப்பெற்ற செய்திகளிலிருந்து விஜயநகரப் பேரரசின் தலைமை அதிகாரம், பல வழிகளில், விருபாட்சராயருடைய ஆட்சிக்காலத்தில் மறையத் தொடங் கியது, என நாம் அறிந்து கொள்ளலாம். ஆயினும், சந்திர கிரியில் மகாமண்டலேசுவரனாக இருந்த சாளுவ நரசிம்மர் என்பார் விஜயநகரப் பேரரசு சிதைந்து போகாதவாறு தகுந்த நடவடிக்கை எடுத்து எவ்வாறு பேரரசை பேணினார் என்பதை அடுத்த பகுதியில் நாம் காண முடியும்.

அராபிக் கடற்கரையில் அமைந்திருந்த விஜயநகரத்திற்குச் சொந்தமான துறைமுகங்களையும் தகுந்த முறையில் பாதுகாவல் செய்யாது தவறியதால், அயல்நாட்டு வாணிகமும் குறையலா யிற்று. அரேபியநாட்டு வியாபாரிகள் விஜயநகரத்தோடு வியாபாரம் செய்யாமல் பாமினி சுல்தான்களுடைய நாட்டில் வியாபாரம் செய்யத் தொடங்கினர். விருபாட்சன் தன்னைத் தானே திருத்திக் கொள்ளவுமில்லை, பிறர் சொற்படியும் கேட்காமல் அரசியலை சீர்குலைத்ததைக் கண்ட அவனுடைய மூத்தமகன் தன் தகப்பனைக் கொலை செய்வித்தான். தன் தகப்பனுக்குப் பிறகு தனக்கு அரச பதவி வேண்டுவதில்லை என மறுத்து தன் தம்பி பெத்தராயன் என்பானை அரசனாக ஒப்புக் கொண்டான். இந்த பெத்தராயன் என்பானை நீக்கி விட்டு எவ்வாறு சாளுவ நரசிம்மர் அரசுரிமை எய்தி சாளுவ வமிசத்தை நிலை நாட்டினார் என நாம் அடுத்துவரும் பகுதியில் அறிந்து கொள்ளலாம்.

## சாளுவ நரசிம்மன்

விஜயநகர வரலாற்றில் முக்கியமான நிகழ்ச்சிகளில் பங்கு கொண்ட சாளுவ வமிசத்தினர் புராணங்களில் திருமாலுக்குப் பகைவர்களாக கருதப் பெறும் சால்வர் என்ற கூட்டத்தை

[1] ib id. p. 139.

சேர்ந்தவரல்லர். சாளுவ நரசிம்மருடைய காலத்தில் துளு நாட்டில் வாழ்ந்த சமண சமயத்தைச் சேர்ந்த சாளுவர் வேறு இனத்தைச் சார்ந்தவராவர். தெலுங்கு மொழியிலும் கன்னட மொழியிலும் சாளுவ என்ற சொல் பிற பறவைகளை வேட்டை யாடுவதில் வல்ல இராசாளி என்னும் பறவையைக் குறிக்கும். சாளுவ நரசிம்மர் எழுதிய இராமஆப்யூதயம் என்னும் நூலில் கலியாணபுரத்தில் அரசு செலுத்திய குண்டர் என்பாரைப் பற்றிய வரலாற்று குறிப்புகள் காணப்பெறுகின்றன. அவருடைய ஆறுபுதல்வர்களில் மங்கு என்பார் குமாரகம்பணன் தமிழ் நாட்டில் சம்புவராயர்களோடும், மதுரை சுல்தான்களோடும் போரிட்டப் பொழுது அவருடைய வலதுகை போல் இருந்து உதவி செய்தவராவர். மதுரை சுல்தான்களுடைய படையை எதிர்த்து இராசாளி பறவை போல் தாக்கி வெற்றி கொண்டமை யால் அவருக்கு ‘சாளுவ’ என்ற பட்டம் அளிக்கப்பெற்றது. இந்த சாளுவ மங்கு என்பாரின் வழியிலே தோன்றியவர் சாளுவ நரசிம்மன்.

சாளுவ வமிசத்தின் தலைவர்களைப் பாமினி சுல்தான்கள் கலியாணபுரத்தை விட்டு நீங்கும்படிச் செய்தனர். பின்னர் அவர்களுள் குண்டா, மங்கு என்ற தலைவர்கள் விஜயநகரப் பேரரசைத் தோற்றுவித்த சங்கம வமிசத்தினரோடு ஒத்துழைத்து அவர்களுக்கு அடங்கிய சிற்றரசர்களாக இருந் தனர். சாளுவ நரசிம்மனின் தகப்பன் சாளுவ திப்பன் என்று அழைக்கப் பெற்றார். இவர் இரண்டாம் தேவராயருடைய தமக்கையை மணந்து சங்கம வமிசத்து அரசர்களோடு நெருங்கிய உறவு கொண்டிருந்தார். தமிழ்நாட்டில் சந்திரகிரி இராச்சியத்திற்கு மகாமண்டலேசுவரனாக நியமிக்கப் பெற்றார். தன்னுடைய தகப்பனுக்குப் பிறகு 1450ஆம் ஆண்டில் சந்திரகிரி இராச்சியத்திற்கு மகாமண்டலேசுவரன் ஆனார். இவருடைய கல்வெட்டுக்கள் விஜயநகரப் பேரரசின் மத்திய, கிழக்குப் பகுதி களில் காணப்பெறுகின்றன. 1457-ல் எழுதப் பெற்ற கல்வெட்டு ஒன்று இவரை ‘மகாஅரசு’ என்று கூறுகிறது.

செங்கற்பட்டு மாவட்டத்தில் நகர் என்ற இடத்தில் கிடைத்ததும் 1452ஆம் ஆண்டில் பொறிக்கப் பெற்றதுமான கல்வெட்டு ஒன்று மகாமண்டலேசுவர, மேதினி மீசுர கண்ட சாளுவ நரசிம்மதேவர் தமிழ்நாட்டில் அரசு புரிந்ததாகக் கூறுகிறது.[1] சாளுவ நரசிம்மர் 44 ஆண்டுகளுக்கு விஜய

1 No. 295 of 1910.

நகரத்தை ஆண்டதாக நூனிஸ் கூறியுள்ளார். ஆனால் அறிஞர் ஒ. இராமச்சந்திர அய்யர் என்பார் 1452 முதல் 1492ஆம் ஆண்டுவரையில் நாற்பது ஆண்டுகளுக்கு விஜய நகரப்பேரரசில் முக்கியமான பங்கு கொண்டார் எனக் கூறுவர். இந்த நாற்பது ஆண்டுகளில் 1452 முதல் 1485 வரையில் சந்திரகிரி இராச்சியத்தில் மகாமண்டலேசுவரர் ஆகவும் பின்னர் ஏழு ஆண்டுகளுக்கு 1492ஆம் ஆண்டுவரையில் விஜய நகரப் பேரரசராகவும் பதவி வகித்தார் எனக் கூறுவர். பெரிஷ்டா, டபடாபா என்ற இஸ்லாமிய வரலாற்று ஆசிரியர் களும் இவருடைய பெருமையை ஒப்புக் கொள்ளுகின்றனர். கர்நாடக நாட்டையும், தெளிங்கானாவையும் தன்னுடைய ஆட்சியில் அடங்கும்படிச் செய்து, பலம் பொருந்திய பல அரண்களைத் தன்வசப்படுத்தி தன்னுடைய அதிகாரத்தை நிலைப்பெறும்படிச் செய்தார் என பெரிஷ்டா கூறியுள்ளார். விஜயநகரத்தில் அரசு செலுத்திய மற்ற அரசர்களைவிட சேனை பலமும் போர் செய்யும் திறமையும் மலைபோன்ற யானைப் படைகளையும், அலக்சாந்தருடைய அரண்மிகுந்த கோட்டை களைப் போன்ற பாதுகாப்பான இடங்களையும் கொண்டிருந்தார் என டபடாபா கூறியுள்ளார்.[1] சங்கம வமிசத்தின் கடைசி அரசர்களாகிய இரண்டாம் விருபாட்சனும் அவருடைய மகனும் ஆட்சி செலுத்திய காலத்தில் விஜயநகரப் பேரரசு மிகுந்த சீர் கேடுற்றது. அவ்வித சீர்கேட்டிலிருந்து பேரரசைப் பாதுகாத் தவர் சாளுவ நரசிம்மனேயாவர்.

விருபாட்சனுடைய ஆட்சியில் ஒரிசா நாட்டிலிருந்து ஒட்டியாகன் தமிழ்நாட்டிலுள்ள திருக்கோவலூர் வரை படையெடுத்து வென்றனர் என்பதை முன்பகுதியில் கண்டோம். சாளுவர நரசிம்மன் தன்னுடைய சேனைத்தலைவன் அன்மை ராசப்பன் என்பாரை அனுப்பி திருக்கோவலூர் பகுதியிலிருந்து ஒட்டியர்களைத் துரத்தியடிக்கும்படிச் செய்தார். ஒட்டர தேசத்து அரசர்களிடமிருந்து உதயகிரியையும் அதைச்சார்ந்த இடங்களையும் திரும்ப பெற்றார். பேரரசின் வடபகுதியில் தன்னுடைய சேனையுடன் சாளுவ நரசிம்மன் இருந்த பொழுது, பாண்டிய நாட்டிலிருந்து வாணர் குலத்தலைவனாகிய புவனேக வீரன், சமரகோலாகலன் காஞ்சிபுரத்தைக் கைப்பற்றித் தன் வசப்படுத்திக் கொண்டான். இந்த பாணர் குலத்தலைவனாகிய புவனேகவீரனையும் காஞ்சிபுரத்திலிருந்து தெற்கு நோக்கிப் பின்வாங்கும்படிச் செய்து காஞ்சிபுரத்தை மீண்டும் விஜயநகரப் பேரரசின் ஆட்சியில் கொண்டு வந்தார்என சாளுவ அப்பூதபம்

[1] S. K. Iyengar, A. Little Known Chapter of Vijayanagar History, P. 41

என்ற நூலில் கூறப்பெற்றுள்ளது. மேற்கூறப்பெற்ற வெற்றிகளுக்குப் பிறகு சாளுவ நரசிம்மர், மதுரை, இராமேச்வரம் முதலிய இடங்களுக்குப் புனிதயாத்திரை செய்தார் என நாம் அறிகிறோம். சாளுவ நரசிம்மருக்கு விஜயநகரப் பேரரசைக் காப்பாற்றியதில் மிகுந்த உதவி செய்தவர்கள் நாகம நாயக்கர் ஆரவீட்டு புக்கர், துளுவ ஈச்வர நாயக்கர் முதலியோர் ஆவர்.

## சாளுவ நரசிம்மன் ஏற்படுத்திய அரசியல் புரட்சி

இரண்டாம் விருபாட்சனுக்கு இரு புதல்வர்கள் இருந்தனர். அவர்களுள் மூத்தவன் தன் தகப்பனுடைய ஆட்சியின் இழிந்த நிலையை வெறுத்து தன் தகப்பனை கொலை செய்யத் துணிந்தான். தனக்கு அரச பதவியும் வேண்டுவதில்லையென வெறுத்துத் தள்ளினான். ஆகையால், இளையவன், பெத்தராயன் என்ற பெயருடன் விஜயநகர அரசனானான். இந்த பெத்தராயன் என்ற அரசனும் தன் தகப்பனைப்போலவே அரசகாரியங்களை கவனிக்காமல் சிற்றின்பத்தில் மூழ்கி அரசியல் சீர்குலையும்படி நடந்து கொண்டான். இவற்றைக் கண்ட சாளுவ நரசிம்மன் தானே அரசாட்சியைக் கைப்பற்றி விஜயநகரப் பேரரசைப் பாதுகாக்க முன்வந்தான். தன்னுடைய சேனைத்தலைவன் நரச நாயக்கனை அனுப்பி விஜயநகரத்திலுள்ள அரண்மனையையும், அரசாங்க கருவூலத்தையும் கைப்பற்றும்படி ஆணையிட்டான். நரச நாயக்கன் எவ்விதம் விஜயநகரத்திலிருந்து பெத்தராயனைத் துரத்தி விட்டு சங்கமவமிசம் முடிவடையும்படிச் செய்து சாளுவ ஆட்சியை அமைத்தான் என்பதை நூனிஸ் கூறியுள்ளார்.

'சாளுவ நரசிம்மனுடைய சேனைத்தலைவன் விஜயநகரத்திற்குள் நுழைந்த பொழுது, அவ்விடத்தைப் பாதுகாக்க ஒருவரும் முன்வரவில்லை. பெத்தராயனிடம் இச் செய்தியைக் கூறியபொழுது அவன் அதை நம்புவதற்கு மறுத்தான். தன்னுடைய அரண்மனைக்குள் ஒருவரும் நுழைய முடியாதெனக் கூறிக்கொண்டே இருந்தான். நரச நாயக்கர், அரண்மனையின் அந்தபுரத்திற்குள் தன் சேனையுடன் நுழைந்த பிறகு பெத்தராயன் விஜயநகரத்தை விட்டு, அரண்மனையின் தோட்ட வாயிலின் பின்புறமாக நுழைந்து தப்பி பிழைத்தனன். அவனைத் தேடிச் சென்று பிடிப்பதற்கு ஒருவரும் முன்வரவில்லை.[1]

இந்த அரசியல் புரட்சியைச் சாளுவ நரசிம்மனுடைய புரட்சியென வரலாற்றாசிரியர்கள் அழைத்துள்ளனர். பின்னர்

[1] R. Sewell, op. cit. pp. 293—4

பேரரசில் வாழ்ந்த தலைவர்கள் அனைவரும் சாளுவ நரசிம்மனைப் பேரரசனாக ஒப்புக் கொண்டனர். விஜயநகர அரசும் நரசிம்மனுடைய பெயரால் அழைக்கப் பெற்று 'நரசிம்ம ராச்சியம்' என்று அந்நிய நாட்டவர்களால் கருதப்பெற்றது. இரண்டாம் விருபாட்சனும் அவனுடைய இரண்டாவது மகனும் தங்களுடைய கடமைகளை மறந்து வீண்காலம் கழித்தமையால் தான் இப் புரட்சி ஏற்பட்டதெனக் கூறலாம். சாளுவ நரசிம்மனும், நரச நாயக்கரும் இப் புரட்சிக்குக் காரணமாக இருந்த போதிலும், தங்களுடைய சுயநலத்தைக்கருதி இந்த அரசியல் மாற்றத்தை அவர்கள் உண்டாக்கவில்லை. இஃதை இங்கிலாந்து நாட்டில் 1688ஆம் ஆண்டில் தோன்றிய இரத்தமில்லாப் புரட்சிக்கு ஒப்பிடலாம். இப் புரட்சியில் சில மகளிர் மட்டும் உயிரிழந்தனரே அன்றி மற்ற உயிர்சேதம் பொருட்சேதங்கள் ஏற்படவில்லை. சாளுவ நரசிம்மனும் தன்னுடைய வமிசத்தின் சுயநலத்தைக் கருதியோ, அல்லது தான் மேன்மையடைய வேண்டுமென்றோ இந்த புரட்சிகரமான செயலில் ஈடுபடவில்லை.[1]

சாளுவ நரசிம்மர் தன்னுடைய சேனைத்தலைவன் நரச நாயக்கனுடைய உதவி கொண்டு விஜயநகரப் பேரரசின் பெருமையை மீண்டும் நிலை நிறுத்தினான். 1490ஆம் ஆண்டில் பாமினி நாட்டில் சுல்தான் பதவியை வகித்த காசிம் பரீத் என்பாருடைய உதவி கொண்டு, விஜயபுரி அடில்ஷா சுல்தானிடமிருந்து இராய்ச்சூர், முதுகல் என்ற இரண்டிடங்களையும் விஜயநகரப் பேரரசின் கீழ் கொண்டு வந்தார். பேரரசின் கிழக்குப் பகுதியில் புருஷோத்தம கஜபதி என்ற கலிங்க நாட்டரசனால் கைபற்றப் பெற்ற இடங்கள் எல்லாம் மீண்டும் விஜயநகர ஆட்சிக்குட்படுத்தப் பெற்றன. பாண்டியநாட்டில் சுயேச்சையடைந்த புவனேக வீரன் சமரகோலாகலன் என்ற பாணர்குலத் தலைவனும் சாளுவ நரசிம்மனுடைய தலைமையை ஒப்புக் கொண்டான். மேற்கூறப் பெற்றவாறு சாளுவ நரசிம்மன் அடைந்த வெற்றிக் களெல்லாம் அக்காலத்திய இலக்கியங்களிலும், கல்வெட்டுக்களிலும் கூறப்பெற்றுள்ளன.

சாளுவ நரசிம்மனுடைய புகழ் தென்னிந்தியாவிலும் தென்னிந்தியாவோடு தொடர்பு கொண்ட மற்ற அயல்நாடுகளிலும் பரவியது. ஆகையால், போர்த்துகீசியர் போன்ற அந்நிய நாட்டவர், விஜயநகரப் பேரரசை 'நரசிங்க ராச்சியம்' என்று அழைக்கலாயினர். போர்த்துக்கீசியருடன் நட்புறவு கொண்டு போர்த்துக்கீசிய வியாபாரிகள் கொண்டு வந்த குதிரைகளையெல்

[1] R. Sathianathaier, Vol. II, p. 167.

லாம் வாங்கித் தன்னுடைய குதிரைப் படையை பலப்படுத்திஞர். அவருடைய இறுதிக்காலத்தில் விஜயநகரப் பேரரசையும் தன்னுடைய குமாரர்கள் இருவரையும் நரச நாயக்கரிடம் ஒப்படைத்துத் தன்னுடைய குமாரர்களில் அரசாட்சி செய்யத் தகுதியுள்ளவனுக்கு அரசபதவியை அளிக்குப்படி ஓர் உயில் எழுதி வைத்ததாக நாம் அறிகிரும். இராய்ச்சூர், உதயகிரி, கொண்டவீடு என்ற மூன்று இடங்களையும் தன்னுல் கைப்பற்ற முடியாததற்கு மிக்க வருத்தமுற்று, எவ்வாற்ருனும் அவற்றைக் கைப்பற்றி விஜயநகரப் பேரரசை நிலை நிறுத்துமாறு நரச நாயக்கரை வேண்டிக் கொண்டார்.

சாளுவ நரசிம்மர் ஏழு ஆண்டுகளே அரசப்பதவியை வகித்த போதிலும் அவருடைய தலைமுறையில் விஜயநகரப் பேரரசிற்கு ஒரு தூண் போன்று விளங்கிஞர். வைணவ சமயத்தைப் பின்பற்றிய போதிலும் சைவ சமயத்தைச் சேர்ந்தோரைத் துன்புறுத்தவில்லை. தெலுங்கு மொழியில் உள்ள இராம ஆப்யூதயம் என்ற நூல் இராமாயணத்தின் சாரமாகக் கருதப் பெறுகிறது. இது இவரால் இயற்றப் பெற்றதாகும். இராசநாத திண்டிமன்பீன வீரபத்திரர் என்ற தெலுங்குப் புலவர்கள் இவரால் ஆதரிக்கப் பெற்றனர்.

# 22. துளுவ வமிசத்தினர்

விஜயநகர வரலாற்றில் சாளுவர்களும், துளுவர்களும் ஒன்றுகக் கருதி மயங்கிய வரலாற்று மாணவர்களும் உண்டு. சாளுவ என்ற பட்டத்தை, சாளுவ மங்குவும் அவருக்குப் பின் வந்தோருமாகிய சாளுவ நரசிம்மர்; இம்மடி நரசிம்மர் ஆகிய மூன்றுபேரும் கொண்டிருந்தனர். ஆனுல் துளுவர் என்ற சொல் ஓரினத்தைக் குறித்தது. திம்மன் என்பாரும் அவருடைய மகன் நரச நாயக்கரும் துளுவ இனத்தைச் சேர்ந்தவர்கள். இந்த துளுவ இனத்துத் தலைவர்களும், நரசிம்மன் என்ற பெயரையும், சாளுவ என்ற பட்டத்தையும் மேற்கொண்டனர். எடுத்துக்காட்டாக நரச நாயக்கரும் அவருடைய மகன் வீரநரசிம்மனும், நரசிம்மன் என்ற பெயரை மேற்கொண்டனர். இவ்விருவரும் சாளுவ வமிசத்தைச் சேர்ந்தவர்கள் அல்லர். இவர்கள் துளுவ வமிசத்தைச் சேர்ந்தவர்கள். விஜயநகரத்து அரசர்களுடைய அமைச்சர்களும், ஆளுநர்களும் சாளுவ என்ற பட்டத்தை மேற்கொள்ளுவதும் உண்டு. சாளுவ திம்மன் என்ற புகழ்பெற்ற அமைச்சர் அந்தணர் வகுப்பைச் சேர்ந்தவர். ஆனுல் அவர் சாளுவ என்ற பட்டத்தை மேற்கொண்டாரே தவிர, சாளுவ நரசிம்மனுடைய சந்ததியைச் சேர்ந்தவரல்லர். சாளுவ நரசிம்மனும் அவருடைய மகன் இம்மடி நரசிம்மனும் சாளுவ மரபைச் சேர்ந்தவர்களாவர். துளுவர்களும், சாளுவர்களும் இருவேறு இனத்தைச் சேர்ந்தவர்களாவர்.

## துளுவ நரச நாயக்கர்

சாளுவ நரசிம்மனுடைய இறுதிக்காலத்தில் தன்னுடைய இரு குமாரர்களை நரசநாயக்கரிடம் ஒப்படைத்து விஜயநகரப் பேரரசைக் காப்பாற்றும்படி வேண்டிக்கொண்டார் என நாம் முன்னரே கண்டோம். சாளுவ நரசிம்மர் இறந்தபிறகு, நரச நாயக்கர் விஜயநகரப் பேரரசின் பாதுகாவலராகப் பணியாற்றி அவருடைய மூத்தமகனைப் பேரரசனுக நியமித்தார். 'ஆனுல் இந்த இளவரசனை நரச நாயக்கருடைய விரோதியொருவன் கொலைசெய்துவிட்டு அக் கொலைக் குற்றத்தை நரச நாயக்கர்

2
மீது சுமத்துவதற்குத் தகுந்த தருணம் பார்த்துக்கொண்டிருந்த தாகவும், அவ்வாறே அந்த இளவரசன் கொலைசெய்யப் பெற்றதாகவும், அக் கொலைக்குற்றத்தைப் புரிந்தவனுக்கு தகுந்த தண்டனையளித்து மிக்க புகழடைந்ததாகவும்' நூனிஸ் கூறியுள்ளார். இக் கூற்று எவ்வளவு உண்மையுடையதென நாம் ஆராய்ந்தறிதல் அமைவுடைத்தாகும்.

சாளுவ நரசிம்மனுடைய முதல் மகன், நரச நாயக்க ருடைய விரோதிகளில் ஒருவனால் கொலை செய்விக்கப்பெற்ற பிறகு, அவருடைய இரண்டாவது மகனை விஜயநகரப் பேரரசனாக முடிசூட்டுவித்தார் என்று நூனிஸ் கூறியுள்ளார். மேலும் மூத்த இளவரசனைக்கொன்ற துரோகியைக்கொன்று நரச நாயக்கர் நற்பெயரெடுத்தார் என்றும் கூறுவர். 'சாளுவ நரசிம்மனுடைய இரண்டாவது மகன், இம்மடி நரசிம்ம தர்ம ராயன் (Tamarao) என்ற பெயருடன் முடிசூட்டப்பெற்ற பிறகு, பெனுகொண்டா என்ற அரண்மிகுந்த இடத்தில் சிறையிலடைக்கப்பட்டு, பின்னர் இரகசியமாக நரசநாயக்கரின் உத்தரவின்படி கொலைசெய்யப் பெற்றதாகவும் பின்னர் நரச நாயக்கரே அரசபதவியை கைப்பற்றியதாகவும் நூனிஸ் கூறி யிருப்பது உண்மைக்குப் புறம்பாகத் தெரிகிறது.[1]

நரச நாயக்கர், இம்மடி நரசிம்மனைக் கொன்று அரசபதவி யைக் கைப்பற்றியதாகக் கூறப்படும் செய்தி நம்பத் தகுந்த தல்ல.[2] இம்மடி நரசிம்மனுடைய அண்ணன் நரசநாயக்க ருடைய விரோதியொருவனால் கொல்லப்பட்டான் என்பதை மறுத்து, அந்த இளவரசன் 1493ஆம் ஆண்டில் நடந்த போரில் காயமுற்று அக் காயத்தினால் இறந்தான் என்று பெரிஷ்டா கூறுவதை நாம் கருதவேண்டும். மேலும் கல் வெட்டுக்கள் நரச நாயக்கர் 1505ஆம் ஆண்டில் இறந்து விட்டதாகவும் இம்மடி நரசிம்மன் 1506ஆம் ஆண்டுவரை யிலும் இருந்ததாகவும் கூறுகின்றன. ஆகையால் நரச நாயக்கர் இம்மடி நரசிம்மனைக் கொன்றிருக்க முடியாது. இம்மடி நரசிம்மன் 1493முதல் 1506 ஆம் ஆண்டுவரையில் பெயரளவில் அரசனாக இருந்திருக்க வேண்டும். நரசநாயக்கர் விஜயநகர ஆட்சியைக் கைப்பற்றி ஆட்சிப்பதவியில் அமர வில்லை. அவருடைய மகன் வீரநரசிம்மன் அல்லது வீர நரசிம்ம புஜபலராயன் என்பார் 1506ஆம் ஆண்டில் இம்மடி

[1] R. Sathianathaier, ibid. p. 169

நரசிம்மராயனைக் கொன்றோ அல்லது விலக்கிவிட்டோ துளுவ வமிச ஆட்சியை ஏற்படுத்தியதாகத் தெரிகிறது.

## நரச நாயக்கருடைய வெற்றிச் செயல்கள்

விஜயநகரப் பேரரசின் பாதுகாவலராக இருந்து ஆட்சி புரிந்த நரச நாயக்கருடைய வீரச்செயல்கள் அவருடைய புதல்வர்களுடைய ஆட்சிக்காலத்தில் பொறிக்கப்பெற்ற கல்வெட்டுக்களிலும், பாரிஜாதபகரணமு, அச்சுதராய அப்யூதம் முதலிய தெலுங்கு நூல்களிலும் வெகு விமரிசையாகக் கூறப்பெற்றுள்ளன. மைசூர் நாட்டில் நகர் என்னுமிடத்தில் காணப்பெற்ற கல்வெட்டில் பின்வருமாறு நரச நாயக்கருடைய வீரச்செயல்கள் தொகுத்துக் கூறப்பெற்றுள்ளன. 'காவிரி நதியில் பெருவெள்ளக்காலத்தில் அந்த ஆற்றைக் கடந்து ஸ்ரீரங்கப் பட்டினத்தைப் பிடித்து, அவ்வூரின் அரசனைத் தனக்கு அடங்கும்படிச் செய்து, நாடெங்கும் தன்னுடைய புகழ் பரவும்படிச் செய்தார். சேர சோழ நாட்டு மன்னர்களையும், மதுரையை ஆண்ட பாண்டியன் மானபூஷணன் என்ற அரசனையும் வெற்றிகொண்டார். கொடுங்கோன்மை புரிந்த துருக்கர்களையும் கஜபதி அசர்களையும் வென்று அடக்கினார்.[1]

நரச நாயக்கர் வென்ற சோழநாட்டரசன், அவருடைய காலத்தில் தஞ்சை திருச்சிராப்பள்ளி சீமைகளை ஆண்டு வந்த கோனேரிதேவ மகாராஜன் ஆவன். இக்கோனேரி தேவன் விஜயநகரப் பேரரசிற்கு அடங்கித் தமிழ் நாட்டில் ஒருபகுதிக்கு ஆளுநராக இருந்தான். சாளுவ நரசிம்மனும், நரச நாயக்கரும், பேரரசின் வடக்குப்பகுதியில் தோன்றிய கலகங்களையடக்கி அமைதியை நிலைநாட்டிக் கொண்டிருக்கும்பொழுது, தமிழ்நாட்டில் கோனேரிதேவன் சுயேச்சையடைய விரும்பிக் கலகம் செய்ததாகத் தெரிகிறது. திருவரங்கத்திலுள்ள திருமால் கோயிலில் பணிசெய்த வைணவர்களையும் கொடுமைப்படுத்தியதாகவும் தெரிகிறது. அவனை அடக்குவதற்கு 1499ஆம் ஆண்டில் சுவாமி நரச நாயக்கர் தமிழ்நாட்டின்மீது படையெடுத்து வந்தார் என்று தென்னார்க்காடு ஜில்லாவில் கிடைத்த கல்வெட்டு ஒன்றில் கூறப்பெற்றுள்ளது. கோனேரி தேவன் தன்னுடைய பெரியதொரு யானைப்படையுடன் நரச நாயக்கரை எதிர்த்தபோதிலும் முடிவில் தோல்வியுற்று கைதியாக்கப் பெற்றனன். பின்னர் நரசநாயக்கர் பாண்டியநாட்டின்மீது படையெடுத்து மறவ

1. Epigraphia Carnatica. Vol. 8. Nagar 64.

பூபகன் என்ற வாணர்குலத் தலைவனுடைய அரசியல் கலகத்தை அடக்கினர்.

நரச நாயக்கர் ஆட்சிக்காலத்தில் தென்காசிப் பகுதியில் ஜடாவர்மன் குலசேகர பாண்டியன் என்ற பாண்டியன் மான பூஷணன் என்ற பெயர் பூண்டு ஆட்சி செலுத்தி வந்தான். அவ்வரசனும் நரச நாயக்கரால் தோற்கடிக்கப் பெற்று விஜய நகரப் பேரரசின் தென் எல்லை கன்னியாகுமரி வரையில் பரவியது. காவிரி நதியைக் கடந்து ஸ்ரீரங்கப்பட்டினத்தில் ஆட்சி செலுத்திய நஞ்சராஜா என்பவர் மீதும் நரச நாயக்கர் வெற்றி கொண்டதாக நாம் அறிகிறோம். பேரரசின் வடக்கு எல்லையில் புருஷோத்தம கஜபதி விஜயநகரப்பேரரசின் பகுதி களின் மீது படையெடுக்காமல் நரச நாயக்கர் தகுந்த நடவடிக் கைகளை எடுத்துக் கொண்டார்.

## துளுவவமிசத்து அரசர்கள்
## வீர நரசிம்ம புஜபலராயர் (1506—1509)

துளுவ வமிசத்தின் தலைவராகிய நரச நாயக்கர் விஜயநகரப் பேரரசின் பதவியை விரும்பாது பேரரசின் பாதுகாவலராகவே வாழ்ந்து உயிர் துறந்தார். அவருக்குப் பிறகு அவருடைய முதல் மகன் வீர நரசிம்மன் என்பார் சாளுவ வமிசத்துக் கடைசி அரசனாகிய இம்மடி நரசிம்மனை நீக்கி விட்டு விஜயநகரப் பேரரசைக் கைப்பற்றினர். இவ்வரலாற்று நிகழ்ச்சியே விஜயநகரப் பேரரசில் நிகழ்ந்த இரண்டாவது அரசியல் புரட்சி யாகும். சாளுவ வமிசத்து அரசர்கள் தங்களுடைய பதவியை இழந்து துளுவ வமிசத்து அரசர்கள் ஆளத்தொடங்கினர்.

நூனிஸ் தன்னுடைய வரலாற்றில் 'புசுபால்ராயர்' (Busubal Rao) என்று அழைத்துள்ள இவ்வரசனுடைய முழுப்பெயர் வீர நரசிம்ம புஜபலராயர் என்பதாகும். இவ்வரசன் தர்மராயன் என்ற இம்மடி நரசிம்மனை நீக்கி விட்டு அரச பதவியை அடைந்தமையால் இவரது, ஆட்சியின் தொடக்கத் தில் பேரரசிற்கு அடங்கியிருந்த பலசிற்றரசர்கள் கலகம் செய்யத் தொடங்கினர். தன்னுடைய ஆட்சிகாலம் முழுவதிலும் இவ் வரசன் போர்த் தொழிலில் ஈடுபட்டிருந்ததாக நூனிஸ் கூறியுள் ளார். தமிழ்நாடு, மைசூர், துளு நாடு, முதலிய பகுதிகளில் ஏற்பட்ட கலகங்களை இவ்வரசன் அடக்கியிருக்க வேண்டும். வீர நரசிம்மருடைய தம்பி கிருஷ்ணதேவராயருடைய ஆட்சியில் பெருமை பெற்று விளங்கிய சாளுவ திம்மர் என்ற அந்தண

அமைச்சர் இவருக்கும் அமைச்சராக விளங்கினர். இவருடைய ஆட்சியில் விஜயநகரப் பேரரசிற்கு விஜயம் செய்த வார்தீமா என்ற இத்தாலிய வழிப்போக்கர் விஜயநகரத்தைப் பற்றி எழுதி வைத்த குறிப்புகளில் 1506ஆம் ஆண்டில் போர்த்துக்கீசியருடன் போர் நடத்திய செய்தியைப் பற்றிக் குறிப்பிடுகிருர். இராமேஸ்வரம், திருவரங்கம், திருக்குடந்தை, தில்லை, ஸ்ரீசைலம் காஞ்சிபுரம், திருக்களத்தி, திருப்பதி, கோகர்ணம் முதலிய இடங்களில் உள்ள தேவலாயங்களுக்குப் பல நன்கொடைகளை அளித்ததாக அவருடைய கல்வெட்டுக்களிலிருந்து நாம் உணருகிறோம். தன்னுடைய இறுதிக்காலத்தில் அமைச்சராகிய சாளுவ திம்மரை அழைத்துத் தன்னுடைய ஒன்றுவிட்ட சகோதரன் கிருஷ்ணதேவராயருடைய கண்களைப் பிடுங்கி விடுமாறு இவ்வரசன் ஆணையிட்டதாக ஒரு கதை வழங்குகிறது. ஆனல், சாளுவ திம்மர் ஓர் ஆட்டுக்குட்டியின் கண்களைப் பிடுங்கிக் கொண்டுவந்து அவற்றை கிருஷ்ணதேவராயருடைய கண்கள் எனக்காட்டி கிருஷ்ணதேவராயரைக் காப்பாற்றியதாகவும் கதைகள் வழக்கத்தில் உள்ளன. வீரநரசிம்மர், கிருஷ்ணதேவராயரிடம் பொருமை கொண்டிருந்ததற்கு தகுந்த ஆதாரங்கள் இல்லை. வீரநரசிம்மனே தனக்குப் பிறகு தன்னுடைய தம்பி கிருஷ்ணதேவராயர் பட்டத்திற்கு வரவேண்டிய ஏற்பாடுகளை செய்ததாகவும் சில மரபுச் செய்திகள் வழங்குகின்றன.

# 23. கிருஷ்ணதேவராயர் (1509—1530)

## வரலாற்று ஆதாரங்கள்

கி. பி. 1510ஆம் ஆண்டில் ஹம்பீ விருபாட்சர் கோவிலில் வடமொழியிலும், கன்னட மொழியிலும் எழுதப்பெற்ற கல்வெட்டில் கிருஷ்ணதேவராயர் அக்கோவிலுக்கு அளித்த மானியங்களை பற்றியும் இலக்கியத்தில் அவருக்கிருந்த ஆர்வத்தையும், கஜபதி அரசரோடு அவர் போரிட்டதையும், பற்றி கூறப்பெற்றுள்ளன. அமராவதியில் காணப்பெறும் வடமொழிக் கல்வெட்டு 1515-16ஆம் ஆண்டில் எழுதப்பெற்றதாகும். கொண்டவீடு என்னுமிடத்தைக் கைப்பற்றிய வரையில் கிருஷ்ணதேவராயருடைய வீரச் செயல்களைத் தொகுத்துக் கூறுகிறது. குண்டூருக்கு அருகில் உள்ள மங்களகிரியில் சாளுவ திம்மருடைய கொடையைப்பற்றிக் கூறும் கல்வெட்டு கலிங்க நாட்டை வென்று வெற்றித் தூண் ஒன்று நிறுவப்பெற்றதைக் குறிப்பிடுகிறது (1517—18). கொண்டவீடு என்னுமிடத்தில் காணப்பெறும் கற்றூணில் கிருஷ்ணதேவராயர் காலத்தில் விதிக்கப் பெற்ற பலவிதமான வரிகள் தொகுத்துக் கூறப்பெற்றுள்ளன. வடவாற்காட்டில் உள்ள கடலடி என்னுமிடத்தில் கிடைத்த செப்பேடுகள் அச்சுததேவராயர் அரசுரிமை பெற்ற வரலாற்றைப்பற்றிக் கூறுகின்றன. சதாசிவராயருடைய ஆட்சியில் பொறிக்கப் பெற்ற கல்வெட்டுக்களில் இருந்து அவரை ஒரு 'பொம்மை அரசராக' கருதமுடியாது. அவற்றில் இராமராயரும், மதுரை நாயக்க மன்னர்களும் புகழப் பெறுகின்றனர். முதலாவது வெங்கடதேவராயருடைய விளாப்பாக்கம் செப்பேடுகளில் 'ஸ்ரீவிருபாட்சா' என்ற தொடர்களை விட்டு 'ஸ்ரீவெங்கடேசா' என்ற தொடர் கீழ்க் குறிப்பாகக் காணப்பெறுகின்றன. விஜயநகரப் பேரரசில் வைணவச் சமயம் சிறப்புற்றமையை இது குறிக்கக்கூடும். துளுவ, ஆரவீடு வமிசத்து அரசர்களின் மரபு விளக்கப்பட்டியலுக்கு இந்தக் கல்வெட்டுக்கள் மிக்கப் பயனளிக்கின்றன.

## இலக்கியச்சான்றுகள்

கிருஷ்ணதேவராயருடைய காலத்தில் எழுதப்பெற்ற இராயவாசகமு பிற்காலத்தில் தோன்றிய கிருஷ்ணராஜவிஜயமு

என்ற தெலுங்கு நூல்கள் கிருஷ்ணதேவராயருடைய போர்ச் செயல்களைப் பற்றிக் குறிப்பிடுகின்றன. திம்மண்ணு, பெத்தண்ணு என்பாருடைய நூல்களும் சில வரலாற்றுண்மைகளைப் பற்றிக் கூறுகின்றன. கிருஷ்ணதேவராயரால் எழுதப் பெற்ற 'ஆமுக்தமால்யதா' என்ற பெயருடைய ஆண்டாள் வரலாற்றில் பல வரலாற்றுச் செய்திகளும், கிருஷ்ணதேவராயருடைய அரசியல் கொள்கைகளும் காணப்பெறுகின்றன. இராஜநாத திண்டிமர் III என்பாருடைய அச்சுதராய அப்யூதம் என்னும் வடமொழி நூலில் அச்சுதராயருடைய அரசியல் பெருமை விளக்கப் பெற்றுள்ளது. நூனிஸ் என்பாருடைய கூற்றிற்கும், இத்நூலுக்கும் மிகுந்த வேறுபாடுகள் உள்ளன. திருமலாம்பா என்பார் எழுதிய வரதாம்பிகா பரிணயத்தில் துளுவ வமிசத்து அரசர்களுடைய மரபு விளக்கமும் அச்சுதராயருடைய இளமைக் காலத்திய வரலாறும் கூறப்பெற்றுள்ளன. இராமைய்ய அமாத்தியர் எழுதிய சுவரமேள கலாநிதி என்னும் வடமொழி இன்னிசை நூலில் இராமராயருடைய அரசியல் திறமை விளக்கம் பெறுகிறது. வசுசரிதமு என்ற தெலுங்கு நூலில் இராமராயர், திருமலைராயர், வேங்கடாத்திரி என்பாருடைய வரலாற்றுச் செய்திகள் விளக்கம் பெறுகின்றன. பிரபன்னுமிர்தம் என்ற நூல் வைணவ ஆச்சாரியார்களுடைய வரலாற்றைக் கூறுவதுடன் ஆரவீடு வமிசத்தினரின் சமயக் கொள்கைகளை விளக்குகிறது. இராம ராஜ்யமு என்ற நூலில் இராமராயருடைய முன்னேர்களின் வரலாற்றுக் கூறப்பெற்றுள்ளது.

## இஸ்லாமிய வரலாற்று ஆதாரங்கள்

விஜய நகர மன்னர்களுக்கும் தக்காண சுல்தான்களுக்கும் இடையே நிலவிய அரசியல் உறவைப்பற்றி பெரிஷ்டா மிக அதிகமாகக் கூறியுள்ளார். ஆயினும் கிருஷ்ணதேவராயருடைய ஆட்சிச் சிறப்பை அவருடைய வரலாற்று நூலிலிருந்து நாம் உணர்ந்து கொள்ள முடியாது. அரசர்களுக்கும், அவர்களுடைய சேனாதிபதிகளுக்கும் உள்ள வேற்றுமையை அறியாது எல்லோரையும் விஜயநகரத்து அரசர்கள் எனக் கூறுவர். இராமராயருக்கு எதிராக அமைக்கப் பெற்ற இஸ்லாமியக் கூட்டுறவிற்கு விஜயபுரி சுல்தானே முக்கிய காரணமாவார் என பெரிஷ்டா கூறிய போதிலும், டபடாபாவும் கோல்கொண்டா வரலாற்று ஆசிரியரும் வேறுவிதமாகக் கூறுவர். தலைக் கோட்டைப் போரில் இராமராயர் தோல்வியடைந்தது, விஜயநகரப் படையிலிருந்த இரண்டு இஸ்லாமியப் படைத்

தலைவர்களுடைய துரோகச் செயலால் ஏற்பட்டதென்பதை பெரிஷ்டா கூறவில்லை. ஆனால் இராய்ச்சூர் போரிலும், இராம ராயர், சுல்தான்களுடன் நடத்திய போரிலும் இராமராயர் வெற்றி பெற்றதைக் கூறியுள்ளார். இராமராயரும், சதாசிவ ராயரும் ஒருவரே என்றும், அகமதுநகரத்துச் சுல்தான் நிசாம் ஷாவே இஸ்லாமியக் கூட்டுறவிற்குக் காரணமாக இருந்தார் என்றும் டபடாபா கூறுவர். தலைக்கோட்டைப் போரில் இராமராயர் எவ்விதம் தன்னுடைய வீரர்களை உற்சாகப் படுத்தினர் என்பதை டபடாபா எடுத்துக் காட்டுகிறார். ஆனால் பெரிஷ்டா இராமராயருடைய திறமையின்மையை அதிகப் படுத்தியுள்ளார்.

## அயல்நாட்டவர் தரும் வரலாற்றுச் சான்றுகள்

போர்த்துக்கீசியருடைய வரலாற்று ஆசிரியர்களாகிய பாரோஸ், கூட்டோ. கொரியா. காஸ்டன்ஹீடா முதலியோர் கூறும் செய்திகளும், போர்த்துக்கீசிய வழிப்போக்கர்கள் கொடுத்துள்ள செய்திகளும் கிருஷ்ணதேவராயருடைய வரலாற்றை உணர்வதற்கு மிக்கத் துணை செய்கின்றன. 1510ஆம் ஆண்டில் ஆல்புகர்க்கூ என்பவரால் தூதராக விஜயநகரத்திற்கு அனுப்பப் பெற்ற லூயி பாதிரியார் கிருஷ்ணதேவராயர், கஜபதி அரசனுடன் போரிடுவதற்குச் செய்த முன்னேற்பாடுகளைக் கூறியுள்ளார். துவர்த்தி பார்போசா விஜயநகரத்தைப் பற்றிக் கூறியுள்ள செய்திகள் நம்பத்தக்கவையாகும். கிருஷ்ணதேவ ராயரை நேரில் கண்டு அவருடைய தோற்றம், அரசவை அதிகாரங்கள், பழக்க வழக்கங்கள் முதலியவற்றைப் பற்றிக் கூறும் பீயஸ் எழுதிய வரலாற்றுக் குறிப்புக்கள் போற்றத்தக்கவை யாகும். விஜயநகரத்தின் தோற்றத்திலிருந்து, கிருஷ்ணதேவ ராயருடைய ஆட்சிவரையில் விஜயநகரத்தைப் பற்றி நூனிஸ் என்பார் எழுதியுள்ள வரலாற்று நூல் பல உண்மையான வரலாற்றுச் செய்திகளை உணர்த்துகிறது. நூனிஸ் எழுதிய குறிப்புகள், கிருஷ்ணதேவராயர் காலத்திய கல்வெட்டுக்கள், செப்பேடுகள், பெரிஷ்டாவின் வரலாறு முதலியவற்றை விட சிறப்புடையவை யெனக் கூறலாம். பெனுகொண்டாவைத் தலைநகராகக் கொண்டு விளங்கிய காலத்தில் விஜயநகரப் பேரரசைப் பற்றி பெயர் தெரியாத கிருஸ்தவப் பாதிரியாரின் குறிப்புகளிலிருந்து தலைக்கோட்டைப் போருக்குப் பிறகும் விஜய நகரப்பேரரசு தலைதூக்கி நின்றது என்பதை அறியலாம். இரண்டாவது வேங்கடதேவராயருக்குப் பிறகு சந்திரகிரி அரண்மனையில் நடந்த துக்ககரமான சம்பவங்களைப் பற்றி

பாரதாஸ் பாதிரியாரின் சொல்லோவியம் எல்லோராலும் படித்து உணர வேண்டியதொன்றாகும்.

## கிருஷ்ணதேவரின் வாழ்க்கை வரலாறு

நரச நாயக்கருடைய இரண்டாவது புதல்வர் கிருஷ்ண தேவராயர். வீரநரசிம்மராயர், அச்சுதராயர், அரங்கன் என்பாருடைய ஒன்றுவிட்ட சகோதரர் ஆவர். வீரநரசிம்மர் என்ற புஜபலராயர் இறக்கும் தருவாயில் எவ்வித சூழ்நிலையில் கிருஷ்ணதேவராயர் அரசுரிமை எய்தினார் என்பதை நூனிஸ் வெகு விவரமாகக் கூறியுள்ளார். "புஜபலராயர் தான் இறப்பதற்கு முன் சாளுவ திம்மன் என்ற அமைச்சரைத் தன் முன் அழைத்து தன்னுடைய மகன் எட்டு வயது நிரம்பிய சிறுவனை கொண்டு வரும்படிச் செய்தார். விஜயநகரப் பேரரசை ஆட்சி செய்வதற்குத் தகுதியுள்ளவர் கிஷ்ணதேவராயரேயாயினும், தன்னுடைய மகனை அரியணையில் ஏற்றும்படி சாளுவ திம்மரைக் கேட்டுக் கொண்டார். ஆயினும், தன் மகன் மீதுள்ள பாசம் மேலிட்டு கிருஷ்ணதேவராயருடைய கண்களைப் பிடுங்கி விடுமாறு உத்திரவிட்டார். ஆனால், சாளுவ திம்மர் கிருஷ்ண தேவராயரை தனியாகச் சந்தித்து அரசனுடைய ஆணையைக் கூறினார். கிருஷ்ணதேவராயரும் தனக்கு விஜயநகரத்தின் அரசுரிமையைத் தான் விரும்பவில்லை என்றும், தான் இல்லறத்தை விட்டு துறவறத்தை மேற்கொள்ள போவதையும் கூறினார். ஆனால், சாளுவ திம்மர் கிருஷ்ணதேவராயரையும் விஜயநகரப் பேரரசையும் காப்பாற்றி விடுவதெனக் கங்கணம் கட்டிக் கொண்டார். சாளுவ திம்மர் ஓர் ஆட்டுக்குட்டியின் கண்களைப் பிடுங்கி அவை கிருஷ்ணதேவராயரின் கண்கள் என்று கூறியதாகவும் அதை வீரநரசிம்மர் ஒப்புக் கொண்டதாகவும் செய்திகள் வழங்குகின்றன. பின்னர், வீரநரசிம்மர் இறந்த பிறகு சாளுவ திம்மர் கிருஷ்ணதேவராயரை அரியணையில் ஏற்றியதாகவும் நாம் அறிகிறோம்.

## கிருஷ்ணதேவராயரின் முடிசூட்டு விழா

கிருஷ்ணதேவராயருடைய முதல் கல்வெட்டு 1509ஆம் ஆண்டு ஜூலைமாதம்26வெ பொறிக்கப் பெற்றதாகும்.[1] கிருஷ்ணதேவராயர் ஸ்ரீகிருஷ்ணபகவானுடைய அம்சமாக உலகத்தில் அவதரித்தார் என்று சிலர் நம்பினர். ஆகையால், அவருடைய முடிசூட்டு விழா ஸ்ரீகிருஷ்ணபகவானுடைய பிறந்த நாளாகிய கிருஷ்ண

[1] No 703 of 1919. from Bellary Dt.

ஜயந்தியன்று கொண்டாடப் பெற்றது. முடிசூட்டப் பெற்ற பிறகு சுமார் ஒன்றரை ஆண்டுகள் வரையில் தலைநகரத்திலேயே தங்கியிருந்து விஜய நகரப் பேரரசர்களின் கொள்கைகளை ஆராய்ந்து அதன்படி நடப்பதற்கு ஏற்ற திட்டங்களை வகுத்தார். சாளுவ திம்மருடைய திட்டம் ஒன்றைக் கண்ணுற்று அதில் தனக்குப் பின் வரும் அரசர்கள் இராய்ச்சூர், முதுகல், கொண்டவீடு என்ற மூன்று இடங்களையும் விஜய நகரப் பேரரசோடு இணைத்துப் பேரரசை வலிமைப்படுத்த வேண்டும் என்ற விருப்பத்தை உணர்ந்தார். ஆனால், இந்த மூன்று இடங்களையும் கைப்பற்றுவதற்கு முன் தமிழ் நாட்டில் காஞ்சிபுரம் பகுதிகளில் ஆட்சி செலுத்திய காடவர் குலத்து சிற்றரசர்களை வென்று அடக்க வேண்டிய சூழ்நிலை தோன்றியது. அவர்களை வென்று வாகை சூடிய பிறகு பெனுகொண்டா என்னும் இடத்தைக் கைப்பற்றி அங்கே பேரரசிற்கு எதிராக தோன்றிய கலகத்தை அடக்கினர்.

இதன் பிறகு மைசூர் நாட்டில் உம்மத்தூர், சிவசமுத்திரம் என்ற இடங்களின் மீது படையெடுத்தார். உம்மத்தூரை ஆண்ட கங்கராசன் என்பான் தோல்வியுற்று, காவிரி நதியில் மூழ்கி உயிர் துறந்தான். இந்த பகுதிகளைச் சேர்த்து ஸ்ரீரங்கப்பட்டினத்தைத் தலைநகரமாக அமைத்து சாளுவ கோவிந்தராசன் என்பாரை அதற்கு ஆளுநராக நியமித்தார்.

பங்களூர் பகுதியை கெம்பே கௌடர் என்பாருக்கு அளித்து ஆண்டு வரும்படிச் செய்தார்.[1] ஸ்ரீரங்கப் பட்டினத்திலிருந்து விஜயபுரி நாட்டின் எல்லை வரையில் படையெடுத்து, இராய்ச்சூர், முதுகல் என்ற இடங்களைத் தன்வசப்படுத்தி விஜயபுரியின் மீது படையெடுப்பதற்கும் நினைத்தார். அனுல், அவருடைய அமைச்சராகிய சாளுவ திம்மர், முதலில் கலிங்க நாட்டை வென்று அடக்குவது இன்றியமையாததாகும் எனக் கூறவே அவ்வாறே நடக்கலானர்.

## கலிங்கநாட்டு கஜபதி மீது படையெடுத்தல்

கபிலீஸ்வர கஜபதியின் ஆட்சிக் காலத்தில் விஜயநகரப் பேரரசின் வடக்குப் கிழக்குப் பகுதிகள் கலிங்கப் பேரரசில் ஒரு பகுதியாக இருந்தன. அக்காலத்தில் அரசு செலுத்திய பிரதாப ருத்திர கஜபதியிடமிருந்து முன்னர் விஜயநகரப் பேரரசிற்குச் சொந்தமான இடங்களைக் கைப்பற்றுவது கிருஷ்ணதேவராய

[1] K. A. N. Sastri, op. cit. p. 280,

ருடைய முக்கிய கடமையாயிற்று. தொடக்கத்தில் கிருஷ்ணைப் பேராற்றிற்குத் தெற்கில் உள்ள இடங்களைக் கைப்பற்றுவதற்கு மாத்திரம் அவர் திட்டமிட்டார். 1513ஆம் ஆண்டில் உதயகிரி என்னும் இடத்தை முற்றுகையிட்டு அதைக் கைப் பற்றியதனுல் பிரதாபருத்திரகஜபதியின் படைகள் உதயகிரியை விட்டு நீங்கிக் கொண்டவீடு என்னும் கோட்டைக்குள் புகுந்தன. பிரதாபருத்திர கஜபதியின் உறவினன் ஒருவனைச் சிறைப்படுத்தி வெற்றிக் கொண்ட பிறகு திருப்பதிக்குச் சென்று ஸ்ரீவேங்கடேசப் பெருமானை வணங்கி தன்னுடைய தலைநகரத் திற்குத் திரும்பினுர். பிரதாபருத்திர கஜபதியிடமிருந்து வென்று கொண்ட நிலப்பகுதிகளுக்குக் கொண்டராசய்யன் என்பாரை ஆளுநராக நியமித்தார். உதயகிரியிலிருந்து பாலகிருஷ்ண னுடைய உருவச்சிலை யொன்றை கொண்டு வந்து விஜயநகரத் தில் கோவில் ஒன்றை அமைத்து அதற்குக் கடவுண் மங்கலமும் செய்யப் பெற்றது. வியாசராயர் என்ற மகான் இக்கோவிலில் குடிகொண்டுள்ள பெருமானைப் பற்றி ஒரு சிறிய நூலை இயற்றி யுள்ளார்.

## இரண்டாவது போர்

பின்னர், கொண்டவீட்டின் மீது படையெடுத்துச் செல்லும் படி தன்னுடைய அமைச்சர் சாளுவ திம்மருக்கு உத்திரவிட்டார். கொண்டவீடு முற்றுகையிடப்பட்டு அக்கோட்டையும் விஜய நகரப் படைகளின் வசமாயிற்று. பிரதாபருத்திர கஜபதியின் அரசியும், அரசிளங்குமரனும் மற்றும் பல பிரபுக்களும் கை தாக்கப் பெற்று விஜயநகரத்திற்கு அனுப்பப் பெற்றன. கொண்டவீடு ராச்சியத்தை பரிபாலனம் செய்வதற்குச் சாளுவ திம்மரே ஆளுநராக நியமனம் செய்யப் பெற்றுர். பின்னர், கிருஷ்ணதேவராயர் அமராவதிக்கும், ஸ்ரீசைலத்திற்கும் சென்று இறைவனை வணங்கிய பின்னர் விஜயநகரத்திற்குத் திரும்பினுர்.

## மூன்ருவது படையெடுப்பு

மூன்ருவது தடவையாகப் பிரதாபருத்திர கஜபதியின் மீது படையெடுப்பதற்கு முன், கிருஷ்ணதேவராயர் அகோபிலத் திற்குச் சென்று நரசிங்கப் பெருமானை வணங்கி விஜயவாடை என்ற இடத்தை முற்றுகையிட்டார். விஜயவாடையும் கைப் பற்றப்பட்டது. அவ்விடத்திலிருந்து கஜபதி நாடாகிய கலிங்க தேசத்தின் மீது படையெடுத்துச் செல்வதற்கு ஏற்ற வசதிகள் செய்யப்பெற்றன. விஜயவாடைக்கருகில் உள்ள கொண்ட பள்ளி என்ற அரண்மிகுந்த கோட்டையை முற்றுகையிட்டார்.

கொண்டபள்ளியை காப்பாற்றுவதற்குப் பிரதாபருத்திரகஜபதி தன்னுடைய படைகளை ஏவிய பொழுது கிருஷ்ணு நதிக்கருகில் இவ்விரு சேனைகளுக்கும் பெரும்போர் தொடங்கியது. கஜபதி அரசனுடைய சேனைகள் தோல்வியுற்று பின்வாங்கலாயின. நால்கொண்டா, வராங்கல் முதலிய இடங்களையும், இராஜ மகேந்திரவரத்தையும் கைப்பற்றி, கோதாவரி நதியைக் கடந்து சிம்மாச்சலம் வரையில் விஜயநகரச் சேனைகள் சென்றன. சிம்மாச்சலத்தில் கிருஷ்ணதேவராயருடைய வெற்றிகளுக்கு அறிகுறியாக ஒரு வெற்றித்தூண் ஒன்று அமைக்கப் பெற்றது. சிம்மாச்சலத்திலிருந்து, பிரதாபருத்திர கஜபதியின் தலைநகர மாகிய கட்டாக் அல்லது கடகம் என்ற நகரமும் முற்றுகைக்கு உள்ளாயிற்று. பிரதாபருத்திர கஜபதியும் தோல்வியை ஒப்புக் கொண்டு கிருஷ்ணதேவராயருடன் அமைதியுடன்படிக்கை செய்துக் கொண்டார். அதன்படி கிருஷ்ணை நதிக்கப்பால் (வடக்கே) யுள்ள பகுதிகளில் கஜபதியின் ஆதிக்கம் ஒப்புக் கொள்ளப் பெற்றது. கஜபதியரசரின் மகள் ஜெகன்மோகினி அல்லது துக்கா என்ற அரசிளங்குமரி கிருஷ்ணதேவராயருக்கு திருமணம் செய்விக்கப் பெற்றூர்.

## இராய்ச்சூர் போர்

மேற்கூறப் பெற்றவாறு கிருஷ்ணதேவராயர் கலிங்க நாட்டின் மீது படையெடுத்து வெற்றியடைந்த பொழுது விஜயபுரி சுல்தானுகிய இஸ்மேயில் அடில்ஷா என்பான் இராய்ச்சூர் கோட்டையை திருப்பிப்பிடித்துத் தன்வசப்படுத்திக் கொண்டான். இராய்ச்சூர் நகரத்தை முற்றுகையிட்டு கிருஷ்ண தேவராயர் கைப்பற்றிய போரைப் பற்றி நூனிஸ் என்பார் பெருமளவில் விவரித்துள்ளார். விஜயபுரி சுல்தானுடைய இராணுவபலத்தை அழித்து இராய்ச்சூர் கோட்டையை எவ்விதத்திலாயினும் கைப்பற்ற வேண்டுமென நினைத்த கிருஷ்ணதேவராயர் இலட்சக்கணக்கான போர் வீரர்களுடன் ஐந்நூறு யானைகளும், ஆயிரக்கணக்கான குதிரைப்படையோடும் இராய்ச்சூரை முற்றுகையிட்டார்.

இராய்ச்சூர் நகரத்தை முற்றுகையிட்ட விஜயநகரத்துச் சேனைகளின் எண்ணிக்கை கணக்கற்றதாக இருந்ததென நூனிஸ் கூறுவர். விஜயநகரத்து அரசர்களை நரபதிகள், என்றும் விஜயபுரி சுல்தான்களைக் குதிரைகளுக்கு அதிபதிகள் என்றும், கலிங்க நாட்டு அரசர்களைக் கஜபதிகள் என்றும் அழைக்கப் பட்டமை பொருத்தமானவையே என்பது நன்கு விளங்கும். இந்த இராய்ச்சூர் போர் நூனிஸ் எழுதிய வரலாற்றில் மிக

விஸ்தாரமாக விவரிக்கப்பட்டுள்ளதேயன்றி கல்வெட்டுக் களிலோ அல்லது செப்பேடுகளிலோ அல்லது இலக்கியங் களிலோ இதைப் பற்றிய செய்திகள் கூறப்பெறவில்லை. தமிழ் நாட்டில் திருக்கடையூர் என்னுமிடத்தில் கிடைத்த ஒரே ஒரு கல்வெட்டில் தான் ஆபச்சகாயன் என்ற அந்தணன் கிருஷ்ண தேவராயருடைய சேனையில் பங்கு கொண்டு இராய்ச்சூர் விஜயபுரி முதலிய இடங்களில் போரிட்டதாகக் குறிப்பிடப் பெற்றுள்ளது. ஆனால், கலிங்க நாட்டரசனுடன் கிருஷ்ண தேவராயர் நடத்திய போர்கள் இலக்கியங்களிலும், கல்வெட்டுக் களிலும் குறிப்பிடப் பெற்றுள்ளது போல், இராய்ச்சூர் முற்றுகை பேசப்படவில்லை. ஏனெனில் இராய்ச்சூர், முதுகல் என்ற இரு இடங்களையும், அடிக்கடி பாமினி சுல்தான்களும், விஜயநகரப் பேரரசர்களும் தங்கள் தங்கள் வசம் கொண்டு வந்த செய்தி யாவரும் அறிந்ததொன்றாகும். ஆகையால், இம்முற்றுகையை யும், போரையும் பற்றிய குறிப்புகள் இலக்கியங்களிலோ, கல்வெட்டுக்களிலோ காணப்பெறவில்லை.

இராய்ச்சூர் போர் 1520ஆம் ஆண்டு மேமீ 19உ நடை பெற்றது. விஜயநகரத்துப் படைகள் முதலில் தாக்க ஆரம்பித்து விஜயபுரிப் படைகளைத் துரத்தியடித்தான். ஆயினும், விஜயபுரி சுல்தானுடைய பீரங்கிப் படைகள் விஜயநகரப் படையினரை சின்னாபின்னமாக அடித்து யானைகளையும் குதிரைவீரர்களையும் கொன்று குவித்தன. விஜயநகரத்துச் சேனை தோற்று ஓட்ட மெடுக்கக் கூடியதொரு நிலைமையையும் உண்டானதெனக் கூறலாம். ஆயினும், இத்தருணத்தில் கிருஷ்ணதேவராயரே போர் வீரர்களுக்கு இடையில் புகுந்து தன்னுடைய படைவீரர் களுக்கு உற்சாகத்தை ஊட்டி, இப்போரில் வெற்றி பெறுவது அல்லது வீர சொர்க்கம் அடைவது என்று உறுதி கொண்டு போர்புரியும்படி ஊக்குவித்தார். இவ்வித ஊக்கத்தினாலும், உற்சாகத்தினாலும், விஜயநகரத்து சேனைகள் மீண்டும், விஜய புரியின் சேனைகளைத் தாக்கியதில் பெரும் வெற்றி உண்டாயிற்று. விஜயபுரி சுல்தானுடைய சேனாமுகாம் கைப்பற்றப்பட்டுச் சுல்தானும் கிருஷ்ணை ஆற்றைக் கடந்து யானையின் மீது தப்பி போய் விட்டான். கிருஷ்ணதேவராயர் உயிரோடிருக்கும் வரையில் இராய்ச்சூரை மீண்டும் விஜயபுரி சுல்தானால் கைப் பற்ற முடியவில்லை. இராய்ச்சூர் கோட்டையைக் கைப்பற்றிய பிறகு அந்நகரத்தில் வாழ்ந்த குடிகள் அன்புடனும் ஆதரவுட னும் நடத்தப்பெற்றனர்.

பின்னர், கிருஷ்ணதேவராயர் விஜயபுரிக்கும் சென்று அந்நகரத்தில் சில நாட்கள் தங்கியிருந்ததாகவும் நாம்




படம் 10.

கிருஷ்ணதேவராயர் காலத்தில் விஜயநகரப் பேரரசு
(1509—1530)

அறிகிறோம். குல்பார்கா நகருக்குச் சென்று அழிந்து போன பாமினி ராச்சியத்தை மீண்டும் உயிர்ப்பிக்க முயன்றதாகவும் தெரிகிறது. கிருஷ்ணதேவராயர் காலத்தில் வடக்கே ஹோனவர் என்னுமிடத்திலிருந்து கிருஷ்ணா நதிக்குத் தெற்கே யுள்ள, திருவாங்கூர், மலையாளம் முதலிய நாடுகளையும் தன்னகத்தே கொண்டு தென்னிந்தியா முழுவதிற்கும் விஜயநகரப் பேரரசு பரவியிருந்ததென நாம் அறிய வேண்டும்.

## இராய்ச்சூர் போரின் பலன்கள்

இராய்ச்சூரில் கிருஷ்ணதேவராயர் அடைந்த வெற்றி தென்னிந்திய வரலாற்றின் போக்கைச் சில வழிகளில் மாற்றி யமைத்ததெனக் கூறலாம். கிருஷ்ணதேவராயர் இவ்வெற்றி யினால் மிக்க கர்வமுற்றார் எனவும், விஜயபுரி சுல்தானிடம் சமாதானம் செய்து கொள்வதற்கு அவன் ஒப்புக் கொள்ள முடியாத நிபந்தனை விதித்தார் என்றும் நூனிஸ் கூறுவர். பாமினி நாட்டிலிருந்து பிரிந்த விஜயபுரி, அகமதுநகரம், பீதார், கோல் கொண்டா முதலிய நாட்டுச் சுல்தான்கள் விஜயநகரப்பேரரசின் வலிமையைக் கண்டு பயம் கொண்டனர். கிருஷ்ணா நதியைக் கடந்து இடைதுறை நாட்டைக் கைப்பற்றும் நினைப்பை விஜயபுரி சுல்தான் விட்டுவிட வேண்டியதாயிற்று. சாளுவ நரசிம்மர் தனக்குப்பின் வந்த விஜயநகரத்து வேந்தர்களுடைய கடமையாகக் கருதிய செயல்கள் அனைத்தையும் கிருஷ்ண தேவராயர் முற்றுவித்தார் எனக் கூறலாம்.

நூனிஸ் என்பாருடைய குறிப்புக்களில் 1525ஆம் ஆண்டில் கிருஷ்ணதேவராயர் தன்னுடைய பதவியை விட்டு விலகித் தன்னுடைய மகன் ஆறு வயதுள்ள சிறுவனுக்கு முடிசூட்டித் தான் அவனுடைய அமைச்சராகப் பணியாற்றினார் எனக் கூறப் பெற்றுள்ளது. ஆனால், கல்வெட்டுக்கள் இச்செய்தியை உறுதிப்படுத்தவில்லை. 1530ஆம் ஆண்டு வரையில் கிருஷ்ண தேவராயர் ஆட்சிப் பீடத்தில் அமர்ந்திருந்ததாக கூறுகின்றன. ஒருவேளை, கிருஷ்ணதேவராயர் தன்னுடைய மகனுக்கு இளவரசுப் பட்டம் கட்டியதை இவ்விதமாக பிறழ உணர்ந்து. நூனிஸ் மேற்கண்டவாறு கூறியிருக்கக்கூடும். மேலும், கிருஷ்ண தேவராயருடைய மகன் திருமலை என்பவனுக்கு சாளுவ திம்ம ருடைய மகன் விஷம் கொடுத்து கொலை செய்வித்த குற்றத் திற்காகத் தகப்பனையும் மகனையும் சிறையிலிட்டுக் கொடுமை படுத்திய செய்தியையும் நூனிஸ் கூறுவர். இச்செய்தியையும் மற்ற வரலாற்று ஆதாரங்கள் உறுதி செய்யவில்லை.

## கிருஷ்ணதேவராயரைப் பற்றிய மதிப்பீடு

கிருஷ்ணதேவராயர் காலத்தில் விஜயநகரத்திற்கு வந்து அவரை நேரில் கண்ட பீயஸ் என்னும் போர்த்துகீசிய வணிகர் பின்வருமாறு அவரைப் பற்றி வருணித்துள்ளார். 'பேரரசர் கிருஷ்ணதேவராயர் நடுத்தரமான உயரமுடையவர். அவருடைய உடலமைப்பும் நிறமும், வசீகரமாக இருந்தன. அவருடைய முகத்தில் அம்மை வார்த்தக் குறிகள் இருந்தன. நான் கண்ட அரசர்களில் பிறரால் நன்கு மதிக்கப் பெற்றவரும், அருங்குணங்கள் எல்லாம் நிரம்பப் பெற்றவரும் ஆவர் என்றும் கூறலாம். அந்நிய நாட்டவர்களை முகமலர்ச்சியோடும் அன்புடனும் வரவேற்று, அவர்களுடைய நாட்டையும் வரலாற்றையும் பற்றி உணர்ந்து கொள்வதில் மிக்க ஆர்வமுள்ளவர், சிற்சில சமயங்களில் முன்கோபம் உள்ளவராக இருந்தாலும், குடிகளிடத்தில் அன்புடனும், நியாய உணர்ச்சியுடனும் நடந்து கொண்டார். 'பூர்வ தட்சிண பச்சிம சமுத்திராபதி' யென்றும் 'கண்ட நாடு கொண்டு கொண்ட நாடு கொடாதான்' என்றும், 'மகான் கிருஷ்ணதேவராயர்' என்றும் அவருக்குப் பல பட்டங்கள் வழங்கின. தென்னிந்தியாவில் உள்ள மற்ற எல்லா அரசர்களையும் விட சேனுபலத்திலும், பேரரசிலும் மிக்க பெருமை பெற்று விளங்கினுர். எல்லா வித மேனமைகளும் அவரிடம் நிரம்பியிருந்தன.[1]

மேலும், தினந்தோறும் உடற்பயிற்சி செய்தும், போர்களில் பங்கு கொண்டும் தன்னுடைய போர்த்திறமையையும், சேனைகளை நடத்தும் திறமையையும் நல்ல நிலைமையில் வைத்திருந்தார். தனனிடம் தோல்வியடைந்தவர்களுக்குக் கருணை காட்டி, பெருந்தன்மையுடனும், நிதானமுடனும் நடந்துக் கொண்டார். பிரதாபருத்திர கஜபதியையும், இராய்ச்சூர் நகரத்து மக்களையும் கிருஷ்ணதேவராயர் நடத்தியதிலிருந்து அவருடைய பெருந்தன்மையை நாம் உணர்ந்து கொள்ளலாம். பீயாஸ் என்ற போர்த்துக்கீசியருடைய கூற்றுக்கள் அவரால் நேரடியாகக் காணப்பெற்று, பாரபட்சமின்றிக் கூறப்பெற்றவைகளாக கொள்ளுதல் அமைவுடைத்தாகும்.

ஆயினும், நூனிஸ் என்பாருடைய வரலாற்றிலிருந்து கிருஷ்ணதேவராயரிடம் மூன்று முக்கியக் குறைகள் இருந்தன என்பதை நாம் உய்த்து உணரக்கூடும். அவையாவன :

[1] Robert Sewell, (Chronicle of Paes) p. 247.

1. இராய்ச்சூர் போருக்குப் பிறகு விஜயபுரி சுல்தான் அடில்ஷாவை நடத்திய முறை.

2. கலிங்க நாட்டு இளவரசன் வீரபத்திரனை, ஒரு சாதரண வீரனைப்போன்று அலட்சியமாக நடத்தியதால் அவன் மனம் உடைந்து உயிர் நீத்ததாக கூறப்பெறும் செய்தி.

3. தன்னுடைய வாழ்க்கையின் இறுதிக்காலத்தில் முக்கிய அமைச்சராகிய சாளுவ திம்மருக்கு இழைத்த கொடுமைகள்.

இவற்றுள், விஜயபுரி சுல்தான் அடில்ஷா தன்னுடைய அடிகளில் வீழ்ந்து வணங்கவேண்டுமென்பது, கிருஷ்ணதேவராயருடைய கர்வத்தைக் காட்டாது. ஏனெனில் அக்காலத்திய பாமினி சுல்தான்கள் விஜய நகரத்து அரசர்களை அவமானம் செய்ய வேண்டியதற்கு எல்லாவித செயல்களையும் மேற்கொண்டனர். அதற்குப் பதிலாகவே கிருஷ்ணதேவராயர் இவ்வித நிபந்தனையை ஏற்படுத்தியிருக்க வேண்டும். கலிங்கநாட்டு இளவரசன் வீரபத்திரனை அவமானப்படுத்தியதாக நூனிஸ் கூறும் செய்தி கல்வெட்டுக்களில் கூறப்பெறவில்லை. 1516, 1519ஆம் ஆண்டுகளில் வீரபத்திரன் என்ற கலிங்க நாட்டு இளவரசன் மகாமண்டலேசுவரனாகப் பணி செய்ததாக அக்கல்வெட்டுக்கள் எடுத்துரைக்கின்றன. ஆகையால், நூனிஸ் என்பாரின் கூற்று உண்மையானதல்ல என சில வரலாற்றாசிரியாளர் கூறுவர். மூன்றாவதாக தன்னுடைய அமைச்சர் சாளுவ திம்மரை நன்றி கெட்டவராகக் கருதி அவரைச் சிறையிலடைப்பதற்கு ஏற்ற காரணங்கள் இல்லை. ஏனெனில் வீரநரசிம்மருடைய விருப்பப்படி கிருஷ்தேவராயருடைய கண்களைப் பிடுங்கிவிடாது ஆட்டுக்குட்டியின் கண்களைக் காட்டி கிருஷ்ணதேவராயரை; காப்பாற்றி அரசுரிமைப் பெறும்படிச் செய்தது, எவ்வாற்றனும், நன்றிகெட்ட செயல் எனக் கருதமுடியாது. கிருஷ்ணதேவராயர் தன்னுடைய மகனுக்கு இளவரசப் பட்டம் கட்டினார். என்பதை நாம் ஒப்புக் கொள்ளக் கூடுமேயன்றி, அவர் ஆட்சியிலிருந்து விலகிக் கொண்டார் என்பதும் நம்பத்தக்கதல்ல.

கிருஷ்ணதேவராயருடைய ஆட்சியில் விஜய நகரப்பேரரசு மிக்க உன்னத நிலையை அடைந்திருந்தது. அவருடைய அரசியல் மேன்மையால் விஜயநகரப் பேரரசின் பொருளாதார வளமும், அரசின் கலாச்சார பண்பாட்டு நிலையும் மிக்க வளமுற்றிருந்தன. போர்த்துகீசியருடன் அவர் கொண்டிருந்த நட்புறவினால் பேரரசின் பொருள் வருவாய் அதிகரித்து அவருடைய ஏதேச்சாதிகாரமும் மக்களுடைய நலத்தையையும் பேரரசின்

பெருமிதத்தையும், அடிப்படையாகக் கொண்டிருந்தது. இரண்டாம் தேவராயருடைய ஆட்சிக்குப் பிறகு சீர் குலைந்த விஜயநகரப் பேரரசை மீண்டும் உயர்ந்த நிலையைப் பெறுவதற்கு முயற்சி செய்த சாளுவ நரசிம்மனுடைய ஒப்பற்ற கொள்கைகளைச் செயல்படுத்தியவர் கிருஷ்ணதேவராயரே யாவர்.

## சமயக் கொள்கை

கிருஷ்ண தேவராயர் வைணவ சமயத்தில் ஆழ்ந்த பற்றுள்ளவராயினும், சைவம், மாத்வம், சமணம் முதலிய சமயத்தையும் அவற்றைச் சார்ந்தோரையும் பாரபட்சமின்றி நடத்தினர். அவருடைய சபையில் வாழ்ந்த அஷ்டதிக்கஜங்களில் மூவர் சைவசமயத்தை சார்ந்தவர்கள். அவருடைய ஆஸ்தான கவியரசராகிய அல்லசானி பெத்தண்ணு அத்துவித கொள்கையுள்ளவர். சாளுவ மன்னர்களுடைய வைணவக் கொள்கைகளை பின்பற்றிய போதிலும், ஹம்பியிலுள்ள விருபாட்சப்பெருமானை விஜய நகரப் பேரரசின் குல தெய்வமாகவே கருதினர், தென் மராட்டிய நாட்டில் வழங்கிய வித்தளர் வணக்கத்தை விஜய நகரத்திலும் பரவச் செய்வதற்கு வித்தள சுவாமி கோவில் ஒன்றை அமைத்தார். திருப்பதி வெங்கடேசப் பெருமானைத் தன்னுடைய குலதெய்வமாகக் கொண்டு, பல தடவைகள் அக்கோவிலுக்குச் சென்று ஏராளமான தானதருமங்களைச் செய்தார். இன்றும் திருப்பதியில் காணப்பெறும் கிருஷ்ணதேவ ராயருடையதும், அவருடைய தேவிமார்களுடையதுமாகிய செப்புச்சிலைகள் மிக்க வனப்புள்ளவையாக காட்சியளிக்கின்றன.

பிரதாபருத்திர கஜபதியுடன் போர் செய்து வெற்றி பெற்ற பிறகு சோழமண்டலத்திலுள்ள பல தேவாலயங்களுக்குப் புண்ணிய யாத்திரை செய்து பதினாயிரம் வராகன்களுககு மேல்பட்ட தொகையை அவற்றிற்கு நன்கொடை யளித்துள்ளார். தென்னாட்டுக் கோவில்களில் காணப்பெறும், ஆயிரங்கால் மண்டபங்களும், இராச கோபுரங்களும் கிருஷ்ணதேவராயர் காலத்தில் அமைக்கப் பெற்றவையாகும். திருவண்ணுமலையிலும் காஞ்சிப்புரத்திலும் அமைந்துள்ள கோபுரங்களிலும், ஆயிரங் கால் மண்டபங்களும், திருக்குளங்களும், கர்ப்பகிரகங்களும் கிருஷ்ணதேவராயர் காலத்தில் தோன்றியவையாகும். தமிழ் நாட்டில் கெடிலநதிக்குக்குத் தெற்கேயும், தென் வெள்ளாற்றிற்கும் வடக்கேயும் உள்ள திருத்திணைநகர், திட்டைக்குடி, திருமாணிக்குழி, பெண்ணுகடம், உடையார் கோவில், பந்தநல்லூர், திருவகீந்திரபுரம், திருக்காட்டுப்பள்ளி, திருச்சிராப்

பள்ளி திருவரங்கம், முதலிய இடத்திலுள்ள திருக்கோவில் களுக்குப் பத்தாயிரம் வராகன்கள் மதிப்புள்ள நன்கொடைகள் அளிக்கப் பெற்றன என்று சேந்தமங்கலத்தில் காணப்பெறும் கல்வெட்டொன்று கூறுகிறது. சிதம்பரத்தில் வடக்குக் கோபு ரத்தில் ஒரு மாடத்தில் கிருஷ்ணதேவராயருடைய உருவத்தை நாம் இன்றும் காணலாம். ஆனால், இந்த வடக்குக் கோபுரத் தின் அமைப்பு சோழர்கள் காலத்திய கட்டடக்கலையை ஒத்தி ருக்கின்றது.

## கிருஷ்ணதேவராயருடைய புலமை

பல தெலுங்கு தமிழ்ப் புலவர்களை ஆதரித்தும் அன்றி கிருஷ்ணதேவராயர் வடமொழியிலும், தெலுங்கிலும் பல நாட கங்களையும் இயற்றியுள்ளார். வடமொழியில் ஜம்பாவதித் திருமணம், உஷாபரிணயம் என்ற இருநாடகங்கள் மட்டிலும் இப்பொழுது கிடைக்கின்றன. கொண்டவீடு இலக்குமிதரன் என்பாரும் இன்னொருவரும் சேர்ந்து 'தெய்வ ஞான விலாசம் என்ற நூலை இயற்றியுள்ளனர். இலக்குமி நாராயணன் என்பார் சங்கீத சூர்யோதயம் என்னும் இசை நூலை எழுதி யுள்ளார். சாளுவ திம்மரும் அவருடைய உறவினன் கோபனும் சிறந்த வடமொழி அறிஞர்களாவர். கோபன் என்பார் கிருஷ்ண மிஸ்ரருடைய பிரபோதசந்திரோதயம் என்னும் நூலுக்கு ஓர் உரை எழுதியுள்ளார். வியாசதீர்த்தர் அல்லது வியாசராயர் துவைத தத்துவத்தைப்பற்றிப் பல நூல்களை இயற்றி யுள்ளார். மத்வசமயத்தின் உண்மையை நிலை நாட்டியதில் இவருக்கு பெரும் பங்குண்டு. கிருஷ்ணதேவராயரும் அவருக் ருக்குப்பின் வந்த சில அரசர்களும் வியாசராயரை ஆதரித்துள் ளனர். பக்த புரந்தரதாசரும் வதிராஜக் கவிஞரும் வியாசராய ருடைய மாணவர்களாவர். வல்லபாச்சாரியரும், சைதன்ய பிரபுவும் கிருஷ்ணதேவராயருடைய அரசவைக்கு வந்ததாகக் கேள்விப்படுகிறோம்.

கிருஷ்ணதேவராயருடைய ஆட்சிக் காலம் தெலுங்கு இலக்கியத்தின் பொற்காலமெனக் கருதப் பெறுகிறது. ஆமுக்த மால்யதா என்னும் தெலுங்கு நூல் மாத்திரம் இப்பொழுது கிடைக்கிறது. பாண்டியநாட்டில் ஸ்ரீவில்லிபுத்தூரில் வாழ்ந்த பெரியாழ்வாரைப் பற்றியும், அவருடைய வளர்ப்பு மகளாகிய ஆண்டாளைப் பற்றியும் கூறும் பக்தி நூல் ஆமுக்தமால்யதா ஆகும், தமிழில் ஆண்டாளைச் சூடிக் கொடுத்த நாச்சியார் எனக் கூறுவர். மக்கட்பண்பை உள்ளவாறு எடுத்துரைப்பதி லும் பலவகையான மெய்ப்பாடுகளை விளக்குவதிலும் கிருஷ்ண

தேவராயர் ஓர் ஒப்பற்ற புலவராவர். தெலுங்கு பிரபந்தங்களில் ஆமுக்தமால்யதா ஒப்புயர்வற்று விளங்குகிறது. கிருஷ்ண தேவராயருடைய அரசியல் மேன்மையும், அரசியல் ராஜதந்திரக் கொள்கைகளும் இந்நூலில் விளக்கம் பெறுகின்றன.

தெலுங்கு இலக்கிய மரபின்படி அஷ்டதிக்கஜங்கள் என்ற புலவர்கள் கிருஷ்ணதேவராயருடைய ஆட்சியில் இருந்தனர் எனக் கருதப்பெறுகிறது. அவர்கள், அல்லசானி பெத்தண்ணு, நந்தி திம்மண்ணு, இராமபத்திரா, துர்ஜடி மல்லண்ணு, சூரண்ணு, இராமராஜபூஷணு, தெனுலி இராமகிருஷ்ணன் முதலியோர் ஆவர். இவர்களுள் இறுதியாகக் கூறப்பெற்ற மூவர் கிருஷ்ணதேவராயருடைய காலத்திற்குப் பிற்பட்டவராவர். அரசவைக் கவிஞராக விளங்கிய அல்லசானி பெத்தண்ணு வடமொழியிலும், தெலுங்கிலும் வல்ல புலவராக இருந்தார். இவரியற்றிய மனுசரிதம் என்னும் நூல் பதினான்கு மனுக்களில் இரண்டாவதாகக் கூறப்பெறும் சுவரோச்சிஷ மனு என்பவரின் வரலாற்றைக் கூறுவதாகும். பிற்காலத் தெலுங்குப் புலவர்கள் எல்லோரும் இவரைப் பின்பற்றியமையால், இவருக்கு 'ஆந்திர கவிதா பிதாமகன்' என்ற பெயர் வழங்கியது கிருஷ்ணதேவராயர் இறந்தபொழுது தானும் உயிர் நீத்து அவருடைய ஆவியைப் பின் தொடராமல் இருந்தமைக்குத் தன்னை நொந்துக் கொண்டதாக நாம் கேள்விப்படுகிறோம். திம்மண்ணு என்பார் சைவசமயத்தைச் சேர்ந்தவர். அவரியற்றிய பாரிஜாத பகரணமு என்ற நூலில் தெய்வ உலகத்திலிருந்து பாரிஜாத மரம் எவ்வாறு கொண்டுவரப் பெற்றதெனக் கூறப் பெற்றுள்ளது. சகலகதா சங்கிரகம் என்னும் நூலை இராமபத்திரரும் துர்ஜடி என்பார் காளத்தி மான்மியம் என்னும் நூலையும், மல்லண்ணு என்பார் இராஜசேகர சரிதம் என்னும் நூலையும் இயற்றியதாக அறிகிறோம். கவிகர்ன ரசாயனம் என்னும் தெலுங்கு நூலை இயற்றிய நரசிம்மகவி என்பார் அந்நூலைக் கிருஷ்ணதேவராயருக்கு அர்பணித்துள்ளார். வடமொழியிலிருந்து மொழிப் பெயர்க்காமல் தெலுங்கு மொழியிலேயே முதல் நூல்கள் எழுதப் பெற்றது கிருஷ்ணதேவராயர் காலத்திலாகும்.

## தமிழ்ப் புலவர்கள்

கிருஷ்ணதேவராயர் காலத்தில் இருசமய விளக்கம் என்னும் நூலை இயற்றிய அரிதாசர் என்ற புலவர் அரிகண்டபுரம் என்ற நாகலாபுரத்தில் வாழ்ந்தார். ஆரணவல்லி, ஆகமவல்லி என்ற இரு பெண்கள் உரையாடுவது போன்று வைணவ, சைவசமயக்

கொள்கைகளைத் தனது நூலில் விளக்கியுள்ளார். கிருஷ்ண தேவராயர் பிரதாபருத்திரகஜபதியின் மீது வெற்றிக் கொண்டு சிம்மாச்சலத்தில் வெற்றித் தூண் நாட்டிய செய்தியைத் தன்னுடைய நூலின் முகவுரையில் குறிப்பிட்டுள்ளார்.[1] குமார சரஸ்வதி என்ற மற்றொரு தமிழ்ப் புலவரும் கிருஷ்ண தேவராயருடையகலிங்கப் போரைப் பற்றியும், பிரதாபருத்திரருடைய பெண் ஜெகன்மோகினி என்பாள் கிருஷ்ணதேவராயரை மணந்து கொண்டமைப் பற்றியும் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

''கலிங்க மிழந்து நுதிக்கைச் சங்கம் தோற்று
மெலிந்து கடகம் நழுவவிட்டாள் —மலிந்த மலர்ப்
பொன்னிட்டமான கிருஷ்ண பூபாலா உறைக்குப்
பின்னிட்ட ஒட்டியன் போல பெண்.''

தமிழில் சூடாமணி நிகண்டை எழுதிய மண்டல புருஷன், காஞ்சி ஞானப்பிரகாசர், நல்லூர்வீரன் ஆகிய மூவரும் கிருஷ்ணதேவராயருடைய ஆட்சியில் விளங்கிய தமிழ்ப்புலவர்கள் ஆவர். காஞ்சி ஞானப்பிரகாசர் மஞ்சரிப்பா என்னும் நூலையும் நல்லூர்வீரன் என்பார் அரிசந்திர புராணம் என்னும் நூலையும் இயற்றியுள்ளார்.

## சாளுவ திம்ம அப்பாஜி

சாளுவ திம்மர் என்பார் கிருஷ்ணதேவராயருடைய முக்கிய அமைச்சராக விளங்கியவரும், அந்தணர் வகுப்பைச் சேர்ந்த பெரியோரும் ஆவர். சாளுவ என்ற பட்டத்தை உடையவராக இருந்தபோதிலும் சாளுவ நரசிம்மர், இம்மடி நரசிம்மர் என்ற அரச வமிசத்தைச் சேர்ந்தவரல்லர். அந்தணர் வகுப்பில் கௌண்டின்ய கோத்திரத்தைச் சேர்ந்தவராவர். வீரநரசிம்ம புஜபல ராயருடைய அமைச்சராக சாளுவதிம்மர் தன்னுடைய அலுவலைத் தொடங்கினர் எனக் கூறலாம். சாளுவ திம்மருடைய உதவியால் தான் கிருஷ்ணதேவராயர் விஜயநகரத்து அரச பதவியை அடையமுடிந்தது. ஆகையால், கிருஷ்ணதேவராயர் சாளுவ திம்மரைத் தன்னுடைய முக்கிய அமைச்சராகவும், தந்தை போலவும் பாவித்து நடந்து கொண்டு, அப்பாஜி அல்லது தந்தை என்ற வணக்கத்திற்குரிய பெயருடன் அழைப்பது வழக்கம். சாளுவ திம்மருடைய கல்வெட்டுக்கள் கிருஷ்ண

[1] கிரிபோல் விளங்கிக் கிளரும் புயக் கிருஷ்ணராயன்
தரைமீது சிங்காத்திரியில் செயத் தம்பம் நாட்ட
வரம் ஆதரவால் அளித்தே வடகூவம் மேவும்
கருமாமணி வண்ணனை நீடு கருத்தில் வைப்பாம்.

ஆற்றங்கரையிலிருந்து தெற்கே திருவரங்கம் வரையிலும், மேற்கே தென்கன்னடத்திலும் காணப்பெறுகின்றன. 'கிருஷ்ண தேவராயருக்கு வலதுகை போல் விளங்குபவர் திம்மராசா என்ற முதியவர் ஆவர். அரண்மனையில் அவருக்குச் செல்வாக்கு உள்ளது. அரசாங்க அலுவர்களும் மகாமண்டலேசுவரர்களும் அவருக்கு அடங்கியே செயலாற்றுகின்றனர். அரசன் அவரை அழைக்கும் போது "அப்பாஜி சாளுவ திம்மர்" என்று கூப்பிடு கிறார்' என்று பீயஸ் கூறியுள்ளார்.

கிருஷ்ணதேவராயர், விஜயபுரி சுல்தானுடனும், பிரதாப ருத்திர கஜபதியுடனும் நடத்திய போர்களில் சாளுவதிம்மர் மிக்க உதவியாக இருந்தார். கொண்டவீடு என்ற இடத்தைக் கைப்பற்றிய பிறகு பிரதாபருத்திரகஜபதியோடு போரைத் தொடர்ந்து நடத்த வேண்டுவதில்லை என்று சாளுவ திம்மர் கூறிய போதிலும் கிருஷ்ணதேவராயர் அதற்கு இணங்கவில்லை. ஆயினும், சிம்மாச்சலத்தின் மீது படையெடுத்த பொழுது சாளுவ திம்மர் பேரரசருக்கு மிகுந்த உதவியளித்தார். 1523 ஆம் ஆண்டில் கோவா நகருக்குப் படையெடுத்துச் சென்ற போதிலும் சாளுவ திம்மர் அதில் வெற்றி பெறவில்லை. கொண்ட வீடு மண்டலத்திற்கு மகாமண்டலேசுவரனாக நியமிக்கப் பெற் றிருந்த போதிலும் அவருடைய செயல்களும், ஆணைகளும் பேரரசு முழுவதிலும் செல்வாக்குப் பெற்றிருந்தது. 1510-11 ஆம் ஆண்டில் விஜயநகரப் பேரரசு முழுவதிலும் திருமணங்களின் மீது விதிக்கப் பெற்ற வரிகள் நீக்கப் பெற்றமைக்குச் சாளுவ திம்மரின் அறிவுரையே காரணமாகும். சாளுவதிம்மர் எழுதிய வடமொழி நூல் ஒன்றில் சேனாதிபதி அல்லது தண்டநாயகர் என்று கூறிக் கொள்ளுவர். இவருடைய இறுதிக்காலத்தில் கிருஷ்ணதேவராயரால் சிறுமைப் படுத்தப் பெற்றார் என்பதற் குத் தகுந்த ஆதாரங்கள் இல்லை. கல்வெட்டுக்களில் இவருக்கு அய்யங்காடு, அய்யங்காரு என்ற பட்டங்கள் வழங்கப் பெற்றுள்ளன.

# 24. அச்சுததேவராயர் [1530-1542]

கிருஷ்ணதேவராயர் இறக்கும் தருவாயில் பதினெட்டு மாதங்களே வயது நிரம்பிய திருமலைராயர் என்ற குழந்தை இருந்தபோதிலும் அக்குழந்தையின் இளமையைக் கருதி தன்னுடைய ஒன்றுவிட்ட தம்பி அச்சுததேவராயனைத்தனக்குப் பின் அரசனாக நியமித்திருந்தார். 1530 ஆண்டில் விஜயநகரப் பேரரசனாக அச்சுததேவராயர் முடிசூடிக் கொண்டார். நூனிஸ் எழுதியவரலாற்றில் அச்சுததேவராயரைப் பற்றிக் குறிப்பிடு கையில் திறமையும், ஆண்மையும் இன்றி தன்னுடைய விரோதி களுக்கு அஞ்சி கொடுங்கோன்மையாக ஆட்சிப் புரிந்தார் எனக் குறிப்பிட்டுள்ளார். தன்னுடைய மைத்துனர்கள் சாலகராஜு திருமலை சகோதரர்களின் விருப்பப்படி அவர் ஆட்சி செலுத்தி யமையின் இவ்வித துன்பங்கள் உண்டாயின என்றும் கூறுவர். ஆயினும் அச்சுததேவராயர் தன்னுடைய ஆட்சியின் தொடக் கத்தில் சிறிது திறமையுடன் ஆட்சி செலுத்தியப் பின்னர் எடுப்பார்கைப் பிள்ளையாக மாறியிருக்கக் கூடும்.

1530 ஆம் ஆண்டில் விஜயபுரி சுல்தான் இஸ்மேயில் அடில்ஷா இராய்ச்சூர் நகரம் அமைந்திருந்த இடைதுறை நாட்டை தன்வசப்படுத்திக் கொண்டான். சோழநாட்டில் மகாமண்டலேசுவரனாக இருந்த சாளுவ வீரநரசிம்ம நாயக்கரும் அவருக்கு உதவியாக இருந்த பரமக்குடி தும்பிச்சி நாயக்கனும் கலகம் செய்தனர். விஜயநகரத்திற்கு அடங்கி கப்பம் கட்டி வந்த தென்காசி பாண்டிய அரசனாகிய ஸ்ரீவல்லபன் என்பானை திருவிதாங்கூர் நாட்டு மன்னன் உதயமார்த்தாண்டவர்மன் என்பார் தோற்கமத்துப் பாண்டிய நாட்டை விட்டுத் துரத்திய தும் அல்லாமல் இரண்டாவது தேவராயர் காலமுதல் செலுத்தி வந்த திரைப்பொருளையும் செலுத்தாது காலந்தாழ்த்தினன். மேற்கூறப் பெற்ற கலகங்களை அடக்கித் தமிழ்நாட்டிலும் திருவிதாங்கூர்ச் சீமையிலும் விஜயநகர ஆட்சியை நிலைப்பெறச் செய்வதற்கு அச்சுததேவராயர் தென்னாட்டின் மீது படை யெடுத்து வந்ததாக அச்சுதராய அப்யூதயம் என்னும்நூல் கூறுகிறது. அச்சுததேவராயர் திருவரங்கம் வரையில் வந்து பின்னர் தன்னுடைய சேனாதிபதி சாலக்கராஜு என்ற சின்ன

திருமலை தேவனைத் தென்னாட்டிற்கு அனுப்பி வைத்தனர். சின்ன திருமலைதேவன் சாளுவ வீர நரசிம்மனையும் அவனுடன் சேர்ந்து கொண்ட திருவிதாங்கூர் அரசனையும் தாம்பிரபரணி யாற்றிற்கருகில் தோற்கடித்து வெற்றிபெற்றார். பின்னர்சாளுவ வீரநரசிம்மனையும், திருவிதாங்கூர் அரசனையும் சிறைப்படுத்தி, அச்சுததேவராயரிடம் கொண்டுவந்ததாகவும் அறிகிறோம். தென்காசிப் பாண்டிய மன்னனுக்கு மீண்டும் அவருடைய நாடு திருப்பியளிக்கப்பெற்றது. திருவிதாங்கூர் அரசனும் கப்பம் கட்டுவதற்கு ஒப்புக்கொண்டார். வீரநரசிம்ம நாயக்கரும், பரமக்குடி துப்பிச்சி நாயக்கரும் மன்னிக்கப்பெற்றனர்.

திருவரங்கத்திலிருந்து அச்சுததேவராயர் தன்னுடைய சேனையுடன் ஸ்ரீரங்கப்பட்டினத்தையாண்டு வந்த உம்மத்தூர் தலைவர் மீது படையெடுத்துச் சென்று அவனையும் வென்று அடக்கியதாகத் தெரிகிறது. 1534-35ல் பொறிக்கப்பெற்ற கல்வெட்டு ஒன்றில் கிருஷ்ணநதிக்கரையில் விஜயபுரி சுல்தான்மீது வெற்றிபெற்றதாகக் கூறப்பெற்றுள்ளது. அடில்ஷா கைப்பற்றிக்கொண்ட இராய்ச்சூர் நகரத்தை மீண்டும் வென்று கொண்டதாக நாம் உணரவேண்டும். ஆகையால் அச்சுத தேவராயருடைய ஆட்சியின் முதற்பகுதியில், நூனிஸ் என்பார் கூறியவாறு அவருடைய ஆட்சியில் விஜயநகரப் பேரரசு சீர்குலைந்தது என்பதை நாம் ஒப்புக்கொள்ள முடியாது.

## இரண்டாவது பகுதி (1536-42)

1536ம் ஆண்டுக்குப் பிறகு அச்சுததேவராயருடைய மைத்துனர்கள் சாலுக்கராஜு சகோதரர்கள் அச்சுததேவராய ருடைய அதிகாரத்தை மேற்கொண்டு தாங்களே உண்மையில் ஆட்சி செலுத்தலாயினர். கிருஷ்ணதேவராயருடைய மருமக னாகிய அளிய இராமராயர் என்பார், இந்த சாலுக்கராஜு சகோதரர்களை எதிர்த்து, அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்று வதற்கும் நினைத்தார். தன்னுடைய துணைவர்கள் வேங்கடாத்திரி திருமலை என்பாரின் உதவிகொண்டு, அச்சுததேவராயருடைய தம்பி அரங்கனுடைய மகன் சதாசிவன் என்பானை அரசனாக்கத் திட்டமிட்டனன். விஜயநகர அரசியலில் இவ்வித குழப்பமான நிலைமை ஏற்பட்டதினால் 1536ஆம் ஆண்டில் விஜயபுரி அடில்ஷா விஜயநகரப் பேரரசின்மீது படையெடுத்து நாகலா புரி என்னுமிடத்தைக் கைப்பற்றிக்கொண்டான். தன்னுடைய மைத்துனர்களின் சொற்படி அச்சுததேவராயன் விஜயபுரி அடில்ஷாவிற்கு அடங்கி நடக்க வேண்டியதாயிற்று. அவர் களுடைய பேராசைப் பிடியினின்று அச்சுததேவராயர் தன்னை

விடுவித்துக் கொள்ளாது, அவர்களுடைய விருப்பத்தின்படி அரசாள வேண்டியிருந்தது. நூனிஸ் என்ற வரலாற்றாசிரியர் அச்சுததேவராயர் உபயோகமற்ற அரசர் என்று கூறியது அவருடைய ஆட்சியில் பிற்பகுதியில் நிலைபெற்றிருந்த அமைதியற்றக்காலத்தைப் பற்றியதாகும்.

## இராமராயரின் அதிகார வளர்ச்சி (1542—1565)

1542ஆம் ஆண்டில் அச்சுததேவராயர் இறந்த பிறகு விஜயநகரப் பேரரசில் பெரியதொரு அரசியல் போராட்டம் தோன்றியது. இப்பொழுது ஆரவீட்டுபுக்கர் என்பாருடைய பெயரன் இராமராயன் என்பார் அரசியல் போராட்டத்தில் பெரிய பங்குகொண்டார். அவர் கிருஷ்ணதேவராயருடைய மருமகனாவார். அவருடைய ஆட்சிக்காலத்தில் ஓர் இராணுவ அதிகாரியாக விளங்கி இப்பொழுது சதாசிவராயர் என்பாரை விஜயநகரப் பேரரசராக நியமனம் செய்தார். இந்த சதாசிவ ராயர் என்னும் இளைஞர், அச்சுததேவராயருடைய சகோதரன் அரங்கன் என்பாருடைய மகனாவர். அச்சுததேவனுடைய மைத்துனனாகிய சின்னசாலுக்கராஜு என்பார், அச்சுத தேவனுடைய மகன் முதலாம் வேங்கடன் என்பாரை அரசனாக்குவதற்கு ஏற்பாடுகள் செய்தார். இவ்விதப் போட்டி மனப்பான்மையாலும், விஜயபுரி சுல்தானுடைய தலையீட்டினாலும் விஜயநகரத்தில் பெரியதொரு அரசியற் குழப்பநிலை ஏற்பட்டது. சாலுக்கராஜு சின்ன திருமலைதேவன் தன்னுடைய மைத்துனன் மகன், வேங்கடன் என்பாரைக் கொலை செய்வித்துவிட்டுத் தானே அரசபதவியை ஏற்றனன்.[1] இராமராயர் அவரைப் போரில் தோற்கடித்து வெற்றிபெற்று சதாசிவ ராயர் என்ற இளைஞரை விஜயநகரப் பேரரசராக முடிசூட்டி அரசாங்க அதிகாரங்களை எல்லாம் தானே அனுபவிக்கத் தொடங்கினார். தன்னுடைய மாமனார் கிருஷ்ணதேவராயர் இறந்தபொழுதிலிருந்து இராமராயர் மனத்துட்கொண்டிருந்த கனவு இப்பொழுது நனவாயிற்று.

1542 முதல் 1550ஆம் ஆண்டுவரையில் சதாசிவராயருடைய அரசப் பிரதிநிதியாக இராமராயர் பணியாற்றித் தன்னுடைய சகோதரர்களுடைய துணைகொண்டு விஜயநகரப் பேரரசை ஆட்சிபுரிந்தார். 1550ஆம் ஆண்டில் சதாசிவ ராயரை சிறையில் இட்டு அரசனுக்குரிய மரியாதைகளுடன் மாத்திரம் நடத்திவந்ததாகத் தெரிகிறது. ஆண்டிற்கு ஒரு

[1] R, Sathianathaier Vol. II, p. 337,

முறை சதாசிவராயர் உயிரோடு இருக்கிறார் என்பதை பிறருக்குத் தெரியும்படிச்செய்து தானே எல்லாவித அரச அதிகாரங்களையும் அனுபவிக்கலானார். தன்னுடைய உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும் அரசியலில் உயர்ந்த அலுவல்களை அளித்து தன்னுடைய அரசியல் நிலையை பலப்படுத்திக் கொண்டார். 1563ஆம் ஆண்டிற்குப் பிறகு, சதாசிவராயரை குடிகளுக்கு முன் காண்பிப்பதையும் நிறுத்தித் தானே பேரரசர் என்று மக்கள் கருதும்படிச் செய்தார். 1565ஆம் ஆண்டில் தன்னுடைய பெயரிட்ட தங்கநாணயம் ஒன்றை வெளியிட்ட போதிலும், பேரரசனாக முடிசூடிக்கொண்டார் என்று சொல்வதற்கில்லை.

## திருவிதாங்கூர்மீது படையெழுச்சி

அச்சுதேவராயருடைய ஆட்சிக்காலத்தில் விஜயநகரப் பேரரசிற்குத் திறைசெலுத்துவதற்குத் தவறிய வீரஉதய மார்த்தாண்டவர்மன் என்பாரைச் சாலுக்கராஜு சின்ன திருமலைதேவன் என்பார் தோற்கடித்து கப்பம் கட்டும்படிச் செய்ததை நாம் முன்னரே கண்டோம். மீண்டும் இராமராயருடைய ஆட்சியில் அவ்வித தொந்தரவு தோன்றியதெனக் கூறலாம். திருவிதாங்கூர் நாட்டு அரசன் உன்னிக்கேரள வர்மன் என்பார் தூத்துக்குடிக்கருகில் உள்ள காயல் துறை முகத்தையும், பரதவர்கள் வாழ்ந்த கடற்கரைப் பகுதியையும், தென்காசிப் பாண்டியர்களிடம் இருந்து தன்வசப்படுத்திக் கொண்டு மீண்டும் கப்பம் செலுத்துவதற்கு ஒருப்படவில்லை. இன்னும், இராமேச்வரத்திலிருந்து கன்னியாகுமரிவரையில் பரவியிருந்த கடற்கரைப்பகுதியில் வாழ்ந்த பரதவர்களைப் போர்த்துக்கீசியப் பாதிரிமார்கள் இந்துசமயத்திலிருந்து கிறித்தவ சமயத்திற்கு மாற்றி, அதன் மூலம் போர்த்துக்கீசியச் செல்வாக்கை தென்னாட்டில் பரவும்படிச் செய்வதற்கும் முயன்றுகொண்டிருந்தனர். மேற்கூறப்பெற்ற அரசியற் குழப்பத்தை நீக்கி அமைதியை நிலைநாட்டுவதற்கு வித்தளராயர், சின்னதிம்மான் என்பவர்களுடைய தலைமையில் பெருஞ்சேனையொன்றை இராமராயர் தென்னாட்டிற்கு அனுப்ப வேண்டி வந்தது. இத் தென்னாட்டுப் படையெடுப்பில் மதுரையில் நாயக்கராகப் பதவி வகித்த விசுவநாத நாயக்கரும் அவருடைய மகன் கிருஷ்ணப்ப நாயக்கரும் பங்கு கொண்டதாகவும் நாம் அறிகிறோம். ஆரல்வாய்மொழி கணவாயைக் கடந்து விஜயநகரச் சேனைகள் திருவிதாங்கூர் நாட்டின்மீது படையெடுத்துச்சென்று திருவிதாங்கூர் சேனைகளைத் தோல்வியுறும்படிச் செய்தன. 1546ஆம் ஆண்டில்

திருவிதாங்கூர் அரசன் திருநெல்வேலி மாவட்டத்தை விட்டுக் கொடுத்து கப்பம் கட்டுவதற்கும் ஒப்புக்கொண்டனன். கிறிஸ்தவ சமயத்தைப் பரவச்செய்து பரதவர்களை அடக்கித் தங்கள் வசத்தில் கொண்டுவந்த போர்த்துக்கீசியருடைய அதிகாரமும் அழிக்கப்பெற்றது. கடற்கரைப்பகுதியில் வாழ்ந்த பரதவர்கள் ஆண்டுதோறும் பதினாயிரம் வராகன்கள் கப்பம் செலுத்துவதற்கு ஒப்புக்கொண்டனர். வித்தளராயருடைய தலைமையில் தென்னாட்டிற்கு அனுப்பப்பெற்ற படைகளின் திறமையால் விஜயநகரப் பேரரசின் ஆட்சி வலிமையுற்றது. இதனால் தெலுங்கு இலக்கியங்களில், இராமராயர், கன்னியாகுமரியில் வெற்றித்தூண் நாட்டியவர் என்று புகழப்பெறுகிறார்.

1544ஆம் ஆண்டில் திருப்பதியில் உள்ள திருமால் கோவிலைக் கொள்ளையடிக்கப் போர்த்துக்கீசியர்கள் செய்த முயற்சிகள் பயனளிக்கவில்லை. பின்னர் இராமராயரும் போர்த்துக்கீசியத் தலைவர்களும் ஓர் உடன்பாட்டிற்கு ஒப்புக்கொண்டனர். போர்த்துக்கீசிய வியாபாரிகள் தங்களுடைய குதிரைகளை இராமராயரிடமே விற்கவேண்டுமென்றும், விஜயநகரத்தில் கிடைக்கும் இரும்பு வெடியுப்பு முதலியவற்றைப் போர்த்துக்கீசியருக்கு விற்கவேண்டும் என்பதாகும். தமிழ் நாட்டில் நாகப்பட்டினத்திலிருந்த சில இந்துசமயக் கோவில்களைப் போர்த்துக்கீசியர்கள் கொள்ளையடித்ததைக் கேள்வியுற்ற இராமராயர் 1558 ஆம் ஆண்டில் சென்னை நகரில் மைலாப்பூரில் உள்ள சான்தோம் கிறித்தவ தேவாலயத்தைக் கொள்ளையடிப்பதற்குப் படையெடுத்தார். ஆனால் அத் தேவாலயத்தில் கொள்ளையடிப்பதற்குத் தகுதியான பொருள்கள் ஒன்றும் இன்மையால் வெறுங்கையோடு திரும்பவேண்டியதாயிற்று.

## இராமராயருக்கும் தக்காண சுல்தானுக்கும் இடையே நிலவிய உறவு

விஜயநகரப் பேரரசை, தக்காண இஸ்லாமிய சுல்தானுடைய படையெடுப்பினின்றும் காப்பாற்றி விஜயநகர ஆட்சியை நிலைபெறும்படிச் செய்வதற்கு இராமராயர் மேற்கொண்ட அரசியல் கொள்கையினால் விஜயநகரத்திற்கும், தக்காண முஸ்லீம்களுக்கும் இடையே தீராப்பகைமையுண்டாயிற்று. தன்னுடைய தம்பி வேங்கடாத்திரி என்பாரின் துணைகொண்டு தக்காண சுல்தானுடைய அரசியல் விவகாரங்களில் இராமராயர் ஈடுபட்டார். 1543ஆம் ஆண்டில் ஆமதுநகர்,

பீதார், கோல்கொண்டா ஆகிய மூன்று நாடுகளின் சுல்தான்களுடன் விஜயபுரி சுல்தானுக்கு எதிராகத் தோன்றியதோர் கூட்டுறவில் இராமராயர் சேர்ந்தார். அசாத்கான் என்பாருடைய சொற்படி அக்கூட்டுறவைக் கலைத்தார். கோல்கொண்டா சுல்தானைத் தோற்கடித்து வெற்றிகொண்டார். தக்காண சுல்தான்களிடையே சாம, பேத, தான, தண்டம் என்னும் நால்வகை உபாயக்கொள்கைகளையும் இராமராயர் பின்பற்றினார் எனக்கூறுவது பொருத்தமாகும். சுல்தான்கள் ஒருவரோடு ஒருவர் போரிட்டுக்கொண்டு தங்களுடைய இராணுவ வலிமையிழந்து, ஒன்றுசேர்ந்து விஜயநகரத்தை எதிர்க்காத முறையில் அந்நாடுகளின் வெளிநாட்டுக் கொள்கைகளில் ஈடுபட்டார். தான் விஜயநகரப் பேரரசில் முக்கியமான பதவியை வகித்த இருபத்திமூன்று ஆண்டுகளுக்குள் நடந்த அரசியல் பூசல்களில் 1565ஆம் ஆண்டில் நடந்த தலைக்கோட்டை போர் தவிர மற்றப்போர்களில் வெற்றியே அடைந்து வந்தார்.

### விஜயபுரி சுல்தான்களுடன் உறவு

விஜயநகரத்து இராமராயருக்கும் விஜயபுரி சுல்தானுக்கும் ஏற்பட்ட பகைமை இராமராயருடைய அதிகாரத் தொடக்கத்திலேயே தோன்றியதெனக் கூறலாம். சாலுக்கதிம்மராஜுவுக்கும் இராமராயருக்குமிடையே அரசியல் போட்டி நடந்தகாலத்தில் விஜயநகரத்தின் ஆட்சிக்குட்பட்ட ஆதோனிக்கோட்டையைக் கைப்பற்றும்படி தன்னுடைய சேனாதிபதி அசாத்கானுக்கு, இப்ராஹிம் அடில்ஷா ஆணையிட்டார். ஆதோனிக்கோட்டையைக் கைப்பற்றுவதற்குத் தன்னுடைய தம்பி வேங்கடாத்திரி என்பாரை இராமராயர் அனுப்பிவைத்தார், பின்னர் இராமராயரும் அசாத்கானும் போரில் ஈடுபடாமல் சமாதானம் செய்துகொண்டனர். பின்னர் விஜயபுரி சுல்தான் இப்ராஹிம் அடில்ஷா, பீதார், விஜயநகரம் ஆகிய இருநாட்டு அரசர்களுக்கு எதிராக, ஆமதுநகரத்து சுல்தானாகிய புர்ஹான் நிசார்ஷா என்பாருடன் கூட்டு சேர்ந்தார். ஆயினும் இவ்விருவரும் இராமராயரிடம் தோல்வியுற்றனர்.

மேற்கூறப்பெற்ற அரசியல் கூட்டுறவால் ஆமதுநகரத்து சுல்தானுக்கும் இராமராயருக்கும் பகைமை தோன்றியது. ஆமதுநகரத்தின் மீது படையெடுப்பதற்குக் கோல்கொண்டா பீதார் ஆகிய இரு நாடுகளைக் கடந்து தான் செல்ல வேண்டும் தன்னுடைய சேனைகளை மூன்று பிரிவுகளாகப் பிரித்து தானே கோல்கொண்டாவின் மீதும், தன்னுடைய தம்பி திருமலைராயர்

பீதார் நகரத்தின் மீதும், ஹான்டே அனுமப்பா என்னும் தலைவர் ஆமதுநகரத்தின் மீதும் படையெடுத்துச் சென்றனர். இந்த மூன்று படைகளும் ஒற்றுமையுடன் படையெடுத்துப் பெரிய வெற்றிகளைப் பெற்றன. கோல்கொண்டா ஆமதுநகரத்து சுல்தான்கள் தோல்வியுற்று போர்க்களத்தை விட்டோடினர். ஆமதுநகரத்தை விஜயநகரப் படைகள் கைப்பற்றின. ஆயினும், ஆமதுநகரத்து சுல்தான் விஜயநகரத்து இராமராயருடன் அமைதி உடன்படிக்கைச் செய்து கொண்டார்.

1544ஆம் ஆண்டில் ஆமதுநகரம், கோல்கொண்டா, விஜயநகரம் ஆகிய மூன்று நாட்டுத் தலைவர்களும் ஒன்று சேர்ந்து விஜயபுரி சுல்தானுக்கு எதிராக முக்கூட்டு உடன்படிக்கையொன்றை அமைத்தனர். தென் திசையிலிருந்து இராமராயர் விஜயபுரி நாட்டின் மீது படையெடுத்தார். கோல்கொண்டா சுல்தான் கிழக்குப் பகுதியில் இருந்தும், ஆமதுநகரத்துப் படைகள் வடகிழக்கிலிருந்தும் விஜயபுரியின் மீது படையெடுத்தன. மூன்று திசைகளிலிருந்து உண்டான படையெடுப்புகளை சகிக்க முடியாமல் தன்னுடைய சேனாதிபதி அசாத்கானுடைய அறிவுறையினால் விஜயநகரத்து இராமராயருடனும், ஆமது நகரத்து சுல்தான் புர்ஹான் நிசாம் ஷாவுடனும் உடன்படிக்கை செய்துகொள்ள வேண்டியதாயிற்று. மீண்டும் விஜயபுரி சுல்தான் இப்ராஹிம் அடில்ஷாவிற்கும், ஆமதுநகரத்தின் சுல்தான் புர்ஹான் நைசாம்ஷாவிற்கும் இடையே வேற்றுமை உண்டாகும்படி இராமராயர் தூண்டுதல் செய்தார். அப்பொழுது தோன்றிய போரில் புர்ஹான் நைசாம்ஷா பெருந்தோல்வியுற்றார். இவ்விதமாக இராமராயர், தக்காணத்துச் சுல்தான்களிடையே வேற்றுமையை உண்டாக்கி, ஒருவருக்கொருவர் போர் செய்து கொள்ளும்படி செய்தார்.

1549ஆம் ஆண்டில், இராமராயரும், ஆமதுநகரத்துச் சுல்தானும் சேர்ந்துகொண்டு விஜயபுரி சுல்தானுக்கு எதிராக உடன்படிக்கை செய்து கொண்டனர். கலியாணபுரி என்ற இடத்தை முற்றுகையிட்டனர். விஜயநகரத்து தூதர்களை விஜயபுரிநாட்டு அடில்ஷா தகாத முறையில் நடத்தினார். விஜயநகரத்து சேனைகளுக்கு தலைமை வகித்த இக்கேரி சதாசிவ நாயக்கர் விஜயபுரி சேனையைந் தோற்கடித்து கலியாணபுரத்தைக் கைப்பற்றிக்கொண்டார்.

1558-59ஆம் ஆண்டில், ஆமதுநகரத்திற்கும், கோல்கொண்டாவிற்கும் எதிராக விஜயபுரி சுல்தானுக்கு உதவி

செய்தார். குல்பர்கா நகரை முற்றுகையிட்ட ஆமதுநகரத்து சேனைப் பின்வாங்கி ஓடும்படிச் செய்தார். ஆமதுநகர சுல்தானுக்கு எதிராக அடில்ஷா என்பார் அமைத்த கூட்டுறவில் ஈடுபட்டு ஆமதுநகரத்து மக்கள் வெறுக்கும்படியாக பல அழிவு வேலைகளைச் செய்தார்.

1562-63ஆம் ஆண்டில் மீண்டும் விஜயபுரி சுல்தானுடன் சேர்ந்து கொண்டு ஆமதுநகரத்தில் மசூதிகளைக் கொள்ளையடித்தும், இஸ்லாமியர்களை துன்புறுத்தி அவமானப்படுத்தியும், இஸ்லாமிய மகளிரை அவமானப்படுத்தியும் பல கொடுஞ்செயல்களைப் புரிந்ததாகவும் நாம் கேள்விப்படுகிறோம்.

மேற்கூறப் பெற்றவாறு பாமினி ராச்சியத்திலிருந்து பிரிந்த சுல்தானிய அரசுகளின் அரசியலிலும், சமய-சமூக விஷயங்களிலும் இராமராயர் ஈடுப்பட்டது, விஜயநகரத்தின் அழிவிற்கு முக்கிய காரணமாயிற்று. தக்காணத்து சுல்தான்களில், பேரார் நாட்டுச் சுல்தானைத் தவிர மற்ற சுல்தான்கள் இராமராயருடைய கர்வத்தையும், ஆட்சியையும் அடக்குவதற்குப் பெருந்திட்டம் ஒன்றைக் அமைக்கலுற்றனர். இராமயருக்கு மிக்க நெருங்கிய நண்பனுகிய கோல்கொண்டா சுல்தானும் அக்கட்சியில் சேர்ந்து கொண்டார். இந்த இஸ்லாமியக் கூட்டுறவை அமைப்பதற்கு ஆமதுநகரத்து சுல்தான் உசேய்ன் நிசாம்ஷா என்பவர் தான் முக்கிய பங்கு கொண்டதாக டபடாபா என்பார் கூறுவர். ஆனல், பெரிஷ்டா விஜயபுரி சுல்தாகைிய அலி அடில்ஷா என்பாரை முக்கியமானவராக கருதுகிருர். கோல்கொண்டா வரலாற்ருசிரியர்கள் கோல்கொண்டா நாட்டு சுல்தான் முக்கிய பங்கு கொண்டாரெனக் கூறுவர். போர்த்துகீசிய கூட்டோ (Couto) என்பார் டபடாபாவின் கூற்றையே ஒப்புக் கொண்டுள்ளார். ஏனெனில் இராமராயருடைய பரம விரோதியாக கருதக் கூடியவர் ஆமதுநகரத்து உசேய்ன் நிசாம் ஷாவேயாவர். ஆமதுநகரத்துச் சுல்தானும் விஜயபுரி சுல்தானும் தங்களுக்குள் மிக்க நெருங்கிய திருமண உறவு கொண்டனர். ஆமதுநகரத்திற்கும், கோல்கொண்டாவிற்கும் அவ்விதமாக உறவு ஏற்பட்டதாகவும் நாம் கேள்வியுறுகிறோம். கடைசியாகத் தன்னிடம் இருந்து கைப்பற்றிய இராய்ச்சூர்-இடைதுறை நாட்டை விட்டு விடும்படி இராமராயருக்கு, விஜயபுரி சுல்தான் ஒரு கடிதம் எழுதினுர். ஆனுல் இக்கடிதத்தை இராமராயர் அலட்சியம் செய்து போருக்குத் தயாரானுர். தன்னுடைய சேனையின் பலத்தை நம்பி இராமராயர் தலைக்கோட்டைப் போரில் ஈடுபட்டதாகத் தெரிகிறது,

# 25. தலைக்கோட்டைப் போர் 1565

1564ஆம் ஆண்டு டிசம்பர் மீ 25உ இஸ்லாமியத் தலைவர்களின் சேனைகள் கிருஷ்ணைப் பேராற்றைக் கடந்து இடைதுறை நாட்டுக்குள் புகுந்தன. ராக்ஷசி, தாங்கடி என்ற இரு கிராமங்களுக்கிடையில் விஜயநகரத்து சேனைகள் முகாம் இட்டிருந்தன. ஹீராஸ் பாதிரியார், இப்போர் தலைக்கோட்டைக்கருகில் நடந்ததென்று கூறுமல் ராக்ஷசி-தாங்கடி என்ற கிராமங்களுக்கிடையில் நடந்ததெனக் கூறுவர். இஸ்லாமியத் தலைவர்களிடம் ஐம்பதினுயிரம் குதிரைப்படைகளும், மூவாயிரம் கலாட் படைகளும், ஆறுயிரத்திற்கு மேற்பட்ட மராட்டிய குதிரைவீரர்களும் இருந்தனர் என வரலாற்று ஆசிரியர்கள் கூறியுள்ளனர். இராமராயருடைய சேனையில் எழுபதினுயிரம் குதிரைப்படையினரும் தொண்ணூறு ஆயிரம் கலாட்படைகளும், யானைகளும் பீரங்கிப் படைகளும் இருந்தன. இவ்வளவு எண்ணிக்கை சேனைகள் ஒரு குறிப்பிட்ட இடத்தில் போரிடுவது முடியாத காரியமாகும், விஜயநகரத்து சேனைகளுக்கு, வேங்கடாத்திரி, இராமராயர் திருமலைராயர் ஆகிய மூன்று சகோதரர்களும் தலைமை வகித்துப் போர் புரியலாயினர். முதலாம் பரீட்ஷா, இப்ராஹிம் குத்புஷா, உசேய்ன் நிசாம்ஷா, அலிஅடில்ஷா என்ற நால்வர் பகைப் படைக்குத் தலைமை வகித்தனர். போரின் தொடக்கத்தில் சுல்தான்களுடையப் படைகள் பின்வாங்கும் படி நேர்ந்தது. ஆயினும், உசேய்ன் நிசாம்ஷா மனம் தளராது பீரங்கிப் படைக்குத் தலைவனுக இருந்த சலபிருமிகான் என்பாருடைய சிறந்த முயற்சியால் விஜயநகரத்துப் படைகள் பின்வாங்க நேர்ந்தது. இச்சமயத்தில் விஜயநகரத்து சேனையில் இருந்த இரண்டு இஸ்லாமியப் படைகள் துரோகச் செயலில் ஈடுபட்டு எதிர்கட்சியோடு சேர்ந்து விட்டதாக சீசர்பெடரிக் என்னும் போர்த்துகீசியர் கூறியுள்ளார். இத் துரோகச் செயலினுல் விஜயநகரத்துப் படையினருக்குள் பெரியதொரு குழப்பம் நேர்ந்தது. இராமராயரும், தன்னுடைய தள்ளாமையைப் பொருட்படுத்தாது தன்னுடைய போர் வீரர்களை உற்சாகப் படுத்திப் போரை நடத்தினுர். பல்லக்கில் இருந்து கீழே இறங்கி ஓர் அரியணையின் மீதமர்ந்து தனக்குமுன் பொன்நாணயங்களைக் குவித்து வைத்து தீவிரமாகப் போர் புரியும் வீரர்களுக்கு

வாரி வழங்கப் போவதாகக் கூறினர். ஆனல், இஸ்லாமியப் பீரங்கிப் படைகள் விஜயநகரத்து வீரர்களைச் சுட்டு வீழ்த்தி ஆயிரக்கணக்கான வீரர்களைக் கொன்று குவித்தனர். இந்துக் களுடைய சேனையில் பெருங்குழப்பம் நேர்ந்தது. இராமராயர் மீண்டும் பல்லக்கில் அமர்ந்து போர் வீரர்களைத் துணிந்து தாக்கும்படிக் கட்டளையிட்டார். இத்தருணத்தில் ஐந்தாயிரம் வீரர்கள் கொண்ட இஸ்லாமியக் குதிரைப்படை ஒன்று இராம ராயர் இருந்த இடத்தை நோக்கி விரைவுடன் சென்று இராம ராயரைச் சூழ்ந்துக் கொண்டது. ஒரு மதங் கொண்ட யானைக்குப் பயந்துபல்லக்குத் தூக்கியவர்கள் அப்பல்லக்கை கீழே போட்டு விட்டனர். பல்லக்கை விட்டிறங்கி தன்னைப்பாதுகாப்பதற்குள் இராமராயர் எதிரிகளால் கைப்பற்றப்பட்டார். தலைவனை இழந்த விஜயநகரப்படைகள் மனமுடைந்து பின்வாங்கத் தொடங்கினர்.

இராமராயரை, உசேய்ன்ஷா ஈவிரக்கமின்றி கொலைசெய் வித்து அவருடைய தலையை ஒரு மூங்கிற்கழியில் கோர்த்து விஜயநகரத்து சேனைகளுக்கு முன் காட்டவே, எல்லாப் பகுதி களிலிருந்தும் அவர்கள் பின்வாங்கினர். வேங்கடாத்திரி போர்க் களத்தில் உயிரிழந்தார். திருமலைராயருடைய கண்ணென்றில் அம்பொன்று பாய்ந்து போர்நடத்த முடியாதபடி விஜயநகரத் திற்குப் பின்வாங்கினர். இனிமேல் போர்செய்வதிற் பயனில்லை என உணர்ந்த திருமலைராயர் யானைகளின்மீதும், குதிரைகளின் மீதும் அரண்மனையிலிருந்த செல்வங்களைக் கூடியவரையில் வாரிக்கொண்டு சதாசிவராயரையும் அழைத்துக்கொண்டு, திருப்பதியை நோக்கிப் பிரயாணமானர். விஜயநகரத்தில் பெரியதொரு குழப்பமும், பீதியும், திகிலும் குடிகொண்டன. நகரத்தில் வாழ்ந்த மக்கள் பாதுகாப்பின்றி தவிக்கலாயினர். விஜயநகரத்துப் படைகள் தோல்வியுற்றதைக் கேள்வியுற்ற, பிரிஞ்சாரிகள், இயம்பாடியர், குறும்பர் முதலிய கொள்ளைக் கூட்டத்தினர் நகரத்திற்குட்புகுந்து கொள்ளையடிக்கத் துணிந் தனர். கூட்டோ என்ற போர்த்துக்கீசியர் மேற்கூறப்பெற்ற கொள்ளைக்கூட்டத்தினர் ஐந்தாறு தடவைகள் கொள்ளையிட்ட ரெனக் கூறியுள்ளார்.

வெற்றியடைந்த சுல்தான்களுடைய படைகள் இரண்டு நாட்கள் போர்க்களத்தில் தங்கி ஓய்வெடுத்துக்கொண்டு பின்னர் விஜயநகரத்திற்குள் புகுந்தனர். அதிலிருந்து ஐந்து ஆறு மாதங்கள் வரையில் விஜயநகரம் சின்னபின்னம் ஆக்கப் பட்டது. நகரத்தை அழிக்கவேண்டுமென்று கங்கணம் கட்டிக்

கொண்டவர்கள் அதை அழித்துப் பாழ்படுத்தினர். 'தேவாலயங்களையும், அரண்மனைகளையும் இடித்து நிரவினர். மக்களையெல்லாம் கொன்றுகுவித்தனர். கோவில்களில் காணப்பெற்ற விக்கிரகங்களையெல்லாம் உடைத்து எறிந்தனர். ஒரே கல்லில் அமைக்கப்பெற்றிருந்த நரசிம்மமூர்த்தியின் விக்கிரகத்தை உடைத்து எறிந்தனர். விழாக்காலங்களில் அரசர்கள் வீற்றிருந்து மக்கள் கண்குளிரக் கண்டுகளித்த கூடாரங்களையும், மாடங்களையும் அழித்தனர். வித்தளசுவாமி கோவிலின் முன்புறத்தில் இருந்த மண்டபத்தை இடித்து அதிலிருந்த அழகிய சிற்பங்களை அழித்தனர். கோபுரங்களையும் கோவில் மண்டபங்களையும் பார்த்து இன்புறுமல் இடித்து நொறுக்கினர். கடப்பாரை, கோடரி முதலிய கருவிகளைக் கொண்டு உயர்ந்த சிற்பத்திறம் வாய்ந்த கோவில்களையும். கோபுரங்களையும் இடித்ததும் அன்றியும், பெருந்தீ மூட்டிப் பலவித அழிவுவேலைகளை மேற்கொண்டனர். உலக வரலாற்றில், இதுபோன்ற கொடுமையான செயல்கள் வேறு எங்கும் நடைபெற்றதென நாம் கூறமுடியாது. பொற்றொடி மகளிரும் மைந்தரும் கூடி, நெற்பொலி நெடுநகராக விளங்கிய விஜயநகரம் பாழ்பட்டுத் தன்னுடைய பெருமையனைத்தும் இழந்தது.[1]

## இராமராயரின் பெருமை

அச்சுத தேவராயரின் ஆட்சிக்காலத்திலிருந்தே இராமராயருடைய செல்வாக்கு விஜயநகரப் பேரரசில் பரவிவந்தது. கிருஷ்ணதேவராயருக்குப் பிறகு 1530முதல் 1565 ஆம் ஆண்டு முடிய விஜயநகரப் பேரரசின் வரலாற்றை இராமராயருடைய வரலாறு என்று கூறலாம். அச்சுததேவராயரின் காலத்தில் அவருடைய மைத்துனர்கள் சாலுக்கராஜு சகோதரர்களுடைய கொடுங்கோன்மையிலிருந்தும், குழப்பத்திலிருந்தும் விஜய நகரப் பேரரசை ஒழுங்குபடுத்தியவர் இராமராயரேயாவர் பெயரளவில் பேரரசராக விளங்கிய சதாசிவராயருடைய ஆட்சியில் விஜயநகரத்தின் உள்நாட்டு, வெளிநாட்டுக் கொள்கைகளை இராசதந்திர முறைப்படி நடத்தி இராமராயர் புகழடைந்தார். அவர் பாமினி சுல்தான்களுடைய அரசியல் விவகாரங்களில் ஈடுபட்டு அவர்களிடையே பகைமையையும், போராட்டத்தையும் வளர்த்து, சாம, பேத, தான, தண்ட முறைகளைக் கையாண்டது விஜயநகரத்திற்கு முடிவில் பெருங்கேட்டை விளைவித்தது. தலைக்கோட்டைப் போரில் இராமராயர் உயிர் இழந்ததும் விஜயநகரத்துப் படைகள் தோல்வியுற்றதும்

[1] R. Sewell, A Forgotten Empire, pp. 200—201.

அவருடைய வீழ்ச்சியின் பயனேயாகும். இஸ்லாமிய ஆட்சியும், இஸ்லாமிய சமயமும் தென்னிந்தியாவிலும் பரவவேண்டிய சூழ்நிலைக்குத் தலைக்கோட்டைப் போர் காரணமாயிற்று. கிருஷ்ணதேவராயர் காலத்தில் நிலவிய பெருமையையும், பெருமிதத்தையும் மீண்டும் விஜயநகரப் பேரரசில் நிலைநாட்டுவதற்கு இராமராயர் முயற்சி செய்தார். தக்காணத்தில் ஆட்சி புரிந்த சுல்தான்களை தன்னுடைய இஷ்டப்படி நடக்கும்படி செய்தார். தக்காண சுல்தான்களும் அவரிடம் பொறுமை கொண்டு அவருடைய கர்வத்தை அடக்குவதற்குத் தகுந்த நடவடிக்கை எடுத்தனர்.

சதாசிவராயரைச் சிறையில் அடைத்துவிட்டு அவருக்குப் பதிலாக தன்னுடைய தம்பிகளும் தானும் அரசியலை நடத்தியதை எந்த வரலாற்று ஆசிரியரும் நியாயமான செய்கையென ஒப்புக்கொள்ளமாட்டார்கள். வைணவ சமயத்தைப் பின்பற்றி இலக்கியங்களையும் இசையையும் ஆதரித்தபோதிலும் சதாசிவராயருக்கு இழைத்த தீங்கை எளிதில் மறந்துவிட முடியாது. இராமராயருடைய ஆட்சியில் உள்நாட்டு அரசியல் நல்ல நிலைமையில் இருந்ததென்பதை அவர் காலத்திய கல்வெட்டுக்களிலிருந்து உணர்ந்துகொள்ளலாம்.

## தலைக்கோட்டைப்போரின் விளைவுகள்

ஐரோப்பிய வரலாற்றில் 1815ஆம் ஆண்டில் நெப்போலியனுக்கும் மற்ற ஐரோப்பிய மன்னர்களுக்கும் இடையே நடந்த 'வாட்டர்லூ'ப் போரை,இந்த தலைக்கோட்டை யுத்தத்திற்கு பல வரலாற்றாசிரியர்கள் ஒப்பிட்டுள்ளனர். வாட்டர்லூப் போரில் நெப்போலியன் தோல்வியடைந்தது பிரஞ்சுப் பேரரசை வீழ்த்தியதுபோல் தலைக்கோட்டைப் போரும் விஜயநகரப் பேரரசின் பெருமையைக் குறைத்தது. தக்காணத்துச் சுல்தான்களுக்கும் விஜயநகர அரசர்களுக்கும் இடையே அடிக்கடி போர் நடப்பதற்குக் காரணமாக இருந்த இராய்ச்சூர் இடைதுறைப் பகுதி இப்பொழுது சுல்தான்களுடைய வசத்திற்கு வந்தது. துங்கபத்திரை நதிக்குத் தெற்கேயுள்ள பிரதேசத்தின் மீது ஆதிக்கம் செலுத்துவது இருதரப்பாருக்கும் முக்கிய கடமையாயிற்று. தலைக்கோட்டைப்போர் விஜயநகரப் பேரரசிற்கு ஒரு முக்கியமான நெருக்கடியை உண்டாக்கிய போதிலும், விஜயநகரப் பேரரசை முற்றிலும் அழித்துவிடவில்லை. விஜயநகரத்தைக் கைவிட்டபோதிலும், பெனுகொண்டா, திருப்பதி, வேலூர், சந்திரகிரி என்னும் நகரங்கள்

விஜயநகரப் பேரரசிற்குத் தலைநகரங்களாக விளங்கின. கிருஷ்ணதேவராயருடைய அரசியல் கொள்கைகளும், இராமராயருடைய சாம, பேத, தான, தண்ட கொள்கைகளும் மறைந்துவிட்டபோதிலும், 1614ஆம் ஆண்டுவரையில், விஜயநகரப்பேரரசு ஓரளவு நிலைகுலையாமல் இருந்ததெனக் கூறலாம். ஆகையால் தலைக்கோட்டைப்போர் 1565ஆம் ஆண்டிலேயே விஜயநகரப் பேரரசை அழித்துவிடவில்லை.

## தலைக்கோட்டைப் போரும், தக்காண முஸ்லிம் சுல்தான்களும்

தலைக்கோட்டைப் போரில் இஸ்லாமிய சுல்தான்கள் ஒற்றுமையாக இருந்து பெரும் வெற்றிப் பெற்ற போதிலும், அவர்களுடைய ஒற்றுமை நெடு நாளைக்கு நிலைப்பெறவில்லை. விஜயநகரத்து இராமராயருடைய வலிமையை அழிக்கிற வரையில் தான் அவர்களுடைய ஒற்றுமை நீடித்தது. பின்னர் அவர்கள் தங்களுக்குள் போரிட்டுக் கொண்டு இறுதியில் மொகலாயப் பேரரசிற்கும், மராட்டிய வீரர்களுக்கும் அடங்கி நடக்க வேண்டி வந்தது. இடைதுறை நாட்டை மட்டும் சுல்தான்கள் கைப்பற்றிக் கொண்டனர். விஜயநகரப்பேரரசின் முக்கியப் பகுதிகள் ஆரவீடு வமிசத்தினரின் ஆட்சியிலேயே இருந்தன. துங்கபத்திரை நதிக்குத் தெற்கேயுள்ள நிலப்பகுதிகள் பதினேழாம் நூற்றுண்டில் தான் விஜயபுரி, ஆமதுநகர் சுல்தான்களுக்குக் கீழ்ப்படிந்தது.

## போர்த்துக்கீசியரும்—தலைக்கோட்டைப் போரும்

தலைக்கோட்டைப் போரில் விஜயநகரப் பேரரசிற்கு கிடைத்த தோல்வியினால் போர்த்துக்கீசியருடைய வியாபாரம் தென்னாட்டில் குறையத் தொடங்கியது. துளுவ வமிசத்தரசர்கள் மேன்மையுற்றிருந்த பொழுது போர்த்துக்கீசியருடைய வியாபாரமும் மேன்மையுற்றது. அவர்கள் தாழ்வுற்ற நிலையில் போர்த்துக்கீசிய வியாபாரமும் நிலை கெட்டது. அல்புகர்க்கு என்பாருக்குப் பின்வந்த போர்த்துக்கீசிய ஆளுநர்கள் விஜய நகரப் பேரரசோடு நெருங்கிய தொடர்பு கொள்ளவில்லை. விஜயநகரத்து உதவியை இழந்த போர்த்துக்கீசியர்களை, விஜயபுரி ஆமதுநகரத்து சுல்தான் சேர்ந்துக் கொண்டு போரில் தோற்கடித்தனர். போர்த்துக்கீசியருடைய வியாபாரமும் சீர்குலையலாயிற்று.

# 26. விஜயநகரப் பேரரசின் ஆட்சிமுறை

விஜயநகரப்பேரரசின் ஆட்சி முறையை, மத்திய அல்லது மைய அரசு, மாகாண அரசாங்கம், தலஆட்சிமுறை (local government) என மூவையாகப் பிரித்து உணரலாம்.

## மத்திய அரசாங்கம்

விஜயநகரப் பேரரசரும் அவருக்கு உதவியாக இருந்த அமைச்சரவையும் அரசாங்க அலுவலாளர்களும், அரசாங்கப் பிரிவுகளும் மத்திய அரசாங்கம் அல்லது மைய அரசின் கூறு களாக இருந்தன எனக் கூறலாம். தென்னிந்திய வரலாற்றில் முடியாட்சியே முக்கியத்துவம் பெற்றிருந்தது. நாட்டின் ஒற்றுமைக்கும், மக்களுடைய ஒருமைபாட்டுணர்ச்சிக்கும் பேரரசருடைய பெருமிதமே முக்கியமாக இருந்ததெனக் கூறலாம். அரசாங்கத்தின் ஏழு அமிசங்களில் அரசனுடைய பதவியே மிக முக்கியம் வாய்ந்ததெனக் கிருஷ்ணதேவராயர் தன்னுடைய ஆமுக்தய மால்யதாவில் கூறியுள்ளார். அசோகப் பேரரசர் தன்னுடைய கல்வெட்டில் கூறியவாறு 'மக்கள் எல்லோரையும் என்னுடைய குழந்தைகளாகவே நான் கருது கிறேன். என்னுடைய குழந்தைகளுடைய நலத்தை நான் நாடுவது போல் என்னுடைய குடிகளுடைய நலத்தைக் கருது வதே என்னுடைய முக்கிய கடமையாகும்' என்ற பேருண்மையை விஜயநகரப் பேரரசர்கள் பின்பற்றியதாகக் கூறலாம். பூர்வ மரியாதை பத்ததியைக் காப்பாற்றுவதும், வேதமார்க்கத்தைப் பின்பற்றி சமயங்களை பாதுகாப்பதும், அரசனுடைய முக்கிய கடமைகளாகக் கருதப் பெற்றன. தெளிவாக வரையறுக்கப் பெற்ற அரசியல் சட்டத்தின் மூலம் அரசனுடைய மட்டற்ற அதிகாரங்கள் கட்டுப்படுத்தப் பெருமற் போனலும், அரசன் கொடுங்கோன்மை புரியாதவாறு ஆட்சி புரிவதற்கேற்ற பல வாய்ப்புகள் இருந்தன.

தன்னுடைய ஆட்சியின் கீழ் வந்த குடிகளை அயல்நாட்டு அரசர்களுடைய படையெழுச்சியிலிருந்தும், உள்நாட்டுக் கலகங்களிலிருந்தும் காப்பாற்றுவது அரசனுடைய முக்கிய கடமையாயிற்று. 'கொலையிற் கொடியோரை வேந்தொறுத்தல்

பைங்கூழ்க் களை கட்டதனொடு நேர்' என்னும் உண்மைக்கேற்ப 'துஷ்ட நிக்ரக சிஷ்டபரிபாலனம்' செய்வதை விஜயநகரப் பேரரசர்கள் தங்களுடைய கடமையெனக் கொண்டனர். வேத வைதீகமார்க்க பிரதிஷ்டாபன சாரியன், தர்மமகா ராஜாதிராஜன் என்ற பட்டங்களைக் மேற்கொண்டு பேரரசில் நிலைபெற்றிருந்த சமயங்களையும், சமூக அமைப்பையும், கோவில்களையும், மடலாயங்களையும் காப்பாற்றி அமைதியை நிலைநாட்டுவதையே தங்களுடைய முக்கிய கடமையெனவும் கருதினர். நாட்டில் வெகுகாலமாக நடைபெற்று வந்த தீபாவளி, மகர நோன்பு, புத்தாண்டு பிறப்பு, காமன்பண்டிகை முதலிய பரம்பரையான பண்டிகைகளையும் வழக்கொழிந்து விடாது போற்றினர். வர்ணாசிரம முறையைப் பாதுகாத்துக் காலதேச வர்த்தமானங்களுக்கேற்றாற் போல சமூகத்திலும் அரசாங்கத்திலும் மாற்றங்களை உண்டாக்குவதும் விஜயநகரப் பேரரசின் கடமைகளாயின. உழவுத் தொழிலையும், வணிகத்தையும் வளம் பெறச் செய்து நாட்டில் உணவுப் பஞ்சமும், பிணியும் பராவாமல் :பாதுகாப்பதும் அரசாங்கத்தின் முக்கிய கொள்கைகளாகக் கருதப் பெற்றன.

## அரசுரிமை

விஜயநகரப் பேரரசில் தந்தைக்குப்பிறகு மகன் அரசுரிமைப் பெறும் பரம்பரை வாரிசுரிமையே வழக்கத்தில் இருந்தது. ஓர் அரசனுடைய பட்டமகிஷியின் மூத்த புதல்வனே அவனுக்குப் பிறகு அரசுரிமை பெறுவது வழக்கம். அப்புதல்வனுக்குத் தகுந்த வயதுவந்த பிறகு இளவரசனாக நியமிப்பதும் உண்டு. ஆண் வாரிசுரிமை இல்லாதுபோனால், அரசனுக்கு நெருங்கிய உறவினர்களையும், தாயத்தினர்களையும் அரசுரிமைப் பெறும் படிச் செய்வதும் உண்டு. எடுத்துக்காட்டாக முதலாம் ஹரிஹரதேவராயருக்குப் பிறகு அவருடைய தம்பி முதலாம் புக்கர் பட்டமேற்றார். கிருஷ்ணதேவராயருடைய மகன் திருமலை தேவன் இளமையிலேயே உயிர்துறந்த பின்னர் அச்சுத தேவராயரும் அவருக்குப்பிறகு சதாசிவராயரும் அரசுரிமை யடைந்தனர். ஓர் அரசன் இறந்தபிறகு அப்பதவியை ஏற்பவர் முடிசூட்டிக்கொள்ளும் வழக்கம் தென்னிந்திய அரசர்களிடையே வழங்கியது. வீரநரசிம்ம புஜபலராயர் இறந்தபிறகு அவருடைய தம்பி கிருஷ்ணதேவராயர் விஜயநகரப் பேரரசராக முடிசூட்டப்பெற்றார் (1509). இந்த முடிசூட்டுவிழா புனிதமான சமயச்சடங்குபோல் நடைபெறுவது வழக்கம். முடிசூட்டப் பெறும் அரசன் யானை மீதோ அல்லது குதிரையின்மீதோ

ஊர்வலமாக அரண்மனையில் உள்ள முடிசூட்டுவிழா மண்டபத்திற்கு அழைத்துச்செல்லப்படுவார். அங்கே குழுமியுள்ள அரண்மனை அலுவலாளர்களும், சிற்றரசர்களும், மூலப்பிரகிருதியாரும் மற்றையோரும் அரசனை வரவேற்று அரியணையில் அமர்த்தி முறைப்படி முடிசூட்டி அரசனுக்குரிய செங்கோல் முதலியவற்றை அளித்து வணக்கம் செய்வர். இவ்விழாவில் அரசனுடைய முக்கிய அமைச்சர் மிகுந்த ஆர்வத்துடன் செயல்படுவர். கிருஷ்ணதேவராயருக்கு அவருடைய முக்கிய அமைச்சரும் நண்பருமாகிய சாளுவதிம்மர் முடிசூட்டினர். சதாசிவராயருக்கு அவருடைய அமைச்சர் இராமராயர் முடிசூட்டு விழாவை நடத்தினர்.

அரசன் இளைஞனாக இருந்தாலும், உடல்நலம் இல்லாமல் இருந்தாலும் அல்லது நாட்டைவிட்டுப் போகவேண்டி இருந்தாலும் ஒரு தனிப்பட்டவரோ அல்லது குழுவொன்றோ பகர ஆளுநராக (Regent) அரசாங்கக் காரியங்களைக் கவனிப்பதும் உண்டு. தன்னுடைய இறுதிக்காலத்தில் சாளுவநரசிம்மன், விஜயநகர ஆட்சியையும் தன்னுடைய இரு குமாரர்களையும் பார்த்துக்கொள்ளும்படி நரசநாயக்கரிடம் ஒப்படைத்தார். அச்சுததேவராயருக்குப் பிறகு பட்டத்திற்கு வந்த சதாசிவ ராயருக்கு இராமராயர் பகர ஆளுநராக பணியாற்றினர். 1524இல் கிருஷ்ணதேவராயர் உயிருடன் இருக்கும்பொழுதே தன்னுடைய மகன் திருமலைராயன் என்பாருக்கு இளவரசுப் பதவியை அளித்தார். அச்சுததேவராயருடைய மகன் வேங்கடாத்திரி என்பாரும் இளைஞனாக இருக்கும்பொழுது இளவரசராக நியமனம் செய்யப்பெற்றிருந்தார்.

## அரண்மனையும் அரசவையும்

விஜயநகரத்தில் அமைந்திருந்த அரண்மனையைக் கிருஷ்ணதேவராயர் காலத்தில் அந்நகரத்திற்கு வந்த பீயஸ் என்ற போர்த்துக்கீசியர் தான் நேரில் கண்டவாறு கூறியிருப்பதை நாம் படித்து உணரவேண்டிய செய்தியாகும். இக்காலத்தில் அந்த அரண்மனை இடிந்து உருமாறிபோய்விட்டபொழுதிலும் கிருஷ்ணதேவராயர் ஆட்சிக்காலத்தில் எவ்வாறு இருந்ததெனக் கூறியுள்ளார். 'கிறிஸ்டோவோ என்ற போர்த்துக்கீசியருடைய விருப்பத்தின்படி தன்னுடைய அரண்மனைக்குட் சென்று பார்க்கும்படி எங்களுக்கு அரசர் உத்தரவளித்தார். சாளுவதிம்மருடைய தம்பியாகிய கொண்டமராசய்யா என்பார் எங்களை அரண்மனைக்குள் செல்லும்படி உத்தரவிட்டார்

அரண்மனை வாயிலுக்குள் நுழைந்தவுடன் நாங்கள் எத்தனை பேர்கள் உள்ளோம் என்பதைக் காவல்காரன் ஒருவன் எண்ணிக்கொண்டான். பின்னர் ஒவ்வொருவராக அரண் மனைக்குள் நுழைந்தோம். வெகு வெண்மையாக வெள்ளை யடிக்கப்பெற்ற மதில்சூழ்ந்த வாயில் முற்றத்தின் வழியாக உள்ளே நுழைந்தோம். அந்த வாயிலின் இடதுபுறத்தில் இன்னொரு நுழைவாயில் இருந்தது. அதனுடைய இருபுறங் களிலும் நாம் உயிருடன் நேரில் காண்பது போன்று இரண்டு உருவங்கள் தீட்டப்பெற்றிருந்தன. வலதுபுறத்தில் கிருஷ்ண தேவராயருடைய தகப்பனுடைய உருவமும், இடதுபுறத்தில் கிருஷ்ணதேவராயருடைய உருவமும் இருந்தன. தகப்ப னுடைய உருவம் சிறிது கருமை நிறமாகவும், சதைப்பற்றுள்ள தாகவும் தோன்றியது. அரசர்களுக்குரிய ஆடைஅணிகளோடு இவ்விரு உருவங்களும் எழுதப்பெற்றிருந்தன. இந்த வாயிலுக் குள் நுழைந்தபொழுதும் காவற்காரன் ஒருவன் எங்களை எண்ணிக்கொண்டான். இவ்வரண்மனைக்குள் இரண்டு அழகான அறைகள் இருந்தன. அவற்றில் ஒன்று தரை மட்டத்திற்கு இரண்டு படிகளுக்குக் கீழே அமைந்திருந்தது. அப்படிகள் செப்புத்தகடுகளினால் மூடப்பெற்றிருந்தன. இந்த அறைகளின் சுவர்கள் எல்லாம் செப்புத்தகடுகளினால் வேயப் பெற்று தங்கமுலாம் பூசப்பெற்றிருந்தன. அந்த அறைகளின் வெளிப்புறம் தூங்கானை மாடம்போல் அமைந்திருந்தது. நான்கு பக்கங்கள் கொண்ட உயர்ந்த மரங்களைத் தூண்களாகக் கொண்டு பல சித்திரவேலைகளுடன் அமைக்கப்பெற்ற புகுமுக மண்டபம் ஒன்று இருந்தது. இம் மண்டபத்தின் உட்புறத் தில் நவரத்தினங்களும், முத்துக்களும் வைத்து இழைக்கப் பெற்றிருந்தன. இவைகளுக்கிடையே பொன்னால் செய்யப் பெற்ற கலசங்கள் தொங்கிக்கொண்டிருந்தன. இந்த புகுமுக மண்டபத்திலும், அதற்குள்ளே இருந்த அறையிலும் தங்கத் தினால் ஆன தகடுகள் வைத்து ஆணி அடிக்கப் பெற்றிருந்தன. தரையில் கறுப்புப் பட்டுத்துணியினால் செய்யப்பெற்றதும், ஒரு சாண் அகலத்திற்கு முத்துக்களை முன்தானையாகக் கொண்டதுமாகிய சமுக்காளம் விரிக்கப்பெற்றிருந்தது. இதற்கு வலதுபக்கத்திலிருந்த அறைக்குள் நாங்கள் நுழைந்து பார்க்க முடியவில்லை.

'பின்னர், யானைதந்தங்களையே தூண்களாகவும், பலகை களாகவும் கொண்டு அமைக்கப் பெற்ற இன்னொரு விசித்திர மான அறை யொன்றைப் பார்த்தோம். இவ்வறையின் விதா னத்தில் தந்தத்தினால் செய்யப் பெற்ற தாமரை மலர்களும்,

ரோஜா மலர்களும் பதிக்கப் பெற்றிருந்தன. இவ்வளவு சித்திர வேலைகள் நிறைந்த அரண்மனையை உலகத்தில் வேறு எங்கும் நாம் காணமுடியாது. இந்த அறையின் சுவற்றில் விஜய நகரத்திற்கு அக்காலத்தில் வந்த அயல் நாட்டவர்களுடைய உருவங்களும் அவர்களுடைய நடையுடை பாவனைகளும் தீட்டப் பெற்றிருந்தன. அயல்நாட்டவர்கள் எவ்விதம் இருந்தார்கள் என்பதை அரண்மனையில் உள்ள மகளிர்கள் அறிந்துகொள்வதற்காகவே இவ்வித சித்திரவேலைகள் செய்யப் பெற்றிருந்தன போலும். இந்த அறைக்குள் பொற்றகடுகள் வேயப்பெற்ற இரண்டு அரியணைகளும், வெள்ளியினுல் செய் யப்பெற்றதும் பட்டுத்திரையினுல் மூடப்பெற்றதுமாகிய ஒரு கட்டிலும் இருந்தன. ஓரிடத்தில் அகலமான பழுப்பு நிறம் உடைய மணிக்கல் ஒன்று பதிக்கப்பெற்றிருந்தது. அதன் மேல் வளைவாக அமைக்கப்பெற்ற வாயிற்படியின் கதவுகள் பூட்டப்பெற்றிருந்த ஓர் அறையில் அரசனுடைய கருவூலம் இருந்ததென காவல்காரன் கூறினுன்.'

'மேற்கூறப்பெற்ற அரண்மனையை விட்டு ஒரு முற்றத்தின் வழியாக, நன்ருக சமன்செய்து சாந்துபூசப்பெற்ற விளையாட்டு அரங்கு போன்ற ஓர் இடத்திற்குச் சென்றேம். இவ்விடத்தில் உயரமான மரத்தூண்கள் புதைக்கப்பெற்றிருந்தன. அத்தூண் களின்மேல் தங்கமுலாம் பூசப்பெற்ற விட்டங்கள் இருந்தன. அவ் விட்டங்களிலிருந்து வெள்ளிச் சங்கிலிகள் தொங்கிக் கொண்டிருந்தன. அவற்றில் இணைக்கப்பெற்றிருந்த ஊஞ்சல் களில் அரசிகள் ஊஞ்சலாடுவது வழக்கம் எனக் கேள்விப் பட்டேன். இந்த ஊஞ்சல் அரங்கிலிருந்து சில மாடிப்படி களைக் கடந்து கருங்கல் தூண்களைக்கொண்டு அமைக்கப் பெற்ற இன்னொரு கூடத்திற்குச் சென்றேம். இங்குள்ள தூண்கள் எல்லாம் பொற்றகடுகளால் மூடப்பெற்றிருந்தன. இக் கூடத்தின் நடுவில் நான்கு தூண்களின்மீது விதானமாக அமைக்கப்பெற்ற நடனஅரங்கு ஒன்றைக் கண்டோம். அந்த அரங்கத்தின் நான்கு சுவர்களிலும் பரதநாட்டிய சித்திரங்களும் சிற்பங்களும் காணப்பெற்றன.'

'இக் கூடத்தின் அல்லது மண்டபத்தின் கடைசியில் ஒரு சிறிய கோவில் இருந்தது. அக் கோவிலில் சுயதங்கத்தினுல் செய்யப்பெற்ற தெய்வச்சிலையொன்றிருந்தது. உற்சவ காலங் களில் இச் சிலையைப் பல்லக்கில் வைத்து அரண்மனைக்குள் பவனிவருவதும் பரதநாட்டியம் நடப்பதும் உண்டு.'[1] மேற்

[1] A. R. Sewell. A. Forgotten Empire, pp. 271—274.

கூறப்பெற்ற அரண்மனையிலிருந்து பீயஸும் மற்ற போர்த்துக்கீசிய வழிப்போக்கர்களும் வெளியேறிய சமயத்திலும் காவற்காரர்கள் அவர்களுடைய எண்ணிக்கையைச் சரிபார்த்து வெளியில் அனுப்பியதாக பீயஸ் கூறியுள்ளார்.

பீயஸ் என்பாரால் நேரில் காணப்பெற்று விவரிக்கப்பெற்ற அரண்மனையில் வெகு ஆடம்பரமாக அமைக்கப்பெற்ற கொலு மண்டபமும் இருந்திருக்க வேண்டும். இக் கொலு மண்டபத்தில் பொன்னாலும் மணிகளாலும், அலங்கரிக்கப்பெற்ற அரியணையில் அரசனும், அரசியும் வீற்றிருந்தனர்· மகரநோன்பு கொண்டாட்டத்தின்பொழுது விலையுயர்ந்த ஆடைஅணிகளை அணிந்துகொண்டு விஜயநகரத்தரசர்கள் கொலுவீற்றிருப்பது வழக்கம் என அப்துர்ரசாக் கூறுவர்· தலைக்கோட்டை போருக்குப்பிறகு விஜயநகரத்தை விட்டு வெளியேறி பெனுகொண்டா, சந்திரகிரி, முதலிய இடங்களில் வாழ்ந்தபொழுது மேற்கூறப்பெற்ற ஆடம்பர பழக்கங்கள் மறைந்துவிட்டன. சந்திரகிரியில் இரண்டாவது வேங்கடதேவராயர் ஆட்சி செலுத்தியபொழுது சாதாரணமான பாயின் மீது அமர்ந்து திண்டின்மீது சாய்ந்துகொண்டு அரசன் உட்கார்ந்திருந்தார் என நாம் அறிகிறோம்.

விஜயநகரத்தரசர்களுக்கு அணுக்கத் தொண்டர்களாக பல வேலைக்காரர்கள் இருந்தனர். திருமந்திர ஓலை என்பவர் அரசனுடைய அந்தரங்க காரியதரிசியாவர். அரசனுக்கு எப்பொழுதும் அருகில் இருப்பவருக்கு அடைப்பம் என்ற பெயர் வழங்கியது. கிருஷ்ணதேவராயருக்கு அடைப்பமாக அலுவல் பார்த்தவருக்கு இருநூறு குதிரைவீரர்களும், பதினையாயிரம் காலாட்படையினரும் இருந்தனர் என நூனிஸ் கூறுவர். அடைப்பம் என்ற தொண்டருக்கு உதவியாக பெரிய பிள்ளையாண்டான்கள் சிறிய பிள்ளையாண்டான்கள் என்ற அலுவலாளர்கள் இருந்தனர். விஜயநகரத்து அரண்மனைகளில் ஏராளமான மகளிர்கள் நிறைந்த அந்தப்புரங்கள் இருந்ததாகப் போர்த்துக்கீசிய வரலாற்றாசிரியர்கள் எல்லோரும் கூறியுள்ளனர். அரசர்களுக்கும் அரசிகளுக்கும் 'திருமெய்க் காப்பாளர் (body guards) ஏராளமாக இருந்தனர். யானை வேட்டையாடுவதிலும், யானைகளைப் பழக்குவதிலும் அரசனுக்கு உதவிசெய்ய பல வேலைக்காரர்கள் இருந்தனர். அரசருடன் மல்யுத்தம் செய்வதற்கு பல மல்லர்களும் இருந்தனர். சாளுக்கியருடைய அரசசின்னமாகிய வராக உருவத்தை விஜயநகரத்து அரசர்களும் பின்பற்றினர். இரவியும், திங்களும், ஒரு வாளுடன்

பொறிக்கப்பெற்ற, வராக உருவத்தை விஜயநகரத்து அரசர்களால் கட்டப்பெற்ற, கோவில்களின் தூண்களில் நாம் இன்றும் காணலாம்.

## பேரரசின் அமைச்சரவை

விஜயநகரப் பேரரசர்களின் அமைச்சரவையில் இருவகையான அமைச்சர்கள் இருந்தனர் எனக்கூறலாம். ஒரு வகையினர் முக்கிய அமைச்சரும், அரசாங்கச் செயலகங்களின் தலைவர்களுமாவர். இரண்டாவது வகையினர் பேரரசர்களுக்கு நெருங்கிய உறவினர்களாகவும் மாகாண அல்லது ராச்சியங்களின் தலைவர்களாக பணியாற்றியவர்களுமாவர். இவர்களுக்கு அமாத்தியர், மந்திரி, சச்சீவர் அரசு, பிரதானி என்ற பல பெயர்கள் வழக்கத்தில் இருந்தன. கிருஷ்ணதேவராயருக்கு வலதுகைபோல் விளங்கி 'அப்பாஜி' என்ற செல்லப்பெயரால் அழைக்கப்பெற்ற சாளுவதிம்ம அப்பாஜி என்பார் அரசனுடைய முக்கிய அமைச்சராக இருந்தார். அவருக்கு 'தரணிவராஹன் தந்திர நாயகன், காரியகர்த்தா' என்ற பல பட்டங்கள் கல்வெட்டுக்களில் வழங்கின. அயல்நாடுகளோடு அமைதி, போர் முதலியவற்றைக் கவனித்த அமைச்சருக்கு மகாசந்திவிக்ரசர் என்ற பெயர் வழங்கியது. நிலமானியப் பிரபுக்களாகிய நாயக்கன்மார்களுடைய அரசியல் விவகாரங்களைக் கவனித்த அமைச்சர் மகாசமந்தாதிபதி அல்லது மகாநாயகாசாரியார் என அழைக்கப்பெற்றார். விஜயநகரத்து சேனைகளை அரசரே தலைமையேற்று போர்நடத்தியபோதிலும் சேனாதிபதி அல்லது தண்டநாயகர், சைன்யாதிபதி, தளவாய் என்று அழைக்கப்பெற்ற சேனாதிபதியும் அரசனுடைய அவையில் அங்கம் வகித்தார். பண்டகாரிகர் என்ற அதிகாரி விஜயநகரத்துக் கருவூல அதிகாரிக்கும் அமைச்சரவையில் இடம் உண்டு தேவாலயங்களின் அறக்கட்டளைகளையும் சமயச்சார்பான விவகாரங்களையும் கவனித்தவருக்கு தர்மாசன அதிகாரி என்ற பெயர் வழங்கியது. பேரரசருடைய அரசியல் தீர்மானங்களையும், அமைச்சர்களுடைய கருத்துக்களையும் ஏட்டில் எழுதிவைத்து அமைச்சரவைக்கு செயலாளர் போல் விளங்கியவர் இராயசசுவாமி என்ற அதிகாரியாவார். சாளுவதிம்மருடைய இளவலாகிய இராயசம் கொண்டமராசய்யர் என்பவர் கிருஷ்ணதேவராயர் காலத்தில் இராயசசுவாமிப் பதவியை வகித்தார்.

பேரரசரே அமைச்சரவையின் கூட்டங்களுக்குத் தலைமை வகிப்பது வழக்கமாகும். பேரரசர் தலைமை வகிக்க முடியாத

நிலையில் முக்கிய அமைச்சர் தலைமை வகித்து அரசியலை நடத்துவதுண்டு. அமைச்சர்கள் கூடி ஆலோசனை செய்வதற்கு விஜயநகரத்தில் தனியான மண்டபம் ஒன்றிருந்தது. அச்சுதராய அப்யூதயம் என்னும் நூலில் இது வேங்கடவிலாச மண்டபம் என அழைக்கப்பட்டுள்ளது. விஜயபுரி சுல்தானுடன் போர்தொடுப்பதற்கு முன் தன்னுடைய முக்கிய அமைச்சரையும் பற்ற அமைச்சர்களையும் இம் மண்டபத்தில் கூடும்படிச் செய்து அவர்களுடைய உரைகளைக் கிருஷ்ணதேவராயர் கேட்டதாக நூனிசும், துவார்த்தி பார்போசாவும் கூறியுள்ளனர். அரசனுக்கு அறிவுரை கூறமுடியுமேயொழிய தங்களுடைய கருத்துக்களை ஏற்று அதன்படி அரசனுடைய செயல்களைக் கட்டுப்படுத்துவதற்கு அமைச்சர்களுக்கு எவ்வித அதிகாரமும் இல்லை. ஆயினும் விஜயநகர மன்னர்கள் காலத்தில் நிலைபெற்றிருந்த அமைச்சரவை எவ்விதமான செயலாற்றுவதற்கும் திறமையுள்ளதல்ல என்று கூறிவிட முடியாது. முக்கியமான அரசியல் காரியங்களில் அமைச்சரவையில் ஒத்துழைப்போடு தான் கிருஷ்ணதேவராயா, அச்சுததேவராயர் முதலிய அரசர்கள் செயலாற்றியுள்ளனர். 'நான் அரியணையில் அமர்ந்துள்ளேனே தவிர, அரசியல் 'அலுவல்களெல்லாம் என்னுடைய அமைச்சர்களாலேயே நடைபெறுகின்றன. என்னுடைய விருப்பப்படி ஒன்றும் நடைபெறுவதில்லை' என்று கிருஷ்ணதேவராயர் கூறியதாக நாம் அறிகிறோம். அமைச்சரவையில் நிறைவேற்றப்பெற்ற தீர்மானங்கள் அரசியலில் இரகசியமாகவே கருதப்பெற்றன. இரகசியான அரசியல் தீர்மானங்களை வெளியிட்ட அமைச்சர்கள் தண்டனைக்குள்ளாயினர்.

## அரசாங்கச் செயலகங்கள்

இரண்டாவது தேவராயர் ஆட்சிக்காலத்தில் விஜயநகரத்திற்கு வந்த அப்துர் ரசாக் என்பார் மைய அரசாங்க அலுவலகங்கள் அரண்மனைக்கு வலதுபுறத்தில் அமைந்திருந்ததாகக் கூறுவர். அதை அவர் திவான்கானு என்று அழைத்துள்ளார். 'நாற்பது தூண்களை அமைத்து மிக்க நேர்த்தியான முறையில் இந்த திவான்கானு அமைக்கப்பெற்றிருந்தது. இந்த செயலக மண்டபத்தின் சுவர் ஓரங்களில் படியடுக்கு மேடை (gallery) முப்பதுகெஜ நீளமும் ஆறுகெஜ அகலமும் கொண்டதாக அமைக்கப்பெற்றிருந்தது. அந்த அடுக்குமேடைகளில் அரசாங்கப் பத்திரங்கள் சேகரித்து வைக்கப்பெற்றிருந்தன. அவற்றிற்கு எதிரே எழுத்தர்கள் அமர்ந்து எழுதிக்கொண்டிருந்தனர்' என்று கூறியுள்ளார்.

விஜயநகர அரசாங்க அலுவலாளர்கள் பெருந்தர பணி மக்கள், சிறுதர பணிமக்கள் என இருவகையாகப் பிரிக்கப் பட்டிருந்தனர். அரசாங்க அலுவலாளர்கள் எவ்வாறு நியமனம் செய்யப்பெற்றனர் என்பதற்குப் போதிய ஆதாரங்கள் இல்லை. பொதுவாக அந்தணர் வகுப்பைச் சேர்ந்தவர்கள்தான் அக் காலத்தில் கல்வியறிவுடையவர்களாக இருந்தமையால் அரசாங் கத்தில் பெருவாரியான அலுவல்களில் அவர்கள் நியமனம் பெற்றிருந்தனர். ஆயினும், கிருஷ்ணதேவராயருடைய ஆமுக்தமால்யதா என்னும் நூலில் அலுவலாளர்களை எவ்விதம் தேர்ந்தெடுக்கப்பெற வேண்டுமென்று கூறப்பெற்றுள்ளது. 'அந்தணர்களாகப் பிறந்தவர்களிலும், இழிகுலத்தைச் சேர்ந் தோரும், கல்வியறிவில்லாதவரும், பழிபாவங்களுக்கு அஞ்சாத வர்களும், மனத்திண்மையில்லாதவர்களும், தர்மசிந்தனை இல்லாதவர்களும், அயல்நாட்டைச் சேர்ந்தவர்களும் அரசாங்க அலுவல்களில் நியமனம் பெறுவதற்கு அருகதையற்றவர் களாவர்' என்னும் கொள்கை பின்பற்றப்பட்டிருக்கலாம்.

அரசாங்க அலுவலாளர்களுக்கு ஜீவிதம் என்ற நிலங்கள் மூலம் ஊதியம் அளிக்கப்பெற்றது. அரசியல் அலுவல்களைத் திறம்பட நடத்தியவர்களுக்கு ஏனாதி, மாராயன், அரையன், பேரரையன், அதிரராஜன் பிள்ளை, முதலி, நாடாள்வான் முதலிய பட்டங்கள் வழங்கப்பெற்றன.

சோழமன்னர்களுடைய ஆட்சிக்காலத்தில் நிலைபெற்றிருந்த 'திருவாய்க் கேள்வி', 'திருமந்திர ஓலை', முதலிய அலுவ லாளர்கள் விஜயநகர ஆட்சியிலும் நீடித்தனர். இந்த செயலகத் திற்குத் தலைவர் இராயசசுவாமி என்பவராவார். இராயசம் அல்லது இராயச சுவாமி, அரசனுடைய ஆணைகளை எல்லாம் எழுதி முறைப்படுத்தி திருமந்திர ஓலை நாயகத்தின் உதவி யுடன் மாகாணத் தலைவர்களுக்கும், அரசாங்க அலுவலாளர் களுக்கும், பொதுமக்களுக்கும் அறிவித்தல் வேண்டும். இஃது அன்றியும், சோழப்பேரரசர்கள் காலத்திய புரவுவரித்திணைக் களம் என்ற நிலவரி அலுவலகமும் விஜயநகர ஆட்சிக் காலத் தில் நிலைபெற்றிருந்தது. இஃது மிகப்பெரிய அலுவல்துறை யாகையால் ஒன்பது முக்கிய பிரிவுகளாக பிரிக்கப்பெற் றிருந்தது. அவையாவன— (1) வரிப்புத்தகம், (2) புரவுவரிக் கண்காணிப்பு, (3) முகவெட்டி, (4) தெரிப்பு, (5) தரவுசாத்து, (6) பழனியாயம், (7) வரியிலீடு, (8) வரிப்புத்தகக் கணக்கு, (9) பட்டோலை முதலியனவாகும். மூன்றுவதாக இருந்த அலுவலகம் 'ஆக்ஞாதாபகம்' அல்லது 'ஆணை அனுப்பு

அலுவலகம், என்பதாகும். இதன் தலைவர் சாசனுசாரியா அல்லது ஆக்ஞாபரிபாலகன் என்றழைக்கப்பெற்றுர். இவ் வலுவலகத்தில் இருந்தவர்கள் அரசாங்கத்தின் அல்லது அரசனுடைய தானங்களை கல்லிலும் செம்பிலும் வெட்டிக் கொள்ளுவதற்குரிய கடமைகளை ஆற்றிவந்தனர். விஜயநகரப் பேரரசர்களுடைய வீரதீரச் செயல்களையும், தானதருமங்களை யும், நன்கொடைகளையும் இலக்கிய, இலக்கணப் பிழைகள் இல்லாது வடமொழி, கன்னடம், தெலுங்கு, தமிழ் முதலிய மொழிகளில் செய்யுட்களாகவும் உரைநடையாகவும் எழுது விப்பது இந்த அலுவலகத்தின் வேலையாகும். இந்த ஆணைகளை கல்லிலும் செம்பிலும் எழுதியவர்களுக்கு சில்பிகள் என்ற பெயர் வழங்கியது. முள்ளந்திரம் என்ற இடத்தில் வாழ்ந்த திண்டிமக் கவிகள் என்ற மரபினர் இந்த சாசனக் கவிகளை இயற்றித் தருவதில் மிக்க திறமையுள்ளவர்களாக விளங்கினர்.

நான்காவதாக அவசர அதிகாரிகள் (Avasarams) அடங்கிய அலுவலகம் ஒன்றும் விஜயநகர ஆட்சியில் அமைந்திருந்தது. இந்த அலுவலகத்தைச் சேர்ந்த அதிகாரிகள் பேரரசில் எல்லா பகுதிகளிலும் நடைபெற்ற அல்லது நடைபெறும் முக்கிய அரசியல் சம்மந்தமான செயல்களின் தன்மைகளைப் பற்றி மத்திய அரசாங்கத்திற்கு உடனுக்குடன் தெரிவிப்பதாகும். இந்த அலுவலாளர்கள் மத்திய அரசாங்கத்தின் மெய், வாய், கண், மூக்கு, செவி என்ற பஞ்சேந்திரியங்களைப் போல் செயல் ஆற்றினர்.

ஐந்தாவதாக சம்பிராதிகள் (Sampratis) என்ற அலுவலக மும் விஜயநகர ஆட்சியில் நிலைபெற்றிருந்தது. இராயவாசகம் என்னும் நூலில் ஒன்பது வகையான சம்பிராதிகள் இருந்த தாகக் கூறப்பெற்றுள்ளது. இந்த சம்பிராதிகள் என்போர் அரசாங்கத்தின் வரவு செலவு கணக்குகளின் தணிக்கையாளர் களாக (auditors) பணியாற்றியிருக்கலாம் என தே. வே. மகா லிங்கம் அவர்கள் கூறுவர்.

அட்டவணை,பொக்கிஷம் என்ற இரண்டு அலுவலகங்களும் விஜயநகர அரசர்களுடைய கல்வெட்டுக்களில் குறிப்பிடப் பெற்றுள்ளன. அட்டவணை இலாகா புரவு வரி இலாகாவோடு சம்பந்தமுடையதாகும். கிராமங்களில் இருந்த நிலங்களின் தரம், வகை, எல்லை, பரப்பு, உரிமையாளர் நிலவரி, நஞ்சை, புஞ்சை, பயிரிடப் பெறும் தானியங்கள் முதலியவற்றை ஒழுங்கு படுத்தி அகர வரிசையில் எழுதி வைத்திருப்பது இந்த

அட்டவணை இலாகாவின் கடமையாகும். நிலங்களை அளப்ப தற்கும், வரிவசூல் செய்வதற்கும், நிலவுரிமைத் தகராறுகளை தீர்த்து நியாயம் வழங்குவதற்கும், அட்டவணைச் செயலகம் சிறந்த பணியாற்றியதெனக் கூறலாம்.

விஜய நகரப் பேரரசில் இருவகையான கருவூலங்கள் இருந்தன. அவை முறையே பெரிய பண்டாரம் என்றும் சிறிய பண்டாரம் என்றும் அழைக்கப் பெற்றன. பெரிய பண்டாரம் என்ற கருவூலம் அரண்மனைக்குள் இருந்தது. இக்கருவூலம் ஹரிஹரர் புக்கர் காலத்திலிருந்து கிருஷ்ணதேவராயர் காலம் வரையில் நீடித்து இருந்ததெனவும், எப்பொழுதும் பாதுகாப் புடன் பூட்டி வைக்கப்பட்டிருந்ததெனவும் பீயஸ் கூறியுள்ளார். சிறிய பண்டாரத்திலிருந்து தான் மாதந்தோறும் அல்லது செலவுகள் நேர்ந்த காலங்களில் செல்வங்கள் எடுக்கப்பெற்று அரசாங்கத்தை நடத்துவதற்கு ஏற்ற செலவுகள் செய்யப் பெற்றன. தங்கக் கட்டிகளைச் சேர்த்து வைப்பதற்கும் நவரத் தினங்களை சேர்த்து வைப்பதற்கும் என தனித்தனி அறைகளும் இருந்தன.

தேவாலயங்களையும் மடங்களையும் மற்ற அறக்கட்டளை களையும் மேற்பார்வை செய்வதற்கென தனிப்பட்ட அலுவலகம் இருந்ததாகத் தெரிகிறது. பிரமதேயம், தானசாசனம் முதலிய கிராமங்களும், நிலவகைகளும் பாருபத்தியகாரர் என்ற அதிகாரி யால் பரிபாலனம் செய்யப் பெற்றன.

## மகாண அரசியல்

தென்னிந்தியாவில் சோழப் பேரரசு நிலை பெற்றிருந்த பொழுது அப்பேரரசு பல மண்டலங்களாகவும், மண்டலங்கள் வள நாடுகளாகவும், வளநாடுகள் நாடுகளாகவும், நாடுகள் கோட்டங்கள் அல்லது கூற்றம் அல்லது பற்று எனவும் பிரிக்கப் பட்டிருந்தன. பற்று என்னும் பிரிவுக்குக் கீழே தனியூர், சதுர் வேதிமங்கலம் என்ற கிராமங்கள் இருந்தன என்று முன்னர் கண்டோம். விஜயநகரப் பேரரசு நிலை பெற்றக் காலத்தில் மண்டலங்கள் என்ற பிரிவு அரசியல் வழக்கிலிருந்து மறைந்து விட்டதாகத் தெரிகிறது. மண்டலங்கள் இராச்சியங்கள் என அழைக்கப் பெற்றன. இந்த இராச்சியங்கள் மண்டலங்களை விட பரப்பளவில் சிறியதாக இருந்தன. தமிழ்நாடு ஐந்து முக்கிய இராச்சியங்களாகப் பிரிக்கப் பெற்றது. அவையாவன: (1) சந்திரகிரி ராச்சியம், (2) படைவீட்டு ராச்சியம், (3) திருவ

திகை ராச்சியம், (4) சோழ ராச்சியம், (5) மதுரை அல்லது பாண்டிய ராச்சியம். பாண்டிய ராச்சியத்திற்கு தெற்கே விஜய நகரப் பேரரசர்களுக்கு அடங்கி திறை செலுத்திய தென்காசி பாண்டியர்களுடைய நாடும், திருவடிராச்சியம் என்ற திருவிதாங்கூர் நாடும் இருந்தன.

இராச்சியங்களின் பிரிவினை வரலாற்று நிகழ்ச்சிகளை அடிப்படையாகக் கொண்டிருந்தது. சம்புவராய மன்னர்களிட மிருந்து கைப்பற்றப் பட்ட பகுதி படைவீட்டு ராச்சியம் என்று அழைக்கப் பெற்றது. பெரிய ராச்சியங்கள் மகாராச்சியம் என்றும் சிறியவை ராச்சியங்கள் என்றும் பெயர் பெற்றன. கன்னட நாட்டில் ராச்சியங்களுக்குப் பதிலாக பீதிகை என்ற பெயர் வழக்கில் இருந்தது. இராச்சியங்கள் வளநாடுகளாக வும்,வளநாடுகள் நாடுகளாகவும், பிரிவுற்றிருந்தன. தொண்டை மண்டலம் மாத்திரம் வளநாடுகள் என்ற பிரிவுகள் இல்லாமல் கோட்டம், பற்று என்று பிரிக்கப்பட்டிருந்தது. நாடுகள் என்ற பிரிவுகள் ஐம்பதின் மேலகரம் என்று ஐம்பது கிராமங்கள் அடங்கிய பிரிவுகளாகவும். பிடாகை என்னும் பிரிவாகவும் பிரிக்கப் பெற்றன. தமிழ்நாட்டில் தனியூர்கள் என்ற ஓர் அரசியல் பிரிவும் காணப் பெற்றது. எடுத்துக்காட்டாக, காவிரிப்பாக்கம், திருவாமாத்தூர், உத்திரமேரூர், பெரும்பற்றப் புலியூர் என்பன தனியூர்கள் என்று அழைக்கப்பெற்றன.

விஜயநகரப் பேரரசில் அடங்கியிருந்த கன்னட-தெலுங்குப் பகுதிகளில் வேறுவிதமான அரசியல் பிரிவுகள் இருந்தன. வாதாபி சாளுக்கியர் ஆட்சியில் வழங்கிய விஷயம் என்ற ராச்சி யப்பிரிவு பின்னர் ராட்டிரம்என வழங்கியது. வேங்கிநாட்டில் ராட்டிரம் என்னும் பெயருக்குப் பதிலாக மண்டலம் என்ற பெயர் வழங்கியது. தமிழ்நாட்டில் நிலவிய கோட்டம் அல்லது கூற்றம் என்பதைப்போன்று விஷயம் என்ற அரசியற்பிரிவு இருந்ததாகக் கூறலாம். தெலுங்குப்பகுதிகளில் விஷயம் என்ற பிரிவு ‘வெந்தே’ நிவிர்த்தி என்று வழங்கியது. ஒவ்வொரு விஷயமும் புக்தி அல்லது ஸ்தலம் என பிரிக்கப்பெற்றிருந்தது. ஸ்தலம் என்னும் பகுதி சீமை எனவும், கம்பணம், எனவும் வழங்கியது. ஸ்தலங்கள் நடுகைகள், வலிதங்கள் என பிரிக்கப் பெற்றிருந்தன.

## மகாமண்டலேசுவரர்கள்

விஜயநகரப் பேரரசில் மாகாண அரசியலுக்குத் தலைமை வகித்தவர்களுக்கு மகாமண்டலேசுவரர்கள் என அழைக்கப்

பெற்றனர். தமிழ்நாட்டில் முதன்முதலில் மகாமண்டலேசுவரர் பதவியை வகித்தவர் முதலாம் புக்கனுடைய மகனாகிய குமார கம்பண உடையார். அவருக்குப்பிறகு அவருடைய மகன் கம்பண உடையாரும், பின்னர் வீரசவண உடையாரும் மகாமண்டலேசுவரர்களாக இருந்தனர். இரண்டாவது ஹரிஹரதேவர் ஆட்சியில் விருபண்ண உடையாரும், முதலாம் தேவராயர் காலத்தில் வீரவிஜயபூபதி என்பாரும் மகாமண்டலேசுவரர்களாகப் பணியாற்றினர். இரண்டாம் தேவராயர் காலம் வரையில் அரசகுடும்பத்தைச் சேர்ந்தவர்களே மகாமண்டலேசுவரர்களாக நியமனம் செய்யப்பெற்றனர். கி. பி, 1422ஆம் ஆண்டிற்குப் பிறகு அரசகுடும்பத்தைச் சேராதவர்களும் மகாமண்டலேசுவரர்களாக நியமனம் செய்யப்பெற்றனர்.

சந்திரகிரி ராச்சியத்திற்குச் சாளுவ திப்பய்யதேவரும் படைவீட்டு ராச்சியத்திற்குச் சிலுப்பராசரும், சோழராச்சியத்திற்குச் சாளுவ திருமலைதேவரும் மகாமண்டலேசுவரர்களாக இருந்தனர். சாளுவ குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் அன்றியும் தெலுங்குச் சோழமரபைச் சேர்ந்தவர்களும் இப்பதவியில் அமர்த்தப் பெற்றனர். விருபாட்சராயர் ஆட்சியில் சாளுவ நரசிம்மர் சந்திரகிரி ராச்சியத்திற்கு மகாமண்டலேசுவரராகவும், அவருக்கு உதவியாக ஈச்வர நாயக்கரும், அவருடைய மகன் நரசநாயக்கரும் மகாமண்டலேசுவரர்களாகப் பணியாற்றினர். கிருஷ்ணதேவராயருடைய ஆட்சியில் வீரநரசிங்க நாயக்கரும், ஆனைகொண்டி ராமய்யதேவரும், பொன்னம்பலநாத தொண்டைமான் என்பாரும் மகாமண்டலேசுவரர்களாக பணியாற்றியுள்ளனர்.

## மகாமண்டலேசுவரர்களுடைய அதிகாரங்கள்

(1) மத்திய அரசாங்கத்திற்கு அடங்கித் தங்களுடைய கடமைகளை முறையாகஆற்றிய மகாமண்டலேசுவரர்கள் எவ்விதமான துன்பத்திற்கும் ஆளாகாமல் தங்களுடைய மகாணத்தில் அரசியல் நடத்தி வந்தனர். ஸ்ரீமன் மண்டலேசுவர அரிராய விபாடன், பாஷைக்குத் தப்புவராயகண்டன், மூவராயக் கண்டன், என்ற பட்டப் பெயர்களை மேற்கொண்டனர். சாளுவ வமிசத்தைச் சேர்ந்தவர்கள் ‘கண்ட கட்டாரி’ சாளுவர், ‘மேதினி மீசுரகண்ட’ என்ற பட்டங்களை மேற்கொண்டனர். இலக்கன்னு, மாதன்னு என்ற மகாமண்டலேசுவரர்கள் ‘தென் சமுத்திராபதி’ என்று தங்களை அழைத்துக் கொண்டனர். தெலுங்குசோழ வமிசத்தைச் சேர்ந்தவர்கள் ‘மகாராஜா’ என்ற

பட்டத்தை மேற்கொண்டனர். முக்கிய அமைச்சரின் சம்மதத்துடன் பேரரசரே அவர்களை நியமனம் செய்வது வழக்கம், விஜய நகர அரசின் வராக முத்திரையிடப் பெற்ற ஓலைகளில் அவர்களுடைய நியமன ஆணைகள் வழங்கப் பெற்றன. ஒரு ராச்சியத்திலிருந்து மற்றொரு ராச்சியத்திற்கு அவர்களை மாற்றுவதும் நடைபெற்றது. முல்பாகல் ராச்சியத்திற்கு மகாமண்டலேசுவரராக இருந்த குமாரகம்பணர் பின்னர் இராசகம்பீர ராச்சியம் அல்லது படைவீட்டு ராச்சியத்திற்கும் நியமனம் செய்யப் பெற்றார். உதயகிரி ராச்சியத்திற்குத் தலைமை வகித்த சவன உடையார் பின்னர் சோழ ராச்சியத்திற்கும் அரக ராச்சியத்தின் தலைவராகிய விருபன்ன உடையார், உதயகிரி ராச்சியத்திற்கும் பின்னர் தொண்டை மண்டலத்திற்கும் மாற்றுதல் செய்யப் பெற்றார்.

(2) தங்களுடைய அதிகாரத்திற்கு உட்பட்ட மகாணங்களில் செலாவணியாவதற்குரிய நாணயங்களை அடித்துக் கொள்வதற்கு மகாமண்டலேசுவரர்களுக்கு அதிகாரம் இருந்தது. இந்த நாணயங்களில் அதிக மதிப்புள்ள வராகன்கள், வெள்ளி நாணயங்கள் முதலியவைகள் மத்திய அரசாங்கத்தரால் வெளியிடப்பட்டன. மற்ற சிறிய நாணயங்கள் மகாமண்டலேசுவரர்களால் அச்சடிக்கப்பட்டன.

(3) தங்களுடைய அதிகார எல்லைக்குட்பட்ட மகாணங்களில் சில்லறை வரிகளை நீக்குவதற்கும், புதிய வரிகளை விதிப்பதற்கும் மகாமண்டலேசுவரர்களுக்கு அதிகாரம் இருந்தது. வடவாற்காடு மாவட்டத்திலுள்ள வேடல் என்னும் கிராமத்தில் குமாரகம்பணர் தறிக்கடமை, காசாயம், குடிமை சூலவரி, அரிசிக்காணம், நற்பசு, நற்கிடா, விற்பணம், வாசல்பணம், அசுவக்கடமை முதலிய வரிகளை நீக்கியதாகவும், பல புதிய வரிகளை விதித்ததாகவும் தன்னுடைய கல்வெட்டில் கூறியுள்ளார். குமராகம்பணருக்குப் பின் வந்தவர்களும் அவ்விதம் செய்ததாக நாம் அறிகிறோம்.

(4) தங்களுடைய ஆட்சிக்குட்பட்ட மகாணத்தில் அமைதியையும் ஒழுங்கையும் நிலைநாட்டவும், மாகாணத்தில் சபையைக் கூட்டி அரியணையில் அமர்ந்து மகாமண்டலேசுவரர்களுக்குரிய அரச சின்னங்களை மேற்கொள்ளவும் அதிகாரங்கள் இருந்தன. யானைப் படைகள் முன்செல்ல பல்லக்கில் அமர்ந்து நாடுசுற்றி பார்ப்பதும் உண்டு.

(5) மகாமண்டலேசுவரர்களாகப் பணியாற்றி அரசபக்தியுடனும் நன்றியுரிமையோடும் நடந்துகொண்டவர்கள் மத்திய அரசாங்கத்தில் அமைச்சர்களாகப் பதவி உயர்வும் பெற்றனர். முதலாம் தேவராயருடைய ஆட்சியில் முல்பாகல் ராச்சியத்தின் மகாமண்டலேசுவரராக இருந்த நாகண்ண தண்டநாயகர் என்பார் மகாபிரதானியாக பதவி உயர்வு பெற்றார். இரண்டாம் தேவராயர் காலத்தில் இலக்கன்ன தண்டநாயகர் என்பார் முக்கிய அமைச்சராகப் பதவி ஏற்றார். நாகமங்கலம் என்ற பிரிவிற்கு மகாமண்டலேசுவரராக விளங்கிய திம்மண தண்டநாயகர் மல்லிகார்ச்சுனராயருடைய மகாபிரதானியாக உயர்வு பெற்றார். கொண்டவீடு ராச்சியத்திற்கு மகாமண்டலேசுவரராக இருந்த சாளுவதிம்மர் கிருஷ்ணதேவராயருடைய முக்கிய அமைச்சரானார். உதயகிரி ராச்சியத்திற்கு ஆளுநராக இருந்த கொண்டமராசய்யர் கிருஷ்ணதேவராயருடைய இராயசசுவாமியாக நியமனம் பெற்றார். சோழராச்சியத்திற்கு ஆளுநராக இருந்த சாளுவ வீரநரசிம்ம நாயக்கர், அச்சுத தேவராயர் ஆட்சியில் மிக உயர்ந்த பதவியை வகித்தார்.

(6) மாகாணங்களில் ஆளுநர்களாகப் பணியாற்றிய மகா மண்டலேசுவரர்கள் அரசபதவியைக் கைப்பற்றியதற்கும் எடுத்துக்காட்டுகள் உள்ளன. ஹாய்சள மன்னர்களாகிய மூன்று வது நான்காவது வல்லாளதேவர்களுக்கு அடங்கியிருந்த ஹரிஹரன் புக்கன் என்ற இருவரும் ஹாய்சள அரசை நீக்கி விட்டு விஜயநகர அரசை ஸ்தாபித்தனர். மல்லிகார்ச்சுனன் விருபாட்சன் முதலிய அரசர்கள் காலத்தில் சந்திரகிரி ராச்சியத்தின் ஆளுநராக இருந்த சாளுவநரசிம்மர் விஜயநகரப் பேரரசராகப் பதவியேற்றார்.

## நாயன்கரர் முறை

அச்சுததேவராயர் காலத்தில் விஜயநகரத்திற்கு வந்த நூனிஸ் விஜயநகரப் பேரரசில் இருநூற்றுக்கு மேற்பட்ட நாயக்கன்மார்கள் இருந்தனர் எனக்கூறுவர். இந்த நாயக்கன் மார்களுக்கு பேரரசரால் கிராமங்களும் நிலங்களும் அளிக்கப் பெற்றிருந்தன. இவைகளுக்கு அமரங்கள் அல்லது நாயக்கத் தானங்கள் என்ற பெயர் வழங்கியது. இந்த நாயக்கத் தானங் களுக்கு ஈடாக நிலவரி கொடுப்பதோடன்றி, இராணுவ சேவையும் செய்வதற்கு நாயக்கன்மார்கள் கடமைப்பட்டிருந் தனர். விஜயநகரப் பேரரசில் எழுதுவிக்கப்பெற்ற கல்வெட்டுக் களில் நாயக்கர்களுக்கு அளிக்கப்பெற்ற நிலமானிய முறைக்கு

நாயன்கார முறை என்பது அமரநாயன்காரமுறை என்பதின் மருஉ மொழியாகும். பீயஸும், நூனிஸும் இந்த நாயன்காரர்களைத்தான், தலைவர்கள் என்றழைத்துள்ளனர்.

விஜயநகரப் பேரரசில் அடங்கியிருந்த கிராமங்களையும் அவற்றில் இருந்த நிலங்களையும் மூன்று வகைகளாகப் பிரிக்லாம்.

(1) அரசனுக்கு நேரடியாக உரிமையுள்ள பண்டாரவாடை என்ற கிராமங்களும் அவற்றிலுள்ள நிலங்களும்.

(2) நாயக்கன்மார்களுக்கு நாயக்கத்தானமாக அளிக்கப்பட்ட அமரம் அல்லது நாயக்கத்தானக் கிராமங்களும் நிலங்களும்.

(3) பிரமதேயம், தேவதானம், மடப்புறம், பள்ளிச்சந்தம் முதலிய இறையிலி கிராமங்களும் நிலங்களும் ஆகும்.

மேற்கூறப் பெற்ற மூவகையான நிலங்களில் பேரரசருடைய மன விருப்பம் போல படைப்பற்றுக நாயக்கன்மார்களுக்கு அளிக்கப் பெற்ற நிலங்களுக்கு நாயன்காரமுறை நிலங்கள் அல்லது அமர நாயகமுறை என்ற பெயர் வழங்கியது. இந்நிலங்களைப் பெற்றுக் கொண்ட நாயக்கன்மார்கள் அவற்றின் வருமானத்தில் குறிப்பிட்ட ஒரு பகுதியை மத்திய அரசாங்கத்திற்குச் செலுத்த வேண்டும். அப்பகுதி இடங்களுக்குத் தகுந்தாற்போல் சரிபாதியோ அல்லது கொஞ்சம் குறைந்தோ இருக்கலாம். மிகுந்த வருமானத்திலிருந்து கரி, பரி, காலாட்படைகளை வைத்திருந்து மத்திய அரசாங்கத்திற்குப் போர்க்காலங்களில் உதவி செய்யவேண்டும். தங்களுடைய நாயக்கத்தானத்தின் முக்கியமானதோரிடத்தில் அரண்களை அமைத்து அவற்றில் பாதுகாப்புடன் கரி, பரி, காலாட்படைகளை வைத்திருக்க வேண்டும். விஜய நகரப் பேரரசில், ஆதோணி, குத்தி, கண்டிக்கோட்டை, சந்திரகிரி, மாத்தூர், திருவண்ணமலை, திருசிரபுரம், பெனுகொண்டா, நந்தியாலா, ஸ்ரீரங்கப்பட்டினம் உம்மத்தூர், வல்லம் கோட்டை, மதுரை, பாளையங்கோட்டை, திண்டுக்கல், சத்தியவீடு, நாரயணவனம் முதலிய கோட்டைகள் நாயக்கன்மார்களால் அமைக்கப் பெற்றிருந்தன. பதினைன்காம் நூற்றுண்டின் பிற்பகுதியில் முதலாம் புக்கருடைய ஆட்சிக்காலத்திலிருந்து இந்த நாயன்காரமுறை அல்லது அமரநாயக்கர் முறை அமுலில் இருந்து வந்ததாகத் தெரிகிறது.

கிருஷ்ணதேவராயர் காலத்தில் வடவாற்காட்டில் செய்யாற்றுப் பகுதியில் இராமப்ப நாயக்கர் என்பாருக்கு நாயக்கத் தானம் அளிக்கப்பட்டதாகத் தெரிகிறது. திருவண்ணாமலை, திருக்கழுக்குன்றம் முதலிய இடங்கள் சின்னப்பநாயக்கர் என்பாருக்கும், கொண்டய்யதேவ சோழ மகாராஜா என்பவருக்கும் நாயக்கத்தானங்கள் அளிக்கப் பெற்றிருந்தன.

செங்கல்பட்டு மாவட்டத்தில் பெருமுக்கில் நாயக்கர், மிருத்தியுஞ்சய நாயக்கர், பாலய்ய நாயக்கர் என்பவர்கள் அமரநாயக்கர்களாக இருந்தனர். தென்னாற்காடு ஜில்லாவில் கட்டைய்ய நாயக்கர், திருமலை நாயக்கர், திம்மப்ப நாயக்கர், காளத்தீஸ்வர நாயக்கர், துலுக்காண நாயக்கர் என்பவர்களுடைய பெயர்கள் கல்வெட்டுக்களில் குறிப்பிடப் பெற்றுள்ளன. தஞ்சை மாவட்டத்தில் வீரய்ய நாயக்கர், மல்லப்ப நாயக்கர், பெத்தப்ப நாயக்கர், என்பவர்கள் அமர நாயக்கர்களாக இருந்தனர். திருவானைக்கா பகுதியில் திம்மப்ப நாயக்கரும், குடுமியாமலைப் பகுதியில் திப்புநாயக்கர் மகன் இராகவ நாயக்கரும் அமரநாயக்கர்களாக இருந்தனர். இராமநாதபுரம் திருப்புத்தூரில் சிங்கமநாயக்கரும், மதுரையில் வைரய்ய நாயக்கரும் இருந்தனர். ஆகையால் விஜயநகரப் பேரரசில் இருந்த கிராமங்கள் இருநூற்றுக்கு மேற்பட்ட நாயக்கன்மார்களுக்கு படைப்பற்றுகப் பிரித்துக்கொடுக்கப் பட்டிருந்ததென போர்த்துக்கீசிய வரலாற்றாசிரியர்கள் கூறியுள்ளது உண்மையான செய்தியாகவே கொள்ளவேண்டும்.

### அமரநாயக்கர்களுடைய கடமைகள்

1. விஜயநகரப் பேரரசிற்கு ஒருகோடியே இருபது லட்சம் வராகன்கள் மொத்த நிலவரி என்றும் அதில் அறுபது லட்சம் வராகனை நாயக்கன்மார்கள் பேரரசுக்கு நிலவரியாக செலுத்தினர் என்றும், மிகுந்த வருமானத்தைக்கொண்டு, கரி, பரி, காலாட்படைகளை வைத்திருந்தனர் என்றும் பீயஸும், நூனிஸும் கூறுவர். ஆனால் பீயஸ் என்பார் ஆண்டிற்கு ஒருதரம் நாயக்கன்மார்கள் நிலவரி செலுத்தினர் என்றும், நூனிஸ் மாதந்தோறும் செலுத்தினர் என்றும் கூறியுள்ளனர். இவ்விரு கூற்றுக்களில் பீயஸ் கூறுவதே உண்மையாகத் தெரிகிறது. இந்நிலவரி செப்டம்பர் மாதத்தில் விஜயதசமி விழாக்காலத்தில் விஜயநகரத்திற்குக் கொண்டுவரப் பெற்று மத்திய அரசாங்கக் கருவூலத்தில் செலுத்தப்பட்டது.

2. நாயக்கன்மார்கள் மத்திய அரசாங்கத்தின் இராணுவ சேவையில் மிகுந்த பங்கு கொண்டனர். ஆறுலட்சம் காலாட்

படை வீரர்களையும், இருபத்தி நாலாயிரம் குதிரைகளையும், பல யானைகளையும் வைத்திருந்ததாக நூனிஸ் கூறுவர். சராசரியாகப் பார்த்தால் ஒவ்வொரு நாயக்கரும் மூவாயிரம் காலாட்படைகளையும், நூற்றிருபது குதிரைகளையும், பேரரசின் பாதுகாப்பிற்கு வைத்திருக்க வேண்டும். ஆனால், இந்த எண்ணிக்கைகள் நாயக்கத்தானத்தின் பரப்பிற்கும், வருமானத்திற்கும் ஏற்றாற் போல மாறுபட்டிருக்க வேண்டும். கிருஷ்ணதேவராயரிடமிருந்து ஆயிரம் வராகனுக்கு ஐந்து குதிரைகள் வீதம் நாயக்கன்மார்கள் விலைக்கு வாங்கினர் என்று நூனிஸ் கூறியுள்ளார். இந்த நிலமானியப் படைவீரர்கள் போர்செய்வதில் மிகுந்த திறமையுள்ளவர்கள் என்று நூனிஸ் கூறுவதை நாம் முழுவதும் ஒப்புக்கொள்ள முடியவில்லை.

3. பேரரசருடைய அரண்மனையில் குழந்தைகள் பிறந்த சமயத்திலும், தீபாவளி, புத்தாண்டு பிறப்பு விழா நாள் முதலிய முக்கிய நாட்களிலும், அரசனுடைய பிறந்தநாள் விழாக்காலத்திலும் நாயக்கன்மார்கள் அரண்மனைக்குச் சென்று மரியாதை செலுத்த வேண்டும் என்றும், தீபாவளியின் பொழுது பதினைந்து லட்சம் வராகன் வரையில் அன்பளிப்பு செய்தார்கள் என்றும் நூனிஸ் கூறுவர். நாள்தோறும் அரண்மனையில் நடக்கும் விருந்துகளுக்கு அரிசி, கோதுமை, இறைச்சி, கோழிமுட்டைகள் முதலியவற்றை அனுப்பிவைக்க வேண்டியது நாயக்கர்களுடைய கடமையாயிற்று.

4. பேரரசின் தலைநகரமாகிய விஜயநகரத்திற்கு தண்டநாயக்கர், தானாதிபதி என்ற இரண்டு அலுவலாளர்களை தங்களுடைய பிரதிநிதிகளாக நாயக்கர்கள் அனுப்பி வைத்து தங்களுடைய நிலைமையைப் பாதுகாத்துக் கொண்டனர். இந்த இரு அலுவலாளர்களும் விழாக்காலங்களிலும், போர்க்காலங்களிலும் விஜயநகர அரசருடைய சபையில் பங்கு கொள்ளுவது வழக்கம். அரசர் நாயக்கன்மார்களுக்கு அனுப்பும் செய்திகள் எல்லாம் இவர்கள் மூலமாகவே அனுப்பப்பெற்றன.

5. நாயக்கத்தானங்களில் கொலை, கொள்ளை, தீவைப்பு திருட்டுகள் முதலியவை நடைபெறாமல் பார்த்துக் கொள்வதும் அவ்வித குற்றங்கள் நடைபெற்றால் குற்றவாளிகளைக் கண்டு பிடிப்பதும், அவற்றிற்கு ஏற்ற நீதி வழங்குவதும் ஆகிய பாதுகாவல் கடமைகளும் நாயக்கன்மார்களுக்கு அளிக்கப் பெற்றிருந்தன. இக்கடமைகள் பாடிகாவல் அல்லது அரசுகாவல் என கல்வெட்டுக்களில் குறிப்பிடப்பெற்றுள்ளன. குளந்தொட்டு வளம் பெருக்கியும், காடு திருத்தி நாடாக்கியும்

உழவுத் தொழிலையும், வாணிகம் பண்டமாற்று முதலிய பொருளாதாரச் செயல்களைச் செம்மையுறும்படி செய்வதும் நாயக்கன்மார்களிடம் ஒப்படைக்கப் பெற்றிருந்தன.

6. ஆண்டுதோறும் தலைநகரத்தில் நடைபெற்ற மகர நோன்பு விழா (தசரா பண்டிகை), அரசனுடைய பிறந்தநாள் விழா, காமன் பண்டிகை, தீபாவளி முதலிய விழாக்காலங்களில் அமரநாயக்கர்கள் விஜயநகரத்திற்கு வரவேண்டியது கடமையாகும். அப்பொழுது தாங்கள் செலுத்த வேண்டிய வரியையும், அன்பு காணிக்கைகளையும் மத்திய அரசாங்க அதிகாரிகளிடம் செலுத்தி விடுவர். தங்களுடைய நாயக்கத்தானத்திலிருந்து தலைநகருக்கு வரும்பொழுதும், திரும்பிச் செல்லும் பொழுதும் நன்கு அலங்கரிக்கப்பட்ட பல்லக்குகளில் அமர்ந்து பல்லக்குச் சுமப்போர்களால் சுமந்து செல்லப்படுவதும் ஆடம்பரமாக பவனி வருவதும் உண்டென பார்போசா என்பவர் கூறியுள்ளார்.

மேற்கூறப்பெற்ற கடமைகளை ஒழுங்காகவும் கடமையுணர்ச்சியோடும் செய்யத் தவறிய அமர நாயக்கர்கள் கொடிய தண்டனைக்கு உள்ளாகினர். அரசனுடன் ஏற்படுத்திக் கொண்ட ஒப்பந்தத்தின்படி கரி, பரி, காலாட்படைகளை அனுப்பாதவர்களும், ஆண்டுதோறும் செலுத்த வேண்டிய நிலவரியை செலுத்தாதவர்களும் தங்களுடைய நாயக்கத்தானத்தை இழந்தனர். பேரரசருடைய கடுஞ்சொல்லிற்கும், தண்டனைக்கும் உட்பட்டனர். ஆயினும் கடமை தவறிய நாயக்கன்மார்கள் கீழே கிடத்தப்பெற்று சவுக்கால் அடிக்கப்பெற்றனர் என்று பார்போசா கூறியுள்ளதை நாம் நம்புவதற்கில்லை.

## மகாமண்டலேசுவரர்களும் நாயக்கர்களும்

விஜயநகரப் பேரரசில் இருந்த ராச்சியங்களில் பேரரசருடைய பிரதிநிதியாக விளங்கி ஆட்சி புரிந்தவர்கள் மகாமண்டலேசுவரர்களாவர். நாயக்கர்களோ ராச்சியத்திலுள்ள அமரநாயகம், அல்லது அமரமாகாணி என்ற கிராமங்களையும், நிலங்களையும் அரசரிடமிருந்து படைப்பற்று முறையில் பெற்று, தன்னுடைய நாயக்கத்தானத்தின் தன்மைக்கேற்ற கரி, பரி, காலாட்படைகளையும், நிலவரியையும் பேரரசிற்கு செலுத்த வேண்டிய கடமையுடையவராவர். மகாமண்டலேசுவரர்களுக்கு இவ்வித கடமைகள் இல்லை. நாயக்கன்மார்கள் தனக்கும், பேரரசிற்கும் அடங்கி நன்றியுணர்வோடு கடமையாற்றும்படிச் செய்வது மகாமண்டலேசுவரரின் கடமையாகும். மகா

மண்டலேசுவரர்கள் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு மாகாணத் தலைவராக பேரரசரால் நியமிக்கப் பெற்றனர். ஒரு ராச்சியத்தி லிருந்து மற்ெருரு ராச்சியத்திற்கு அவர்கள் மாற்றப்பெற்றனர். ஆனால், நாயக்கன்மார்களோவெனின் நிலையாக தங்களுடைய அமரமாகாணியில் தங்கியிருந்தனர். தங்களுடைய கடமைகளை ஒழுங்காக நிறைவேற்றி வந்தால் அவர்களுக்கு இடைஞ்சல்கள் ஏற்படுவதில்லை.

மகாமண்டலேசுவரர்களுடைய பதவி தகப்பனுக்குப் பின் மகன் பெறும் பரம்பரை பாத்தியமுடையதன்று. அமரநாயக்கர் களுடைய பதவியும் தொடக்கத்தில் இவ்விதமாக இருந்த போதிலும் கிருஷ்ணதேவராயருடைய ஆட்சிக்காலத்தில் நாயக்கன்மார்களுடைய பதவியும் பரம்பரை பாத்தியமுடைய தாயிற்று. கிருஷ்ணதேவராயருடைய தமையனாகிய வீர நரசிம்ம புஜபலராயர் என்பார் சாளுவ வமிசத்துக் கடைசி அரசனாகிய இம்மடி நரசிம்மனைக் கொலை செய்துவிட்டு விஜய நகர அரச பதவியைக் கைப்பற்றியதாகத் தெரிகிறது. இதைக் கேள்வியுற்ற நாயக்கன்மார்கள் வீரநரசிம்ம புஜபலராயருக்கு எதிராகக் கலகம் செய்து அவரை விஜயநகரப் பேரரசராக ஒப்புக்கொள்ள மறுத்தனர். வீரநரசிம்மரும் பல நாயக்கர்கள் மீது படையெடுத்துச் சென்று அவர்களுடைய கலகங்களை அடக்கினார். நூனிஸ் என்பார் ‘புஜபலராயர் விஜயநகரப் பேரரசராக அரியணையில் அமர்ந்த பொழுது நாடு முழுவதிலும் இருந்த நாயக்கன்மார்கள் கலகம் செய்தனர்’ எனக் கூறி யுள்ளார்.

ஆறு ஆண்டுகள் ஆட்சி செய்த பின் வீரநரசிம்மர் இறக்கும் தருவாயில் தன்னுடைய ஒன்றுவிட்ட தம்பி கிருஷ்ண தேவர் பட்டம் பெற முடியாதபடி ஒரு கொடிய உத்தரவிட்ட தாக கூறப்படும் செய்தி நம்பத்தக்கதன்று. சாளுவதிம்ம ருடைய உதவியால் அரசுரிமை பெற்ற கிருஷ்ணதேவராயர் பேரரசில் நடைபெற்றுவந்த நாயக்கன்மார்களுடைய கலகத்தை யடக்கி அவர்களைத் தன்வசப்படுத்துவதற்கு ஒரு புதிய முறை யைக் கையாண்டார். கர்நாடக ராசாக்களின் சவிஸ்தார சரிதம் என்னும் கையெழுத்துப் பிரதிநூலில் அச்செய்கை கூறப் பெற்றுள்ளது. வையப்ப நாயக்கர், துப்பாக்கி கிருஷ்ணப்ப நாயக்கர், விஜயராகவ நாயக்கர் என்ற மூன்று நாயக்கத் தலைவர்களை அனுப்பி தென்னிந்தியாவை செஞ்சி, தஞ்சாவூர், மதுரை என்ற மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரித்து ஆட்சிப் புரியும்படிச் செய்தார். மகாமண்டலேசுவரர்களுக்குப் பதிலாக

நாயக்கர்கள் என்ற தலைவர்கள் நியமனம் செய்யப் பெற்றனர். அமரநாயக்கர்கள் பேரரசருக்குச் செலுத்த வேண்டிய வரித் தொகையை மொத்த வருமானத்தில் மூன்றில் ஒன்றாக குறைக்கப் பெற்றது. அமரநாயக்கர்களுக்கு பாளையக்காரர் என்ற பெயரும் வழக்கத்தில் வந்தது. இந்த பாளையக்காரர் முறையை விஸ்வ நாதநாயக்கரும் அவருடைய தளவாய் அரியநாத முதலியாரும் பலவழிகளில் சீர்திருத்தம் செய்து நாட்டில் அமைதியை நிலை நாட்டினர்.

## விஜயநகர ஆட்சியில்—கிராம அரசியல் (Local Government)

சோழப் பேரரசு தென்னிந்தியாவில் நிலை பெற்றிருந்த பொழுது பிரமதேய கிராமங்களில் மகாசபைகளும், ஊர், நாடு, முதலிய சபைகளும், எவ்விதம் கிராமங்களின் நலத்தைக்கருதி பலவித நற்செயல்களை புரிந்து வந்தன என்பதைச் சோழர் களுடைய ஆட்சி முறையில் கண்டோம். கி. பி. 1300ஆம் ஆண்டிற்குப் பிறகு தென்னிந்திய வரலாற்றில் பல இன்னல்கள் தோன்றின. முக்கியமாக மாலிக்கபூர், முகம்மது துக்ளக் முதலிய இஸ்லாமியத் தலைவர்கள் தென்னிந்தியாவின் மீது படை யெடுத்த பொழுது மத்திய மாகாண அரசாங்கங்களோடு கிராமச் சபைகளின் ஆட்சியும் படிப்படியாக சீர்குலைந்து மறையலாயின. சோழர்களுடைய ஆட்சியில் சிறப்புற்று விளங்கிய கிராமச் சபைகள் விஜயநகர ஆட்சியில் நிலைதடுமாறி மறையத் தொடங்கின.

விஜயநகர ஆட்சிக்குட்பட்டிருந்த தமிழ்நாட்டில் பதினான் காம் பதினைந்தாம் நூற்றாண்டுகளில் வரையப்பற்ற கல்வெட்டுக் களில் சுமார் ஆறுநூற்றிருபது கல்வெட்டுக்கள் இதுகாறும் வெளியிடப்பட்டுள்ளன. இவற்றுள் நாற்பதைந்து கல்வெட்டுக் களில் மாத்திரம் மகாசபைகள், ஊர், நாடு முதலிய சபைகளைப் பற்றிக் கூறப்பெற்றுள்ளன. இவற்றுள் பதினைந்து கல்வெட்டுக் களில் சபைகளைப் பற்றியும், பதினாலு கல்வெட்டுக்களில் ஊர்சபைகளைப்பற்றியும் பதினாறு கல்வெட்டுக்களில் நாட்டுச் சபைகளைப்பற்றியும் பேசப்பட்டுள்ளன. இதனால் விஜயநகர ஆட்சிக்காலத்தில் கிராமச் சபைகளின் அரசியல் அலுவல்கள் குறையத் தொடங்கி பின்னர் அவைகள் மறையத் தொடங்கின என்பதை நாம் நன்கு உணரலாம்.

## விஜயநகர ஆட்சிக்காலத்தில் (மகா) சபைகளின் செயல்கள்

இராஜ கம்பீரராச்சியம் என்று வழங்கப் பெற்ற தொண்டை மண்டலப் பகுதியை சம்புவராய மன்னாகிய இராச நாராயணன்

என்பாரிடமிருந்து குமாரகம்பணர் கைப்பற்றினர் என்பதை நாம் முன்னரே பார்த்தோம். சம்புவராயர்களுடைய ஆட்சி 1330 முதல் 1363ஆம் ஆண்டு வரையில் தமிழ்நாட்டில் நிலவியது. இந்த சம்புவராய மன்னர்களுடைய கல்வெட்டுக்கள் சுமார் தொண்ணூறுக்கு மேல் கிடைத்துள்ளன. இவற்றுள் ஐந்து கல்வெட்டுக்கள் மாத்திரம், சபைகளைப் பற்றியும், மூன்று கல்வெட்டுக்கள் ஊர்ச்சபைகளைப்பற்றியும் கூறுகின்றன. நாட்டு சபைகளைப் பற்றி ஒரு கல்வெட்டுக் கூட கூறவில்லை. இராச நாராயண சம்புவராயருக்குப் பிறகு தொண்டை மண்டல முழுவதும் சோழ மண்டலமும் விஜயநகர ஆட்சியில் அடங்கின. இப்பகுதியில் குறிப்பாகத் தொண்டை மண்டலத்தில் மாத்திரம் பத்து இடங்களில் தான் கிராமச் சபைகள் இருந்ததாகத் தெரிகிறது.

குமாரகம்பணர் மகாமண்டலேசுவரராகப் பதவி வகித்து ஆட்சிபுரிந்த காலத்தில் காவிரிபாக்கம் என்ற சதுர்வேதிமங்கலத்து சபையார் நானூறு வீரசம்பன் குளிகைகளைப் பெற்றுக் கொண்டு சில அந்தணர்களிடம் ஒரு நிலத்தை விற்றுள்ளனர். உக்கல் என்ற சதுர்வேதிமங்கலத்துச் சபையார் அரசாணிப் பாலை என்ற கிராமத்தை பாம்பணிந்தார் பல்லவராயர் என்பாரிடம் ஆறுநூறு பணத்திற்கு விற்றனர். வைப்பூர் சதுர்வேதிமங்கலத்துச் சபையார் ஏர்ப்பாக்கம் என்ற கிராமத்தை சர்வமானிய இறையிலியாக குமாரகம்பணரிடமிருந்து பெற்றுள்ளனர்.[1] இரண்டாவது ஹரிஹரராயர் ஆட்சியில் விருபண்ண உடையார் என்பார் தமிழ் நாட்டின் மகாமண்டலேசுவராக இருந்தபொழுது உக்கல் கிராமத்து மகாசபையார் சிற்றுணிப்பாக்கம் என்ற கிராமத்தை விலைக்கு விற்றுள்ளனர். இட்டிகைப்பற்று, இளையச்சேரி, திருப்புலித்தாங்கல் முதலிய கிராமங்களில் உள்ள நிலங்களையும் விற்றுள்ளனர். 1389ல் புக்கத்துறைவல்ல சதுர்வேதி மங்கலம் என்ற திருமழிசையில் உள்ள ஜெகந்நாதப் பெருமாள் கோவிலுக்கு அவ்வூர் சபையார் சில நிலங்களை விற்றனர்.

1434ஆம் ஆண்டில் இரண்டாவது தேவராயர் ஆட்சிக் காலத்தில் உத்தரமேரூர் சதுர்வேதிமங்கலத்துச் சபையார் திருப்புலிவனத்து சிவன் கோவிலுக்குக் கருவேப்பம் பூண்டி என்ற கிராமத்தை திருநாமத்துக்காணியார் அளித்துள்ளனர். திருவரத்துறையில் கிடைத்த ஒரு கல்வெட்டின்படி கரைப் போக்கு நாட்டின் சபையார், பெரிய நாட்டான் சந்தி என்ற

1 Dr. A. Krishnaswami, The Tamil Country under Vijayanagar, pp. 84—86.

அறக்கட்டளைக்காக சில வரிகளைத் தானம் செய்துள்ளனர் (1443).[1] நெற்குணம் என்ற வைரர்பணரச் சதுர்வேதிமங் கலத்துச் சபையாரும், ஊரவரும் சேர்ந்து வடகரைத்தாயனூர் கிராமத்தின் காணியாட்சி உரிமையை அவ்வூர் கைக்கோளர் களுக்குமுப்பது பணத்திற்கு அளித்துள்ளனர்.1459-ல் மல்லிகார்ச் சுனராயருடைய ஆட்சியில் காவிரிப்பாக்கத்தின் சபையைப் பற்றிய செய்திகள் ஒரு கல்வெட்டில் குறிப்பிடப் பெற்றுள்ளன.[2]

மேற்கூறப் பெற்றவாறு தமிழ்நாட்டில் சங்கம வமிசத்தவ. ஆட்சிக் காலத்தில் சுமார் பத்து இடங்களில்தான் மகாசபை களின் நடவடிக்கைகள் கல்வெட்டுக்களில் கூறப்பெற்றுள்ளன மேலும், மல்லிகார்ச்சுனராயருடைய ஆட்சிக்குப் பிறகு தமிழ் நாட்டில் மகாசபைகள் இருந்தமை பற்றியக் குறிப்புக்கள் கல்வெட்டுக்களில் காணப்பெறவேயில்லை. இந்த மகாசபைகள் தங்களுடைய ஆட்சியில் அடங்கிய நிலங்களை விற்றுள்ளனவே யன்றி மற்றைய பொதுநலவேலைகளில் ஈடுபடவே இல்லை. ஆகையால், சோழப் பேரரசர்கள் காலத்தில் கிராம ஆட்சி முறையில் மிகுந்த பங்கு கொண்ட மகாசபைகளின் நிருவாகச் செயல்கள் குறைந்து பதினைந்தாம் நூற்றுண்டின் இறுதியில் மறைந்து விட்டன என வரலாற்று அறிஞர்கள் கூறியுள்ளனர்.[3]

### விஜயநகர ஆட்சியில் ஊர்ச்சபைகள்

சம்புவராயர்களுடைய ஆட்சியிலும், பின்னர் தோன்றிய விஜயநகரப் பேரரசிலும், ஊர்ச்சபைகளின் நிருவாகச்செயல் களும் மறையத் தொடங்கின. விரிஞ்சிபுரத்திலும் சதுரங்கப்பட்டி னத்திலும் இராசநாராயண சம்புவராயர் காலத்தில் ஊர்ச்சபை கள் இருந்ததாக நாம் அறிகிறோம்.[4] குமாரகம்பணர் காலத்தில் எழுதப்பெற்ற நூற்றிமுப்பத்திரண்டு கல்வெட்டுக்களில் தளவ னூர் என்ற ஊரில் இருந்த ஊர்ச்சபையைப் பற்றிய குறிப்புக்கள் மாத்திரம் கிடைக்கின்றன. வடவாற்காடு ஆரணிக்கருகில் உள்ள சம்புவராயநல்லூர் என்ற கிராமத்தின் ஊர்ச்சபையார் 1382-ல்விருபண்ண உடையாருடைய உத்தரவின்படி ஒருவேலி நிலத்தையும் சில குடியிருப்பு மனைகளையும் அவ்வூர்க்கோவி லுக்கு அளித்துள்ளனர். 1401ஆம் ஆண்டில் விருத்தாசலம் தாலூக்கா வயலூர் கிராமத்தின் ஊர்ச்சபையார் அந்தக் கிராமத் தில் ஒரு மாநிலத்தை கோவிலுக்கு அளித்துள்ளனர். புதுச்

1 No 212 of 1919.
2 No 392 of 1905.
3 Dr. A Krishnaswami, op. cit. p, 88.
4 Ibid p. 89.

சேரியைச் சேர்ந்த திருவாண்டார்கோவிலில் நாலாயிரம்அங்கத்தினர்கள் கொண்ட ஊர்ச்சபை யொன்று இருந்ததென ஒரு கல்வெட்டில் குறிப்பிடப்பெற்றுள்ளது.[1] இரண்டாம் தேவராயர் காலத்தில் திருக்கோயிலூர் தாலூக்கா அவியூரில் இருந்த ஊர்ச்சபையைப் பற்றி ஒரு கல்வெட்டிலிருந்து நாம் அறிகிறோம்.[2]

தமிழ்நாட்டின் தென்பகுதியில், கீரனூர், பெருங்கனூர், கீழக்குறிச்சி, கீழத்தானியம், மேலைத்தானியம், ஒல்லையூர் மங்கலம், கார்குடி, மேல்மண நல்லூர், கீழ்மண நல்லூர் முதலிய இடங்களில் ஊர்ச்சபைகள் இருந்ததாக புதுக்கோட்டைக் கல்வெட்டுக்களிலிருந்து நாம் அறிய முடிகிறது. 1406ஆம் ஆண்டில் கீரனூர் ஊர்சபையினரும், கடலூர், குளமங்கலம் முதலிய ஊர்ச்சபையினர், அக்கிராமங்களில் வாழ்ந்த பொற்கொல்லர்களுக்கும் இடையர்களுக்கும் பல கௌரவ பட்டங்களை வழங்கியுள்ளனர். பெருங்கனூரம் ஊர்ச்சபையினர் வராப்பூர் சிற்றரசனிடமிருந்து பெருங்கனூர் சிவன்கோவிலுக்கு சில நிலங்களைப் பெற்றுள்ளனர். பாலைக்குடி, காளங்குடி, கிளிநல்லூர் என்ற மூன்று கிராமங்களின் ஊர்ச்சபைகள் 1518ஆம் ஆண்டில் சுவாமிநரச நாயக்கருக்குச் சேரவேண்டிய கடமை என்னும் வரியை செலுத்துவதற்கு திருவரங்குளத்து கோவிலுக்கு சில நிலங்களை விற்றுள்ளனர்.

மேலே கூறப் பெற்ற ஊர்ச்சபைகள் நரசநாயக்கருடைய காலத்திற்குப் பின் எழுதப்பட்ட கல்வெட்டுக்களிலும் கிருஷ்ண தேவராயர் காலத்திய கல்வெட்டுக்களிலும் கூறப்பெறவில்லை. இதனால் பதினாறும் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து தமிழ் நாட்டில் இருந்த ஊர்ச்சபைகள் மறையத் தொடங்கின என நாம் உணரக்கூடும்.

## விஜயநகர ஆட்சியில் நாடு அல்லது நாட்டுச்சபைகள்

விஜயநகரப் பேரரசு மகாராச்சியங்கள், ராச்சியங்கள், வளநாடு, நாடு என பிரிவுற்றிருந்ததென முன்னர் கண்டோம். மேற்கூறப் பெற்றவைகளில் நாடு என்னும் பிரிவில் இருந்த கிராமச்சபைகள் நாட்டவர் அல்லது நாட்டார் என்று வழங்கின. குமாரகம்பணருடைய ஆட்சியில் தஞ்சை மாவட்டத்திலுள்ள பொன்பட்டி, திருவாய்ப்பாடி முதலிய இடங்களிலும் திருக்கோவிலூர், திருப்புல்லணை முதலிய இடங்களிலும் நாட்டுச்சபைகள் இருந்தன. 1372ஆம் ஆண்டில் பொன்பட்டி நாட்டுச்

[1] No 217 of 1917.
[2] No 209 of 1935.

சபையின் சம்மதத்தோடு தெய்வச்சிலை பெருமாள் கோவிலுக்கு குமாரகம்பணர் ஒரு விலையுயர்ந்த அணிகலனைக் கொடுத்ததாக நாம் அறிகிறோம்.[1] 1359ஆம் ஆண்டில் திருக்கோயிலூர் பற்று நாட்டவர்கள் தவப்பெருமாள் என்பாருக்கு ஒரு நிலமானியம் அளித்துள்ளனர். 1369ஆம் ஆண்டில் மகதை மண்டலத்தி லுள்ள திருவாய்ப்பாடி நாட்டவர் திருப்பாலப்பந்தல் சிவன் கோவிலில் ஏழாம் நாள் திருவிழா நடப்பதற்கு ஏற்ற அறக் கட்டளையை அமைத்துள்ளனர்.[2]

1416ஆம் ஆண்டில் ஆதனூர் நாட்டவர்கள் ஆட்கொண்ட தேவன் என்பாரிடம் இருபது பணம் பெற்றுக்கொண்டு சில நிலங்களை விற்றுள்ளனர். 1410ஆம் ஆண்டில் பழங்கூர் பற்று, முடியனூர்பற்று நாட்டவர்கள் மெய்யூர் கோவிலின் தேவ தானத்தைச் சேர்ந்த சில நிலங்களை விற்று அக்கோவிலைப் பழுதுபார்த்த பின் சில திருவிழாக்களையும் நடத்தினர். 1443ல் திருமுட்டத்தில் இருந்த நாட்டவர், திருமுட்டம் வைணவ, சைவ கோவில்களில் திருவிழாக்களை நடத்துவதற்கு சில வரி களைத் தானமாகக் கொடுத்துள்ளனர். மல்லிகார்ச்சுனராய ருடைய ஆட்சியில் கோயம்புத்தூர் காங்கேய நாட்டவர் ஒரு விநாயக கோவிலுக்கு ஆறு பொன்காசுகளைத்தானமாகக் கொடுத் தனர். பெண்ணுகடத்தைச் சேர்ந்த, வடதுண்ட நாடு, கரைப் போக்கு நாடு ஆகிய இரு நாடுகளின் நாட்டவர்கள் பெண்ணு கடத்து சிவன் கோவிலுக்குப் பல தான தர்மங்களைச் செய்துள் ளனர். 1499ஆம் ஆண்டில் சுவாமி நரச நாயக்கருடைய வெற்றி யைக் குறித்து அளத்தூர் பற்று நாட்டவர்கள், கண்டராதித்த மங்கலம்என்னும் கிராமத்தை கோவிலுக்கு அளித்தனர். கள்ளக் குறிச்சி நாட்டவர்கள் உலகநல்லூர் என்னும் இடத்திலுள்ள கோவிலுக்கு நந்தா விளக்கு வைப்பதற்காக பனிரெண்டு கல எண்ணெய்யைத் தானம் செய்துள்ளார்.

தமிழ் நாட்டின் தெற்குப் பகுதியில் ஒன்பது இடங்களில் தான் நாட்டுச் சபைகள் நிலைபெற்றிருந்ததாக கல்வெட்டுக்களி லிருந்து நாம் அறிந்து கொள்ளமுடிகிறது. சவண உடையார் தமிழ்நாட்டில் மகாமண்டலேசுவரராக ஆட்சி புரிந்த காலத்தில் ஜெசிங்ககுலகால நாட்டு நாட்டவர் அரசாங்கத்திற்குச் சேர வேண்டிய கடமை வரியைச் செலுத்துவதற்காக திருக்கோ கர்ணம் திருக்கோவிலுக்குச் சில நிலங்களை விற்றுள்ளனர் விருதுராசபயங்கர நாட்டு நாட்டவரும், சூரைக்குடி விஜயாலய

1 No 617 of 1902.

2 Dr. A. Krishnaswami, op. cit., p. 94.

தேவன் என்பாரிடம் நிலங்களை விற்றனர். 1399ல் தென் கோனாட்டு நாட்டவர் திருக்கோகர்ணம் சிவன் கோயிலுக்குச் சில அறக்கட்டளைகளை ஏற்படுத்தியுள்ளனர். கிருஷ்ணதேவ ராயர் ஆட்சியில் வல்லநாட்டு நாட்டவர் விஜயநகர அரசாங் கத்திற்குச் சேரவேண்டிய வரிகளைச் செலுத்துவதற்காக திரு வரன்குளம் சிவன்கோவிலுக்குச் சில நிலங்களை விற்று உள்ளனர்.[1]

பதினான்கு, பதினைந்து, பதினாறும் நூற்றாண்டுகளில், சபை ஊர், நாடு முதலிய கிராமச் சபைகள் அங்குமிங்கும் இருந்த போதிலும், அவைகளுடைய நிருவாகச் செயல்கள் மிக்க குறைந்த அளவிலேயே காணப்பெற்றன. சோழப்பேரரசர்கள் ஆட்சியில் கி.பி. 900 முதல் 1120ஆம் ஆண்டு வரையில் மகா சபைகளின் பொற்காலம் என்று கூறுவது பொருத்தமுடைய தாகும். இந்த மூன்று நூற்றாண்டுகளில் சுமார் 415 கல்வெட்டுக் களில் மகாசபைகளின் நிருவாகச்செயல்கள் கூறப்பெற்றிருந்த தன. ஆனால், 1120 முதல் 1216 வரையில் இந்த மகாசபைகளைப் பற்றி எண்பத்தொன்பது கல்வெட்டுகளும், 1216 முதல் 1279 வரை நாற்பது கல்வெட்டுக்களுமே கூறுகின்றன. 1336 முதல் 1500 வரையில் எழுதப்பெற்ற ஆறுநூற்றுபதினாறுக்கு மேற்பட்ட கல்வெட்டுக்களில் நாற்பதைந்து கல்வெட்டுக்களில் மாத்திரம் சபை, ஊர், நாடு என்ற அமைப்புகளைப் பற்றிய செய்திகள், தமிழ்நாட்டின் வடக்குப் பகுதியில்காணப் பெறுகின்றன. தமிழ் நாட்டின் தெற்குப் பகுதியில் சபைகளைப்பற்றி இரண்டொரு கல்வெட்டுக்களில் மாத்திரம் கூறப்பெற்றுள்ளன. ஆனால், ஊர், நாடு ஆகிய இரு சபைகளின் செயல்கள் முப்பதிற்கு மேற்பட்ட கல்வெட்டுக்களில் காணப்பெறுகின்றன. ஆகையால் விஜயநகர ஆட்சிக் காலத்தில்,சபை, ஊர், நாடு முதலிய கிராம சபைகள் படிப்படியாக மறைந்து ஒழிந்தன என்று நாம் உணரக்கூடும்.

## கிராமசபைகள் மறைவதற்குரிய ஏதுக்கள்

மேற்கூறப் பெற்ற மகாசபைகள், ஊர்ச்சபைகள், நாட்டுச் சபைகள் பதினான்காம் நூற்றாண்டிலிருந்து மறைந்து விடுவ தற்குரிய காரணங்கள் எவையென இப்பொழுது நாம் ஆராய்வது அமைவுடைத்தாகும். முதற்காரணமாக மாலிக் கபூர், முபராக்ஷா, முகம்மதுபின் துக்ளக் முதலிய இஸ்லாமியத் தலைவர்கள் தென்னிந்தியாவின் மீது பல தடவைகள் படை யெடுத்து வந்து பாண்டிய, காகதீய ஹொய்சள மன்னர்

[1] Nos. 733 and 737 of Pudukkottai State Inscriptions.

களுடைய ஆட்சியையும் அரசியல் அமைப்புக்களையும் அழித்து விட்டனர். தென்னிந்தியாவின் சமய சமூக அமைப்புக்களாகிய அரண்மனைகளையும், கோவில்களையும் கொள்ளையடித்து அங்கே திரட்டி வைக்கப்பட்டிருந்த தங்கம், வெள்ளியினுல் செய்யப் பெற்ற அணிகலன்களையும், நவரத்தினங்கள் வைத்திழைக்கப் பெற்ற ஆபரணங்களையும், உருவச்சிலைகளையும் வடநாட்டிற்கு வாரிச் சென்றனர். முக்கியமாக தென்னிந்திய கோவில்களின் செல்வங்கள் அக்காலத்திய மகாசபைகள், ஊர்ச்சபைகள், நாட்டுச் சபைகளின் செல்வங்களாகும். இவற்றின் துணை கொண்டே மேற்கூறப்பெற்ற கிராமச் சபைகள் தங்களுடைய முக்கியமான சமூக சேவைகளைச் செய்து வந்தன. இந்தக் கோவில்களும் அவைகளைப் பாதுகாத்த அந்தணர்களுடைய அக்கிரகாரங்களும் இஸ்லாமியப் படையெழுச்சிகளால் மிக்க துயறுற்றன எனக் கூறுவது மிகையாகாது. இஸ்லாமியர்கள் தென்னிந்தியாவின் மீது படையெடுத்த பதினுன்காம் நூற்ருண் டின் முற்பகுதி தென்னிந்திய வரலாற்றில் துன்பமிக்க கால மாகும். தமிழ்நாட்டின் வடக்குப் பகுதியில் சம்புவராய மன்னர்கள், இஸ்லாமியர்கள் இழைத்த துன்பங்களை ஓரளவு சமாளித்த போதிலும், அவர்களுடைய அதிகாரமும், ஆற்றலும் தென்னிந்தியா முழுவதற்கும் பரவவில்லை.

பின்னர், மதுரையில் வேரூன்றிய சுல்தான்களுடைய ஆட்சி யில் தமிழ்நாடு முழுவதுமே துன்புறலாயிற்று. அவர்களுடைய கொடுங்கோலாட்சியைப் பற்றி இபன்பதூதாவும், கங்காதேவி (மதுரா விஜயம் என்ற நூலும்) விரிவாக எடுத்துக் கூறியுள்ள னர். மதுரை சுல்தான்கள், சோழ, பாண்டிய மன்னர்களைப் போன்று கிராமச் சபைகளைப் போற்றி வளர்த்ததாகத் தெரிய வில்லை. ஆகையால் முதலில் உண்டான இஸ்லாமியப்படை யெழுச்சிகளும், பின்னர் மதுரையில் வேரூன்றிய சுல்தான் களுடைய ஆட்சியும் தென்னிந்தியாவில் கிராமச்சபைகள் அழிவதற்கு முக்கிய முதற்காரணமாக இருந்தன.

இரண்டாவதாக சம்புவராய ஆட்சியையும், மதுரை சுல்தான் களுடைய ஆட்சியையும் அழித்து விஜயநகர ஆட்சியைக் குமாரகம்பணர் ஏற்படுத்தியதை நாம் முன்னரே பார்த்தோம். ஹரிஹரன், புக்கன் தேவராயர்கள் முதலிய சங்கம வமிசத்து அரசர்கள் கிராமச்சபைகளைப் போற்றி வளர்த்தனர் எனக்கூற முடியாது. 'விஜயநகர வேந்தர்கள் தென்னிந்தியாவில் பூர்வீக மான சமய சமூக அமைப்புக்களையும் கோவில்களையும் பண்பாட்டையும் காப்பாற்ற முன்வந்த போதிலும், கிராம

ஆட்சிமுறை அமைப்புக்களான மகாசபைகள், ஊர்ச்சபைகள், நாட்டுச் சபைகள் முதலியவற்றை அவர்கள் ஆதரிக்கவில்லை. விஜயநகரத்தரசர்களால் தென்னிந்தியாவில் நிலைபெறும்படிச் செய்த நாயன்கார முறையும், ஆயகாரர் முறையும் மேற்கூறப் பெற்ற கிராம ஆட்சிமுறை அமைப்புக்களை அழித்து விட்டன எனக் கூறலாம். சோழ, பாண்டிய பேரரசர்கள் காலத்தில் நிலவிய கணபோக நிலங்களும், ஏகபோக நிலங்களும் நாயக்கன்மார்களுக்கு அளிக்கப் பெற்று அமரநாயகம், அல்லது நாயக்கத் தானங்களாக மாற்றம் அடைந்தன. சதுர்வேதிமங்கலங்கள் நாயக்கன் மங்கலங்களாக மாற்றப் பெற்றன. ஆகையால், கணபோக, ஏகபோக கிராமங்களில் சேவைபுரிந்த மகாசபைகளும், ஊர்ச்சபைகளும், நாட்டுச் சபைகளும், போற்றபடாது ஒழிந்தன. மேலும், பதினைந்தாம் நூற்றுண்டின் இறுதியில் தென்னிந்தியாவின் கிராமச் சபைகளுக்குப் பதிலாக ஆயகாரர்முறை என்ற புதிய முறையை விஜயநகரத்து அரசர்கள் தோற்றுவித்தனர். இந்த ஆயகாரர் முறையில் பதவி வகித்தவர்கள் கர்ணம், மணியக்காரர், தலையாரிகள், முதலியோராவர். தெலுங்கு கன்னடப் பகுதிகளில் இவர்களுக்கு சேனுபோவர், கௌடர், ரெட்டி, தலாரி என்ற பெயர்கள் வழங்கின. இந்த ஆயகார முறையில் பன்னிரண்டு வகை சேவையாளர்கள் இருந்தனர். இவர்களுள் முதல் மூன்று அதிகாரிகளாகிய கர்ணம் அல்லது சேனுபோவா, மணியக்காரர் ரெட்டி அல்லது, கௌடர், தலையாரி என்பவர்கள் அரசாங்கத்தால் நியமனம் செய்யப் பெற்றனர். கர்ணம் என்பார் ஒவ்வொரு கிராமத்திலும் உள்ள நிலங்கள் அவற்றின் எல்லைகள், அதில் பயிரிடப்பெற்ற தானியங்கள், தோட்டங்கள், குளங்கள், ஏரிகள், கிணறுகள் முதலியவைகளைப் பற்றிய குறிப்புகளை தன்னுடைய அடங்கல் என்னும் புத்தகத்தில் எழுதி வைத்திருந்தார். ஒவ்வொரு நிலச்சுவான்தாரும் எவ்வளவு நிலவரி செலுத்த வேண்டும் என்றும், மற்ற வரிகள் எவை என்பதையும் அவர் வைத்திருந்த அடங்கல் அல்லது அட்டவணை என்ற புத்தகத்திலிருந்து அறிந்து கொள்ளலாம்.

கர்ணம் தயாரித்துக் கொடுத்த தண்டல் கணக்கைக் கொண்டு தலையாரியின் உதவியுடன் மணியக்காரர் அந்தந்த கிராமங்களில் நிலச்சுவான்தாரர்கள் செலுத்த வேண்டிய நிலவரி மற்றவரிகளை வசூல் செய்து மகாண அரசாங்கத்திற்கோ அல்லது மத்திய அரசாங்கத்திற்கோ அனுப்பினர். சோழ மன்னர்கள் காலத்தில் மகாசபைகளும், ஊர்ச்சபைகளும் ஆற்றிய நிருவாகச் செயல்களை இப்பொழுது கர்ணமும்,

மணியக்காரர்களும், அரசாங்க அதிகாரத்துடன் ஆற்றலாயினர். தலையாரி அல்லது வெட்டியான் என்பான் கிராமத்திற்கு காவலனானன். அவனுடைய ஊதியத்திற்கு குடிமை அல்லது வெட்டிவரி என்ற புதிய வரியொன்று விதித்து வசூலிக்கப் பெற்றது.

ஆயக்காரர் முறையில் இருந்த மற்ற கிராமத் தொழிலாளர்கள் புரோகிதர், பொற்கொல்லர், நீர்க்கட்டி கொல்லர், தச்சர், குயவன், வண்ணான், பரிகாரி, சக்கிலி முதலியோராவர். இவர்களுக்கு நிலமானியங்கள் வழங்கப்பெற்றன. இந்நிலங்களுக்கு 'ஜோடி' என்ற ஒருவகை வரியை இவர்கள் அரசாங்கத்திற்குச் செலுத்தினர். விஜயநகர ஆட்சிக்காலத்தில் தோன்றிய நாயகார முறையும், ஆயகார முறையும் கிராம ஆட்சியை மேற்கொண்டன. இதனால் மகாசபைகள், ஊர்ச்சபைகள், நாட்டுச்சபைகள் முதலியன மறைந்தன.

# 27. தென்னிந்திய சமூக வரலாறு (900-1565)

சோழப்பேரரசின் தோற்றத்திலிருந்து, விஜயநகரப் பேரரசின் தோற்றம், வளர்ச்சி, ஒடுக்கம் ஆகிய பல வரலாற்றுக் கட்டங்களை ஒருவாறு உணர்ந்தோம். இதுகாறும் அரசியல் நிகழ்ச்சிகளையும், அரசவமிசங்களின் தோற்றம், வளர்ச்சி, ஒடுக்கம் முதலியவற்றையே கூறினோம். இனி மேற்கூறப் பெற்ற பேரரசுகளிலும், அவற்றிற்குப் பிறகும் நிலைபெற்றிருந்த சமூக நிலைமையைப் பற்றி எழுதுவது அமைவுடைத்தேயாகும்.

இராட்டிரகூட, மேலைச்சாளுக்கிய, கீழைச்சாளுக்கிய அரசுகளும், இவற்றிற்குப் பிறகு தோன்றிய தேவகிரி யாதவருடைய ஆட்சியும், வாரங்கல் நாட்டு காகதீயர்களுடைய ஆட்சியும் தக்காணத்தில் நிலைபெற்றிருந்தன. தென்னிந்தியாவின் மேற்குப் பகுதியில் ஹொய்சள வல்லாளர்களுடைய ஆட்சியும் கிழக்குப் பகுதியில் சோழ, பாண்டிய குலத்தவர்களின் ஆட்சியும் தோன்றி மறைந்தன. மதுரை நகருக்குத் தெற்கே தென் காசி பாண்டியர்களுடைய ஆட்சியும், திருவிதாங்கூர் நாட்டில் திருவடி அரசும் விஜயநகரப் பேரரசர்களுக்கு அடங்கியிருந்தன. பேரரசுகள் தோன்றி மறைந்தபோதிலும் குந்தளம், ஆந்திரம், தெலுங்கானம், தொண்டைநாடு, சேர, சோழ பாண்டிய, கர்நாடக பகுதிகள் என்ற பழைய பெயர்கள் கல்வெட்டுக்களிலும், இலக்கியங்களிலும் வழக்கத்தில் இருந்தன. இவ்வித குறுநிலப்பிரிவுகள் அரசியலில் நிலவிய போதிலும், இலக்கியங்கள், சமயம், சமூகம், கலைகளின் வளர்ச்சி, பண்பாடு முதலியவற்றில் தென்னிந்திய மக்களிடையே ஒருவித ஒற்றுமையும் நிலவியிருந்ததெனவும் கூறலாம்.

பத்தாம் நூற்றாண்டுமுதல் பதினாறும் நூற்றாண்டு வரையில் தென்னிந்தியாவில் வாழ்ந்த மக்கட்தொகை இன்னதென்று வரையறுத்துக் கூறுவதற்கு ஏற்ற ஆதாரங்கள் கிடைக்கவில்லை. ஏனெனில், சோழப் பேரரசிலும், விஜயநகரப் பேரரசிலும் மக்கட்தொகை கணக்கிடும் வழக்கம் கிடையாது. தென்னிந்திய கடற்கரைத் துறைமுகங்களிலும், தஞ்சை, மதுரை, விஜயநகரம் போன்ற தலைநகரங்களிலும் ஏராளமான மக்கள் வசித்திருக்க

வேண்டும். கடற்கரைப்பட்டினகளில், அராபியர்கள், யூதர்கள், பாரசீகர்கள், சீனர்கள், மலேயா நாட்டு மக்களும் வியாபாரத்தின் பொருட்டு வந்திருந்தனர். விஜயநகர ஆட்சியில் போர்த்துகீசியரும்,டச்சுக்காரரும் பிற்காலத்தில் ஆங்கிலேயரும் தென்னிந்தியாவில் பண்டசாலைகள் அமைத்து வியாபாரம் செய்தனர். ஆயினும், பெரும்பான்மையாக வாழ்ந்த தென்னிந்திய மக்கள் சமூகம் சாதிப் பிரிவுகளின் படி அமைக்கப் பெற்றிருந்த இந்து சமூகமேயாகும். மக்களுடைய தொழில்கள் சாதிபிரிவின் அடிப்படையில் நடந்த போதிலும் சமூக வாழ்க்கையில் சாதிக்கு மாறுபட்ட தொழில்களும் நடைபெறலாயின. சோழப் பேரரசிலும் விஜயநகரப் பேரரசிலும், கல்வியறிவிற் சிறந்த பிராமணர்கள் அரசாங்க அலுவல்களிலும், அமைச்சரவைகளிலும். சேனையிலும் சேர்ந்து பணியாற்றி வந்தனர். ஒரு பகுதியில் வாழ்ந்த மக்கள் இன்னொரு பகுதிக்குச் சென்று குடியேறுவதும் நடந்தது. எடுத்துக்காட்டாக சோழப் பேரரசின் காலத்தில் தமிழர்கள் தெலுங்கு கன்னடப் பகுதிகளில் குடியேறினர். விஜயநகரப் பேரரசில் கன்னடியர்களும், ஆந்திரர்களும் தமிழ்நாட்டில் குடியேறி ஆட்சியாளர்களாகவும் தொழில் செய்பவர்களாகவும் வாழ்க்கை நடத்தினர். நுண்கலைகளில் வல்லவர்களை அரசர்கள் ஆதரித்தமையால் ஒரு பகுதியில் வாழ்ந்த கலைஞர்கள் மற்றொரு பகுதியில் சென்று குடியேறுவதும் நடைபெற்றது.

சோழப் பேரரசின் தலைநகரங்களாகிய தஞ்சை, கங்கை கொண்ட சோழபுரம், பழையாறை முதலிய இடங்களில் பெரிய அரண்மனைகள் இருந்தன. விஜயநகரத்தில் இருந்த அரண்மனைகள் அழிந்து விட்டபோதிலும், விஜயநகரத்தின் சிறப்பான காலத்தில் அங்கிருந்த அரண்மனைகள் எவ்விதம் அமைக்கப் பெற்றிருந்தன என்பதை நூனிஸ், பீயஸ், அப்துர்ரசாக் என்பார்களுடைய குறிப்புகளிலிருந்து நாம் அறிகிறோம். விஜயநகரத்தில் இருந்த உவளகத்தில் ஏராளமான அரசிகளும், அவர்களுக்குப் பணி செய்த மகளிர்களும் இருந்தனர். இன்னும் ஆடல், பாடல்களில் கைதேர்ந்த தேவரடியர்கள், பதியிலார் முதலியோர்களும் அரண்மனைகளிலும், கோவில்களிலும் நிரம்பியிருந்தனர். இவர்கள் அரசர்களுக்குப் பல ஏவல்களைப் புரிந்தனர். சாளுக்கிய அரசன் விஜயாதித்தனுடைய ஆசைக் கிழத்தியாகிய விநப்போத்திகள் என்ற பெண்மணி மிகுந்த கௌரவத்துடன் நடத்தப்பெற்றாள். இராட்டிரகூட அரசனாகிய அமோகவர்ஷன் கல்வி அறிவிற் சிறந்த மகளிர்களைத் தன்னுடைய அயல்நாட்டுத் தூதர்களாக நியமித்திருந்தனன்.

அரண்மனையில் உள்ள இளவரசிகள் நுண்கலைகளாகிய இயல், இசை, நாடகம், சித்திரம், முதலியவற்றிலும் அரசியல் கலைகளி லும் சிறந்த பயிற்சி அளிக்கப் பெற்றனர். சாளுக்கிய இளவரசி யாகிய அக்கதேவி சேனையை நடத்துவதிலும் அரண்களை முற்றுகையிட்டு போர்புரிவதிலும் மிகத்திறமை வாய்ந்து இருந் தனள். வல்லாள அரசர்களுடைய பெண்ணரசிகள் இசை யிலும் பரதத்திலும் சிறந்து விளங்கினர். சோழ அரசிமார்கள் ஏழிசை வல்லபி என அழைக்கப் பெற்றனர். காகதீய அரசி யாகிய உருத்திராம்பாளுடைய அரசியல் திறமை உலகம் போற்றும் உண்மையாகும். தஞ்சை ரெகுநாத நாயக்கருடைய சபையில் இராமபத்திராம்பாள் என்ற கவியரசி வாழ்ந்துள்ளார். ஆயினும், பெண்களை மக்கள் இனத்தைச் சேராதவர்கள் என்று கருதப்பட்ட உடன்கட்டை ஏறும் வழக்கமும் இருந்தது.

## அரசவை

விஜயநகர, பாமினி நாட்டு அரசர்களும், சுல்தான்களும் எவ்வாறு அயல்நாட்டு வழிப்போக்கர்களையும், தூதர்களையும் வரவேற்று தக்க மரியாதைகள் செய்தனர் என்று அறிவதற்குத் தகுந்த ஆதாரங்கள் உள்ளன. நாள்தோறும் தன்னுடைய அமைச்சர்களும் அரசியல் அலுவலாளர்களும் புடைசூழ அரசர்கள் கொலுவீற்றிருந்து மக்களுக்கு நியாயம் வழங்குவதும் அயல்நாட்டுத் தூதர்களை வரவேற்பதும் சிற்றரசர்களிடமிருந்து திரைப் பொருளைப் பெறுவதும், வழக்கமாக இருந்தது. 1599ஆம் ஆண்டில் செஞ்சி கிருஷ்ணப்ப நாயக்கர் சிதம்பரத்தில் தங்கியிருந்தபொழுது நிக்கோலாஸ் பிமெண்டா என்ற இத்தாலிய வழிப்போக்கரை எவ்வாறு வரவேற்றார் என்று அவருடைய சொற்களிலிருந்தே நாம் உணர்ந்து கொள்ளலாம். 'தன்னுடைய நாட்டின் முக்கிய இடமாகிய சிதம்பரத்திற்குச் செஞ்சி நாயக்கர் வந்திருந்தார். என்னையும் என்னுடன் வந்தவர் களையும் தன்னை வந்து காணும்படி நாயக்கர் உத்தரவிட்டார். அவர் தங்கியிருந்த அரண்மனைக்குள் நாங்கள் செல்வதற்குமுன், முன்னூறு அந்தணர்கள் மந்திரங்களை ஓதி புனிதநீர் தெளித்து அவ்வரண்மனையில் தீயநிகழ்ச்சிகள் ஏற்படாதவாறு புண்ணியச் சடங்குகளைச் செய்தனர். செஞ்சி நாயக்கர் சிறந்த பட்டாடை களை அணிந்துகொண்டு பட்டு சமுக்காளத்தில் இரண்டு திண்டுகளின்மீது சாய்ந்து கொண்டு அமர்ந்திருந்தார். தங்கத் தினால் செய்யப்பெற்று இரத்தினங்கள் பதிக்கப்பெற்ற உயர்ந்த சங்கிலியொன்று அவருடைய கழுத்திலிருந்து மார்பு வரையில் தொங்கிக் கொண்டிருந்தது. அவரைச்சுற்றி அமைச்சர்களும்

அந்தணர்களும் நின்று கொண்டிருந்தனர். அவருடைய நீண்ட கேசம் குடுமியாக முடியப் பெற்றிருந்தது. எங்களை மிகுந்த அன்புடனும் மரியாதையுடனும் வரவேற்று எங்களுக்கு வெற்றிலைபாக்கு அளித்தார். நாங்கள் வெற்றிலைபாக்கு போட்டுக் கொள்ளாது இருந்ததைக் கண்டு ஆச்சிரியமுற்றார். பின்னர் எங்களுக்கு விலையுயர்ந்த ஆடையணிகளைக் கொடுத்து தான் புதிதாக அமைத்துக் கொண்டிருக்கும் ஓர் ஊருக்கு கிருஸ்தவ சமயத்தைப் போதிப்பதற்குத் தகுந்த பாதிரி ஒருவரை அனுப்பும்படியும் கேட்டுக் கொண்டார்.'

1443ஆம் ஆண்டில் இரண்டாம் தேவராயர் ஆட்சியில் விஜயநகரத்திற்கு வந்த அப்துர் ரசாக் என்ற பாரசீக நாட்டுத் தூதர் பின்வருமாறு கூறியுள்ளார். 'உங்கள் பேரரசர் என்னை தன்னுடன் அமர்ந்து உணவு கொள்ளும்படி உத்தரவிட்டார். நான் அரசருடன் உட்கார்ந்து உணவு கொள்ள முடியாத நிலையில் இருந்தேன். ஆகையால் பொற்காசுகள் நிறைந்த பணப்பையொன்றை எனக்களித்து நான் கொடுக்கும் விருந்தை விட இது உயர்வானது எனக் கூறி என்னை மகிழ்வித்தார்.' பாமினி சுல்தான்களுடைய செல்வச் செழிப்பைப் பற்றி ரஷ்ய நாட்டு வர்த்தகராகிய அதேனிஷியஸ் நிகிடின் பலபடக் கூறியுள்ளார். 1505ஆம் ஆண்டில் விஜயபுரிக்கு விஜயம் செய்த வார்த்தீமா என்பார் விஜயபுரி சுல்தான்களுடைய சிறப்பைக் கூறும் இடத்து 'சுல்தான் மிக்க ஆடம்பரத்தோடும் பெருமிதத்தோடும் வாழ்க்கை நடத்துகிறார். அவருடைய ஏவலாளர்கள் தங்களுடைய காலணிகளில் கூட உயர்ந்த நவரத்தினங்களைப் பதித்து அலங்காரம் செய்துள்ளனர். இதலிருந்து அவர்களுடைய மேனியிலும், விரல்களிலும், காதுகளிலும் எவ்வளவு அணிகலன்கள் இருந்தனவென்று நாம் அறிந்து கொள்ளலாம். இஸ்லாமிய சமயத்தைச் சேர்ந்த இந்த அரசர்களுடைய பெண் மணிகள் எல்லாம் தாமஸ்கஸ் நகரத்தின் வழக்கத்தைப் போல் முகமூடியணிந்து செல்கின்றனர்.'

## வருணாசிரம முறை

இந்து சமூகத்தில் அந்தணர்களுக்கு மிகுந்த செல்வாக்கும் மதிப்பும் இருந்தன. அரசியல் சேவையில் ஈடுபடாத அந்தணர்கள் சமயப்பற்றும், இலக்கிய மேன்மையும் கொண்டு வாழ்ந்தனர். அவர்களுடைய கல்வியறிவையும் ஒழுக்கத்தையும் கண்ட அரசர்கள் ஏராளமான சதுர்வேதிமங்கலங்களையும் பிரமதேயங்களையும், கணபோக அல்லது ஏகபோகமாகக் கொடுத்து அவர்களை ஆதரித்தனர். வேதங்களை ஓதுதலும்

ஓதுவித்தலும் பொது நலத்தைக் கருதி யாகங்கள் செய்வதும் அவர்களுடைய முக்கிய தொழில்கள். மகாசபைகளில் வாரியப் பெருமக்களாக அமர்ந்து கிராம சேவையும் செய்தனர். நால்வகை வருணத்தாரின் உரிமைகளைக் காப்பாற்றி, சாதிமுறை தவருது சமூகத்தைக் காப்பது அரசாங்கத்தின் முக்கிய கடமைகளாகக் கருதப்பெற்றது. சாதிமுறைப்படி அவரவர்கள் கடமைகளை ஆற்றுவதே வருணுசிரம தர்மம் என்ற நியதி நிலைபெற்றிருந்தது. வலங்கையார், இடங்கையார் என்ற சாதிப் பிரிவுகளில் பூசல்கள் சிற்சில சமயங்களில் நடந்த போதிலும் சமூகத்தில் பிராமணர், பிராமணர் அல்லாதார் என்ற வேற்றுமை நிலவவில்லை. நகரங்களிலும் கிராமங்களிலும் ஒரே இனத்தைச் சேர்ந்தவர்கள் சேர்ந்து குடியிருந்து தங்கள் தங்கள் தொழில்களை நடத்தினர். பிறரால் தீண்டத் தகாதவர்கள் எனக் கருதப்பெற்ற மக்கள் தனிப்பட்ட சேரிகளில் குடியிருந்து உழவுத் தொழிலில் ஈடுபட்டு வந்தனர்.

## சாதிக்கலப்பு

அனுலோமா, பிரதிலோமா என்ற திருமண உறவுகள் நடைபெற்றன. ஒரே இனத்தில் அல்லது சாதியில் திருமணம் செய்து கொண்ட மக்கள் அனுலோமர் என்றும், சாதிவிட்டு சாதி திருமணம் செய்து கொண்டவர்கள் பிரதிலோமர் என்றும் வழங்கப் பெற்றனர். முதற் குலோத்துங்க சோழன் ஆட்சியில் அனுலோமா வகுப்பைச் சேர்ந்தவர்கள் கட்டடக்கலை, தேர்களை அமைத்தல், கோவில்களையும் கோபுரங்களையும் அமைத்தல், விக்ரகங்களை அமைத்தல், யாகசாலை அமைத்தல் முதலிய தொழில்களில் ஈடுபட்டனர். விக்ஞனேச்வரர் எழுதிய மிதக்ச்சரம் என்ற நீதி நூலில் இவ்விதத் தொழில்கள் கூறப்பெற்றுள்ளன. சில சாதிகளைச் சேர்ந்தவர்கள் அரசனிடம் முறையிட்டுப் பலவிதமான உரிமைகளையும் பெற்றனர். தென் கொங்கு நாட்டு கம்மாளர்கள் தங்களுடைய நன்மை தீமை காரியங்களில் சங்கு ஊதிக்கொள்வது, பறையடிப்பது, காலணிகள் அணிவது, மாடிவைத்து வீடு கட்டி சுண்ணும்பு பூசிக் கொள்வது போன்ற புதிய உரிமைகளை ஒரு சோழ மன்னனிடமிருந்து பெற்றனர். சதாசிவராயரது ஆட்சியில் கொண்டேஜா என்ற மருத்துவன் தன்னுடைய இனத்தவருக்கு கட்டாயம் வீட்டு வாடகை, தீவட்டிப் பிடித்தல் வரி முதலிய வரிகளிலிருந்தும் ராமராயருடைய அனுமதியின்பேரில் விலக்குப் பெற்ருர். பரிகாரிகளுடைய தொழிலுக்கேற்ற உபகரணங்களின் மீது விதிக்கப்பெற்ற வரிகளிலிருந்தும் விலக்குப் பெற்ருர்.

## உடையும் உணவும்

பதினைந்து, பதினாறும் நூற்றாண்டுகளில் எழுதப்பெற்ற கல்வெட்டுகளிலிருந்தும், இலக்கியங்களிலிருந்தும், அயல்நாட்டு வழிப்போக்கர்களுடைய கூற்றுகளிலிருந்தும் அக் காலத்திய மக்களுடைய உடை, உணவு முதலியவற்றைப் பற்றி நாம் அறிந்து கொள்ளலாம். விஜயநகரத்தில் வாழ்ந்த மக்களுடைய உடையைப்பற்றி வார்த்திமா என்பார் பின்வருமாறு கூறுவர். 'விஜயநகரத்தில் வாழ்க்கை வசதிகளுடன் வசித்தவர்கள் கூட ஒரு சிறிய சட்டையணிந்துகொண்டு தலையில் தலைப்பாகை கட்டிக்கொண்டிருந்தனர். அவர்கள் கால்களில் ஒன்றும் அணிந்து கொள்ளுவதில்லை. வாழ்க்கையில் வசதிகள் இல்லாத மக்கள் இடுப்பில் மாத்திரம் ஆடைகள் அணிந்துள்ளனர். விஜயநகரத்து அரசனுடைய தலைப்பாகை சரிகை வேலை செய்யப்பெற்ற நீளமான துணியால் அமைக்கப் பெற்றிருந்தது. பொற்பூக்கள் வைத்து அலங்கரிக்கப் பெற்ற சட்டைகளை அணிந்துகொண்டு அரசர்கள் போர்க்களத்திற்குப் போவது வழக்கம். அவர் இவர்ந்து செல்லும் குதிரை வெகு ஆடம்பரமாக அலங்கரிக்கப்பட்டிருந்தது. வேட்டையாடுவதற்குச் செல்லும்பொழுது நான்கு அல்லது ஐந்து ஆயிரம் குதிரை வீரர்கள் பின்னே செல்லுகின்றனர்.'

## உணவு

விஜயநகரத்தில் வாழ்ந்த அந்தணர், சமணர், சைவர் முதலியோர் சைவ உணவையே மேற்கொண்டனர். அந்தணர்களுடைய உணவைப்பற்றிக் கூறிய பீயாஸ் 'விஜயநகரத்தில் உள்ள கோவில்களையெல்லாம் பிராமணர்களே பார்த்துக் கொள்ளுகின்றனர். சில பிராமணர்கள் அரசாங்க சேவையிலும் வியாபாரத்திலும் ஈடுபட்டுள்ளனர். பெரும்பாலோர் தங்களுக்கு தானம் கிடைத்த நிலங்களை உழுது பயிரிடும்படிச் செய்து வாழ்க்கை நடத்துகின்றனர். சைவ உணவை மேற்கொண்டு, உயிர்க் கொலை புரியாது வாழ்கின்றனர். மீன், இறைச்சி, பன்றி மாமிசம் முதலியவற்றை அவர்கள் கண்ணால் கூட பார்ப்பதில்லை. காய்கறிகள், பால், பழங்கள், வெண்ணெய், தயிர், மோர் முதலியவை அவர்களுடைய முக்கிய உணவுகளாகும்.' ஆனால், விஜயநகரத்து அரசர்கள் மாமிச உணவு கொண்டனர் என்றும், எல்லாவிதமான மாமிச உணவுகளையும் உட்கொண்டனர் என்றும் கூறுவர். விஜயநகரத்தில் எல்லாவிதமான உணவுப் பொருள்களும் ஏராளமாகவும், மிக்க விலை சரசமாகவும் கிடைத்தன.

'விஜயநகரத்தின் கடைத் தெருக்களில், அரிசி, கோதுமை சோளம், வரகு, கம்பு, கேழ்வரகு, முதலிய தானியங்கள் ஏராள மாகக் கிடைத்தன. உளுந்து, பயறு, எள், கொள் முதலிய நவதானியங்களும் மிகுந்த அளவில் கிடைத்தன. கோதுமையை இஸ்லாமியர் மாத்திரம் உட்கொண்டனர். ஒரு பணத்திற்கு மூன்று அல்லது நான்கு கோழிகள் கிடைத்தன. முள்ளம் பன்றிகளும், முயல்களும், மணிப்புறுக்களும், காட்டுக்கோழி களும், ஆடுகளும், பன்றிகளும் ஏராளமாக விலையாயின. நாரத்தை, எலுமிச்சை, வாழை, மாதுளம்பழம், முதலிய பழங் களும் பெருமளவில் கிடைத்தன. மாதுளம் பழங்களும், திராட்சைப் பழங்களும் மிகச் சரசமாக இருந்தன.' மேற்கூறப் பெற்ற செய்திகளிலிருந்து விஜய நகரத்தில் பெரும்பாலான மக்கள் மாமிச உணவையும் உட்கொண்டனர் என நாம் உணரலாம். நவராத்திரி விழாக் காலத்தில் எருமை மாடுகளும் துர்க்கைக்குப் பலியிடப் பெற்றன.

## கல்வி நிலை

சோழப் பேரரசர்கள் ஆட்சியிலும், விஜயநகரப் பேரரசிலும் வடமொழிக் கல்வி பரவுவதற்குப் பல கல்வி நிலையங்கள் அமைந்திருந்தன. கிராமங்களில் இருந்த ஆசிரியர்கள் தமிழ், தெலுங்கு, கன்னடம் முதலிய மொழிகளைப் போதித்தனர். இக் காலத்தைப் போன்று உயர்தரக் கலாசாலைகளும், கல்லூரிகளும் பொறியியல், மருத்துவம் போன்ற தொழிற் கலாசாலைகளும் அப்பொழுது கிடையாது. பொறியியல், கட்டடக்கலை, மருத் துவம் முதலிய தொழில்கள் பரம்பரையாக குடும்பங்களில் போதிக்கப்பட்டு வளர்ந்தன. தென்னிந்தியாவில் காணப் பெறும் கோவில்களின் கட்டட அமைப்புக்களும், கோபுரங்களை அமைக்கும் திறமையும் தொழிற்கல்வியின் மேன்மையை எடுத்துக்காட்டுகின்றன. செப்பேடுகளிலும், கோவில் சுவர்களின் மீதும் எழுதப் பெற்றுள்ள சாசனங்களைக் கொண்டு அக்காலத் தின் கல்வி நிலையை ஒருவாறு உணர்ந்து கொள்ளலாம். கிராமங் களில் இருந்த திண்ணைப் பள்ளிக்கூடங்களில் படித்தல், எழுதுதல், கணக்கு ஆகிய மூன்றும் போதிக்கப் பெற்றன. ஹோனவார் என்னுமிடத்தில் பெண்களுக்குக் கல்வி போதிப் பதற்கு பதின்மூன்று பள்ளிக்கூடங்களும் ஆண்களுக்கென இருபத்திமூன்றும் இருந்தனவென இபன்பதூதா கூறியுள்ளார். பதினாறும் நூற்றாண்டில் மதுரையில் சமய-மெய்க்கலையைக் கற்பதற்குப் பதினாயிரம் மாணவர்கள் இருந்தனர் என இராபர்ட் நொபிலி கூறுவர்.

தேவாலயங்களில் இதிகாசங்களையும் புராணங்களையும் எடுத்துரைத்து மக்களை நல்வழிப்படுத்துவதற்குப் பட்டவிருத்தி, பாரதவிருத்தி என்ற இறைம் நிலங்கள் வழங்கப் பெற்றிருந்தன. சிவாலயங்களில் தேவார திருப்பதிகங்களை கூட்டமாகக் கூடி ஓதுவதற்கும், வைணவக் கோயில்களில் திவ்யப் பிரபந்தங்களை ஓதுவதற்கும் ஏற்ற மாணவர்களுக்கு மடாலயங்களில் பாட சாலைகள் அமைக்கப் பெற்றன. சமண, பௌத்த பள்ளி களிலும் விகாரங்களிலும் அந்தந்த சமயத்திற்கேற்ற நூல்கள் போதிக்கப் பெற்றன.

வடமொழியையும், அம்மொழியில் உள்ள இலக்கண, இலக்கிய நூல்களையும் போதிப்பதற்கு அரசர்கள் பல கல்விச் சாலைகளை அமைத்திருந்தனர். இந்தக் கல்விச் சாலைகளில் மெய்க்கலை, மூன்று வேதங்கள், வார்த்தம் (பொருள் நூல்), தண்டநீதி முதலிய கலைகள் போதிக்கப் பெற்றன. மற்றும் பதினான்குவித்தைகளான நான்கு வேதங்கள், ஆறு அங்கங்கள், புராணங்கள், தர்க்கம், மீமாம்சை, தர்மசாஸ்திரங்களும் போதிக் கப்பெற்றன. ஆயுள்வேதம், தனுர்வேதம், கந்தர்வவேதம் (இசை), அர்த்தசாத்திரம் முதலிய இன்றியமையாத கலைகளும் போதிக்கப் பெற்றன. மேற்கூறப்பெற்ற கலைகளில் பயிற்சிபெற்ற அந்தணர்கள் அரசர்களுடைய புரோகிதர்களாக நியமனம் செய்யப் பெற்றனர். இவற்றைப் போதித்த ஆசிரியர்களுக்கு நிலமானியங்கள் வழங்கப் பெற்றிருந்தன. கலாசாலைகள் அமைவுற்றிருந்த இடங்கள் பிரமபுரிகள் அல்லது கடிகைகள் என்று வழங்கப்பெற்றன. சீர்காழியிலும் காஞ்சியிலும் இவ்விதக் கலாசாலைகள் இருந்தமைபற்றி நாம் அறிகிறோம். நிருபதுங்க பல்லவனுடைய கல்வெட்டுகளில் காவிரிப்பாக்கத் திலும், புதுச்சேரிக்கு அருகில் உள்ள பாகூர் என்னுமிடத்திலும் இவ்விதக் கலாசாலைகள் இருந்தமை கல்வெட்டுகளில் கூறப் பெற்றுள்ளது. நாகைப்பட்டினத்தில் அமைக்கப் பெற்றிருந்த கடிகையில் வேதங்களைக் கற்கும் இருநூறு மாணவர்களும், சாத்திரங்களைக் கற்பதற்கு ஐம்பது மாணவர்களும், அவற்றைப் போதிப்பதற்கு ஆறு ஆசிரியர்களும், நூலகத்தைக் கவனிப் பதற்கு ஓர் அலுவலாளரும் இருந்தனர். தென்னாற்காடு மாவட்டம் எண்ணாயிரத்தில் முதலாம் இராசேந்திர சோழன் ஆட்சியில் இருநூற்றியெழுபது இளங்கலை மாணவர்களும், எழுபது முதுகலை மாணவர்களும், பதினான்கு ஆசிரியர்களும் இருந்தனர் எனக் கல்வெட்டுகள் கூறுகின்றன.

திரிபுவனி என்னுமிடத்தில் இருந்த வடமொழிப் பள்ளியில் இருநூற்று அறுபது மாணவர்களும் பன்னிரண்டு ஆசிரியர்களும்

இருந்தனர். செங்கற்பட்டு மாவட்டத்தில் உள்ள திருமுக்கூடலில் வீரராசேந்திர சோழனுடைய ஆட்சியில் ஒரு மருத்துவச்சாலையும் வைத்தியம் செய்வதற்குரிய மருந்து வகைகளும் நிறைந்த கூடம் ஒன்றும் அமைக்கப் பெற்றிருந்தன. பாணினியம் என்னும் இலக்கணத்தைப் போதிப்பதற்கு திருவொற்றியூரில் ஒரு கலாசாலை இருந்தது. திருவாவடுதுறையில் அஷ்டாங்க ஹிருதயம் சாரக் சம்கீதை என்ற இரண்டு வகை மருத்துவமுறைகள் போதிக்கப் பெற்றன. தேவகிரி நாட்டு யாதவ மன்னர்கள் நீதி நூல்களையும் வான நூல்களையும் போதிப்பதற்கு ஏற்ற வகைகளை வகுத்திருந்தனர். பாமினி ராச்சியத்தில் பீதார் என்ற இடத்தில் அமைக்கப் பெற்ற கல்லூரியில் இஸ்லாமியக் கலைகளும், வைத்திய முறையும் போதிப்பதற்கு முகம்மது கவான் தகுந்த ஏற்பாடுகளைச் செய்தார். கேரள நாட்டில் நம்பூதிரிப் பிராமணர்கள் வடமொழியை மிகுந்த ஆர்வத்துடன் கற்றும் போதித்தும் வந்தனர். கருநந்தக்கன் என்ற ஆய்வேள் வியாகர்ணம், மீமாம்சை, புரோகிதம், திரிராஜ்ய விவகாரம் முதலியவற்றைக் கற்பதற்கு ஒரு வடமொழிக் கல்லூரியை அமைத்திருந்தார். இக் கலாசாலை பார்த்திவசேகரபுரத்தில் இருந்த திருமால் கோவிலில் அமைக்கப் பெற்றிருந்தது. இதில் தொண்ணூற்று ஐந்து மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப் பெற்றனர்.

## கோவில்களும் திருவிழாக்களும்

சோழர்களுடைய ஆட்சியிலும் விஜயநகர மன்னர்களுடைய ஆட்சியிலும் சைவ, வைணவ சமயங்களின் வளர்ச்சிக்கும், நாட்டின் பொருளாதாரப் பெருக்கத்திற்கும், பண்பாட்டின் மேன்மைக்கும் தென்னிந்திய தேவாலயங்கள் பேருதவி செய்தன என்பதை நாம் உணரவேண்டும். அரசர்கள் கோவில்களையும் கோபுரங்களையும் அமைப்பதைத் தங்களுடைய முக்கிய சமூகக் கடமையாகக் கருதினர். கட்டடக் கலையில் வல்லுநர்களுக்கும், கற்றச்சர்களுக்கும் வேத ஆகமங்களின்படி கோவில்களை அமைப்பதற்குத் திட்டம் வகுத்தவர்களுக்கும் பொது மக்களுக்கும் வேலைவாய்ப்பளிப்பதற்காகக் கோவில் அமைக்கப் பெற்றன. தெய்வங்களுக்கு கல்லினாலும் செம்பினாலும் ஐம்பொன்னாலும் சிலைகள் அமைக்கும் தபதிகளுக்கு மிகுந்த ஆதரவளிக்கப்பெற்றது. கோவில்களில் நடைபெற்ற நித்திய நைவேத்திய வழிபாடுகளில் குருக்கள்மார்கள், பட்டர்கள், பாடற்குழுவினர், இசைவல்லுநர், நடனமாதர்கள், மாலைகள் தொடுப்போர், பரிசாரகர், எடுபிடி வேலை செய்வோர்களுக்குப் பலவித வேலை வாய்ப்புகள் கிடைத்தன. ஆண்டுதோறும்,

அல்லது ஆண்டிற்கு இருமுறை நடைபெற்ற திருவிழாக்களில், தெப்பங்களை அமைப்பவர்கள், மேளக்காரர்கள், நாயனம் வாசிப்போர், பரதம் பயில்வோர் முதலியவர்களுக்கும், கல்வியில் வல்லோர் பட்டி மண்டபத்தில் பங்கு கொள்வதற்கும், சமயப் பிரசாரம் செய்வதற்கும் பலவித வாய்ப்புகள் ஏற்பட்டன.

வீதியுலா வருவதற்குரிய தெய்வச் சிலைகள் பலவித ஆபரணங்களால் அலங்கரிக்கப் பெற்றிருந்தன. இந்த அணிகலன்களைச் செய்வதற்கு பொற்கொல்லர்களுக்கு வேலை கிடைத்தது. அரசர்களும் பொதுமக்களும் கோவில்களுக்கு ஏராளமான நிலங்களையும், பொன்னையும், பொருளையும் கொடுத்து அறக்கட்டளைகள் ஏற்படுத்தினர். தேவாலயங்களுக்குரிய இப்பொருள்களை மக்களுக்கு கடன் வழங்கி நாட்டில் உழவும் தொழிலும் வளர்வதற்கு கோவில்கள் உதவிசெய்தன. தஞ்சைப் பெருவுடையார் கோவிலுக்கு இராஜராஜ சோழனும் அவருடைய உறவினர்களும் அளித்த மானியங்களும் அறக்கட்டளைகளும் அக்கோவிலின் பொருளாதாரத்தை மிக்க உயர்வுடையதாகச் செய்தன. பகைப் புலமன்னர்களிடமிருந்த தான் பெற்ற 41,500 கழஞ்சு பொன்னும், நகைகள் மூலமாக 10,200 காசும், 50,650 கழஞ்சு வெள்ளியும் அக்கோவிலுக்கு அளிக்கப் பெற்றன.

இன்னும் சோழப் பேரரசிலிருந்து ஆண்டுதோறும் 1,16,000 கல நெல் வருமானமுள்ள நிலங்களும் அக்கோயிலுக்கு வழங்கப்பெற்றன. தினந்தோறும் வழிபாடு நடக்கும்பொழுது பரதநாட்டியம் செய்வதற்கும் பாடல்களைப் பாடுவதற்கும் 400 தேவரடியார்கள் அமர்த்தப் பெற்றிருந்தனர். அவர்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு வீடும், ஆண்டுதோறும் நூறு கல நெல் வருமானமுள்ள ஒரு வேலி நிலமும் பங்கு வீதமாக அளிக்கப் பெற்றிருந்தது. இருநூற்று பன்னிரண்டு நட்டுவர்கள், இசைபாடுவோர், மத்தளம் அடிப்போர், தையற்காரர், பொற்கொல்லர், கணக்கர் முதலியோர்களுக்கும் 180 வேலி நிலங்களும் ஒவ்வொரு வீடும் கொடுக்கப் பெற்றிருந்தன. வடமொழியிலும், தமிழிலும் தேசி, அகமார்க்கம் என்ற இருவகையான இசைகளையும் பாடுவதற்கு ஏழு இசை வல்லுநர்கள் இருந்தனர். குழல், யாழ், வீணை, மிருதங்கம் முதலிய இசைக் கருவிகளுடன் திருப்பதிகம் பாடுவதற்கு ஐம்பது பேரடங்கிய குழுவினர் ஒவ்வொருவருக்கும் தினந்தோறும் முக்குறுணி நெல் வழங்கப்பெற்றது.

இராஜராஜ சோழனுடைய தமக்கை குந்தவைப் பிராட்டியார் இக் கோவிலுக்குப் பதினாயிரம் கழஞ்சு நிறையுள்ள பொன்னும்

18,000 காசு மதிப்புள்ள பரிகலன்களும் அளித்து உள்ளார். இன்னும் பல அரசிகளும், உயர்தர அலுவலாளர்களும் தானைத் தலைவர்களும் பலவிதமான நிவந்தங்களை ஏற்படுத்தியுள்ளனர். இவைகள் எல்லாம் இக்கோவிலின் சுவர்களில் சிறந்த முறையில் எழுத்துகளில் வெட்டப்பட்டுள்ளன. நாள் வழிபாட்டிற்கு வேண்டிய கற்பூரம், ஏலக்காய், சண்பகமொட்டு, வெட்டிவேர் முதலியவைகளை வாங்குவதற்கும் ரொக்கக் கட்டளைகள் ஏற்படுத்தப் பெற்றன. தஞ்சைக் கோவிலில் காணப்பெறும் கல்வெட்டுகளில் அக் கோவிலில் நாட்டப்பெற்ற விக்கிரகங்களைப் பற்றியும், அவைகள் எந்த முறையில் வார்க்கப் பெற்றன என்பது பற்றியும் அவ் விக்கிரகங்களுக்கு எவ்வித அணிகலன்கள் இருந்தன என்றும் வெகு தெளிவாக எடுத்து இயம்புகின்றன. விக்கிரகங்களும், அவற்றிற்குரிய அணிகலன்களும் களவு போகாமல் இருக்கின்றனவா என்று கண்காணிக்க அரசனும் அரசாங்க அதிகாரிகளும் தணிக்கை செய்வதை மேற்கொண்டனர். ஆகையால், கோவிலுக்குரிய செல்வங்கள் பிறரால் கவர்ந்து செல்லப்படாமல் பாதுகாக்கப் பெற்றன. தஞ்சைக் கோவிலைப்போல் சோழப் பேரரசில் இருந்த மற்ற கோவில்களுக்கும் மானியங்களும் அறக்கட்டளைகளும் ஏற்படுத்தப் பெற்றிருந்தன. ஆனால், அக் கோவில்கள் பெருவுடையார் கோவிலைப்போன்று சீரும் சிறப்பும் பெற்றிருந்தன என்று கூறுவதற்கில்லை.

## பொழுதுபோக்குகள்

தென்னிந்திய மக்களின் பொழுதுபோக்கு விளையாட்டுகளைப்பற்றி கல்வெட்டுகளிலிருந்து நாம் அதிகமாக உணர்ந்து கொள்ளமுடியவில்லை. ஆயினும் இராட்டிரகூட அரசன் மூன்றும் கோவிந்தன் 804ஆம் ஆண்டில் காஞ்சிபுரத்தைக் கைப்பற்றித் திரும்புகையில் துங்கபத்திரை நதிக்கரையில் காட்டுப்பன்றி வேட்டையில் ஈடுபட்டார். கங்க அரசன் இரண்டாம் பூதுகனுடைய காளி என்னும் வேட்டைநாய் ஒரு முள்ளம்பன்றியுடன் போரிட்டு உயிர் துறந்தது. நான்காம் இந்திரன் என்ற இராட்டிரகூட அரசன் குதிரையின்மீதமர்ந்து போலோ போன்ற விளையாட்டை விளையாடுவதுண்டு. கிருஷ்ணதேவ ராயர் அதிகாலையில் தன்னுடைய உடம்பு முழுவதும் நல்லெண்ணெய் தடவிக் கொண்டு கர்லா கட்டைகளை சுற்றும் பயிற்சி செய்வார். பின்னர் குதிரைச் சவாரியும் செய்த பிறகு தன்னுடைய மல்லர்களுடன் மல்யுத்தம் பழகிய பிறகுதான் குளிப்பது வழக்கம். விஜயநகர அரண்மனைக்குள் இருந்த

சமயத்தை நாயன்மார்களும், வைணவத்தை ஆழ்வார்களும் போதித்தனர். இவ்விருசமயங்களும் இந்துசமயத்தின் இரு கண்கள் எனக்கருதப் பெறுவது வேண்டும். தமிழ்நாட்டில் தோன்றியப்பின்னர், மகாராஷ்டிரத்திலும், வடஇந்தியாவிலும் சைவ, வைணவ பக்திமார்க்கங்கள் பரவலாயின.

## சைவ சமயம்

தமிழ்நாட்டில் சைவசமயம் தோன்றி வளர்ந்து பெருமையடைந்த வரலாற்றைச் சேக்கிழார் பெருமான் எழுதித்தந்த பெரிய புராணம் அல்லது திருத்தொண்டர் புராணம் என்னும் நூலில் இருந்து நாம் உணருகிறோம். சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நால்வகை நெறிகளையும் மேற்கொண்டு ஐம்புல வழியடைத்துச் செம்புலச் செல்வர்களாக விளங்கிய சைவத் திருத்தொண்டர்களின் வரலாற்றைக் கூறுவதே பெரிய புராணமாகும். நம்பியாரூரர் என்ற சுந்தரமூர்த்தி நாயனர் அருளிய திருத்தொண்டத் தொகையில் தொகுத்துக் கூறப் பெற்ற தில்லைவாழ்ந்தணர், பொய்யடிமையில்லாத புலவர் பத்தராய்ப்பணிவார்கள், பரமனையே பாடுவார், சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார், திருவாரூர்ப் பிறந்தார்கள், முப்போதும் திருமேனி தீண்டுவார், முழு நீறு பூசிய முனிவர் அப்பாலும் அடிச்சார்ந்தார் ஆகிய ஒன்பது திருக்கூட்ட அடியார்கள் தொகையடியாராவர். திருநீலகண்டக் குயவனர் முதல் திரு நீலகண்டத்துப்பாணனர் இறுதியாக உள்ள அறுபது நாயன்மார்களும், சுந்தரமூர்த்தியும அவருடைய பெற்றோர்களாகிய சடையனர், இசை ஞானியர் ஆகிய மூவரையும் சேர்த்து தனியடியார் ஆறுபத்தி மூவராவர். இந்த ஒன்பது தொகையடியார்களையும், ஆறுபத்தி மூன்று தனியடியார்களையும் பற்றி தொகுத்துரைப்பது திருத்தொண்டத் தொகையாகும். இத்திருத்தாண்டத் தொகையை வகுத்தும் விளக்கும் முறையில் அமைந்தது நம்பியாண்டார் நம்பியருளிய திருத்தொண்டர் திருவந்தாதியாகும். இவ்விரு ஆதாரங்களையும் கொண்டே சேக்கிழார் பெரிய புராணத்தை இயற்றியுள்ளார்.

பெரியபுராணத்தில் கூறப்பெற்றுள்ள எழுபத்திரண்டுநாயன்மார்களும் தெய்வ சந்நிதியிலும், மெய்யன்பர்கள் திருவுள்ளத்திலும் ஒருகுலத்தவர்போலச் சமமாகவே போற்றப் பெறுகிறர்கள் அந்தணர், அரசர், வணிகர், வேளாளர், குயவர், பாணர், வேடர் பறையர், பரதவர், வண்ணர், மறவர், பௌத்தர், பெண்டிர், முதலிய அனைவருடைய தொண்டு முறைகளும் பெரியபுராணத்தில் விளக்கமாகக் கூறப் பெறுகின்றன. இயேசுநாதர், முகம்மது

தானியங்களும், காய்கறிகளும், பொருள் வருவாய்க்கு ஏற்ற பருத்தி, கரும்பு, புகையிலை, முதலிய பயிர்கள் செய்யப்பெற்றன. செம்மண் நிறைந்த நிலங்களில் துவரையும் வரகும், கருமணல் நிலங்களில் பருத்தியும் பயிரிடப் பெற்றன. தோட்டங்களில் பாக்கு, இஞ்சி, மஞ்சள், பழவகை மரங்கள், புஷ்பச் செடிகள் முதலியவைகள் பயிராயின. விஜயநகரத்தில் வாழ்ந்த மக்கள் ரோஜா மலர்களை அதிக விருப்பத்துடன் வாங்கி அணிந்து கொண்டனர்.

உழவுத் தொழில் வளம் பெறுவதற்கு நீர்ப்பாசனமும் பருவ மழையும் முக்கியமானவை. நீர்ப்பாசனத்திற்குப் பெரிய ஏரிகளும் ஆறுகளின் குறுக்கே அணைக்கட்டுகளும் அமைக்கப்பெற்றன. காடு கரம்பு திருத்தி, குளம் கிணறு தொட்டு வளம் பெருக்கியும் உழவுத் தொழில் மேன்மையடையும்படிச் செய்தவர்களுக்கு பலவித வரிச்சலுகைகள் அளிக்கப் பெற்றன. சொந்தமாகவும் குத்தகைக்கும் பயிரிடுங்குடிகளுடைய வளமை பருவமழையை யும் நீர்ப்பாசான வசதியையும், குடிவாரத்தின் தன்மையையும், வரிபளுவின் நிலைமையையும் பொறுத்துள்ளது. தேவாலயங்கள், மடங்கள், பிரமதேயங்கள் முதலிய இறையிலி நிலங்களைப் பயிரிட்டவர்கள் அதிக இலாபத்தைப் பெற்றனர். படைமானி யங்கள், வெள்ளான்வகை நிலங்கள், நாயக்கத் தானங்கள் முதலிய நிலங்களைப் பயிரிட்டவர்கள் அதிக லாபம் பெற முடியாது. அரசாங்கத்தாரால் நிலவரி வசூல் குத்தகைக்கு விடப்பட்ட கிராம மக்கள் மிகுந்த இன்னல்களுக்குள்ளாயினர்.

உழவுத் தொழிலோடு மிகுந்த சம்பந்தமுடையது ஆடு, மாடுகளை வைத்துப் பராமரிக்கும் தொழிலாகும். கோவில் களிலும், மடங்களிலும் பசுமடங்கள் வைத்து பசுக்கள் காப் பாற்றப் பெற்றன. பசும்பாலும் அதன் பயன்களும் தேவால யங்களுக்கும், செல்வர்களுக்கும் மற்றையோர்களுக்கும் மிக்க உபயோகப்பட்டன. ஆலயங்களில் விளக்கு எரிப்பதற்கும், பலவித உணவுகள் செய்வதற்கும் வெண்ணெயும், நெய்யும் உபயோகப்பட்டன.

## கைத்தொழில்கள்

தென்னிந்தியாவின் உள்நாட்டு, வெளிநாட்டு வியாபாரங் கள் உலகம் போற்றும் பெருமையுடையதாகத் திகழ்ந்தது. இந்த வியாபாரங்களுக்கு ஏற்ற பொருள் உற்பத்தியில் தலை சிறந்தது நெசவுத் தொழிலாகும். நூல் நூற்றலும், நெசவுத் தொழிலும் மேன்மையடைவதற்குப் பல தொழிற்சங்கங்களும்

வியாபாரச் சங்கங்களும் நிலைபெற்றிருந்தன. உயர்ந்த துணிகளும், பட்டுகளும், நுண்ணிய துணிகளும், ஆடைகளும் தென்னிந்தியாவில் பல இடங்களில் உற்பத்தி செய்யப் பெற்றன. உலோகங்களைக் கொண்டு இல்லறவாழ்விற்கு ஏற்ற உபகரணங்களைச் செய்வதும், பொன், வெள்ளி, நவரத்தினங்களைக் கொண்டு ஆபரணங்கள் செய்யும் தொழில்களும் மேன்மையுற்றிருந்தன. சமுக்காளங்கள், போர்வைகள் முதலியவை வாரங்கல் நாட்டில் ஏராளமாக உற்பத்தி செய்யப் பெற்றன. செல்வர்கள் உலோகத்தினால் செய்யப்பெற்ற சாமான்களையும், எளியவர்கள் மட்பாண்டங்களையும் உபயோகப்படுத்தினர். போர்க்கருவிகள் செய்வதற்கு இரும்பும் எஃகும் மிக்க உபயோகப்பட்டன. கடற்கரையோரங்களில் உப்பு விளைவிக்கும் தொழில் அரசாங்கத்தின் ஏகபோக உரிமையாக இருந்ததெனக் கூறலாம். தென் கடற்கரையில் முத்துக்குளித்து முத்தெடுக்கும் தொழிலும் அரசாங்கத்திற்கே உரிமையாக இருந்தது என மார்க்கோ போலாவின் கூற்றுக்களிலிருந்து நாம் அறிகிறோம்.

தென்னிந்தியாவின் பண்பாட்டையும் கலாச்சாரத்தையும் பாதுகாத்த பல தொழிலாளர்களும், கைவினைச் செயலாளர்களும் சங்கங்கள் அமைத்து தங்களுடைய தொழில்கள் மேன்மையுறும்படிச் செய்தனர். கோவில்கள் அமைப்பதிலும், சிற்பம், சித்திரம் முதலிய நுண்கலைச் செல்வர்களும் தங்களுடைய பெயரையும், பெருமையையும் வெளிப்படுத்திக்கொள்வதை விரும்பவில்லை. ஆனால், பட்டடைக்கல் என்ற இடத்தில் அமைந்துள்ள விருபாட்சர் கோவிலை அமைத்த திரு. குண்டன் அனிவாரிதச்சாரி என்பார் இவ்விதிக்கு விலக்காக விளங்குகிறார். அவருக்கு 'தென்னாட்டு கோயிற்கலையின் சிற்பி' என்ற பட்டம் சாளுக்கிய மன்னர் ஒருவரால் வழங்கப்பட்டுள்ளது. விருபாட்சர் கோவிலில் இராமாயணக் கதையை சித்தரிக்கும் பல சித்திரங்கள் திரு. குண்டன் என்பவரால் எழுதப்பெற்றன. தக்காணத்தில் நகரங்களை அமைப்பதிலும், அரண்மனைகள், அரியணைகள், கட்டில்கள், வண்டிகள் முதலியவற்றை அமைப்பதிலும் சிறந்து விளங்கியவர் குண்டன் என்பவராவர். ஹொய்சள நாட்டில் சிறந்த சிற்பிகளாக மலிதம்மா, சௌடையா, நஞ்சையா, பாமன் முதலியோர் விளங்கினர்.

## உள்நாட்டில் போக்குவரத்து

உள்நாட்டில் கால்வாய்கள்மூலம் ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குப் பொருள்களைக் கொண்டு செல்வதற்கு ஏற்ற கால்வாய்கள் இக்காலத்தில் காணப்பெறவில்லை. ஆனால்,

சிறிதும், பெரிதுமான சாலைகள் அமைக்கப்பெற்று அவற்றின்மீது மாடு, குதிரை, ஒட்டகம் முதலியவற்றால் சுமந்து செல்வதற்கும், வண்டிகளில் வைத்து இழுத்துச் செல்வதற்கும் ஏற்ற வசதிகள் இருந்தன. கடற்கரையோரங்களில் இருந்த துறைமுகங்களில் கப்பல்களிலிருந்தும், கப்பல்களுள்ளும் பலவித பொருள்கள் இறக்குமதியும், ஏற்றுமதியும் செய்யப்பெற்றன. குன்றுகளின் மீதும், மலைப்பிரதேசங்களுக்கும் அனுப்பப்பெற்ற பொருள்கள், தலைசுமையாகவும், காவடிகள் மூலமாகவும், பொதி மாடுகளின் மீது கொண்டுவரப்பெற்றன. விஜயநகர ஆட்சியில் பெரு வழிகளில் பல வியாபாரிகள் கொள்ளையடிக்கப் பெற்ற செய்திகளைப் பற்றி நாம் கேள்விப்படுகிறோம். தலைக்கோட்டைப் போருக்குப் பிறகு, சீசர் பெடரிக் என்ற அயல்நாட்டவர் ஏழு மாதங்கள் வரையில் விஜயநகரத்தை விட்டுக் கிளம்ப முடியாமல் தவித்ததைப் பற்றி நாம் கேள்விப்படுகிறோம்.

## வணிகச் சங்கங்கள்

தென்னிந்திய வணிகத்தில் பங்குகொண்ட வணிகர்கள், கால, தேச வர்த்தமானங்களை அனுசரித்துப் பல வியாபாரச் சங்கங்களை அமைத்துத் தங்களுடைய வியாபாரத்தை வளம் பெறச் செய்தனர். மணிக்கிராமம் நானாதேசிகள் ஐந்நூற்றுவர், நகரத்தார் என்பவை முக்கியமானவையாகும். காகதீய மன்னர்களுடைய கல்வெட்டுகள் 'சுதேசபேஹாருலு', 'பரதேச பேஹாருலு' என்று வழங்கும் பெயர்கள் உள்நாட்டு, வெளிநாட்டு வணிகர்களைக் குறிக்கும் சொற்களாகும். முதற்பெயர் நகரத்தார் என்றும் இரண்டாவது நானாதேசிகள் என்றும் பொருள் பெறும். வணிகர்களின் கூட்டுறவைக் குறிக்கும் 'வாணிகக் கிராமம்' என்னும் சொற்றொடரே மணிக்கிராமம் என மருவியதாக பேராசிரியர் நீலகண்ட சாஸ்திரியார் கூறுவர். மூன்றாம் நந்திவர்மன் காலத்தில் மணிக்கிராமத்தார் என்ற தென்னிந்திய வணிகர்கள் சீயம் நாட்டில் உள்ள தாகுபா என்ற இடத்திற்குச் சென்று பெரு வியாபாரம் செய்து அங்கே ஒரு திருமால் கோவிலையமைத்துப் பரிபாலனம் செய்ததாக அந் நாட்டுக் கல்வெட்டொன்றில் கூறப்பெற்றுள்ளது.

'அய்யாவோலபுரத்து ஐந்நூற்றுச்சாமிகள்' என்று அழைக்கப்பெற்ற தக்காணத்து வணிகர்கள் ஐந்நூற்றுவர்கள் என்ற வணிகக் குழுவினரில் மிக்க சிறப்புற்றவர்களாவர். பேரரசர்களைப் போன்று இந்த வணிகக் குழுவினர்களுக்குப் பல மெய்க் கீர்த்திகள் உள்ளன. இந்த மெய்க் கீர்த்திகளில் அவர்கள் 'வீரபணஜிய தர்மத்தை காப்பவர்கள் என்றும், இத் தர்மம் 500

வீரசாசனங்களில் அடங்கியுள்ளதென்றும், பல தேசங்களுக்கும் சென்று வியாபாரம் செய்வதில் வல்லவர்கள் என்றும், நந்தியுருவம் பெற்ற கொடியை உடையவர்கள் என்றும் கூறப்பெற்றுள்ளன. வைணவம், சைவம், சமணம் முதலிய சமயங்களைச் சார்ந்தவர்களும் இச் சங்கத்தில் அங்கம் வகித்தனர். வசுதேவர் கந்தாளி, மூலபத்திரர் முதலிய பெரியோர்களின் வழிவந்தவர்கள் என்றும் கூறிக்கொண்டனர். இந்திய நாட்டின் பல பகுதிகளுக்கும், வெளிநாடுகளுக்கும் சென்று பல பொருள்களில் வியாபாரம் செய்தனர். யானைகள், குதிரைகள், சந்திரக் காந்தக்கல், முத்துக்கள், மாணிக்கம், வைரங்கள், புட்பராகம், மரகதம் முதலிய விலையுயர்ந்த பொருள்களையும், வாசனைத்திரவியங்களாகிய ஏலம், கிராம்பு, இலவங்கம், சந்தனம், சூடம், கஸ்தூரி, குங்குமப்பூ முதலிய பொருள்களையும் பலநாடுகளுக்குச் சென்று வியாபாரம் செய்தனர். அரசாங்கத்திற்குச் சேரவேண்டிய சுங்கவரிகளைத் தயக்கமின்றி கொடுத்தும் அன்னியில் கல்வியிலும் சமய உண்மையிலும் வல்ல அறிஞர்களையும் ஞானிகளையும் ஆதரித்தனர். அவர்களுக்குள் எண்வகை நாடுகளைச் சேர்ந்த பதினறு வகை செட்டிகள் இருந்தனர். சோழநாட்டில் ஐந்நூற்றுவர்கள் தங்கியிருந்த வியாபார ஸ்தலங்களுக்கு வீராம்பட்டினங்கள் என்ற பெயர்கள் வழங்கின.

சுமத்திரா தீவில் 1088ஆம் ஆண்டில் இவர்களால் பாகன் என்னுமிடத்தில் ஒரு வைணவ ஆலயம் அமைக்கப்பெற்றது. அதில் ஒரு தமிழ் கல்வெட்டும் காணப்பெறுகிறது. இக்கோவில் பதின்மூன்ரும் நூற்ருண்டு வரையில் நிலைபெற்றிருந்து பின்னர் அழிந்துவிட்டதாகத் தெரிகிறது.

## அயல்நாட்டு வாணிபம்

கி. பி. பத்தாம் நூற்ருண்டில் சீனத்தில் நிலைப்பெற்றிருந்த டாங் பேரரசும், தென்கிழக்கு ஆசிய நாடுகளில் பரவியிருந்த சைலேந்திர மன்னர்களுடைய ஸ்ரீவிஜயப் பேரரசும், பாக்தாத் நகரத்தைத் தலைநகராகக் கொண்டு விளங்கிய அப்பாசித் காலிப் பின் அரசும் தென்னிந்தியாவோடு பெருமளவில் வணிகத்தில் ஈடுபட்டிருந்தன. பன்னிரண்டாம் நூற்ருண்டிலிருந்து சீனர்களுடைய கப்பல் வணிகம் தென்னிந்திய மேற்கு கடற்கரை துறைமுகங்களோடு பெருமளவில் நடந்ததெனக் கூறலாம். பாரசீக வளைகுடாவில் உள்ள சிராப் என்னும் துறைமுகத்தில் சீன, ஜாவா, மலேயா, தென்னிந்தியா முதலிய நாடுகளிலிருந்து வந்த வணிகர்கள் கூடியிருந்தனர்.

பத்தாம் நூற்றுண்டின் முடிவிலிருந்து தென்னிந்தியாவிற்கும் சீனு நாட்டிற்கும் நடைபெற்ற வாணிகம் வளர்ந்தது. 1015ஆம் ஆண்டில் முதலாம் இராஜராஜ சோழன், சீனநாட்டிற்கு ஒரு வியாபாரத் தூதுக்குழுவொன்றை அனுப்பியதாகவும் அக்குழு வினர் மூன்றுண்டுகள் பிரயாணம் செய்து சீனுவை அடைந்த தாகவும் நாம் கேள்விப்படுகிறோம். முதலாம் இராஜேந்திர னுடைய ஆட்சியில் 1033ஆம் ஆண்டில் ஒரு தூதுக்குழுவும், 1077ஆம் ஆண்டில் மற்றொன்றுமாக மூன்று குழுக்கள் சோழப் பேரரசிலிருந்து சீனுவிற்கு அனுப்பப் பெற்றன. சீனத்திற்கும் பாரசீகத்திற்கும், மிக்க விலையுயர்ந்த பொருள்கள் சிறு அளவில் அனுப்பப் பெற்றன. அவையாவன அகில் கட்டைகள், அம்பர், கற்பூரம், நவரத்தினங்கள், தந்தம், கருங்காலி மரத்துண்டுகள், காகிதம், சந்தனக்கட்டைகள், நறுமணப் பொருள்கள், மருந்து வகைகள், சில உணவுவகைகள் முதலியனவாகும். பாமினி விஜயநகர அரசுகள் தோன்றிய பிறகு அரேபியாவிலிருந்தும், பாரசீகத்திலிருந்தும், போர்க்குதிரைகள் ஏராளமாக தென்னிந் யாவிற்குத் தருவிக்கப் பெற்றன. இக்குதிரை வியாபாரத்தைப் போர்த்துக்கீசியர்கள் பிறருடைய போட்டியின்றி தாங்களே செய்து வந்தனர். சீனத்திற்குத் தென்னிந்தியாவிலிருந்து பருத்தி நூல் ஆடைகளும், நறுமணப்பொருள்களும், யானைத் தந்தம், மான்கொம்பு, கருங்காலிமரம், அம்பர், பவழம் மற்றும் பல நறுமணப் பொருள்களும் அனுப்பப்பெற்றன. இந்த ஆடம் பரப்பொருள்களை வெளிநாட்டிலிருந்து வரவழைப்பதால் சீன தேசத்து பொன், வெள்ளி, நாணயங்கள் நாட்டை விட்டுச் செல்வதைக் கண்ட சீன அரசாங்கத்தினர், 12ஆம் நூற்றுண்டின் இறுதியில் தென்னிந்தியப் பொருள்களை தருவிப்பதை நிறுத்தி விடத் தொடங்கினர். ஆயினும், தென்னிந்தியாவின் கிழக்குக் கடற்கரையில் இருந்த பட்டினங்களோடு சீனநாட்டு வணிகம் ஓரளவு நடைபெற்று வந்தது.

1170 ஆம் ஆண்டில் தென்னிந்தியாவிற்கு வந்த பெஞ்சமின் என்ற யூத வியாபாரியின் குறிப்புகள் சோழப்பேரரசர்கள் அயல் நாட்டு வணிகர்களுக்கு ஆதரவளித்ததைத் தெரிவிக்கின்றன. ‘கொல்லம் துறைமுகத்தில் அயல்நாட்டு கப்பல்கள் வந்து சேர்ந்தவுடன், மூன்று சோழ அரசாங்க அதிகாரிகள் கப்பலுக் குள்வந்து அக் கப்பலின் பெயர் அதிலுள்ள பொருள்கள், மாலுமி கள் முதலியவற்றின் பெயர்களை எழுதிச் சென்று தங்களுடைய அரசனிடம் அறிவிக்கின்றனர். அக் கப்பலில் உள்ள பொருள் கள் திருட்டுப் போகாதவாறு பாதுகாப்பது சோழ அரசாங்கத் தின் கடமையாகக் கருதப்படுகிறது. புயலால் சேதமடைந்து

கரையோரங்களில் சேர்க்கப்பட்ட பொருள்களை அந்நியநாட்டு வியாபாரிகளுக்குச் சோழ அரசாங்க அதிகாரிகள் திருப்பிக் கொடுத்து விடுகின்றனர். சோழப் பேரரசின் எல்லாப் பகுதி களிலும் இவ்விதம் நடைபெறுகிறது.' இதுபோன்று காகதீய அரசன் கணபதியும் தன்னுடைய அபயசாசனத்தின்படியும், அன்னபோதரெட்டி என்ற சிற்றரசனும் வெளிநாட்டு வியாபாரி களுக்குத் தகுந்த பாதுகாப்பு அளித்துள்ளனர். பதின்மூன்றும் நூற்றாண்டின் முடிவில் சீனத்துப் பேரரசனாகிய குப்ளாய்கான் ஆட்சியில் இரு நாடுகளுக்கும் இடையே பல தூதுக்குழுக்கள் பரிமாறிக் கொள்ளப் பெற்றன. பதினைந்தாம் நூற்றாண்டில் பல சீனநாட்டுக் கப்பல்கள் இந்துப் பேராழியையும், வங்கக் கடலையும் கடந்து இந்திய கடற்கரைத் துறைமுகங்களுக்கு வந்தன.

1443ஆம் ஆண்டில் பாரசீகத்திலிருந்து விஜயநகரத்திற்குத் தூதாக வந்த அப்துர் ரசாக் விஜயநகரப் பேரரசு இலங்கைத் தீவிலிருந்து குல்பர்கா வரையில் தெற்கு வடக்காகப் பரவி யிருந்ததென்றும், அப்பேரரசில் முன்னூருக்கு மேற்பட்ட துறைமுகங்கள் இருந்தனவென்றும் ஆயிரம் யானைகளும் பதினொரு லட்சம் போர் வீரர்களும் இருந்தனர் எனக் கூறி யுள்ளார். கள்ளிக்கோட்டையில் இறங்கி பின்னர் விஜயநகரத் திற்கு வந்து சேர்ந்தார். கள்ளிக்கோட்டை, ஆப்பிரிக்கா, அரேபியா முதலிய நாடுகளிலிருந்து கப்பல்கள் வந்து தங்கு வதற்கு ஏற்ற துறைமுகமாக அமைந்திருந்ததெனக் கூறியுள் ளார். சுங்கச் சாவடியில் இருந்த அரசாங்க அதிகாரிகள் அங்கு இறக்குமதியாகும் பொருள்களை பத்திரமாகப் பாதுகாத்துக் கொள்கின்றனர் என்றும், வியாபாரப் பொருள்களின் மதிப்பில் நாற்பதில் ஒரு பங்கை சுங்கத் தீர்வையாக விதிக்கின்றனர் என்றும் கூறுவர். மெக்கா நகரத்திற்கும் கள்ளிக்கோட்டைக்கும் பெருமளவில் மிளகு வியாபாரம் நடந்தது.

அப்துர் ரசாக் கள்ளிக்கோட்டைக்கு வந்த எழுபது ஆண்டு களுக்குப் பிறகு கள்ளிக்கோட்டைக்கு வந்த துவார்த்தி பார் போசா என்பார் 'கள்ளிக் கோட்டையில் அராபியர்கள், பாரசீ கர்கள், குஜராத்தியர், குரோசானியர், தக்காணத்தார் முதலி யோர் வாணிபத்தின் பொருட்டு குழுமியிருந்தனர். இங்கிருந்த இஸ்லாமியர் சாமோரின் அரசருக்கு அடங்காமல் தனி ஆளுநரால் ஆளப்பெற்று வந்தனர். ஆயிரம், ஆயிரத்தி இரு நூறு டன் எடையுள்ள கப்பல்கள் ஆணிகள் அடிக்கப்பெரு மலும், அடுக்குகள் இல்லாமலும் நூல் கயறுகளைக் கொண்டே

இணைத்துக் கட்டப்பெற்றன. கள்ளிக்கோட்டையில் இருந்து ஏடன், மெக்கா வழியாக செங்கடல் மூலம் வெனிஸ் நகரத்து வியாபார கப்பலுடன் தொடர்பு கொண்டன. தென்மேற்குப் பருவக்காற்றுக் காலத்தில் பதினைந்து அல்லது இருபது கப்பல்களுக்கு மேல் இத்துறைமுகத்திற்கு வந்து சேர்ந்தன. கள்ளிக்கோட்டையிலிருந்து மிளகு, இஞ்சி, லவங்கப்பட்டை, ஏலக்காய், கடுக்காய், புளி, விலையுயர்ந்த மணிக்கற்கள், சிறு முத்துக்கள், கஸ்தூரி, அம்பர், பேதிமருந்துவகைகள், பருத்தி நூல் துணிவகைகள், பீங்கான் சாமான்கள் முதலியவை ஏற்றுமதியாயின. ஜுடா துறைமுகத்திலிருந்து செம்பு,பாதரசம், சிவப்புத்தூள், பவழம், குங்குமப்பூ, பன்னீர், வெல்வெட் துணிகள், கித்தான் துணிகள் முதலியவகைகள் ஏற்றுமதியாயின' எனக் கூறியுள்ளார்.

1510 ஆம் ஆண்டிலிருந்து கொச்சித் துறைமுகத்தில் தங்களுடைய கப்பல்களைப் பழுதுபார்ப்பதற்குரிய வசதிகளைபோர்த்துக்கீசியர் ஏற்படுத்தினர். காம்பே துறைமுகத்திலிருந்து ஏராளமான துணிமணிகள் ஏற்றுமதியாயின என்று வார்த்திமா என்ற இத்தாலியர் கூறியுள்ளார். மிக நேர்த்தியாக அமைக்கப் பெற்றிருந்த கண்ணனூரில் போர்த்துக்கீசியர் பாதுகாப்புள்ள கோட்டையொன்றை அமைத்திருந்தனர். அக்கோட்டைக்குள் பாரசீகத்திலிருந்து இறக்குமதி செய்யப் பெற்ற குதிரைகளை வைத்திருந்தனர். அங்கிருந்து விஜயநகரத்திற்கு அனுப்பப் பெற்ற ஒவ்வொரு குதிரையின் மீதும் 25 டியூகட்டுகள் சுங்க வரியாக விதிக்கப் பெற்றன. கண்ணனூருக்குப் பக்கத்தில் 12 மைல் தூரத்திலுள்ள தர்மப்பட்டினம் என்னுமிடத்தில் கப்பல்களைக் கட்டுவதற்கு கேற்ற கப்பல்தளம் அமைக்கப் பெற்றிருந்தது. சௌல் என்னும் துறைமுகத்திலிருந்து பாமினி நாட்டில் உற்பத்தியான கோதுமை, அரிசி, கூலவகைகள், எள் முதலிய தானியங்களும் வெகு நேர்த்தியான மஸ்லின் துணிகளும், காலிக்கோ துணிகளும் ஏற்றுமதியாயின என்று பார்போசா என்பார் கூறியுள்ளார். மலையாள நாட்டைப்பற்றி பார்போசா என்பார் 'இந்நாடு அதிக அகலமில்லாமல் சிறிய நாடாக இருந்த போதிலும் இங்கே ஏராளமான மக்கள் இருந்தனர். எழில் மலையிலிருந்து கொல்லம் வரையில் ஒரு நகரத்தில் மக்கள் சேர்ந்து வாழ்வது போல் இந்நாடு காட்சியளித்தது' எனக் கூறுவர். கொச்சியில், சீனாவிலிருந்து பட்டுத் துணிகளும் வங்காளத்திலிருந்து சர்க்கரையும் ஏராளமாக தருவிக்கப்பட்டதென *சீசர் பெடரிக்* கூறுவர்.

## விஜயநகரப் பேரரசில் வழங்கிய நாணயங்கள்

விஜய நகரத்தில் நாணயச்சாலை யொன்றிருந்ததைப் பற்றி அப்துர்ரசாக் கூறியுள்ளார். மேலும் மூன்றுவகை நாணயங்கள் பழக்கத்தில் இருந்தன. (1) தங்கத்தினுல் செய்யப்பட்ட வராகன். (2) பிரதாப் என்ற என் ½ வராகன்கள். (3) பிரதாப் என்ற நாணயத்தில் பத்தில் ஒரு பங்கு மதிப்புள்ள பணம் என்ற நாணயம். செம்பினுல் செய்யப்பட்டு பணத்தின் ஆறில் ஒரு பங்கு மதிப்புள்ளது தார் என்ற நாணயம். பேரரசிற்கு அடங்கி யிருந்த மகாமண்டலேசுவரர்களும் சிறு நாணயங்களை வெளி யிட்டுள்ளதாக நாம் அறிகிரேும். விஜயநகரப்பேரரசில்வழங்கிய நாணயங்கள் உயர்ந்த உலோகங்களினுல் செய்யப் பெற்றிருந்தன வென்றும், கள்ளநாணயங்கள் வழக்கத்தில் இருக்க வில்லை யென்றும் துவார்த்தி பார்போசா கூறுவர். ஆனுல், சீசர் பெடரிக் என்பார், பேரரசில் பல விதமான சிறு சிறு நாண யங்கள் இருந்தன என்றும், ஒரு ராச்சியத்தில் புழக்கத்தில் இருந்த நாணயம் மற்ருெரு ராச்சியத்தில் இல்லை எனவும் கூறுவர்.

# 28. தென்னிந்திய சமய வரலாறு

## சமயவரலாறு

இந்தியத்துணைக் கண்டத்தின் சமய வரலாற்றில் தென்னிந்தியாவில் தோன்றிய உயர்சமயங்கள் மிகுந்த சேவை செய்துள்ளன. பக்தி மார்க்கம் தென்னிந்தியாவில் தோன்றியதெனக் கூறுவதில் பேரிய உண்மையுள்ளது. வைதீக மார்க்கத்தின் பிரிவுகளாகிய மீமாம்சமும், வேதாந்தக் கொள்கையின் பிரிவுகளாகிய அத்துவிதம், விசிஷ்டாத்துவிதம், துவைதம் முதலிய தத்துவங்களும், தென்னாட்டில் தோன்றிய சைவ சித்தாந்தமும் இவ்வகையைச் சேர்ந்தவையாகும். இன்னும் வேதங்களுக்குப் பாஷ்யங்களும், விரிவுரைகளும் செய்த சிறந்த அறிஞர்களும் தென்னிந்தியாவில் தோன்றினர். கி. பி. ஆரும் நூற்றுண்டு வரையில் தென்னிந்தியாவில் தோன்றிய பலவித சமயங்களைப் பின்பற்றிய மக்களிடையே ஒருவிதமான ஒற்றுமையும் சமாதானமும் நிரம்பியிருந்தன. சமயக் கொள்கைகளின் அடிப்படையான நிலைகளைப் பின்பற்றிய மக்கள், உயிர்ப்பலியிட்டும் மதுவகைகளைப் படைத்தும் தங்களுடைய சமய ஆர்வத்தைக் காட்டிக் கொண்டனர். வேதமார்க்கத்தைப் பின்பற்றி முருகன், சிவன், விஷ்ணு, இந்திரன், கிருட்டினன், முதலிய பல தெய்வ வணக்கங்களும் நிலைபெற்றிருந்தன. சமணம், பௌத்தம், ஆகிய இரண்டு சமயதத்துவங்களும் தென்னாட்டில் பரவியிருந்தன. மணிமேகலை என்னும் காவியத்தில், காஞ்சிபுரத்தில் இருந்த வேதாந்திகள் சைவர்கள், வைணவர்கள், சமணர், சாங்கியர், வைசேஷிகர், உலோகாய்தர் முதலியவர்களிடம் மணிமேகலை அவ்வவர்களுடைய சமய உண்மைகளைக் கற்றுத் தெளிந்ததாகக் கூறப்பெற்றுள்ளது.

கி. பி. ஏழாம் நூற்றுண்டின் தொடக்கத்தில் பக்திமார்க்கத்தின் இருபிரிவுகளாகிய சைவமும் வைணவமும் சிறப்புற்றோங்கின. பௌத்த-சமணக் கொள்கைகள் அழிந்துபடுவதற்கு அவை காரணங்களாக இருந்தன. பல்லவர்களுடைய ஆட்சியில் தமிழ் நாட்டில் சைவம் வைணவம் ஆகிய இரு சமயங்களையும் மக்களிடையே பரவும்படிச் செய்து சமணம் - பௌத்தம் ஆகிய புறச் சமயங்கள் மறைவதற்கு ஏற்ற சூழ்நிலை தோன்றியது. சைவ

சமயத்தை நாயன்மார்களும், வைணவத்தை ஆழ்வார்களும் போதித்தனர். இவ்விருசமயங்களும் இந்துசமயத்தின் இரு கண்கள் எனக்கருதப் பெறுவது வேண்டும். தமிழ்நாட்டில் தோன்றியப்பின்னர், மகாராஷ்டிரத்திலும், வடஇந்தியாவிலும் சைவ, வைணவ பக்திமார்க்கங்கள் பரவலாயின.

## சைவ சமயம்

தமிழ்நாட்டில் சைவசமயம் தோன்றி வளர்ந்து பெருமையடைந்த வரலாற்றைச் சேக்கிழார் பெருமான் எழுதித்தந்த பெரிய புராணம் அல்லது திருத்தொண்டர் புராணம் என்னும் நூலில் இருந்து நாம் உணருகிறோம். சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நால்வகை நெறிகளையும் மேற்கொண்டு ஐம்புல வழியடைத்துச் செம்புலச் செல்வர்களாக விளங்கிய சைவத் திருத்தொண்டர்களின் வரலாற்றைக் கூறுவதே பெரிய புராணமாகும். நம்பியாரூரர் என்ற சுந்தரமூர்த்தி நாயனர் அருளிய திருத்தொண்டத் தொகையில் தொகுத்துக் கூறப் பெற்ற தில்லைவாழ்ந்தணர், பொய்யடிமையில்லாத புலவர் பத்தராய்ப்பணிவார்கள், பரமனையே பாடுவார், சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார், திருவாரூர்ப் பிறந்தார்கள், முப்போதும் திருமேனி தீண்டுவார், முழு நீறு பூசிய முனிவர் அப்பாலும் அடிச்சார்ந்தார் ஆகிய ஒன்பது திருக்கூட்ட அடியார்கள் தொகையடியாராவர். திருநீலகண்டக் குயவனர் முதல் திருநீலகண்டத்துப்பாணனர் இறுதியாக உள்ள அறுபது நாயன்மார்களும், சுந்தரமூர்த்தியும அவருடைய பெற்றோர்களாகிய சடையனர், இசை ஞானியர் ஆகிய மூவரையும் சேர்த்து தனியடியார் ஆறுபத்தி மூவராவர். இந்த ஒன்பது தொகையடியார்களையும், ஆறுபத்தி மூன்று தனியடியார்களையும் பற்றி தொகுத்துரைப்பது திருத்தொண்டத் தொகையாகும். இத்திருத்தாண்டத் தொகையை வகுத்தும் விளக்கும் முறையில் அமைந்தது நம்பியாண்டார் நம்பியருளிய திருத்தொண்டர் திருவந்தாதியாகும். இவ்விரு ஆதாரங்களையும் கொண்டே சேக்கிழார் பெரிய புராணத்தை இயற்றியுள்ளார்.

பெரியபுராணத்தில் கூறப்பெற்றுள்ள எழுபத்திரண்டுநாயன்மார்களும் தெய்வ சந்நிதியிலும், மெய்யன்பர்கள் திருவுள்ளத்திலும் ஒருகுலத்தவர்போலச் சமமாகவே போற்றப் பெறுகிறார்கள் அந்தணர், அரசர், வணிகர், வேளாளர், குயவர், பாணர்,வேடர் பறையர், பரதவர், வண்ணார், மறவர், பௌத்தர், பெண்டிர், முதலிய அனைவருடைய தொண்டு முறைகளும் பெரியபுராணத்தில் விளக்கமாகக் கூறப் பெறுகின்றன. இயேசுநாதர், முகம்மது

நபி, கௌதம புத்தர், மகாவீரர் போன்ற உயர்ந்த இலட்சியங்களைக் கொண்ட பல தொண்டர்களையும் அங்கு காணலாம். பெரிய புராணம் ஓர் உலகப் பெரு நூலாகும். அந்நூல் தில்லையிலுள்ள தில்லையம்பலவாணப் பெருமானால் 'உலகெலாம்' என்று அடியெடுத்துக் கொடுக்கப் பெற்று பின்னர் எழுதப்பட்ட தெய்வத்தன்மை பொருந்திய வரலாற்று நூல் என்ற செய்தியும் வழக்கத்தில் உள்ளது.

மேற்கூறப்பெற்ற எழுபத்திரண்டு நாயன்மார்களுள் மிகுந்த சிறப்புடையவர்கள் தேவார ஆசிரியர்களாகிய திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர், சுந்தரமூர்த்தி நாயனார் என்ற மூவருமாவர். இந்த நாயன்மார்களுடைய இன்னிசைத் தேவாரங்களும், சைவ சமயம் வலிமை பெற்றோங்குவதற்கு அவர்கள் ஆற்றியத் தொண்டுகளும் தமிழ்நாட்டில் சைவசமயம் பரவுவதற்கு காரணமாக இருந்தன.

### திருநாவுக்கரசர்

இவர் தென்பெண்ணாற்றுக்கும், வடவெள்ளாற்றிற்கும் இடைப்பட்ட நடுநாட்டில் உள்ள திருவாமூரில் பிறந்தவராவர். தீவிரமான சைவக்குடும்பத்தில் பிறந்தவராயினும், சமண சமயத்தின் உட்கருத்துக்களை உணர்ந்து கொள்வதற்குத் திருப்பாதிரிப் புலியூர் என்னுமிடத்திலிருந்த சமணப் பள்ளியில் சேர்ந்து சமணத்தை மேற்கொண்டார். திலகவதியார் என்ற அவருடைய தமக்கையார் தன்னுடைய தம்பியாகிய மருள் நீக்கியர் மீண்டும் சைவ நெறியைச் சாரவேண்டுமென்று திருவதிகைத் திருவீரட்டானத்திறைவரிடம் இறைஞ்சினார். அவருடைய வேண்டுகோளுக்கு இரங்கிய இறைவன், மருள்நீக்கியாருக்குச் சூலை வலியாகிய பெரிய துன்பத்தை உண்டாக்கி அதன்மூலம் சைவசமயத்தைச் சாரும்படி அருள் செய்தார். சமண சமயத்தை விட்டு சைவ சமயத்தைச் சார்ந்து தன்னுடைய சூலைநோயைத் தீர்த்துக் கொண்ட மருள்நீக்கியர் மீது பொறாமைக் கொண்ட சமணர்கள் பல்லவ அரசனாகிய மகேந்திரவர்மனிடம் மருள்நீக்கியரைப் பற்றிக் கோளுரைத்து அவருக்குப் பலவிதமான கொடுந்தண்டனைகளை விதிக்கும்படிச் செய்தனர். அவ்வித தண்டனைகளிலிருந்து வியக்கத்தக்க வகையில் மருள்நீக்கியர் தப்பித்துக் கொண்டதாக நாம் அறிகிறோம். அவர் பாடிய முதல் தேவாரம் 'கூற்றாயினவாறு விலக்ககிலீர்' என்று தொடங்கும் திருவதிகைத் திருவீரட்டானத்தைப்பற்றியதாகும். இவருடைய தேவராங்கள் மிகுந்த சொற்சுவை, பொருட்சுவை கொண்டுள்ளமையால் இவருக்கு நாவுக்கரசர் என்றப்

பெயரும் வழங்கியது. இவருடைய பெருமையையும், சைவ சமயத்தின் சிறப்பையும்கண்ட மகேந்திரவர்ம பல்லவனும் சமண சமயத்தை விட்டு நீங்கி, சைவத்தைச் சார்ந்து தன்னுடைய பெயரால் குணதர ஈச்சுரம் என்ற சிவன் கோவிலை அமைத்தான். தொண்டை நாட்டிலும் நடு நாட்டிலும் சைவம் மேலோங்கியது. திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர், அப்பூதியடிகள், முதலிய நாயன்மார்கள் சம காலத்தில் வாழ்ந்தவராவர்.

## திருஞானசம்பந்தர்

தஞ்சை மாவட்டம் சீர்காழி அல்லது பிரம்மபுரி என்னும் தலத்தில் கௌணிய கோத்திரத்தைச் சேர்ந்த, சிவபாத இருதயருக்கும் பகவதி யம்மையருக்கும் பிறந்தவர் ஞானசம்பந்தர். சிறு வயதிலேயே சீர்காழியில் கோயில் கொண்டுள்ள இறைவனாலும் இறைவியாலும் ஆட்கொள்ளப் பெற்று, ஞானப்பாலுண்டு 'தோடுடைய செவியன்' என்னும் தேவாரப் பாடலைத் தொடங்கி ஆயிரக்கணக்கான தேவாரங்களைப் பாடியருளி சைவ சமயம் பரவும்படிச் செய்தார். அவருடைய தகப்பன் தன்னுடைய தோள்களில் சுமந்து தமிழ்நாட்டிலுள்ள பல கோவில்களுக்கு இவரை அழைத்துச் சென்றார். அங்கெல்லாம் தேவார இன்னிசைப் பதிகங்கள் பாடப்பெற்றன. எல்லாம் வல்ல இறைவன் ஞானசம்பந்தருக்குப் பொற்றாளமும், குடையும், முத்துப் பல்லக்கும் அளித்ததாகவும், அவரைப் பல்லக்கில் சுமந்து தங்கள் தங்கள் ஊருக்கு வந்து நாளும் இன்னிசையில் தமிழும் சைவமும் பரப்பும்படி மக்கள் வேண்டிக் கொண்டதாகவும் வரலாறு கூறுகிறது.

ஞானசம்பந்தர், திருமறைக்காட்டிலும் மற்ற தேவாலயங்களிலும் பல தெய்வீகமும் அற்புதமும் நிறைந்த செயல்களை இறைவனுடைய அருளினால் இயற்றியும், தேவார இன்னிசைகள் பாடியும் சைவசமயத்தைப் பரவச் செய்தார். அவருடைய காலத்தில் பாண்டிய நாட்டிலும் சமணசமயம் பரவியிருந்தது. சமணத் தலைவர்கள், பாண்டிய அரசன் நெல்வேலி வென்ற நெடுமாறன் என்பானைத் தங்கள் சமயத்தைச் சாரும்படிச் செய்தனர். பாண்டிமாதேவி மங்கையர்க்கரசியாரும் அமைச்சர் குலச்சிறையரும் ஞானசம்பந்தரை மதுரைக்கு வந்து சைவத்தை நிலைநாட்டும்படி வேண்டினர். திருநாவுக்கரசர் ஞானசம்பந்தரை மதுரைக்குச் செல்லாது இருக்கும்படி வேண்டிக் கொண்ட போதிலும், பின்னவர் தன்னுடைய இளமையையும் அனுபவமின்மையையும் பொருட்படுத்தாது,

இறைவனருளைத் துணைக் கொண்டு மதுரைக்குச் சென்று சமணருடன் அனல்வாது, புனல்வாது நடத்தி பாண்டியனுடைய சுரத்தையும் போக்கி மீண்டும் சைவசமயம் பாண்டிய நாட்டில் நிலைபெறுமாறு செய்தார். ஞானசம்பந்தர் பதினாறே ஆண்டுகள் இவ்வுலகில் வாழ்ந்த போதிலும் பதினாறு ஆயிரத்திற்கு மேற்பெற்ற தேவாரச் செய்யுட்களை இயற்றிப் புகழ் பெற்றார். பதினைந்தாம் நூற்றாண்டில் வாழ்ந்த அருணகிரிநாதர் தன்னுடைய திருபுகழ் சந்தப்பாக்களில் ஞானசம்பந்தரை முருகப்பெருமானுடைய அவதாரமாகவே கருதியுள்ளார். சிவ பெருமானுக்கும், ஞானசம்பந்தருக்கும் நிலவிய தொடர்பு சற்புத்திர மார்க்கம் என அறிஞர்களால் கொண்டாடப் பெறுகிறது.

## சுந்தரர்

சுந்தரமூர்த்தி நாயனார் நடுநாட்டில் உள்ள திருநாவலூரில் ஆதிசைவ அந்தண குலத்திற் பிறந்தவர். நடுநாட்டுச் சிற்றரசனாகிய நரசிங்க முனையதரையரால் சுவீகார மகனாக எடுத்து வளர்க்கப் பெற்றார். கடவுளுக்கும் சுந்தரருக்கும் நிலவிய தொடர்பு சகமார்க்கம் அல்லது தோழமை உறவாக அறிஞர் கள் கருதுவர். சுந்தருடைய திருமணம் நடைபெற இருந்த சமயத்தில் இளமையில் இல்லற வாழ்க்கையில் புகுந்து விடாமல் எல்லாம் வல்ல இறைவனால் தடுத்தாளப்பெற்றார். சுந்தரருடைய வாழ்க்கையிலிருந்து அவர் ஒரு பெரிய புரட்சி யாளர் அல்லது சமூக சீர்த்திருத்தவாதி என்பதை நாம் அறிந்து கொள்ளலாம். ஆதிசைவ அந்தணனாகப் பிறந்த போதிலும் கணிகையர் குலத்தில் பிறந்த பரவையார் என்ற பெண்மணியை முதல்தாரமாக மணந்து திருவாரூரில் தங்கியிருந்தார். பின்னர் பல தலங்களுக்குச்சென்று தேவராத்துதிகளைப்பாடி திருவொற்றி யூருக்குக்குச் சென்று தங்கியிருக்கையில் சங்கலியர் என்ற நங்கையையும் இறைவன் சாட்சியாக மணந்து கொண்டார். இந்த இரண்டாவது திருமணத்தால் பரவைக்கும் சுந்தரருக்கும் ஏற்பட்ட பிணக்கையும் சிவபெருமானே தூது சென்று சமாதானம் செய்து வைத்ததாகப் பெரிய புராணத்தில் கூறப்பெற்றுள்ளது.

சுந்தரருடைய காலத்தில் சேரமான் பெருமாள் நாயனாரும் ஏயர்கோன் கலிக்காமரும் ஆகிய இரு நாயன்மார்கள் இருந் தனர். சேரமான் பெருமானும் சுந்தரரும் மிகுந்த நட்புடைய வர்களாக விளங்கி இருவரும் கைலாயத்திற்குச் சென்றதாக நாம் கேள்விப்படுகிறோம். சுந்தரரால் காடவற்கோன் கழற்

சிங்கன் என்று போற்றப்பெற்ற நாயன்மார் இராசசிம்ம பல்லவனு, அல்லது மூன்றும் நந்திவர்மனு என்பது ஒரு சிக்கலான பிரச்சனையாக உள்ளது. காஞ்சியில் கைலாசநாதர் கோவிலை அமைத்த இராசசிம்ம பல்லவனே சுந்தரருடைய காலத்தில் வாழ்ந்த பல்லவ மன்னனாக இருத்தல் கூடுமென பல அறிஞர்கள் நினைக்கின்றனர். பூசலார் நாயனார் என்பவரும் சுந்தரமூர்த்தி நாயனாருடைய சமகாலத்தவர் ஆவர்.

திருநாவுக்கரசர், ஞானசம்பந்தர், சுந்தரமூர்த்தி ஆகிய மூவரும் தேவாரம் பாடிய மூவர் முதலிகள் எனக் கருதப் பெறுகின்றனர். இவர்களுக்குப் பின்னர் ஒன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர் மாணிக்கவாசகர் அல்லது திருவாதவூரர் என்ற திருவருட்செல்வர். சுந்தரமூர்த்தி தான் பாடிய தேவாரப்பதிகங்களில் ஞானசம்பந்தரையும், நாவுக்கரசரையும் போற்றியுள்ளாரேயன்றி மாணிக்கவாசகரைப்பற்றிக் கூற வில்லை. மாணிக்கவாசகர் இம்மூவருக்கும் முற்பட்டவர் என்ற கொள்கை இப்பொழுது வரலாற்று அறிஞர்களால் ஒப்புக் கொள்ளப்பெறவில்லை. கி. பி. 792முதல் 835வரை அரசாண்ட மூதலாம் வரகுணபாண்டியன் காலத்தில் வாழ்ந்தவர் என்று வரலாற்றாசிரியர்களால் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. தில்லைச் சிற்றம்பலத்தில் இலங்கையிலிருந்து வந்த பௌத்தர்களுடன் வாதிட்டு அதில் மாணிக்கவாசகர் வெற்றிபெற்றதாக திருவாசகத்தில் அகச்சான்றுகள் உள்ளன. திருவாசகமும், திருச்சிற்றம்பலக்கோவையும் மாணிக்கவாசகருடைய முக்கிய நூல்களாகும்.

தேவாரம் பாடிய முதல் மூன்று நாயன்மார்களுடைய வரலாறுகள் மட்டும் பெரியபுராணத்தில் காணப்பெறுகின்றன. சுந்தரமூர்த்தி நாயனார் மாணிக்கவாசகரைப்பற்றி திருத்தொண்டகையில் கூறவில்லை. ஆதலால் மாணிக்கவாசகர் முதல்மூன்று தேவார ஆசிரியர்களுக்குப் பின்வந்தவர் என்பது நன்கு விளங்குகிறது.

## வைணவ ஆழ்வார்களின் வரலாறு

திருமாலையே முழுமுதற் கடவுளாகக் கொண்டு அவருடைய பக்தியில் ஆழ்ந்து துதிப்பாடல்களை இயற்றி வைணவ சமயத்தைப் போதித்தவர்களுக்கு வைணவ ஆழ்வார்கள் என்ற பெயர் வழங்கியது. பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார் பேயாழ்வார் என்ற மூவரும் முதல் மூன்று ஆழ்வார்களாவர் காஞ்சி, கடல்மல்லை, மைலாப்பூர் ஆகிய மூன்றிடங்களுட

மேற்கூறப்பெற்ற ஆழ்வார்களின் பிறப்பிடங்களாகும். திருக்கோவலூரில் ஓரிரவில் மழை பெய்துகொண்டிருக்கும்பொழுது இம்மூவரும் ஒரு திண்ணையில் ஒதுங்கியிருக்கும்பொழுது திருமாலும் இவர்களுடன் சேர்ந்துகொண்டதாக ஒரு கதை வழங்குகிறது. இதை 'பாவருந் தமிழால் பேர்பெறு பனுவல் பவலர் பாதிநாளிரவில் மூவரும் நெருக்கி மொழிவிளக்கு ஏற்றி முகுந்தனைத் தொழுதனர்' என வில்லிபுத்தூராழ்வாருடைய மகன் வரந்தருவார் என்பார். பாரதத்திற்கு தான் எழுதிய சிறப்புப்பாயிரத்துட்கூறுவர். மேற்கூறப்பெற்ற மூன்று ஆழ்வார்களும் வெண்பாச் செய்யுட்களால் தங்களுடைய பாடல்களை இயற்றியுள்ளனர். சைவசமயத்தைப் பற்றிக் குறை கூறாது ஆழ்ந்த பக்தியுடன் திருமாலைப் போற்றியுள்ளனர். இவர்கள் கி. பி. ஐந்தாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர்கள் எனக் கருதபெறுகிறார்கள். இவர்களுக்குப் பின்வந்த திருமழிசையாழ்வார், மகேந்திரவர்ம பல்லவனுடைய காலத்தவராவர். இவர் பிறந்தபொழுது, மனிதருக்கு உரிய அவயங்கள் இன்றி தசைப்பிண்டமாக இருந்ததாகவும், பெற்றோர்களால் கைவிடப் பெற்று தாழ்ந்தகுலத்து ஒருவனால் வளர்க்கப் பெற்றதாகவும் நாம் கேள்விப்படுகிறோம். சமணம், பௌத்தம், சைவம் முதலிய சமயங்களை ஆராய்ந்து அவற்றுள் வைணவமே சிறந்ததென இவர் கொண்டுள்ளார்.

மேற்கூறப்பெற்ற நான்கு ஆழ்வார்களுக்குப் பிறகு ஆலி நாட்டுக் குறுநில மன்னனாகிய திருமங்கையாழ்வார் வாழ்ந்தவராவர். தொடக்கத்தில் கள்வர் தலைவனாக இருந்து வழிப்பறி செய்து பெரும்பொருள் ஈட்டியதாகவும், பின்னர் வைணவப் பெண் ஒருத்தியை மணந்துகொள்வதற்காக வைணவராக மாறியதாகவும் கதைகள் வழங்குகின்றன. நாகப்பட்டினத்திலிருந்த பௌத்த விகாரத்திலிருந்து சொக்கத்தங்கத்தினால் ஆன பௌத்த விக்ரகத்தைச் திருடிச்சென்று திருவரங்கம் கோவிலைப் பழுதுபார்த்ததாக ஒரு கதை வழங்குகிறது. திருமங்கையாழ்வாருடைய பதிகங்கள், பக்திச்சுவை நிரம்பிய பாக்களாகும். தன்னுடைய பாடல்களில் சமணத்தையும், பௌத்தத்தையும் வெறுத்துக் கூறியுள்ளார். இவருடைய காலம் திருஞானசம்பந்தருடைய காலம் என்ற கொள்கை பொருத்தமுடையதன்று. வைரமேகன் என்ற இராட்டிரகூட நந்திவர்மனையும் பல்லவமன்னன் இரண்டாம் நந்திவர்மனையும் காஞ்சியில் கண்டதாக திருமங்கையாழ்வார் பாடியுள்ளமையால் இவர் இரண்டாம் நந்திவர்மன் காலத்தவராவர் (710—775 கி. பி.).

திருமங்கை ஆழ்வாருடைய காலத்திற்குப் பிறகு ஒன்பதாம் நூற்றுண்டின் தொடக்கத்தில் ஸ்ரீவில்லிபுத்தூரில் பெரியாழ்வார் தோன்றினர். பாண்டிய மன்னன் ஸ்ரீமார ஸ்ரீவல்லபனுடைய சபையில் சொற்போர் ஒன்றில் வெற்றி பெற்று வைணவத்தை நிலை பெறச் செய்தார். அவருடைய வளர்ப்பு மகளாகிய ஆண்டாளுக்குச் சூடிக் கொடுத்த நாச்சியார் என்ற பெயர் வழங்கியது. ஆண்டாளுடைய திருப்பாவையை மாணிக்க வாசகருடைய திருவெம்பாவைக்கு ஒப்பிடலாம். ஆண்டாளு டைய திருப்பாவையில் கிருஷ்ணவதாரத்தில் நடந்த பல கதைகள் காணப் பெறுகின்றன. சைவ நாயன்மார்களுள் நந்தனருக்கு ஒப்பாக திருபாணாழ்வருடைய வரலாறு காணப் பெறுகிறது. அவர் தீண்டாத வகுப்பைச் சார்ந்தவராயினும், அவருடைய பக்தியின் முதர்ச்சியில் திருவரங்கம் கோயிலுக்குள் உயர்வகுப்பைச் சார்த்த வைணவர்களால் தோட்களில் சுமந்து செல்லப் பெற்றார். தொண்டரடிப்பொடியாழ்வாருடைய வைராக்கியம் தேவதேவி என்ற கணிகையால் முதலில் சிதை வுற்றது. பின்னர் இறைவனே அவருடைய குற்றமின்மையை உணர்ந்து ஆட்கொண்டருளினர்.

கேரள நாட்டில் ஆட்சி செலுத்திய குலசேகரன் என்பாரும் வைணவ ஆழ்வாருள் மிகச் சிறந்தவராவார். இக்குலசேகராழ் வார் தமிழ்நாட்டில் உள்ள பல திருப்பதிகளுக்குச் சென்று திருமாலைத், துதித்து பதிகங்கள் பாடியுள்ளார். தில்லைத் திருச்சித்திர கூடத்தைப் பற்றி அவர் பாடிய பாடல்கள் 'பெருமாள் திருமொழி' என வழங்குகிறது. அதில் இராமாயணத் தின் சாரம் முழுவதும் வெகு சுருக்கமாக கூறப்பெற்றுள்ளது. சீர்காழிக்கருகிலுள்ள திருவாலியைப் பற்றியும் அவர்பாடியுள் ளார். பின்னர் நம்மாழ்வார், மதுரகவி யாழ்வார் என்ற இரு ஆழ்வார்கள் வைணவ சமயத்தைப் பற்றி பிரசாரம் செய்தனர். திருநெல்வேலி ஜில்லாவில் ஆழ்வார்திருநகரியில் பிறந்த நம்மாழ்வாருக்கு மாறன் அல்லது சடகோபன் என்ற பெயர் களும் வழங்கின. தன்னுடைய முப்பத்தைந்தாவது ஆண்டில் உலகபந்தத்தை விட்டு யோகசித்தி பெற்று சிறந்த வைணவ பக்தரானர். நம்மாழ்வருடையப் பாசுரங்களில் உயர்ந்த தத்து வங்களையும், உலகியல் உண்மைகளையும் சமய அனுபவ நிலையையும் நாம் காணலாம்.

சைவ வைணவ பக்தி மார்க்க இயக்கங்கள் தென்னிந்தியா வில் நிலைபெற்றிருந்த பொழுது, இந்நாட்டிற்கு வந்த சீன யாத்திரிகளாகிய யுவான்-சுவாங் இவற்றைப் பற்றி ஒன்றும்

கூறவில்லை. ஆனால், மஹாராஷ்ட்டிர நாட்டில் தங்களுடைய உடம்பு முழுவதும் விபூதி பூசிக் கொண்டு திரிந்த தேவர்களைப் பற்றியும், பௌத்தமும் சமணமும் உன்னத நிலையைத் விட்டுத் தாழ்வுற்றதையும் பற்றிக் கூறியுள்ளார். நாயன்மார்களும், ஆழ்வார்களும் தங்களுடைய தேவார திருவாசக திவ்விய பிரபந்த செய்யுட்களாலும் உள்ளத்தையும் உணர்வையும் உருக்கத்தக்க தெய்வீகக் கொள்கைகளாலும் பொது மக்களுடைய கவனத்தையும் ஈர்த்து, கடவுட் கொள்கைகள் அற்ற சமணத்தையும், பௌத்தத்தையும் விட்டு நீங்கி சைவ வைணவ கொள்கைகளைப் பின்பற்றும்படிச் செய்தனர்.

# 29. தத்துவ வரலாறு

## அத்துவிதம்—குமரிலபட்டர், சங்கரர்

நாயன்மார்களும், ஆழ்வார்களும், சைவம், வைணவம் ஆகிய இரண்டு உயர்சமயங்கள் (higher religions) வளர்வதற்கேற்ற பக்திமார்க்கத்தைத் தென்னிந்தியாவில் மக்களிடையே பரவும்படிச் செய்தனர். குமரிலபட்டர், ஆதிசங்கரர் ஆகிய இருவரும் வேதங்களை அடிப்படையாகக்கொண்ட அத்துவித உண்மையை (Adwaita) தென்னிந்தியாவில் வளரும்படிச் செய்தனர். மக்கள் தங்களுடைய இளமையில் சுருதிகளில் கூறப்பெற்றவாறு தங்களுடைய கர்மாக்களை சரியை, கிரியை முதலியவற்றைச் செய்யவேண்டும். முதுமைக் காலத்தில் யோகம்செய்து ஞானத்தை அடையவேண்டும் என்றும் போதித்தனர். குமரிலபட்டர் பௌத்தர்களையும் அவர்களுடைய கொள்கைகளையும் கண்டித்து மீமாம்ஸ விதிப்படி சரியை கிரியைகளைச் செய்யவேண்டும் எனப் போதித்தார்.

கி. பி. 788ஆம் ஆண்டில் வடக்கு திருவிதாங்கூர் பகுதியில் ஆளவாய் ஆற்றின் கரையில் உள்ள காலடி என்னும் திருப்பதியில் நம்பூதிரிப் பிராமணகுலத்தில் ஆதிசங்கரர் அவதாரம் செய்தார். இளமையில் தன் தகப்பனை இழந்து, தன் தாயினுடைய சம்மதத்துடன் சந்நியாசியானார். கௌடபாதர் என்பாருடைய சீடன் கோவிந்தயோகி என்பாருடன் சேர்ந்து பரதகண்டம் முழுவதும் பிரயாணம் செய்து தன்னுடைய அத்துவிதக்கொள்கைகளை நிலைநாட்டித் தன்னுடன் வாது செய்த பலரை வென்று தன் கட்சியை நிலைநாட்டினார். பௌத்த சமய சங்கத்தைப்போல ஓர் அமைப்பை உண்டாக்கி பத்ரிநாதம், துவாரகை, ஜெகந்நாதபுரி, சிருங்கேரி, காஞ்சி முதலிய இடங்களில் அத்துவித மடங்களை அமைத்து, இந்து சமயத்தின் பெருமையைப் பரப்பினார். பிரம்மம் ஒன்றே என்றும், இவ்வுலகில் நாம் காணும் வேற்றுமைகள் எல்லாம் மாயை என்ற மனோதத்துவத்தினால் உண்டானது என்றும் வாதித்தார். பிரம்மம் ஒன்றேயென்றும் இவ்வுலகம் மாயையினால் தோன்றியது என்றும் உபநிடதங்களில் கூறப்பெற்றவைகளைப் பின்பற்றியே தன்னுடைய அத்துவிதக் கொள்கையை

நிலைநாட்டினார். சங்கரருடைய அத்துவிதக் கொள்கைகளினால் பௌத்த சமயங்களின் பிரிவுகளாகிய ஹீனயானம், மகாயானம் இரண்டும் இந்தியநாட்டை விட்டு மறைந்து ஒழிந்தன. கி. பி. 820ல் சங்கரர் மறைந்த பிறகு அவருடைய சீடர்களில் ஒருவராகிய சிவசோழர் என்பார் காம்போஜ நாட்டிற்குச் சென்ற அத்துவிதக் கொள்கைகளைப் பரவச் செய்தாக நாம் அறிகிறோம்.

## விசிஷ்டாத்துவிதம்—இராமானுஜர்

தென்னிந்தியாவில் நிலைபெற்றுள்ள வடகலைத் தென்கலை வைணவ சமயங்களும், விசிஷ்டாத்துவிதமும் பன்னிரண்டாம் நூற்றாண்டில் வசித்த இராமானுஜரால் போதிக்கப்பெற்றன வாகும். கி. பி. 1016—17ஆம் ஆண்டில் ஸ்ரீபெரும்பூதூரில் இராமானுஜர் பிறந்தார். காஞ்சிபுரத்தில் யாதவப் பிரகாசரிடத்தில் சங்கரருடைய அத்துவிதக்கொள்கைகளைப் பயின்றார். ஆனால் தன்னுடைய குருவினுடைய கொள்கைகளை ஒப்புக் கொள்ளவில்லை. திருவரங்கத்தில் வைணவர்களுக்குத் தலைமை வகித்த யமூனாச்சாரியாருடைய அழைப்பின்பேரில் அங்கு சென்று, யமூனாச்சாரியாருக்குப் பிறகு வைணவ சமயத்தின் தலைவரானார். திருவரங்கத்திலுள்ள அரங்கநாதர் கோவிலும், வைணவ மடமும் இராமானுஜருடைய தலைமையை ஏற்றுக்கொண்டன. அங்கு ஸ்ரீபாஷ்யம், கீதா பாஷ்யம் என்ற நூல்களை எழுதி முறையே பிரம்மசூத்திரங் களுக்கும், பகவத்கீதைக்கும் புது உரைகளை ஏற்படுத்தினார். சங்கரருடைய மாயாவாதக் கொள்கைகளைக் கண்டித்துத் தன்னுடைய விசிஷ்டாத்துவிதக் கொள்கைகளை நிலை நாட்டினார்.

இராமானுஜருடைய விசிஷ்டாத்துவிதத்தில் (1) ஈஸ்வரன், (2) ஆன்மா (சித்து), (3) அசித் (உலகம்) என்ற மூன்றின் தத்துவங்களைப் பற்றிப் போதித்தார். மகாவிஷ்ணு எல்லாம் வல்ல இறைவனாகிய ஈஸ்வரன் என்றும், தனித்தனி உயிர்கள் சித்து என்றும், கட்புலனாகும் உலகம் அசித்து என்றும் பிரித்து உணரவேண்டும் என, தன்னுடைய விசிஷ்டாத்துவிதக் கொள்கைகளைப் போதித்தார். உலகத்தில் நாம் காணும் உயிர்களும் பொருள்களும் ஈஸ்வரனிடத்தில் இருந்து தோன்றியவை. உயிர்கள் ஈஸ்வரனிடமிருந்து வேறுபட்டவை. சித்து அசித்தோடு ஈசன் என்ற மூவகை வேறுபாடுகளுடன் உலகம் நிலைபெற்றுள்ளது. இக்கொள்கைகள் விசிஷ்டாத் துவிதம் எனப் பெயர்பெற்றன. ஆன்மாக்கள் கட்புலனாகும்

உருவமுள்ள ஈஸ்வரனை வணங்கி அவருடைய உலகத்தில் வாழ வேண்டும் என்றும் கூறினர். ஈஸ்வரனுகிய விஷ்ணுவின் முன்னிலையில் சாதி வேற்றுமைக்கு இடமில்லையென்றும் பக்தியுள்ளவர்கள் சூத்திரர்களாயினும் சரி, தீண்டாதவர்களாயினும் சரி மகாவிஷ்ணுவால் ஏற்றுக் கொள்ளப்படுவர் என்னும் கொள்கையை மேற்கொண்டார். விசேட நாட்களில் தீண்டாதவர்களும் கோவிலுக்குச் செல்ல அனுமதியளிக்கவும் விரும்பினுர். இந்திய நாடு முழுவதும் பிரயாணம் செய்து தன்னுடைய விஷிஷ்டாத்துவிதக் கொள்கைகளைப் பரவச் செய்ததினுல் வட இந்தியாவிலும் வைணவ சமயம் பரவலாயிற்று.

இராமானுஜர் திருவரங்கத்தில் இருந்த பொழுது சோழப் பேரரசனுகிய இரண்டாம் குலோத்துங்கன் அவரைத் துன்புறுத்தியதால், திருவரங்கத்தை விட்டகன்று மைசூருக்குச் செல்ல வேண்டி வந்தது. அங்கே மேல்கோட்டை என்ற திருநாராயணபுரத்தில் தங்கியிருந்து ஹொய்சள வமிசத்து அரசன் பிட்டிதேவனைச் சமண சமயத்திலிருந்து வைணவ சமயத்திற்கு மாற்றி விஷ்ணுவர்த்தனன் என்ற பெயரையும் கொடுத்து அங்கு ஒரு வைணவ மடலாயத்தையும் தோற்றுவித்தார். கி. பி. 1122ல் திருவரங்கத்திற்குத் திரும்பி 1337ஆம் ஆண்டு வரையில் உயிருடன் இருந்தார். வைணவக் கோவில்களில் இராமானுஜருடைய உருவச் சிலையும் வைத்து வணங்கப் பெறுகிறது.

### நிம்பாரகர்

இராமானுஜருடைய வாழ்க்கையின் பிற்பகுதியில் வாழ்ந்து சரணுகதி என்ற வைணவக் கொள்கையைப் போதித்தவர் நிம்பாரகர் என்பவராவர். பல்லாரி மாவட்டத்திலுள்ள நிம்பபுரம் என்னுமடத்தில் பிறந்து, வடஇந்தியாவில் பிருந்தாவனம் என்னுமிடத்தில் தன்னுடைய வாழ்நாளின் பெரும் பகுதியைக் கழித்தார். இராதையையும்-கிருஷ்ணனையும் சேர்ந்து வணங்க வேண்டுமென்றும், ஈசன், சித்து, அசித்து, ஆகிய மூன்றும் பேதப்பட்டும், பேதமின்றியும் விளங்குகின்றன என்றும் போதித்தார். வேதாந்த சூத்திரங்கள், சித்தாந்த ரத்தினம் என்ற நூல்களை இயற்றியுள்ளார்.

### துவைதம்—மத்வர்

பதின்மூன்ரும் நூற்ருண்டின் தொடக்கத்தில் தென் கன்னடத்தில் உடுப்பித் தாலுக்காவில் உள்ள கலியாணபுரம் என்னுமிடத்தில் பிறந்தவர் மத்வாச்சாரியர், சிறுவயதிலேயே சந்நியாசம்

பெற்று, இராமானுஜரைப் போல் சங்கராச்சாரியருடைய அத்துவிதக் கொள்கைகளை நன்கு பயின்றார். பின்னர் அக் கொள்கையை மறுத்து பாகவத புராணத்தை அடிப்படையாகக் கொண்டு தன்னுடைய துவைதக் கொள்கையை நிலைநாட்ட முற்பட்டார். மத்வாச்சாரியர் மிகுந்த உடற்கட்டும் வன்மை யும் வாய்ந்தவர் எனக் கூறப்பெற்றுள்ளது. சிருங்கேரி சங்கராச்சாரிய மடத்தைச் சேர்ந்த ஆசாரியர் ஒருவரிடம் இவர் சொற்போர் நடத்தி அதில் தோல்வியடைந்து மிக அல்லல் உற்றார். வடஇந்தியாவில் பல பகுதிகளில் பிரயாணம் செய்து பல விதமான அனுபவங்களைப் பெற்றார். ஹரித்துவாரத்தில் சிலநாள் தங்கியிருந்து ஹிமயமலைச் சாரலில் தவம் செய்து வியாசர் முனிவரிடமிருந்து பல உண்மைகளை அறிந்து வேதாந்த சூத்திரங்களுக்குத் தெளிவுரை ஒன்றை எழுதினார்.

பின்னர் உடுப்பி என்னும் திருப்பதிக்குத் திரும்பி கிருஷ்ண பகவானுக்கு ஒரு கோவில் அமைத்துத் தன்னுடைய துவைதக் கொள்கைள் மக்களிடையே பரவும்படிச் செய்தார். வாயு பகவானுடைய அவதாரமாகக் கருதப் பெற்ற மத்வர் பல நூல் களை எழுதியுள்ளார். இராமானுஜருடைய சகுணப் பிரமத்தை ஒப்புக் கொண்டு கடவுள் சிவ-சக்திவடிவமாக மகாவிஷ்ணு-இலக்குமி என்ற இரண்டு உருவங்களாக உள்ளார் என்றும், ஈஸ்வரன் வேறு, உயிர்கள் வேறு என்றும், உயிர்கள் பக்தி மார்க்கத்தில் ஈடுபட்டு முக்தியடையலாம் என்றும் தன் னுடைய துவைதக் கொள்கைகளில் போதித்துள்ளார். சுமார் எண்பது ஆண்டுகளுக்கு மேல் சமயப்பிரசாரம் செய்து மாயாவாதக் கொள்கையாகிய அத்துவிதத்தை மறுத்து தன் னுடைய தொண்ணூற்று ஆறுவது வயதில் இவ்வுலக வாழ்வை நீத்தார்.

## வடகலை—தென்கலை பிரிவுகள்

இராமானுஜரால் போதிக்கப்பெற்ற விசிஷ்டாத்துவித வைணவக் கொள்கைகளில் வடகலை வைணவம், தென்கலை வைணவம் என்ற இருபிரிவுகள் தோன்றலாயின. இடம், மொழி, கொள்கை முதலிய காரணங்களினால் இந்த வேற்றுமை உண்டாயிற்று. வடகலை வைணவக் கொள்கைகளுக்கு அடிகோலியவர் வேதாந்த தேசிகர் என்றும், தென்கலை பிரிவிற்குக் காரணமாக இருந்தவர் மணவாள மகாமுனிகள் என்றும் வரலாற்றாசிரியர்கள் கூறுவர்.

வேங்கடநாதர் என்ற வேதாந்த தேசிகர் காஞ்சிபுரத்திற்கு அருகில் உள்ள துப்பில் என்ற கிராமத்தில் அனந்தசூரி சோம

யாஜி தோத்தாரம்மா என்ற இருவருக்கும் 1269ஆம் ஆண்டில் மகனாகப் பிறந்தார். திருப்பதி வெங்கடேசப் பெருமாளின் அருளால் பிறந்தமையால் அவருக்கு வேங்கடநாதர் என்ற பெயர் வைக்கப்பட்டது. காஞ்சிபுரத்தில் வாழ்ந்த ஆத்திரேய ராமானுஜர் என்பாரிடம் கல்வி பயின்று, வேதங்கள் வியாகர்ணம், தர்க்கம், மீமாம்சம், இதிகாசங்கள், புராணங்கள் முதலிய கலைகளில் தேர்ச்சியுற்றார். தென்கலையாகிய நாலாயிரப் பிரபந்தங்களையும் நன்கு கற்றுணர்ந்தார். ஆத்திரேய ராமானுஜருக்குப் பிறகு வேதாந்த தேசிகர் தன்னுடைய குருவின் பதவியில் அமர்ந்தார். திருவகீந்திரபுரத்தில் பதினைந்து ஆண்டுகள் தங்கியிருந்து ஹயக்கீரீவஸ்தோத்திரம், அச்சுத சதகம், ரகுவீரகத்யம் என்ற நூல்களை இயற்றிப் புகழடைந்தார். பின்னர் காஞ்சிபுரத்திற்குச் சென்று விசிஷ்டாத்துவிதக் கொள்கைகளை மக்களிடையே பரப்பி வந்தார். மாலிக்கபூர் திருவரங்கத்தின் மீது படையெடுத்து அரங்கநாதர் கோவிலைக் கொள்ளையடித்த பிறகு திருவரங்கக் கோவிலை மீண்டும் நன்னிலையில் கொண்டுவருவதற்கு திருவரங்கத்திலுள்ள வைணவர்கள் வேதாந்ததேசிகரைக் காஞ்சியிலிருந்து வர வழைத்தனர். திருவரங்கத்தில், தாத்பரிய சந்திரிகை, நியாய சித்தாஞ்சனம், அதிகரண சூருவளி, தத்துவமுக்த கல்பம் என்ற நூல்களை இயற்றியதாக நாம் அறிகிறோம். திருமாலின் பத்து அவதாரங்களைப் பற்றியும், இராமானுஜருடைய பெருமையைப் பற்றியும் நூல்கள் இயற்றியுள்ளார். மொத்தமாக வடமொழியில் தொண்ணூற்று ஐந்து நூல்களும் தமிழில் இருபத்தைந்து நூல்களும் இயற்றியதாகத் தெரிகிறது. வேதாந்த தேசிகரும் அவருடைய சீடர்களும் வடகலை சித்தாந்தத்திற்கு அடிகோலினர்.

திருவரங்கத்தில் வேதாந்த தேசிகர் காலத்தில் பிள்ளை லோகாச்சாரியாரை, அவருடைய தம்பி அழகிய மணவாள நயினாரையும் தலைமையாகக் கொண்ட வைணவப் பிரிவு ஒன்று இருந்தது. பதினைந்தாம் நூற்றாண்டில் மணவாள மகாமுனிகள் என்பார் இப்பிரிவிற்குத் தலைவரானார். இவர் திருநெல்வேலி மாவட்டத்தில் ஆழ்வார் திருநகரியில் 1370ஆம் ஆண்டில் பிறந்தவர். திருமலை ஆழ்வார் மண்டபம் என்ற மண்டபத்தை அமைத்து அதில் தென்கலை வைணவச் சித்தாந்தங்களைப் போதித்து வந்தார். நாளடைவில் வேதாந்த தேசிகர் ஏற்படுத்திய பிரிவும், மணவாளமகாமுனிகளால் அமைக்கப் பெற்ற பிரிவும், வைணவ சமயத்தில் வடகலை தென்கலை என்ற கொள்கைப் பிரிவுகள் ஏற்படுவதற்கு காரணமாயின.

## 1. மொழி வேற்றுமைகள்

இராமனுஜர் உயிரோடிருந்த வரையில் வைணவ சமயத்தினர் வடமொழி, தமிழ் ஆகிய இருமொழிகளிலும் இருந்த வைணவ நூல்களை வேற்றுமை பாராட்டாது போற்றி வந்தனர். ஆனல் வரதாச்சாரியார் (1200—1275) என்ற தலைவர் காலத்தில் திருவரங்கக் கோவிலில் வழிப்பாடுகள் வடமொழி நூல்களாகிய வேதங்கள், உபநிஷத்துக்கள் முதலியவற்றில் கூறியபடிதான் நடைபெற வேண்டுமென நினைத்தனர். இவர்களுக்கு எதிராக நம்பிள்ளை (1207—1302) என்பார் நாலாயிரத் திவ்யபிரபந்தங்கள் வேதம், உபநிஷத்துக்களின் சாரமே ஆதலால் அவை எழுதப்பெற்ற தமிழ்மொழியில் வழிபாடு நடைபெறுவது சிறந்ததெனக் கருதினர்.

(2) வடமொழிக்கட்சியைச் சேர்ந்தவராகிய வரதாச்சாரியார் திருவரங்கத்தை விட்டு நீங்கி, காஞ்சிபுரத்திற்குச் சென்று வடகலை சித்தாந்தத்தைப் போதித்து வந்தார். நம்பிள்ளை என்பார் திருவரங்கத்திலேயே தங்கி தென்கலைச் சித்தாந்தத்தைப் போதித்து வந்தார். ஆகையால் காஞ்சிபுரம் வடகலையாரின் தலைமையிடமாயும் திருவரங்கம் தென்கலையாரின் இருப்பிடமாகவும் விளங்கலாயின.

(3) இவ்விரு பிரிவினர்களுடைய கொள்கைகளும் சரணகதி என்ற தத்துவத்தில் மாறுபாடு அடைந்தன. வடகலையார் மேற்கொண்ட சரணகதி என்னும் தத்துவம் மர்க்கட நியாயம் எனப் பெயர் பெற்றது. அதாவது மர்க்கடம் என்ற குரங்குக்குட்டி தன் தாய்க்குரங்கை எவ்வாறு அணைத்துக் கொண்டிருக்கிறதோ அதைப்போன்று ஜீவாத்மாக்கள் மகா விஷ்ணுவின் கருணையை விடாப்பிடியாகப் பிடித்துக்கொண்டதால்தான் உலகபந்தங்களினின்றும் விடுபட முடியும் எனக் கருதினர். தென்கலையாருடைய சரணகதி மார்ச்சால நியாயம் எனப் பெயர்பெற்றது. இதன்படி ஒரு ஜீவாத்மா ஈசனுடைய அருளினல்தான் இவ்வுலகில் தோன்றுகிறது. அவருடைய கருணையினல்தான் உயிரோடு இருக்கிறது. அவனன்றி ஓரணுவும் அசையாது. என் செயலால் ஆவது இனியொன்றுமில்லையென்னும் கொள்கைப்படி எல்லாம் ஈசன் செயல் என்று இருக்க வேண்டும். அவ்விதம் இருந்தால், தாய்ப்பூனை தன்னுடைய குட்டிகளைத் தானே தூக்கிச்சென்று காப்பாற்றுவதுபோல இறைவன் நம்மைக் காப்பாற்றுவான் என்பதே மார்ச்சால நியாயம் ஆகும்.

(4) வடகலை வைணவர்கள் சாதி வேறுபாடு பிறப்பினால் ஏற்பட்டது என்றும், சாதி வேற்றுமையும், உயர்ந்த சாதியும், தாழ்ந்த சாதியும் என்றும் நிலைபெற்றிருக்க வேண்டும் என்றும் கருதினர். ஆனால் தென்கலையார், வைணவ சமயத்தைச் சார்ந்தவர்கள் எந்த சாதியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் இறைவன் முன்னிலையில் சமமானவர்கள். சாதிகளினால் ஏற்பட்ட உயர்வு தாழ்வுகளை அதிகப்படுத்தக்கூடாது என நம்பினர். பிராமணர் அல்லாதார்களும், பெண்களும் அஷ்டாட்சர மந்திரமாகிய 'நாராயணாய நம' என்னும் மந்திரத்தை உச்சரிக்கலாம் எனவும் கூறினர்.

(5) வைணவர்கள் தங்களுடைய நெற்றியில் இறைவனுடைய திருவடியையொத்த நாமத்தை அணிவது வழக்கம். இதில் வடகலையார் பாதம் வைக்காத நாமத்தையும், தென்கலையார் பாதம் வைத்த நாமத்தையும் அணிந்துகொண்டனர். வடகலையார் இறைவனுக்கு வழிபாடுகள் நடத்தும்பொழுது மணியடிப்பது உண்டு. ஆனால் தென்கலையார் அவ்விதம் செய்வது தவறாகும் எனக் கருதுகின்றனர்.

வடகலை தென்கலை என்ற இருபிரிவுகளும் இப்பொழுது தென்னிந்தியாவில் வழக்கத்தில் உள்ளன.

## சைவ சித்தாந்தக் கொள்கையின் வரலாறு

தென்னிந்தியச் சமயங்களின் வரலாற்றுப் பகுதியில் சைவ சமயத்தைப் பரவும்படிச் செய்த சைவநாயன்மார்களுடைய வரலாற்றைப்பற்றி நாம் முற்பகுதியில் கண்டோம். தேவார முதல் மூன்று நாயன்மார்களுடைய தேவாரங்களும், திருவாசகம், திருக்கோவையார் முதலிய சைவநூல்கள் பதினோரும் நூற்றாண்டில் பல திருமுறைகளாக வகுக்கப்பெற்றன. பதினொன்று, பனிரெண்டாம் நூற்றாண்டுகளில் சைவசமயத்தில் சிறப்புற்று விளங்கிய பெரியோர்கள், நம்பியாண்டார் நம்பி, கரூர்த்தேவர், சேக்கிழார் முதலிய சைவர்களாவர். சிதம்பரத்திற்கு அருகில் உள்ள திருநாரையூரில் பிறந்த நம்பியாண்டார் நம்பி என்பார் முதல் ராஜராஜ சோழனுடைய ஆட்சிக்காலத்தில் தேவாரங்களையும் மற்ற சைவசமயச் சார்புள்ள நூல்களையும் பன்னிரு திருமுறைகளாக வகுத்துள்ளார். இப்பொழுது அவை பன்னிரு திருமுறைகளாக கணக்கில் உள்ளன. ஆனால், நம்பியாண்டார் நம்பியினுடைய காலத்திற்குப் பின் வாழ்ந்த ஆசிரியர்களுடைய செய்யுட்களும் அவற்றில் காணப்பெறுகின்றமையால் நாளடைவில் இத்திருமுறைகளின் எண்ணிக்கை

வளர்ந்தோங்கியது எனக் கருதலாம். நம்பியாண்டார் நம்பி முதலில் தொகுத்ததை பின்வந்தவர்கள் அதிகப்படுத்தியுள்ளதாகத் தெரிகிறது. பன்னிரு திருமுறைகளை கீழ்க்கண்டவாறு முறைப்படுத்தலாம்.

### திருமுறைகள்

(1) ஞானசம்பந்தருடைய தேவாரங்கள்
முதல் மூன்று 1—3

(2) திருநாவுக்கரசருடைய தேவாரங்கள்
நான்கு முதல் ஆறு வரை 4—9

(3) சுந்தரமூர்த்தியின் தேவாரங்கள்
ஏழாம் திருமுறை —7

(4) மணிவாசகரின் திருவாசகமும்
திருக்கோவையரும் எட்டாவது திருமுறை —8

(5) ஒன்பது ஆசிரியர்களுடைய திருவிசைப்பா
திருப்பல்லாண்டு முதலியன
ஒன்பதாவது —9

(6) திருமூலருடயை திருமந்திரம்
பத்தாவது —10

(7) மற்றும் 12 ஆசிரியர்களுடைய சைவநூல்கள்
பதினோரும் —11

(8) சேக்கிழாருடைய பெரியபுராணம்
பன்னிரண்டாவது —12

மேற்கூறப்பெற்றவாறு சைவசமய நூல்கள் பன்னிரு திருமுறைகளாக வகுக்கப்பெற்ற பின்னர் சைவசித்தாந்தம் என தத்துவக்கொள்கைகள் தமிழ்நாட்டில் பரவலாயின. இந்த சைவசித்தாந்தம் என்னும் தத்துவம் தோன்றி வளர்வதில் பெண்ணுடத்தில்உதித்த மெய்கண்டாரும், அருள்நந்தி சிவாச்சாரியாரும், தில்லை வாழ்ந்தணராகிய உமாபதி சிவாச்சாரியரும், திருவதிகை மனவாசகம் கடந்தாரும் ஆகிய பெரியோர்கள் முக்கிய பங்கு கொண்டனர். இந்த நால்வரும் சைவசமயத்துச் சந்தான ஆசிரியர்கள் என கொண்டாடப் பெறுகின்றனர்.

### 1. மெய்கண்டார்

பெண்ணுடத்தில் அச்சுத களப்பாளர் என்பவருக்குத் திருவெண்காட்டு இறைவனுடைய அருளால் பிறந்தவர் மெய்

கண்டார். இவருக்கு தொடக்கத்தில் சுவேதவனப் பெருமாள் என்ற பெயர் வழங்கியது. பின்னர் கைலைவாசியாகிய பரஞ்சோதி முனிவரிடம் சைவசித்தாந்தக் கொள்கைகளைக் கற்றுணர்ந்து மெய்கண்டார் என்றும் அழைக்கப்பெற்ருர். இவர் இயற்றிய சிவஞானபோதம் என்னும் நூல் சைவசித்தாந்தக் கொள்கைகளின் முதல் தமிழ்நூல் எனக் கொள்ளலாம். வடமொழியிலுள்ள ரௌரவ ஆகமத்தைப் பின்பற்றி சிவஞானபோதத்தை மெய்கண்டார் இயற்றியதாகவும் சிலர் கருதுவர். மெய்கண்டாருடைய சிவஞான போதத்தில் பன்னிரண்டு சூத்திரங்களில் அடங்கியுள்ளன. அவற்றிற்கு விளக்க உரையாக 81 உரையிடையிட்ட செய்யுட்களும் உள்ளன. திருவண்ணுமலை கோவிலில் காணப்பெறும் ஒரு கல்வெட்டின்படி இவ்வாசிரியர் மூன்ரும் ராஜ ராஜ சோழனுடைய ஆட்சியில் கி. பி. 1232ஆம் ஆண்டில் இருந்தவராகக் கருதப்பெறுகிருர்.[1]

## 2. அருள்நந்தி சிவாச்சாரியர்

தொடக்கத்தில் இவருக்கு சகலாகம பண்டிதர் என்னும் பெயர் வழங்கியது. இவர், விழுப்புரத்திற்கு அருகில் உள்ள திருத்துறையூர் என்னும் ஊரில் வாழ்ந்தவர். மெய்கண்டாரிடம் சைவ சித்தாந்த உண்மைகளைக் கற்றுணர்ந்து சிவஞானசித்தியர், இருபா இருபது என்னும் சைவ சித்தாந்த நூல்களை இயற்றியுள்ளார்.

3. திருவதிகை மனவாசகம் கடந்தார் பஎன்பாரும் மெய்கண்டாருடைய மாணவர்களில் ஒருவராவர். ஆனுல், சைவ, சமய சந்தான ஆசாரியரில் ஒருவராக கருதப் பெறவில்லை. இவரால் இயற்றப் பெற்ற உண்மை விளக்கம் என்னும் நூல் வெண்பாக்களில் எழுதப் பெற்று ஒரு குருவிற்கும் அவருடைய மாணவருக்கும் நடந்த சம்பாஷணை போல இருபத்தாறு தத்துவங்களையும் ஆணவம், கர்மம், என்ற இரண்டு மலங்களையும் விளக்குகிறது.

4. தில்லை வாழ்ந்தணர்களில் ஒருவராகிய உமாபதி சிவசாரியருக்குக் கொற்றவன் குடியர் என்ற பெயரும் வழங்கியது. மறைஞானசம்பந்தர் என்னும் பெரியாரிடம் சைவ சித்தாந்த நூல்களைக் கற்று அவருடன் நெருங்கிப் பழகினுர். தில்லைவாழ்ந்தணரல்லாத மறைஞான சம்பந்தருடன் கூடியிருந்ததால் மற்ற தீட்சிதர்கள் இவரைத் தில்லைக்கோவிலுக்குள் வரக்கூடாது என்று ஒதுக்கிவிட்டனர். ஆகையால் இவர் கொற்றவன்

[1] T. V S. Pandarattar, History of Tamil Literature, p 28.

கொடி என்னுமிடத்தில் தனித்திருந்து பல சைவசித்தாந்த நூல்களை இயற்றி பெருமைடைந்தார். இவரால் இயற்றப்பெற்ற சித்தாந்த நூல்கள் (1) சிவப்பிரகாசம்; (2) திருவருட்பயன்; (3) வினாவெண்பா; (4) போற்றிப் பஃறொடை; (5) கொடிக்கவி; (6) நெஞ்சுவிடு தூது; (7) உண்மைநெறி விளக்கம்; (8) சங்கற்ப நிராகர்ணம் என்பவையாகும்.

## சைவசித்தாந்தக் கொள்கைகள்

சைவசித்தாந்தத்தின் உட்பொருளை ஒரு தமிழ்வெண்பா வெகு தெளிவாகக் கூறுகிறது.

'வேதம்பசு அதன்பால் மெய்யாகமம் நால்வர்
ஓதும் தமிழ் அதனின் உள்ளுறு நெய் — போதமிகு
நெய்யின் உறுசிவையாம் நீள்வெண்ணெய் மெய்கண்டான்
செய்த தமிழின் திறம்.'

சைவசித்தாந்தம் பகுத்தறிவு என்னும் அடிப்படையின் மேல் கட்டப்பெற்ற கோவிலாகும்.

சைவசித்தாந்தத்தின் அடிப்படையான நூல்கள் பகுத்தறிவின் துணைகொண்டு ஆராயப்பெற்று அதன் பயனாக இந்த சித்தாந்தம் வடித்து எடுக்கப்பெற்றுள்ளது. உமாபதி சிவாச்சாரியார் எழுதிய சிவப்பிரகாசம் என்னும் நூலில் இப்பகுத்தறிவு என்ன என்பது நன்கு விளக்கப்பெற்றுளது. 'காலத்தினால் முற்பட்ட நூல்கள் எல்லாம் உயர்ந்தவை என்று சொல்ல முடியாது. புதிதாகத் தோன்றியவை எல்லாம் பயனற்றவை என்று கூறிவிடமுடியாது. புழுதியினால் மாசு படிந்துள்ள மாணிக்கக்கல்லை அறிஞர்கள் தள்ளிவிட மாட்டார்கள்' எனக் கூறியுள்ளார். மூன்றாவதாக சைவசித்தாந்தக் கொள்கைகள் தர்க்க நூலின் முறைப்படி உண்மையை உணர்வதற்கு முற்படுகின்றன. நான்காவதாக சைவசித்தாந்தம் சிவனே முழுமுதற் கடவுள் என ஒப்புக்கொள்ளுகிறது.

சைவசித்தாந்தத்தில் பதி, பசு, பாசம், என்ற முப்பொருள்களின் உண்மை ஆராய்ந்து தெளிவுசெய்யப் பெறுகின்றது. பதி என்ற இறைவனின் தன்மை, பசு என்ற ஆன்மாவின் தன்மை, பாசம் என்ற மாயையின் தன்மை ஆகிய மூன்றும் எவையென நன்கு விளக்கப்பெறுகின்றன.

(1) இவ்வுலகத்தில் நாம் காணும் பொருட்கள் அவன், அவள், அது என்னும் மூன்றுவகையாக தோற்றமளிக்கின்றன. அவைகள் தோன்றி, வளர்ந்து, மறை கின்றன. ஆகையால்

இவற்றை ஆக்கிக் காத்து, அழிக்கின்ற இறைவன் ஒருவன் இருக்கவேண்டும். இவ்விறைவனே பதி அல்லது கடவுள். பதி ரூபியுமல்லர், அரூபியும் அல்லர். மலமாகிய குற்றங்கள் பதியைச் சென்றடைவதில்லை சிறியதில் சிறியதாய், பெரியதில் பெரியதாய் பதி விளங்குகிறது. பதிக்கு சிவம் என்ற பெயரும் உண்டு. இந்த பதிக்கு இச்சா சக்தி, கிரியா சக்தி, ஞானசக்தி என்ற மூவகை ஆற்றல்கள் உண்டு. படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்ற ஐவகைத்தொழில்களை பதி அல்லது சிவம் இயற்றிவருகிறது.

(2) பசு என்னும் சொல் ஆன்மாக்களைக் குறிக்கிறது. பாசம் என்னும் அஞ்ஞானம் ஆன்மாவைக் கட்டுப்படுத்தி இருப்பதால் அதற்குப் பசு என்ற பெயர் வழங்குகிறது. ஆன்மாவிற்கு உருவம் இல்லை. எந்த உடலோடு கூடியுள்ளதோ அதன் தன்மையை ஆன்மா அடைகிறது. ஆன்மா தனித்தியங்கும் சக்தியுடையதன்று. பதியோடு அல்லது பாசமாகிய உலகத்தோடு சேர்ந்து இயங்கும் தன்மையுடையது ஆன்மா. ஆன்மாக்கள், விஞ்ஞான கலர், பிரளாய கலர், சகலர் என மூவகையாகப் பிரிக்கப்படுகின்றன. ஆணவமலம் ஒன்று மாத்திரம் உடைய ஆன்மாக்கள் விஞ்ஞான கலர் என்றும், ஆணவமும் கர்மமும் உடைய ஆன்மாக்கள் பிரளாய கலர் என்றும், ஆணவம், கன்மம், மாயை என்ற மூன்று மலங்களுமுடைய ஆன்மாக்கள் சகலர் என்றும் சைவசித்தாந்தத்தில் பிரிக்கப்பெற்றுள்ளன.

(3) பாசம்

ஆன்மாக்கள் இறைவனைக் காணவொண்ணாது மறைத்து நிற்கும் மும்மலங்களாகிய ஆணவம், கர்மம், மாயை என்ற மூன்றும் பாசங்கள் எனப் பெயர்பெறுகின்றன. ஆணவமலம், செம்பில் களிம்பு போலவும், அரிசியில் தவிடு போலவும், அணுவாகிய ஆன்மாவோடு என்றும் சேர்ந்திருப்பதால் அதற்கு ஆணவம் என்ற பெயர் வழங்குகிறது. மாயை என்னும் இருள் ஆன்மாக்கள் உலகத்திலுள்ள பொருள்களை உள்ளவாறு உணராமல் தடுக்கிறது. மாயையிலிருந்து விடுபட்ட ஆன்மா இறைவனை உணர்ந்து இன்பம் அடைகிறது, கர்மத்தை பிராரப்தம், ஆகம்மியம், சஞ்சிதம் என மூவகையாக அறிஞர்கள் பிரித்துள்ளனர். முற்பிறவிகளின் சேஷமாக உள்ள கர்மங்களுக்கு பிராரப்தம் என்றும், இப்பிறவியில் ஆன்மாவிற்குச் சேர்ந்த கர்மங்கள் ஆகம்மியம் என்றும், இனி வரும் பிறவிகளில் அனுபவிக்கும் கர்மங்கள் சஞ்சிதம் என்றும் கூறப்பெறுகின்றன.

## பதியும் பசுவும்

எழுத்திற்கெல்லாம் அகரம் முதலாவது போல் ஆன்மாக்கள் பதியாகிய இறைவனையே நம்பியிருக்கின்றன. விரகில் தீ போலவும், பாலில் நெய்போலவும், பழத்தில் சுவை போலவும், எள்ளிற்குள் எண்ணெய் போலவும் பதியும் பசுவும் கலந்து நிற்கின்றன. பதியாகிய இறைவனுடைய அருளினால் ஆன்மாக்கள் மும்மலங்களின்றும் விடுபட்டு, சாலோக, சாரூப, சாமீப, சாயுச்சமாகிய நான்கு பதவிகளையடைய உதவி செய்வது சைவசித்தாந்தத்தின் முக்கிய கொள்கையாகும்.

## வீர சைவம்

கர்நாடகப் பகுதியிலும், தெலுங்கு நாட்டிலும் வீரசைவம் என்ற சைவ சமயம் வளர்ச்சியுற்றது. காலச்சூரி குலத்தைச் சேர்ந்த பிச்சலர் என்பாருக்குக் கலியாணபுரத்தில் அமைச்சராக இருந்த பசவர் அல்லது பசவணர் என்பார் வீரசைவ சமயத்தைத் தோற்றுவித்தார். வீரசைவர்களுக்கு லிங்காயத்துச் சமயத்தவர் என்ற பெயரும் வழங்குகிறது. இந்த சமயம் சிவபெருமானுடைய ஐந்து முகங்களிலிருந்தும் தோன்றிய ஏகரோமர், பண்டிதராத்தியர், ரேவணர், மாருளர், விஸ்வராத்தியர் என்ற ஐந்து யோகிகளால் போதிக்கப்பட்டதென்றும் கூறப்படுகிறது. வீரசைவத்தில் உள்ள மடாலய அமைப்புக்களும் வீரசைவர்களுக்குள் நிலவும் சமத்துவம், சகோதரத்துவம் முதலிய அமைப்புக்களும் சமணர்களிடமிருந்து கடன்வாங்கியதாகக் கருதப்படுகின்றன. லிங்காயத்து சமயத்தைச் சார்ந்தவர். வெள்ளியினாலோ அல்லது மரத்தினாலோ செய்யப்பெற்ற பெட்டிக்குள் சிவலிங்கத்தை வைத்து தங்களுடைய கழுத்திலிருந்து மார்புவரையில் தொங்கவிட்டுக் கொள்வர். சிவலிங்கத்திற்கு நாள்தோறும் பூசை செய்த பின்னர்தான் உணவு உட்கொள்வர். பெரியபுராணத்தில் கூறப்பெற்றுள்ள நாயன்மார்களையும் தங்களுடைய சமயத் தலைவர்களாக வீரசைவர்கள் ஒப்புக்கொள்ளுவர். தெலுங்கு நாட்டில் பரவிய ஆராத்திய சைவத்தை லிங்காயத்து சமயத்துடன் ஒப்பிடலாம். பசவணருடைய சமகாலத்தவராகிய மல்லிகார்ச்சுன பண்டிதர் என்பாருடைய தலைமையில் ஆராத்திய சைவம் பரவியது. ஆனால் லிங்காயத்துக்களைப்போல் வேதங்களையும், பிராமணர்களுடைய தலைமையும், சாதிமுறை அமைப்பையும் இவர்கள் வெறுத்து ஒதுக்கவில்லை. ஆராத்திய சைவத்திற்கும், லிங்காயத்து சமயத்திற்கும் எவ்வித மனவேறுபாடு இருந்ததாகத் தெரியவில்லை.

தென்னிந்தியாவில் இஸ்லாமிய சமயம் பரவாமல் தடுப்பதற்கு இவ்விரு சமயத்தினரும் நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

விஜயநகரப் பேரரசில் சைவம், வைணவம், வீரசைவம் ஆராத்திய சைவம் முதலிய சமயங்கள் ஆதரவு பெற்றன. இச் சமயங்களின் இருப்பிடமாக விளங்கிய கோவில்கள் பெருமள வில் கட்டப்பெற்றன. அக் கோவில்களின் கோபுரங்களும், கலியாண மண்டபங்களும் மிக்க சிற்பத்திறமை வாய்ந்து, விளங்குவதை நாம் இன்றும் காணலாம்.

# 30. தென்னிந்திய கோவில் அமைப்புக்களும் மற்றக் கலைகளும்

## தென்னிந்திய கோவில்களின் வரலாறு

1959 ஆம் ஆண்டில் நாகார்ச்சுன கொண்டா என்னுமிடத்தில் அகழ்வாராய்ச்சியொன்று நடைபெற்றது. அங்கே முற்காலத்தில் செங்கற்களினால் கட்டப்பெற்ற ஆலயங்கள் கண்டு பிடிக்கப்பெற்றன. அந்த ஆலயங்களில் கருவறை, அர்த்த—மகாமண்டபங்கள், பிரகாரம், கோபுரம், கொடிமரம் முதலியவைகள் அமைக்கப் பெற்றிருந்தன. அவற்றுள் ஒரு கோவிலில் சதுரவடிவினதும், வட்டமானதும், எண்கோண வடிவுள்ளதுமான பரிவார ஆலயங்களும் காணப்பெற்றன. இந்திய கோவில் அமைப்புக்களில் நாகரம் திராவிடம், வேசரம் என்ற மூவகையான கட்டிட அமைப்புக்களை வேறுபடுத்தியுள்ளனர். இவற்றுள் விந்தமலைக்கு வடக்கில், வடஇந்தியாவில் வழக்கத்திலிருந்த கோவில் அமைப்புக்களுக்கு நாகரம் என்றும் விந்தி மலைக்கும் கிருஷ்ணா நதிக்கும் இடைப்பட்ட இடங்களில் வழங்கிய முறைக்கு வேசரம் என்றும், கிருஷ்ணா நதிக்குத் தெற்கே இருந்தவைகளுக்கு திராவிடம் என்றும் பெயர்கள் வழக்கத்தில் இருந்தன. ஆனால் நாளடைவில் இந்த மூன்று அமைப்புக்களும் ஒன்றோடொன்று கலந்து இந்திய கோவில் அமைப்பில் காணப்பெற்றன. மேலே கூறப்பெற்ற மூவகை அமைப்புக்களுக்கும் நாகார்ச்சுன கொண்டையில் கண்டு பிடிக்கப்பெற்ற அகழ்வாராய்ச்சில் காணப்பெற்றன.

நாகர்ச்சுன கொண்டையில் காணப்பெற்ற கோவில் அமைப்புகளுக்குப் பிறகு ஐகோலே (Aihole) என்னும் இடத்தைச் சூழ்ந்துள்ள பகுதிகளின் கோவில் அமைப்புகள் கி.பி. ஆறும்நூற்றாண்டில் தோன்றியதாகத் தெரிகிறது. ஐகோலே என்னும் இடத்தைச் சூழ்ந்துள்ள இடங்களில் சுமார் எழுபது கோவிலமைப்புகள் காணப்பெற்றன. இவ்வித அமைப்புகள் வாதாபி, பட்டடைக்கல் என்ற இருஇடங்களிலும் தொடர்ந்து அமைக்கப்பட்டிருந்தன.

ஐகோலேக் கோவில் அமைப்பு ஆறும் நூற்றுண்டில் தோன்றியதெனக் கூறலாம். அங்குள்ள கோவில் ஒன்றில், மூன்று பக்கங்களிலும் சுவர் வைத்து மூடப்பெற்றிருக்கிறது. அதனுடைய இரண்டு சுவர்களில் துவராங்கள் அமைக்கப் பெற்று, நன்கு அலங்கரிக்கப் பெற்ற கற்பலகணிகள் காணப் பெறுகின்றன. சிற்பங்களோடு கூடிய தூண்களின் மீது அமைக்கப் பெற்ற முகமண்டபங்களும் இருக்கின்றன. அர்த்த மண்டபம், மகாமண்டபம், நந்திமண்டபம், கருவறை முதலிய அமைப்புக்களும் அங்கே காணப்பெறுகின்றன. சுவர்களின் இடையேயுள்ள சதுரத் தூண்களில் தென்னிந்திய சிற்ப அமைதியின் தொடக்கக்கலையைக் காணலாம். கருங்கற் பலகைகள் நன்றுக பரப்பப் பெற்ற தட்டையான கூரையும் மண்டபங்களின் மீது அமைக்கப் பெற்றுள்ளன. இக்கோவி லுக்கு லாட்கான் என்ற பெயர் வழங்குகிறது.

ஐகோலேயில் காணப்பெறும் துர்க்கைக் கோவிலில் முற் காலத்திய பௌத்த விகாரத்தை இந்துக் கோவிலாக அமைத்த சிற்பத்திறமையைக் காணலாம். கருவறை அல்லது கருப்பக் கிரகத்தோடு அமைக்கப் பெற்ற இக்கோவில் 60 அடி நீளமும் 36 அடி அகலமும் கொண்டுள்ளது. பலவிதமான மடிப்புச் சிற்பத்திறமையோடு கூடிய முப்பது அடி உயரமுள்ள பீடத் தின் மீது இக்கோவில் அமைந்துள்ளது. 24 அடி நீளமுள்ள முகமண்டபமும் இருக்கிறது. கருவறையின் மேல் சிகரம் அமைக்கப் பெற்று கோவிலைச் சுற்றி வருவதற்கு பிரதட்சண வழியும் உள்ளது. இக்கோவிலின் சிகரம் வடஇந்திய கட்டட முறையில் கட்டப் பெற்றுள்ளது. குச்சுமல்லிகுடி என்னும் இடத்தில் காணப்பெறும் கோவிலில் அர்த்தமண்டபத்திலிருந்து கருவறைக்குச் செல்வதற்குத் தனிவழியொன்று அமைக்கப் பெற்றுள்ளது. மாலகிட்டி சிவாலயம் என்ற ஒரு கோவிலும் வாதாபியில் காணப்பெறுகிறது.

சாளுக்கிய மன்னர்களின் கட்டடக் கலையை நன்கு உணர்ந்து கொள்வதற்கு வாதாபி நகருக்குப் பத்து மைல் தூரத்திலுள்ள பட்டடைக்கல் என்ற இடத்தில் காணப்பெறும் கோவில்கள் உதவி செய்கின்றன. இவ்விடத்தில் வடஇந்தியக் கோவில்களின் முறையைப் பற்றி அமைக்கப் பெற்ற நான்கு கோவில்களும் திராவிட முறையில் அமைக்கப் பெற்ற ஆறு கோவில்களும் உள்ளன. சங்கமேசுவரர், விருபாட்சர் கோவில்கள் தென்னிந்திய முறையிலும், பாபநாதசுவாமி கோவில் வட இந்திய முறையிலும் அமைக்கப் பெற்றுள்ளன.

பாபநாதசுவாமி கோவிலில் நாகர, திராவிட சிற்ப அமைதிகள் இரண்டும் கலந்து தோன்றுவதைக் காணலாம். பட்டடைக் கல் என்னுமிடத்தில் உள்ள விருபாட்சர் கோவில் இரண்டாவது சாளுக்கிய விக்கிரமாதித்தனுடைய மனைவியால் கட்டப் பெற்றது. காஞ்சிபுரத்தில் உள்ள கைலாச நாதர் கோவிலின் அமைப்பைப் பெரும்பாலும் பின்பற்றி இக்கோவில் அமைக்கப் பெற்றுள்ளது. தென்னிந்தியக் கோவில்களிலுள்ள எல்லாவித பாகங்களையும் கொண்டு சுற்றுமதிலும், நுழைவாயிலோடும் அமைந்து வெகு கம்பீரமான தோற்றத்துடன் இக்கோவில் காணப்படுகிறது என்று பெர்சி ப்ரௌன் என்பார் கூறுவர்.

முகமண்டபத்திலிருந்து கோவிலின் பின்புறம் வரையில் 120 அடி நீளம் இருக்கிறது. கருங்கற்களால் அமைக்கப் பெற்ற இக் கோவிலில் காணப்பெறும் சிற்பங்கள் மிக அற்புதமான வேலைப் பாடுள்ளவை. மூலத்தானம், மண்டபங்கள் சுற்றுப் பிரகாரம் முதலியன நன்கு அமைக்கப் பெற்றுள்ளன. அழகான கற்றூண் களின் மேல் அமைக்கப் பெற்ற மகாமண்டபத்தில் சாளரங்கள் அமைக்கப் பெற்ற கருங்கற் சன்னல்கள் உள்ளன. கருவறை யின் மேலுள்ள சிகரம் படிப்படியாக அமைக்கப் பெற்றுள்ளது. சுவர்களின் வெளிப்புறத்தில் காணப்பெறும் தூண்களிலும், மாடங்களிலும், சிவன், நாகர்கள், நாகினிகள் முதலிய உருவங் களும், இராமாயணத்தின் காட்சிகளும் சிற்பங்களாக அமைக்கப் பெற்றுள்ளன. ‘கட்டட அமைப்பும், சிற்ப அமைதியும் ஒன்றோடொன்று இணைந்து இக்கோவிலின் சிறப்பை தனிப் பட்ட முறையில் எடுத்துக்காட்டுகின்றன. இக்கோவிலை அமைக்கும்படி ஆணையிட்டவர்களும், இதை அமைத்த சிற்பி களும் போற்றற்குரியவர்.’ இதன் பக்கத்திலுள்ள சங்கமேச்வரர் கோவிலில் திறந்த மண்டபத்தோடு இருப்பினும், விருபாட்சர் கோவில் அமைப்பையே பின்பற்றியுள்ளது.

மேற்கூறப் பெற்ற அமைப்புக் கோவில்கள் அன்றியும் எல்லோரா, எலிபான்டா, சால்செட் என்ற இடங்களில் சாளுக்கிய இராட்டிரகூடர்கள் காலத்திய குடைவரைக் கோவில்கள் காணப்பெறுகின்றன. எல்லோரா என்னுமிடத்தில் பதினாறு குடைவரைக் கோயில்கள் இருக்கின்றன. அவற்றை நான்கு பிரிவுகளாக பிரிக்கலாம் (1) பௌத்த விகாரங்களைப் போல் முகமண்டபமும், கருவறையும் அமைக்கப் பெற்றவை. (2) கருவறைக்குள் செல்வதற்கு வழிகள் அமைக்கப் பெற்ற குகைக் கோவில்கள். (3) சிலுவை உருவம் போல் அமைக்கப் பெற் பல நுழைவாயில்களுடன் கூடிய கோவில்கள். (4) ஒரு

குன்றே கோவிலாகக் குடையப்பட்டு அமைப்புக் கோவில் போல் விளங்கும் கைலாய மலைக்குடைவரைக் கோயில் என்பன வாகும். இவற்றுள் முதல் வகுப்பில் சேர்த்துக் கொள்ளக் கூடியது தசாவதாரக் கோவில் என்பனவாகும். இராவணக்கா இராமேஸ்வரா என்ற கோவில்கள் இரண்டாம் வகுப்பைச் சேர்ந்தவை. துமர்லேனு, எலிபெண்டா என்ற இடங்களில் காணப்பெறும் குடைவரைக் கோவில்கள் மூன்றுவது பிரிவைச் சேர்ந்தவை. எல்லோராவில் உள்ள கைலாசமலைக்குடை வரைக் கோவில் நான்காவது பிரிவைச் சேர்ந்ததாகும்.

இராட்டிரகூட அரசன் முதலாம் கிருஷ்ணனுடைய ஆட்சிக் காலத்தில் அமைக்கப்பெற்ற இக்குடைவரைக்கோவில் பட்டடைக்கல் என்னுமிடத்தில் உள்ள விருபாட்சர் கோவிலைப் போன்ற அமைப்புடையதாயினும் அதைவிட இருமடங்கு பெரியதாகும். இக்கோவிலின் அமைப்பை நான்கு பகுதிகளாக பிரிக்கலாம்—உட்கோவில், நுழைவாயில், நந்தி மண்டபம், சுற்றுப்பிராகாரமும் அதிலுள்ள சிறு கோவில்களும். சுற்றுப் பிரகாரத்தில் வடக்குப் பகுதியில் இராவணன் கைலைமலையைத் தூக்கும் காட்சி பிற்காலத்தில் ஏற்பட்டதென்று சிலர் கூறுவர். மேற்குத்திசையில் நுழைவாயில் உள்ள இக்கோவிலின் உட்கோவில் 150 அடி நீளமும் 100 அடி அகலமும் உள்ளது. இருபத்தைந்து அடி உயரமுள்ளதும், பலவித மடிப்புக்கள் கொண்டதுமான பீடத்தின் மேல் அமைந்துள்ள இக்கோவில் யானைகளும், சிங்கங்களும் சுமந்து நிற்பது போல் அமைவுற்று இருக்கிறது.

‘இந்தக் குடைவரைக் கோவிலுக்குள் செல்லுவதற்கு அதன் மேற்குப்புறத்தில் பல படிகளைக் கடந்து பலதூண்களைக் கொண்ட முகமண்டபத்தின் வழியாகச் செல்லவேண்டும். அர்த்தமண்டபம், மகாமண்டபம, விமானம் முதலிய பகுதி களும, சதுரத்தூண்கள் மாடங்கள், உள்மண்டபம் முதலியவை களும் நம்முடைய கண்களையும் கருத்தையும் கவரும் வண்ணம் அமைவுற்றுள்ளன. கர்ப்பக்கிருகத்தின் மேல் அமைக்கப் பெற்றிருக்கும் விமானம் மூன்று மாடிகளுடன் உயர்ந்து 95 அடி உயரம் வரையில் வளர்ந்துள்ளது. விமானத்தின் அடிப் பீடத் தில், சிறிய அளவில் அந்த விமானத்தைப் போன்ற கோவில் கள் வெகு அழகாக குடையப்பட்டுள்ளன. அர்த்த மண்டபத் தில் இருந்து ஒரு வாயிற்படி கருவறையாகிய கர்ப்பக் கிரகத் திற்குச் செல்லலாம். அர்த்தமண்டபம் 70 அடி நீளமும் 62 அடி அகலமும் கொண்டுள்ளதாக பதினாறு தூண்களால் தாங்கப்

பெற்றுள்ளது. சிலுவையின் அமைப்புப்போன்ற இக்கோவிலின் இருபக்கங்களிலும், பெரிய தாழ்வாரங்கள் அமைந்துள்ளன' என பெர்சி ப்ரௌன் வியந்து கூறுவர்.

நந்திமண்டபத்தின் இருபக்கங்களிலும் உள்ள 51 அடி உயரமுள்ள கொடிமரங்கள் கருங்கல்லினால் அமைக்கப்பெற்றுள்ளன. தென்னிந்தியக் கோவில்களின் தூண்கள் காலப் போக்கில் எவ்வித மாற்றங்கள் அடைந்தன என்பதை இத் தூண்கள் எடுத்துக்காட்டுகின்றன. இந்தக் குடவரைக் கோவிலில் காணப்பெறும் சிற்பங்கள் உயிர்பெற்று விளங்குகின்றன. இராவணன் கைலைமலையைத் தூக்கமுடியாது தவிக்கும் காட்சியும், பார்வதி பரமசிவன் உருவங்களும் உயிருள்ள சிற்பங்களேயாகும். 'உலக அதிசயங்களில் ஒன்றாகக் கருத வேண்டிய சிற்பத்திறம் வாய்ந்தது இக் கைலைமலைக் காட்சியாகும். இதைப்போன்ற குடைவரைக் கோவிலும் சிற்பங்களும் வேறு எந்த நாட்டிலும் காணமுடியாது. இக்கோவிலை அமைக்கும் படி ஆணையிட்ட அரசனும், இதனை அமைத்த சிற்பிகளும் நம்மால் போற்றத்தக்கவர்' என வின்சென்ட் ஸ்மித் கூறியுள்ளார்.

மேற்கூறப்பெற்ற கைலைமலைக் குடவரைக்கோவில் அன்றியும் சமண சமயத்தைச் சார்ந்தவைகள் எனக் கருதப்பெற்ற குடவரைக் கோவில்கள் சில எல்லோராவில் உள்ளன, சிறுகைலாயம் என்று அழைக்கப் பெற்ற ஒரு கோவில் கைலாயமலைக் கோவிலின் நான்கில் ஒரு பகுதி எனக் கருதக் கூடிய அளவுடையது. இந்திரசபை, ஜெகந்நாதசபை எனப் பெயருள்ள மற்ற இரண்டு கோவில்கள் இருமாடிகள் அமைந்த கட்டடங்களாகும். இந்த சமணக் கோவில்களும் தென்னிந்திய குடவரைக் கோவில்களின் அமைப்பில் சிறந்த இடத்தைப் பெறுகின்றன. இக்கோவில்களில் காணப்பெறும் சிற்பங்களும் மிக்க வேலைப்பாடு அமைந்தவையாகும். அரங்கமகால் என்ற கோவிலின் மேல் தளத்தில் வரையப்பெற்றுள்ள சித்திரங்கள் மிக வனப்புள்ளவையாகக் காட்சியளிக்கின்றன.

## பல்லவர் காலத்திய தென்னிந்தியக் குடவரைக் கோவில்கள்

பல்லவர்களுடைய ஆட்சிக் காலத்திற்கு முன் தென்னிந்தியாவில் கருங்கற் கோவில்களும் குடவரைக் கோவில்களும் இருந்ததாகத் தெரியவில்லை. கி. மு. மூன்றும் நூற்றாண்டுக்கு முன் சோழ நாட்டை ஆண்ட கோச் செங்கட்சோழன் 70 கோவில்களைக் கட்டியதாக திருமங்கையாழ்வார் கூறியுள்ளார்

அவைகள் மாடக்கோவில்கள் என வழங்கின. தேவார ஆசிரியர்கள் காலத்தில் தமிழகத்தில் இருநூறு கோவில்களுக்கு மேல் இருந்தன. ஆனால், அவையனைத்தும் செங்கல், மரம், மண், உலோகம் முதலியவற்றால் அமைக்கப்பெற்றிருந்தன. இவ்விதம் அமைக்கப் பெற்ற கோவில்கள் (1) பெருங்கோயில், (2) இளங் கோவில், (3) மணிக்கோவில், (4) கரக்கோவில், (5) ஞாழற் கோவில், (6) கொகுடிக் கோவில், (7) ஆலக் கோவில், (8) தூங்கானை மாடம் முதலாகப் பலவகைப்படும். பல்லவர் காலத்திற்கு முந்திய கோவில்களில் பல செங்கல், மரம் சுண்ணாம்பு முதலியவைகளைக் கொண்டு கட்டப்பெற்றமையால் அவைகள் நாளடைவில் அழிந்து விட்டன.

'செங்கல், சுண்ணாம்பு, மரம், உலோகம் முதலியவை இல்லாமல் மும்மூர்த்திகட்கு விசித்திரசித்தன் (மகேந்திரவர்மன்) அமைத்த கோவில் இது' என்றும் கல்வெட்டு மண்டகப்பட்டில் காணப்படுகிறது. இதனால் தமிழ்நாட்டில் குடைவரைக் கோவில்கள் மகேந்திரவர்மன் காலத்தில் தோன்றின என்று நாம் அறிதல் வேண்டும். குடைவரைக் கோவில்களை அடுத்து அமைப்புக் கோவில்களும் தோன்றலாயின. மகேந்திரவர்மன், காலத்தில் குடைவரைக் கோவில்களாகிய மண்டபங்கள் அமைக்கப்பெற்றன. மண்டகப்பட்டு திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களில் அமைக்கப்பட்ட குடவரைக் கோவில்களும், மண்டபங்களும் அவருடைய ஆட்சியில் தோன்றின.

பல்லவ மன்னர்களுடைய குடைவரைக் கோவில்களை இருவகையாகப் பிரிக்கலாம். ஒன்று மகேந்திரவர்மன் காலத்தில் அமைக்கப் பெற்றவை. மற்றொன்று நரசிம்மவர்மன் ஆட்சியில் கட்டப்பெற்றவை. பாறைகளின் உட்பக்கத்தில் கருவறைகள் அமைக்கப் பெற்று முகப்பில் தூண்கள் கொண்ட மண்டபத்துடன் உள்ளவை மகேந்திரவர்மன் காலத்தில் உண்டானவை. சதுரவடிவான தூண்களின் நுனியில் பள்ளங்கள் வெட்டப்பட்டு சிலமடிப்புக்களும் இருந்தன. பல்லாவரம் குகைக்கோவிலில் இவ்விதத் தூண்களைக் காணலாம். தளவனூரில் காணப் பெறும் தூண்கள் இன்றும் அழகாக அமைக்கப்பெற்றிருந்தன. தூண்களின் அடிபாகத்தில் சிங்கங்கள் உட்கார்ந்து தாங்கிக் கொண்டிருப்பது போல் அமைக்கப்பெற்றன.

மகாமல்லன் காலத்தில் அமைக்கப்பெற்ற தூண்களைக் கொண்ட மண்டபங்கள் மகாபலிபுரத்தில் நிரம்பக் காணப்பெறுகின்றன. பகீரதனுடைய வேண்டுகோளுக்கு இரங்கி, ஆகாய கங்கை பூமிக்கு வந்து இறங்குகின்ற சிற்பம் 90 அடி நீளமும்

23 அடி அகலமும் உள்ள ஒரு பாறையில் வெட்டப்பட்டுள்ளது. இக்காட்சி சித்திரக் காட்சி போல மிக்க வனப்புடன் காணப் பெறுகிறது. பேராசிரியர் நீலகண்ட சாஸ்திரியார் 'இக்காட்சி மகாபலிபுரத்திற்குப் பாலாற்றிலிருந்து குடிநீர் கொண்டு வந்த தின் அறிகுறியாக இருக்கலாம்' எனக் கருதுகிறார். பாறையின் நடுவே நீரருவி போன்ற பள்ளம் உள்ளது. அதன் இடது பக்கத்தில் ஒரு சிறிய கோவிலில் நின்று கொண்டிருக்கும் தெய்வ உருவம் உள்ளது. இந்தக் கோவிலில் முன் ஏகபாத ஆசனத் தில் நின்று தவம் புரியும் பகீரதனின் உருவம் தவம் செய்து உடலிளைத்த நிலையில் காணப்பெறுகிறது. அருவியின் இரு பக்கங்களிலும் நாகர்களும், நாக கன்னிகளும் காணப்படுகின் றனர். கந்தர்வர்கள், தேவர்கள், மனிதர்கள், விலங்குகள், இக்காட்சியை அனுபவித்துக் கொண்டிருக்கின்றனர். பாறையில் செதுக்கப்பட்டிருக்கும் யானைகளின் உருவமும் மான்களின் உருவமும் மிக இயற்கையாக உள்ளன. பகீரதனைப் பரிகசிப் பதைப் போன்று தன்னுடைய பின்னங்கால்களில் நின்று கொண்டு பூனையொன்றும் தவம் செய்கிறது. பூனையின் அருகே சில சுண்டெலிகள் விளையாடிக் கொண்டிருக்கின்றன. தன்னுடைய பின்னங்காலால் முகத்தைத் தேய்ந்துக் கொண்டு படுத்திருக்கும் மானும், பெண் குரங்கிற்கு பேன் பார்க்கும் ஆண் குரங்கும் மிக இயற்கையாக உள்ளன.

மாமல்லபுரத்துக் (மகாபலிபுரம்) குன்றுகளில் நரசிம்ம வர்மன் காலத்தில் அமைக்கப்பெற்ற பத்து மண்டபங்கள் உள்ளன. அவைகள் மிக்க சிறிய அமைப்புக்களாக இருந்த போதிலும், வியக்கத்தக்க வேலைபாடுகள் உள்ளவை. இம் மண்டபங்களில் காணப்பெறும் சிற்பங்கள் வரலாற்றுச் சிறப்பு வாய்ந்தனவாகும். வராகமண்டபத்தில் காணப்பெறும் சிம்ம விஷ்ணு, மகேந்திரவர்மன் சிலைகள் எல்லோராலும் பாராட்டத் தக்கனவாகும். வாமன உருவம், துர்க்கை, கஜலட்சுமி, உருவங் கள் மிக்க நேர்த்தியானவை. அனந்த சயனப் பெருமாள் சிற்பமும், மகிஷாசுரமர்த்தனியின் போர்க்கோலத்தைக் காட்டும் சிற்பமும், கோவர்த்தனகிரியைக் குடையாகப் பிடித்து ஆயர் களைப் பெருமழையினின்றும் காப்பாற்றும் சிற்பமும், இடையன் பால் கறப்பதும், பசு தன்னுடைய கன்றினை நாக்கினால் நக்கிக் கொடுக்கும் பான்மையும் தம் கண்களை விட்டு அகலாதவை ஆகும்.

ஏழு கோவில்கள் என்று புகழப்படும் இரதங்கள், பல்லவர் காலத்திற்கு முன் தென்னாட்டில் வழக்கத்திலிருந்த பல வகை

யான கோவில்களைக் குறிப்பதாகும். அவற்றுள் ஐந்து ஓரிடத்தில் காணப்பெறுவதால் பஞ்சபாண்டவ ரதங்கள் எனப் பெயர் பெற்றன. திரௌபதி ரதம் என்று பெயரிடப்பெற்ற கோவில் யானையும், சிங்கமும் தாங்கி நின்று மேற்கூரை வரையப் பெற்ற சிறிய கோவிலாகும். மற்றைய ரதங்கள் பௌத்த விகாரங்களையும், சைத்தியங்களையும் மாதிரியாகக் கொண்டு அமைக்கப் பெற்றவையாகும். இந்த ரதங்களில் காணப்பெறும் சிற்பங்கள் தெய்வங்களையும், மக்களையும், விலங்குகளையும் வெகு இயற்கையாக எடுத்துக்காட்டுகின்றன. தெய்வச் சிற்பங்களுக்கு நான்கு கைகளும், துவாரபாலகர்களுக்கு இரண்டு கைகளும் உள்ளன. இந்த ரதக்கோவில்களெல்லாம் முழுவதும் முற்றுப் பெருமல் அரைகுறையாக விடப்பட்டதின் மர்மம் ஒன்றும் விளங்கவில்லை.

மேற்கூறப்பெற்றவை யெல்லாம் குடைவரைக் கோவில்களும் அவற்றிலுள்ள சிற்பங்களுமாகும். இனி நாம் பல்லவர்கள் காலத்தில் கட்டப் பெற்ற அமைப்புக் கோவில்களை (Struetural temples) ஆராய வேண்டும். இவற்றுள் முக்கியமானது கடற்கரைக் கோவில் என்றழைக்கப்பெறும் திருமால் கோவிலாகும். பனைமலை கோவிலும் காஞ்சியிலுள்ள கைலாசநாதர் வைகுந்தப் பெருமாள் கோவில்களும் கடற்கரைக் கோவிலுக்குக் காலத்தால் பிற்பட்டவையாகும்.

கடற்கரைக் கோவிலின் கருவறை வங்கக் கடலை நோக்கிக் கிழக்குப் பார்த்து அமைக்கப் பெற்றுள்ளது. மேற்குப் பார்த்த வாயிலையுடைய இன்னொரு கோவிலும் அதன் பக்கத்திலேயே அமைக்கப்பெற்றுள்ளது. இருகோவில்களையும் சுற்றி பிரகாரம் ஒன்றும் மதிற்சுவரும் இருந்திருக்கின்றன. மதிற்சுவரின் மேல் நந்தி உருவங்களும் சிங்கத்தின் உருவங்களும் அமைக்கப் பெற்றிருந்தன. கடற்கரைக் கோவில்களின் சிற்ப அமைதியை நேரில் கண்டு அனுபவிக்கவேண்டுமேயன்றி வார்த்தைகளால் சொல்லுவதோ எழுதுவதோ பயனற்ற செயலாகும்.

காஞ்சிபுரத்திலுள்ள கைலாசநாதர் கோவில் இராசசிம்மன் என்ற 'காடவர் கோன் கழற்சிங்கன்' காலத்தில் அமைக்கப் பெற்று பூசலார் நாயனுருடைய உள்ளக் கோவில் அமைந்த காலத்தில் கட்டப் பெற்றதாகப் பெரியபுராண ஆசிரியர் கூறுவர். தொடக்கத்தில் இக்கோவிலின் விமானமும், அர்த்த மண்டபமும் வெவ்வேருக இருந்து பின்னர் இணைக்கப்பட்டிருக்க வேண்டுமென திரு. நீலகண்டசாஸ்திரியார் கருதுவர். இக்கோவிலின் விமானம், தர்மராஜ ரதத்தை ஒத்துள்ளது

இதனுடைய பிரகாரத்தில் ஏழு பரிவார ஆலயங்கள் உள்ளன. பரிவார ஆலயங்களின் உட்பகுதியில் சித்திரங்கள் வரையப் பெற்றிருந்ததற்கு அடையாளங்கள் உள்ளன. இக்கோவிலின் அடிப்படையில் கருங்கற்கள் உபயோகப்படுத்தப் பெற்றுள்ளன. ஆனால், மேல்பகுதியும், சிற்பங்களும் மண்கலந்த கற்களினால் ஆக்கப்பெற்றமையால் சிதைவடைந்து கொண்டு வருகின்றன.

பல்லவர்கால அமைப்புக் கோவில்களில் மிக்க முதிர்ச்சியடைந்த சிற்பத்திறம் வாய்ந்தது வைகுந்தப் பெருமாள் கோவிலாகும். சுற்றுமண்டபம், முகமண்டபம், சுற்றுப்பிரகாரம் முதலியவைகள் அமைந்து முழுமைத் தோற்றத்தோடு விளங்கும் இக்கோவில் கைலாசநாதர் கோவிலை விடச் சற்றுப் பெரியது. இக்கோவிலின் கருவறை 90 அடி சதுரமாக அமைக்கப் பெற்று முன் மண்டபத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. இதன் சுற்றுப் பிரகாரத்தில் பல்லவ வமிசத்தின் வரலாற்று நிகழ்ச்சிகளில் பல சிற்ப வடிவில் அமைக்கப் பெற்றுள்ளன. சிங்கங்களின் உருவங்கள் தாங்கி நிற்பது போன்ற தூண்கள் இந்த பிரகாரத்தை அலங்காரம் செய்கின்றன. அர்த்த மண்டபத்திலிருந்து ஒரு நுழைவாயில் வழியாக இக்கோவிலின் கருவறைக்குள் செல்லலாம். நான்கு மாடிகள் கொண்டு அமைக்கப்பெற்ற விமானம் அறுபது அடி உயரம் உள்ளது. இக்கோவிலை தினந்தோறும் கண்டு களிப்பவர்கள் மிகுந்த பாக்கியசாலிகளாகத் தான் இருக்க வேண்டும். இக்கோவில் இரண்டாம் நந்திவர்மனால் அமைக்கப் பெற்றதாகும்.

வைகுந்தப் பெருமாள் கோவிலுக்குப் பிறகு தோன்றிய ஆலயங்கள் காஞ்சிபுரத்திலுள்ள முக்தீச்வரர், மதங்கீசுவரர் கோவில்கள், செங்கற்பட்டுக்கருகிலுள்ள உரகடம் வடமல்லீசுவரம் கோவில், திருத்தணி வீரட்டானேசுவரர் கோவில், குடிமல்லம் பரசுராமேசுவரர் கோவில் முதலியனவாகும். காஞ்சியிலுள்ள இரண்டு கோவில்களுக்கு முன் மண்டபங்கள் உள்ளன. மற்ற கோவில்கள் மாமல்லபுரத்திலுள்ள சகாதேவரதத்தின் அமைப்பைப் பின்பற்றி கட்டப்பட்டுள்ளன.

### சோழர்கோவிற் பணிகள்

பல்லவ மன்னர்களுடைய கட்டடக்கலையையும், சிற்ப அமைதியையும் பொன்னே போற் போற்றி வளர்த்து அவற்றை மிகுந்த வளம் பெறச் செய்த பெருமை சோழ மன்னர்களைச் சாரும். பத்தாம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து சோழ

மன்னர்களால் எடுபிக்கப் பெற்ற கோவில்கள் சில சிறிதும் சில மிகப்பெரிதுமாக அமைந்தன. அவையாவும் உபான முதல் ஸ்தூபி (கலசம்) வரையில் கற்றளிகளாகவே அமைக்கப் பெற்றன. அவற்றின் நிலப்பரப்பு கிழக்கு மேற்கு நோக்கியவை யாகும். இறைவனது கருவறை சதுரவடிவினதாக அமைக்கப் பெற்றிருந்தன. முகமண்டபம், அர்த்த மண்டபம், மகா மண்டபம் என மூன்று அங்கங்களை பெற்றிருந்தமையால் இக்கோவில் களை திரையங்கம் எனச் சிற்ப நூலார் போற்றியுள்ளனர்.

பிற்காலச் சோழர்களின் ஆட்சியின் தொடக்கத்தில் சோழ அரசு சிறிய நிலப்பரப்பில் பரவியிருந்தது போன்று அக்காலத்தில் அமைக்கப் பெற்ற கோவில்களும் சிறிய அளவுடையவை யாகவே இருந்தன. இப்பொழுது புதுக்கோட்டை மாவட்டம் அமைந்துள்ள நிலப்பகுதியில் பிற்காலச் சோழ மன்னர்களால் முதலில் அமைக்கப்பெற்ற கற்றளிகள் காணப்பெறுகின்றன. இக்கற்றளிகளில் முதன்மை பெற்று விளங்குவது நார்த்தாமலை யில் உள்ள விஜயாலய சோழீச்சுரம் என்ற கோவிலாகும். மேற்குத் திசை நோக்கியிருக்கும் இக்கோயில் ஒரு சதுரமான பிரகாரத்துள் வட்டமான கருவறையுடன் அமைக்கப்பெற்றுள்ளது கருவறையின் மேலுள்ள சிகரம் நான்கு மாடிகள் உள்ளது. இந்நான்கு மாடிகளில் மூன்று சதுரவடிவானவை. நான்காவது வட்டமாக அமைந்து உருண்டை வடிவாக உச்சி யில் ஒரு கலசம் இருந்திருக்க வேண்டும். முன்மண்டபத்தில் சதுரத்தூண்கள் உள்ளன. அத்தூண்களின் மேல் கூடுகளும் புடைப்புச் சிற்பங்களும் காணப்படுகின்றன. முன்மண்டபத் தின் மேல்தளத்தில் உள்ள சுவர்களில் பஞ்சரம் என்ற சிறு சிறு கோவில்கள் காணப்பெறுகின்றன. மண்டபத்தில் உள்ள தூண்கள் பல்லவர் காலத்திய தூண்களின் அமைப்பை ஒத் துள்ளன. கருவறையின் நுழைவாயிலில் உள்ள மாடங்களின் இருபக்கங்களிலும் ஒரு காலின் மேல் ஒன்றை ஊன்றி நிற்கும் துவாரபாலகர் சிற்பம் இரண்டுள்ளன. முக்கிய கோவிலின் பிரகாரத்தில் மேற்குத்திசை நோக்கிய பரிவார ஆலயங்கள் ஏழு உள்ளன. கண்ணனூர் என்னுமிடத்தில் உள்ள பால சுப்ரமண்யர் ஆலயமும் விஜயாலய சோழீச்வரத்தைப் போன்ற அமைப்பு முறையில் முதலாம் ஆதித்தன் காலத்தில் அமைக்கப் பெற்றதாகும். இக்கோவிலின் சிகரத்திலும் மற்ற பகுதிகளிலும் நந்திக்குப் பதிலாக யானைகளின் உருவங்கள் வைக்கப் பெற்றுள்ளன.

திருக்குடந்தையில் உள்ள நாகேஸ்வர சுவாமி கோவிலும் மேற்கூறப்பெற்ற கோவில்கள் அமைக்கப்பெற்ற காலத்தில்

தோன்றியதாகும். இக்கோவிலின் கருவறையின் வெளிப்புறச் சுவர்களில் உள்ள மாடங்களில் அர்த்தநாரி, பிரம்மன், தட்சிணா மூர்த்தி முதலிய தெய்வ உருவங்கள் அமைந்துள்ளன இன்னும் இக்கோவிலுக்கு அறக்கட்டளைகளும் நிவந்தங்களும் அளித்த பெரியோர்களின் உருவங்களும வசீகரமான முறையில் அமைக்கப் பெற்றுள்ளன. சோழ அரச குடும்பத்தைச் சேர்ந் தவர்களின் உருவங்களும் காணப் பெறுகின்றன. அடி பீடத் தின் மேல் காணப்பெறும் பட்டைகளில் இதிகாச புராணங்களில் இருந்து சில காட்சிகள் சிற்பங்களாகச் செதுக்கப்பட்டுள்ளன. பொற்கொல்லர்களும், மரவேலை செய்யும் தச்சர்களும் வியந்து கூறும்படி இச்சிற்பங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

திருச்சிராப்பள்ளி மாவட்டம் ஸ்ரீநிவாச நல்லூரில் காணப் பெறும் குரங்கநாதர் கோவில் முதற் பராந்தக சோழன் காலத் தில் அமைக்கப் பெற்றதாகும். இக்கோவிலின் கருவறை 25 அடி நீளமும் 20 அடி அகலமும் உள்ளது. கருவறையின் மேலுள்ள விமானம் 50 அடி உயரம் உள்ளது. இக்கோவிலுக் குள் அமைக்கப் பெற்றிருக்கும் தூண்கள் சோழர் காலத்திய தூண்களுக்கு மாதிரித் தூண்களாகும். அவற்றில் பலகை, இடல், கலசம் முதலிய பகுதிகள் நன்கு அமைவுற்றுள்ளன. மண்டபத்தின் சுவர்களின் மத்தியில் காணப்பெறும் மாடங்களில் தென்புறத்தில் தட்சிணாமூர்த்தியும், மேற்கில் நின்று கொண்டி ருக்கும் திருமாலும், வடக்கில் பிரம்மனுவடய உருவமும் உள்ளன. நின்ற நிலையில் உள்ள உருவங்கள் அக்கோவிலை, அமைப்பதற்கு உதவிசெய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

புதுக்கோட்டை மாவட்டம் கொடும்பாளூரில் காணப் பெறும் 'மூவர் கோவில்' அமைப்பு சோழர்கள் காலத்திய கட்டடக்கலைக்கும் சிற்பத்திறமைக்கும் பெயர் பெற்றதாகும். இரண்டாம் பராந்தக சோழனுடைய காலத்தில் கொடும்பாளூர் சிற்றரசனாகிய பூதி விக்கிரம கேசரி என்பாரால் பத்தாம் நூற் றாண்டின் பிற்பகுதியில் அமைக்கப் பெற்றதாகும். தொடக்கத் தில் அமைக்கப் பெற்ற மூன்று கோவில்களில் இப்பொழுது இரண்டுதான் காணப்பெறுகின்றன. இவை ஒவ்வொன்றும் 21 அடி சதுரமுள்ளவைகளாகவும் ஒன்றுக்கொன்று 10 அடி தூரமுள்ள இடைவெளியிலும் மேற்கு நோக்கி அமைக்கப் பெற்றுள்ளன. ஒவ்வொரு கோவிலுக்கும் தனி அர்த்தமண்டப மும் மூன்றிற்கும் பொதுவான மகாமண்டபங்களும் இருந்தன. ஆனால், அவையிரண்டும் இப்பொழுது அழிந்து விட்டன. மகாமண்டபத்திற்குமுன் நந்தியின் பீடமும், பலிபீடமும் இருந்த

அடையாளங்கள் உள்ளன. இக்கோவின் பிரகாரத்தில் மூவர் கோவிலைப் போன்று சிறிய அளவில் பரிவார தேவதைகளுக்கு கோவில்கள் அமைக்கப்பெற்றிருந்தன. இக்கோவிலின் சுற்று மதில்கள் மூன்றரை அடி அகலமும் இருந்ததாகத் தெரிகிறது. மேற்குப் பகுதியில் ஒரு சிறிய கோபுரம் ஒன்றும் இருந்திருக்க வேண்டும். பத்தடி குறுக்களவுள்ள கிணறு ஒன்றும் இருந்தது. பத்மகோசம் என்ற சிற்ப அமைதிப்படி இக்கோவில்களில் அடித்தளம் அமைந்துள்ளது. உச்சிப்பீடத்திற்கு கீழே உள்ள புடைப்புச் சிற்பங்கள் மிகுந்த வேலைப்பாடு அமைந்தவை. அழியாது நிற்கும் கோவில்களில் சுவர்களிலும், அழிந்துபட்ட கோவிலின் சிதறிக் கிடக்கும் பாகங்களிலும், அர்த்தநாரி, வீணாதரர், கங்காதரர், அந்தகாசுர சம்காரமூர்த்தி, கிராட மூர்த்தி, ஹரிஹரர், சந்திரன், சூரியன், உமாதேவி. ஜேஷ்டா தேவி, சப்தமாதர்கள் மோகினி முதலிய உருவங்கள் காணப் பெறுகின்றன.

## முதலாம் இராஜராஜன்—இராஜேந்திரன் காலத்திய கோவில்கள்

இவ்விரண்டு சோழப் பேரரசர்களுடைய ஆட்சியில் சோழப் பேரரசு பரப்பளவிலும், ஆடம்பரவாழ்விலும் இராணுவ வன்மையிலும் சிறந்தமை போன்று பெரிய கோவில்களும், விமானங்களும், கோபுரங்களும் அமைக்கப்பெற்றன. நடுத்தர மான ஆலயங்களும் அமைக்கப்பெற்றன. நடுத்தரமான ஆலயங்களில் மிகுந்த சிற்பத்திறமை வாய்ந்து விளங்குவது திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள பிரமதேசம் என்னும் ஊரில் காணப்பெறும் திருவாலீஸ்வரம் கோவிலாகும். சதுரமான கருவறையின் அடிப்பீடத்தில் விலங்குகளைச் சித்தரிக்கும் உருவங்கள் காணப்பெறுகின்றன. மேல் பட்டையின் சித்திர வேலைகளில் பூதகணங்களின் உருவங்கள் செதுக்கப்பட்டுள் ளன. சிங்கம் அல்லது குரங்கு முகத்துடனும், தொந்தி பெருத் தும் உள்ள பூதங்கள் ஆடிப்பாடி மகிழ்வது போன்ற புடைப்புச் சிற்பங்கள் மிகுந்த வேடிக்கையாகக் காணப்பெறுகின்றன. சிங்கமுகமமைந்த கூடுகளின் இருபுறங்களிலும் செடி கொடிகள் செதுக்கப்பெற்றுள்ளன. விமானத்தின் முதல் அடுக்கின் மத்தி யில் கூத்தப் பெருமான் உருவமும், இடதுபுறத்தில் நிஷபாரு டரும், கங்காதரரும், வலது புறத்தில் வீரபத்திரரும் தேவியும் அமைக்கப்பெற்றுள்ளன. மேற்குப் புறத்தில் திருமாலும் பிரம்ம னும் வணங்குகின்ற இலிங்கோற்பவ உருவமும் அமைந் துள்ளது. இன்னும் காலசம்கார மூர்த்தி, கிராதமூர்த்தி, யோக தட்சிணாமூர்த்தி, உமாமஹேச்வரர், முதலிய உருவங்களும்

உள்ளன. சண்டேஸ்வர அனுக்கிரக மூர்த்தியும், சுகாசன மூர்த்தியும், சோமாஸ்கந்த மூர்த்தியும் காணப்பெறுகின்றன. இரண்டாவது மாடியின் மூலைகளில் வெகு இயற்கையாகக் காணப்பெறும் நந்தி உருவங்கள் அமைவுற்றுள்ளன. இதன் நடுவில் எண்கோணமுள்ள பீடத்தில் உள்ள மாடங்களில் உபதேச தட்சிணாமூர்த்தி யோக நரசிம்மர், பிரம்மன், இந்திரன், முதலிய தெய்வ உருவங்கள் காணப்பெறுகின்றன. எண்கோண பீடத்தின் மீது அமைந்துள்ள சிகரத்தில் மகாபத்மம், பட்டிகை ஸ்தூபி முதலியனவும் உள்ளன. கருவறையும் அர்த்தமண்டபமும் ஒரே சமயத்தில் அமைக்கப்பெற்றவை. மகாமண்டபம் பிற்காலத்தில் கட்டப்பட்டதாகும்.

திருவையாற்றில் உள்ள உத்தரகைலாசநாதர் கோவிலும், திருமழபாடி வைத்தியநாத ஈஸ்வரர் கோவிலும் தாதாபுரம் (தென்னாற்காடு ஜில்லா) சிவ விஷ்ணு கோவில்களும் பொலன்னறுவை சிவதேவாலயமும் இராஜராஜ சோழனுடைய ஆட்சியில் அமைக்கப்பெற்ற மற்ற நடுத்தரக் கோவில்களாகும்.

## தஞ்சை-கங்கைக் கொண்ட சோழபுரக் கோவில்கள்

இவ்விரு கோவில்களும் சோழ மன்னர்களுடைய கோவில் அமைப்புத் திறத்தின் முதிர்ச்சியடைந்த நிலையை எடுத்துக் காட்டுவனவாகும். சுமார் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் அமைக்கப்பெற்ற தஞ்சைப் பெருங்கோவில் இராஜராஜ சோழனுடைய அரசியல் பொருளாதார சிறப்புக்களை எடுத்துக்காட்டுகிறது. இக்கோவில் அமைப்பினால் தென்னிந்திய கோவில் அமைக்கும் கலையும் சிற்ப சித்திரக்கலைகளும் மிகுந்த உன்னத நிலையை அடைந்தன. 500 அடி நீளமும், 250 அடி அகலமும் உள்ள விசாலமான பகுதியின் மத்தியில் இரண்டு கோபுர வாயில்களும் இருநூறு அடி உயரமுள்ள விமானமும் அர்த்த மண்டபமும், நந்தி மண்டபமும் சேர்ந்து காண்போர் வியந்து நிற்கும் நிலையில் இக்கோவில் அமைவுற்றுள்ளது. கருவறைக்கு மேல் அமைந்துள்ள விமானம் மற்ற கோவிற் பகுதிகளை விட தலை நிமர்ந்து நிற்கிறது. சதுரவடிவில் அமைந்துள்ள அடித்தளமும், அகலத்தில் குறைந்து வட்டவடித்தில் உச்ச நிலையை எட்டும் தன்மையும் நம்முடைய கருத்தைக் கவர்கின்றன. 82 அடி நீளமும், 50அடி அகலமும் உள்ள அடித்தளம் பதின்மூன்று மாடிகள் அமைந்த கோபுரமாக ஓங்கியுள்ளது.

செங்குத்தாக அமைந்துள்ள கீழ்த்தளங்களின் குறுக்கே சிற்பப்பிதுக்கம் (cornice) அமைந்திருக்கிறது. கீழ்த்தளத்தின்

சுவர்களில் அமைந்துள்ள புடைப்புத் தூண்கள் (pilasters) இச் சுவர்களைப் பலப் பகுதிகளாகப் பிரித்துள்ளன. இப்பகுதிகளில் உள்ள அழகிய மாடங்களில் கண்களைக் கவரும் சிற்பங்கள் காட்சி அளிக்கின்றன. படிப்படியாகக் குறைந்து வளர்ச்சியுற்றுள்ள கோபுரத்தின் உச்சிவரை பலவித சிற்ப வேலைகளை நாம் காண்கிறோம். மேல் தளத்தின் மேல் கிண்ணம் போல் கவிழ்க் கப்பெற்ற பிரமரந்திரத் தளம் ஒற்றைக் கருங்கல்லால் ஆனதாகும். இக்கல்லின் மேல் அழகிய கலசம் பொறுத்தப் பெற்றுள்ளது.

தஞ்சைப் பெருவுடையார் கோவிலின் கருவறை 45 அடி சதுரவடிவில் அமைந்துள்ளது. அதைச் சுற்றிலும் ஒன்பது அடி அகலமுள்ள சிறிய பிரகாரம் இருக்கிறது. இப்பிரகாரத்தின் சுவர்களின் மீது சோழர் காலத்திய ஓவியங்களும், அவற்றின் மீது பிற்கால ஓவியங்களும் தீட்டப்பெற்றுள்ளன. கருவறையின் நடுவில் பெருவுடையார் என்ற சிவலிங்கம் அமைந்துள்ளது. சிவலிங்கத்தின் உயரம் இரண்டு மாடிகள் வரையில் எட்டியுள்ளது. கருவறையின் நுழைவாயிலில் உள்ள மாடங்களில் இரண்டு பெரிய துவாரபாலகர் உருவங்கள் அமைந்துள்ளன. இக்கருவறையை அடைவதற்கு வடக்கிலும், தெற்கிலும் இரண்டு படிக்கட்டுகள் கட்டப் பெற்றுள்ளன. கருவறையைச் சேர்ந்தாற்போல் உள்ள அர்த்த மண்டபத்தை பெரிய தூண்கள் தாங்கி நிற்கின்றன. அர்த்த மண்டபத்தை அடுத்து மகாமண்டபம் அமைந்திருக்கிறது. மகாமண்டபத்திற்குக் கிழக்கே வெளிப்புறத்தில் பெரியதொரு நந்தியின் உருவமும் அதன் மண்டபமும் உள்ளன. தஞ்சைக் கோவிலில் காணப் பெறும் நந்தி ஒரே கல்லினால் அமைக்கப் பெற்ற பெரிய நந்தியாகும்.

கோவிலின் விமானத்தின் தெற்கு வடக்குச் சுவர்களிலும் பிரகாரத்திலுள்ள மண்டபத்தைச் சுற்றியும் சைவ சமயத்திற்கு உரித்தாகிய பல தெய்வங்களுக்கு மாடக் கோவில்களும் பரிவார ஆலயங்களும் சிறிய அளவில் அமைந்துள்ளன.

இராஜராஜசோழனுடைய மகன் முதலாம் இராஜேந்திர சோழனால் அமைக்கப்பெற்றது கங்கைகொண்ட சோழபுரத்துக் கோவிலாகும். எண்ணூறு ஆண்டுகளுக்கு முன் சோழப் பேரரசின் தலைநகரமாக விளங்கிய கங்கைக்கொண்ட சோழபுரம், இன்று தன்னுடைய பெருமைகள் அனைத்தும் இழந்து மட்குடிசைகள் கொண்ட சிறிய கிராமமாக காட்சியளிக்கிறது.

தஞ்சைக் கோவிலுக்குப் பிறகு இருபதாண்டுகள் கழித்தே இக் கோவில் அமைக்கப்பெற்ற போதிலும், இராசேந்திர சோழ னுடைய ஆட்சிக்காலத்தில் நிலவிய அரசியல் பொருளாதார நிலமைகளை இக்கோவில் எடுத்துக்காட்டுகிறது. இராஜ ராஜேஸ்வரத்தைவிட பெரிதாகக் கட்டுவதற்குத் திட்டமிட்டி ருந்த போதிலும், அதைவிட உயரத்தில் குறைந்தே உள்ளது. 340 அடி நீளமும் 110 அடி அகலமும் கொண்ட நிலப்பரப்பின் மத்தியில் இக்கோவில் அமைந்துள்ளது. கிழக்குப்பார்த்து அமைக்கப்பெற்ற இக்கோவிலில் மகாமண்டபம் 175 அடி நீள மும் 95 அடி அகலமும் கொண்டு 150 தூண்கள் கொண்ட மண்டபமாகும். மகாமண்டபத்திற்கும் கர்ப்பக்கிருகத்திற்கும் இடையே தெற்கிலும் வடக்கிலும் இறங்கிச் செல்வதற்குப் படிகள் அமைக்கப்பெற்றிருக்கின்றன.

தஞ்சைக் கோவில் விமானம் பதின்மூன்று மாடி அடுக்கு கள் கொண்டது. கங்கைகொண்ட சோழபுரத்தின் விமானத் தில் எட்டு அடுக்கு மாடிகளே உள்ளன. தஞ்சைக்கோவில் விமானத்தில் அடுக்குகள் நேர்க்கோடுகள் போல் அமைந் துள்ளன. ஆனால் கங்கைக்கொண்ட சோழபுரத்தின் அடுக்குகள் சற்று வளைத்தாற்போல் தோற்றமளிக்கின்றன. இந்த வளைவுகள் கோபுரத்தின் அழகைச் சிறிது அதிகப்படுத்தியுள்ளன. 'இவ் விரு விமானங்களும் இருவித மனப்பான்மைகளைத் தெற்றெனத் தெளிவிக்கின்றன. தஞ்சைக் கோவில் இராஜராஜனுடைய வன்மையையும், கங்கைக்கொண்ட சோழபுரம் இராசேந்திர னுடைய உள்ளுணர்வின் ஆழத்தையும் அறிவிக்கின்றன.'

விமானத்தின் சுவர்களில் காணப்பெறும் சிற்பவேலைப்பாடு களும், சிற்பங்களும் தஞ்சை விமானத்தையே பின்பற்றி யுள்ளன. சண்டேச்வர அனுக்கிரக மூர்த்தியின் சிற்பம் உயிர் ஓவியமாக விளங்குகிறது. அம்மனுக்கு அமைக்கப் பெற்ற கோவில் கருவறையும் விமானமும் அமைக்கப் பெற்ற காலத் திலேயே அமைவுற்று இருக்க வேண்டும். விமானத்தில் காணப் பெறும் கரூர்த்தேவரின் உருவம் மிகச்சிறந்த நிலையில் காணப் பெறுகிறது. இக்கோவிலின் சிற்பத்திறத்தையும், வரலாற்றுச் சிறப்பையும் உணராத சிலர், இதன் சுற்று மதில்களையும், முன் கோபுரத்தையும் இடித்து வேறு பயனுள்ள நீர்ப்பாசன அணைக் கட்டைக் கொள்ளிடத்தின் குறுக்கே சென்ற நூற்றாண்டின் இறுதியில் கட்டிவிட்டனர். ஆகையால் சுற்றுமதில்களும் நுழைவாயில் கோபுரமும் இல்லாமலே இக்கோவில் இருக்கிறது.

## சோழப் பேரரசர்களுடைய மற்றக் கோவில்கள்

கி. பி. 1146 முதல் 1162 வரை சோழப் பேரரசனாக விளங்கிய இரண்டாம் ராசராசன் காலத்தில் திருப்பனந்தாள் கோவிலும் தாராசுரம் என்று வழங்கும் இராசராசேச்சுரமும் கட்டப் பெற்றன. இந்நகரும் கோவிலும் திருக்குடந்தைக்குத் தென் மேற்கேயுள்ளது. இக்கோவில் எடுப்பித்த காலத்தில் பல பிரகாரங்களைக் கொண்டதாக இருந்தது. காலப்போக்கில் பிரகாரங்கள் அழிந்து விட்டன. சுவாமி கோவிலுக்கு எதிரே யுள்ள கோபுரம் ஒன்று மாத்திரம் நிற்கிறது. முதற்கண் நாம் காணக் கூடியது இராச கம்பீரன் மண்டபம் என்பதாகும். இம்மண்டபம் குதிரைகள் பூட்டப் பெற்ற தேர்ச்சக்கரமுள்ள இரதம் போன்று சித்தரிக்கப் பெற்றிருக்கிறது. தனியாகவுள்ள அம்பிகையின் கோயில் முன்மண்டபம் நீரில் மிதக்கும் தெப்பம் போல அமைக்கப் பெற்றிருக்கிறது. இதிலுள்ள கூத்தர் பெருமான் மண்டபம் அரியதொரு சிற்பக் கருவூலமாகும். அதன் தூண்கள் ஒவ்வொன்றும் மிகுந்த சிற்பத்திறன் வாய்ந்தன வாகும். திருச்சுற்று மாளிகையில் உள்ள பிட்சாடனர் உருவமும், தாருகவன முனிவர்களின் பத்தினிகளும், 108 சிவாசாரியர் களுடைய சிறு உருவங்களும் வியக்கத்தக்கவனவாகும். சோழப் பேரரசர்கள் அமைத்தக் கோவில்களில் இச்சிற்பங்கள் இருப்ப தால் இவற்றில் சில இராஜ குருக்கள்மார்களின் சிலைகளாக இருக்கக் கூடும்.

திருச்சுற்றாலயத்துச் சந்நிதிகளிலும் கருவறைக்குக் கிழக்கு மேற்குப் பகுதிகளிலும் தொகையடியார், தனியடியார் ஆகிய 72 நாயன்மார்களுடைய வரலாற்று நிகழ்ச்சிகளைக் குறிக்கும் சுமார் தொண்ணூறு சிற்ப உருவங்களும் அவற்றின் கீழ் நாயன்மார் களுடைய வரலாற்றைக் குறிப்பாக உணர்த்தும் எழுத்துக்களும் காணத்தக்கவையாகும். அக்காலத்தில் சைவ சமய உணர்ச்சி உன்னதமான நிலையில் இருந்தமைக்கு இச்சிற்பங்கள் சான்று கும். இக்கோவிலை அமைத்த இரண்டாம் இராசராசனுடைய உருவமும், அவருடைய தேவியின் உருவமும் திருச்சுற்று மாளிகையின் வடபாகத்தில் இருக்கின்றன. திரிபுவனத்தில் உள்ள கம்பகரச்வரர் கோவில் மூன்றும் குலோத்துங்க சோழ னல் அமைக்கப் பெற்றது. இக்கோவில், தஞ்சை, கங்கைக் கொண்ட சோழபுரத்தில் உள்ள கோவில்களைப் போன்று கருவறையின் மேல் அமைந்துள்ள விமானத்தோடு அமைந் துள்ளது. ஒன்பது மாடி அடுக்குகள் கொண்டது. அர்த்த மண்டபமும், மகாமண்டபமும் உள்ளன. மிக உயரமான பீடத் துடன் புடைப்புத் தூண்களும், வரிமானமும், பல மாடங்களும்

அமைந்துள்ளன. இதில் காணப்படும் மூன்றும் குலோத்துங்க சோழனுடைய உருவம் செங்கல்லும், சுதையும் சேர்ந்து செய்யப்பெற்றதாகும். திருவாரூர் கிழக்குக் கோபுரத்தில் உள்ள உருவச்சிலைகள், திரிபுவனங் கோவிலுள்ள உருவச்சிலையோடு மிக ஒற்றுமையாக இருப்பதால் திருவாரூர்க் கிழக்குக் கோபுரமும் மூன்றும் குலோத்துங்க சோழனால் அமைக்கப் பெற்றதாகும். தில்லையம்பதியில் பேரம்பலம் பொன்வேயப்பெற்று இரத மண்டபம் அமைக்கப் பெற்றதும் மூன்றும் குலோத்துங்கச் சோழன் காலத்தில் என்பதை உறுதியாக்க அவருடைய உருவச் சிலைகள் இரண்டு பேரம்பலத்தில் காணப்பெறுகின்றன.

## சோழர் காலத்திய செப்புப் படிமங்கள்

கோவில்களை அமைத்து அவற்றில் கருங்கற்களினால் செய்யப்பெற்ற சிற்பங்களை அமைத்ததோடு, சோழர்கள் காலத்தில் செப்பு விக்கிரங்களை அமைக்கும் கலையும் மேன்மையுற்றது, தஞ்சைக் கோவிலில் காணப்பெறும் கல்வெட்டுகளில் பலவிதமான செப்பு விக்கிரங்களைப் பற்றி கூறப்பெற்றுள்ளன. ஆனால் அவ்வித செப்பு விக்கிரங்களில் பல தற்காலத்தில் எங்கும் காணமுடியவில்லை. தென்னிந்தியக் கோவில்களிலும், உலகின் பலநாடுகளிலுள்ள சிற்பக் கண்காட்சி சாலைகளிலும், சோழர் காலத்திய செப்புப் படிமங்கள் நிரம்பக் காணப்பெறுகின்றன. இவற்றுள் முக்கியமானவை சிவபெருமானுடைய பலவித உருவங்களாகும். பிரமன், திருமால், சப்தமாதர்கள், இலக்குமி, சரஸ்வதி, ஸ்ரீதேவி, பூதேவி, இராமர், இலக்குவன், சீதை, முதலியனவாகும். சம்பந்தர், நாவுக்கரசர், சுந்தரர், மாணிக்க வாசகர் மற்றுமுள்ள நாயன்மார்களின் சிலைகளும் ஆகும். வைணவக் கோவில்களில் ஆழ்வார்களுடைய சிலைகளும், வைணவ சமயாச்சாரியர்களுடைய சிலைகளும் காணப்பெறு கின்றன. மேற்கூறப் பெற்ற சிலைகள் ஆகமங்களில் கூறப் பெற்ற விதிமுறைகளின் படியும், சிற்ப சாத்திர நூல்களில் கூறப் பெற்ற முறைப்படியும், வார்க்கப்பெற்றன. இந்தச் செப்புச் சிலைகள், கற்சிலைகளைப் போலவே தலைசிறந்த வனப்புடன் செய்யப்பெற்றன.

செப்பு விக்கிரங்களில், கூத்தப் பெருமான், ஆடவல்லான் என்னும் பெயர்களுடைய நடராஜ விக்கிரகம் தனிப்பட்ட சிறப்பு வாய்ந்ததாகும். நடராஜ விக்கிரகத்தின் தனிப்பட்ட பெருமையை விளக்க வந்த உமாபதி சிவாசாரியர் பின்வருமாறு கூறுவர்.

'தோற்றம் துடியதனில் தோயும் திதியமைப்பில்
சாற்றியிடு அங்கியிலே சங்காரம்—ஊற்றமாய்
ஊன்று மலர்ப்பதத்திலுற்ற திரோதம் முத்தி
நான்ற மலர்ப் பதத்தே நாடு.'

கூத்தப் பெருமானின் திருவுருவம், சிருஷ்டி, திதி, சங்காரம், திரோபவம் அனுக்கிரகம் எனப்பெறும் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் ஐந்தொழில்களைக் கடவுள் என்றும் செய்து கொண்டிருக்கிறார் என்னும் பேருண்மையைப் புலப்படுத்துவதாகும். இவ்வைந்து தொழில்களும் பிரமன், விஷ்ணு, உருத்திரன், மகேஸ்வரன், சதாசிவன். என்னும் தெய்வங்களால் செய்யப் பெறுகின்றன. இத்தொழில்கள் இடைவிடாது உலகில் நடைபெறுவதற்கு கூத்தப்பெருமானின் ஆனந்த தாண்டவம் நடைபெறுகிறது. நடராஜ விக்கிரகத்தின் ஒருகையில் உள்ள உடுக்கையின் முழக்கத்திலிருந்து ஓம் என்ற பிரணவம் தோன்றி உலக உற்பத்தி நடைபெறுகிறது. அமைதியைக் காட்டும் ஒரு கையினால் உலகத்திலுள்ள ஜீவராசிகள் காப்பாற்றப் பெறுகின்றன. இன்னொரு கையிலுள்ள அக்கினி உலகத்தை ஊழிக் காலத்தில் அழிப்பதையும் முயலகன் மீதுள்ள கால் உலக மக்களுடைய வாழ்க்கையை மாயை மறைத்து விடுவது போல் சிறிது காலம் மறைத்து வைப்பதையும் காட்டுகின்றன. தூக்கிய திருவடி ஆன்மாக்கள் பிறப்பு—இறப்பினின்றும் நீங்கி முக்தியடைவதற்குரிய அருளைக் குறிப்பதாகும்.

பதி, பசு, பாசம் என்ற முப்பொருள்களின் தத்துவங்களை விளக்கி, உலகத்தின் தோற்றத்திற்கும், ஒடுக்கத்திற்கும் அறிகுறியாக விளங்குவதே நடராஜ விக்கிரகம். மனித உடலிலுள்ள இருதயத்தின் துடிப்பினால் உயிர் உடலில் எவ்வாறு நிலைபெற்றுள்ளதோ அதுபோன்று கூத்தப்பெருமானின் ஆனந்த தாண்டவத்தினால் படைத்தல் முதலிய ஐவகைத் தொழில்கள் நடைபெறுவதாகும் சைவசித்தாந்திகள் கூறுவர். இவ்வுயர்ந்த உண்மை உருப்பெற்று திகழ்வது நடராஜ வடிவமேயாகும். இந்த நடராஜ விக்கிரகத்தை செப்புப்படிமாக வார்க்கப் தொடங்கிய பின்னர் முதர்ச்சியும் அடைந்தகாலம் சோழர்களுடைய ஆட்சிக் காலமாகும்

## மேலைச் சாளுக்கியர் கட்டடக்கலை

தக்காணத்தின் மேற்குப்பகுதியில் ஆட்சி புரிந்த மேலைச் சாளுக்கியர்களுடைய கோவில் அமைப்புக் கலை பின்னர் வந்த

ஹொய்சளர்களுக்கு ஒரு வழிகாட்டியாக இருந்ததெனக் கூற லாம். மேலைச்சாளுக்கியர் காலத்தில் அமைக்கப்பெற்ற கோவில்களின் நுழைவாயில் கருவறைக்கு நேராக இல்லாமல் இருபக்கங்களிலும் அமைந்திருந்து. கருவறையின் வெளிப்புறச் சுவர்களில் அழகான சிற்பங்களும், சித்திர வேலைகளும் நிரம்பி யிருந்தன. வாதாபிச்சாளுக்கியர் காலத்தில் அமைக்கப்பெற்ற விமானங்களைப் போல் இல்லாமல் பின்னர் வந்த ஹொய்சள ருடைய கட்டட அமைப்புக்கு அடிகோலின. கோவிலில் காணப் பெற்ற தூண்கள் நன்ருக கடைசப்பிடிக்கப் பெற்று வெகு வழ வழப்பாக இருந்தன. கோவில்களின் கதவுகள் வெகு நேர்த்தி யுடன் அமைக்கப்பெற்றிருந்தன. குக்கனூர் என்னுமிடத்திலுள்ள நவலிங்க கோவில்களும், கல்லீசர் கோவிலும் இதற்குத் தகுந்த எடுத்துக்காட்டுகளாகும். இலக்குண்டி என்னுமிடத்திலுள்ள காசி விஸ்வேஸ்சுவரர் கோவிலும், இட்டகி மகாதேவர் கோவி லும் குறுவட்டி மல்லிக்கார்ச்சுனர் கோவிலும், மேலைச்சாளுக்கிய ருடைய கோவிகளுக்கு எடுத்துக்காட்டுகளாகும்.

## ஹொய்சளர் கட்டடக்கலை

மேலைச்சாளுக்கியருடைய கோவில்கள் மண்கலந்த கற்களி ஞல் கட்டப்பெற்றிருந்தன. ஹொய்சளர்களுடைய கற்றச்சர் கள் நன்ருக வேலை செய்வதற்குரிய கறுப்புக் கற்களைக் கொண்டு தங்களுடைய கோவில்களை அமைத்தனர். இந்த கருப்புக் கற்களைக் கொண்டு அமைத்த கோவில்களில் வெகு நுண்மை யும், திறமையும் பொருந்திய சிற்பங்களும் செடி கொடிகளும், விலங்கின் உருவங்களும் அமைக்கப்பெற்றன. தமிழ்நாட்டுக் கோவில்களைப் போல் பல கருவறைகள் கொண்ட திருச்சுற்றுலை கள் சூழ்ந்தும், மதில்களால் சூழப்பெற்றதுமாகிய இடத்தின் நடுவில் ஹொய்சளர்களுடைய கோவில்கள் இருந்தன. புகுமண் டபத்திற்கும், சுகநாசி, நவரங்கம் என்ற பெயர்கள் வழங்கின. ஹொய்சளர்களுடைய கோவில் அமைப்புகளில் ஒன்று அல்லது இரண்டிற்கு மேற்பட்ட கருவறைகள் நிறைந்திருந்தன. சில கோவில் அமைப்புக்களில் ஐந்தாறு கருவறைகளும் காணப் பெற்றன. இந்தக் கருவறைகளின் பீடங்கள் நட்சத்திர வடிவாக கட்டப் பெற்று அதன் விமானம் அமைக்கப் பெற்றி ருந்தது. கருவறையின் வெளிப்புறத்தில்தான் பிரதட்சண பாதை இருந்தது.

கருவறையின் அடிப்பாகம் செங்குத்தாகக் கட்டப்பெற்று ஐந்து அல்லது ஆறு பகுதிகளாகப் பிரிக்கப் பெற்றிருந்தது. முதல் அடித்தளத்தில் மடிப்புக்கள் இல்லாமல் கோலம்

போட்டது போன்ற புடைப்புச் சிற்பங்கள் அமைக்கப்பெற்றன. இரண்டாவது பகுதியில் நடனச் சிற்பங்களும், இதிகாச புராணக் காட்சிகளும் செதுக்கப் பெற்றிருந்தன. மூன்றாவது வரிசையில் யானைகள், குதிரைகள், யாளிகள் முதலிய விலங்கு களின் உருவங்கள் வெகு அழகான முறையில் செதுக்கப்பெற் றிருந்தன. நான்காவது வரிசையில் அன்னப்பறவைகளின் உருவங்கள் காணப்பட்டன. ஐந்தாவதில் செடி கொடிகளின் சிற்பங்கள் இருந்தன. இதற்கு மேல் விஷ்ணு, பிரம்மா, சிவன் காமதேவன், முனிவர்கள் முதலிய சிற்பங்கள் மாடங்களில் வைக்கப்பட்டுள்ளன. இச்சிற்பங்கள் மிகுந்த சித்திர வேலைப் பாட்டுடன் உயிருள்ள சிலைகள் போல் தோன்றின. ஹொய்சள நாட்டுக் கருப்பக்கிரகங்கள் வடநாட்டில் காணப்பெறும் சமணர்களுடைய கோவில்களின் தோற்றத்துடன் பொலி கின்றன.

ஸ்ரீரங்கப்பட்டினத்திற்கு இருபது மைல் தூரத்திலுள்ள சோமநாதபுரியில் கேசவசுவாமி கோவில் மிகுந்த சிறப்பு வாய்ந்த கோவிலாகும். சிலுவை போன்ற வடிவமாக மூன்று கோவில்கள் உள்ளன. 215 அடி நீளமும் 177 அடி அகலமும் உள்ள நிலப்பகுதியில் திருச்சுற்றுலை சூழ்ந்த இடத்தில் மூன்று கோவில்களும் அமைந்துள்ளன. திருச்சுற்றுலையில் அறுபத்தி நான்கு சிறு கோவில்கள் உள்ளன. முதலில் கூறப்பெற்ற மூன்று கருவறைகளின் மேலுள்ள விமானங்கள் முப்பது அடி உயரம் இருக்கின்றன.

பன்னிரண்டாம் நூற்றாண்டின் முற்பகுதியில் பேலூரில் உள்ள சென்ன கேசவ சுவாமி கோவில் அமைக்கப்பெற்றது. இக்கோவிலின் விமானம் முற்றுப்பெறாத நிலையில் இருக்கிறது. இந்த கருவறைக்கு முன்னுள்ள உயரமான இடத்தில் ஒரு பெரிய மண்டபம் உள்ளது. இம்மண்டபம் 92 அடி நீளமும் 78 அடி அகலமும் கொண்டுள்ளது. ஐம்பத்தாறு தூண்களின் மீது இம்மண்டபம் அமைக்கப்பட்டிருக்கிறது. மண்டபத்தின் நடுவி லுள்ள நான்கு தூண்களைத் தவிர மற்ற ஐம்பத்திரண்டு தூண் களும் ஐம்பத்திரண்டு விதமான சிற்ப அமைதிகளைப் பெற் றுள்ளன. ஒவ்வொரு தூணும் தனித்தனி சிற்பிகளால் செய்யப் பெற்றிருக்க வேண்டும் போல் தோன்றுகிறது.

ஹலேபீடு என்னுமிடத்தில் காணப்பெறும் ஹொய்சளேஸ் வர ஆலயம் ஹொய்சள மன்னர்களின் சிற்பக்கலையின் ஆர்வத்தை எடுத்துக்காட்டுகின்ற ஆலயமாகும். இந்தக்

கோவிலின் மேற்புகுதி முற்றுப்பெருமல் அரைகுறையாக இருந்த போதிலும் இதனுடைய அமைப்பும் சிற்பங்களும் நம்முடைய கண்களையும் கருத்தையும் கவரத்தக்கனவாகும். முதலாவது நரசிம்மன் ஆட்சியில் கேதராஜு என்ற கைதேர்ந்த ஆலயச் சிற்பி ஒருவரால் அமைக்கப் பெற்றது. இக்கோவிலின் அமைப்பில் 112 அடி நீளமும் 100 அடி அகலமும் கொண்ட இரு ஆலயங்கள் கட்டப்பட்டுள்ளன. இந்த இரண்டு கருவறைகளின் வெளிப்புறச் சுவர்களில் காணப்பெறும் சிற்பங்கள் உலகப்புகழ் பெற்றவையாகும்.

## விஜயநகர ஆட்சியில் கோவில்கள்

விஜயநகரப் பேரரசு தென்னிந்தியாவின் சமயங்கள், கோவில்கள், கலைகள், முதலியவற்றை இஸ்லாமியர் அழித்து விடாத வண்ணம் தென்னிந்தியப் பண்பாட்டைக் காப்பதற்குத் தோன்றியதாகும். தங்களுககு முன் ஆட்சி புரிந்த சாளுக்கியர் ஹொய்சளர், சோழர், பாண்டியர், முதலிய அரச வமிசத்தினர் போற்றி வளர்த்த கோவில் அமைப்புக்களையும் கலைகளையும் அழிந்து விடாதவாறு அவற்றை வளர்ப்பதில் கண்ணும் கருத்துமாய் இருந்தனர். கோவில்களின் அமைப்பிலும் அவற்றைப் பாதுகாப்பதிலும் விஜயநகரத்தரசர்கள் சில புதிய முறைகளைக் கையாண்டனர். சிற்பத்திறமை வாய்ந்த தூண்களை அமைத்து அவற்றின் மீது மண்டபங்களையும், கோபுரம் போன்ற கட்டடங்களையும் அமைத்தனர். தென்னுட்டுக் கோவில்களில் இப்பொழுது நாம் காணும் அம்மன் கோவில்களும், கல்யாண மண்டபங்களும், ஆயிரங்கால் மண்டபங்களும் பெரும்பாலும் விஜயநகரத்தரசர்கள் ஆட்சியில் தோன்றியவையாகும்.

கலியாண மண்டபங்களிலும், ஆயிரங்கால் மண்டபங்களிலும் காணப்பெறும் கற்றூண்களில் பாய்ந்து நிற்கும் குதிரைகளும், சீறிக்கொண்டு நிற்கும் நிலையுள்ள கற்பனை மிருகங்களும், யாளிகளும் காணப்பெறுகின்றன. அவற்றின் மீது அமர்ந்து இருக்கும் இவுளி வீரர்கள் பலவித ஆயுதங்களைத் தங்கள் கைகளில் கொண்டு போருக்குச் செல்லும் நிலையில் உள்ளனர். சில தூண்கள் ஒரு சிறு கழியைக் கொண்டு தட்டினுல் சரிகமபதநி என்ற ஏழிசைகளும் உண்டாகும்படியான முறையில் அமைக்கப்பெற்றுள்ளன. தூண்களின் உச்சிப் பகுதிகளில், புதிய முறையில் அலங்காரங்கள் தோன்றுகின்றன. இடல் பலகை முதலியவற்றிற்கு மேல் உள்ள முகப்புகளில் குவிந்த வாழைப்பூ, குவிந்த தாமரை மலர் போன்ற வடிவங்கள்

அமைக்கப்பெற்றுள் ளன. பாண்டியமன்னர்களால் தொடங்கப் பெற்ற கோபுரங்கள் விஜய நகரத்து அரசர்கள் ஆட்சியில் மிக்கச் சிறப்புற்றன.

துங்கபத்திரை ஆற்றிற்குத் தெற்கேயுள்ள நகரங்களில் விஜய நகரத்து அரசர்கள் காலத்திய கோவில்கள் நிரம்பக் காணப் பெற்ருலும் அழிந்த நிலையில் உள்ள விஜய நகரத்தில் காணப்பெறும் கோவில்கள் மிக்க சிறப்புடையனவாகும். ஹம்பி யில் துங்கபத்திரை நதிக்கரையில் அமைந்துள்ள பம்பாபதி அல்லது விருபாட்சர் கோவில், ஹொய்சள அரசர்கள் காலத் தில் அமைக்கப்பெற்றது. ஆனுல், சங்கம வமிசத்தரசர்களும், கிருஷ்ணதேவராயரும் அக்கோவிலுக்குப் பல புதிய அமைப்புக் களை ஏற்படுத்தினர். கிருஷ்ணதேவராயர் தன்னுடைய மூடிசூட்டு விழாவின் போது விருபாட்சர் கோவிலுக்குப் பல தானதர்மங்களைச் செய்து முன்கோபுரம், கொடிமரம் முதலிய வைகளை அமைத்ததாகத் தெரிகிறது. விஜயநகரத்தில் அமைந் திருந்த அரண்மனைகள் முதலிய அழிக்கப்பட்டுவிட்ட போதி லும் கோவில்களின் நிலைமை நன்ருகவே இருக்கின்றன. இவற்றுள் முக்கியமானவை வித்தளர் கோவிலும், ஹசார ராம சுவாமி கோவிலுமாகும்.

## வித்தளர் கோவில்

இக்கோவில் இரண்டாம் தேவராயர் காலத்தில் கட்டு வதற்குத் தொடங்கப் பெற்று கிருஷ்ணதேவராயர், அச்சுத ராயர் ஆட்சிகாலங்களிலும் தொடர்ந்து அமைக்கப்பெற்றதாகத் தெரிகிறது. ஐந்நூறு அடி நீளமும் முன்னூற்றிப்பத்து அடி அகலமும் உள்ள நீள் சதுரமான இடத்தில் அமைக்கப்பெற்ற இக் கோவிலின் திருச்சுற்ருலையில் மூன்று வரிசையானத் தூண் களின் மீது அமைக்கப்பெற்ற திருச்சுற்ருலை மண்டபம் அமைந் துள்ளது. மூன்று கோபுர வாயில்களின் வழியாக இக்கோவி லுக்குட் செல்லலாம். கிழக்குத் திசையிலும் தெற்குத் திசையி லும் உள்ள கோபுரங்கள் மிக்க சிற்பத் திறமையுடன விளங்கு கின்றன. இந்த ஆலய அமைப்பின் மத்தியில் 230 அடி நீளமுள்ள வித்தளர் கோவில் 25 அடி உயரத்தில் அமைக்கப் பெற்றுள்ளது. முதலில் மகாமண்டபமும், பின்னர் அர்த்தமண் டபமும் அத ன்ருல் கருவறையும் காணப்பெறுகின்றன. மகாமண்டபம் நூறு அடி சதுரமாக அமைக்கப் பெற்றிருக்கிறது. மடிப்புக்களோடு அமைக்கப் பெற்றதும், ஐந்தடி உயரமுள்ளது மான அடித்தளத்தின் மீது இந் மகாமண்டபம் அமைக்கப் [illegible] யிற்படிகளின்

யானைகளின் உருவங்கள் அமைக்கப் பெற்றுள்ளன. ஒவ்வொன்றும் பன்னிரண்டு அடி உயரமுள்ள ஐம்பத்தாறு தூண்கள் இம்மண்டபத்தில் உள்ளன. மண்டபத்தின் நடுவில் அகலமாகவும் இருபக்கங்களிலும் தாழ்வாரங்கள் போலவும் அமைக்கப் பெற்றிருக்கிறது. இதில் காணப்பெறும் தூண்கள் மிக்க சித்திர வேலைபாடுடன் அமைந்து விஜயநகரச் சிற்பத்திற்கு எடுத்துக் காட்டுகளாக இருக்கின்றன.

மகாமண்டபத்திலிருந்து, அர்த்த மண்டபத்திற்கு இரண்டு வழிகள் மூலம் செல்லலாம். ஒவ்வொரு வழியிலும் ஏறி இறங்குவதற்குப் பல படிகள் அமைவுற்றுள்ளன. அர்த்தமண்டபம் 55 அடி நீளச் சதுரமாக அமைந்துள்ளது. அதன் மத்தியில் விக்கிரகங்களை வைப்பதற்கு சதுரமானதும் மேல் விதானத்துடன் கூடியதுமான மேடையொன்று அமைந்திருக்கிறது. கர்ப்பக்கிரகத்தின் மேலுள்ள விமானம் அடிப்பாகத்தில் 72 அடி அகலமும், உச்சி வரையில் 75 அடி உயரமும் உள்ளது. கருவறையைச் சுற்றி பிரதட்சண வழி அமைந்துள்ளது. அர்த்த மண்டபத்திலிருந்து கருவறைக்குச் செல்லும் வழியின் இரு பக்கங்களிலும் வாயிற்படிகள் அமைந்துள்ளன. இக்கோவிலில் காணப்பெறும் கலியாண மண்டபம் சிறந்த சிற்ப வேலைப் பாடுடன் கூடியது. மகாமண்டபத்தின் பாதியளவு தான் உள்ளது. கலியாண மண்டபத்திற்கு அருகில் ஒற்றைக்கல் இரதம் ஒன்று அமைந்திருக்கிறது. மரங்கள் கொண்டு அமைக்கப் பெற்ற தேர்ப்போல சக்கரங்களுடன் இருக்கிறது. உற்சவ காலங்களில் இந்தக் கல் ரதத்தில் விக்கிரகங்கள் வைக்கப்பெற்று வீதிவலம் வருவதற்கு ஏற்றதாய் அமைந்திருக்கிறது. இப்பொழுது இது கலியாண மண்டபத்திற்கருகில் நிற்கிறது. தாட்பத்திரி, திருவாரூர் முதலிய இடங்களில் உள்ள கோவில்களிலும் இவ்விதக் கல் தங்கள் காணப்பெறுகின்றன.

விருபாட்சதேவராயர் காலத்தில் தொடங்கி அமைக்கப் பெற்றதாகக் கருதப்பெறும் ஹசார ராமசாமி கோவில் அமைப்பில் சிறியதாயினும் . ந்து வைணவக் கோவிலுக்குரிய எல்லாப் பகுதிகளையும் கொண்டு முழுமை பெற்றுள்ளது. இருபத்தி நான்கடி உயரமுள்ள மதிற்சுவர்களால் சூழப்பெற்று, திருச்சுற்றுலை, பரிவார ஆலயங்கள், அம்மன் சந்நிதி, கலியாண மண்டபம் முதலியவைகளோடு காணப்பெறுகிறது. கோவிலின் கிழக்கு வாயிலில் உள்ள முகமண்டபத்தின் தூண்களில் சிறந்த சிற்ப வேலைபாடுகள் காணப்பெறுகின்றன. இந்த முகமண்டபத்திலிருந்து மகாமண்டபத்திற்குச் செல்வதற்கு நன்கு

செதுக்கப்பட்டு அமைவுற்ற படிகள் அமைந்த இரு வாயிற்படிகள் உள்ளன. மகாமண்டபத்தின் நடுவில் கருமை நிறம் உடைய சலவைக் கற்களால் ஆகிய நான்கு தூண்களின் மீது அமைக்கப்பெற்ற ஒரு மேடை அமைந்துள்ளது. உருண்டை வடிவமான இத்தூண்கள் மிகுந்த சிற்பத் திறமையுடன் அமைந்துள்ளன. ஹசாரராமசுவாமி கோவில் என்பதின் பொருள் ஆயிரம் கோவில் என்பதாகும். இதன் பெயருக்கேற்ப இக்கோவிலின் உட்புறச் சுவர்களில் இராமயணத்திலிருந்து நூற்றுக்கணக்கான காட்சிகள் சிற்ப வடிவிலும், சித்திரவடிவிலும் தீட்டப் பெற்றுள்ளன. சிற்பங்களின் முக்கியமானவை தாடகை வதம், வாலிசுக்கீரீவன் சண்டை, இராமன் பொன் மானைத் தொடர்தல், மாரீசன் வதம், மராமரங்களை ஓரம்பு கொண்டு துளைத்தல், அனுமன் இலங்கைக்குச் செல்லுதல், இலங்காதகனம் முதலியவையாகும். சித்திரங்கள் காலப் போக்கில் சிதைந்த நிலையில் உள்ளன.

## விஜயநகரத்தில் காணப்படும் மற்ற கட்டடங்கள்

தலைக்கோட்டைப் போருக்குப் பிறகு இஸ்லாமியர்களால் அழிக்கப்பெற்ற போதிலும் சில சிறந்த கட்டடங்களின் அடிப் பாகங்கள் சிதைவுருமல் இருக்கின்றன. அவற்றுள் முக்கிய மானவை அரசர்களுடைய கொலுமண்டபமும், சபா மண்டபமும் ஆகும். கொலு மண்டபத்திற்கு 'வெற்றி மண்டபம்' என்ற பெயரும் வழங்கியதாகத் தெரிகிறது. கிருஷ்ணதேவராயர் பிரதாபருத்திர கஜபதியின் மீது வெற்றி கொண்டதின் சின்னமாக இக்கொலுமண்டபம் அமைக்கப்பெற்றிருத்தல் வேண்டும். இவ்விரண்டு மண்டபங்களில் இருந்த மேற்கூரைகள் அடியோடு மறைந்துவிட்டன. ஆனல் அவற்றின் நடுவில் தூண்கள் இருந்ததற்கு அடையாளங்கள் உள்ளன. அவற்றின் மீது எவ்விதமான கூரைகள் அமைக்கப்பெற்றிருந்தன என்பது விளங்கவில்லை. அடிப்பீடங்களின் கருங்கற் படைகளில் பல புடைப்புச் சிற்பங்கள் காணப்படுகின்றன. விஜயநகர ஆட்சியில் கரி, பரி, காலாட்படைகள் எவ்விதம் அணிவகுத்துச் சென்றனர் என்பதையும், அவர்கள் உபயோகித்தப் போர்க் கருவிகளையும் இச்சிற்பங்களிலிருந்து அறிந்து கொள்ளலாம்.

இராயவேலூர், காஞ்சிபுரம், தாட்பத்ரி, சிதம்பரம், கும்பகோணம், திருவண்ணமலை, திருவரங்கம் முதலிய தலங்களில் காணப்பெறும் கோவில்களில் முகப்புக் கோபுரங்கள், ஆயிரங் கால் மண்டபங்கள், கலியாண மண்டபங்கள் முதலியவைகள்

விஜயநகர ஆட்சிக்காலத்தில் அமைக்கப் பெற்றன. இராய வேலூர் கோட்டைக்குள் அமைந்திருக்கும் ஜலகண்டேசுவரர் கோவிலில் விக்கிரங்களே காணப்பெறவில்லை. தென்னிந்திய சிற்ப அமைதிக்கு எடுத்துக்காட்டாக விளங்கும் இக்கோவிலுள்ள கலியாண மண்டபம் இதையமைத்த சிற்பிகள் தங்களுடைய திறமையை தூண்களிலும், விதானத்திலும், சிற்பங்களிலும், காட்டியுள்ளனர். விரிஞ்சிபுரம் வழித்துணை நாயனார் கோவிலுள்ள கலியாண மண்டபமும் காஞ்சிபுரம் அருளாளப் பெருமாள் கோவிலின் கோபுரங்களும் கலியாண மண்டபங்களும் கிருஷ்ணதேவராயர் ஆட்சியில் அமைக்கப் பெற்றனவாகும். காஞ்சிபுரத்தில் ஏகாம்பரேச்வர் கோவிலுள்ள பெரிய கோபுரமும், ஆயிரங்கால் மண்டபமும் விஜயநகர காலத்தில் அமைக்கப் பெற்றவை எனத் தெரிகிறது.

திருவண்ணாமலைக் கோவிலுள்ள கிழக்குக் கோபுரம், ஆயிரங்கால் மண்டபம், திருக்குளம் முதலியன கிருஷ்ணதேவ ராயருடைய சமநோக்கு நிலையை எடுத்துக்காட்டுகின்றன. சிதம்பரத்திலுள்ள வடக்குக் கோபுரத்தில் கிருஷ்ணதேவராயருடைய சிலையும், அக்கோபுரத்தை அமைத்த சிற்பிகளின் உருவங்களும் காணப்பெறுகின்றன. ஆனால், அக்கோபுரத்தின் அமைப்பு சோழர்களுடைய காலத்தில் நிலவிய அமைப்புத் திறனை யொட்டியுள்ளது. மற்ற மூன்று கோபுரங்களை விட மிகவும் பழமையனதாகத் தெரிகிறது. அஃது உண்மையில் கிருஷ்ணதேவராயர் காலத்தில் அமைக்கப் பெற்றதா என்பது ஆராய்வதற்குரியதாகும். தாட்பத்ரியில் உள்ள ராமேஸ்வரர் கோவிலின் இரு கோபுரங்களும் மிக்க வேலைப்பாடு அமைந்தவையாகும். திருவரங்கத்தில் உள்ள சேஷகிரி மண்டபம் குதிரை மண்டபம் என்றும் அழைக்கப் பெறுகிறது. இம்மண்டபத்தில் காணப்பெறும் தூண்களில் அமைவுற்றிருக்கும் குதிரைகள் முன்னங்கால்களைத் தூக்கி பாய்ந்து செல்வது போல் அமைக்கப் பெற்றிருக்கும் திறமை யாவரும் வியந்து போற்றத் தகுந்ததாகும். அவை கற்குதிரைகள் போல் காணப்பெருமல் இரும்பினுல் செய்யப் பெற்றவை போல தோற்றமளிக்கின்றன என பெர்சி பிரௌன் என்பார் கூறுவர்.

பாண்டிய நாட்டில் விஜயநகர ஆட்சிக்காலத்தில் அமைக்கப் பெற்ற கோவில்கள் பாண்டிய மன்னர்கள் பின்பற்றிய கட்டட—சிற்பக் கலைகளைத் தொடர்ந்து அவற்றை மேலும் சீர்திருத்திக் கட்டப் பெற்றவை யெனக் கருதுதல் பொருத்தமுடையதாகும். திருக்கோவிலை மையமாகக் கொண்டு

பலபிரகாரங்களை அமைப்பதும், அப்பிரகாரங்களின் நுழை வாயில்களில் உயரமானதும், சிற்பத்திறமைகள் வாய்ந்தது மான கோபுரங்களை அமைப்பதும் பாண்டியர்கள் பின்பற்றிய கட்டடக் கலையாகும். இம்முறையைப் பின்பற்றியே திருவரங்கம் திருக்கோயிலைச் சுற்றி ஏழு பிரகாரங்கள் அமைக்கப் பெற்றன. இந்த ஏழு பிரகாரங்களும் ஏழு வீதிகள் எனக் கூறுமாறு பின்னர் கோவில் நகரமாக அமைந்தது. திருவரங்கத்தைப் போன்று மதுரை, சிதம்பரம், திருவானைக்கா, திருவாரூர் முதலிய கோவில் நகரங்கள் தோன்றி வளர்ந்தன. மதுரையிலுள்ள திரு. மீனாட்சி சுந்தரேசுவரர் ஆலயம் விஜயநகர ஆட்சிக்காலத்தில் மிக்க சிறப்படைந்து மதுரை சுல்தான்களுடைய ஆட்சியிலிருந்து நகரை மீட்ட பிறகு கோவிலில் பல சீர்த்திருத்தங்களைச் செய்து இடிந்து பட்ட இடங்களை மீண்டும் சீர்திருத்தியமைத்தவர் குமாரகம்பணர் என்ற விஜயநகர மகாமண்டலேசுவரர் ஆவர். அவரைப்பின்பற்றி அவருக்குப்பின் வந்தோரும் பல சீர்திருத்தச் செயல்களை செய்தனர்.

தற்காலத்தில் முழுமையாகக் காணப்பெறும் மதுரைக் கோவிலின் புதுமண்டபத்தில் திருமலை நாயக்கருடைய சிலை காணப்பெறுகிறது. மதுரை, திருப்பரங்குன்றம் முதலிய இடங் களில் திருமலைநாயக்கர் பல புதிய மண்டபங்களையும், கோபுரங் களையும் கட்டியிருக்கவேண்டும். மீனாட்சி—சுந்தரேசுவரருடைய ஆலயத்தின் கருவறையில் காணப்பெறும் சிற்பங்கள் திருவிளை யாடற் புராணத்தில் கூறப்பெற்றுள்ள பல திருவிளையாடற் செய்திகளை விளக்குவனவாகும். இச்சிற்பங்கள் திருமலை நாயக்கரால் அமைக்கப்பெற்றவை யெனக் கருதலாம்.

### மதுரைக் கோவில்

மதுரையில் உள்ள மீனாட்சி—சுந்தரேசுவரர் ஆலயத்தில் இரண்டு பெருங்கோவில்கள் அமைந்துள்ளன. 850 அடி நீளமும் 725 அடி அகலமும் உள்ள அகலமானதும் உயர்ந்த மதிற்சுவர்களால் சூழப்பெற்றதுமான ஓரிடத்தின் மத்தியில் இவ்விரு கோவில்களும் அமைந்துள்ளன. மீனாட்சி அம்மையின் கோவில், சுந்தரேசுவரர் கோவிலின் தெற்குப் பகுதியில் அமைந் துள்ளது. கோவிலைச் சுற்றி நான்கு வீதிகள் அமைந்துள்ளன. ஒவ்வொரு வீதியிலிருந்தும் கோவிலுக்குச் செல்வதற்கு பாண்டிய மன்னர்கள் காலத்தில் அமைக்கப் பெற்ற நான்கு கோபுரங்கள் உள்ளன. இரண்டு பிரகாரங்களைக் கடந்து சென்றால் சுந்தரேசுவரர் ஆலயத்தை அடையலாம். இவ்வால யத்தின் மகாமண்டபத்தையும், அர்த்தமண்டபத்தையும் கடந்து

கருவறையில் சுந்தரேசுவரருடைய சிவலிங்கம் அமைந்துள்ளது கருவறையின் விமானமும், சிகரமும் வெளியிலிருந்து காண முடியாதபடி பிரகாரங்கள் மறைத்து விடுகின்றன. பிராகாரங்களில் உள்ள தூண்கள் பாண்டிய நாட்டு சிற்ப முறைப்படி அமைந்துள்ளன. சுந்தரேசுவரருடைய ஆலயத்தின் தெற்குப் பிரகாரத்திலுள்ள பெரிய பிள்ளையார் உருவத்தைத் தரிசித்த பின் மீனாட்சியம்மன் கோவிலுக்குள் செல்லலாம், மீனாட்சியம்மையின் கோவில் 225 அடி நீளமும் 150 அடி அகலமும் உள்ளது. கருவறையின் ஓரத்தில் மீனாட்சி அம்மையின் அழகான கருங்கற்சிலை உள்ளது. நான்கு அடி உயரமுள்ள இச்சிலையின் சிற்பத்திறமும், அழகும் பலர் பலமுறை கண்டு களிக்கும் இயல்பினதாகும். மீனாட்சியம்மன் கோவிலுக்கு எதிரில் பொற்றாமரைக் குளம் உள்ளது.

மதுரையில் உள்ள ஆயிரக்கால் மண்டபம் 250 அடி நீளமும் 240 அடி அகலமும் உள்ள சதுர அமைப்புக் கட்டடமாகும். இதனுடைய அமைப்பு கட்டட-சிற்ப வல்லுநர்களால் புகழ்ந்து போற்றப் பெற்றுள்ளது. 'மதுரை ஆயிரக்கால் மண்டபத்தில் உள்ள சிற்பங்களைப் போல வேறு எங்கும் காண முடியாது' என பெர்குஷன் என்பார் கூறுவர், மதுரைக் கோவிலின் கிழக்குக் கோபுரத்தை யடுத்து திருமலை நாயக்கருடைய புதுமண்டபம் அமைந்திருக்கிறது. இம்மண்டபம் 350 அடி நீளமும் 105 அடி அகலமும் கொண்டு மத்தியில் கூடம் போன்றும் இருபக்கங்களிலும் இரண்டு தாழ்வாரங்கள் போலவும் நான்கு வரிசைகளாக அமைக்கப்பெற்ற தூண்களுடன் விளங்குகிறது.

இம்மண்டபத்தில் 124 சிற்பத் தூண்கள் உள்ளன. இதன் மேல்தளம் சருங்கற்களால் மூடப் பெற்றிருக்கிறது. இதன் உள் வரிசைத் தூண்களில் திருமலை நாயக்கர் முதலிய பத்து நாயக்க அரசர்களுடைய உருவங்கள் அமைவுற்றுள்ளன. புதுமண்டபத்தின் மேற்குப் பகுதியில் கருங்கல் மேடை யொன்றமைத்து அதைச்சுற்றி நீர் நிரம்பி வைப்பதற்கேற்ற வசதிகள் செய்யப் பெற்றுள்ளன. இந்த அகழி போன்ற குழியில் நீர் நிரப்பி விட்டால் வசந்தகால திருவிழாவில் அனல் தெரியாது. இவ்வரிய சிற்ப வேலை நிறைந்த மண்டபத்தில் பலவித அங்காடிகள் வைக்கப் பெற்று சிற்பத் திறனையும், கலையழகையும் மக்கள் கண்டு களிக்காதவாறு இடர்ப்படுத்தியுள்ளனர். இப்புது மண்டபத்தைக் கட்டிய சிற்பி சுமந்திர மூர்த்தி ஆச்சாரி என்பார்.

## செப்பு விக்கிரகங்கள்

சோழ மன்னர்கள் ஆட்சிக் காலத்தில் தோன்றிய செப்பு விக்கிரங்கள் அமைக்கும் கலை விஜயநகர ஆட்சிக்காலத்திலும் தொடர்ந்து சிறப்புப் பெற்றது. திருப்பதி திருவேங்கடமுடையான் கோவிலிலுள்ள கிருஷ்ணதேவராயர், அவருடைய இரு மனைவிமார்களுடைய செப்புச் சிலைகள் உயிருள்ள சிலைகள் போல் விளங்குகின்றன. இரண்டாவது வேங்கட தேவராயருடைய சிலை மிகுந்த இயற்கை யழகு வாய்ந்ததாக இருக்கிறது. கருங்கல்லினால் செய்யப் பெற்ற சிலையொன்று திருமலைதேவ ராயருடைய தெனக் கருதப்படுகிறது. சிதம்பரம் வடக்குக் கோபுரத்தில் காணப்பெறும் கிருஷ்ணதேவராயருடைய கருங் கற்சிலை திருப்பதியிலுள்ள செப்புச் சிலையோடு ஒப்பிடத் தகுந்ததாகும்.

## பாமினி சுல்தான்களுடைய கலை சேவைகள்

1347ஆம் ஆண்டில் அலாவுதீன் ஹாசன் கங்கு பாமன் ஷா என்பார் துக்ளக் முகம்மதுவின் முதன்மையை ஒப்புக் கொள்ளாது சுதந்திர நாடாகிய பாமினி ராஜ்யத்தை அமைத்த போதிலும் கட்டட அமைப்புக்களில் வடநாட்டு இஸ்லாமிய முறையை பின்பற்றினார். தக்காணத்தில் நிலவிய கட்டக்கலைகளின் அமைப்பை பாமினி அரசர்களுடைய கட்டடங்களில் தொடக்கத்தில் காண்பதற்கில்லை. பதினைந்தாம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து பாரசீக கட்டட அமைப்பு முறையும், ஐரோப்பிய இராணுவக் கட்டட அமைப்பு முறைகளும் பாமினி ராஜ்யத்தில் பரவத் தொடங்கின. குல்பார்க்காவில் உள்ள ஜமி மசூதி பாரசீகநாட்டு சிற்பிகளால் அமைக்கப் பெற்றதாகத் தோன்றுகிறது. தௌலாதாபாத்தில் உள்ள சந்துமினாரும், பீதார் நகரத்திலுள்ள முகம்மது கவானுடைய கல்லூரியும் பாரசீகக்கலை வல்லுநர்களின் கைத்திறமையைக் காட்டுகின்றன. ஆனால், பதினைந்தாம் நூற்றாண்டின் முடிவிற்குப் பிறகு, தென்னிந்தியக்கட்டட அமைப்பும் கலைத்திறமையும் விஜயபுரியில் காணப்படும் கட்டடங்களில் காணப்பெறுகின்றன.

1347ஆம் ஆண்டிற்கு முன் அமைக்கப் பெற்றதும், தௌலாதாபாத் அல்லது தேவகிரியில் காணப்பெறும் ஜமி மசூதியும், போதான் என்னுமிடத்தில் உள்ள தேவால் மசூதியும், முகம்மது துக்ளக் ஆட்சியில் உண்டானவையாகும். இவ்விரண்டும் இந்துக் கோவில்களையே மசூதிகளாக மாற்றியமைக்கப்பட்ட கட்டடங்களாகும். பாமினி சுல்தான்கள் தங்களுடைய நாட்டை எதிரிகளிடமிருந்து பாதுகாப்பதற்குத் தகுந்த கோட்டைக்

கொத்தளங்களை அமைப்பதில் மிகுந்த ஆர்வம் கொண்டிருந்தனர். தேவகிரியின் பெயரை தௌலதாபாத் என்று மாற்றி அதனுடைய இராணுவபலம் அதிகரிக்கப்பட்டது. தேவகிரிக் கோட்டையில், யாதவ மன்னர்கள் அமைத்துப் பின்னர், முகம்மது துக்ளக். பாமினி சுல்தான்கள் அமைத்ததுமாகிய பாதுகாவற் கட்டடங்கள் காணப்பெறுகின்றன. தேவகிரிக் கோட்டை 600 அடி உயரமுள்ள குன்றின்மீது அமைந்துள்ளது. இக்கோட்டையைச் சுற்றி $2\frac{3}{4}$ மைல் சுற்றளவுள்ள மதிற்சுவர் உள்ளது. இம்மதிற்சுவருக்குள் மூன்று உட்சுவர்கள் கோவில்களின் பிரகாரங்கள் போல் அமைந்துள்ளன. இச்சுவர்களின் மீது ஏறிக் கொண்டும், பின்னால் இருந்தும் எதிரிகளைத் தாக்குவதற்கு ஏற்ற முறையில் கொத்தளங்களும், நுழைவாயில்களும், அரண்களும் அமைந்துள்ளன. தேவகிரிக் கோட்டை அன்றியும், எலிசபுரி, காவில்கார, நர்நாலா மாகூர், என்ற இடங்களிலும் அரண்கள் அமைந்த கோட்டைகள் அமைக்கப் பெற்றன. பாமினி ராஜ்யத்தின் மேற்குப் பகுதியில் பேரண்டா நால்துர்க்கம், பன்ஹாலா, குல்பர்கா முதலிய பாதுகாப்பிடங்கள் அமைந்திருந்தன. நாட்டின் மத்தியில் பீதாரும், கிழக்குப்பகுதியில் வாரங்கல்லும், கோல்கொண்டாவும் இருந்தன. தென் மேற்குப் பகுதியில் முதுகல், இராய்ச்சூர் என்ற அரண்கள் இருந்தன. இவ்விடங்களில் பல, முன்னர் இவற்றின் மீது ஆட்சி செலுத்திய இந்து சிற்றசர்களிடமிருந்து கைப்பற்றப் பட்டவையாகும். முதுகல்லும், இராய்ச்சூரும் யாதவ மன்னர் வர்களிடமிருந்து பெறப்பட்டவை. பீதார் கோட்டை ஐம்பதடி உயரமுள்ள மதிற்சுவர்களால் சூழப்பெற்றிருந்தது. கோட்டையின் சுற்றளவு மூன்று மைல்களாகும். மதிற்சுவர்களின் மீது பலவிதமான அரண்கள் அமைக்கப் பெற்றிருந்தன. மதிலைச் சுற்றி பாறையைப் பிளந்து மூன்று அகழிகள் அமைக்கப் பெற்றிருந்தன. முகம்மது கவானுடைய காலத்தில் அமைக்கப் பெற்ற பேரண்டா என்னும் கோட்டையும் வெகு திறமையுடன் அமைக்கப்பெற்றிருந்தது. மேற்கூறப்பெற்ற இராணுவ அமைப்புக்கள் மேலைநாட்டு ஐரோப்பிய, துருக்கிய, பாரசீக இராணுவ முறைகளைப் பின்பற்றி தக்காணத்தில் இருந்த கட்டக்கலைஞர்களால் அமைக்கப் பெற்றன.

பாமினி ராஜ்யத்தின் தலைநகர்களாக விளங்கிய குல்பர்கா, பீதார் ஆகிய இரண்டிடங்களிலும், இராணுவச் சம்பந்தமில்லாத கட்டடங்கள் காணப்பெறுகின்றன. குல்பர்கா நகரில் அமைந்துள்ள அரச குடும்பத்தில் இறந்தவர்களுக்கு அமைக்கப்பெற்ற சமாதிகள் இருவகையான இஸ்லாமியக் கட்டட முறைகளைப்

பின்பற்றி அமைந்துள்ளன. முதலில் கட்டப்பெற்ற ஹாசன் முகம்மதுஷா, முஜாஹித், தாதுக்கான் முதலிய சுல்தான் களுடைய சமாதிகள் டெல்லியில் காணப்பெறும் துக்ளக் கட்டட முறையைப் பின்பற்றி அமைக்கப்பெற்றன. கியாஸ் உத்தீன் என்பாருக்காக அமைக்கப்பெற்ற சமாதியில், ஆண்ட வனைத் தொழுவதற்கென செய்யப்பெற்ற மாடத்தில் இந்துக் களின் கட்டட அமைப்பு பின்பற்றப்பட்டிருக்கிறது. முப்பது ஆண்டுகளுக்குப் பிறகு பிரோஸ்ஷா சுல்தானுக்கு அமைக்கப் பெற்றதும் 153 அடி அகலமும் 76 அடி நீளமுள்ளதுமாகிய கல்லறை மாடத்தில் இந்து சிற்பிகளுடைய கைவன்மையும் பாரசீக அலங்காரமும் காணப்படுகின்றன.

குல்பர்காவில் சுல்தான் முகம்மது ஷாவினுல் கட்டப்பெற்ற இரண்டு மசூதிகள் உள்ளன. ஷா பசார் மசூதி பிரோஸ்ஷா துக்ளக்கின் கட்டட அமைப்பைப் பின்பற்றி அமைவுற்றுள்ளது. ஜம்மி மசூதி என்ற புகழ்பெற்ற தொழுகையிடம் குல்பர்க்கா கோட்டைக்குள் இருக்கிறது. பாரசீகக் கட்டட முறையில் அமைக்கப்பெற்ற இம்மசூதியின் வாயில் முற்றம் திறந்த வெளி யாக இல்லாமல் அறுபத்தி மூன்று குவிந்த மாடங்கள் மூலம் மூடப்பெற்று இருக்கிறது. வெளிப்புறச் சுவர்களில் அமைக்கப் பெற்றிருக்கும் விதான வளைவுகளின் வழியே சூரிய வெளிச்ச மும் காற்றும் உட்புகும்படி திட்டமிட்டிருக்கிறது. இதனுடைய நான்கு மூலைகளிலும் நான்கு உயர்ந்த குவிகை மாடங்கள் அமைந்துள்ளன. தொழுகை நடத்தும் இடத்திற்கு மேல் ஒரு சதுரமான மாடம் அமைவுற்றிருக்கிறது. இந்தக் குவிகை மாடத்தின் சன்னல்களிலிருந்து காற்று உட்புகுவதற்கு வகை செய்யப்பெற்றிருக்கிறது. இம்மாதிரியான கட்டட அமைப்பைப் பிற்காலத்தவர்கள் பின்பற்றியுள்ளனர்.

பீதார் நகரத்தில், பிற்காலப் பாமினி அரசர்கள் அமைத்தக் கட்டடங்களும், பரீத் ஷாஹி சுல்தான்கள் அமைத்தக் கட்டடங் களும் காணப்பெறுகின்றன. இவற்றுள் அகமது ஷா என்பார் அமைத்த கட்டடங்களில் செம்மை நிறம் பொருந்திய சுவற்றில் பொன்னெழுத்துக்கள் பாரசீக மொழியில் எழுதப்பெற்றுள்ளனர் பீதாரில் முகம்மது கவானுல் அமைக்கப்பெற்ற கல்லூரி பாரசீக முறையில் அமைந்து இருக்கிறது. இந்த இஸ்லாமியக் கல்லூரி யும் அதைச்சார்ந்த கட்டடங்களும் 205 அடி நீளமும் 180 அடி அகலமும் உள்ள பரவலான இடத்தில் அமைந்துள்ளன மூன்று மாடிகள் கொண்ட இக்கட்டடத்தின் இரு முனைகளிலும் இரண்டு உயரமான கோபுரங்கள் அமைந்துள்ளன. இந்தக்

கல்லூரியில் மசூதி, புத்தக சாலை, விரிவுரை ஆற்றுவதற்கு உரிய மண்டபங்கள், ஆசிரியர்கள் தங்கியிருப்பதற்குரிய அறைகள், மாணவர்களுக்கு ஏற்ற தங்குமிடங்கள் முதலியன அமைந்து உள்ளன. மேற்கூறப்பெற்ற எல்லா இடங்கட்கும் போதுமான வெளிச்சமும், காற்றும் வருவதற்கேற்ற வசதிகள் அமைந்துள்ளன. இருமுனைகளிலும் அமைந்துள்ள கோபுரங்கள் தௌலதாபாத்தில் உள்ள சந்திர கோபுரங்களைப் போல் (Chand Minar) அமைந்து இருக்கின்றன. இவ்விரண்டு கோபுரங்களுக்கு இடையில் இருந்த முகப்பில் உத்தரங்கள் வைத்து கட்டப் பெற்று அதன் மீது பலவித வண்ணமுள்ள ஓடுகள் மாற்றப் பெற்றிருந்தன.

விஜயபுரியை ஆண்ட அடில் ஷாஹி சுல்தான்கள் அந் நகரத்தை தென்னிந்தியாவில் காணப்பெற்ற தலைநகரங்களுள் சிறப்பு மிக்கதாக இருக்கும்படி அரண்மனைகள், மசூதிகள், கல்லறைகள், தங்கசாலைகள், அரண் மிகுந்த நுழைவாயில்கள் முதலியவற்றை அமைத்தனர். ஆனால், இக் கட்டடங்கள் அமைக்கப்பெற்ற கற்கள் பழுப்பு நிறமுள்ளவையாகையால் கவர்ச்சி மிக்கவையாக இல்லை. விஜயபுரியில் காணப்பெறும் கட்டடங்களில் மிகுந்த இஸ்லாமிய வேலைப்பாடு உள்ளவை முகம்மது அடில்ஷாவின் கல்லறையான கோல்கும்பாஸ் என்னும் கட்டடமும் மித்தார் மஹால் என்ற அமைப்பும் ஆகும். கோல் கும்பாஸ் ஒப்பற்ற தனித்தன்மைவாய்ந்த இஸ்லாமியக் கட்டடமாகக் கருதப்பெறுகிறது.

விஜயநகரத்தில் இன்றும் காணப்பெறும் சபாமண்டபம் அல்லது தாமரை மஹால் என்னும் கட்டடம் இந்துக் கோவில்களின் முறையும் இஸ்லாமிய வளைவு சிற்ப முறையும் அமைத்துக் கட்டப்பெற்றதாகும். இந்த முறையைப் பின்பற்றியே சந்திரகிரி அரண்மனையும் வேலூர், செஞ்சி, தஞ்சாவூர் முதலிய நாயக்கர்களுடைய தலைநகரங்களில் அமைந்த அரண்மனைகளும் கட்டப் பெற்றிருந்தன.

# 31. விஜயநகர ஆட்சியில் இலக்கியங்களின் வளர்ச்சி

தென்னிந்தியக் கலைகளையும் பண்பாட்டையும் இஸ்லாமியர் அழித்துவிடாத வண்ணம் பாதுகாப்பதற்கு விஜயநகரப் பேரரசு தோன்றியதென நாம் முன்னர் கண்டோம். தென்னிந்தியப் பண்பாட்டின் சிறப்பை தென்னிந்திய இலக்கியங்களில் நாம் காணலாம். வடகலை வைணவத்தைத் தோற்றுவித்த வேதாந்த தேசிகர் குமாரகம்பணருடைய ஆட்சிக்காலத்தில் தென்னிந்தியாவில் வாழ்ந்தார். விஜயநகர அரசனாகிய இரண்டாம் புக்கனும், இரண்டாம் ஹரிஹரனும் அவரைத் தங்களுடைய அரசவைக்கு வரும்படி வேண்டிக்கொண்டபோதிலும் அவர் திருவரங்கத்திலேயே வாழ்ந்தார். அவரால் இயற்றப்பெற்ற யாதவ அப்யூதயம் என்னும் வடமொழி நூல் ஸ்ரீகிருஷ்ணபகவானுடைய வரலாற்றைப் பற்றியதாகும். ஹம்ச சந்தேசம் என்னும் நூல் காளிதாசருடைய மேகசந்தேசத்தைப் பின்பற்றி எழுதப் பெற்றது. சங்கல்ப சூரியோதயம் என்னும் காவியம் விசிஷ்டாத்துவைதக் கொள்கையை விளக்குகிறது. சததூஷணி என்பது அத்துவிதக் கொள்கையைக் கண்டிக்கிறது. தத்துவமூலகற்பம் என்னும் நூல் சமய-தத்துவக் கொள்கைகளை ஆராய்ச்சி செய்து எழுதப்பெற்றது. இரகசியத் திரயசாரம் என்னும் நூல் வேதாந்த தேசிகருடைய முதிர்ந்த அனுபவங்களை உணர்த்துகிறது.

வேதாந்த தேசிகரைப் போலவே சிருங்கேரி சங்கராச்சாரியராகிய மாதவ வித்யாரண்யர் விஜயநகர ஆட்சிக்காலத்தில் மாட்சியுற்று விளங்கினர். அவரால் எழுதப்பெற்ற வடமொழி நூல்கள், பஞ்சதசி, பராசர-மதாவியம், பராசரஸ்மிருதி, சர்வதர்சன சங்கிரகம் என்பவையாகும். இந்நூல்களில் மாதவ வித்யாரண்யர் அத்துவிதக் கொள்கைகளையும் மற்ற தத்துவக் கொள்கைகளையும் ஒப்பிட்டு, அத்துவிதமே சிறந்ததென அறிஞர்கள் ஒப்புக்கொள்ளும் வகையில் நிலைநாட்டியுள்ளார். மாதவ வித்யாரண்யருடைய சகோதரர்கள் சாயனரும், போகநாதரும் சிறந்த அறிஞர்களாக விளங்கினர். மாதவரும் சாயனரும் சேர்ந்து நான்கு வேதங்களுக்கும் உரை யெழுதியுள்

னர். இது செயற்கருஞ் செயலாகும். சாயனர் இலக்கணம், கவித்துவம், மருத்துவம் முதலிய கலைகளிலும் வல்லுநராக விளங்கினர். 1356ஆம் ஆண்டில் பொறிக்கப்பெற்ற பித்திர குண்டா வடமொழிச் செப்பேடுகள் போகநாதரால் இயற்றப் பெற்ற மெய்க்கீர்த்தியாகும். போகநாதர் இரண்டாவது சங்க மனுடைய நர்மசசிவர் அல்லது சபையலங்காரப் புலவர் என்றழைக்கப்பெற்றார். குமாரகம்பணருடைய முதல்மனைவியா கிய கங்காதேவியார் எழுதிய மதுராவிஜயம் சிறந்த வடமொழிக் காவியமாகும். பதினன்காம் நூற்றாண்டில் சிருங்கேரி, உடுப்பி, திருநாராயணபுரம் (மேலக்கோட்டை) முதலிய தெய்வீக இடங் களில் வடமொழி சிறந்த ஆக்கம் பெற்றிருந்தது. பதினைந்தாம் நூற்றாண்டில் இராஜநாத திண்டிமர் இயற்றிய சாளுவ அப்யூத மும், சாளுவ நரசிம்மர் இயற்றிய ராம அப்யூதமும் சிறப்புற்று விளங்கின.

## சமண வீரசைவ இலக்கியங்கள்

1385ஆம் ஆண்டில் மதுரன் என்ற சமண ஆசிரியர் தர்ம நாதன் என்ற சமண தீர்த்தங்கரரைப் பற்றியும், ஐயாதவர்மன் என்பார், சமணசமயத்தின் 'மூன்று இரத்தினங்களை'ப் பற்றிய இரத்தின கரண்டகம் என்ற நூலையும் (1400) இயற்றினர். வீர சைவ சமயத்தைச் சார்ந்த பீமகவி என்பார் 1369ஆம் ஆண்டில் 'பசவ புராணம்' என்னும் நூலை இயற்றி, வீரசைவ சமயத்தைத் தோற்றுவித்த பசவணர், சிவபெருமானுடைய அணுக்கத் தொண்டராகிய நந்தி பகவானின் அவதாரமாகத் தோன்றியவ ரென நிலைநாட்டியுள்ளார். பத்மராஜ புராணம் என்னும் நூல் வீரசைவ சமயத்தைப் பரவச் செய்த ஒரு பெரியாரின் வாழ்க்கை வரலாறாகும். இரண்டாம் தேவராயர் காலத்தில் வாழ்ந்த சாமராஜா என்ற வீரசைவர் பிரபுலிங்க லீலை என்ற பசவணர் வரலாற்றைக் கன்னட மொழியில் இயற்றினர். இலக்கண தண்டநாயக்கர் என்பாரும், ஜக்கணரியா என்பாரும் சிவதத்துவ சிந்தாமணி என்ற நூலையும் வீரசைவம் என்ற நூலையும் முறையே எழுதினர். இக் காலத்தில்நூற்றிற்கு மேற்பட்ட வீரசைவத் தீவிர வாதிகள் வாழ்ந்தனர் என அறிகிறோம். குமாரவியாசர் என்ற வீரசைவர் மகாபாரதத்தைக் கன்னட மொழியில் மொழிபெயர்த் தெழுதினர். சித்தேசுவரர் என்ற மற்றொரு வீரசைவ அறிஞர் 1470ஆம் ஆண்டில் வாழ்ந்தார். குமார வால்மீகி என்பார் இராமாயணத்தையும், சிங்கராஜர் என்பார் கன்னடமொழியில் மகாபசவராஜ சரித்திரத்தையும் இயற்றினர்.

ஏற்றப்பிரகதர், ஸ்ரீநாதர், பீமகவி என்ற தெலுங்கு மொழிப் புலவர்களை, பதினைன்காம் நூற்றுண்டில் ஆட்சி செய்த ரெட்டித் தலைவர்கள் ஆதரித்தனர். முதலாம் புக்க தேவனுடைய ஆட்சிக் காலத்தில் நச்சன சோமா என்ற தெலுங்குப் புலவர் ஆஸ்தான கவியாக இருந்தார். பாகவத புராணத்தை, போதன்னு என்பார் தெலுங்கில் எழுதினுர். சாளுவ நரசிம்மரால் ஆதரிக்கப் பெற்ற பீனவீரபத்திரர், ஜெய்மினி பாரதமு, சிருங்கார சாகுந்தலம் என்ற தெலுங்கு நூல்களை இயற்றினுர். நரச நாயக்கருடைய ஆதரவால் வராகபுராணம் என்ற நூல் தோன்றியது. கீரிடா பிராமமு என்ற நாடகம் வினுகொண்டா வல்லபர் என்பவரால் எழுதப்பெற்றது.

## தமிழ் இலக்கியம்

வியாச பாரதத்தைத் தமிழில் செய்யுள் வடிவில் இயற்றிய வில்லிபுத்தூராழ்வார் தமிழ் நாட்டில் திருக்கோவிலூருக்கு அருகில் சனியூர் என்னும் கிராமத்தில் பிறந்து, திருக்கோவலூரை யாண்ட கொங்கர் குலத்து வரபதியாட்கொண்டான் என்னும் சிற்றரசனுடைய சபையில் அவைக்களப்புலவராக விளங்கினுர். இந் நூல் 4351 விருத்தப்பாக்களால் ஆகிய பெரிய இலக்கிய மாகும். இந்த வில்லிபாரதம் முதல் பத்து பருவங்களைப் பற்றி தான் எழுதப் பெற்றது. தமிழ்நாட்டில் கற்றோரும் மற்றோரும் போற்றி மனனம் செய்து திரௌபதை அம்மன் கோவில்களில் இன்னிசையோடு மக்களுக்கு எடுத்துக் கூறப்பெறும் நூல் வில்லி பாரதமாகும். சிறந்த இயற்கை வருணனைகளும், சந்தக்கவி களும் நிறைந்து கற்போருக்கு இன்பம் பயக்கும் தன்மையோடும் சமயப் பொறையோடும் இயற்றப்பெற்றுள்ளது.

முதுசூரியர், இளஞ்சூரியர் என்ற இரட்டைப் புலவர்கள் ஏகாம்பரநாதச் சம்புவராயர் காலத்திலும் அவருடைய மகன் இராச நாராயணச் சம்புவராயர் காலத்திலும் வாழ்ந்தனர். இவர்களில் ஒருவர் குருடர், மற்றொருவர் முடவர் என்ற செவி வழிச் செய்திகள் நம்பத்தகுந்தனவல்ல. இவர்களால் இயற்றப் பெற்ற தில்லைக் கலம்பகம், திருவாமாத்தூர்க் கலம்பகம், கச்சிக் கலம்பகம், ஏகாம்பரநாதர் உலா முதலிய நூல்களில் மேற்கூறப் பெற்ற செய்திகளுக்கு ஆதாரமில்லை. இவ்விருவரும் ஆழ்ந்த தமிழ்ப்புலமை வாய்ந்தவர்கள். இவர்களுடைய பாடல்களில் பொருள் நயங்களும், நகைச்சுவையும் நிரம்பியுள்ளன.

திருப்புகழ் என்ற பக்திப் பாடல்களை முருகப்பெருமானுடைய அருள்பெற்று இயற்றியவராகிய அருணகிரிநாதர் பிரபுடதேவ

ராயன் என்ற இரண்டாம் தேவராயர் காலத்தில் வாழ்ந்த தமிழ்ப் புலவராவர். அருணகிரிநாதர் தன்னுடைய திருப்புகழ்ப் பாடல்களில் தாசிகளின் உறவினுல் உண்டாகும் கேடுகளை எடுத்துரைத்து காமத்தை வென்று மும்மலங்களை அறுத்து பேரின்ப வாழ்வையடைவதற்கு ஏற்ற பக்திமார்க்கத்தை எடுத்துரைக்கின்ருர். இளமை நிலையாமை, செல்வம் நிலையாமை, உடற்கூறுவண்ணம் முதலிய பேருண்மைகளும், சைவ, வைணவ சமயக் கருத்துகளும், முருகப்பெருமானுடைய பேரருளும் இவர்களுடைய பாடல்களில் காணப்பெறும். சக்தி வழிப்பாட்டினராகிய சம்பந்தாண்டான் என்பாருடன் சொற்போரிட்டு சக்தி வழிபாட்டைவிட, பக்திமார்க்கமே சிறந்ததென நிருபித்து திருவண்ணுமலையில் கம்பத்திளையனுர் மண்டபத்தில் முருகப் பெருமான் நேரில் மயில் வாகனத்தின்மீது காட்சி தரும்படி திருப்புகழ் பாடியதாக நாம் அறிகிருேம். அருணகிரிநாதர் தேவாலயங்கள் தோறும் சென்று முருகப்பெருமானைப் பற்றி ஆயிரக்கணக்கான திருப்புகழ் பாடல்களை இயற்றினரேனும் இப்பொழுது 1304 திருப்புகழ் பாடல்களே கிடைக்கின்றன.

காளமேகப் புலவர் பதினைந்தாம் நூற்ருண்டில் தமிழ் நாட்டை விஜயநகரப் பேரரசின் மகாமண்டலேசுவரனுகை சாளுவத் திருமலைராயன் என்பரால் ஆதரிக்கப் பெற்ருர். ‘வசை பாடக் காளமேகம்’ என்ற சிறப்புப் பெயர் பெற்ருர். ஆண்டு தோறும், திருவண்ணுமலையில் இவருடைய திருவிழா கொண்டாடப்பெறுகிறது.

## துளுவ வமிசத்தினர் ஆட்சியில் இலக்கியங்கள்

கிருஷ்ணதேவராயர் வடமொழி, தெலுங்கு, தமிழ்ப்புலவர்களை ஆதரித்து வடமொழியிலும், தெலுங்கிலும் சிறந்த நூல்களை எழுதியுள்ளார். வடமொழியில் ஐம்பாவதித் திருமணம், உஷா பரிணயம் என்ற இரு நாடகங்கள் இன்றும் உள்ளன. கொண்டவீடு இலக்குமிதரன் என்பார் தெய்வக்ன விலாசம் என்ற நூலையும், இலக்குமி நாராயணன் என்பார் சங்கீத சூர்யோதயம் என்ற நூலையும் வடமொழியில் இயற்றினர். கிருஷ்ணமிச்ரர் என்பார் எழுதிய பிரபோத சந்திரோதயம் என்ற நூலிற்கு சாளுவகோபன் உரை வகுத்துள்ளார். மத்வருடைய துவைத கொள்கைகளை விவரித்து நியாயாமிர்தம் என்ற நூலை ஆக்குவித்த வியாசராயர் சாளுவ நரசிம்மருடைய ஆட்சிக் காலத்திலிருந்து அச்சுததேவராயர் ஆட்சி வரையில் விஜயநகர அரசர்களுடைய ஆதரவைப் பெற்றிருந்தார். தலைசிறந்த பக்தர்

ளாகிய புரந்தரதாசரும், வதிராஜரும் வியாசராயருடைய மாணவர்களாவர். கிருஷ்ணதேவராயருடைய அரசவைக்கு வல்லபாச்சாரியரும் கிருஷ்ண சைதன்ய பிரபுவும் வருகை தந்து கௌரவித்துள்ளனர். கிருஷ்ணதேவராயருடைய ஆட்சிக்கு முன் தெலுங்கு மொழியில் வடமொழியிலிருந்து மொழி பெயர்ப்பு நூல்களே தோன்றியிருந்தன. ஆனால், கிருஷ்ணதேவராயர் இயற்றிய ஆமுக்தமால்யதா என்னும் நூல் தெலுங்கு மொழியில் தோன்றிய ஆதிகாவியமாகும். இந் நூலை இவ்வரசப் பெருந்தகை இயற்றவில்லை என்ற கருத்திற்கு தகுந்த ஆதாரங்கள் இல்லை. அஷ்டதிக்கஜங்களில் ஒருவராகக் கருதப்பெற்ற அல்லாசானி பெத்தண்ணு மனுசரித்திரமும் மற்ற நூல்களும் அவருக்கு ஆந்திரகவித பிதாமகன் என்ற பெயரைத் தந்தன. பாரிஜாத பகரணமு, சகலகதா சங்கிரகம் என்னும் நூல்கள் திம்மண்ணு, இராமபத்திரன் என்ற புலவர்களால் எழுதப்பெற்றன. துர்ஜாதி, மல்லண்ணு என்ற புலவர்கள் காளத்தி மகாத்மியம், இராஜ சேகர சரிதம் என்ற நூல்களை யாத்தனர். கிருஷ்ணதேவராயர் காலத்தில் கன்னடமொழியில் நூல்கள் இயற்றிய புலவர்கள் அதிகமாக இருந்ததாகத் தெரியவில்லை.

இராஜநாத திண்டிமரும், திருமலாம்பாள் என்ற அம்மையாரும் முறையே அச்சுதராய அப்யூதயம். பாகவதசம்பு என்ற வடமொழி நூல்களை அச்சுதராயர் காலத்தில் இயற்றின அடையபள்ளம் அப்பைய்ய தீட்சிதர் சிவதத்துவ விவேகம், சிவார்க்கமணி தீபிகை முதலிய நூல்களை வடமொழியில் இயற்றினர். வேதாந்த தேசிகருடைய யாதவ அப்யூதயம் என்ற நூலிற்கு அப்பைய்ய தீட்சிதர் எழுதிய உரையொன்று இருக்கிறது.

அஷ்டத்திக்கஜங்களில் ஒருவராகிய சூரண்ணு, இராகவ பாண்டவியம் என்னும் நூலையும், இராமராஜ பூஷணன் என்பார் வசுசரிதம் என்ற நூலையும் தெலுங்கு மொழியில் எழுதினர் தெனலிராமகிருஷ்ணர் எழுதிய பாண்டுரங்க மகாத்மியம் என்னும் நூல் பண்டரிபுரத்து விட்டோபாவின் பெருமையைக் கூறுகிறது. வேமனருடைய நீதி நூல்கள் மிக்க பெருமையுடையனவாகும். குப்பி மல்லனராயரும் சர்வக்ன மூர்த்தியும் கன்னட மொழியில் வீரசைவத்தைப்பற்றிப் பல நூல்களை எழுதினர். திம்மண்ணு என்ற வைணவர் கிருஷ்ணராய பாரதம் என்ற பாரதத்தை கிருஷ்ணதேவராயர் காலத்தில் இயற்றினர். புரந்தரதாசர் என்ற பண்டரிபுர விட்டோபா பக்தர் அச்சுததேவ ராயர், சதாசிவராயர் ஆட்சிக்காலத்தில் வாழ்ந்தவராவர்.

# மேற்கோள் நூற்பட்டியல்

## (BIBLIOGRAPHY)

### Books in English


1. BASHAM, A.L., 'The Wonder that was India', London, 1954.
2. COOMARASWAMY, A.K., 'History of Indian and Indonesian Art'.
3. DERRET, J.D.M., 'The Hoysalas', O. U. P., Madras, 1957.
4. KRISHNASWAMI, A., 'The Tamil Country Vijayanagar', Annamalainagar, 1964.
5. KRISHNASWAMI AIYANGAR, S., 'The Beginnings of South Indian History', Madras, 1918.
6. KRISHNASWAMI AIYANGAR, S., 'Sources of Vijayanagar History', Madras, 1919.
7. KRISHNASWAMI AIYANGAR, S., 'South India and Her Muslim Invaders, Oxford 1921.
8. KRISHNASWAMI AIYANGAR, S., 'A History of Tirupathi', 2 Vols., Madras, 1941.
9. NILAKANTA SASTRI, K.A., 'The Cōlas', Madras, 1955, Second Edition.
10. NILAKANTA SASTRI, K.A., 'The Pandyan Kingdom', 1932.
11. NILAKANTA SASTRI, K.A., 'Foreign Notices of South India from Megasthenes to Ma-Haun', 1941.
12. NILAKANTA SASTRI, K.A., 'A History of South India Madras, 1966.
13. NILAKANTA SASTRI and VENKATARAMANAYYA, 'Further Sources of Vijayanagar History', 3 Vols., Madras, 1942.
14. MAHALINGAM, T.V., 'Administration and Social Life under Vijayanagar', Madras, 1940.
15. MAHALINGAM, T.V., 'Economic Life in the Vijayanagar Empire', Madras, 1955.
16. MAHALINGAM, T.V., 'South Indian Polity', Madras, 1955.
17. MAJUMDAR, R.C., 'The History and Culture of the Indian People', Vols. III, IV, V and VI.
18. PERCY BROWN, 'Indian Architecture', Two Volumes.
19. ROBERT SEWELL, 'A Forgotten Empire', N.B.T. of India, New Delhi, 1970.

20. Sathianathaier, R., 'A Political and Cultural History of India', Vols. I and II, Madras, 1952.

21. Sathianathaier, R., 'Studies in the Ancient History of Tondaimandalam', Madras, 1944.

22. Subramaniam, N., 'History of Tamil Nad', Madurai, 1970.

23. Sherwani, H.E., 'The Bahnam's of the Deccan', Hyderabad, 1953.

24. Venkatarama Iyer, K.R., 'Hoysalas in the Tamil Country'.

25. Venkataramanayya, V., 'Vijayanagar Origin of the City and the Empire', Madras, 1933.

26. Father Heras, 'The Aravidu Dynasty of Vijayanagar', Madras, 1927.

27. Father Heras, 'Studies in Pallava History'.

28. Venkataramanayya, 'Studies in the Third Dynasty of Vijayanagar', Madras, 1935.

29. Ramachandriah, O., 'Studies on Krishnadevaraya of Vijayanagar', Waltair, 1953.

30. Jazdani, G. (Ed.), 'The Early History of Deccan', Vol. I and II, 1960.

31. Desai, P. B. (Ed.), 'A History of Karnataka', Dharwar, 1970.

32. Mahalingam, T. V., 'The South Indian Temple Complex', Dharwar, 1970.

33. Dr. Pillay, K. K., 'A Social History of the Tamils', Madras, 1969.

34. Dr. Menakhi, C., 'Administration and Social Life', Madras, 1939.

**Books in Tamil**

35. சதாசிவப் பண்டாரத்தார், தி. வை., 'பிற்காலச் சோழ வரலாறு, Vols. I, II and III & பாண்டியர் வரலாறு'.

36. Dr. M. Rajamanikkam, 'பல்லவர் வரலாறு'.

37. ந. மங்கள முருகேசன், 'இந்திய ஆட்சி அமைப்பு வரலாறு, 1707 வரை', சென்னை, 1972.

38. ம ரந்தாமனூர், 'மதுரை நாயக்கர் வரலாறு', சென்னை, 1960.

39. Dr. கே. கே. பிள்ளை, 'தமிழக வரலாறு — மக்களும் பண்பாடும்', சென்னை, 1972.

40. K. வெள்ளை வாரணன், 'திருமுறை வரலாறு'.

41. மாணிக்கவாசகத் தம்பிரான், 'சைவ சமய அறிமுகம்'.

# கலைச்சொற்கள்

## A

Abacus — (தூணின் மீதுள்ள) கற்பலகை
Administration — ஆட்சி முறை
Accession — ஆட்சியேற்றல்
Agency — செயலாண்மை
Aggressive — வலுச்சண்டை
Alliance — இணக்க நிலை, திருமண உறவு
Amenities — வசதிகள்
Annual — ஆண்டுதோறும்
Ancestral — முன்னோர் மரபில் வந்த
Allegiance — கடப்பாடு
Assessment — வரி விதிப்பு
Authority — அதிகாரம்
Axial — நடு ஊடு வகையான
Archives — ஆவணக்களரி
Archaeology — தொல்பொருள் ஆராய்ச்சி
Architecture — கட்டடக்கலை

## B

Buddhism — பௌத்தம்
Battle-field — போர்க்களம்
Border land — நாட்டின் எல்லைப்புறம்
Besiege — முற்றுகையிடு
Basti — சமணக்கோவில்
Bhakti-cult — பக்திமார்க்கம்
Bilingual — இருமொழித் தொடர்புள்ள
Budget — வரவு செலவுப் பட்டியல்
Burial-ground — இடுகாடு
Buffer-state — இடைப்பட்ட நாடு
Bull-cult — நந்தி வணக்கம்

## C

Campaign — போர் நடப்பு
Capital — தலைநகர்
Captive — கைதி
Community — சமூகம்
Culture — பண்பாடு
Century — நூற்றாண்டு
Chieftain — தலைவன்
Contemporary — சமகாலத்தவர்
Constitution — அரசியல் அமைப்பு
Chronology — காலவரையறை
Copper plates — செப்பேடுகள்
Coronation — முடிசூட்டு விழா
Crownprince — இளவரசன்
Confederacy — அரசியல் கூட்டு
Conquest — நாடு பிடித்தல்
Committee — நிறுவனம்
Colonies — குடியேற்ற நாடுகள்
Court — அரசவை
Conciliation — இணக்கப்படுத்தல்
Chancery — தனி நீதிமன்றம்
Ceremony — சடங்கு
Conversion — சமய மாற்றம்
Celebration — கொண்டாட்டம்
Chronicle — வரலாற்றுத் தொடர் நிகழ்ச்சி
Corridor — இடைவழி
Cornice — கட்டடப் பிதுக்கம்

## D

Decisive — வரலாற்றை மாற்றியமைக்கக் கூடிய
Dominion — ஆட்சியுரிமை
Doab — இடைத்துறை நாடு
Demolish — அழிவுறும்படி செய்
District — மாவட்டம்
Dissolute — நெறிதவறிய
Dynasty — வமிசம்
Decline — நலிவுறுதல்

| | |
|---|---|
| Decade | — பத்தாண்டுக் காலம் |
| Dowry | — சீதனம் |

## E

| | |
|---|---|
| Empire | — பேரரசு |
| Epigraphy | — கல்வெட்டுக்கலை |
| Endowment | — அறக்கட்டளை |
| Enemies | — எதிரிகள் |
| Engagement | — சந்திப்பு |
| Envoy | — தூதன் |
| Embrace | — தழுவிக்கொள் |
| Excavate | — அகழ்வாராய்ச்சி |
| Expedition | — படையெழுச்சி |
| Espouse | — ஆதரவு அணி |
| Executive | — நிருவாகம், நிறைவேற்றுக் கழகம் |
| Euphemism | — மங்கல வழக்கு |
| Epic | — இதிகாசம் |
| Ethics | — அறநூல் |

## F

| | |
|---|---|
| Facade | — கட்டடத்தின் முகப்பு |
| Farce | — கேலிக் கூத்து |
| Fiscal | — வரியைப் பற்றிய |
| Fratricide | — உடன் பிறப்புக் கொலை |
| Fresco | — சுவர் ஓவியம் |
| Fortress | — அரண் சூழ்ந்த இடம் |
| Foreigner | — அந்நிய நாட்டவர் |
| Ferocity | — கொடூரமான |
| Feudal levy | — நிலமானிய வரி |
| Feudatories | — சிற்றரசர்கள் |
| Frustrate | — மலைக்கும்படிச் செய் |

## G

| | |
|---|---|
| Gallery, Art | — கலைக்கூடம் |
| Genealogy | — வமிசாவளி |
| Genesis | — தோற்றம் |

| | | |
|---|---|---|
| Greater India | — | கடல்கடந்த இந்திய பண்பாடு |
| Gubernatorial | — | ஆளுநர்க்குரிய |
| Grant | — | மானியம் |
| Grandson | — | பெயரன் |
| Garrison | — | காவல் படை |
| Goldsmith | — | பொற்கொல்லர் |

## H

| | | |
|---|---|---|
| Harem | — | உவளகம் |
| Heritage | — | மரபுரிமை |
| Historian | — | வரலாற்றாசிரியன் |
| Historiography | — | வரலாறு எழுதும் முறை |
| Hymn | — | துதிப்பாடல் |
| Hereditary | — | பரம்பரை பாத்தியமுள்ள |
| Hostility | — | விரோதம் |
| Humiliation | — | மானமிழக்கச் செய் |
| Harmony | — | ஒருமைப்பாடு |
| Hospital | — | மருத்துவமனை |
| Humanity | — | மனிதவர்க்கம் |
| Headman | — | கிராமத்தலைவன் |

## I

| | | |
|---|---|---|
| Iconography | — | விக்கிரகங்கள் வார்க்கும் கலை |
| Iconoclast | — | விக்கிரகங்களை உடைப்பவர் |
| Idol worship | — | உருவ வணக்கு |
| Iron-age | — | இரும்புக் காலம் |
| Inscription | — | கல்வெட்டு, செப்பேட்டு, எழுத்து |
| Intention | — | எண்ணம் |
| Independent | — | தன்னுரிமையுள்ள |
| Invasion | — | படையெடுப்பு |
| Intermarriage | — | இருவகை மணவுறவு |
| Irrigation | — | நீர்ப்பாசனம் |
| Interlude | | இடைவேளை |
| Industry | — | தொழில் முயற்சி |

Island — தீவு
Invitation — அழைப்பு

## J

Jainism — சமணம்
Jews — யூதர்கள்
Jesuit Order — இயேசு சங்கம்
Jesuits — இயேசு சங்கத்தைச் சார்ந்தவர்கள்
Junction — சந்திப்பு

## K

Kingdom — அரசு
Kinsman — உறவினன்
Kazi — இஸ்லாமிய நீதிபதி
King-maker — அரசனுக்குவோன்

## L

Legend — கட்டுக்கதை
Lieutenant — துணை ஆளுநர்
Literature — இலக்கியம்
Letters — கடிதங்கள்
Liberation — விடுதலை
Life-line — உயிர்ப் பாதுகாப்பு
Lot — திருவுளச்சீட்டு
Linguistic — மொழி பற்றிய

## M

Megalithic — பெரும் பாறைகளாலான
Material Culture — உலகவழிப் பண்பாடு
Magnum opus — தலைசிறந்த படைப்பு
Migration — நாடுவிட்டு நாடு செல்லுதல்
Monolithic — ஒரே கல்லால் ஆகிய
Mythology — புராண இலக்கியம்
Marches — கடற்கரையோர நாடு
Martial — இராணுவம் பற்றிய

| | | |
|---|---|---|
| Monarch | — | தலைமையரசன் |
| Metaphor | — | உருவகம் |
| Mastery | — | தனிச்சிறப்பு |
| Mediaeval | — | மத்திய காலத்திய |
| Muslim | — | இஸ்லாம் (சமயத்தைச் சார்ந்த) |
| Musician | — | இசை வல்லுநர் |

## N

| | | |
|---|---|---|
| Nephew | — | உடன் பிறந்தார் மகன் |
| Naval | — | கடற்படை சார்ந்த |
| Negotiation | — | கலந்து உரையாடு |
| Neolithic | — | புதிய கற்காலம் பற்றிய |
| Navy | — | கடற்படை |
| Natural region | — | இயற்கை நிலம் |
| Nicobar islands | — | நக்கவாரத் தீவுகள் |

## O

| | | |
|---|---|---|
| Organisation | — | அமைப்பு |
| Origin | — | தொடக்கம் |
| Opposition | — | எதிர்ப்பு |
| Overlordship | — | மேலாண்மை |
| Opportunity | — | வாய்ப்பு |
| Obscurity | — | தெளிவற்ற நிலைமை |
| Officials | — | அலுவலாள் |
| Opponent | — | எதிரி |
| Operation | — | செயல்வகை |
| Over estimate | — | பெருமையாக மதிப்பிடுதல் |

## P

| | | |
|---|---|---|
| Panchayat | — | பஞ்சாயத்து முறை |
| Pepper | — | மிளகு |
| Parricide | — | தகப்பனைக் கொலை செய்தவன் |
| Prayer | — | பிரார்த்தனை |
| Province | — | மாகாணம் |
| Prisoner | — | கைதி |
| Political | — | அரசியல் சார்புள்ள |
| Portrait | — | சித்திர உருவம் |
| Protector | — | பாதுகாவலன் |

| | | |
|---|---|---|
| Patron | — | புலவர்களை ஆதரிப்பவன் |
| Prosperity | — | வாழ்க்கை நலம் |
| Plateau | — | பீடபூமி |
| Prerogative | — | தனிப்பட்ட உரிமை |
| Prehistoric | — | வரலாற்றுக் காலத்திற்கு முந்திய |
| Punch-marked coins | — | உருவம் பதிக்கப் பெற்ற நாணயங்கள் |

## R

| | | |
|---|---|---|
| Revolution | — | புரட்சி |
| Regent | — | பகர ஆள் |
| Rebellion | — | அரசியல் கலகம் |
| Rural | — | கிராம சம்பந்தமுள்ள |
| Religion | — | சமயம் |
| Royal | — | அரசபதவிக்குரிய |
| Reign period | — | ஆட்சிக்காலம் |
| Reputation | — | புகழ் |
| Retreat | — | பின்வாங்கு |
| Rock-cut temple | — | குடைவரைக் கோவில்கள் |

## S

| | | |
|---|---|---|
| Salam | — | வணக்கம் செய்தல் |
| Sabha | — | சபை, அவை |
| Sandalwood | — | சந்தனக்கட்டை |
| Sacrifice | — | தியாகம் செய்தல், யாகம் |
| Soldier | — | போர் வீரன் |
| Succession | — | அரசபதவி ஏற்பு |
| Social | — | சமூகம் பற்றிய |
| Sovereign Power | — | இறைமை அதிகாரம் |
| Suzerain | — | தலைமை அரசன் |
| Statesman | — | அரசியல் மேதை |
| Supremacy | — | ஆட்சி மேன்மை |
| Shrine | — | தெய்வீக இருப்பிடம் |
| Supercilious | — | உதாசீனம் |
| Suicide | — | தற்கொலை |
| Sultanate | — | சுல்தானிய அரசு |
| Superstition | — | மூடக் கொள்கை |
| Sensual | — | புலநுகர்ச்சி |
| Subjection | — | அடங்கி நடத்தல் |

| | | |
|---|---|---|
| Sternous | — | கண்டிப்பாக |
| Structural Temple | — | அமைப்புக் கோவில் |
| Social contract | — | சமுதாய ஒப்பந்தம் |

**T**

| | | |
|---|---|---|
| Temple complex | — | கோவில்களின் அமைப்பு |
| Tradition | — | மரபுச் செய்தி |
| Titles | — | பட்டங்கள் |
| Treason | — | அரசுத் துரோகம் |
| Territory | — | நாடு |
| Treasure | — | நிதி |
| Tribute | — | திரைப் பொருள் |
| Treasury | — | கருவூலம் |
| Triumph | — | வெற்றி |
| Toleration | — | சமயப்பொறை |
| Terra-cotta | — | களிமண்ணால் செய்யப் பெற்ற பொருள் |
| Topography | — | இடவமைப்பு அறிவு |

**U**

| | | |
|---|---|---|
| Undermine | — | அழிவு வேலை செய் |
| Upstart | — | புதிய பணக்காரன் |
| Urban | — | நகரச்சார்புள்ள |
| Untenable | — | நம்பத்தகாத |
| Usage | — | பழக்கம் |

**V**

| | | |
|---|---|---|
| Village | — | கிராமம் |
| Viceroy | — | அரசப் பிரதிநிதி |
| Velam | — | வேளம் |
| Voluntary | — | மனப்பூர்வமாக |
| Vassal | — | சார்ந்து பிழைப்பவன் |

**W**

| | | |
|---|---|---|
| Ward | — | குடும்பு |
| Wholesome | — | மனதிற்குகந்த |

**Y**

| | | |
|---|---|---|
| Yuvaraja | — | இளவரசன் |